கம்பநாடன் காவியத்தில்

காதலும் பெருங்காதலும்



அ.சீனிவாசன்

கம்பநாடன் காவியத்தில் காதலும் பெருங்காதலும்

ஆசிரியர்

அ. சீனிவாசன்

வெளியீடு:

அ. சீனிவாசன்

131, பாஸ்கர் காலனி 2வது தெரு,
விருகம்பாக்கம், சென்னை – 92.
போன் : **(044) 2376 0467**

நூலின் பெயர்

கம்பநாடன் காவியத்தில் காதலும் பெருங்காதலும்

ஆசிரியர்	:	அ.சீனிவாசன்
மொழி	:	தமிழ்
வெளியீட்டெண்	:	முதல் பதிப்பு
ஆண்டு	:	2004
தாள்	:	16 kg மேப் லித்தோ
நூல் அளவு	:	1/8 டெம்மி
விலை	:	ரூ. 160/–
உரிமை	:	ஆசிரியருக்கே
வெளியீடு	:	அ.சீனிவாசன் நூலாசிரியர் / பதிப்பாளர் 131, பாஸ்கர் காலனி 2வது தெரு, விருகம்பாக்கம், சென்னை – 92. போன் : **(044) 2376 0467**
அச்சு – வடிவமைப்பு	:	**Seeds of Life** வாழ்வின் விதைகள் வேளச்சேரி, சென்னை–42.

ஆப்செட் முறையில் அச்சிட்டோர்
ஸ்ரீ மாருதி கிராபிக்ஸ் - சென்னை - 600 032.

* தமிழக அரசு தமிழ் வளர்ச்சித்துறை சிறந்த நூலுக்கு உதவித் திட்டத்தின் உதவியுடன் முதல் பதிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

கம்பநாடன் காவியத்தில் காதலும் பெருங்காதலும்

முன்னுரை

கவிச் சக்கரவர்த்தி கம்பர் எழுதிய இராமாவதாரம் என்னும் பெருங்காவியம் கம்பராமாயணம் என்று பெயர் பெற்று, புகழ் பெற்று விளங்குகிறது. கிரேக்க இதிகாசங்கள் மேலை நாடுகளில் புகழ் பெற்றுப் பரவியுள்ளதைப் போல இந்திய இதிகாசங்களான இராமாயணமும், மகாபாரதமும் கிழக்கு நாடுகளில் புகழ் பெற்றுப் பரவியுள்ளது.

இங்குள்ள மக்களின் இலக்கிய வாழ்வில் இணைந்து பொதுக் காலச்சாரத்தின் பகுதியாக வேர்விட்டுள்ளது. இன்றைய உலகில் இவ்விந்திய இதிகாசங்கள் பல நாடுகளிலும், பல மொழிகளிலும் பரவியுள்ளன.

இராமாயணக் கதையைத் தங்கள் தங்கள் மொழிகளில் காவியமாக எழுதியவர்கள் பலருண்டு. ஆயினும் வடமொழியில் வால்மீகி ராமாயணம் மக்களிடம் விரிவாகப் பரவியுள்ளது. உறுதியாக நிலை பெற்றுள்ளது. அது போலவே கம்பராமாயணம் தமிழில் புகழ்பெற்று நிலை பெற்றுப் பரவியுள்ளது. உலகப் பேரிலக்கியத்தின் தரத்திற்கு உயர்ந்துள்ளது.

வால்மீகி ராமாயணம் எழுதப்படுவதற்கு முன்பே, இராம காதை இந்திய மக்களிடம் வாய் வழியாகவும், கர்ண பரம்பரைக் கதையாகவும் பழக்கத்தில் இருந்து வந்தது என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

திருமாலுடைய அவதாரப் பெருமைகளைப் பற்றியெல்லாம், நாரதர், வால்மீகி முனிவருக்குக் கூற, அதைக் கேட்டு வால்மீகி தனது இராமாயணக் காவியத்தைப் பாடியதாகச் செய்தி உண்டு.

அதைப்பார்த்து அந்த வால்மீகியைப் பின்பற்றிக் கம்பன் தமிழில் இக்காவியத்தை எழுதினார் என்று கம்பராயணத்தின் தோற்றம் பற்றிய ஒரு தனிப்பாடல் கூறுகிறது.

"நாரணன் விளையாட்டெல்லாம்
நாரத முனிவன் கூற
ஆரணக் கவிதை செய்தான் அறிந்த
வான்மீகி என்பான்
சீர் அணி சோழநாட்டுத் திருவழுந்
தூரில் வாழவோன்
கார் அணி கொடையான் கம்பன்
தமிழினால் கவி செய்தானே

என்பது அந்தப் பாடலாகும்.

கம்பன் தான் செய்த நூலின் வரலாற்றைப் பற்றிக் கூறும் போது "தேவ பாடையின் இக்கதை செய்தவர் மூவர் ஆனவர் தம்முளும் முந்திய நாவினார் உரையின்படி நான் தமிழ்ப் பாவினால் இது உணர்த்திய பண்பு" என்று குறிப்பிடுகிறார்.

மூவரானவர் என்பது இங்கு வான்மீகி, வசிட்டர், வியாசர் என்றும், வசிட்டர் பாடியது வசிட்ட இராமாயணம் என்றும், வியாசர் செய்தது அத்யாத்ம ராமாயணம் என்றும், வியாசரை நீக்கிப் போதாயணரைச் சேர்த்து மூவர் என்றும் போதாயனர் செய்தது போதாயண இராமாயணம் என்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர்.

முந்திய நாவினார் உரையின் படி என்று கம்பன் கூறியிருப்பதால் அதை வாய் மொழியாக மக்களிடம் நிலவி வந்த கதைப் போக்கு களையும் கம்பர் தன் கருத்தில் எடுத்துக் கொண்டார் என்று கூறுவோரும் உண்டு.

தமிழ் நாட்டில் தமிழ் மக்களிடமும் சங்க நூல்களிலும் இராம காதை பற்றிய பல வழக்குகளும் குறிப்புகளும் உள்ளது பற்றியும், அவை அனைத்தையும் படித்தும் தொகுத்தும், காலத்திற்கேற்ற வாறு மாற்றியும் செழுமைப்படுத்தியும் கம்பர் தனது காவியத்தை எழுதியுள்ளார் என்பதைத் தமிழ்ப் பேரறிஞர் பேராசிரியர் மு.இராகவய்யங்கார் தனது ஆராய்ச்சிக் கட்டுரைகளில் குறிப்பிடுகிறார்.

கம்பர் தனது இராமாயண காவியத்தின் பால காண்டத்தில் நாட்டுப் படலத்தில்.

"வாங்கரும்பாதம் நான்கும் வகுத்த வான்மீகி என்பான்,
தீங்கவிச் செவிகள் ஆரத்தேவரும் பருகச் செய்தான்
ஆங்கவன் புகழ்ந்த நாட்டை அன்பெனும் நறவம் மாந்தி
மூங்கையான் பேசலுற்றான் என்னயான் மொழியல் உற்றேன்"

என்று குறிப்பிட்டிருப்பது, அவர் தனது கதைக்கு வால்மீகியையே பெரும்பாலும் ஆதாரமாகக் கொண்டிருந்தார் என்பது தெளிவாகிறது. ஆயினும் அவர் அக்காலத்தில் நிலவியிருந்த பல நூல்களையும் இராம காதைக் குறிப்புகளையும் படித்தும், அறிந்தும், ஆய்வு செய்தும் அவைகளைத் தனது கதையில் தேவையான அளவில் தனதாக்கிக் கொண்டார் என்பது புலனாகிறது.

கம்பருடைய இராமாயணம் அல்லது இராமாவதாரம் என்னும் காவியம், வால்மீகி ராமாயணத்தை அப்படியே தழுவியது என்றோ, அல்லது அப்படியே அதன் மொழிபெயர்ப்பு என்றோ கூற முடியாது. காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்றவாறு கம்பர் தனது தனித்தன்மை யான புலமையுடனும் கவித்திறனுடனும் அபாரமான கற்பனைத் திறனுடனும், கல்விஞானத்துடனும், அனுபவச் செழுமையுடனும், அறிவாற்றலுடனும், தனது காவியத்தை ஒரு மூல நூலைப் போலவே எழுதி முடித்துத் தமிழ் மொழிக்குத் தனது மிகப் பெரிய அளப்பறிய பங்கை ஆற்றியுள்ளார். பங்களிப்பைச் செய்துள்ளார்.

கம்பருடைய இராமாயணம் உலகத் தரத்திலான பெருங் காவியமாகும். பேரிலக்கியமாகும். கம்பரையும் வாலிமீகியையும் ஒப்பிட்டும், கம்பரையும் பல பிரபலமான மேலை நாடுகளின் கவிஞர்களையும் ஒப்பிட்டும் பல ஆய்வு நூல்களையும் பல தமிழ் ஆங்கில இலக்கிய அறிஞர்கள் எழுதியுள்ளார்கள்.

மேலை நாடுகளில் அந்தந்த நாட்டு மக்கள், தங்கள் தங்கள் நாட்டுப் புலவர்களையும் கவிஞர்களையும் பெரும் எழுத்தாளர்களையும் போற்றிப் பாராட்டிப் பல விழாக்களும் எடுத்து அவர் புகழ் பரப்பி வருகிறார்கள். பிறந்த நாட்களை நாடெங்கும் கொண்டாடுகிறார்கள். அவர்கள் நாட்டு அறிஞர்களை உலக அளவிற்கு உயர்த்துகிறார்கள். உதாரணமாக பிரிட்டனில் மில்டன், சேக்ஷ்பியர், பிரான்சில் விக்டர் ஹியூகோ, ஜெர்மெனியில் தாந்தே, ரஷ்யாவில் புஷ்கின், டால்ஸ்டாய் போன்றவர்களை அந்தந்த நாட்டு மக்கள் பெரிதும் பாராட்டுகிறார்கள். அவர்களைப் பற்றிப் பல கருத்தாய்வுகளையும் விழாக்களையும் எடுத்து வருகிறார்கள்.

அதே போல நாமும் நமது நாட்டுப் பெரும் புலவர்களையும், கவிஞர் களையும், புகழ் பெற்ற எழுத்தாளர்களையும் பாராட்டியும் விழாக்கள் எடுத்தும் பிரபலப்படுத்த வேண்டும். முன்னைக் காட்டிலும் இப்போது குறிப்பாக நமது நாடு சுதந்திரம் பெற்ற பிறகு இப்பணி களை நாம் தமிழகத்தில் செய்துவருகிறோம். ஆயினும் இன்னும் போதாது தமிழ்க் கவிஞர்களை பாரதமெங்கும், உலகமெங்கும் பாராட்டவும் அவர்களுடைய புகழ் பரப்பவும் அவர்களுடைய நூல்களை இதர மொழிகளிலும் பரப்ப வேண்டும்.

வியாசர், வால்மீகி, வசிட்டர், போதாயனர், வாம தேவர், கௌடில்யர் (சாணக்கியர்) வாத்சாயனர் முதலிய பண்டய கால ஞானிகள் முதல் இன்றைய நாள் வரையிலுமான அறிஞர்கள் பாரத நாட்டில் உள்ள பதிணெண் மொழிகளிலும் உள்ள அறிஞர்கள் தமிழ் நாட்டில் சங்க காலப் புலவர்கள் கம்பர் திருவள்ளுவர், இளங்கோவடி களார், ஔவையார், மற்றும் ஆழ்வார்கள், நாயன்மார்கள், சேக்கிழார், இராமானுஜர், சங்கரர், மத்துவர் மற்றும் இராமலிங்க சுவாமிகள் மகாகவி பாரதியார் வரை நமது சான்றோர்களை நினைவு கொள்ள வேண்டும். மேலும் நமது பாரம் பரியமான பல மேலோர்கள் பற்றிய விவரங்களையும் சாதனைகளையும் சேகரித்து அவைகளை வெளிக் கொணர வேண்டும்.

நமது நாட்டில் நடந்த பல படையெடுப்புகளாலும், போர்களாலும் நமது இலக்கியங்கள், அறநூல்கள், இதர அறிவுத்துறை மற்றும் அறிவியல் நூல்கள் இலக்கண நூல்கள், தத்துவஞான நூல்கள் வைத்திய நூல்கள் பலவும் அழிந்தும், தொலைந்தும் போயின.

எஞ்சிய சிலவற்றைப் பாதுகாத்து வைத்தவர்களும் உண்டு. அவைகளை யெல்லாம் வெளிக் கொணர வேண்டும். தமிழகத்தில் பல பெரியோர்களும் பண்டய தமிழ் நூல்கள் அடங்கிய ஏடுகளைத் தேடி அவைகள் இருக்கும் இடங்களைக் கண்டுபிடித்து, வெளிக் கொணர்ந்து அவைகளைப் படியெடுத்து அச்சிற்குக் கெண்டு வந்திருக்கிறார்கள். அத்தகைய பெரியோர்களில் மகா மகோபாத்யாய உ.வெ.சாமிநாத அய்யர் அவர்கள் முக்கிய இடம் பெறுகிறார்.

இன்னும் ஏராளமான பல பண்டைய இலக்கிய நூல்களும் வைத்திய நூல்களும் இதர இலக்கண, அறிவியல் மற்றும் தத்துவ நூல்களும் வெளிக் கொணர வேண்டியதிருக்கிறது. அத்தகைய அரும் பணிகளில் பல சிறந்த ஆர்வம் மிக்க அறிஞர்களும் அமைப்புகளும் பல்கலைக் கழகங்களும் முயற்சிகள் எடுத்து வருகின்றனர். இம் முயற்சிகளை மேலும் அதிகப் படுத்த வேண்டும், துரிதப்படுத்த வேண்டும், விரிவுப் படுத்த வேண்டும்.

v

தமிழகத்தைப் பொருத்த வரை, பெரும்பாலும், தமிழ்ச் சான்றோர்கள், ஆர்வலர்கள், அறிஞர் பெருமக்கள், வள்ளல் பெருமக்கள் நல்ல உள்ளமும் வசதியும் பெற்றுள்ள பொது மக்கள் முதலிய பலரின் முயற்சி களாலும் நமது பெரும் புலவர்கள், கம்பர், வள்ளுவர், இளங்கோவடிகள், சேக்கிழார், ஆழ்வார்கள், நாயன்மார்கள், வள்ளலார் மகாகவி பாரதி பாவேந்தர் பாரதி தாசன் முதலிய பல பெரும் புலவர்களின் பெயரால் மன்றங்கள், கழகங்கள் அமைத்தும், ஆய்வு மையங்கள் நடத்தியும் விழாக்கள் எடுத்து பல நல்ல காரியங்கள் செய்து வருகிறார்கள். இந்தப் பணிகள் மேலும் விரிவு பட வேண்டும்.

கம்பருடைய இராமாயணம் பல பரிமாணங்களையும் கொண்ட மிகச் சிறப்பான பெரிய நூலாகும். கம்பராமாயணத்தின் பாத்திரப் படைப்பு, இராமாவதாரத்தின் தனிச்சிறப்புகள் கம்பனின் கடவுட் கொள்கை, தத்துவ ஞானம், சகோதரத்வம், சகோதர உறவுகள், மானுடம் பற்றிய பார்வை, அரசியல், ஆட்சி முறை, போர் முறைகள், தமிழ் மொழி, அறம், விதிவலி, அறம் வெல்லும் பாவம் தோற்கும் என்னும் உறுதிப்பாடு, காதல், பெண்ணாசை, பெண்ணாட்டம், பெருங்காதல், போர், போர் உத்திகள் மற்றும் பல சமுதாயப் பிரச்சனைகளும் சமுதாயப் பழக்க வழக்கங்களும் இப்பொருள்கள் பற்றிய கம்பனுடைய கருத்துக்கள் பலவும் எக்காலத்திற்கும் பொருந்துவனவாகவும் உள்ளன.

மனிதர்களுக்குள் மானிடர், வானரர், இராக்கதர், மற்றும் இதர ஜீவராசிகளும் பறவைகள் விலங்குகள் ஆகியவற்றின் செயல்பாடுகள், தமிழ்ப் பண்பாடுகள் கூடிய குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய நிலப் பிரிவுகள் அவைகளின் தனிப் பண்புகள் முதலியவை பற்றிய பல நுட்பங்களையும் விவரங்களையும் மக்கள் மாண்புகளையும் பற்றி கம்பனுடைய மகாகாவியத்தில் காணலாம்.

தமிழ் மொழியின் சிறப்பு, காவிய அமைப்பு, கவிதை நயம், விருத்தப் பாக்களின் தனியாண்மை முதலிய பல சிறப்புகளையும் கம்பனில் காணலாம்.

கம்பனுடைய இராமன் திருமால் அவதாரம் சீதாபிராட்டி, இலக்குமியின் அவதாரம் இலக்குவன் ஆதி சேடனின் அம்சம். அனுமன் வாயு புத்திரன், வானரர்கள் எல்லாம் தேவர்கள். இராவணனும் கும்பகருணனும் துவாரபாலகர்களின் பிறப்பு. இவ்வாறான தெய்வீகத் தன்மை கொண்ட ஒரு மகா காவியமாகக் கம்பர் இந்தப் பெருங் காவியத்தைப் படைத்துள்ளார்.

தெய்வ நம்பிக்கையும், திருமால் திருஅவதாரக் கொள்கைகளும் விவாதத்திற்குரியனவோ ஆராய்ச்சிக்குரியனவோ அல்ல. அவை நம்பிக்கை பற்றிய பிரச்சனைகளாகும். அவை தொடர்பான பிரச்னைகளில் கேள்விக்கிடமில்லை. அத்துடன் சில பிரச்னைகளை தத்துவ ரீதியில் காண வேண்டும். தத்துவ ஞான முறையில் புரிந்து கொள்ள வேண்டும்.

கம்பனுடைய கவிதை ஒவ்வொன்றிலும் உள்ள மேலெழுந்த வாரியான பதவுரை, பொழிப்புரை மட்டுமல்லாமல் அவைகளின் உள்ளார்ந்த பொருளையும் அவைகளில் பொருந்தியுள்ள கருத் தமைவுகளையும் காண வேண்டும். அவைகளின் உட் பொருளையும் உணர வேண்டும். கவியுள்ளத்தையும் காண வேண்டும்.

கம்பனுடைய கவிதைகள் கவிதை நயம், அவைகளில் கருத்துக்கள் ஆகியவை மக்களிடம் செல்ல வேண்டும். மக்களிடம் பரவ வேண்டும். அதற்கான முறையில் நமது இலக்கிய அமைப்புகள் பணியாற்ற வேண்டும்.

கம்பனுடைய காவியத்தையும் கவிதைகளையும் ஆரம்பப் பள்ளிகளிலிருந்து கல்லூரிகள் மற்றும் ஆராயச்சிப் படிப்புகள் வரை கொண்டு செல்ல வேண்டும். கம்பனைப் பற்றிப் பல்கலைக் கழகங்களில் தனித் துறைகள் அல்லது பிரிவுகள் உண்டாக்கி ஆழப் படிப்புகளைக் கொண்டு வர வேண்டும். ஆலயங்கள் தோறும் கம்ப ராமாயணத்தைப் பற்றிய சொற்பொழிவுகள் நடத்தப்பட வேண்டும்.

ஒரு தடவை, கேரளத்தைச் சேர்ந்த எனது நண்பர் ஒருவரிடம் தமிழ் இலக்கியங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். அப்போது கம்பராமாயணம் பற்றிய பேச்சும் விவாதமும் வந்தது. அவரும் தமிழ் இலக்கியங்களைப் பற்றி ஓரளவு நன்கு அறிந்தவர். அவர் ''கம்ப ராமாயணத்தைப் பற்றி நான் கேள்விப்பட்ட அளவுக்கு அது வால்மீகி இராமாயணத்திற்குச் சமமானது. சில இடங்களில் கம்பர் வான்மீகியையும் மிஞ்சி விட்டார். எழுத்தச் சனுக்குக் கூட மலையாள மொழியில் இராமாயணம் எழுதுவதற்குக் கம்பராமாயணம் துணையாக இருந்தது என்று கூறலாம். கம்பனைப் பற்றியப்பல ஆய்வுகளும் செய்ய வேண்டும். பல ஆய்வு நூல்களும் எழுத வேண்டும்'' என்று கூறினார்.

''கம்பன் ஒரு சமுதாயப் பார்வை'' என்னும் தலைப்பில் ஒரு நல்ல ஆய்வு நூல் எழுதுங்கள் இலக்கணங்களைப் பற்றிக் கூட அதிகம் கவலைப்பட வேண்டாம். மொழி நடையைப் பற்றிக் கூட அதிகம் கவலைப்பட வேண்டாம் கருத்துக்களும் சில உண்மை

விளக்கங்களும் மிக முக்கியம். மொழி நடையை எழுத எழுத அபிவிருத்தி செய்து கொள்ளலாம். கம்ப ராமாயணத்தைப் பற்றியும் இனவாத அடிப்படையில் சிலரிடம் கருத்துக்கள் பரவியுள்ளன. அவை அபத்தமானவை. இராமாயணக் கதையை வைத்து ஆரியம் திராவிடம் பேசுவது அபத்தமானது. அதற்கு எந்த விதமான அடிப்படையும் இல்லை வரலாற்று ஆதாரமும் இல்லை. இராமாயணக் கதையின் கருத்துப்படி இராமன் அரச குலத்தை, க்ஷத்திரிய குலத்தைச் சேர்ந்தவன். இராவணன் பிராமண குலத்தில் பிறந்தவன். அவன் பிரம்மாவின் பேரன். எனவே தமிழ் நாட்டில் பரவியுள்ள தவறான ஆரிய திராவிடக் கருத்தைத் தெளிவு படுத்த வேண்டியது அவசியம் என்று அந்த நண்பர் என்னிடம் கூறினார்.

மேலும் அவர் **''கம்பராமாயணத்தை வெறும் பூஜை அறைகளிலும் புலவர்களின் பட்டி மன்றங்களிலும் மட்டுமல்லாமல் மக்கள் மன்றங்களிலும் கம்பனுடைய அந்த மகத்தான காவியத்தைப் பிரபலப்படுத்த வேண்டும். எனவே நான் குறிப்பிட்ட கம்பன் ஒரு சமுதாயப் பார்வை என்னும் தலைப்பில் ஒரு ஆய்வு நூல் எழுதுங்கள்''** என்று கூறி என்னை ஊக்கமூட்டினார்.

எனக்கும் அந்த எண்ணம் ஏற்பட்டு அது உறுதிப்பட்டு நூல் எழுதுவதற்கு முயற்சிகள் எடுத்தேன். கம்பராமாயணம் போன்ற நூல்களை ஆய்வு செய்து தனி நூல் எழுதுவதற்கு எனது தமிழ் இலக்கியப் புலமையும் கவிதைப் புலமையும் போதவில்லை. எனவே பல தமிழ் இலக்கிய நூல்களையும் படித்தேன். அத்துடன் வேறு பல துறைகளிலும் குறிப்பாக அரசியல், பொருளாதாரம், தத்துவ ஞானம் முதலியவை பற்றிய பல நூல்களையும், மொழி பெயர்ப்புகள், கட்டுரைகள் பலவும் எழுதியுள்ள அனுபவத்திலும், ஏற்கனவே எனது தாய் தந்தையர் மூலம் நான் பெற்றுள்ள தமிழ் புலமை வைணவ இலக்கியப் புலமை மற்றும் ஞானத்தைத் துணையாகக் கொண்டு கம்பனைப் பற்றிய ஆய்வு நூலை எழுதத் தொடங்கினேன்.

அந்த நூலுக்கான தோற்றுவாய்க்கான குறிப்புகளைத் தயாரித்துக் கொண்டிருந்த போது தமிழ்ப் புலவராக உள்ள எனது நண்பர் ஒருவர் அந்தக் குறிப்புகளைப் படித்துப் பார்த்து விட்டு ''இது ஒரு புதிய நல்ல அணுகு முறையாக உள்ளது. நூலை எப்படியும் எழுதி முடித்து விடுங்கள்'' என்று கூறி என்னை மேலும் ஊக்கமூட்டினார் முதலில் சிறிய அளவிலேயே சில கட்டுரைகளின் தொகுப்பைப் போல எழுதலாம் எழுதி முடித்துவிடலாம் என்று கருதியிருந்தேன். ஆனால்,

ஒரு தடவை மதுரையில் மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றி இப்போது ஓய்வு பெற்றுள்ள எனது நண்பரிடம் இவ்வாறு கம்பனைப் பற்றிய ஒரு நூல் எழுதிக் கொண்டிருக்கிறேன் என்று கூறினேன். அப்போது அவரும் பெரும் மகிழ்ச்சியடைந்து ''எழுதுங்கள், அண்மைக் காலங்களில் கம்பர் விழா சொற் பொழிவுகளை வைத்தும் சில தலைப்புகளில் கட்டுரைகளாகவும் தான் சிறு நூல்கள் வெளி வந்திருக்கின்றன. கம்பனைப் பற்றியும் கம்ப ராமாயணத்தைப் பற்றியும் தரமான பெரிய நூல்கள் ஆய்வு நூல்கள் வெளி வர வேண்டும். நீங்கள் முயற்சி செய்யுங்கள்'' என்று கூறினார்.

அதன் பின்னர் சற்று விரிவாகவே எழுதலாம் என்று முயற்சித்தேன். அப்போது நூலும் நீண்டு விட்டது. மேலும் நீண்டு கொண்டே போயிற்று பெரிய நூலாக இருந்தால் அதை அச்சடிப்பதற்குச் செலவு அதிகமாகும். நூலின் விலையும் கூடும். விலை அதிகமாக இருந்தால் வாங்குபவர்கள் தயங்குவார்கள். விற்பனையாவதும் கஷ்டமாக இருக்கும் என்பதாக வெல்லாம் கருதி கம்பன் ஒரு சமுதாயப் பார்வை என்னும் தலைப்பிலான நூல் எழுதிய போது சில தலைப்பு அத்தியாயங்களைத் தனியாகப் பிரித்து அவைகளைத் தனி நூல்களாக எழுதி வெளியிடத் தீர்மானித்தேன்.

கம்பன் ஒரு சமுதாயப் பார்வை என்னும் நூலில் கம்பனுடைய கடவுட் கொள்கை, சகோதரத்வம், மானுடம் அரசியல், கம்பனும் தமிழும் என்னும் தலைப்புகளிலான அத்தியாயங்களுடனான நூல் அச்சுக்குப் போயிருக்கிறது. அந்நூல் விரைவில் வெளிவரும்.

அதைத் தொடர்ந்து ''**கம்ப நாடன் காவியத்தில் காதலும் பெருங்காதலும்**'' என்னும் தலைப்பில் இந்த நூலை எழுதி முடித்துள்ளேன். கம்பனுடைய காவியத்தின் கவிதைகளின் ஆழத்தைக் காண்பது கடினம்.

கம்பனே கூட இராமாயண காவியத்தைப் பாடத் தொடங்கிய போது பாற்கடலைப் பூனை நக்கிக்குடிப்பதற்கு முயன்றதைப் போல நான் இராமன் கதையைப் பாடத் தொடங்கியுள்ளேன். என்று அவை யடக்கமாகக் கூறியுள்ளார்.

''ஓசை பெற்று உயர்பாற்கடல் உற்று ஒரு
பூசை முற்றவும் நக்கு புக்கு என
ஆசைபற்றி அறையல் உற்றேன் மற்று அவ்
ஏசில் கொற்றத்து இராமன் கதை; அரோ!

என்று கம்பர் குறிப்பிடுகிறார்.

எனவே கடினமான வேலையைக் கட்டாயம் கருதி எடுத்துக் கொண்டு அப்பணியைச் செய்து முடிக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறேன். நமது நாடு ஞானத்தில் (அறிவில்) சிறந்த நாடு. ஆயினும் காலக்கிரகத்தால் இடைக் காலத்தில் ஏற்பட்ட பல தடைகளால் இன்னும் மடமையில் ஊறிக்கிடக்கும் கோடி கோடி மக்களைக் காண்கிறோம். மகாகவி பாரதி

''நெஞ்சு பொருக்குதில்லையே – இந்த
நிலை கெட்ட மனிதனை நினைந்து விட்டால்''

என்று தொடங்கி

''நண்ணிய பெருங்கலைகள் – பத்து நாலாயிரம் கோடி நயந்து
நின்ற புண்ணிய நாட்டினிலே இவர் பொறியற்ற
விலங்குகள் போல் வாழ்வார்''

என்று குறிப்பிடுகிறார்.

கல்வியில் பெரிய கம்பன் பிறந்த தமிழ் நாட்டில் ஏன் கல்வியின்மை இன்னும் நீடிக்க வேண்டும்? அது நமது குறைதானே?

தமிழ்ச் சாதியைப் பற்றி மகாகவி பாரதி குறிப்பிடும் போது, ''சிலப்பதிகாரச் செய்யுளைக் கருதியும், திருக்குறள் உறுதியும், தெளிவும், பொருளின் ஆழமும், விரிவும் அழகும் கருதியும் எல்லையொன் றின்மையெனும் பொருளதனைக் கம்பன் குறிகளால் காட்டிட முயலும் முயற்சியைக் கருதியும் முன்பு நான் தமிழ்ச் சாதியை அமரத்தன்மை வாய்ந்தது என்று உறுதி கொண்டிருந்தேன்'' என்று கூறுகிறார். இதில் பாரதி கம்பனைப் பற்றிக் குறிப்பிடும் போது "எல்லை யொன்றின்மை யெனும் பொருளதனைக் காட்டிட" முயல்வதாக மிக உயர்ந்த நிலைக்கு உயர்த்தி விட்டார்.

கம்பன் எந்தப் பொருளைப் பற்றிப் பேசத் தொடங்கினாலும் அதன் உச்சத்திற்கே கொண்டு சென்றிருக்கிறார். இராமனைப் பற்றி அவனுடைய உயர்வைப்பற்றிக் கம்பன் பல இடங்களிலும் குறிப்பிடுகிறார். அதில் கவந்தன் இராமனை வாழ்த்து போது;

''ஈன்றவனோ எப்பொருளும்! எல்லை தீர் நல்லறத்தின்
சான்றவனோ! தேவர் தவத்தின் தனிப் பயனோ!
மூன்று கவடாய் முளைத்தெழுந்த மூலமோ!
தோன்றி அருவினையேன் சாபத்து இடர் தொலைத்தாய்".

"காண்பார்க்கும் காணப்படும் பொருட்கும் கண்ணாகிப்
பூண்பாய் போல் நிற்றியாய்! யாதொன்றும் பூணாதாய்!
மாண்பால் உலகை வயிற்றொழித்து வாங்குதியால்!
ஆண்பாலோ? பெண்பாலோ? அப்பாலோ? எப்பாலோ?"

"ஆதிப்பிரமனும் நீ! ஆதிப்பரமனும் நீ!
ஆதி எனும் பொருளுக்கு அப்பால் உண்டாகிலும் நீ!
சோதி நீ சோதிச் சுடர்ப் பிழம்பும் நீ என்று
வேதம் உரை செய்தால் வெள்காரோ வேறுள்ளார்!"

"நின் செய்கை கண்டு நினைந்தனவோ நீள் மறைகள்?
உன்செய்கை அன்னவைதான் சொன்ன ஒழுக்கினவோ?
என் செய்தேன் முன்னம் மறம் செய்கை எய்தினார்
பின் செல்வது இல்லாப் பெரும் செல்வம் நீ தந்தாய்!"

"மாயப் பிறவி மயல் நீக்கி மாசிலாக்
காயத்தை நல்கித் துயரின் கரையேற்றிப்
பே யொத்த பேதைப் பிணக்கறுத்த எம்பெருமான்!
நா யொத்தேன் என்ன நலம் இழைத்தேன் நான் என்றான்"

என்று கூறுகிறார்.

இவ்வாறு பலரும் இராமனுடைய பெருமைகளைக் கூறுகிறார்கள்.

வாலி மீது இராமன் தனது கணையைச் செலுத்தினான். வாலி சோர்ந்து கீழே விழுந்தான். வாலி தனது மார்பிலே தைத்துள்ள அம்பைப் பிடித்து இழுத்து அதில் உள்ள பெயரைக் கண்டான்.

''மும்மை சால் உலகுக்கெல்லாம் மூல மந்திரத்தை, முற்றும்
தம்மையே தமர்க்கு நல்கும் தனிப்பெரும் பதத்தைத் தானே
இம்மையே எழுமை நோய்க்கும் மருந்தினை இராமன் என்னும்
செம்மை சேர் நாமம் தன்னைக் கண்களில் தெரியக் கண்டான்''

என்று கம்பன் குறிப்பிடுகிறார்.

இலங்கையில் அனுமனை, இந்திர சித்தன் நான் முகன் படையால் கட்டி இராவணன் சபைக்கு இழுத்துச் சென்று அங்கு நிறுத்தினான். இராவணன் அனுமனை அதட்டி நீ யார்? இங்கு வந்த காரணம்

என்ன? உன்னை இங்கு அனுப்பியவர் யார். என்று கேட்டபோது அனுமன் ''வில்லி தன் தூதன் யான்'' என்று பதில் கூறி இராமனைப் பற்றிப் பேசுகிறார்.

''மூலமும் நடுவும் ஈறும் இல்லது ஓர்மும்மைத்து ஆய,
காலமும் கணக்கும் நீத்த காரணன் கை வில் ஏந்திச்
சூலமும், திகிரி சங்கும், கரகமும் துறந்து, தொல்லை
ஆலமும், மலரும், வெள்ளிப் பொருப்பும்
விட்டு அயோத்தி வந்தான்''

என்றும்,

''அறம் தலை நிறுத்தி, வேதம் அருள் சுரந்து அறைந்த நீதித்
திறம் தெரிந்து உலகம் பூணச், செந்நெறி செலுத்தித், தீயோர்
இறந்து உகநூறித், தக்கோர் இடர் துடைத்து ஏக, ஈண்டுப்
பிறந்தனன், பொன்பாதம் ஏத்துவார் பிறப்பு அறுப்பான்''

என்றும் சிறப்புறக் கூறுகிறார்.

இராமனுக்கும் இராவணனுக்கும் இறுதிப் போர் நடைபெறுகிறது. இராமனையும் இலக்குவனையும் வெறும் மனிதர் என்றும், குரங்குகளைத் திரட்டிப் போருக்கு வந்துள்ளனர் என்றும் ஆரம்ப முதல் இகழ்ச்சியாகவே பேசி வந்த இராவணன், நேருக்கு நேராக இராம இலக்குவர்களைப் போர்க்களத்தில் சந்தித்த போது அவர்களுடைய வீரத்தையும் ஆற்றலையும் அவர்களுடைய ஆயுதங்களின் வலுவையும் நேரில் கண்டான்.

இராவணனுக்கும் இராமனுக்கும் நேருக்கு நேரான போர் நடை பெறுகிறது. இராவணன் தனது சக்தி வாய்ந்த ஆயுதங்கள் அனைத்தையும் இராமன் மீது ஏவினான். அவையனைத்தும் பயனற்றுப் போயின. இராவணன் மாயக் கணையை ஏவியபோது இராமன் ஞானக் கணையை ஏவி அதைத் தடுத்தான். இராவணன் தனதுச் சக்தி மிக்க சூலப்படையை ஏவினான். அது இராமனுடைய மார்பிலே பட்டுப் பொடிப் பொடியாக உதிர்ந்து போயிற்று. அப்போது இராவணனுக்கு மிகுந்த ஆச்சரியம் ஏற்பட்டு இந்த இராமன் யார் என்று சிந்தித்தான்.

''சிவனோ அல்லன், நான் முகன் அல்லன், திருமாலாம்
அவனோ அல்லன், மெய்வரம் எல்லாம் அடுகின்றான்;
தவனோ என்னின் செய்து முடிக்கும் தரன் அல்லன்;
இவனோ தான் அவ்வேத முதற்காரணன்? என்றான்.

''யாரேனும் தான் ஆகுக; யான் என் தனியாண்மை
பேரேன்; இன்றே வென்றி முடிப்பென்; பெயர்கில்லேன்;
நேரே செல்வேன்; கொல்லும்; அரக்கன் நிமிர்வெய்தி
வேரே நிற்கும் மீள்கிலேன் என்னாவிடல் உற்றான்''

என்று இராவணன் கூறியதைக் கம்பன் மிகவும் நுட்பமாகக் குறிப்பிடுகிறார். இவ்வாறு இராவணனே இராமனைப் பற்றி ''இவனோதான் அவ்வேத முதற்காரணன்'' என்று கூறுகிறான்.

இவ்வாறு இராமனைப் பற்றிப் பல இடங்களிலும் சிறப்பாக எல்லையில்லாத ஒரு பரம் பொருளாகக் கம்பன் குறிப்பிடுகிறார். இவ்வாறு தான் கம்ப நாடர் எந்தப் பொருளை எடுத்தாலும் அதன் உச்சத்திற்கே சென்று அதன் முழுமையான மெய்ப்பொருளை நமக்கு எடுத்துக் காட்டுகிறார்.

அனுமனைப் பற்றி மிக அற்புதமாகப் பேசுகிறார். அனுமன் கடலைத் தாண்டி, இலங்கைக்குள் சென்று, சீதையைக் கண்டு விட்டு, அரக்கர்களுடன் போரிட்டு, அக்கனைக் கொன்று, இந்திர சித்தனுடைய நான்முகன் படைக்குக் கட்டுப்பட்டு இராவணனை சந்தித்துப் பேசித் தூதுக் கூறிவிட்டு, இராமனிடம் திரும்பிவந்து, இலங்கையில் சீதையைக் கண்டதன் அடையாளமாக சீதை கொடுத்த சூளா மணியை இராமனிடம் சேர்ப்பித்தான். ஆஞ்சநேயனுடைய இந்த அற்புதமான செயல்களைக் கம்பன் பாராட்டாமல் இருக்க முடியுமா?

''வைத்தன்பின் துகிலின் வைத்த மாமணிக்கு அரசை வாங்கிக்
கைத்தலத்து இனிதின் ஈ ந்தான்; தாமரைக் கண்கள் ஆர
வித்தக காண்டி! என்று கொடுத்தனன் வேத நன்னூல்
உய்த்துள காலம் எல்லாம் புகழொடும் ஓங்கி நிற்பான்''

என்று கம்பன் குறிப்பிடுகிறார்.

''வேத நன்னூல் உய்த்துளகால மெல்லாம் புகழொடும் ஓங்கி நிற்பான்'' என்று அனுமனை உச்சத்திற்குக் கொண்டு சென்று கம்பன் பாராட்டுகிறார். அனுமன் செய்துள்ள அற்புதமான ஆற்றல் மிக்க செயல்களுக் கெல்லாம் அவனை எவ்வளவு பாராட்டினாலும் தகும் அல்லவா?

ஆஞ்சநேயனுடைய இரண்டாவது அருஞ்செயல் பெருஞ்செயல் அவர் சஞ்சீவி மலையைக் கொண்டு வந்து போரில் மடிந்த வானரப் படைகளையும், இருமுறை இலக்குவனையும் உயிர் எழுப்பியதாகும். அனுமனைப் பாராட்டிக் கம்ப நாடன் கூறுகிறார்.

வளமான வாழ்வு ஆகியவைகளைப் பற்றி விவரித்துக் கூறிக் கடைசியில்,

''கல்லாது நிற்பார் பிறர் இன்மையின், கல்வி முற்ற
வல்லாரும் இல்லை; அவை வல்லர் அல்லாரும் இல்லை;
எல்லாரும் எல்லாப் பெரும் செல்வமும் எய்தலாலே
இல்லாறும் இல்லை; உடையார்களும் இல்லை; மாதோ!''

என்றும் இன்னும் அதற்கும் மேலாக,

''ஏகம் முதல் கல்வி முளைத்தெழுந்து, எண்ணில் கேள்வி
ஆகும் முதல்திண் பனைபோக்கி, அரும் தவத்தின்
சாகம் தழைத்து, அன்பு அரும்பித், தருமம் மலர்ந்து,
போகம் கனி ஒன்று பழுத்தது போலும் அன்றே''

என்று மிகவும் உயர்ந்த நிலைக்கு மக்களின் வாழ்க்கை நிலைமையைப் பற்றி எடுத்துக் காட்டுவதைக் காண்கிறோம்.

பாலைவனத்தின் கொடுமையான வறட்சியான, பசையற்றுப் போன, மண்ணும் குறுமணலும் நிறைந்த காட்சியைப் பற்றிக் கூறும் போது,

''தாவரும் இருவினை செற்றுத், தள்ளரும்
மூவகைப்பகை அரண் கடந்து, முத்தியில்
போவது புரிபவர் மனமும், பொன்விலைப்
பாவையர் மனம்போல் பசையும் அற்றதே!''

என்றும் தாடகையைப் பற்றிக் கூறும் போது.

''மண் உருத்து எடுப்பினும், கடலை வாரினும்
விண் உருத்து இடிப்பினும், வேண்டின் செய்கிற்பாள்;
எண் உருத்தெரிவரும் பாவம் ஈண்டி ஓர்
பெண்உருக் கொண்டேனத் திரியும் பெற்றியாள்''

என்று தாடகையின் செய்கைகளின் கொடுமை நிலையைக் குறிப்பிடுகிறார்.

அரசியல் மற்றும் ஆட்சி முறையைப் பற்றிப் பல இடங்களிலும் கம்பர் மிகவும் சிறப்பான கருத்துக்களை முன்வைத்துப் பேசுகிறார்.

இராமனுக்கு முடி சூட்டுவதற்கான ஏற்பாடுகள் நடந்த போது வசிட்டன் இராமனுக்குக் கூறிய நல்லுரைகள் மிகவும் சிறந்த அரசியல் நெறிமுறைகள் நிறைந்த கருத்துக்களாகும் அவைகளில்,

XV

''வையம் மன் உயிராக, அம்மன் உயிர்
உய்யத்தாங்கும் உடல் அன்ன மன்னனுக்கு,
ஐயம் இன்றி அறம் கடவாது; அருள்
மெய்யின் நின்றபின் வேள்வியும் வேண்டுமோ?''

என்றும்,

''தூமகேது புவிக் கெனத் தோன்றிய
வாம மேகலை மங்கையரால் வரும்
காமம் இல்லை யெனில், கடும் கேடு எனும்
நாமம் இல்லை; நரகமும் இல்லையே''

என்றும் பல முக்கிய எக்காலத்திற்கும் பொருந்தக் கூடிய சிறந்த அரசியல் நெறிகளைக் கொண்ட சிறந்த அரசியல் கருத்துக்களை எடுத்துக் கூறுகிறார் கம்பர்.

மன்னன் உயிரெனவும் மக்கள் உடலெனவும் நிலவியிருந்த கருத்துகளை அடிப்படையில் மாற்றம் செய்து மக்கள் உயிரெனவும் மன்னன் உடலெனவும் அமையும் புதிய கருத்துக்கள் இங்கு கூறப் படுவதைக் காணலாம். ஏற்கனவே தசரத மன்னனுடைய ஆட்சியைப் பற்றிக் கூறும் போது,

''தாய்ஒக்கும் அன்பில்; தவம் ஒக்கும் நலம் பயப்பின்;
சேய்ஒக்கும் முன்னின்று ஒருசெல்கதி உய்க்கும் நீரால்
நோய்ஒக்கும் என்னின் மருந்து ஒக்கும் நுணங்கு கேள்வி
ஆயப்புகுங்கால் அறிவொக்கும் எவர்க்கும் அன்னான்''

என்றும்,

''வயிரவான் பூண் அணி மடங்கல் மொய்ம்பினான் (தசரதன்)
உயிர் எலாம் தன் உயிர் ஒப்ப ஓம்பலால்
செயிர் இலா உலகினில் சென்று நின்று வாழ்
உயிர் எலாம் உறைவதோர் உடம்பும் ஆயினான்''

என்று கம்பர் குறிப்பிடுகிறார்.

எனவே இங்கு கம்பநாடர், நாடும் மக்களும் உயிர் எனவும் நாட்டை ஆளும் மன்னன் உடல் எனவும் கொள்ளும் புது நெறியை எடுத்துக் கூறுவதைக் காண்கிறோம். அத்துடன் அரசுப் பொருப்பில் உள்ளவர்களுக்கு ஒழுக்கக்கேடுகளினால் ஏற்படும் கேடுகளையும் சுட்டிக் காட்டி எச்சரிக்கை செய்வதையும் காண்கிறோம்.

கூனியைப் பற்றிக் குறிப்பிடும் போது ''துன்னரும் கொடுமனக் கூனி தோன்றினாள்'' என்றும்

''தோன்றிய கூனியும் துடிக்கும் நெஞ்சினாள்
ஊன்றிய வெகுளியாள்; உளைக்கும் உள்ளத்தாள்
கான்று எரி நயனத்தாள்; கதிக்கும் சொல்லினாள்;
மூன்று உலகினுக்கும் ஓர் இடுக்கண் மூட்டுவாள்''

என்றும், இன்னும் ''உள்ளமும் கோடிய கொடியாள்'' என்றும் குறிப்பிடுகிறார்.,

கைகேயியைப் பறறிக் குறிப்பிடும் போது தெய்வக் கற்பினள் என்று தொடங்கும் கம்பர் கடைசியில் ''தீயவை யாவையினும் சிறந்த தீயாள்'' என்று கூறுகிறார்.

இராமனுக்கு நாடு இல்லை, காடு என்று கேள்விப்பட்டவுடன் இலக்குவன் சீறினான், வில்லை எடுத்தான், இராமன் அவனை அமைதிப் படுத்தினான்.

''நதியின் பிழையன்று நறுபுனல் இன்மை; அற்றே
பதியின் (தசரத மன்னனுடைய) பிழையன்று;
பயந்து நமைப் புரந்தான்
மதியின் (தாய் கைகேயியின்) பிழையன்று;
மகன் (பரதன்) பிழையன்று; மைந்த
விதியின் பிழை; நீ இதற்கு என்கொல்
வெகுண்டது?'' என்றான்

என்று இராமன் இலக்குவனை சாந்தப்படுத்தினான். ஆயினும் சினம் அடங்காத இலக்குவன் அதற்கு பதிலளித்து ''விதிக்கும் விதியாகும் என் வில் தொழில்'' என்று பேசியதைக் கம்பன் குறிப்பிடுகிறார்.

பரதனுக்குத் தகவல் போய் அவன் அயோத்தி திரும்பிவந்தான். நடந்த செய்திகளை அறிந்தான். கடும் வேதனை அடைந்தான். தாயைக் கடிந்தான். தந்தையின் மரணம் கேட்டு துன்பப் பட்டான். இறந்த தந்தைக்கு ஈமக்கடன்கள் முடித்தான் இராமனை நாட்டிற்கு அழைத்து வரக்காட்டிற்கு புறப்பட்டுச் சென்றான். தொலைவில் வந்து கொண்டிருந்த பரதன் மீது சந்தேகப் பட்டு இலக்குவன் சீறினான். அப்போது பரதனுடைய சிறப்பை இராமன் எடுத்துக் கூறுகிறான்.

''சேண் உயர் தருமத்தின் தேவைச் செம்மையின் ஆணியை அன்னது நினைக்கல் ஆகுமோ?'' என்று இலக்குவனிடம் கூறி

அவனை அமைதிப்படுத்தினான். ''செம்மையின் ஆணி'' என்று இன்னும் ''சேண் உயர் தருமத்தின் தேவைச் செம்மையின் ஆணியை'' என்று பரதனைப் பற்றி இராமன் குறிப்பிடுகிறார்.

இதைக் காட்டிலும் சிறந்த சொற்களைக் கொண்டு அந்த உயர் குணத்துப் பரதனைப் பற்றி வேறு எந்தக் கவிஞன் குறிப்பிட முடியும்? கம்பநாடனைத் தவிர வேறு எந்தக் கவிஞனும் இத்தனை சிறப்பாகப் பேசவில்லை.

பரதனையே ஆட்சிப் பொருப்பை ஏற்று நடத்தும்படி இராமன் கூறினான். அதற்கு பதிலளித்த பரதன்,

''நிறையின் நீங்கிய மகளிர் நீர்மையும்
பொறையின் நீங்கிய தவமும், பொங்கு அருள்
துறையின் நீங்கிய அறமும், தொல்லையோர்
முறையின் நீங்கிய அரசின் முந்துமோ?''

என்று அரசியல் நெறி பற்றி மிகவும் சிறப்பான கருத்துக்களைக் கொண்ட வாசகத்தைக் கூறுகிறான்.

சூர்ப்பணகையின் வருகையைப் பற்றிக் கம்பன் கூறும் போது.

''பஞ்சி ஒளிர் விஞ்சு குளிர் பல்லவம் அனுங்கச்
செஞ்செவிய கஞ்சம் நிகர் சீறடியள் ஆகி;
அம்சொல் இள மஞ்ஞை என, அன்னம் என, மின்னும்
வஞ்சி என, நஞ்சம் என வஞ்சமகள் வந்தாள்''

என்று குறிப்பிடுகிறார். இங்கு மெல்லின எழுத்துக்கள் நிறைந்த சொற்கள் மூலம் சூர்ப்பணகையின் வஞ்சகச் செயலைக் கம்பன் எடுத்துக் காட்டுவது சிறப்பாகும்.

இராமனும் இலக்குவனும் சீதையைக் காணாமல் தேடிக் கொண்டு சென்றனர். வழியில் குற்றுயிராகக் கிடந்த சடாயுவைக் கண்டு விவர மறிந்தனர். இராமன் சீதைக்கு ஏற்பட்டக் கதியைக் கண்டு மிகவும் வருந்தினான். அதைக் கண்ட சடாயு வருந்திப் பயன் இல்லை

"ஆதலால் முனிவாய் அல்லை; அருந்ததி அனைய கற்பின்
காதலாள் துயரம் நீக்கித், தேவர்தம் கருத்து முற்றி,
வேத நூல் முறையின் யாவும்விதியுளி நிறுவி, வேறும்
தீதுள துடைத்தி; என்றான், சேவடிக் கமலம் சேர்வான்"

என்று கூறி இராமனுடைய அவதாரக் கடமையை நினைவூட்டுகிறான்.

அனுமன் வேற்றுருவில் வந்து இராமனையும் இலக்குவனையும் சந்திக்கிறான். மாருதியைக் கண்டவுடன் இராமன் தனக்கு ஏற்பட்ட எண்ணத்தை நினைத்து,

**''மாற்றம் அஃது உரைத்த லோடும் வரிசிலைக் குரிசில் மைந்தன்
தேற்றம் உற்று, இவனின் ஊங்குச் செவ்வியோர் இன்மை தேறிர்
ஆற்றலும், நிறைவும், கல்வி அமைதியும், அறிவும் என்னும்
வேற்றுமை இவனோடில்லை யாம்; என விளம்பால் உற்றான்''**

என்றும்

**"இல்லாத உலகத்தெங்கும், இங்கிவன் இசைகள் கூறக்
கல்லாத கலையும், வேதக் கடலுமே; என்னும் காட்சி
சொல்லாலே தோன்றிற்று அன்றே; யார் கொல்
இச்சொல்லின் செல்வன்
வில்லார் தோள் இளையவீர விரிஞ்சனோ! விடை வல்லானோ?''**

என்று தன் இளவலிடம் கூறுகிறான் ''மறைகளாலும் அறிவாலும் அறிய முடியாத பொருளே, குரங்கு உருக்கொண்டு நிற்கிறது'' என்று கூறி வியப்படைகிறான்.

சுக்கிரீவன், இராமனையும் இலக்குவனையும் நேரில் கண்டான்.

**"நோக்கினான் நெடிது நின்றான்; நொடிவரும் கமலத்து அண்ணல்,
ஆக்கிய உலகம் எல்லாம் அன்று தொட்டு இன்று காறும்
பாக்கியம் புரிந்த எல்லாம் குவிந்து இரு படிவம் ஆகி
மேக்குயர் தடந்தோள் பெற்று வீரராய் விளைந்த என்பான்"**

பின்னர்

**"தேறினான், அமரர்க்கெல்லாம் தேவராம் தேவர் அன்றே
மாறி இப்பிறப்பில் வந்தார் மானிடர் ஆகி; மன்னோ
ஆறு கொள் சடிலத்தானும், அயனும் என்று இவர்கள் ஆதி
வேறுளகுழுவை யெல்லாம் மானுடம் வென்றது அன்றே''**

என்று சுக்கிரீவன் எண்ணினான் என்று கம்பன் மிகவும் சிறப்பாகக் குறிப்பிடுகிறார்.

இராமாயணப் பெருங்கதையில் இராமன் சுக்கிரீவன் சந்திப்பு மிக முக்கியமான தொரு நிகழ்ச்சியாகும். இராமன் தலைமையில் வானரப் படை ஒன்று திரளுவதற்கு அடிப்படை வகுத்தும் இந்த நிகழ்ச்சியே யாகும். சீதையைத் தேடி அவள் இருக்கும்மிடத்தைக் கண்டுபிடித்ததும்,

சேது அணையைக் கட்டி முடித்ததும் இலங்கை மீது படையெடுத்ததும், இலங்கையில் இராவணன் தலைமையிலான அரக்கர் படையை வென்றதும் வானரப் படையின் வானரத் தலைமையின் உதவியைக் கொண்டு இராமன் அதைச் சாதித்து முடித்ததும், அது மானுடத்தின் மகத்தான வெற்றியாகக் கம்பன் நெடிது நோக்குடன் எடுத்துக் கூறுகிறார்.

திருமாலே மானிடப் பிறப்பெடுத்து மானுட வடிவில் வந்து செய்து முடித்த சாதனையாக இங்கு மானுடத்தின் வெற்றி உச்சம் பெறுகிறது. சுக்கிரீவன் அந்த மானிட சக்தியை அறிந்து இராமனுடன் சேர்ந்து அந்த இராமனுக்கு அவனுடைய மகத்தான அவதாரக் கடமையை நிறைவேற்றத் துணை நிற்கிறான்.

வாலி தான் உயிர்போகும் தருவாயில்,

''தாய் என உயிர்க்கு நல்கித் தருமமும், தகவும், சால்பும்,
நீயென நின்ற நம்பி! நெறியினின் நோக்கும் நேர்மை
நாயென நின்ற எம்மால் நவை அற உணராமே!
தீயன பொருத்தி!'' என்றான்; சிறியன சிந்தியாதான்''

''ஏவுகூர் வாளியால் எய்து, நாயடியனேன்
ஆவிபோகும் வேலை வாய் அறிவு தந்து அருளினாய்!
மூவர் நீ! முதல்வன் நீ! முற்றும் நீ! மற்றும் நீ!
பாவம் நீ! தருமம் நீ! பகையும் நீ! உறவும் நீ!''

என்று கூறினான். அச்சிறியனசிந்தியாதான் என்று கவிப் பேரரசர் கம்ப நாடர் மிகச் சிறப்பாகக் குறிப்பிடுகிறார்.

வானரப்படை திரண்டது. வல்லமை மிக்க அப்படையின் பெருக்கத்தையும் ஆற்றலையும் கம்பர் மிக அற்புதமாக விவரித்துக் கூறுகிறார். அவ்வானரப்படை,

''ஒடிக்குமேல், வட மேறுவை வோராடும் ஒடிக்கும்;
இடிக்குமேல், நெடுவானக முகட்டையும் இடிக்கும்;
பிடிக்கு மேல் பெரும் காற்றையும் கூற்றையும் பிடிக்கும்;
குடிக்குமேல் கடல் ஏழையும் குடங்கையால் குடிக்கும்.''

இச் சேனையின் முடிவைக் காண முடியவில்லை என்றும் கணக்கிடத் தொடங்கினால் கடலினும் பெரியதாகக் காணப்படுகிறது என்றும்

''ஈசன்மேனியை, ஈரைந்து திசைகளை ஈண்டில்
ஆசில் சேனையை, ஐம்பெரும் பூதத்தை, அறிவைப்
பேசும் பேச்சினைச், சமயங்கள் பிணக்குறும் பிணக்கை,
வாச மாலையாய்! யாவரே முடிவெண்ண வல்லார்?''

என்று இராமன் இலக்குவனிடம் வியந்து கூறுவதைக் கம்பன் மிகவும் சிறப்பாக எடுத்துக் கூறுகிறார்.

சீதையைத் தேடுவதற்காகத் தெற்கு நோக்கிச் செல்லும் படைக்கு வழி காட்டும் முகத்தான், அவ்வழியைப் பற்றிக் கூறுகையில் சுக்கிரீவன் திரு வேங்கட மலையைப் பற்றிக் குறிப்பிடும் போது

''வட சொற்கும் தென் சொற்கும் வரம் பாகி
நான்மறையும் மற்றை நூலும்
இடை சொற்ற பொருட் கெல்லாம் எல்லையாய்
நல்லறிவுக்கு ஈறாய், வேறு
புடை சுற்றும் துணையின்றிப் புகழ் பொதிந்த
மெய்யே போல் பூத்து நின்ற
உடை சுற்றும் தண் சாரல் ஓங்கிய வேங்
கடத்தில் சென்று உறுதிர் மாதோ''

என்று திருவேங்கடத்தின் பெருமையைப் பற்றிச் சுக்கிரீவன் கூறுவதைக் கம்பன் பெருமையுடன் எடுத்துக் காட்டுகிறார்.

கம்பர் தனது பெருங்காவியம் முழுவதிலும் தமிழைப் பற்றி மிகவும் சிறப்பாகப் பெருமைப்படுத்திக் குறிப்பிடுகிறார். பொன்னியும் தமிழும், கம்பருடைய காவியத்தில் பல இடங்களிலும் உயிரோட்டமாக அமைந்திருக்கிறது. அகத்திய மாமுனிவரைப் பற்றிக் குறிப்பிடும் போது தமிழ் எனும் அளப்பரும் சலதி தந்தவன் என்று பெருமையுடன் கூறுகிறார்.

இராமனைப் பற்றிக் குறிப்பிடும் போது "தென் சொல் கடந்தான் வட சொற்கலைக்கு எல்லை தேர்ந்தான்" என்று சிறப்புடன் குறிப்பிடுகிறார்.

வனத்தின் அழகிய காட்சிகளைச் சீதைக்குக் காட்டிக் கொண்டு செல்கிறான் இராமபிரான். அப்போது ''குழுவு நுண்துளை வேயினும் (சிறிய தொளைகளையுடைய வேங்குழலைக் காட்டிலும்) குறி நரம்பு எரிவுற்று எழுவு தண் தமிழ் யாழினும் இனிய சொல்கிளியே'' என்று சீதையைக் குறிப்பிடுகிறார்.

அகத்தியனைப் பற்றிப் பல இடங்களிலும் குறிப்பிடும் போது, தமிழ்த் தலைவன் என்று கூறுகிறார், ''நீண்ட தமிழால் உலகை நேமியின் அளந்தான்'' என்றும், ''தழற்புரை சுடர்க்கடவுள் தந்த தமிழ் தந்தான்'' என்றும், ''என்றும் உளதென் தமிழ் இயம்பி இசை கொண்டான்'' என்று கூறுகிறார்.

பம்பைக் கரையில் இருக்கும் போது இராமன் சீதையை நினைத்துப் புலம்பும் போது, பலதும் கூறுவதுடன் ''தமிழ்பாட்டு இசைக்கும் தாமரையே'' என்றும் கூறுவதாகக் கம்பன் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு இன்னும் பல இடங்களிலும் தனது காவியத்தில் தமிழின் சிறப்பைப் பற்றிக் கூறும் கம்பன் சீதையைத் தேடுவதற்காகச் சுக்கிரீவன் வழி கூறும் போது தமிழின் சிறப்பு பற்றி அதன் உச்சத்திற்கே கொண்டு செல்கிறான்.

அருந்ததி மலை, திருவேங்கட மலை தொண்டை மண்டலம், பொன்னி என்னும் தெய்வத்திரு நதியின் இரு கரைகள் மற்றும் சோழ நாடு கடந்து ''தமிழ் நாட்டில் பெயர்க மாதோ'' என்று குறிப்பிடுகிறார். இங்கு பாண்டிய நாட்டையே தமிழ் நாடு என்று கம்பர் குறிப்பிடுகிறார் போலும், அங்கு சென்றபின்

''தென்தமிழ்நாட்டு அகன் பொதியில்; திரு முனிவன்
தமிழ்ச் சங்கம் சேர்கிற்பீரேல்,
என்றும் அவன் உறைவிடம் ஆம்; ஆதலினால்
அம்மலையை இறைஞ்சி ஏகிப்
பொன் திணிந்த புனல் பெருகும் பொருநையெனும்
திருநதி பின் பொழிய, நாகக்
கன்று வளர் தடம் சாரல் மயேந்திரமா
நெடுவரையும் கடலும் காண்டிர்''

என்று சுக்கிரீவன் குறிப்பிடுகிறார்.

இங்கு தமிழின் பெருமையைக் கம்பர் உச்சத்திற்குக் கொண்டு செல்கிறார். பொதிகை மலையில் திரு முனிவன் தமிழ் சங்கம் வைத்து தமிழ் கற்பித்துப் பேசிக் கொண்டிருக்கிறார். அங்கு நீங்கள் சென்றால் அகத்தியன் கூறும் தமிழின் இனிமையைக் கேட்டு நிரந்தரமாக அங்கேயே தங்கிவிடுவீர்கள். சீதையைத் தேடுவதை மறந்து விடுவீர்கள். எனவே அந்த மலையை நோக்கி ஒரு கும்பிடு

போட்டு விட்டு மேலும் தெற்கு நோக்கிச் சென்று பொருனை நதியைக் கடந்து மகேந்திர மலைக்குச் செல்லுங்கள்'' என்று கூறுகிறார்.

சீதையைத் தேடிச் செல்லும் அனுமனைத் தனியாக அழைத்து இராமன் சீதையின் தோற்றத்தையும் அடையாளங்களையும் எடுத்துக் கூறுகிறான்.

''குழல்படைத்து, யாழைச் செய்து, குயிலொடு கிளியும் கூட்டி,
மழலையும், பிறவும் தந்து வடித்ததைம்மலரின் மேலான்
இழைபொரும் இடையினாள்தன் இன்சொற்கள் இயையச் செய்தான்
பிழையிலது உவமை காட்டப் பெற்றிலன்; பெறுங்கொல் இன்னும்''

என்றும்,

''எந்நிறம் உரைக்கேன், மாவின் இளநிறம் முதிரும்; மற்றைப்
பொன் நிறம் கருகும்; என்றால், மணிநிறம் உவமை போதா;
மின் நிறம் நாணி எங்கும் வெளிப்படா ஒளிக்கும்; வேண்டின்
தன் நிறம் தானே ஒக்கும் மலர் நிறம் சமழ்க்கும் அன்றே! ''

என்றும் மிகவும் நுட்பமாக சீதையின் பேர் அழகைக் குறிப்பிடுகிறார்.

அனுமன் அசோக வனத்தில் சீதா பிராட்டியைச் சந்தித்தான். கணையாழியைக் கொடுத்தான். அக்கணையாழியைக் கண்ட சீதா தேவியின் மனோ நிலையைப் பற்றிக் கம்பநாடர் மிக அற்புதமாக விவரித்துக் கூறுகிறார்.

''இறந்தவர் பிறந்த பயன் எய்தினர் கொல் என்கோ?
மறந்தவர் அறிந்து உணர்வு வந்தனர் கொல் என்கோ?
துறந்த உயிர் வந்து இடை தொடர்ந்தது கொல் என்கோ?
திறம் தெரிவது என்னை கொல்இ நன்னுதவி செய்கை!''

''இழந்த மணி புற்று அரவு எதிர்ந்தது எனல் ஆனாள்
பழந்தனம் இழந்தன படைத்தவரை ஒத்தாள்
குழந்தையை உயிர்த்த மலடிக்கு உவமை கொண்டாள்,
உழந்து விழிபெற்றது ஓர் உயிர்ப் பொறையும் ஒத்தாள்''

''வாங்கினள்; மார்பிடை வைத்தனள்; சிரத்தால்
தாங்கினள்; மலர்க்கண்மிசை ஒத்தினள்; தடந்தோள்
வீங்கினள்; மெலிந்தனள்; குளிர்ந்தனள்; வெதுப்போடு
ஏங்கினள்; உயிர்த்தனள்; இது இன்னது எனல் ஆமோ?''

''இருந்து, பசியால் இடர் உழந்தவாகள் எய்தும்
அருந்தும் அமுது ஆகியது; அறத்தவரை அண்மும்
விருந்தும் எனல் ஆகியது; வீயும் உயிர் மீளும்
மருந்தும் எனல் ஆகியது; வாழி! மணி ஆழி!''

என்று மிக அற்புதமாகக் கம்பர் சீதையின் உள்ளக் கிடக்கையை அவள் அடைந்த மகிழ்ச்சி உணர்வை விவரித்துக் கூறுகிறார்.

அதே போல சூளாமணியை அனுமன் இராமனிடம் கொடுத்த போது இராம பிரானுடைய உணர்வுநிலை பற்றிக் கம்பருடைய அருங்கவிதை மிகவும் அற்புதமானவை.

''பைப்பையப் பயந்த காமம் பரிணமித்து உயர்ந்து பொங்கி,
மெய் உற வெதும்பி உள்ளம் மெலிவு உறும் நிலையை விட்டான்;
அய்யனுக்கு அங்கி முன்னர் அங்கையால் பற்றும் நங்கை
கை எனல் ஆயிற்று அன்றே கை புக்க மணியின் காட்சி''

இராமபிரான் சூளாமணியைக் கையில் வாங்கிய போது, சீதையே நேரில் வந்து தனது கரங்களால் தனது கைகளைப் பிடிப்பது போன்ற உணர்வுகளைப் பெற்றதாகக் கம்பன் குறிப்பிடுவது அற்புதமான காட்சி யாகும். இன்னும் இராமனுக்கு ஏற்பட்ட உணர்வை மேலும் கம்பர் கூறுகிறார்.

''பொடித்தன உரோமம் போந்து பொழிந்தன கண்ணீர், பொங்கித்
துடித்தன மார்பும் தோளும்; தேன்றின வியர்வின் துள்ளி;
மடித்தது மணவாய் ஆவி வருவது போவது ஆகித்
தடித்தது மேனி; என்னே! யார் உளர் தன்மை தேர்வார்''

என்று குறிப்பிடுகிறார்.

கடவுள் யார், இன்னார் என்பதைப் பிரகலாதன் தனது தந்தையிடம் கூறுகிறான்,

''உலகு தந்தானும், பல்வேறு உயிர்கள் தந்தானும், உள் உற்று
அலைவு இலா உயிர்கள் தோறும் அங்கங்கே உறைகின்றானும்,
மலரில் மணமும் எள்ளில் எண்ணையும், போல எங்கும்
அலகில் பல்பொருளும் பற்றி முற்றிய அரிகாண்! அத்தா''

என்றும்,

''மூன்று அவன் குணங்கள்; செய்கை
மூன்று; அவன் உருவம் மூன்று;
மூன்று கண் சுடர்கள் சோதி
மூன்று; தன் உலகம் மூன்று
தோன்றலும், இடையும், ஈறும்,
தொடங்கிய பொருள் கட்கெல்லாம்
சான்று அவன்; இதுவே வேத
முடிவு; இது சரதம், என்றான்''

என்று மிகவும் அற்புதமான விளக்கத்தைக் கம்பன் கூறுகிறார்.

பிரகலாதனுக்கு நரசிம்மன் அருள் பாலித்து வரம் கொடுக்கிறார்,

''நல்லறமும், மெய்ம்மையும், நான்மறையும், நல் அருளும்,
எல்லையில் ஞானமும், ஈறு இலா எப்பொருளும்,
தொல்லை சால் எண் குணனும், நின் சொல் தொழில் செய்க!
மல்லல் உரு ஒளியாய் நாளும் வளர்க நீ! ''

என்று ஆசீர்வதித்து வாழ்த்துகிறார்.

இங்கே எண் குணங்கள் என்பது :

இயற்கை அறிவு, முற்றும் உணர்தல், தன்வசம், தூய உடல், பாசங்களின் நீங்கல், பேரருள், முடிவில் ஆற்றல், வரம்பில் இன்பம் ஆகியவைகளாகும்.

இராமன் குகனையும் சுக்கிரீவனையும் வீடணனையும் குல வேறுபாடுகள் இல்லாமல் சகோதரர்களாக ஏற்றான். கம்பன் சாதி வேறுபாடுகளையும் குல வேறுபாடுகளையும் பாகுபாடுகளையும் ஏற்க வில்லை. அதன் மூலம் மிக உயர்ந்த சமுதாய சமத்துவத்துவத்தை உலகுக்கு அளித்துள்ளான்.

இராமபிரான் வீடணனைத் தனது நண்பனாக சகோதரனாக ஏற்று

''குகனோடு ஐவர் ஆனோம்; முன்பு; பின் குன்று சூழ்வான்
மகனோடும் அறுவர் ஆனோம்; எம் உழை அன்பின் வந்த
அகன் அமர்காதல் ஐய! நின்னொடும் எழுவர் ஆனோம்;
புகன் அரும் கானம் தந்து புதல்வரால் பொலிந்தான் நுந்தை.''

என்று கூறுகிறான்.

குணத்தாலும் செய்கையாலும் நான்கு வர்ணத்தைப் படைத்தேன் என்றான் கண்ண பெருமான் ‘‘வேறுள குழுவை யெல்லாம் மானுடம் வென்றதம்மா’’ என்றும்,

‘‘தக்க இன்ன, தகாதன இன்ன, என்று
ஒக்க உன்னலர் ஆயின், உயர்ந்துள
மக்களும் விலங்கே: மனுவின் நெறி
புக்க வேல் அவ்விலங்கும் புத்தேளிரே’’

என்றும் மிகவும் தெளிவுபடக் கம்பநாடர் கூறியுள்ளார்.

இதைத் தொடர்ந்தே பாரதியும் தனது கண்ணன் பாட்டில் ‘‘நாலு குலங்கள் அமைத்தான் – அதை நாசமுறப்புரிந்தனர் மூட மனிதர் சீலம் அறிவுதர்மம் இவை சிறந்தவர் குலத்தினில் சிறந்தவராம், என்று கூறுகிறார்.

இவையெல்லாம் வாழையடி வாழையாக நமது சீரிய மரபு வழியில் வந்த சிறந்த கருத்துக்களாகும்.

வானர சேனை கடலைக் கடக்க வேண்டும் கடலை வழிவிடும் படி வேண்டி இராமன் கடற்கரையில் அமர்ந்து வர்ண ஜபம் செய்தான். ஏழு தினங்கள் ஆகியும் வருணன் வரவில்லை. இராமன் கோபம் கொண்டான்.

எனது வில்லில் பலமில்லை, இராவணனுடைய செய்கையால் எனது தாரத்தை இழந்துள்ளேன். என்னிடம் ஆட்சி அதிகாரம் இல்லை. எனவே அவன் பலமில்லாதவன், வீரமில்லாதவன் என்று வருணன் இகழ்ச்சியாக என்னைக் கருதுகிறானா? என்று கூறிக் கோபத்தோடு தனது வில்லை எடுத்தான்,

‘‘பாரம் நீங்கிய சிலையினன், இராவணன் பறிப்பத்
தாரம் நீங்கிய தன்மையான், ஆதலின், தகைசால்
வீரம் நீங்கிய மனிதன் என்று இகழ்ச்சி மேல் வினைய
ஈரம் நீங்கியது எறிகடல் ஆம்; என இசைத்தான்’’

என்று கம்பர் குறிப்பிடுகிறார்.

செல்வமும் செல்வாக்கும் இருந்தால் யாரும் நம்மைச் சுற்றுவார். இல்லாவிட்டால் நமது சொல் ஏறாது என்னும் கருத்தை இங்கே கம்பன் குறிப்பிடுகிறார்.

இராமன் கோபத்துடன் தனது வில்லை எடுத்து நாணேற்றினான், அப்போது வருணன் பயந்து போய் இராமனிடம் ஓடிவருகிறான்.

பின்னர் கல்பாலம் கட்டத் தீர்மானிக்கப்பட்டு சேது அணை கட்டப்படுகிறது.

சேது அணை மிகவும் புனிதமானது. அதன் பெருமையைப் பற்றி இராமனே கூறுகிறான்.

''கங்கையே, யமுனை, கோதாவரி, நருமதை, காவேரி
பொங்கு நீர் நதிகள் யாவும், படிந்து அலால் புன்மை போகா;
சங்கு எறி தரங்க வேலைதட்ட, இச்சேது என்னும்
இங்கிதின் எதிர்ந்தோர் புன்மையாவும் நீக்கும் அன்றே''

என்பது கம்ப நாடன் கவிதையாகும். சேதுவின் பெருமை அறிந்து இன்றும் பாரத நாடு முழுவதிலிருந்தும் எண்ணற்ற மக்கள் சேது விற்கு யாத்திரை வருவதையும் அந்தப் புனித தீர்த்தத்தில் நீராடு வதும் அந்த அணைக்கு வணக்கம் செலுத்துவதையும் காண்கிறோம்.

இனிக் கம்பநாடன் இராவணனுடைய பெருமைகளையும் அவனுடைய தனியாண்மையையும் கம்பீரத்தையும், பல இடத்தும் சிறப்பித்துக் கூறுவதைக் காணலாம்.

சூர்ப்பணகை தன்னை இன்னார் என்று இராமனிடம் அறிமுகப்படுத்திக் கொண்ட போது

"பூவிலோன் புதல்வன் மைந்தன் புதல்வி; முப்புரங்கள் செற்ற
சேவலோன் துணைவன் ஆன செங்கையோன் தங்கை; திக்கின்
மாவெல்லாம் தொலைத்து, வெள்ளி
மலையெடுத்து உலகம் மூன்றும்
காவலோன் பின்னை; காம வல்லியாம் கன்னி; என்றாள்"

அத்தகைய இராவணனுக்குப்பின் பிறந்தவள் என்று கூறுகிறாள்.

இன்னும்,

''காற்றினையும், புனலினையும், கனலினையும், கடுங்காலக்
கூற்றினையும், விண்ணினையும், கோளினையும் பணி கோடற்கு
ஆற்றினை நீ, ஈண்டிருவர் மானுடவர்க்கு ஆற்றாது
மாற்றினையோ உன் வலத்தைச்
சிவன் தடக்கை வாள் கொண்டாய்''

என்று சூர்ப்பணகை இராவணனைப் பற்றிக் -கூறுகிறாள்.

துறவி வேடத்தில் சீதை முன் நின்ற இராவணன் தன் பெருமை கூறுகிறான்,

''இந்திரற்கு இந்திரன்; எழுதல் ஆகாச்
சுந்தரன்; நான் முகன் மரபில் தோன்றினான்;
அந்தரத்தோடும் எவ்வுலகும் ஆள்கின்றான்
மந்திரத்து அருமறை வைகும் நாவினான்''

என்றும்.

''ஈசன் ஆண்டிருந்த பேர் இலக்கு மால் வரை
ஊசி வேரொடும் பறித்து எடுக்கும் ஊற்றத்தான்,
ஆசைகள் சுமந்த பேர் அமரியானைகள்
பூசல்செய் மருப்பினைப் பொடி செய்தோளினான்''

என்று பெருமை பேசுகிறான்.

இராமனுடன் நடந்த முதல் நாள் போரில் தோல்வியடைந்த இராவணன் அனைத்தையும் இழந்து வெறுங்கையோடு இலங்கை திரும்பியதைக் கம்பன் கூறுகிறான்.

''வாரணம் பொருதமார்பும், வரையினை எடுத்த தோளும்
நாரத முனிவற்கு ஏற்ப நயம் பட உரைத்தநாவும்,
தாரணி மவுலிபத்தும், சங்கரன் கொடுத்த வாளும்
வீரமும் களத்தே போக்கி வெறுங்கையோடு இலங்கை புக்கான்''

என்பது உலகப் புகழ் பெற்றக் கம்பன் கவிதையாகும்.

கும்பகருணன் அறிவுரை கூறிய போது இராவணன் கோபம் கொண்டு

''மானுடர் இருவரை வணங்கி, மற்றும் அக்
கூன் உடைக்குரங்கையும் கும்பிட்டு, உய்தொழில்
ஊன் உடை உம்பிக்கும் உனக்குமே கடன்
யான் அது முடிக்கிலேன் எழுக போகென்றான்''

என்றும் தன் மானமும் வீரமும் பேசினான்.

இந்திரசித்தன் நிகும்பலை யாகத்தை முடிக்க முடியாமல் இலக்குவனிடம் தோல்வியடைந்து திரும்பி வந்து தனது தந்தையிடம் ''எல்லா மாயங்களும் செய்து வலுவான போர்கள் நடத்தியும் அவர்களை வீழ்த்த முடியவில்லை, குலம் செய்த பாவத்தாலே கொடும் பழி தேடிக் கொண்டாய், ஆசை தான் அச்சீதை பால் விடுவை யாயின் அனையவர் சீற்றம் தீர்வர், போதலும் புரிவர், செய்த தீமையும் பொறுப்பர்'' என்று கூறினான்.

"சூழ்வினை மாயம் எல்லாம் உம்பியே துடைக்கச் சுற்றி
வேள்வியை சிதைய நூறி, வெகுளியால் எழுந்து வீங்கி,
ஆள்வினை ஆற்றல் தன்னால் அமர்த் தொழில் தொடங்கி ஆர்க்கும்
தாழ்விலாப் படைகள் மூன்றும் தொடுத்தனன் தடுத்துவிட்டான்"

"நிலம் செய்து விசும்பும் செய்து நெடியமால் படை, நின்றானை
வலம் செய்து போவதானால் மற்றினி வலியது உண்டோ?
குலம் செய்த பாவத்தாலே கொடும்பழி தேடிக் கொண்டாய்;
சலம் செயின் உலகம் மூன்றும் இலக்குவன் முடிப்பன் தானே."

"முட்டிய செருவில் முன்னம், முதலவன் படையை என் மேல்
விட்டிலன் உலகை அஞ்சி! ஆதலால் வென்று மீண்டேன்;
கிட்டிய போதும் காத்தான்! இன்னமும் கிளர வல்லால்;
சுட்டிய வலியினாலே கோறலைத் துணிந்து நின்றான்"

ஆதலால் அஞ்சினேன் என்று அருளலை; ஆசைதான் அச்
சீதைபால் விடுவையாயின் அனையவர் சீற்றம் தீர்வர்;
போதலும் புரிவர்; செய்த தீமையும் பொறுப்பர்; உன்மேல்
காதலால் உரைத்தேன்; என்றான்; உலகெலாம் கலக்கி வென்றான்"

இராவணன் அதைக் கேட்டு பலமாகச் சிரித்து விட்டு

"முன்னையோர் இறந்தோர் எல்லாம் இப்பகை முடிப்பர் என்றும்
பின்னையோர் நின்றோர் எல்லாம் வென்று அவர்ப் பெயர்வர் என்றும்
உன்னை ''நீ அவரை வென்று தருதி என்று உணர்த்தும் அன்றால்,
என்னையே நோக்கி யான் இந்நெடும்பகை தேடிக் கொண்டேன்''

என்றும்.

''வென்றிலேன் என்ற போதும், வேதம் உள்ளளவும் யானும்
நின்றுளேன் அன்றோ, மற்ற இராமன் பேர் நிற்கும் ஆயின்;
பொன்றுதல் ஒரு காலத்துத் தவிருமோ? பொதுமைத்து அன்றோ?
இன்றுளார் நாளை மாள்வார், புகழுக்கும் இறுதி உண்டோ?''

என்று வெகுண்டெழுந்தான்.

இராவணன் கடைசி வரை தனது தனியாண்மை பெயராது நின்றான். அக்கன் இறந்தான், அதி காயன் மாண்டான்,

கும்பகருணன் மடிந்தான். இந்திர சித்தனும் போர்க்களத்தில் இறந்து பட்டான். மூல பலப்படையும் அழிந்தது. இராவணப் பெயரான் தனியே நின்றான் இராமனை எதிர்த்து இறுதிப் போரில் களத்தில் நின்றான்.

இராவணன் விடுத்த கணைகள் அனைத்தையும் இராமன் தடுத்து விட்டான். இராவணனுக்கு ஆச்சரியம் ஏற்பட்டது. இந்த அதிசய மனிதன் இந்த இராமன் யார் என்று சிந்திக்கிறான்.

''சிவனோ அல்லன், நான் முகன் அல்லன், திருமாலாம்
அவனோ அல்லன், மெய் வரம் எல்லாம் அடுகின்றான்;
தவனோ என்னின் செய்து முடிக்கும் தரன் அல்லன்;
இவனோ தான் அவ்வேத முதற் காரணன்?''

என்று எண்ணுகிறான்.

''யாரேனும் தான் ஆகுக; யான் என் தனியாண்மை
பேரேன்; இன்றே வென்றி முடிப்பென்; பெயர்கிலேன்;
நேரே செல்வென்; கொல்லும்; அரக்கன் நிமிர் வெய்தி
வேரே நிற்கும் மீண்கிலன் என்னா விடல் உற்றான்''

என்று தனியாண்மை கூறி சரங்களைத் தொடுத்தான். இராவணன் தொடுத்த அத்தனை சரங்களையும் தடுத்து இராமன் தனது கணைகளால் இராவணனைப் போர்க்களத்தில் வீழ்த்தினான்.

இராவணன் போர்க்களத்தில் கம்பீரமாக வீழ்ந்து கிடந்த காட்சியைக் கம்பன் மிக அற்புதமாகக் காட்டுகிறார்.

''முக்கோடி வாழ்நாளும், முயன்றுடைய
பெருந்தவமும் முதல்வன் முன்னாள்
எக்கோடி யாராலும் வெலப்படாய்
எனக்கொடுத்தவரமும் ஏனைத்
திக்கோடும் உலகனைத்தும் செருக்கடந்த
புயவலியும் தின்று மார்பில்
புக்கோடி உயிர்பருகிப் புறம் போயிற்று
இராகவன் தன் புனித வாளி''

என்றும்,

''வெம்மடங்கல் வெகுண்டனைய சினம் அடங்க,
மனம் அடங்க, வினையம் வீயத்,
தெம்மடங்கப் பொருதடக்கைச் செயல் அடங்க,
மயல் அடங்க, ஆற்றல் தேயத்

தம்மடங்கு முனிவரையும் தலையடங்கா,
நிலையடங்கச் சாய்ந்த நாளின்
மும்மடங்கு பொலிந்தன, அம்முறை துறந்தான்
உயிர் துறந்த முகங்கள் அம்மா!''

என்று இராவணன் வீழ்ந்து கிடந்த கம்பீரத்தைக் கம்பன் மிகவும் அற்புதமாகக் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு கம்ப நாடர் தனது பெருங்காவியத்தில் எந்தக் பொருளை எடுத்துக் கொண்டாலும் எந்தப் பாத்திரத்தின் செயல்பாட்டை எடுத்துக் கொண்டாலும் அதன் முழுமையான பொருளையும் முழுமையான வடிவத்தையும் காட்டுவதைக் காண்கிறோம்.

இந்த நூலில், பெண்கள் பால் வைத்த நேயம் பெண்ணாசை பெண்ணாட்டம் ஒரு தலைக்காமம், பெருங்காதல், மறுபக்கம் ஆண்பெண் நல்லுறவு, மனைமாட்சி, ஒருத்திக்கு ஒருவன் ஒருவனுக்கு ஒருத்தி என்னும் நெறிமுறை, அன்பு, காதல், கற்பு நிலை முதலியவை பற்றியும், புலனடக்கம் பற்றியும், தசரதன் கைகேயி, இராமன் சீதை சூர்ப்பணகை, வாலி, இராவணன் ஆகியோர்களின் உணர்வு நிலை, இலக்குவன் அனுமன், வீடணன், பரதன் ஆகியோரின் பக்தி ஆகியவை பற்றியும் காவியத்தின் நிகழ்ச்சிகளில் காண்கிறோம்.

பெண்ணுருக்கொண்ட பெற்றியளான தாடகையை எதிர்த்து இராமன் நடத்திய கன்னிப் போர், அகலிகை கல்லானது, இந்திரன் பெற்ற தண்டனை ஆகிய சிறியனவானாலும் முக்கியமான நிகழ்ச்சிகள் காவியத்தில் கூறப்படுகின்றன. அவைகள் பற்றி இந்த நூலிலும் பேசப்படுகிறது.

இராமனும் சீதையும், ஸ்ரீமன் நாராயணனும் இலட்சுமியுமாக பாற்கடலில் இருந்து பிரிந்து வந்த பின்னர் மிதிலையில் சந்திக்கின்றனர். இருவரும் ஒருவரையொருவர் மாறி மற்றவர் இதயத்தில் புகுந்து கொண்டதும், அன்பு கொண்டதும் காதல் கொண்டதும், திருமண மானதும், சேர்ந்து வாழ்ந்ததும் இருவரும் இதர பரிவாரங்களுடன் மிதிலையிலிருந்து அயோத்தி சென்றதும் இந் நூலில் பேசப்படுகிறது.

இதில் இராமனுக்கும் சீதைக்கும் இடையிலான தெய்வீகக் காதலையும் காதல் உணர்வுகளையும் கம்பன் மிகவும் நுட்பமாக வடித்துக் கூறுவதைக் காண்கிறோம்.

அயோத்தியில் கூனியும் சிறிய கோத்தாயும் தலையிடக் காதல் முதிரக் கருத்தழிந்த தசரத மன்னன் கொடுத்த வரங்களால் இராமன் முடிசூடுவது தடைபட்டு வனம் செல்வது பேசப்படுகிறது.

வனத்தில் செல்லும் காலத்தில் வனங்களின் அழகிய காட்சிகள், செடிகள் கொடிகள், மரங்கள், மலர்கள் அதன் மணம், காய், கனிகள், ஆறுகள், மலைகள், நீர் வீழ்ச்சிகள், நீரோட்டங்கள், நீருற்றுகள் சுனைகள், வனவிலங்குகள், பறவைகள் இவைகளை இராமன் சீதைக்குக் காட்டுவதும் அதைக் கண்டு இருவரும் வனத்தில் மகிழ்ச்சியுடன் மனம் ஒன்றி வாசம் செய்ததும் இந்நூலில் பேசப்படுகிறது.

சூர்ப்பணகை தோன்றுதல், அவளுடைய வேடம் ஒருதலைக் காமம், அவள் படும் பாடு, அவள் தனது முயற்சிகளில் வெற்றி பெறாததால் இராவணனிடம் சென்று அவனுடைய உள்ளத்தில் சீதையின் பாலான காம உணர்வை, பெருங்காதல் உணர்வை உண்டாக்கி அவனும் அதே சிந்தனையில் சீதையை மனச்சிறையில் வைத்து சீதையைக் கவர்ந்து செல்வதற்கு எடுக்கும் முயற்சிகள்,

மாய மான் தோன்றுதல் அதைப் பிடித்துக் கொடுக்கும்படி சீதை இராமனிடம் வற்புறுத்துதல் இலக்குவன் இது மாய மான் இதில் சூது அடங்கியுள்ளதாகக் தெரிகிறது என்று எச்சரித்தும் இராமன் சீதையின் பாலுள்ள காதல் மிகுதியால் மானைப்பிடிக்க அதன் பின் ஓடுதல் இலக்குவன் இராமனைத் தேடிச் செல்லுதல்,

இராவணன் துறவி வேடம் கொண்டு, சீதையைச் சிறையெடுத்தும் அவளை இலங்கைக்குக் கொண்டு செல்லுதல், ஆகியவை அதில் கம்பனுடைய மிக நுட்பமான கவிதைகள் கவிதை நயங்கள் ஆகியவை இந்த நூலில் பேசப்படுகின்றன.

இராமனும் இலக்குவனும் சீதையைத் தேடிச் செல்லுதல், இடையில் நிகழும் இடையூறுகள், சீதையை நினைந்து இராமன் வருந்துதல் கிட்கிந்தை அருகில் சுக்கிரீவன் அனுமன் ஆகியோரை சந்தித்தல், அவர்களுடன் நட்பு கொள்ளுதல், மனையின் மாட்சியை அழித்த வாலியை இராமன் வதம் செய்தல், இந்த நூலில் பேசப்படுகின்றன.

சுக்கிரீவனுடன் சேர்ந்து சீதையைத் தேடுவதற்கு ஏற்பாடு செய்தல் அனுமன் சீதையைத் தேடி இலங்கை செல்லுதல் அனுமனுடைய அருஞ்செயல்கள், சீதையைக் காணல் அவளிடம் இராமனைப் பற்றிய செய்திகளைக் கூறுதல், கணையாழியைக் கொடுத்து

சூளாமணியைப் பெறுதல், சீதையின் சிறப்புகள், அனுமனின் தூதுச் சிறப்புகள் இராவணனைச் சந்தித்தல், இலங்கை தகனம், ஆகியவைகள் அதில் சீதை இராமன் ஆகியோரின் உணர்வு நிலைகள், சீதையின் கற்பின் சிறப்புகள் ஆகியவை பற்றி இந்நூலில் பேசப்படுகிறது.

இராவணனுடைய காமப் பெருநோய் பெருங்காதல், மாலியவான், கும்பகருணன், வீடணன் ஆகியோரின் அறிவுரைகள் இராவணன் செய்த வாக்கு வாதங்கள், இராவணனுடைய உள்ளத்தில் அவனுடைய காமத்திற்கும் கோபத்திற்கும் இடையிலான மோதல்கள் முதலியவை பல கட்டங்களிலும் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் ஆகியவை இந் நூலில் மிகவும் நுட்பமாகப் பெசப்படுகின்றன.

வீடணன் சரணாகதி, இராமன் வானரப்படைகளுடன் கடலைக் கடத்தல், இலங்கையை முற்றுகையிடுதல் இராம, இராவணப்போர் அதிகாயன் கும்பகருணன் இந்திர சித்தன் ஆகியோர்களுடைய கடும் போர்கள் இராவணன் சீதையின் மனதை மாற்றுவதற்கு எடுத்த பல முயற்சிகளும் இங்கு பேசப்படுகின்றன.

இராவணனுடைய பிடிவாதம் இராம இராவண இறுதிப் போர் இராவணனுடைய வீழ்ச்சி,

சீதையின் விடுதலை, சீதையின் கற்பின் சிறப்பு, ஆகியவைகள் இந் நூலில் சிறப்பாக இடம் பெறுகின்றன.

தொகுப்புரையாக பெண்ணாசை, பெண்கள் பால்வைத்த நேயம், பெருங்காதல் ஆகியவை பற்றியும் இந்நூலில் சிறப்பாகத் தொகுத்துக் கம்பநாடருடைய கருத்துக்கள் விவரிக்கப்படுகின்றன.

கம்பன் கூறும் அறநெறிகள் ஒழுக்க நெறிகள் புலனடக்கம், மனைமாட்சி ஆகியவை பற்றிய பல கருத்துக்களும் இந்நூலில் மிகவும் சிறப்பாக இடம் பெறுகின்றன.

இந்நூலில் பல கருத்துக்களும் சற்று விரிவாகவும் விரிவான மேற் கோள்களாகக் கம்பனுடைய பாடல்கள் பலவும் எடுத்துக் கூறப் பட்டுள்ளன. இராமாயணம் என்றாலே அது பெரிய இராமாயணம் தான். அது நமது நாட்டின் பெரிய இதிகாசமாயிற்றே! பெருங்காவிய மாயிற்றே! அது பெருங்கதையாயிற்றே!

எனவே அதில் உள்ள எந்தக் கருத்தைத் தொட்டாலும் எந்தப் பகுதியைத் தொட்டாலும் சற்று விரிவாகவும் விளக்கமாகவும் போய் விடுகிறது.

மேலும் இராமாயணத்தை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நாம் படிக்கும் போது நமக்கு அலுப்புத்தட்டுவதில்லை என்பது எனது கருத்து. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக இராமாயணக் கதையும் அதன் உயிரோட்டமான தெய்வீகப் பாத்திரங்களும் அக்கதை நிகழ்ச்சிகளும் நமது வாழ்க்கையில் பதிந்தவை. பக்தியுடனும் இலக்கியச் சுவையுடனும் கதைப்பிடிப்புடனும் நமது மக்கள் இராமாயணத்தைப் படித்து வருகிறார்கள்.

சில இடங்களில் சில கருத்துக்களைக் குறிப்பிடும் போது விரிவான சில எடுத்துக் காட்டுகளுடன் சொல்ல வேண்டியதிருக்கிறது.

தசரதனுடைய பெண்ணாட்டம் பெண்கள்பால் வைத்த நேயம் பற்றி அயோத்தி மக்கள் கூறுகிறார்கள். இலக்குவன் கூறுகிறான். சடாயு கூறுகிறான். இவ்வாறு அவைகளை எடுத்துக் காட்ட வேண்டியதிருக்கிறது.

இராமன் சீதை மீதான காதல் மிகுதி காரணமாக மாயமான் பின்னால் சென்றது பற்றியும் அதனால் ஏற்பட்ட விளைவுகளைக் காட்டியும் சடாயு பேசுகிறான். அந்நிகழ்ச்சியை நினைத்து இராமன் பல நேரங்களிலும் வருந்துகிறான். சீதையும் அந்த நிகழ்ச்சிகளை நினைந்து தன்னை நொந்து கொள்கிறாள். அதைக் கம்பனுடைய கவிதை ஆதாரங்களுடன் எடுத்துக் காட்ட வேண்டியதிருக்கிறது.

சீதையின் கற்பின் சிறப்புகள் பற்றிப் பலரும் பேசுகிறார்கள். குறிப்பாக அனுமன் தன்னை மறந்தும் பெருமகிழ்ச்சி கொண்டும் சீதையின் சிறப்புகளைப் பற்றிப் பேசுகிறான். மற்றும் வீடணனும் பிரம்மாவும், சிவபெருமானும் தசரதனும் பேசுகிறார்கள். அவர்களுடைய சொந்த அருமை பெருமைகள் ஆற்றல் அதை மற்றவர்கள் எடுத்துக் காட்டும் போது உணர்கிறார்கள். சிலர் நீண்ட உறக்கத்தில் அல்லது அமைதியில் இருப்பார்கள்.

அதுபோல் அனுமனுடைய ஆற்றல் அனுமனுக்குத் தெரியாது. அவன் மிகவும் அடக்கமானவன் கிட்கிந்தையில் நடக்கும் பல பாமர நிகழ்ச்சிகள் எல்லாம் அவனுக்குப்பிடிக்காது. ஒதுங்கியே இருப்பான். புலனடக்கம் கொண்டவன். அளவுக்கடந்த ஆற்றலும் பலமும் அறிவும் மிக்கவன். இராமாயணப் பெரும் காவியத்தில் அனுமனுடைய பங்கு மகத்தானது. அதனால் தான் பரத கண்டத்து மக்கள் அனுமனுக்கு தனிச் சன்னதிகளும் தனிக் கோயில்களும் கட்டிப் பாராட்டுகிறார்கள், வழிபடுகிறார்கள்.

அனுமனைப் பாராட்டி இராமாயணப் பெருங்காவியத்தில் இராமன். இலக்குவன், வாலி, வீடணன், சாம்பவன் மற்றும் பலரும்

பேசுகிறார்கள். இராமன் அனுமனைச் சொல்லின் செல்வன் என்று பாராட்டுகிறான். வாலி, இராமனிடம் அனுமன் உனது தனுவுக்கு இணையானவன் என்ற கூறுகிறான். எனவே அனுமனைப் பாராட்டும் பல பாடல்களையும் குறிப்பிட வேண்டியதாயிற்று.

பல நிகழ்ச்சிகளையும் மாறி மாறிக் குறிப்பிட வேண்டியதிருப்பதால் அப்போது இடைப்படும் சில கவிதைகளைத் திரும்பவும் சில இடங்களில் எடுத்துக் கூற வேண்டியதிருக்கிறது. அவ்வாறு மீண்டும் மீண்டும் சில சிறப்பான பாடல்களை எடுத்துக் காட்ட வேண்டிய தேற்பட்டிருக்கிறது. எனவே அப்பாடல்களைச் சற்றும் அலுப்புத் தட்டாமல் படிக்க வேண்டும். அத்துடன் அப்பாடல்கள் மிகவும் சிறப்பானவை. அவை சிறந்த கருத்துக் களும் சிறந்த தமிழ்ச் சொற்களும் நிறைந்தவை. அவைகளைத் திரும்பத் திரும்ப எத்தனை தடவை வேண்டுமானாலும் படிக்கலாம்.

மேலும் கம்பனுடைய பல பாடல்களையும் சிறப்பு மிக்க பல கவிதைகளையும் நமது இளைஞர்கள் நமது உயர் நிலை மேல் நிலைப் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் ஆசிரியர்கள், கவிஞர்கள் இலக்கியவாதிகள் ஏன் அனைத்து மக்களும் படிக்க வேண்டும். பாடம் பண்ண வேண்டும். அப்பாடல்களும் கவிதைகளும் அவைகளின் தமிழ்ச் சுவையும் கருத்துக்களும் மக்களிடம் பரவ வேண்டும்.

கம்பராமாயணம் ஒரு மகத்தான தமிழ் நூல். தமிழின் பேரிலக்கியம். இது தமிழால் பெருமைப்பட்டிருக்றிது. தமிழ் மொழி கம்ப ராமாயணத்தால் பெருமைப்பட்டிருக்கிறது. எனவே கம்பராமாயணம் மீண்டும் மீண்டும் மக்களால் படிக்கப்பட வேண்டும். கம்பனைப் பற்றியும் அவருடைய பெருங்காவியத்தைப் பற்றியும் பல வேறு கோணங்களிலும் ஆய்வு செய்யப்பட்டு பல நூல்கள் வர வேண்டும். அவைகள் மக்களிடம் செல்ல வேண்டும்.

இந்த நூலை எழுதுவதற்கும் படி எடுப்பதற்கும் பிரதிகள் எடுப்பதற்கும் தமிழ் வளர்ச்சித் துறை அலுவலகத்திற்கு சிறந்த நூலுக்கு உதவித் திட்டத்தின் கீழ் விண்ணப்பத்தைச் சேர்ப்பதற்கும் மற்றும் நான் எழுதும் நூல்களை அச்சடிக்கவும் நூல்களை விற்பனை செய்யவும் எனக்குத் துணையாக இருந்து ஊக்கமூட்டி வருவதில் என்னுடைய துணைவியார் திருமதி நாகலட்சுமியின் பங்கு முதன்மையானது.

இந்நூலின் கையெழுத்துப் பிரதியைப் படித்து அதில் ஏற்பட்டிருந்த எழுத்துப் பிழைகள் ஒத்துப்பிழைகள் சில கருத்துப் பிழைகள் முதலியவற்றை ஒரு முறைக்கு இரு முறை படித்தும், திருத்தியும் சரிபார்த்துள்ள எனது மகள் திருமதி எஸ். பகீரதி எம்.ஏ (தமிழ்) ஆசிரியை செய்துள்ள உதவி எப்போதும் நினைவு கூறத்தக்கது.

இருவருக்கும் எனது அன்பான நன்றியைப் பதிவு செய்து கொள்கிறேன்.

இந்நூலைப் படிக்கும் அன்பர்கள் நன்கு பயன்பெருக. கம்பனைப் போற்றுக. கம்பனைப் பரப்புக, இந்நூலைப் பற்றிய கருத்துக்களை அனுப்புக.

கம்பன் வாழ்க, கன்னித் தமிழ் வாழ்க,

அ.சீனிவாசன்
நூலாசிரியர்

கம்பநாடன் காவியத்தில்
காதலும் பெருங்காதலும்

பொருளடக்கம்

முன்னுரை

1. தோற்றுவாய்
2. பெண் உருக்கொண்டெனத் திரியும் பெற்றியாள்
3. அகலிகைப் படலம்
4. பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ?
5. கூனியும் சிறிய கோத்தாயும்
6. காதல் முதிரக் கருத்தழிந்தான்
7. வனவாசம் தொடங்கியது
8. சூர்ப்பணகை வருகை
9. சீதையை சிறை வைத்தான்
10. மாயமான்
11. ஆசையின் வந்த அயோமுகி
12. கிட்கிந்தையில்
13. சீதையைத் தேடி
14. அனுமன் ஆற்றல்
15. இலங்கை நகரின் காட்சி
16. சீதையைக் காணல்
17. சீதையின் சிறப்பு





18. அனுமனின் அருஞ்செயல்கள்
19. தவம் செய்த தவமாம் தையல்
20. இராவணன் சபையில்
கும்பகருணனும் வீடணனும்
21. இராமனுடைய சிந்தனையும் துயரமும்
22. மாலியவான் அறிவுரை
23. தேவியை விடுக அன்றேல் ஆவியை விடுக
24. இன்று போய் போருக்கு நாளை வா
25. நாசம் வந்து உற்ற போதும் நல்லதோர்
பகையைப் பெற்றேன்
26. குலத்து மானம் தீர்ந்திலன்
27. பெண்பால் வைத்த ஆசை நோய்
28. தானமாலை புலம்பல்
29. நான்முகன் படை
30. நிகும்பலை யாகம்
31. இந்திர சித்தனின் இறுதிப் போர்
32. மூலபலம்
33. இராம இராவணப் போர்
34. சீதையின் விடுதலை
அனைவரும் அயோத்தி செல்லுதல்
35. தொகுப்புரை – 1
36. தொகுப்புரை – 2





கம்பநாடன் காவியத்தில் காதலும் பெருங்காதலும்

1. தோற்றுவாய்

கம்பநாடரின் மகாகாவியமான இராமாவதாரப் பெருங்கதையில் பல பெண்பாத்திரங்கள் முக்கிய இடம் பெற்றிருக்கின்றன. தெய்வீகப் பாத்திரங்களாகவும் மானிடப் பாத்திரங்களாகவும், அசுரப் பாத்திரங்களாகவும் அவர்கள் கதையில் முக்கிய இடம் பெற்று நடமாடுகிறார்கள். கம்பனுடைய சில முக்கிய பெண் பாத்திரங்களின் செயல்பாடுகள் கதையில் முக்கிய திருப்பங்களை விளைவிக்கின்றன.

தசரதச் சக்கரவர்த்தியின் மூன்று மனைவியரில் கைகேயி கதையில் முக்கிய இடம் பெற்றுள்ளார். கதையின் மிகமுக்கியமான திருப்பத்திற்குக் காரணமாகிறாள்.

சுத்த வீரனான இராமபிரான் தனது கன்னிப்போரில் தாடகை என்னும் பெண் எனத்திரியும் பெற்றியாளைச் சந்திக்கிறான். சூர்ப்பணகை இலங்கையின் அழிவிற்கு வித்திடுகிறாள். சபரி இராம இலக்குவர்களுக்கு வழிகாட்டியாகப் பயன்படுகிறாள். தாரை கிட் கிந்தையில் முக்கிய பங்கு வகிக்கிறாள். இராவணனுடைய மனைவியரில் இந்திரசித்தனின் தாயான மண்டோதரி இலங்கையின் அரச மாளிகையில் ஒரு அடக்கமாக ஆனால் கம்பீரமாக இடம் பெற்று, போர்க்களத்தில் கொல்லப்பட்ட தனது கணவனுடைய உடல் மீது விழுந்து தானும் உயிர் துறந்து தனது கற்பு நிலையை வெளிப்படுத்தி சிறப்புப் பெறுகிறாள். திரிசடை என்னும் நல்லாள் அசோக வனத்தில் சிறைப்பட்டிருந்த சீதைக்குக் காவலாகவும், துணையாகவும் இருக்கிறாள். சீதையின் மிக உயர்ந்த தெய்வீகக் கற்பு நிலையும் சிறைவாசமும் அவளுடைய அடக்கமும் பொறுமையும் அவளுடைய தெய்வீகத் தன்மையைத் தெளிவுப்படுத்துகிறது.

இராமாயண இதிகாசத்தில் வரும் பெண்பாத்திரங்களின் தனித் தன்மைகளும் தனிச்சிறப்புகளும் ஒரு புறம் இருக்க தசரதன் கைகேயி பால் வைத்த நேயமும் இராமபிரான் சீதாபிராட்டியின் பால் வைத்திருந்த பேரன்பும் கிட்கிந்தையில் வாலி மனை மாட்சியை அழித்ததும், இலங்கை வேந்தனின் பெருங்காதலும் காம வெறியும் கதையில் முக்கிய திருப்பங்களை உண்டாக்கி அவை மிகவும் கடினமான கதை நிகழ்ச்சிகளாகவும் அமைந்துள்ளன.

பெண்கள் பால்வைத்த நேயம் மற்றும் பெருங்காதல் பற்றிக் கம்பநாடர் மிகச் சிறப்பான பல சமுதாயக் கருத்துக்களைத் தனது மகாகாவியத்தில் குறிப்பிட்டுள்ளார். அதில் சமூக நெறிமுறைக் கருத்துக்களும் ஒழுக்க நெறிமுறைக் கருத்துக்களும் பொதுவான அறநெறிக் கருத்துக்களும் வெளிப்படுகின்றன.

சூர்ப்பணகை இராமன்பால் வலியுறுத்திய மோகம் ஒருதலைக் காமமாகும். அதேபோல இராவணன் சீதைபால் வைத்த மோகமும் ஒருதலையானது. ஆதிக்கத்தன்மையும் வன்முறைத்தன்மையும் கொண்டது.

காதல் என்பதும் கற்பு என்பதும் ஆண் பெண் பாலுறவு என்பதும் இருபாற்பட்டது என்னும் நெறி முறை மிகவும் வலுவாக முந்திய இந்திய சாத்திரங்களில் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன.

மிகையான பெண்ணாடலும் பெண்ணாட்டமும் பொதுவாக பல ஆண்களிடம் ஏற்படுவதாகும். அவை பல சமயங்களிலும் தவறான பாதகமான, எதிர்மறையான விரும்பத் தகாத விளைவுகளை உண்டாக்குகின்றன. அதிலும் குறிப்பாக அரசப் பொருப்பில் தலைமைப் பொருப்பில் அதிகாரப் பொருப்புகளில் உள்ளவர்களிடம் அக் குணங்களும் செயல்களும் இருக்குமானால், அதனால் ஏற்படும் விளைவுகளும் கடுமையாக இருக்கின்றன என்பதையும் இராமாயணக் காவியத்தில் கம்பன் மிகவும் சிறப்பாகவும் நுட்பமாகவும் சமுதாய நோக்கில் எடுத்துக் கூறுவதைக் காண்கிறோம்.

பெண்மைக்கு நமது சாத்திரங்கள் முதலிடமும் முக்கிய இடமும் கொடுத்துள்ளன. நமது நாட்டைத் தாய் நாடு என்றும் பாரதத்தை பாரத தேவி என்றும் குறிப்பிடுகிறோம். கல்விக்குக் கலைமகள் செல்வத்திற்குத் திருமகள், வீரத்திற்கு மலைமகள் என்றும் நமது தெய்வங்களைப் போற்றுகிறோம். நமது தெய்வங்களில் மும் மூர்த்திகள் பிரபலம் அவை படைத்தல், காத்தல், நீக்கல் என்னும் முத்தொழில்களை

வெளிப்படுத்துகின்றன. அதையே கம்பன் தனது காவியத்தின் கடவுள் வாழ்த்துப் பாடலில் "உலகம் யாவையும் தாமுள ஆக்கலும் நிலை பெறுத்தலும் நீக்கலும்" என்று குறிப்பிட்டுள்ளதைக் காண்கிறோம். பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியோரை மும் மூர்த்திகளாக நாம் வணங்குகிறோம். அவர்களை முறையே கலைமகள், திருமகள், மலைமகள் ஆகியோரை இணைத்து நாம் வழிபடுகிறோம்.

இதில் பிரம்மாவின் நாவில் கலைமகள் வீற்றிருக்கிறார். பிரம்ம தேவனுக்கென்று பிரபலமாகத் தனிக் கோயில்கள் இல்லாவிட்டாலும் கலைமகளை நாம் நமது இல்லந்தோறும் வைத்துப் பூஜிக்கிறோம். நவராத்திரி விழாவில் கலைமகள் (சரஸ்வதி) முதலிடம் பெறுகிறார். நமது மகாகவி பாரதி கலைமகள், கலைவாணி வணக்கத்திற்கு முதலிடம் கொடுத்துள்ளார்.

சிவனைக் குறிக்கும் போது உமாமகேஷ்வரன் என்றும் உமாபதி என்றும் திருமாலைக் குறிப்பிடும் போது லட்சுமி நாராயணன் என்றும் லட்சுமி நரசிம்மன் என்று இராதாகிருஷ்ணன் என்றும் சீதாராமன் என்றும் ஸ்ரீநிவாசன் (திரு உறைமார்பன்) என்றும் குறிப்பிடுகிறோம். நமது சாத்திரங்களின் வழியில் நமது மக்கள், பெண்மைக்கு முதலிடம் கொடுத்து நமது தெய்வங்களை சிறப்பாக வழிபடுகிறார்கள் என்பதையே இவை காட்டுகின்றன.

நமது நாட்டின் ஆறுகளையும் நதிகளையும் நமது மக்கள் வெறும் நீர்ப்பாசன சாதனங்களாகவும் குடிநீர்ச் சாதனங்களாகவும் மட்டும் பார்க்கவில்லை. அவைகளை யெல்லாம் பெண் தெய்வங்களாகவே பூஜித்து வருகிறார்கள். சரயுவும், பகீரதியும், கங்கையும் யமுனையும், நர்மதையும் கோதாவரியும், காவிரியும் வையை என்னும் பொய்யாக் குலக்கொடியும் பொருனையும் நமது ஜீவ நதிகள், தெய்வத்திரு நதிகள் நமது பெண் தெய்வங்கள். நாம் வணங்கி பூஜிக்கும் குலக் கொடிகள்.

காசு அலம்பு முலையவர்

மனிதன் ஆறறிவு படைத்தவன். அதுவே மனிதனுடைய தனிச் சிறப்பு. மனிதன் பெறும் முதலறிவுகள் அவனது ஐம்பொறிகளின் செயல்பாடுகளிலிருந்து கிடைக்கின்றன. அந்த ஐம் பொறிகளிலிருந்து கிடைக்கும் பட்டறிவுகளை ஒருமுகப்படுத்தி ஆராய்ந்து ஏற்கனவே சேமித்து வைத்துள்ள அனுபவத்தில்

அறிந்துள்ள அறிவின் மூலம் பாகுபடுத்திப் பரிசீலனை செய்து ஒரு நிலைக்குவருவது ஆறாவது அறிவு. அது மனிதனுக்கே உரியது.

ஓரறிவு, ஈரறிவு, மூவறிவு, நாலறிவு, ஐந்தறிவு உள்ள உயிரினங்கள் உள்ளன. இவைகளின் புல்பூண்டு, செடி, கொடி, மரம் முதலிய பலவகை தாவர இனங்களும் புழு, பூச்சி, வண்டு முதலிய உயிரினங்களும் நீரில் வாழும் உயிரினங்களும் பறவைகளும் விலங்குகள் முதலிய எண்ணற்ற ஜீவராசிகள் அடங்கும். இவைகளைப் பற்றியெல்லாம் நமது சாத்திரங்கள் ஆய்வு செய்து விவரங்கள் வெளியிட்டுள்ளன. இவைகளிலிருந் தெல்லாம் உயர்ந்து மனிதன் ஆறறிவு பெற்றுள்ளான். அது பகுத்தறிவு என்று அழைக்கப்படுகிறது.

''சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்றைந்தின் வகை தெரிவான் கட்டே உலகு'' என்று வள்ளுவனார் குறிப்பிடுகிறார்.

''சுவைத்தல், பார்த்தல், உணர்தல், கேட்டல், முகர்தல் என்னும் ஐந்து குணங்களின் பகுதிகளை ஆராய்ந்தவனின் அறிவிற்குள் அடங்கும் உலகம்'' என்ற அக்குறளுக்கு அறிஞர்கள் பொருள் கூறியுள்ளனர்.

ஆறறிவில் முதிர்ச்சி பெறாத பல மனிதர்களும் உண்டு. ஆயினும், கல்விப்பயிற்சியால், வினைப் (செயல் – தொழில்) பயிற்சியால், அனுபவ அறிவின் வளர்ச்சியால் மனிதன் தனது ஆறாவது அறிவில் மேலும் மேலும் அதிகமாக முதிர்ச்சி பெறலாம். முதல் ஐந்து அறிவுகளுக்கு ஒருவரம்பு உண்டு, ஆனால் ஆறாவது அறிவுக்கு அதன் வளர்ச்சிக்கு வரம்பேயில்லை. அதற்கு எல்லையே இல்லை. நிர்ணயிப்பதற்கு முயற்சி செய்வர். அம்முயற்சி சில பேரிடம் சில நேரம் சில நாட்கள் வெற்றியும் கூட பெறக்கூடும். ஆனால் அம்முயற்சிகள் எல்லோரிடமும் செல்லாது. பொதுவாக அம்முயற்சிகளின் பலன் தாற்காலிகமானதேயாகும்.

உதாரணமாக நமது நாட்டில் அன்னியர் ஆட்சியும் அன்னியர்களின் ஆதிக்கமும், நமது நாட்டு மக்களின் கல்வி வளர்ச்சிக்கும், அரசியல் பொருளாதார அனுபவ வளர்ச்சிக்கும் தடையாக இடையூறாக இருந்தன. நாடு சுதந்திரம் பெற்ற பிறகு அத்தடைகள் இடையூறுகள் நீங்கியுள்ளன. நாட்டின் பொது அறிவு வளர்ச்சிக்கும் இப்போது புதிய வாய்ப்புகள் எற்பட்டுள்ளன.

மற்றொரு உதாரணம், மனித உலகில் பலவகைக் குறுகிய சண்டைகள் ஏற்படுகின்றன, நிகழ்கின்றன. தனி நபர் சண்டைகள் போட்டி பொறாமைகளால் பெண்பாலுறவுகள் முதலியவைகளால்

சண்டைகளும் வெட்டு குத்துகளும் வழக்குகளும் ஏற்பட்டு அதனால் நேரம் கால விரயங்கள் ஏற்படுகின்றன. பலவகையான சாதிச் சண்டைகள், மொழிச் சண்டைகள், மதச் சண்டைகள், தெருச் சண்டைகள் நாடுகளுக் கிடையில் சண்டைகள், உலகப் போர்கள் ஆகியவை ஏற்பட்டும் பெரும் அளவில் ஆள் சேதம் பொருட்சேதம் ஏற்பட்டிருக்கின்றன. இவைகளுக்கு கெல்லாம் மனிதனுடைய மனித சமுதாயத்தினுடைய ஆறாவது அறிவு போதுமான அளவில் வளர்ச்சியடையாமல் இருந்ததே காரணமாகும். அளவுக்கு மீறிய சுய நலமும் பேராசைகளும் இவைகளில் அமையும்.

ஆயினும் சில தனிநபர்களுக்கு இடையிலும் கூட்டங்களுக்கும் நாடுகளுக்கும் இடையிலும், சாதி, மதம், இனம், மொழி, நாடுகளின் பேரால் சண்டைகளைத் தூண்டும் நபர்களுக்கும் கூட்டத்திற்கும் புத்தி புகட்ட சில நேரங்களில் நியாயமான சண்டைகளும் ஏற்படலாம். அத்தகைய சண்டைகளைத் தர்மயுத்தம் எனக் கூறலாம். நிற்க.

ஐம்பொறிகள் என்பது மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்துமாகும். இவைகளை ஐம்புலன்கள் என்று கூறுகிறோம். இவைகள் மூலம் புலனறிதல் நிகழ்கின்றன. ஐம்புலனறிவு என்பது சுவை, ஒளி, ஊறு, ஓசை, மனம் ஆகியவைகள் மூலம் அறியப்படும் அறிவாகும். அதாவது தொட்டுணர்தல், ருசித்தல், காணல், நுகர்தல், கேட்டல் ஆகியவைகள். ஐம்புலனறிவுகளைப் பல வாறாக இணைத்துப் பார்த்து ஒரு பொருளைப் பற்றி முழுமையாக அறிதல் ஒரு உயர்ந்த மட்டத்திலான அறிவாகிறது.

பஞ்ச பூதங்களின் பல்வேறு வகையான சேர்மானங்களால் இந்த உலகில் உள்ள சகலவிதமான பொருள்களும் ஆக்கப்பட்டிருக் கின்றன. அப்பஞ்ச பூதங்களின் செயல்பாடுகளைச் செய்வது கண்ணனே என்று ஆழ்வார்கள் குறிப்பிடுகிறார்கள்.

கோசல நாட்டில் தசரத மன்னனின் ஆட்சியில் மக்களுடைய ஐம்புலன்களும் நெறி தவறாமல் அதனதன் பணிகளை ஆற்றி வந்தன என்று கம்பர் கூறுகிறார். மனிதனை அவனுடைய ஐம்புலன்கள் பலவேறு கொடுமைகளுக்குள்ளாக்குகின்றன என்றும் பல வேறு கொடுமைகளைச் செய்யத் தூண்டுகின்றன என்றும் நமது தத்துவ ஞான சாத்திரங்கள் குறிப்பிடுகின்றன. அளவுக்கு மீறிய ஆசைகளை செயல் வேகங்களை ஐம்புலன்கள் உண்டாக்கிவிடுகின்றன. அவை களை அடக்கி ஒருமுகப்படுத்த வேண்டும் என்று நமது சாத்திரங்கள் குறிப்படுகின்றன. அதைப் புலனடக்கம் என்று கூறுகிறோம்.

ஐம்புலன்கள் கூர்மையான ஆயுதங்களைப் போன்றவை என்றும் கம்பன் சிறப்பாகக் குறிப்பிடுகிறார். அவ்வாயுதங்களை சீரான முறையில் செலுத்தாவிட்டால் அவை பல அபாயகரமான விளைவு களை உண்டாக்கிவிடும். அது போல பொன்மணி மாலைகள் கிடந்து அசைகின்ற அழகிய உருண்ட தனங்களைக் கொண்ட பெண்களின் கண்களும் அவைகளின் பார்வையும் கூறிய அம்புகளைப் போன்றவை என்று கம்ப நாடர் குறிப்பிடுகிறார். பெண்களின் கண்களைக் கூர்மை யான அம்புகளுக்கு ஒப்பிடுவது நமது கவிஞர்களின் மரபாகும்.

இளமையான பெண்களின் கூர்மையான கண்பார்வையில் கலங்காத ஆண்களில்லை. ஆனால் கோசல நாட்டின் பெண்களின் கண்களின் பார்வை, தசரதன் ஆட்சியில் நெறிமுறை தவறாமல் நேர்மையாகவே சென்றன என்பது கம்பருடைய வாக்காகும். ஒழுக்க முறை பற்றிய கம்பருடைய இக்கருத்து மிகச்சிறப்பானதாகும். இக்கருத்து கம்பருடைய காவியத்தின் அடுத்த நிகழ்ச்சிகளுக்கு முன்னோடியாக அமைந்துள்ளது. கம்பர் தனது மகா காவியத்தில் இத்தகைய நெறிகளைப் பற்றிப் பல இடங்களிலும் குறிப்பிடுகிறார்.

கம்பன் தனது இராமாயணத்தின் பாலகாண்டத்தில் ஆற்றுப் படலத்தில் கோசல நாட்டின் ஆற்றின் சிறப்புகளைக் குறிப்பிடுகிறார்.

''ஆசு அலம் புரி ஐம் பொழி வாளியும்
காசு அலம்பு முலையவர் கண் எனும்
பூசல் அம்பும், நெறியின் புறம் செலாக்
கோசலம் புனை ஆற்றணி கூறுவாம்''

என்பது கம்பன் கவிதையாகும்.

மிக்க துன்பங்களைக் கொடுத்துவரும் ஐம்புலன்கள் என்னும் கூர்மையான ஆயுதங்களும் பொன்மணி மாலைகளும் ஆபரணங்களும் அசைந்தாடும் திரண்ட தனங்களைக் கொண்ட அழகிய பெண்களின் பூசல் நிறைந்த கண்களின் தாக்குதல் தன்மை கொண்ட அம்பு போன்ற கூர்மையான பார்வைகளும் கூட நெறியிலிருந்து புறம் போகாதக் கோசல நாடு என்று சிறப்பாகக் கம்பன் குறிப்பிடுகிறார். இங்கு தசரதன் ஆட்சியில் நெறி தவறாதுச் செல்கின்ற மூன்று ஓட்டங்கள் ஐம்புலன்களின் செயலோட்டங்கள் பெண்களின் கூரிய கண்களின் கணையோட்டங்கள் கோசல நாட்டின் ஆற்றின் நீரோட்டங்கள் ஒப்பிடப்படுகின்றன. புலனடக்கம் பற்றி நமது சாத்திரங்கள் மிகவும் சிறப்பாகக் குறிப்பிடுகின்றன. இராமாயணப் பெரும் காவியத்தில் இராமன் பரதன், இலக்குவன், அனுமன், வீடணன் ஆகியோரின்

புலனடக்கம் மிகச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். தவம் செய்வதற்குப் புலனடக்கம் மிகவும் அவசியமானதாகும்.

மருத நிலத்தின் பண்புகள் பற்றிக் கம்பன் மிகச்சிறப்பாகக் கூறுமிடத்தில் மள்ளர்களும் (உழவர்களும்) கடைசியர்களும் (உழவர்குல மகளிரும்) மகிழ்ச்சியாக ஆடிப்பாடித் திரிவதைப் பற்றி மிகவும் அழகாகக் குறிப்பிடுகிறார்.

''பண்கள் மிழற்றும் இன்சொல் கடைசியர் பரந்த நீண்ட
கண், கை, கால், முகம், வாய் ஒக்கும் களை அலால்களை இலாமை
உண்கள்வார் கடைவாய் மள்ளர்களை இலாது உலாவி நிற்பார்;
பெண்கள்பால் வைத்த நேயம் பிழைப்பரோ சிறியர் பெற்றால்''

கோசல நாட்டு மக்கள் எல்லாம் மாண்பு மிக்கவர்களாக இருந்தார்கள். வான வெளியில் கருடன் பறந்து செல்லுபோது அதன் நிழலும் உடன் செல்லும். அதைப் போல இயல் இசைப் பயன்களை மக்கள் அனுபவித்து மகிழ்ந்தார்கள். மருந்தினால் நோய்கள் தீர்வதைப் போல தங்கள் அறிவுச் சந்தேகங்கள் தீர கல்வி கேள்விகளைக் கேட்டு மகிழ்ந்தார்கள். விருந்தினர் வந்தால் எவ்வாறு இல்லறத்தார் பெரு மகிழ்ச்சி கொள்வார்களோ அதைப் போலக் கோசல நாட்டு மக்கள் விழாக்களில் கலந்து கொண்டு மகிழ்ந்தார்கள். பொருந்திய மகளிரோடு வதுவையில் பொருந்தி நின்றார்கள் என்றும் கம்பன் குறிப்பிடுகிறார்.

வதுவையில் பொருந்தும் போது மகளிர் உளமாரப் பொருந்தி யிருக்க வேண்டும் என்பது ஆண் பெண் உறவில் மிக முக்கியமான கருத்தாகும். பிற மகளிர்பால் மட்டுமல்ல, சொந்த இல்லாளாயினும் உள்ளம் இசைவாக உள்ள நேரத்தில் கூடுவதே பொருத்தமானதாகும். கூடுவதற்கான பக்குவநிலை, பருவநிலை ஆகியவை மிக முக்கிய மானதாகும். இன்பத்திற்கு இசைவு மிக முக்கியமானது என்பதாகும். கம்பன் அக்கருத்தை மிக அழகாகக் குறிப்பிடுகிறார். இதில் பெண்பாலருக்கு முதலிடம் கொடுக்கப்படுகிறது.

திருமணங்களிலும் பெண்ணின் சம்மதத்திற்கு நமது பண்பாடு முதலிடம் கொடுத்துள்ளது. நமது சாத்திரங்களும் அதை வலியுறுத்திக் கூறுகின்றன. ருக்மணி தேவிக்கு அவளுடைய விருப்பத்திற்கு மாறாக அவளுடைய குடும்பத்தில் வேறிடத்தில் திருமணம் நிச்சயமாகிறது. அவள் ரகசியமாகக் கிருஷ்ணனுக்குத் தகவல் சொல்லி அனுப்புகிறாள். குல தெய்வத்தின் கோயிலுக்குத் தனியாகப் போகிறாள். கண்ணன் தனது தேருடன் அங்கு தயாராக

வந்து நிற்கிறான். ருக்மணி அத்தேரில் ஏறுகிறாள். குதிரைகளின் லகான்களை ருக்மணியின் கைகளில் கொடுத்துக் கண்ணன் அவளை தேரை ஓட்டச் சொல்கிறான். இதில் ஒரு மிக முக்கியமான நுட்பமான கருத்து அமைந்திருக்கிறது. ருக்மணி தன்விருப்பப்படி உடன்பட்டு தானே தேரை ஓட்டிக் கொண்டு கிருஷ்ணனுடன் செல்கிறாள். இதை யார் தடுக்க முடியும்?

பொருந்திய மகளிரோடு

ஆண் பெண் உறவு முறையில் பெண்மைக்கு முதலிடமும் முக்கிய இடமும் கொடுப்பது என்னும் நெறிமுறை நமது சாத்திரங்களில் வலியுறுத்தப்படுகின்றன. இதை மிக அழகாகக் கோசல நாட்டில் நிலவியிருந்த நெறிமுறைகளைப் பற்றி மாண்புகளைப் பற்றிக் கவிஞர் குறிப்பிடுகிறார்.

''பொருந்திய மகளி ரோடு வதுவவையில் பொருந்து வாரும்,
பருந்தொடு நிழல்சென்று அன்ன இயல் இசைப்பயன் துய்ப்பாரும்
மருந்தினும் இனிய கேள்வி செவி உறமாந்து வாரும்
விருந்தினர் முகங் கண்டு அன்னவிழா அணிவிரும்பு வாகும்''

பொருந்திய மகளிர் என்பது ஆட்பொருத்தம், சாதகப் பொருத்தம், பெயர்ப் பொருத்தம், இரு குடும்பத்தார் இசைவு மட்டுமல்ல, மனப் பொருத்தமும் இருமன இசைவும் முதலிடம் பெறுகிறது.

கல்வியும் செல்வமும்

கோசல நாட்டின் பெண்கள் செல்வமும் கல்வியும் நிரம்பியவர்களாக இருந்தனர். அவர்களிடம் செல்வமும் கல்வியும் நிரம்பிப் பூத்து மலர்ந்திருந்தது எனக் கம்பன் குறிப்பிடுகிறார்.

''பெரும் தடங்கண் பிறை நுதலார்க் கெலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்திவந்தவர்க்கு ஈதலும், வைகலும்
விருந்தும் அன்றி வினைவன யாவையே''

என்று மாதர்களின் சிறப்புப் பற்றிக் கூறுகிறார்.

மாதர் கற்பின் நின்றன

கோசல நாட்டின் மக்கள் நல்ல பண்புகளால் பொலிவுடன் விளங்கினார்கள். அந்த நாட்டின் நீதி பொய்யில்லாத நிலையில் உறுதியாக நின்றது. மாதர்களுடைய அன்பினால் அந்த நாட்டின்

அறங்கள் நின்றன. அவர்களின் கற்பின் சிறப்பு காரணமாக பருவ மழை பொய்க்காமல் தவறாமல் பெய்து கொண்டிருந்தது என்று கம்பர் கூறுகிறார்.

இங்கு நல்ல பல பண்புகள், அவையாவன, பொய்யிலாமை, நீதி, அன்பு, அறம், கற்பு ஆகியவை குறிப்பிடப்படுகின்றன. மாதர்களின் அன்பு, அறம் கற்பு ஆகியவை சிறப்பாகக் குறிப்பிடப்படுகின்றன. பாரத நாட்டு மாதர்களின் அன்பும், அறமும் கற்பும் வரலாற்றுச் சிறப்பு மிக்கதும், புகழ் மிக்கதும் பாரதப் பண்பாட்டை நிலை நிறுத்து வனவுமாகும். எனவே கம்ப நாடர்

'பொற்பின் நின்றன பொலிவு; பொய் இலா
நிற்பின் நின்றன நீதி; மாதரார்
அற்பின் நின்றன அறங்கள்; அன்னவர்
கற்பின் நின்றன கால மாரியே."

என்று கூறுகிறார். இங்கு இந்திய மாதர்களின் கற்பும் அன்பும், அறம் நிறைந்தன என்பதும் கூறுப்படுவது கவனிக்கத்தக்கதாகும்.

பொன் விலைப் பாவையர்

விலை மாதர்களைப் பற்றியும் கம்பர் ஆங்காங்கு உதாரணத்திற்காகத் தனது காவியத்தில் குறிப்பிடுகிறார். அயோத்தி மாநகரில் உள்ள கோட்டைச் சுவரைச் சுற்றியுள்ள ஆழமான அகழியைப் பற்றிக் குறிப்பிடும் போது ''பொன்விலை மகளிர் மனம் எனக்கீழ் போய்'' என்று குறிப்பிடுகிறார்.

கம்பர் அயோத்தி நகரின் கோட்டைச் சுவரின் உயரத்தையும் அதைச் சுற்றியுள்ள அகழியின் ஆழத்தையும் சிறந்த உவமைகள் கூறி ஒப்பிட்டுச் சிறப்பித்துக் கூறுகிறார்.

மேன்மையான அறிவிற்கும் முடிவு இல்லை. எல்லை இல்லை. எல்லையில்லாத முடிவில்லாத அறிவு நிறைந்தது வேதம். அம்முடிவில்லாத வேதத்தை ஒக்கும் கோட்டை மதிலின் உயர்வு, வானளாவி உயர்ந்து விண் புகுதலால் அது தேவலோகத்தை ஒக்கும் முனிவர்கள் தங்களின் தவத்தின் மூலம் ஐம்பொறிகளை அடக்குவர். அல்லது தங்களுடைய ஐம்பொறிகளையும் (மெய், வாய், கண், மூக்கு, செவி) அடக்கித் தவம் செய்வர். அத்தவத்தின் உயர்வைப் போல் அம்மதில் சுவர் உயர்ந்திருந்தது. காவலில் சிறப்பானவள், உயர்ந்தவள் துர்க்காதேவி, சூலத்தால் பலம் பெற்ற உயர்ந்து விளங்குபவள் காளி. ஈசன் மிகவும் உயர்ந்தவன். அவனை அடைவது அரிது. எனவே அயோத்தியின் கோட்டை மதில் ஈசனை ஒக்கும்.

இவ்வாறு அயோத்தியின் கோட்டை மதில் சுவரின் உயர்வுக்கு முடிவிலாத அறிவின் சிறப்புமிக்க வேதம், விண்ணின் உயர்வு, ஐம்பொறிகளின் அடக்கிய முனிவரின் தவம், காவலில் உயர்ந்த துர்க்கை, சூலத்தின் சக்தியில் உயர்ந்த காளியாரும் எளிதாக அடைய முடியாத தன்மையான ஈசன் ஆகியவை உவமைகளாகக் கூறப்பட்டிருக்கின்றன.

இத்தகைய உயர்ந்த மதிலுக்கு சக்கரவாள மலையை அலை வீசும் கடல் சூழ்ந்திருப்பதைப் போன்ற அகழி, மிக ஆழமான அகழி சூழ்திருந்தது என்று கம்பர் குறிப்பிடுகிறார். அந்த அகழியின் ஆழம் ''பொன்விலை மகளிரின் உள்ளம் போல கீழே போய்க் கொண்டிருந்தது, புன்கவி எனத் தெளிவின்றி இருந்தது'' என்றும் பல உவமைகளைக் கூறி அகழியின் ஆழத்தைக் கவிஞர் குறிப்பிடுகிறார்.

தசரத மன்னரைப் பற்றியும் அவருடைய சிறப்பான நேர்மையான ஆட்சியைப் பற்றியும் குறிப்பிடும் போது, ஆற்றுப்படலத்தில் ''வெள்ளமும் பறவையும் விலங்கும் வேசையர் உள்ளமும் ஒருவழி ஓட நின்றவன்''

என்று கம்பர் குறிப்பிடுகிறார். வெள்ளத்தின் நீரோட்டம் ஒரே நேரில் செல்லாது. திசை மாறியும் நெளிந்து நெளிந்து செல்லும். பறவையும் பறக்கும் போது திசை மாறியும் வளைந்தும் நெளிந்தும் பறந்து செல்லும். விலங்கின் செயல்களும் ஒரு நிலையில் இருக்காது. போனபோக்கில் இருக்கும். அது போல வேசையர் உள்ளமும் கூட ஒருவழியில் செல்லும் படியாக அந்த மாமன்னனின் ஆட்சி முறை அமைந்திருந்தது என்று கம்பர் மிகவும் சிறப்பாகக் குறிப்பிடுகிறார். தசரதன் ஆட்சியில் பெண்களின் ஒழுக்க நெறி தவறாமல் சென்றது என்னும் கருத்து இலை மறைவுகாயாகக் கோடிட்டுக் காட்டப்படுவதைக் காண்கிறோம். அவை பொருள் பொதிந்து காணப்படுகின்றன.

தாடகை வதைப் படலத்தில் பாலைவனக் காட்சியைக் கம்பர் விவரித்துக் கூறுகிறார்.

''தாவரும் இருவினை செற்றுத் தள்ளரும்
மூவகைப் பகை அரண்கடந்து, முத்தியில்
போவது புரிபவர் மனமும், பொன்விலைப்
பாவையர் மனமும் போல் பசையும் அற்றதே!''

என்று குறிப்பிடுகிறார்.

வானில் செல்லும் பகலவன் கோடைப் பருவத்தில் தனது கடும் வெப்பத்தின் மூலம் நிலத்திலுள்ள ஈரப் பசையை எடுத்து விடுகிறான். ''பருதி வானவன் நிலம் பசையறப்பருகுவான்'' என்று கம்பன் குறிப்பிடுகிறார். நிலம் பசையற்றுப் போனால் அது பாலைவனமாகி விடும். இவ்வாறு பசையற்றுப் போன நிலத்தைப் பற்றிக் குறிப்பிடும் போது ''பொன் விலைப்பாவையர் மனமும் போல் பசையும் அற்றதே'' என்று கம்பர் குறிப்பிடுகிறார்.

இன்பதுன்பங்கள் குதித்தோடி வருவதற்குக் காரணமான நல்வினை தீவினை என்னும் இரு வினைகளையும் துறந்து, நீக்குவதற்குக் கடினமான காமம் வெகுளி (கடுங் கோபம்) மயக்கம் ஆகிய மூவகைப் பகை அரண்களையும் கடந்து முக்தி நெறியில் செல்பவர்களின் மனம் எந்த விதமான ஆசா பாசங்களுக்கும் இடமில்லாமல் பசையற்று இருக்கும் என்றும் பொன்விளைப் பாவையர் மனமும் எவ்வித அன்பும் உணர்வும் இன்றிப் பசையற்றிருக்கும் என்றும் கம்பன் குறிப்பிடுகிறார்.

வாழ்க்கையை முற்றிலும் துறந்தோர் உள்ளம், பொன்விலைப் பாவையர் மனம் ஆகிய இரண்டையும் பாலைநிலத்தில் உள்ள பசையற்றுப் போன மண்ணுக்குக் கம்பன் உவமையாகக் கூறுகிறார்.

வாழ்க்கை சிறந்த முறையில் செயல்படுவதையும் வாழ்க்கையை முற்றிலுமாகச் சிறந்த முறையில் அனுபவிப்பதையும் கம்பர் விரும்புகிறார். அதை வெறுத்துப் பசையற்றுப் போவதை அவர் விரும்பவில்லை என்பதை நாம் அறிய முடிகிறது.

பசையற்ற பாலைவனமும் பயன்படாது. அது போல் பசையற்ற வாழ்க்கையும் பயன்படாது என்பது கம்பன் கொள்கையாகும்.

❖❖❖

2. பெண் உருக்கொண்டெனத் திரியும் பெற்றியாள்

பாலை நிலத்தின் இயல்பை, அதன் பசையற்றுக் கிடக்கும் மண்ணின் இயல்பைக் கம்பன் கூறுவது, அதன் பின்னர் தாடகை வாழும் கானகத்தின் கொடுமையைப் பற்றிக் கூறுவதற்கான முன்னோசையாக வருகிறது.

தாடகையின் வரலாற்றையும் அவளுடைய அரக்க வாழ்க்கையையும் பற்றி விசுவாமித்திர மாமுனிவர் இராமபிரானுக்கு விவரித்துக் கூறுகிறார். தாடகையின் கணவன் சுந்தன். அவர்களுக்கு இரண்டு குழந்தைகள், குமாரர்கள். அவர்கள் மாரீசன், சுவாகு ஆகியோர். இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்த மகிழ்ச்சியில் சுந்தன், அகத்தியர் தவம் செய்து கொண்டிருந்த வனத்திற்கு வந்து அங்கு அட்டகாசம் செய்தான். அகத்தியர் கோபமடைந்து சுந்தனைச் சுட்டெரித்தார். சுந்தன் சாம்பலானான். இச்செய்தியைக் கேட்டுத் தாடகையும் அவளுடைய மைந்தர்களும் அகத்தியரை நோக்கி, அவரைத் தாக்குவதற்கு ஓடிவந்தார்கள். அவர்கள் மூவரையும் அரக்கர்களாகும் படி அகத்தியர் சாபமிட்டார். அதைக் கம்பன் மிக அழகாகக் குறிப்பிடுகிறார்.

''தமிழ் எனும் அளப்பரும் சலதி தந்தவன்'' என்று அகத்தியரைப் பற்றிக் கம்பர் கூறுகிறார்.

தமிழை அகலமும் ஆழமும் நிறைந்த மிகுந்த மகாசமுத்திரத்திற்கு ஒப்பிட்டு அத்தமிழுக்கு இலக்கணம் வகுத்தவன் அகத்தியன் என்பது இங்கு கம்பருடைய வாக்காகும்.

''தமிழ் எனும் அளப்பரும் சலதி தந்தவன்,
உமிழ்கனல் விழிவழி ஒழுக, உங்கரித்து
அழிவன செய்தலால் அரக்கர் ஆகியே
இழிகென உரைத்தனன் அசனி எஞ்சவே''

தாடகை அரக்கியானாள் கடுங்கோபம் கொண்டு அந்தப் பகுதியில் படு அட்டகாசம் செய்தாள். அவளைப் பற்றி விவரித்துக் கம்பன், பாவம் அனைத்தும் ஒன்று திரண்டு பெண் உருக்கொண்டிருப்பதாகக் குறிப்பிடுகிறார். எதற்கும் அஞ்சமாட்டாள், எதையும் செய்வாள்.

பூமி அதிர்ச்சி ஏற்பட்டு உருக்கினாலும் கடல் அலைகள் பொங்கி எழுந்தாலும் மிகுந்த சினத்துடன் வானம் இடித்தாலும், அவற்றை

யெல்லாம் பொருட்படுத்தாமல் தான் நினைத்ததை மனம் போன போக்கில் எதையும் செய்வாள் என்று கம்பன் கூறுகிறார்.

அத்தகைய தாடகை அளவும் உருவும் அறிய முடியாத அளவில் அனைத்து பாவங்களும் ஒன்று திரண்டு பெண் உருக்கொண்டு திரியும் தன்மையுள்ளவள் என்று கம்பர் குறிப்பிடுகிறார். தாடகையின் கொடுமை நிறைந்த வடிவமும், தமிழின் ஆழ்ந்த கருத்துக்கள் நிறைந்த சொற்களும் கம்பன் பாடலில் புலப்படுகின்றன.

''மண் உருத்து எடுப்பினும் கடலை வாரினும்,
விண் உருத்து இடிப்பினும், வேண்டின் செய்கிற்பாள்;
எண் உருத் தெரிவரும் பாவம் ஈண்டி ஓர்
பெண் உருக்கொண்டெனத் திரியும் பெற்றியாள்''

என்று கம்பர் குறிப்பிடுகிறார்.

இன்னும் தாடகையைப் பற்றிக் கம்பர் கவிவாக்கிலும் விஸ்வாமித்திரர் வாக்கிலும் மிகவும் விரிவாகக் குறிப்பிடுகிறார்கள். தாடகை வதம் இராமாயணக் காவியத்தில் முக்கியமான நிகழ்வாகும். இராம, இலக்குவர்களை விசுவாமித்திரர் அழைத்துச் செல்வது ஒரு முக்கியமான திருப்பமாகும்.

விஸ்வாமித்திரர் இராம இலக்குவர்களை அழைத்துச் செல்வதும் அவர்களுக்கு சில ஆயுதப் பயிற்சிகளைக் கொடுப்பதும் சில முக்கியமான தெய்வீகப் படைக்கலன்களைக் கொடுப்பதும் மற்றும் தாடகை வதத்திற்குக் காரணமாக இருப்பது, அகலிகைக்கு சாப விமோசனம் கிடைப்பது, மிதிலை பயணம், வில்லைக் காண்பது, வளைப்பது, திருமணம் ஆகியவையெல்லாம் விசுவாமித்திரர் உடனிருந்து நிகழும் நிகழ்ச்சிகளாகும்.

தாடகையைப் பற்றி நச்சுப் பாம்பு சுழலும் சூலக்கையினள், காட்டிலேயே வாழ்க்கை நடத்துபவள் சழக்கி (குற்றமே உருவானவள்) என்றும் நல்ல நிறைந்த குணங்களை உலோபத்தன்மை அழித்து விடுவதைப் போல கொடுமை நிறைந்த இந்த அரக்கி செழிப்புமிக்க மருத நிலத்தைப் பாலை நிலமாக்கியவள் என்றும் கம்பர் குறிப்பிடுகிறார்.

இன்னும் இவள் மலை போன்ற வலிமை கொண்டு எனது வேள்விகளை அழிக்கிறாள். இந்த அங்க நிலம் முழுவதிலும் உள்ள மக்களைக் குலம் குலமாகக் கொன்று திரிகிறாள். உலகில் உள்ள உயிர்களையெல்லாம் தனது உணவாகக் கருதுகிறாள் என்றும்

இன்னும் சிறிது நாட்களில் மன்னுயிர் அனைத்தையும் தன் வயிற்றில் இட்டுக் கொள்வாள் என்றெல்லாம் அவளுடைய கொடிய வடிவத்தையும் கொடுமை மிக்க செயல்களையும் காவியம் விவரித்துக் கூறுகிறது.

பெண் என மனத்திடை பெருந்தகை நினைத்தான்

இத்தகைய கொடுங் குணங்கள் நிறைந்தவளான தாடகையைக் கொல்லுமாறு முனிவன் கூறிய போது அவள் ஒரு பெண்ணாயிற்றே என்று இரக்கம் கொண்டு இராமபிரான் மனதில் நினைத்தான்.

அதைக் கம்பன்,

''அண்ணல் முனிவற்கு அது கருத்து எனினும், ஆவி
உண் என வடிக்கணை தொடுக்கிலன் உயிர்கே
துண் எனும் வினைத் தொழில் தொடங்கியுளள் எனும்
பெண் என மனத்திடை பெருந்தகை நினைந்தான்''

"அந்தக் கொடியாளைக் கொல்ல வேண்டும் என்பது கோசிகன் கருத்தென்றாலும் அத்தாடகை ஒரு பெண் என்பது பெருந்தகை யாளனான இராமபிரான் தனது மனத்திடை நினைத்தான்'' என்று கம்பர் குறிப்பிடுகிறார்.

மாதென்று எண்ணுதியோ?

இராமனுடைய எண்ணத்தையும் தயக்கத்தையும் உணர்ந்த விசுவாமித்திர முனிவர் கூறுகிறார்.

''தீதென்று உள்ளவை யாவையும் செய்து, எமைக்
கோதென்று உண்டிலள்; இத்தனையே குறை
யாதென்று எண்ணுவது இக்கொடியாளையும்
மாதென்று எண்ணுதியோ மணிப்பூணினாய்''

தீயவை என்று எவையெல்லாம் உள்ளனவோ அவைகளை யெல்லாம் செய்து கொண்டிருப்பவள், என்னைப் போன்றவர்கள் தவம் செய்து எங்களுடைய உடம்பு எந்த விதமான சதைப் பற்றும் இல்லாமல் வெறும் எலும்பும் சக்கையுமாக இருப்பதால் அவள் எங்களைக் கொன்று தின்னாமல் விட்டு விட்டாள். எனவே இக் கொடியவளை யாதென்று எண்ணுவது இவளை வெறும்மாது என்று எண்ணுகிறாயா'' என்று முனிவன் கேட்கிறார். இன்னும்,

''மன்னும் பல் உயிர் வாரித்தன் வாய்ப்பெய்து
தின்னும் புன்மையின் தீமை எது? ஐய!
பின்னும் தாழ் குழல் பேதைமைப் பெண் இவள்
என்னும் தன்மை எளிமையின் பாலதே!''

என்று அத்தீமை நிறைந்தவளைப் பற்றி எடுத்துக் கூறி ''அவள் மீதுள்ள கோபத்தால் நான் இதைக் கூறவில்லை. நல்ல அறத்தை எண்ணியே இவளைக் கொல்லும் படி கூறுகிறேன்'' என்றும் முடிவாக மாமுனிவன் எடுத்துக் கூறுகிறான்.

அதன் பின்னர் தாடகை விடுத்த சூலத்தைத் தனது கணைகளால் முறித்து அவள் வீசிய கற்களையெல்லாம் தடுத்து இராமன் தனது சுடு சரத்தை அவ்வரக்கி மீது ஏவினான். அச்சரம்,

''சொல் ஒக்கும் கடிய வேகச் சுடுசரம், கரிய செம்மல்
அல் ஒக்கும் நிறத்தினாள் மேல் விடுத்தலும், வியிரக்குன்ற
கல்ஒக்கும் நெஞ்சில் தங்காது அப்புறம் கழன்று,; கல்லாப்
புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனப் போயிற்று அன்றே''

என்று கம்பர் குறிப்பிடுகிறார்.

தாடகை ஒரு பெண். ஆயினும் அரக்கி தீமையனைத்தின் முழு வடிவானவள். எனவே அவளைப் போரிட்டுக் கொல்வதும் தேவைப் படுகிறது. அவசியமாகிறது. இராமனுடைய இந்தப் போரைக் கன்னிப் போர் (முதல் போர்) என்று கம்பர் மிக நுட்பமாகவே குறிப்பிட்டுக் கூறுகிறார்.

இங்கு பெண்மை பற்றியும் தீது மிக்க பெண்கள் பற்றியும் தாடகை போன்ற அரக்கப் பெண்கள் பற்றியுமெல்லாம் சில நுட்பமான கருத்துக்கள் கூறப்படுகின்றன. அரக்கத்தனமான பெண்கள் மீது உலகம் வெற்றி கொள்ள வேண்டிய அவசியத்தையும் காவியம் சுட்டிக் காட்டுகிறது.

மங்கைமார் சிந்தை போலத் தூயது.

தாடகை வீழ்ந்த பின்னர் கோசிகன் தனது வேள்வியைத் தொடங்கத் தயாரானான். கோசிக நதிக் கரைக்கு மூவரும் சென்றனர். ,அங்கு முன்பு திருமால் அமர்ந்து தவம் செய்த இடத்தையும் மாபலியின் வரலாற்றைப் பற்றியும் முனிவர் இராமனுக்கு எடுத்துக் கூறுகிறார்.

திருமால் தவம் செய்த இடத்தைப் பற்றிக் குறிப்பிடும் போது தங்கள் நாயகரைத் தெய்வம் எனக் கருதும் மங்கைமார் மனதைப் போலத் தூய்மையான இடம் என்று கம்பன் குறிப்பிடுகின்ற, இக்கருத்து இங்கு கவனிக்கத் தக்கது.

''தங்கள் நாயகரின், தெய்வம் தான் பிரிது இலை என்று எண்ணும் மங்கைமார் சிந்தை போல் தூயது; மற்றும் கேளாய்''
எங்கள் நான் மறைக்கும், தேவர் அறிவிற்கும் பிறர்க்கும் எட்டாச் செங்கண்மால் இருந்து மேல் நாள் செய்தவம் செய்தது, அன்றே!

என்று விசுவாமித்திரர் கூறுகிறார்.

விசுவாமித்திரர் தன் தவம் செய்யவிருக்கும் இடத்தைப் பற்றியும் அதன் சிறப்புகளைப் பற்றியும் குறிப்பிடுகிறார். அந்த இடம் மிகவும் தூய்மையானது தூய்மைக்கு உவமையாகத் தங்கள் நாயகரைத் தவிர வேறு தெய்வம் இல்லை எனக் கருதும் மங்கையர் உள்ளம் போலத் தூயது என்று கூறுகிறார்.

''தெய்வம்தொழ அள்கொழு நற்றொழு தெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை''

என்பது வள்ளுவர் வாக்கு.

இத்தகைய பெண்கள் சிறப்புக்குரியவர்கள். பெண்களில் முதலிடம் பெறுகிறார்கள் என்பது கம்பன் கருத்து.

அடுத்து அந்த இடம் திருமாலின் சிறப்பு நான்மறைகளுக்கும் தேவர்களின் அறிவிற்கும் பிறர்க்கும் எட்டாச் செங்கண்மால்'' என்பது முனிவர் கூற்றாகும்.

❖❖❖

3. அகலிகைப் படலம்

விசுவாமித்திரரும் தனது வேள்வியை முடித்து அரச குமாரர்களுடன் புறப்பட்டுப் பல இடங்களைத் தாண்டி கங்கைக் கரைக்கு வந்து சேர்ந்தனர். கங்கையைப் பற்றிக் குறிப்பிடும் போது இங்கு கம்பர் தனது காவிரியை மறக்காமல் ''பொன்னியைப் பொருவுமை கங்கை'' எனக் குறிப்பிடுகிறார். காவிரியைப் போன்ற கங்கை என்பது அதன் பொருளாகும். அப்புனித கங்கையைப் பணிந்து வணங்கி விட்டு மிதிலை நோக்கிச் சென்று அந்நகரின் கோட்டை மதிலின் வெளிப்புறத்திற்கு வந்து சேர்ந்தனர்.

அங்கு மனையின் மாட்சியை அழித்து இழி வெய்திய கௌதம முனிவரின் மனைவியான அகலிகை கல்லாகியுள்ள மேட்டிற்கு வந்தனர். அதனருகில் சென்ற போது இராமனுடைய கால் துகள் பட்டுக் கல்லாகியிருந்த அகலிகை உயிர் பெற்றுப் பழைய வடிவத்துடன் எழுந்தாள். இந்தக் கதையைக் கம்பன் மிக நுட்பமாகத் தனது காவியத்தில் குறிப்பிடுகிறார்.

''இனைய நாட்டினில் இனிது சென்று, இஞ்சி சூழ் மிதிலை
புனையும் நீள் கொடிப்புரிசையின் புறத்து வந்து இறுத்தார்
மனையின் மாட்சியை அழித்து இழி மாதவன் பன்னி
கனையும் மேட்டுயர் கருங்கல் ஓர் வெள்ளிடைக் கண்டனர்''

என்று கம்பர் கூறுகிறார்.

கௌதம முனிவர் அவருடைய மனைவி அகலிகை, அவள் மிக்க அழகானவள். அவள் மீது தேவர் கோனான இந்திரன் மையல் கொண்டான். முனிவர் ஆசிரமத்தில் இல்லாத போது அம்முனிவன் வேடம் தரித்து ஆசிரமத்திற்குள்ளே போய் அகலிகையைத் தழுவினான்.

அகலிகையோ தனது நிலையிழந்து காம உணர்வில் மயங்கி வந்தவனைத் தழுவி, அவன் தனது கணவனல்ல இந்திரன் தான் எனத் தெரிந்தும் மௌனமாக இருந்து விட்டாள். அந்த நேரத்தில் முனிவன் தனது ஆசிரமத்திற்குத் திரும்பிவர அவரைக் கண்டதும் இந்திரன் பூனையுருக் கொண்டு தப்பியோட முயன்றான். அதைக் கண்ட கௌதமன் நடந்ததை உணர்ந்து இந்திரனுக்கு அவனது உடம்பில் ஆயிரம் மாதர்க்குள்ள அறிகுறிகள் உண்டாகும்படி சபித்தும் அகலிகையைக் கல்லாகும் படியும் சாபம் விடுத்தான்.

அகலிகையோ தவறை உணர்ந்து வருந்தி முனிவரிடம் பிழை பொறுத்துச் சாபவிமோசனம் வேண்ட, இராமன் இந்தப் பக்கம் வரும் போது அவனுடைய கால் துகள்பட்டு இக் கல்வடிவம் தீரும் என்று விமோசனம் அளித்தார். அதன்படி அகலிகை இராமனுடைய கால் துகள் பட்டுக் கல் வடிவம் நீங்கி பழைய மெய் வடிவம் எய்தினாள். இராமன் அவளைத் தாயென வணங்கி அவளைத் தன் கணவனான கௌதம முனிவன் பால் சேர்த்தான் என்பது அகலிகை பற்றிய செய்தியாகும்.

இந்தப் பகுதியில் கம்பன் சில முக்கியமான நுட்பமான கருத்துக்களை முன்வைத்துள்ளார். அவை பெரிதும் பெண்கள் பாற்பட்டது, ஒழுக்க நெறி பற்றியதுமாகும். காவியத்தில் அகலிகை பற்றிய செய்திகள் வரும் போது ''மனையின் மாட்சியை அழித்து இழிவெய்தியவள் இம்மாதவன் மனைவி'' என்றும் தீவினை நயந்து செய்த தேவர் கோன் தனக்குச் செங்கண் ஆயிரம் அளித்தோன் பன்னி அகலிகை இவள் ஆகும்'' என்றும் அகலிகையை இராமன், ''அன்னையே அனையாட்கு இங்ஙண் அடுத்தவாறு'' என்றும் விசுவாமித்திரனிடம் வினவியதாகவும் கம்பர் குறிப்பிடுகிறார்.

இங்கு அகலிகை செய்த தவறு பற்றி ''மனையின் மாட்சியை அழித்தவள்'' என்றும், இந்திரன் செய்த தவறு பற்றி ''தீவினை நயந்து செய்த தேவர் கோன்'' என்றும் கம்பர் குறிப்பிடுகிறார். தீவினைகளை அறியாமல் செய்வதும் அறிந்தே செய்வதுமாக இருவகைப்படும். இதில் இங்கு தேவர்கோன் தீவினையை அதாவது தீய செயலை அறிந்தே புரிந்தே நயந்தே அதாவது விரும்பியே செய்துள்ளான்.

சிறந்த வல்லமை மிக்க வஜ்ஜிராயுதத்தைப் படைக்கலனாகக் கொண்டுள்ள தேவர்கோன், முனிவன் இல்லாத போது அவனுடைய மனைவியைச் சேரவேண்டும் என்று விரும்பி அதற்கான நேரம் பார்த்து வகுத்துக் கொண்டு திருட்டுத்தனமாக வஞ்சகமாக மாறுவேடத்தில் அகலிகையின் கணவன் வேடத்தில் அவளிடம் சென்று அவளைத் தழுவினான். இதை

''தையலாள் நயனவேலும், மன்மதன் சரமும் பாய
உய்யலாம் உறுதி நாடி உழல்பவன், ஒரு நாள் உற்ற
மையலால் அறிவு நீங்கி, மாமுனிக்கு அற்றம் செய்து
பொய்யிலா உள்ளத்தான் தன் உருவமே கொண்டு புக்கான்''

இந்திரன் தனக்கு ஏற்பட்டக் காம உணர்வைத் தாங்க முடியாமல் அம்மய்யலால் அறிவு நீங்கி இச் செய்கையைச் செய்து சாபம் பெற்றான். அது அவன் செய்த தவறுக்கு ஒரு தண்டனையாகும்.

மறுபக்கம் அகலிகை தனது தவறைத் தெரிந்து செய்தாளா அத்தவறை உணர்ந்து செய்தாளா என்றும் கேள்வியும் எழுகிறது. அது பற்றிக் கம்பநாடர் .

''புக்கு அவளோடும் காமப் புதுநல மதுவின் தேறல்
ஒக்க உண்டு இருத்த லோடும், உணர்ந்தனள்; உணர்ந்த பின்னும்
தக்கதன்று என்ன ஓராள்; தாழ்ந்தனள் இருப்பத், தாழா
முக்கணான் அனைய ஆற்றல் முனிவனும் முடுகி வந்தான்''

முதலில் மாறு வேடத்தில் தனது கணவன் வேடத்தில் வந்த இந்திரனை அகலிகை உண்மையை அறியவில்லை. தனது கணவன் என்றே கருதினாள். ஆனால் அவன் தன்னைக் கட்டித் தழுவிய போது அக்காமப் புதுநல மதுவின் தேறல் ஒக்க உண்டு இருந்த போது அவள் தன்னைத் தழுவுவது தனது கணவனல்ல அது இந்திரன் தான் என்பதை உணர்ந்தாள். இருப்பினும் அது தவறு என்று தன்னை விடுவித்துக் கொள்ளவில்லை. தன்னை உட்படுத்திக் கொண்டு விட்டாள்.

கௌதம முனிவரும் அந்த மெல்லியலாளை பலவீனமானவளை நோக்கி ''விலைமகள் அனைய நீயும் கல்லியல் ஆதி'' என்று சாபமிட்டான். அவளோ தனது பிழைபொறுக்குமாறு வேண்டுகிறாள். சாபவிமோசனமும் கிடைக்கிறது.

ஸ்ரீ ராமபிரானது கால்துகள் பட்டுக் கல்லாயிருந்த அகலிகை பழைய உயிர்வடிவைப் பெற்றாள். இராமன் அவளிடம்,

''மாதவன் அருள் உண்டாக அவனை வழிபடு. நடந்ததை எண்ணித் துன்புறாதே அன்னையே நீ போவாயாக'' என்று அவளைத் தனது கணவனிடம் போகும்படி இராமன் கூறுகிறான். அனைவரும் கௌதமனிடம் சென்று அவரை வணங்கி ''நெஞ்சினால் பிழைப்பிலாளை நீ அழைத்திடுக என்ன? ''மாசறு கற்பின் மிக்க அணங்கினை அவன் கையீந்தான்'' என்று கம்பன் கவிதை குறிப்பிடுகிறது. ''அவள் நெஞ்சாரத்தவறு செய்யவில்லை. நடந்த தவறுக்கு அவளும் தண்டனை பெற்று அது நிறைவேறி தண்டனை காலமும் முடிந்து விட்டது. தாங்கள் ஏற்றுக் கொள்ளவும்'' என்று இராமனும் விசுவாமித்திரனும் முனிவனிடம் எடுத்துக் கூறி கௌதமரையும் அகலிகையையும் இணைத்து வைத்தனர்.

இவ்வாறு இருபெரும் நிகழ்ச்சிகள் சுபமாக நிறைவேறுகின்றன. அதைக் கவிச் சக்கரவர்த்தி கம்பன் மிக அழகான தனது சிறந்த பாடல் மூலம் குறிப்பிடுகிறார்.

''இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம்; இனி இந்த உலகுக்கெல்லாம்,
உய்வண்ணம் அன்றி மற்றோர் துயர்வண்ணம் உறுவது உண்டோ!
மைவண்ணத்து அரக்கிபோரில் மழை வண்ணத்து அண்ணலே உன்,
கைவண்ணம் அங்கு கண்டேன் கால் வண்ணம் இங்கு கண்டேன்''

என்று விசுவாமித்திர மாமுனிவர் இராமபிரானைப் போற்றுகிறார்.



4. பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ?

விசுவாமித்திர மாமுனிவரும் இராம இலக்குவர்களும் மிதிலை நகரை அடைகிறார்கள். நகரின் இராஜ வீதி வழியாக நடந்து செல்கிறார்கள். சீதை அரண்மனையின் மேல் மாடத்திலிருந்து இராமனைக் காண்கிறாள். இராமனும் அவளைக் காண்கிறான். இந்த அற்புதமான காட்சியைக் கம்பன் மிக அழகாக எடுத்துக் கூறுகிறார். சீதை தோன்றிய அழகை

''இழைகளும் குழைகளும் இன்ன முன்னமே,
மழை பொரு கண் இணை மடந்தை மாரொடும்
பழகியது எனினும் இப்பாவை தோன்றலால்
அழகெனும் அழகும் ஓர் அழகு பெற்றதே''

என்று குறிப்பிடுகிறார். இவ்வாறு சீதை தோன்றியதை இராமன் கண்டான். இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தனர். இந்தக் காட்சியைக் கம்பர் மிகவும் அற்புதமாகக் கூறுகிறார். இதைப் புகழ்ந்து கூறாதப் புலவர்களில்லை.

''எண் அரு நலத்தினாள் இனையள் நின்றுழி
கண்ணொடு கண் இணை கவ்வி ஒன்றை ஒன்று
உண்ணவும், நிலை பெறாது உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினாள் அவளும் நோக்கினாள்''

இருவரும் ஒருவரையொருவர் நோக்கினர் என்றும் அந்நோக்கில் சீதையின் நோக்கு இராமனின் தோள்களில் தைத்தன வென்றும் இராமனுடைய நோக்கு சீதையின் தனங்களில் தைத்தது என்றும்

பருகிய நோக்கெனும் பாசத்தால் பிணித்து ஒருவரை யொருவர் உள்ளம் ஈர்த்து இருவரும் மாறி மாறிப்புக்கு இதயம் எய்தினர் என்றும் கம்பன் குறிப்பிடுகிறார்.

''நோக்கிய நோக்கெனும் நுதிகொள்வேல் இணை,
ஆக்கிய மதுகையான் தோளில் ஆழ்ந்தன;
வீக்கிய கனைகழல் வீரன் செங்கணும்,
தாக்கணங்கு அனையவள் தனத்தில் தைத்தவே''

என்பதும்,

''பருகிய நோக்கெனும் பாசத்தால் பிணித்து,
ஒருவரை ஒருவர் தம் உள்ளம் ஈர்த்தலால்
வரிசிலை அண்ணலும், வாள் கண் நங்கையும்
இருவரும் மாறிப் புக்கு இதயம் எய்தினார்''

என்பதும் கம்பநாடரின் பாடல்களாகும்

இராமனும் சீதையும் ஒருவரையொருவர் தொலைவிலிருந்து நோக்கி இருவரும் ஒருவர் உள்ளத்தில் மற்றவர் புகுந்து ஈருடலும் ஒருயிரும் ஆயினர்.

''மருங்கிலா நங்கையும், வசை இல் ஐயனும்
ஒருங்கிய இரண்டு உடற்கு உயிர் ஒன்று ஆயினார்;
கருங்கடல் பள்ளியில் கலவி நீங்கிப் போய்ப்
பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ?

என்று கம்ப நாடர் அற்புதமாக இராமன் சீதை தெய்வீகக் காதலைக் குறிப்பிடுகிறார். திருமாலும் இலக்குமி பிராட்டியும் பாற்கடலில் பள்ளி கொண்டிருந்தனர். அங்கிருந்து நீங்கி பூமியில் அவதாரமெடுத் துள்ளனர். இங்கு இருவரும் சந்தித்தனர். அது பாற் கடலிலிருந்து பிரிந்த பின்னர் முதல் சந்திப்பு. அந்தக் காட்சியைக் கம்பநாடர் பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ? என்னும் அற்புதமான சொற்களில் மிக நுட்பமான கருத்துடன் குறிப்பிடுகிறார் மகா கவியினுடைய இந்தப் பாடல்களையும் அதில் வரும் அற்புதமான இன் தமிழ்ச் சொற்களையும் புகழாத, பாடாத புலவரில்லை.

விஸ்வாமித்திர முனிவருடன் இராமன் மிதிலைக்குச் செல்லுதல், இராஜவீதி வழியாக நடந்து செல்லுதல், தொலைவிலிருந்து இராமனும் சீதையும் ஒருவரையொருவர் கண்டு காதல் கொள்ளுதல் இருவர் உள்ளங்களிலும் காதல் மலர்ச்சி கொள்ளுதல், இருவரின் மன நிலை,

இராமன் வில்லை வளைத்தல் மற்றும் திருமணம் வரை, கம்பர் தரும் காட்சி ஒரு அபூர்வமான தெய்வீகக் காதல் காட்சியாகும். கம்பர் இதை மிகவும் அற்புதமாகத் தனது காவியத்தில் எடுத்துக்காட்டுகிறார்.

பெண் வழி நலனொடும் பிறந்த நாணொடும்

இராமனைக் கண்டது முதல் சீதையும் காதல் வசப்பட்டு உடல் உருகினாள். காதல் நோய் பற்றி மிகவும் நுட்பமாக அழகியலுடன் கம்பநாடன் கவிதை குறிப்பிடுகிறது.

''நெருக்கி உள்புகுந்து அரு நிறையும் பெண்மையும்
உருக்கி என் உயிரொடும் உண்டுபோனவன்
பொருப்பு உறழ் தோள்புணர் புண்ணியத்தது
கருப்பு வில் அன்று; அவன் காமன் அல்லனே''

என்றும்

''பெண்வழி நலனொடும் பிறந்த நாணொடும்
எண் வழி உணர்வும் நான் எங்கும் காண்கிலென்;
மண்வழி நடந்தடி வருந்தப் போனவன்
கண்வழி நுழையும் ஓர் கள்வனே கொல்; ஆம்''

என்னுடைய உள்ளத்தைக் கவர்ந்த கள்வனால் எனக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சீதை தனது காதல் நோயைப் பற்றித் தனது தோழிமார்களிடம் குறிப்பிடுகிறாள்.

இராமனுடைய உருவம் நெருக்கி சீதையின் உள்ளத்தில் புகுந்து விட்டதால் அவளுடைய பெண்மையும், பொறையுடை நிறையும், பெண்களுக்கு இயல்பாக உள்ள நலனும், அழகும், நாணமும் உருகி அவளுடைய உள்ளம் கலக்கம் அடைகிறது என்று மென்மையான பெண்மையைப் பற்றிக் கம்பன் மிகவும் சிறப்பாகக் குறிப்பிடுகிறார். ஆசை நோய்க்கு வேறு மருந்தில்லை என்று கம்பன் குறிப்பிடுகிறார். இது உலக வழக்காகும்.

வீறுசேர் முலை மாதரை வெல்வரோ?

ஆணும் பெண்ணும் இல்லாமல் உலகம் இல்லை. ஆண்மையும் பெண்மையும் இல்லாமல் உலக வாழ்க்கை இல்லை. நமது தர்ம சாத்திரங்கள் வாழ்க்கையைத் துறக்கச் சொல்லவில்லை. சில

கடமைகளை உறுதியாக நின்று வைராக்கியத்துடன் நிறை வேற்றுவதற்குச் சில கடினமான முயற்சிகளும் அர்ப்பணிப்பும் ஈடுபாடும் தவமும் தேவைப் படுகிறது. அதற்கு வாழக்கையி லிருந்து குறிப்பாக இல்வாழ்க்கை யிலிருந்து விலகிச் செல்ல வேண்டும் என்பதில்லை.



ஆண், பெண் காதலை மிகவும் மென்மையான அழகியலுடன் நமது நூல்கள் எடுத்துக் காட்டியுள்ளன. மன்மதன் ரதி என்னும் வடிவங்கள் நமது இலக்கியங்களில் மிகச் சிறந்த பாத்திரங்களாகும் காதல் தெய்வங்களாகும். தேவையான காதல் உணர்வை ஊட்டக் கூடிய அற்புதமான தெய்வீகப் பாத்திரங்களாகும். அவை ஆண் பெண் அழகு வடிவங்களாகும். எடுத்துக்காட்டான அற்புதமான அழகுக் கலையின் துடிப்பான வடிவங்களாகும்.

உள்ளத்தில் ஊக்கமுடைய, மிக்க தவமுயற்சியையுடைய முனிவர்களால் மன்மதனுடைய கணையிலிருந்து விலகிக் கொள்ள முடியும் என்பதெல்லாம் வெறும் வாய்ச் சொற்கள் மாத்திரமேயாகும். அதுவும் கூட பூக்கொய்யும் பெண்களின் கடைக் கண் நோக்கின் முன்பாக யாரும் நிற்க முடியாது, அதிலிருந்து எவராலும் தப்பிக்க முடியாது என்று கம்பன் மிக அழகாகக் குறிப்பிடுகிறார்.

''ஊக்கம் உள்ளத்துடைய முனிவரால்
காக்கல் ஆவது காமன் கைவில் எனும்
வாக்கு மாத்திரம்; அல்லது, அல்லியின்
பூக்கொய்வார் புருவக்கடை போதுமே''

என்றும் இன்னும்,

''நாறு பூங்குழல் நன்னுதல், புன்னை மேல்
ஏறினான் மனத்து உம்பர் சென்று ஏறினாள்
ஊறில் ஞானத்து உயர்ந்தவர், ஆயினும்
வீறுசேர் முலை மாதரை வெல்வரோ?''

என்றும் கூறுகிறார். குற்றமற்ற மேலான ஞானத்தால் உயர்ந்தவர் என்றாலும் அழகு பொருந்திய மாதரை வெல்ல முடியாது என்பதாகும்.

ஆண் பெண் உறவு, நல்லுறவு பாலுறவு, காதல், அழகு, விளையாட்டு, குடும்பம் ஆகியவை பற்றியெல்லாம் மிகவும் நுட்பமாக, தயரதன் தன் படைகளுடன் மிதிலைக்குச் செல்லும் போது இடைப்பட்ட காட்சிகளில் கம்பநாடர் மிகவும் அற்புதமாக எடுத்துக் கூறுகிறார்.

கங்கைக் கரையிலே நிலவொளியில் மாதரும் மைந்தருமாக மகிழ்ச்சியாகக் கலந்து, மகிழ்ந்து விளையாடியதையும் அவர்கள் காதல் மிகுதியால் ஒருவரோடு ஒருவர் இணைந்து பொருந்தியிருந்தனர் என்று கம்பர் விவரிக்கிறார்.

''ஊறுபேர் அன்பினாள் ஒருத்தி, தன் உயிர்
மாறு இலாக்காதலன் செயலை, மற்றொரு
நாறு பூங்கோதை பால் நவில நாணுவாள்
வேறு வேறு உறசில மொழி விளம்பினாள்''

என்று மிக நுட்பமான கருத்துக்களைக் கம்பன் குறிப்பிடுகிறார்.

''கருத்தொரு தன்மையது, உயிரும் ஒன்று, தம்
அருத்தியும் அத்துணை ஆய நீரினார்;
ஒருத்தியும் ஒருத்தனும் உடலும் ஒன்று எனப்
பொருத்தினர் இவர், எனப் புல்லினர்; அரோ''

என்றும்,

''மறப்பிலள் கொழுநனை வரவு நோக்குவாள்,
பிறப்பினோடு இறப்பெனப் பெயரும் சிந்தையாள்;
துறப்பரு முகில் இடைத் தோன்றும் மின்எனப்
புறப்படும்; புகும் ஒரு பூத்தகொம்பனாள்''

என்றும் கம்பர் மிக அழகாகவும் மிக நுட்பமாகவும் குறிப்பிடுகிறார்.

இராமன் வந்த செய்தியும், அவன் வில் எடுத்த செய்தியும் சீதையின் திருமணச் செய்தியும் கேட்டு மிதிலை மக்கள் மகிழ்ச்சியடைகிறார்கள். கூட்டம் கூட்டமாகக் கூடி கும்பல் கும்பலாகக் கூடிப் பேசி மகிழ்கிறார்கள்.

பெண்மை என்பது குளிர்ச்சி பொருந்திய காதலும் அன்பும் அருளும், பாசமும் மிக்கது, மென்மையானது. ஆயினும் மன உறுதி மிக்கது. மிதிலை மக்கள் சீதையென்னும் பெண்ணின் நீர்மையினால் பெறவிருக்கும் பெருமையை அடையப் போகிறோம் என்னும் மகிழ்ச்சியில் கூடிக் களிப்படைகிறார்கள்.

சீதையின் திருமணத்தைப் பற்றி வெகு நாட்களாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். வில் எடுக்க ஆள் இல்லையே என்று ஏங்கி யிருந்தார்கள். நாட்கள் செல்லச் செல்ல நம்பிக்கையிழந்து நின்றார்கள். ''இன்று காலம் கனிந்து இனிய நாள் வந்து விட்டது'' என்று மகிழ்ச்சி யடைந்தார்கள். மழையின்றி வானம் வறண்டு, பூமியில் நீர் இன்றி இருந்த காலத்தில் குடிப்பதற்கு நீர் நிறைந்த ஒரு இடத்தைக் கண்ட போது அங்கு மான் கூட்டம் குவியுமாம். அது போல மிதிலை மக்கள் கூட்டம் குவிந்தது என்று கம்பன் கூறுகிறார்.

''கண்ணினால் காதல் என்னும் பொருளையே
காண்கின்றோம், இப்
பெண்ணின் நீர்மையினால் எய்தும் பயன் இன்று
பெறுதும்; என்பார்;
மண்ணின் நீர் உலந்து, வானம் மறை அற
வறந்த காலத்து
உண்ணும் நீர் கண்டு வீழும் உழைக்குலம்
பலவும் ஒத்தார்''

என்று கம்பன் பாடல் குறிப்பிடுகிறது.

இராமனைக் காண மிதிலை மக்கள் கூடிக் குவிகிறார்கள். கண் இமைக்காமல் இராமபிரானின் தாள்களையும் தோள்களையும் அழகையும் அவன் கம்பீரத்தையும் காண மக்கள் கூட்டம் திரளுகிறது. அனைவரும் இராமனைப்பார்த்த வண்ணமாகவே இருக்கிறார்கள்.

'அரத்தம் உண்டு அனைய மேனி அகலிகைக்கு அளித்த தாளும்,
விரைக்கரும் குழலிக்காக வில் இற நிமிர்ந்து வீங்கும்
வரைத்தடம் தோளும் காண, மறுகினில் வீழும் மாதர்,
இரைத்து வந்து அமிழ்தின் மொய்க்கும் ஈ இனம்
என்னல் ஆனார்''

சிவந்த அழகிய மேனி கொண்ட அகலிகைக்கு உயிர் தந்த இராமனுடைய தாள்களையும் சீதைக்காக வில்லை ஒடித்து நிமிர்ந்து உயர்ந்து நிற்கும் அவனுடைய தோள்களையும் காண தேன் சிந்திய

இடத்தில் ஈக்கள் மொய்ப்பதைப் போல மாதர் கூட்டம் மொய்த்தது என்று கம்பநாடர் குறிப்பிடுகிறார்.

இன்னும் அம்மக்கள் கூட்டத்தை,

''தோள் கண்டார் தோளே கண்டார்; தொடுகழல் கமலம் அன்ன
தாள் கண்டார் தாளே கண்டார்; தடக்கை கண்டாரும் அஃதே;
வாள் கொண்ட கண்ணார்யாரே வடிவினை முடியக் கண்டார்?
ஊழ்கொண்ட சமயத்து அன்னான் உருவு கண்டாரை ஒத்தார்''

என்பது கவிஞர் பெருமான் கம்பநாடருடைய புகழ் பெற்ற பாடலாகும்.

ஆசை வெட்கமறியாது எனறு சாதாரண மக்களுடைய கருத்து ஒன்றுண்டு.

''பெருத்த காதலின் பேதுறு மாதரின்
ஒருத்தி, மற்றங்கு ஒருத்தியை நோக்கி, என்
கருத்தும் இவ்வழி கண்ட துண்டோ என்றாள்
அருத்தி உற்றபின் நாணம் உண்டாகுமோ?''

என்று கம்பன் பொதுவாக பெருங்காதல் கொண்டோர் நிலை பற்றி மிக அருமையாகக் குறிப்பிடுகிறார்.

இராமனுக்கும் சீதைக்கும் சிறப்பாகத் திருமணம் நடைபெற்று நிறைவேறியது. அனைவரும் சீதா ராமர்களை மணக்கோலத்தில் கண்டு பெரு மகிழ்சியடைந்தனர்.

''பூமகளும் பொருளும் என நீ என் மாமகள் தன்னோடு மன்னுதி'' பூமகளும் பொருளும் போல நீங்கள் இணைந்து வாழுங்கள் என்று ஜனக மகா ராஜன் வாழ்த்தினார். ''நன் மகனுக்கு இவள் நல் அணி'' என்று தாய் மார்கள் வாழ்த்தினர். மற்ற அனைவரும்.

''எண்இல கோடி பொன், எல்லையில் கோடி
வண்ண அரும் கலன் மங்கையர் வெள்ளம்,
கண் அகல் நாடு உயர், காசு உயர் தூசும்,
பெண்ணின் அணங்கனையாள், பெறு கென்றார்''

என்று கம்பர் கூறுகிறார்.


இங்கு கம்பர் சீதா ராமர்களைச் சிறந்த தம்பதிகளாகச் சிறப்பித்துக் காட்டுகிறார் கடலளவில் நூல்களைக் கற்ற அறிஞர்களின் அறவுரைகளின்படி சிறந்த சாத்திரங்கள் கூறியுள்ள

நெறி முறைகளின் படி பெருங்கடலைப் போன்ற அன்பையும் காதலையும் கொண்ட மனத்தினளான சீதையுடன் கரிய கடலைப் போன்ற கருணைக் கடலான இராமபிரான் இணைந்தான்.

''நூற்கடல் அன்னவர் சொற்கடல் நோக்கி,
மால் கடல் அன்ன மனத்தவளோடும்
கார்க்கடல் போல் கருணைக்கடல், பண்டைப்
பாற்கடல் ஒப்பது ஓர் பள்ளி அணைந்தான்''

என்று மிக அருமையாக சீதா ராமர்களின் இணைப்பைப் பற்றிக் கவிஞர் பெருமான் பாடியுள்ளார்.

இங்கு காதல் சிறப்பு, திருமண நிகழ்ச்சி இருமனங்களின் இணைப்பு கற்பின் பெருமை முதலியவை பற்றி பல உயரிய கருத்துக்களைக் கம்ப நாடர் விவரிப்பதைக் காண்கிறோம்.



5. கூனியும் சிறிய கோத்தாயும்

அயோத்தியா காண்டத்தில் கூனியும் கைகேயியும் முக்கிய இடம் பெறுகின்றனர். இருவரும் பெண்கள். கைகேயி தசரத மன்னனுடைய மூன்றாவது மனைவி, இளையதாரம். அவளிடம் அவன் மட்டற்ற காதல் கொண்டிருந்தான். பொதுவாக ஒன்றுக்கு மேற்பட்ட தாரங்களைக் கொண்டவர்கள் இளைய தாரத்திடம் அதிகமான காதலும் மையலும் கொண்டிருப்பது இயல்பு என்பதைக் கதைகளிலும் சரி, வாழ்க்கையிலும் சரி, கண்டிருக்கிறோம்.

இக்காண்டத்தின் கதையில் கூனியும், சிறிய கோத்தாயும் இராமனுக்குக் கொடுமை இழைப்பதைப் பற்றிக் கூறப்படுகிறது. தசரத மன்னனுக்கோ தனது இளைய மனைவி செய்த கொடுமையைத் தடுக்க முடியாமல் போகிறது. அதனால் இராமன் காடு செல்ல வேண்டியதாகிறது.

கம்பன் தனது மகா காவியத்தின் இரண்டாவது காண்டமான அயோத்தியா காண்டத்தின் கடவுள் வாழ்த்துப்பாடலாக

''வான் நின்று இழிந்து வரம்பு இகந்த மாபூதத்தின் வைப்பெங்கும், ஊனும், உயிரும், உணர்வும் போல, உள்ளும் புறத்தும்உளன் என்ப கூனும், சிறிய கோத்தாயும் கொடுமை இழைப்பச் கோல் துறந்து கானும் கடலும் கடந்து இமையோர் இடுக்கண் காத்த கழல் வேந்தே''

என்று பாடியுள்ளார்.

கன்னியர்கள் தங்கள் கற்பைக் காத்து வருவது அவர்களுக்குப் பெருமை தருகிறது. அதைப் போல ஆட்சியாளர்கள் ஆட்சிப் பொருப்புகளை தருமத்தின் வழியில் நடத்துவது பெருமைக் குரியதாகும். எனவே பெண்கள் தங்கள் கற்புநிலையைக் காத்து நிற்பதைப் போல தசரத மன்னன் தான் இம்மாநிலத்திற்குப் பெருமை தரும்படியாகத் தருமத்தைக் காத்து வந்ததாகக் கூறுகிறார்.

''கன்னியர்க்கு அமைவரும் கற்பின் மாநிலம்
தன்னை இத் தகைதர, தருமம் கைதர
மன் உயிர்க்கு உறுவதே செய்து வைகினேன்;
என் உயிர்க்கு உறுவதும் செய்ய எண்ணினேன்''

தசரதன் தன் சபையோர்களை அழைத்துக் கன்னியர்கள் தங்கள் கற்பைக் காத்துப் பெருமை அடைவதைப் போல நான் இந்நாட்டைக் காத்துத் தருமத்தைச் செய்தேன். இனி ஆட்சிப் பொருப்பைப் புதல்வர்களிடம் ஒப்படைத்து விட்டுத் தவம் செய்து வீடுபேறு அடைய விரும்புகிறேன் என்று கூறுகிறார். இங்குக் கற்பின் பெருமை உவமையாகச் சிறப்பித்துக் கூறப்படுகிறது.

மனிதனுடைய உள்ளத்திலே உறைகின்ற உட்பகைகளாகக் காமத்தை முதலாவதாக வைத்துக் காமம், குரோதம், லோபம் மதம் மாற்சரியம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு அப்பகைகளை வெல்ல வேண்டும் என்பதை நமது சாத்திரங்கள் குறிப்பிடுகின்றன. இத்தகைய உட் பகைகள் நம்மைச் சூழ்ந்து நிற்கின்றன. அவைகளை இடையறாது எதிர்த்துப் போராடி வெற்றி பெற வேண்டும் என்பதையும் நமது சாத்திரங்கள் வலியுறுத்துகின்றன.

தசரதன் தனது ஆட்சிப் பொருப்பிலிருந்து விலகி இந்த உட்பகைகளிலிருந்து ஒதுங்கி ஓய்வு பெற விரும்புகிறான். அதைப் பற்றித் தசரதன்.

''வெள்ள நீர் உலகினில், விண்ணில், நாகரில்
தள்ளரும் பகையெலாம் தவிர்த்து நின்றயான்
கள்ளரின் கரந்துறை காமம் ஆதியாம்
உள்உறை பகைஞருக்கு ஒதுங்கி வாழவெனோ?

என்று கூறுவதைக் கம்பன் மிக நுட்பமாகக் குறிப்பிடுகிறார்.

மங்கையரால் வரும் காமம் இல்லையெனில்

இராமனுக்கு முடி சூட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. நல்ல நாள் குறிக்கப்பட்டது. பின்னர் தசரதன் வசிட்டனை அழைத்து விழாவிற்கு ஆவன செய்யும்படியும் இராமனுக்கு நல்லுரைகள் வழங்கும் படியும் கூறினார். வசிட்டன் இராமனிடம் ஒரு அரசனுக்குரிய கடமைகளைப் பற்றி எடுத்துக் கூறுகிறார். அக்கருத்துக்கள் மிகவும் உயர்ந்த அரசியல் நெறி மிகுந்த எக்காலத்துக்குமுரிய சிறப்பான கருத்துக்களாகும்.

ஒரு நாட்டிற்கு அரசனாக இருப்பவன் அண்டை நாடுகளுடன் பகை கொள்ளலாகாது. அப்போது போர் ஒடுங்கிவிடும். அந்த நாடு களுடன் நட்புறவு அதிகமாகும். அதன் காரணமாக அந்த மன்னனின் புகழ் ஓங்கும். பாதுகாப்பிற்குரிய அவனுடைய சேனையின் பலம் குறையாது. அத்தகைய நன்மைகள் உண்டாகும் போது அந்த நாட்டிற்கும் அந்த நாட்டின் அரசனுக்கும் எவ்விதக் கேடும் ஏற்படாது.

ஐம்புலனறிவுகளையும் கொண்டிருக்கின்ற ஐம்பொறிகளின் தீமைகள் குறையும்படி சிறந்த பொருள்களை நாள்தோறும் பெருகச் செய்து நடுநிலை கொண்டு உறுதியுடன் ஆளும் அரசே அரசாகும். நாட்டின் அறிவை வளர்த்துச் செல்வத்தைப் பெருக்கி, அவைகள் அனைவருக்கும் பயன்படும் முறையில் நடுநிலையில் நின்று வலிமையுடன் உறுதியுடன் ஆளும் அரசே நல்லரசாகும். அவ்வாறான நல்லாட்சி என்பது வாளின் மேல் நின்றுத் தவம் செய்தவற்கு ஒப்பாகும்.

திரிமூர்த்திகளுக்கும் ஒப்பான பலமும் ஆற்றலும் அறிவும் கொண்டிருந்தாலும் ஒரு அரசன் சிறந்த அமைச்சர்களைக் கொண்டு, அவர்களுடைய நல்ல ஆலோசனைகளைக் கேட்டு அவர்களின் சொல்வழியில் செயலாற்றுவதே சிறந்த ஆற்றலாகும்.

நாட்டு மக்களையும் மற்றோர்களையும் அடக்கி ஒடுக்கி ஆள்வதற்கு பதிலாக அன்பினால் அரவணைத்துக் கொண்டு ஆட்சி செய்வது தான் சிறந்த ஆட்சி முறையாகும்.

உலக மக்களை உயிராகவும் அவ்வுயிர்களைத் தாங்கும் உடலாகவும் மன்னன் இருப்பானாகில் அவனுக்கு அறம் தவறாமல் பயன்தரும். உண்மையான அருள் நெறியில் நிற்கும் போது அவ்வரசனுக்கு வேறு வேள்விகள் தேவையில்லை.

இனிய சொல்லினன், ஈகையுள்ளவன், நல்லெண்ணங்களும், ஆராய்ச்சிகளும், முயற்சிகளும், செயல்பாட்டுத் திறன்களும் உள்ளவன், தூய்மையானவன் (புறத்தூய்மையும், அகத்தூய்மையும் உள்ளவன்) சிறந்த குண நலன்களை உடையவன் வென்றியன், நினையும் நீதி நெறி கடவான் என்றால் அத்தகைய மன்னனுக்கு அத்தகைய தொரு நாட்டுத் தலைவனுக்குத் தாழ்வேயில்லை.

அரசன் சீலம் அல்லனவற்றை நீக்க வேண்டும். பொன்னை நிறுக்கும் துலாக்கோலைப் போல தனி நிலை தாங்கி நிற்க வேண்டும். அத்தகைய மன்னர்கள் நல்ல அமைச்சர்களின் கருத்துக்களை நோக்கி அதன்படி நடந்தால் அந்த அரசர்களுக்கு நல்ல பார்வை கிடைக்கும் நல்ல அமைச்சர்கள் அரசனுக்குக் கண்களைப் போன்றவர்களாகும். இவ்வாறெல்லாம் வசிட்டர் இராமனுக்கு அரச நீதியைப் பற்றி எடுத்துக் கூறி முடிவாக

‘‘தூமகேது புவிக்கெனத் தோன்றிய
வாமமேகலை மங்கையரால் வரும்
காமம் இல்லையெனில், கடும் கேடு எனும்
நாமம் இல்லை, நரகமும் இல்லையே”

என்று வசிட்டர் கூறி முடிக்கிறார். தூம கேது என்பது ஒரு வால் நட்சத்திரம். வால் நட்சத்திரம் காணப்பட்டால் பின்னால் ஏதோ ஒரு பெரிய தீமை நிகழ்வதற்கு அறிகுறி என்று கூறுவர். தூமகேது வானில் தோன்றுவதற்கு ஒப்பாக அழகிய மேகலாபரணம் அணிந்த மங்கையரால் ஏற்படும் காமம் கூறப்படுகிறது. அத்தகைய காமத்திற்கு இடம் கொடாமல் அரசன் இருப்பானாகில் அப்போது கடும் கேடுகள் என்னும் அச்சமும் இல்லை நரகமும் இல்லை என்று வசிட்டன் கூறுகிறார்.

ஆட்சிப் பொருப்பில் உள்ளவர்கள் காமம் என்னும் பெருங்காதலைத் தவிர்த்தல் அவசியம் என்பதை அரசியல் அறிவுரையாகவே கம்பன் கூறுவதை இங்கு காண்கிறோம். அரசியல் மற்றும் ஆட்சிப் பொருப்பில் உள்ளவர்களுக்கு ஒழுக்கம் மிகவும் அவசியம் என்பது வலியுறுத்தப்படுகிறது. கம்பன் இக்கருத்தைப் பல இடங்களிலும் எடுத்துக் கூறுகிறார்.

தீயவை யாவையினும் சிறந்த தீயாள்

இராமனுக்குப் பட்டாபிஷேகம் என்னும் திட்டத்தில் கூனி குறுக்கிட்டாள். கூனி என்னும் மந்தரை ஒரு பெண். கைகேயிக்கு மிக நெருக்கமானவள். கைகேயி மீது மிகவும் செல்வாக்கு கொண்டவள். இராமனுடைய முடி சூட்டு விழா பற்றிய செய்தியைக் கேட்டு அயோத்தி நகர மக்கள் எல்லாம் மகிழ்ச்சிக் கடலில் ஆரவாரமாக இருந்த காட்சியில் ''துன்னரும் கொடுமனக் கூனி தோன்றினாள்'' என்று கம்பன் குறிப்பிடுகிறார்.

கூனியைப் பற்றிக் குறிப்பிடும் போது

'தோன்றிய கூனியும் துடிக்கும் நெஞ்சினாள்;
ஊன்றிய வெகுளியாள்; உளைக்கும் உள்ளத்தாள்;
கான்று எரி நயனத்தாள்; கதிக்கும் சொல்லினாள்;
மூன்றுலகினுக்கும் ஓர் இடுக்கண் மூட்டுவாள்;

என்றும் மற்றும்

''வெகுளியின் மடித்த வாயினாள்'' என்றும் இன்னும் ''சூழ்ந்த தீவினை நிகர் கூனி'' என்றும் ''கொடிய கூனி'' என்றும், ''வேதனைக் கூனி'' என்றும் ''தீய மந்தரை'' என்றும் ''வினை நிரம்பிய கூனியை'' என்றும் உள்ளமும் ''கோடிய (வளைந்த) கொடியாள்'' என்றெல்லாம் கம்பன் குறிப்பிடுகிறார். கூனி மிக நுட்பமான பாத்திரம்.

கூனியின் கொதிப்புரைகளைப் பற்றிக் கூறும்போது ''தெழித்தனள், உரப்பினள் (கூச்சலிட்டாள், அதட்டினாள்) சிறுகண் தீ உக விழித்தனள், வெய்து உயிர்த்தனள், (வெந்து, பொருமி, பெருமூச்சுவிட்டாள்) அழித்தனள் (நிலத்திலுள்ள கோலங்களை அழித்தனள்) அழுதனள், அம்பொன் மாலையால் குழித்தனள் நிலத்தை'' என்றெல்லாம் கம்பன் குறிப்பிடுகிறாள்.

கூனி, கைகேயியிடம் சென்ற போது அவள் தூங்கிக் கொண்டிருந்தாள் கூனி அவளை எழுப்பினாள். கம்பன் கைகேயியைப் பற்றி முதலில் ''தெய்வக் கற்பினாள்'' என்றும், ''தூயவள்'' என்றும் குறிப்பிடுகிறார்.

கூனி கூறிய வஞ்சகக் கூற்றுகளுக்கு

''நீதி அல்லவும், நெறிமுறை அல்லவும் நினைந்தாய்,
ஆதி; ஆதலின் அறிவிலி, அடங்குதி''

என்ற கைகேயி அறத்தின் வழியின் நின்று கூனிக்குப் பதில் கூறுவதை, கூனி கூறுவதை மறுப்பதைக் கம்பன் மிகச் சிறப்பாகக் குறிப்பிடுகிறார்.

அத்தகைய கைகேயியும் கூனியின் தொடர்ச்சியான முயற்சியால் வஞ்சகமான சூழ்ச்சியால் மனம் மாறினாள். மண்ணில் வீழ்ந்தாள். பெருமூச்சுவிட்டாள். அப்போது அவளைப் பற்றிக் கம்பன், ''மன்றல் அரும் தொடை மன்னன் ஆவி அன்னாள்'' என்று குறிப்பிடுகிறார். கைகேயியை தசரத மாமன்னன் உயிருக்கு உயிராக நேசித்தான் அதனால் அவள் மன்னனுடைய உயிரைப் போன்றவள்'' என்று கம்பநாடர் குறிப்பிடுகிறார்.

இனி, கைகேயி தனது இருவரங்களைக் குறிப்பிட்டுக் கேட்டபோது

''ஏயவரங்கள் இரண்டில், ஒன்றினால் என்
சேய் உலகாள்வது; சீதை கேள்வன் ஒன்றால்
போய்வனம் ஆள்வது'' எனப் புகன்று நின்றாள்;
தீயவை யாவையினும் சிறந்த தீயாள்''

என்று கம்பநாடர் குறிப்பிடுகிறார்.

தெய்வக் கற்பினாள், தூயவள், மன்னனுக்கு உயிரானவள், இராமனுக்குச் சிறந்த தாயானவள், இப்போது தீயவை யாவையும் சிறந்த தீயவளாக மாறிவிட்டாள் இன்னும்,

"நாகம் எனும் கொடியாள் தன் நாவின் வந்த
சோகம் விடம்தொடரத் துணுக்கம் எய்தா;
ஆகம் அடங்கலும் வெந்து அழிந்து அராவின்
வேகம் அடங்கிய வேழம் என்ன வீழ்ந்தான்"

என்றும்

"பெண் என உட்கும்; பெரும் பழிக்கு நாணும்;
உள்நிறை வெப்பொடு உயிர்த்து உயிர்த்து உலவும்
கண் இலன் ஒப்ப அயர்க்கும்; வன்கை வேல்வெம்
புண் நுழைகிற்க உழக்கும் ஆனை போல்வான்"

என்றும்,

''அஞ்சலள் ஐயனது அல்லல் கண்டும், உள்ளம்
நஞ்சிலள், நாணிலள், என்ன நாணம் ஆமால்,
வஞ்சனை பண்டு மடந்தை வேடம் என்றே
தஞ்சென மாதரை உள்ளலார்கள் தக்கோர்''

என்றும் கம்பர் குறிப்பிடுகிறார்.

சீதை கேள்வன் போய் வனம் ஆள வேண்டும் என்ற மாத்திரத்திலேய நாகம் தீண்டியதைப் போல உணர்ந்து பாம்பு கடித்ததனால் துடிப்பு அடங்கிய வேழம் (யானை) போல தசரதன் வீழ்ந்தான். அதைக் கண்டும் எவ்வித இரக்கமும் காட்டாமல் எதற்கும் அஞ்சாமல் கைகேயி வஞ்சனை பண்டு மடந்தை வேடம் என்றே நின்றாள்'' என்று கம்பர் கூறுகிறார். இங்கு ஒரு மாது தனது கணவனது வீழ்ச்சிக்குக் காரணமாகிறாள்.

பெண்ணால் வந்தது அந்தரம்

தசரதனுக்குக் கைகேயி மீது அளவு கடந்த அன்பும் காதலும் நிறைந்திருந்தது. ஆயினும் இராமனிடம் இருந்த புத்திர பாசம் அதிகம். ''மைந்தன் அலாது உயிர் வேறு இலாத மன்னன் எனவே தனது அன்பு மனைவி கைகேயியிடம் கெஞ்சிக் கேட்கிறான்.

''கண்ணே வேண்டும் என்னினும் ஈயக் கடவேன், என்
உள்நேர் ஆவி வேண்டினும் இன்றே உனதன்றோ?
பெண்ணே! வண்மைக் கேகயன் மானே! பெறுவாயேல்
மண்ணே கொள் நீ மற்றையது ஒன்றும் மற; என்றான்''

என்று தசரதன் கெஞ்சுகிறான். கைகேயி எதற்கும் அசையவில்லை. அதைப் பற்றி ''தன்னேர் இல்லாத்தீயவள் உள்ளம் தடுமாறாள்'' என்ற கைகேயியின் தடுமாற்றம் இல்லாத உள்ளத்தைக் குறிப்பிட்டுக் கம்பன் பேசுகிறார்.

தசரதன் மனம் கலங்குகிறான். அயர்வடைகிறான். மேலும் அதிகமாகத் தளர்ச்சியடைகிறான். ஆயினும் ''நச்சுத்தீயே பெண் உரு அன்றோ'' என்று எண்ணி நாணுகிறான். உன் மகன் நாடாளட்டும் இந்நிலமெல்லாம் உன் வசமாகட்டும். என் உயிரைப் போன்ற இராமனைக் காட்டுக்கனுப்பாதே. அவனைப் பிரிந்தால் நான் உயிர் வாழ மாட்டேன். ''நங்காய் உன் அபயம் என் உயிர்'' என்று வாழ்வின் விளிம்பில் நின்று தசரதன் கெஞ்சிக் கெஞ்சிக் கைகேயியிடம் மன்றாடிக் கேட்கிறான். தன்னுடைய கணவனுடைய

உயிர் பிரிந்து விடும் என்னும் நிலையிலும் கைகேயி என்னும் பெண் தனது நிலையை விட்டுக் கொடுக்கவில்லை. அவளுடைய சினம் தணியவில்லை.

''மரந்தான் என்னும் நெஞ்சினள், நாணாள், வசை பாராள் என்று கவிஞன் குறிப்பிடுகிறார்.

இனி வேறு வழியில்லை. தசரதன் அழுது புலம்பிப் பேசுகிறான்.

''ஏவம் பாராய்! இல்முறை நோக்காய்! அறம் எண்ணாய்!
ஆ என்பாயோ! அல்லை மனத்தால் அருள் கொன்றாய்!
நா அம்பால் என் ஆருயிர் உண்டாய்! இனிஞானம்
பாவம் பாராது இன் உயிர் கொள்ளப் படுகின்றாய்''

கைகேயியிடம் பெண்ணே நீ உன் குற்றத்தை எண்ண மறுக்கிறாய். நீ நற்குடியில் பிறந்தவள். உன் இல் முறையை அதன் பெருமையை நினைக்க மறுக்கிறாய். அறத்தை எண்ண மறுக்கிறாய். கொடிய மனத்தால் அருள் கொன்றாய். உனது சொல் அம்புகளால் என்னைக் கொல்கிறாய். இனி இந்த உலகம் நீ என்னைக் கொன்றதாகப் பழி சுமத்தும் நற்குடியில் பிறந்த பெண்ணின் நெறிமுறையை இழந்து விட்டாய் என்றெல்லாம் தசரதன் கூறுகிறான். இன்னும் என் மனை வாழும் பெண்ணால் எனக்கு ஆயுள் முடிவு ஏற்பட்டு விட்டது'' என்று கூறுகிறான்.

''மண் ஆள்கின்றார் ஆகி, வலத்தால் மதியால் வைத்து
எண்ணா நின்றார் யாரையும் எல்லா இகலாலும்,
விண்ணோர் காறும் வென்ற எனக்கு, என்மனை வாழும்,
பெண்ணால் வந்தது அந்தரம், என்னப் பெறுவேனோ?

என்று கம்பன் மிக நுட்பமாகக் குறிப்பிடுகிறார்.

முடி சூட்டுவதற்கான நல்ல நேரம் வந்துவிட்டது. அரசனை அழைத்து வரும்படி சுமந்திரனிடம் வசிட்டன் கூறினார். சுமந்திரன் அரண்மனைக்குச் சென்றான். அங்கு அரசனைக் காணவில்லை. அங்கிருந்து கைகேயியின் மாளிகைக்குச் சென்றான்.

பெண்டிரின் கூற்றம் அன்னாள்

அங்கிருந்த கைகேயி சுமந்திரனிடம், ''இராமனை இங்கு அழைத்து வரவும்'' என்று ஆணையிட்டாள். இதைப் பற்றிக் கூறும் போது கம்பன்

''விண்தொட நிவந்த கோயில் வேந்தர் தம் வேந்தன் தன்னைக் கண்டிலன்; வினவக் கேட்டான்; கைகேயி கோயில் நண்ணித் தொண்டைவாய் மடந்தை மாரில் சொல்ல, மற்று அவரும் சொல்ல, பெண்டிரின் கூற்றம் அன்னாள், பிள்ளையைக் கொணர்க என்றாள்''

என்று இங்கு கைகேயியைப் பெண்டிரின் கூற்றம் அன்னாள் என்று கம்பர் குறிப்பிடுகிறார்.

கைகேயி இராமனை அழைத்து வரச் சொல்கிறான். இராமன் வருகிறான். இராமனிடம் கைகேயி;

''ஆழி சூழ் உலகம் எல்லாம் பரதனே ஆள, நீ போய்த்
தாழ் இரும் சடைகள் தாங்கித், தாங்கரும் தவ மேற்கொண்டு,
பூழி வெம் கானம் நண்ணிப், புண்ணியத் துறைகள் ஆடி,
ஏழிரண்டு ஆண்டில் வா என்று இயம்பினன் அரசன்; என்றாள்''

என்று கூறுகிறாள்.

கம்பனுடைய இந்தப் பாடல் தமிழ் உலகில் மிகவும் புகழ் மிக்க பாடலாகும்.

இங்கு ஒரு அருமையான காட்சி நம்முன் காட்டப்படுகிறது. ஆழி சூழ் உலகம் தாழிருஞ் சடைகள், தவம், கானம், புண்ணியத் துறைகள் அடங்கிய ஒரு அற்புதமான காட்சியைக் கம்ப நாடர் நமக்கு முன்பு காட்டுகிறார்.

தன்னிடம் அரசனைத் தேடி வந்த சுமந்திரனிடம் கைகேயி ''பிள்ளையைக் கொணர்க'' என்று கூறினாள். இது பற்றிக் கம்பன் ''பெண்டிரின் கூற்றம் அன்னாள் பிள்ளையைக் கொணர்க' என்றாள் என்று கூறுகிறார்.

சிற்றவைதானும் ஆங்கே கொணர்க எனச் செப்பினாள், அப் பொன்தட மகுடம் சூடப் பொதிது விரைவில் என்று இராமனிடம் போய் சுமந்திரன் கூறுகிறான். ''இராமனும் திருமாலைத் தொழுது அரச வெள்ளம் கடல் எனத் தன்னைத் தொடர தெய்வ கீதங்கள் பாடத் தேவரும் மகிழ்ந்து வாழ்த்தத் தையலார் இரைத்து நோக்கத்தார் அணித் தேரில் சென்றான்.

இராமன் தனது தேரில் அயோத்தியின் மாடவீதியில் செல்லும் போது மக்கள் பலரும் மகிழ்ச்சியுடன் பேசுகிறார்கள். கைகேயி அழைத்துள்ளாள் என்பதையும் கேள்விப்பட்டு மக்கள் உற்சாகமாகப் பேசிக் கொள்கிறார்கள்.

இராமன் குழந்தைப் பருவத்திலிருந்து தனது தாய் கோசலையிடம் வளரவில்லை. கைகேயி தான் அவனைப் பேணி வளர்த்தாள். எனவே அவன் இனி நாட்டை ஆளப் போகிறான் என்பதைக் கேட்டுப் பெரு மகிழ்ச்சியடைந்து அவனைத் தன்னிடம் அழைத்திருக்கிறாள். அது இயற்கை தானே என்றெல்லாம் பேசிக் கொள்கிறார்கள், என்று கவிப் பேரரசு குறிப்பிடுகிறார்.

''தாய் கையில் வளர்ந்திலன், வளர்த்தது தவத்தால்
கேகையன் மடந்தை; கிளர்ஞாலம் இவன்ஆள
ஈகையில் உவந்தவள், இயற்கை இது என்றால்
தோகை அவள் பேர்உவகை சொல்லல் அரிது! என்பார்''

என்பது கம்பரது பாடல்.

இராமன் கைகேயி முன்பு போய் நிற்கிறான்,

"நின்றவன் தன்னை நோக்கி. இரும்பினால் இயன்ற நெஞ்சின்
கொன்றுழல் கூற்றம் என்னும் பெயர் இன்றிக் கொடுமை பூண்டாள்,
இன்றெனக்கு உரைத்தல் ஆவது ஏயதே என்னின் ஆகும்;
ஒன்றுனக்கு உந்தை மைந்த உரைப்பது ஓர் உரை உண்டு; என்றாள்''

இவ்வாறு முத்தாய்ப்பு வைத்துப் பேசுகிறாள்.

இராமனோ எந்த விதமான களங்கமும் இல்லாமல் ''தந்தையும் தாயும் நீரே தலை நின்றேன் பணிமின்'' என்று கூறி விட்டான். அப்போது தான் கைகேயி ''ஆழிசூழ் உலக மெல்லாம் பரதனே ஆள'' என்று தொடங்கி பதினான்கு ஆண்டுகள் வனவாசம் செய்து விட்டு வரும்படி அரசன் ஆணையிட்டுள்ளதாகக் கூறுகிறாள்.

இராமன் இன்முகத்துடன்

''மன்னவன் பணி அன்றாகில் நும் பணி மறுப்பனோ? என்
பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்ற தன்றோ?
என் இனி உறுதி அப்பால்; இப்பணி தலைமேல் கொண்டேன்;
மின் ஒளிர் கானம் இன்றே போகின்றேன், விடையும் கொண்டேன்"

என்று கூறி அப்பொழுதே கானகம் செல்ல விடையும் பெற்றான்.

இங்கு தசரதன் கைகேயி அயோத்தி மக்கள் இராமன் ஆகியோரது மன நிலைகளையும் கைகேயியின் உறுதிமிக்க நிலைபாட்டையும் கம்பன் மிக அற்புதமாக எடுத்துக் கூறுவதைக் காண்கிறோம்.

இராமன் மரஉரி தரித்துக் கொண்டு வனம் செல்லத் தயாராகித் தனது தாயிடம் விடைபெற வருகிறான். அவனுடைய தவக்

கோலத்தைக் கண்டு கோசலை ஐயம் கொண்டு நீ நெடுமுடி புனைதற்கு இடையூறு ஏதேனும் உண்டோ என்று கேட்கிறாள்.

கோசலை களங்கமற்றவள். மக்கள் நால்வரிலும் எந்தவிதமான வேறுபாடும் காணாதவள் இராமனும் தூய சிந்தையுடன் தனது தாயிடம் ''நின் காதல் திருமகன் பங்கமில் குணத்து எம்பி பரதனே துங்க மாமுடி சூடுகின்றான்'' என்று தாயிடம் கூறுகிறான். கோசலையும் எந்த வேறுபாடும் காட்டாமல்

''முறைமை அன்றென்பது ஒன்றுண்டு; மும்மையின்
நிறை குணத்தவன், நின்னினும் நல்லனால்
குறைவிலன்; எனக்கூறினள் நால்வர்க்கும்
மறுவில் அன்பினில் வேற்றுமை மாற்றினான்''

''என்று பின்னரும், மன்னவன் ஏவியது
அன்று எனாமை, மகனே உனக்கு அறன்;
நன்று நும்பிக்கு நானிலம் நீ கொடுத்து
ஒன்றி வாழுதி; ஊழிபல; என்றான்''

இவ்வாறு கூறி இராமனை வாழ்த்தினாள்.

அதன் பின்னர் இராமன் தனது தாயிடம் ''நான் நன்னெறி உய்ப்பதற்கு மற்றுமொரு பணியையும் மன்னவன் ஏவியுள்ளான்'' என்று கூறினான் நான் ஏழிரண்டு ஆண்டுகள் காட்டிற்குச் சென்று திரும்ப வேண்டும் என்று கூறினான். அதைக் கேட்ட உடனே கோசலை துன்பமும் துயரமும் அடைந்தாள். அந்த வார்த்தைகள் அக்கினியைப் போல் அவளுடைய காதுகளில் விழுந்து, அவளைத் துன்புறுத்தியது. அவள் ஏங்கினாள், இளைத்தாள், திகைத்தாள், மனம் வீங்கினாள், விம்மினாள், விழுந்தாள். அவளுடைய தாயுள்ளம் கலங்கியது

''வஞ்சமோ மகனே! உனை மாநிலம்
தஞ்சம் ஆக நீ தாங்கு என்ற வாசகம்;
நஞ்சமோ இனி நான் உயிர் வாழ்வெனோ!
அஞ்சும்! அஞ்சும்! என் ஆருயிர் அஞ்சும்! ஆல்''

என்று கலங்கித் துடித்துப் பேசுகிறாள். தன் தாய்மை வயிற்றைப் பிசைந்து அழுது பெருமூச்சு விடுகிறாள், விழுங்குகிறாள். புழுங்குகிறாள் என்று கம்பன் குறிப்பிடுகிறார்.

கன்று பிரிந்துழிக் கறவை ஒப்பக் கரைந்து கலங்கினாள். இராமன் தாய்க்கு ஆறுதல் கூறுகிறான். தனது தாயை அருங்கற்பினோய்

என்று குறிப்பிட்டு மெய்யின் பக்கம் உள்ள நமது வேந்தனை பொய்யின் பக்க முள்ளவனாக ஆக்கிவிடுவாயா அருங்கற்பினோய் என்று தனது தந்தையின் வாக்கைக் காப்பாற்றத் துணையாக இருக்கும்படி தாயைக் கேட்டுக் கொள்கிறான்.

அத்துடன் இராமன் உறுதியான வார்த்தைகளில்,

''சிறந்த தம்பி திரு உற, எந்தையை
மறந்தும் பொய்யிலன் ஆக்கி, வனத்திடை
உறைந்து தீரும் உறுதி பெற்றேன்; இதின்
பிறந்து யான் பெறும் பேறென்பது யாவதே''

என்று தனது தாயிடம் கூறுகிறான்.

''அப்படியாயின் நானும் உன்னுடன் காட்டிற்கு வருகிறேன், என்று கோசலை கூறுகிறாள். அப்போது இராமன் ஒரு பெண் தனது கணவன் பக்கம் இருந்து அவனைக் காப்பதே அறம் என்பதைச் சுட்டிக் காட்டுகிறான்.

என்னைப் பிரிந்து துன்பக்கடலில் இருந்து வருந்தும் மன்னர் மன்னனுக்கு ஆறுதல் கூறாமல் அன்னையே நீ என்னுடன் வருவதாகக் கூறலாமா? நீ அறத்தைப் பார்க்க வேண்டாமா? உன் கடமைகளைச் செய்ய வேண்டாமா? மன்னர் ஆட்சிப் பொருப்பை மகன் பரதனிடம் ஒப்படைத்து விட்டுத் தவம் மேற்கொள்ளும் போது தாங்கள் அவருக்கு அருகில் இருந்து பணிவிடைகள் செய்ய வேண்டாமா? நான் பதினான்கு ஆண்டுகளை பதினான்கு இரவு பகல்களாக முடித்து வருவேன். தவம் செய்து தேவர்களும் முனிவர்களும் உயர்ந்ததைப் போல மேன்மையடைந்ததைப் போல நானும் மேன்மையடைந்து திரும்புவேன்.

நான் விசுவாமித்திர முனிவரிடம் கற்ற வித்தைகளையும் பின்னர் அடைந்த கல்வி அறிவுச் செல்வங்களையும் எல்லாம் பயன்படுத்தி தவம் செய்யும் முனிவர்களுக்கும் பாதுகாப்புக் கொடுத்து அவர்களுடைய அருளையும் ஆசியையும் பெற்று இமையோர் அன்பையும் பெற்றுத் திரும்புவேன்'' என்றெல்லாம் பல வாசகங்களையும் தன் தாயிடம் எடுத்துக் கூறி அவளை சமாதானப்படுத்துகிறான்.

இராமன் எத்தனை சொல்லியும் அமைதியடையாமல் கோசலை ''பரதன் நாட்டை ஆளட்டும் இராமன் வனம் செல்ல வேண்டாம். இதை மன்னனிடம் கூறப்போகிறேன் என்று கூறி மன்னன் இருக்கும் கைகேயியின் அரண்மனைக்குச் செல்கிறாள். அங்கு அவள் கண்ட காட்சி அவளை நிலைகுலைய வைத்துவிட்டது.

தசரத மன்னன் தரையில் வீழ்ந்து கிடந்தான். அதைக் கண்டவுடன் உயிர் நீங்கிய காலத்தில் உடல் விழுவதைப் போல கோசலையும் தரையில் வீழ்ந்தாள், அலறினாள். உலகின் தவமே, திருவின் திருவே, கலையின் கடலே, நெறியார் மறையின் நிலையே, கருணாலயனே, என்றெல்லாம் கூறி அழத் தொடங்கினாள்.

இராமனைக் காணாமல் அரசோர் திகைத்தனர். கோசலையின் அழுகுரல் கேட்டு வசிட்டன் வந்து கீழே விழுந்து கிடந்த அரசனைத் தூக்கி நிறுத்தி நடந்ததை அறிந்து அரசனுக்கு ஆறுதல் கூறத் தொடங்கினான்.

கோசலையின் அழுகுரல் வசிட்டன் தலையீடு இதைக் கண்டு கைகேயி வெறுப்புடன் கூடிய முகத் தோற்றத்தில் நின்றாள். கோசலையும் பரதன் நாடாளட்டும் இராமன் வனம் செல்ல வேண்டாம் என்று வேண்டினாள். வசிட்டனும் கைகேயியைப் பார்த்து இனி உன் புதல்வர்க்கு அரசும் ஏனையோர்க்கு உயிரும் மனுவின் வழி வந்த உன் கணவருக்கு உயிரும் உதவி, வசை நீங்கிப் புகழ் அடைவாய்'' என்று வேண்டினான்.

கைகேயியோ இன்னும் பிடிவாதத்துடன் மன்னன் தனது வாக்குறுதியை மீறி உண்மையிலிருந்து விலகினால் அவருடைய சொல் பொய்யாதிருக்கும் பொருட்டு நான் எனது வாழ்வை முடித்துக் கொள்கிறேன் என்று கூறிவிட்டாள்.

வசிட்டனும் கைகேயியிடம் எவ்வளவோ எடுத்துக் கூறியும் இது முறையன்று என வலியுறுத்திக் கூறியும் அவள் கேட்கவில்லை. எதற்கும் அசைந்து கொடுக்கவில்லை.

உனது கணவன் உயிரைவிட்டு விடுவான் உலகம் ஏற்காது உன் மீது பழி வந்து சேரும் என எவ்வளவு எடுத்துக் கூறியும் நீ உணர மறுக்கிறாய். அதற்கு மேலும் நான் கூறுவதற்கு என்ன இருக்கிறது, நீ செய்வது முறையல்ல.

''கொழுநன் துஞ்சும் எனவும் கொள்ளாது உலகம் எனவும்,
பழி நின்று உயரும் எனவும் பாவம் உளதாம் எனவும்,
ஒழிகின்றிலை; அன்றியும் ஒன்று உணர்கின்றிலை; யான் இனிமேல்
மொழிகின்றன என்? என்னா முனியும் முறையன்று என்றான்.''

என்று முனிவர் எடுத்துக் கூறினார்.

தயரத மாமன்னன் துக்கம் தாளாமல் துவண்ட நிலையில் மரண வாக்குமூலமாகக் கைகேயியைக் கடிந்து கூறுகிறான்.

பாவி உன் உண்மையான உள்ளத்தை உணர்ந்து கொண்டேன். நீ முன்பு கனிவாகப் பேசியதெல்லாம் விஷம். அதை நான் நெடு நாள் உண்டு விட்டேன். இப்போது நீ என் உயிரையே உண்டு விட்டாய். நான் உன்னை என் தேவியாகக் கொள்ளவில்லை. ஒரு கூட்டத்தைத் தேடிக் கொண்டேன். எந்தப் பழி பாவத்திற்கும் நீ நாணவில்லை. உன் கழுத்தில் நான் கட்டிய தாலிக் கயிறு உன் மகன் முடிசூட்டிக் கொள்வதற்கக் கட்டிக் கொள்ளும் காப்புக் கயிறாகட்டும்''. இவ்வாறு பலவாறாகக் கூறி இவள் என் தாரம் அல்லள். இவளைத் துறந்தேன். இனி அப்பரதனும் என் மகனில்லை. எனக்கு அவன் இறுதிக் கடனும் செய்ய வேண்டாம்.

''இன்னே பலவும் பகர்வான் இரங்காதாளை நோக்கிச்
சொன்னான் இன்றே, இவள் என் தாரம் அல்லள் துறந்தேன்
மன்னே ஆவான் வரும் அப்பரதன் தனையும் மகன் என்று
உன்னேன்; முனிவா! அவனும் ஆகான் உரிமைக்கு; என்றான்''

என்று தசரதன் கூறியதைக் கம்பன் மிகவும் நுட்பமாக நடந்த நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுகிறார்.



6. காதல் முதிரக் கருத்தழிந்தான்

தசரதன் கைகேயி மீது அளவு கடந்த அன்பும் காதலும் கொண்டிருந்தான். கடைசியில் அவளை நஞ்சு என்றும், கூற்றம் என்றும், அவளைத் தன் மனைவி அல்ல வென்றும், அவளுடைய மகன் பரதன் தன் மகன் இல்லையென்றும் வெறுப்படைந்துக் கூறிவிட்டான்.

வசிட்டன் அனைவரும் கூடியிருந்த அரசவைக்கு வந்தான், ''பரதற்கு நாடு இராமற்குக் காடு'' என்னும் செய்தியைக் கூறினார்.

பொது மக்கள் விதியை நொந்து அழுது புலம்பினர். இராமன் வனம் செல்கிறான் என்னும் செய்தியைக் கேட்டபோது உலகில் உள்ள உயிர்களெல்லாம் அழுதனவென்று ஒவ்வொன்றையும் குறிப்பிட்டுக் கம்பன் கூறுவது காவியச் சிறப்பு மிக்க கவிதை வரிகளாகும்.

கிள்ளையோடு பூவை (கிளிகளும் நாகண வாய்ப்புட்களும்) அழுத கிளர் மாடத்து உள் உறையும் பூசை (பூனை) அழுத ஒரு அறியாப் பிள்ளை அழுத, ஆவும் அழுத, அதன் கன்று அழுத, அன்றலந்த பூவும் அழுத, புனல் புள் அழுத, கள்ஒழுகும் காவும் அழுத, களிறு அழுத, கால் வயப்போர்

மாவும் (குதிரைகளும்) அழுத என்று உலகின் அத்தனையும் அழுதன என்று கம்பனார் தனது கவிதைகளில் கண்கலங்கக் குறிப்பிடுகிறார்.

அயோத்தி மக்கள் தங்கள் மன்னனைப் பற்றி ''ஆதி அரசன் அரும் கேகையன் மகள் மேல் காதல் முதிரக் கருத்தழிந்தான்'' என்று குறிப்பிடுகிறார்கள்.

காதல் முதிர்ந்து அது பெருங்காதலாகும் போது கருத்தும் அறிவும் அழிந்து விடுகிறது என்பதை மக்கள் திருவாக்காகக் கம்பன் சிறப்பாகக் குறிப்பிடுகிறார்.

பெண்ணாட்டம் ஒட்டேன்

பரதனுக்கு நாடு இராமனுக்கு காடு என்னும் செய்தியைக் கேட்ட உடனேயே இலக்குவன் சீறியெழுந்தான், துடித்தான். இலக்குவன் ஆதி சேடனின் அவதாரம். அக்கிரமம் எங்கு நடந்தாலும் அதைச் சகிக்க மாட்டான், சீறி எழுவான். அதே சமயம் புலனடக்கமும் தியாக உணர்வும், அர்ப்பணிப்பும் நிறைந்தவன் இலக்குவனுடைய சீற்றத்தின் வேகத்தைக் குறித்து,

''கண்ணில் கடைத்தீ உக; நெற்றியில் கற்றை நாற,
விண்ணில் சுடரும் கெட, மெய்யினில் நீர் விரிப்ப
உள்நிற்கும் உயிர்ப்பு எனும் ஊதை பிறக்க நின்ற
அண்ணல் பெரியோன் தனது ஆதியின் மூர்த்தி ஒத்தான்''

என்று கம்பநாடர் மிக அருமையாகக் குறிப்பிடுகிறார்.

கொடுமையான செய்தியைக் கேட்ட இலக்குவன் ''நங்கைக்கு அறிவின் திறம் நன்றிது'' என்று கைகேயியைச் சாடுகிறான். தனது தந்தை தசரதச் சக்கரவர்த்தி பெண்ணாட்டம் அதிகம் கொண்ட காரணத்தால் இந்த நிலை ஏற்பட்டு விட்டது என்று கருதுகிறான். நான் இவர்களுடைய முடிவை முறித்து இராமனுக்கு முடிசூட்டுவேன் என்று கோபக்குரலில் பேசுகிறான். நான் இப்பெண்களின் கருத்துக்களுக்கு இடம் கொடுக்க மாட்டேன். யார் வந்தாலும் விட மாட்டேன் என்று பேசுகிறான்.

''விண்ணாட்டவர், மண்ணவர், விஞ்சையர், நாகர் மற்றும்
எண் நாட்டவர், யாவரும் நிற்க ஓர் மூவராகி
மண் நாட்டுனர், காக்குனர், நீக்குனர், வந்த போதும்;
பெண்ணாட்டம் ஒட்டேன் இனிப்பேர் உலகத்துள்; அன்னா

என்று பேசுகிறான். கம்பன் இங்கு இலக்குவன் நிலையைப் பற்றி மிக அருமையாக விவரித்துக் கூறுகிறார்.

கோபமும் ஆவேசமும் கொண்ட இலக்குவனை இராமன் அமைதிப் படுத்துகிறான். நீண்ட அறிவுரைகளுக்குப் பின்னர் இலக்குவன் சீற்றம் தணிந்தான். இருவரும் சுமித்திரையிடம் சென்றனர். அங்கு இராமன் இலக்குவனிடம் ''தாய்மார்களும் தந்தையும் மிகவும் துயரம் அடைந்துள்ளனர் என்னையும் பிரிந்துள்ளனர். அவர்கள் மேலும் துன்ப மடையாதபடி நீ எனக்கு பதிலாக அவர்களுடன் இருந்து உதவுவாய்'' என்று கூறினான்.

''அன்னையர் அனைவரும் ஆழ்வேந்தனும்
முன்னையர் அல்லர்; வெம்துயரில் மூழ்கினார்;
என்னையும் பிரிந்தனர்; இடர் உறாவகை
உன்னை நீ என் பொருட்டு உதவுவாய்'' என்றான்

என்று கேட்டுக் கொண்டான்.

இந்தச் சொற்களைக் கேட்டவுடன் இலக்குவன் திடுக்கிட்டான். அவன் எப்போதும் இராமனைப் பிரிந்ததில்லை. இலக்குவனின் தாய் சுமித்திரை கூட அவனிடம் ''மகனே இவன் பின் செல்தம்பி எனும் படியன்று அடியாரினும் ஏவல் செய்து மன்னும் நகர்க்கே இவன் வந்திடில் வா, அதன்றேல் முன்னம் முடி'' என்றல்லவா அறிவுரை கூறி விடை கொடுத்தாள்.

இலக்குவன் இராமன் கூறிய சொற்களைக் கேட்டு மிகவும் வருத்தமுற்று ''நான் என்ன பிழை செய்தேன் நீ இல்லாமல் நான் எப்படியிருப்பேன். நீர் இருப்பதால் தானே அதில் மீனும், அந்நீருக்கு நீலநிறமும் இருக்கிறது. தனு இருப்பதால் தானே அதற்குரிய நாரும் இருக்கிறது. யார் இருப்பால் நானும் சீதையும் உள்ளோம். அதைக் கூறுவாயாக'' என்று மனம் வருந்திக் கேள்வியை எழுப்புகிறான். கடைசியாக.

''ஒரு பெண்ணுடைய சொல்கேட்டு நிலம் நடுங்கும்படி ஒரு கொடுஞ் செயலை நடத்தி உன்னைக் காட்டுக்கு அனுப்பிவிட்டு இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கும் உண்மையான ஒரு மன்னனுடைய மற்றொரு மைந்தன் தானே இவன் என்று என்னைப் பிரித்துப் புறக்கணித்து இவ்வாறு கூறுகிறாயா? என்று சுருக்கெனக் கேட்டான்.

அதற்கு மேல் இராமன் ஒன்றும் பேசவில்லை. கண்ணீர் நிறைந்த கண்களுடன் இருந்த இலக்குவனை இராமன் கண்டான். அமைதியானான். இலக்குவன் கூறிய சொற்கள் கம்பன் கவிதையின் படி,

''பைந்தொடிஒருத்தி சொல் கொண்டு, பார்மகள்
நைந்துயிர் நடுங்கவும் நடத்திகான் எனா
உய்ந்தனன் இருந்தனன் உண்மை காவலன்;
மைந்தன் என்று இனைய சொல் வழங்கினாய்; எனா''

என்பதாகும். இங்கு இலக்குவன் மீண்டும்

''பைந்தொடி ஒருத்தி சொல் கேட்டு உண்மைக் காவலன் இவ்வாறு செய்தனன்'' என்று குறிப்பிடுவது கூர்ந்து கவனிக்கத் தக்கதாகும்.

இவ்வாறாகத் தசரத மன்னன் தனது இளைய மனைவியான கைகேயியிடம் அளவற்ற அன்பும் காதலும் அது பெருங்காதலுமாகக் கொண்டிருந்த காரணத்தாலும் இருவரங்களைக் கொடுத்து அவைகளை மீற முடியாத காரணத்தாலும் கைகேயியின் பிடிவாதமும் தளராமல் கைகேயில் புதிய திருப்பம் ஏற்பட்டு இராமன் முடிஇன்றிக் காடு செல்கிறான்.

கைகேயின் திருப்பம் என்னும் விளைவிற்கு இங்கு தசரத மன்னனுடைய பெருங்காதலும் ஒரு காரணமாகிறது.

இந்த நிகழ்ச்சிகளின் முடிவாகக் கைகேயி இராமனை அழைத்து

**''ஆழ்சூழ் உலகம் எல்லாம் பரதனே ஆள, நீபோய்த்
தாழ் இரும் சடைகள் தாங்கித் தாங்கரும் தவம் மேற்கொண்டு
பூழிவெம்கானம் நண்ணிப்புண்ணியத் துறைகள் ஆடி,
ஏழிரண்டு ஆண்டில் வா என்று இயம்பினன் அரசன்'' என்றாள்.**

இங்கு கைகேயி அரசனையும் பின்னுக்குத் தள்ளி அவ்வரசனுக்கு மேற்பட்ட அதிகாரத்துடன் அல்லது தானே அந்த அதிகாரத்தை எடுத்துக் கொண்டு இராமனுக்கு ஆணையிடுகிறாள்.

இராமனும் "மன்னவன் பணி அன்றாகில் நும் பணி மறுப்பனோ'' என்று கூறி அந்த ஆணையை ஏற்று,



**''தையல் தன் கற்பும், தன் தகவும் தம்பியும்
மையறு கருணையும், உணர்வும், வாய்மையும்
செய்யதன் வில்லுமே சேமமாகக் கொண்டு
ஐயனும் போயினான் அல்லின் நாப்பணே!''**

என்று கம்பர் பிரான் கூறும்படியாக அயோத்தியை விட்டு நீங்கி கானகம் செல்கிறான்.

இவ்வாறாக இராமபிரானுடைய அவதாரப் பெருமைகளைக் கூறும் ஒரு அற்புதமான தெய்வீக நாடகத்தின் ஒரு பகுதி நிறைவு பெறுகிறது.

❖❖❖

7. வனவாசம் தொடங்கியது

இராமபிரானின் வனவாசம் தொடங்கியது. மூவரும் குகனை சந்தித்துக் கங்கையைக் கடந்துப் பரத்துவாசன் ஆசிரமத்தை அடைந்தனர். அங்கு ஒரு நாள் தங்கி விட்டுச் சித்திர கூட பர்வதத்தின் அருகில் சென்றனர். அங்கு சூழ்ந்திருந்த அற்புதமான அழகிய ரம்யமான இயற்கைக் காட்சிகளை இராமபிராமன் சீதாபிராட்டிக்குக் காட்டி மகிழ்ந்தார்.

இராமனும் சீதையும் ஒருவருக்கொருவர் அளவுக்குமேல் நேசித்தனர். அன்பும் காதலும் கொண்டிருந்தனர். இராமன் சீதையை ''ஒருவில் பெண்மை என்றும் உறைக்கின்ற உடலினுக்கு உயிரே'' என்றும் 'மடந்தை மார்க்கு ஒரு திலகமே'' என்றும் ''குழுவு நுண்துளை வேயினும் குறிநரம்பு எறிவுற்று எழுவு தள் தமிழ்யாழினும் இனிய சொல் கிளியே'' என்றெல்லாம் குறிப்பிட்டு கானகத்தில் உள்ள பறவையினங்களும் வண்டினங்களும் விலங்கினங் களும் சேர்ந்து மகிழ்ந்து இருப்பதை மகிழ்ச்சியுடன் எடுத்து கூறுகிறான்.

மேலும் சீதை காட்டு வழியே நடந்து செல்வதால் அவளது கால்கள் துன்பம் அடைந்தன. இலக்குவன் பர்னக சாலையை அமைக்க அரும் பணியாற்றிய போது அவனுடைய கைகள் துன்பமடைந்தன என்று குறிப்பிட்டு வருத்தப்படுகிறான்.

''மேவு கானம் மிதிலையர் கோன் மகள்
பூவின் மெல்லிய பாதமும் போந்தன;
தாவில் எம்பிகை சாலை சமைத்தன;
யாவை யாதும் இலார்க்கு இயையாதவே''

என்று கம்பன் குறிப்பிடுகிறான்.

யாதும் இலார்க்கு அதாவது ஏழ்மையடைந்தவர்களுக்கு இப்படிப்பட்டத் துன்பங்கள் ஏற்படுகின்றன என்று கவிஞர் குறிப்பிடுகிறார்.

ஒரு மகள் காதலின் உலகை நோய் செய்த பெருமகன்

பரதன் இராமனைத் தேடிக்கொண்டு வனத்தை நோக்கித் தன் படைகளுடன் புறப்படுகிறான். குகனை சந்தித்து அவன் உதவியால் கங்கையைக் கடக்கிறான். பரத்துவாசனுடைய ஆசிரமத்தில் தங்கி விட்டு மறுநாள் காலை இராமன் தங்கியிருக்கும் இடத்தை நோக்கிப் பரதன் தன்படை சூழச் செல்கிறான்.

இலக்குவன் தூரத்திலிருந்து ஒரு குன்றின் மேலிருந்து பரதனையும் அவனுடைய படைகளையும் காண்கிறான். பரதன் மீது சந்தேகப் படுகிறான். இராமன் மீது போர் தொடுக்கவே இப்பெரும் படைகளுடன் வருகிறான் என்று தவறாகக் கருதுகிறான். இராமனிடம் வேகமாகச் சென்று ''மதித்திலன் பரதன் நின் மேல் வந்தான் மதிள் பதிப்பெரும் சேனையின் பரப்பினான்'' என்று கூறுகிறான். மேலும்

''ஒரு மகள் காதலின், உலகை நோய்செய்த
பெருமகன் ஏவலின், பரதன் தான் பெறும்
இருநிலம் ஆள்கைவிட்டு, இன்றறென் ஏவலால்
அருநரகு ஆள்வது காண்டி ஆழியாய்!''

என்றும் இலக்குவன் கூறுகிறான்.

ஒரு பெண்ணின் மீது வைத்திருந்த பெருங்காதலால் இந்த உலகைத் துன்புறுத்திய பெருமகன் அந்தத் தசரதன், அவன் ஏவலால் பரதன் நம் மீது படை எடுத்து வருகிறான். அவனை இவ்விரு நிலமும் ஆளவிடாமல் அருநரகு அனுப்பிவைக்கிறேன் பார்'' என்று இலக்குவன் கடுங்கோபத்துடன் இராமனிடம் பேசுகிறான்.

இங்கு மீண்டும் இலக்குவன் தசரதனைப் பற்றிக் குறிப்பிடும் போது ''ஒரு மகள் காதலின் உலகை நோய் செய்த பெருமகன்'' ஒரு பெண்ணின் மீதுவைத்திருந்த பெருங்காதலால் உலகைத் துன்புறுத்திய பெருமன்னன் என்று குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

மாதரால் வந்த செய்கை

இராமனும் சீதையும் இலக்குவனும் காடுகள், ஆறுகள், மலைகள் பலவற்றையும் கடந்து தங்கள் பயணமாக வந்து கொண்டிருந்தனர். வழியில் சடாயு என்னும் கழுகு வேந்தனைக் கண்டனர். அவர்கள் ஒருவருக்கொருவர் அறிமுகமாகித் தெரிந்து கொண்டனர்.

கழுகரசன் தசரதனுக்கு உற்ற நண்பன், இளைய சகோதரனைப் போன்றவன். இராம இலக்குவர்களை தசரதன் மைந்தர் என்று கேள்விப் பட்டவுடன் அவர்களை அன்புடன் தழுவிக் கொண்டான். தசரதனுடைய நலனையும் நல்லாட்சியையும் பற்றி வினவினான். தசரதன் காலமாகி விட்டான், என்பதைப் பற்றிக் கேள்விப்பட்டு மனம் வருந்தினான்.

வேந்தன் விண் அடைந்துவிட்டான் என்றால் நீங்கள் நாட்டை ஆளாது காட்டிற்கு வந்தக் காரணம் என்னவென்றுக் கழுகரசன் கேட்டான். இராமன் நேடிரயாக அக்கேள்விக்குப் பதில் கூறாமல் தம்பியை நோக்கினான். இலக்குவன் ''ஹாதரால் வந்த செய்கை'' என்று நடந்த கதை முழுவதையும் விவரமாக எடுத்துக் கூறினான். அதைப்பற்றி,

''தாதை கூறலும், தம்பியை நோக்கினான்
சீதை கேள்வன்; அவனும், தன் சிற்றவை
மாதரால் வந்த செய்கை, வம்பிலா
ஓத வேலை ஒழிவின்று உணர்த்தினான்''

என்பதைக் கம்பன் தனது கவிதை மூலம் உணர்த்தியுள்ளான்.

கோதாவரிக் கரையில்

சடாயுவைச் சந்தித்துக் கலந்து கொண்ட பின்னர் மூவரும் கோதாவரி என்னும் தெய்வத்திரு நதியின் அழகையும் அதன் கரைகளின் செழிப்பையும் கண்டு வியந்தனர்.

இங்கு ஒரு அற்புதமான காதல் காட்சியைக் கம்பன் காட்டுகிறார். கோதாவரிக் கரையின் நீர் நிலையில் அன்னப்பறவைகள் நீந்தி விளையாடி ஒதுங்கின. அதைக் காணும் இராமன் அன்னத்தின் நடையைக் கண்டு விட்டு சீதையின் நடையைக் கண்டு புன்முறுவல் செய்தான் என்றும் சீதையும் அக்கோதாவரியில் வந்து நீர் உண்டு மீளும் யானைகளின் நடையைக் கண்டு இராமனை நோக்கி முறுவல் பூத்தாள் என்றும் கம்பநாடர் கூறுகிறார்.

''ஓதிமம் ஒதுங்கக் கண்ட உத்தமன், உழையள் ஆகும்,
சீதை தன் நடையை நோக்கிச் சிறிய தோர் முறுவல் செய்தான்;
மாதவன் தானும், ஆண்டு வந்து நீர் உண்டு மீளும்
போதகம் நடப்ப நோக்கிப் புதியதோர் முறுவல் பூத்தாள்''

(ஓதிமம்–அன்னப்பட்சி, போதகம்–ஆண்யானை) என்பது கம்பனுடைய அற்புதமான பாடலாகும் மேலும்

இராமனும் சீதையும் கோதாவரிக் கரையில் காணும் கொடிகளிலும் மலர்களிலும் ஒருவருக்கொருவர் மற்றவர் முகங்களைக் கண்டனர் என்று கம்பன் இராமன் சீதையின் அன்பின் காதலின் ஆழத்தைக் குறிப்பிட்டுக் கூறுகிறார்.

''வில் இயல் தடக்கை வீரன், வீங்கு நீர் ஆற்றின் பாங்கர்
வல்லிகள் நுடங்கக் கண்டான், மங்கை தன்மருங்குல் கண்டான்
எல்லி அம்குவளைக் கானத்து இடை இடை மலர்ந்து நின்ற
அல்லி அம் கமலம் கண்டாள், அண்ணல் தன்வடிவு கண்டாள்''

என்று அற்புதமாக இராமன் சீதையின் காதல் உணர்வையும் நினைவையும் எடுத்துக் கூறுகிறார்.

இனி அடுத்து வரும் காட்சி சூர்ப்பணகை வருகையாகும். அதன் பின்னர் நிகழவிருக்கும் அவலக் காட்சிகளின் முன்னோடியாக சீதை இராமனுடைய நெருக்கமான காதல் சிறப்புகளைக் கம்பன் குறிப்பிடுகிறார் போலும்.

8. சூர்ப்பணகை வருகை

சூர்ப்பணகை வருகிறாள். சற்றுத் தொலைவிலிருந்து இராமனைக் காண்கிறாள். அவனுடைய அழகைக் கண்டு வியக்கிறாள். அவனிடம் செல்ல விரும்புகிறாள். திருமகள் மந்திரத்தின் மூலம் தனது உருவத்தை அழகிய வடிவில் மாற்றிக்கொள்கிறாள். அதைக் கம்பன் மென்மையான மெல்லின எழுத்துக்களைக் கொண்ட சொற்களால் மிக அழகாகக் குறிப்பிடுகிறார்.

''பஞ்சிஒளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்கச்;
செஞ்செவிய கஞ்சம் நிகர் சீறடியள் ஆகி;
அம்சொல் இள மஞ்ஞை என, அன்னம் என மின்னும்
வஞ்சி என, நஞ்சம் என, வஞ்ச மகள் வந்தாள்''

என்பது கம்பரது பாடல். இப்பாடல் வரிகளில் அழகும் உட்பொருளும் தமிழின் இனிய சிறப்பும் காணப்படுவதைப் பார்க்கலாம்.

இவ்வாறு பார்ப்போர் மனதை ஈர்க்கும்படியாக கவர்ச்சியான முறையில் சூர்ப்பணகைத் தன்னை அழகுபடுத்திக் கொண்டு இராமன் முன் சென்றாள், மேலும்

'' கானில் உயர் கற்பகம் உயிர்த்த கதிர்வல்லி,
மேனி நன்பெற்று, விளை காமம் நிறை வாசத்
தேனின் மொழி உற்று, இனிய செவ்வி நனிபெற்று, ஓர்
மானின் விழி பெற்று, மயில் வந்தது என வந்தாள்''

என்றும்,

''நூபுரமும், மேகலையும், நூலும், அறல் ஓதிப்
பூமுரலும் வண்டும், இவை பூசலிடும் ஓசை
தாம் உரை செய்கின்றது ஒரு தையல் வரும்; என்னாக்
கோமகனும் அத்திசை குறித்து எதிர் விழித்தான்''

என்று கம்பன் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு வானத்திலிருந்து இரங்கி வரும் ஒரு அப்சரஸைப் போல சூர்ப்பணகை வருகிறாள். அவளுடைய உள்ளத்தில் பெரும் காதல் மிகுந்தக் காம உணர்வு மேலோங்கி நிற்கிறது. இந்தக் காட்சி ஒரு அபூர்வமான ஒருதலைக் காதல் காட்சியாகும். இராமனிடம் வந்து நின்னைக் காணவந்தேன் என்று சூர்ப்பணகை கூறுகிறாள்.

''மகளிருடைய சிந்தனையை அவர்களுடைய உள்ளத்தை அறிதல் கடினமானது. நல்ல நோக்கத்தில் அவள் வந்திருப்பதாகத் தெரியவில்லை. அது பற்றி பின்னால் தான் தெரியவரும்'' என்று நினைத்துத் தன்பால் வந்த காரணத்தைச் சொல்லுமாறு அவளிடம் இராமன் கேட்கிறான்.

''தாம் உறு காமத்தன்மை, தாங்கன் நேர் உரைப்பது என்பது
ஆம் எனல் ஆவது அன்றால் அருங்குல மகளிர்க்கு, அம்மா!
ஏழுறும் உயிர்க்கு நோவேன்! என் செய்கேன்! யாரும் இல்லேன்
காமன் என்று ஒருவன் செய்யும் வன்மையைக் காத்தி! என்றான்''

என்று காமவல்லி என்று தன் பெயரைக் கூறிச் சூர்ப்பணகைத் தனது காம உணர்வை இராமன்மீதுள்ள தனது ஆசையை வெளிப்படுத்துகிறான்.

அவ்வாறு அவள் கூறிய போது''நாண் இலள், ஐயள், நொய்யள், நல்லளும் **அல்லள்**'' என்று இராமன் தன் மனதில் எண்ணுகிறான். நேரடியாக இராமன் எதுவும் கூறவில்லை. அதைக் கண்டு அவள், ''என் மீது உங்களுக்கு ஆசை உண்டோ'' என்று வினைவுகிறாள்.

''பேசலன் இருந்த வள்ளல் உள்ளத்தின் பெற்றி ஓராள்
பூசல் வண்டு அரற்றும் கூந்தல் பொய்ம் மகள் புகன்ற என் கண்
ஆசை கண்டு அருளிற்று உண்டோ,
அன்றெனல் உண்டோ? என்னும்
ஊசலின் உலவு கின்றாள்; மீட்டும் ஓர் உரையைச் சொல்வாள்''

என்று சூர்ப்பணகை கூறுகிறாள். இவ்வாறு இருவருக்கும் உரையாடல் தொடருகிறது. அவளை நீ யார் என்றும் உன் பெயரென்ன

என்றும் கேட்ட போது பிரம தேவனுடைய புதல்வனாகிய புலத்திய னுடைய மைந்தனான விச்சிர வசுவின் மகள் குபேரனுடைய தங்கை, திசை யானைகளையெல்லாம் வென்று வெள்ளி மலையெடுத்து உலகம் மூன்றையும் ஆண்டு கொண்டிருப்பவனுக்குப் பின் தோன்றியவள், காமவல்லி என்பது எனது பெயர் என்று கூறியிருந்தாள்.

பூவிலோன் புதல்வன் மைந்தன் புதல்வி; முப்புரங்கள் செற்ற சேவலான் துணைவனான செங்கையோன் தங்கை; திக்கின் மாவெல்லாம் தொலைத்து வெள்ளி மலை எடுத்து உலகம் மூன்றும் காவலோன் பின்னை காமவல்லியாம் கன்னி; என்றாள்,

என்பது கம்பன் பாடல்.

"உன்னுடன் உடன் பிறந்தவர்களில் ஒருவன் மூன்று உலகங்களுக்கும் உயர்ந்த ஒப்பற்ற தலைவன், மற்றொருவன் குபேரன் அவர்கள் வந்து உன்னைத் தந்தால் ஏற்கலாம். இல்லாவிட்டால் நீ வேறு இடத்தைப் பார்த்துக் கொள்'' என்று வேடிக்கையாக இராமன் கூறினான்.

"ஒருவனோ உலகம் மூன்றிற்கு ஓங்கொரு தலைவன், ஊங்கில் ஒருவனோ குபேரன், நின்னோடு உடன்பிறந்தவர்கள்; அன்னார் தருவரேல் கொள்வேன்; அன்றேல் தமியை; வேறிடத்துச் சார; வெருவென் நங்கை!! என்றான்; மீட்டு அவள் இனைய சொன்னாள்"

என்பது கம்பநாடன் பாடல்.

அப்போது சூர்ப்பணகை ஆண் பெண் உறவு கொள்வது பற்றிய ஒரு நெறிமுறையும் நடைமுறையும் பற்றி வேதங்களை ஆதாரம் காட்டி எடுத்துக் கூறுகிறாள்.

இங்கு கம்பன், மிகவும் நுட்பமாக அக்கருத்துக்களை சூர்ப்பணகை எடுத்துக் கூறுவதைக் குறிப்பிடுவதைக் காணலாம்.

''காந்தர்ப்பம் என்பது உண்டால், காதலில் கலந்த சிந்தை மாந்தர்க்கும் மடந்தை மார்க்கும் மறைகளே வகுத்த கூட்டம், ஏந்தல் பொன் தோளினாய்! ஈது இயைந்த பின், எனக்கு மூத்த வேந்தர்க்கும் விருப்பிற்று ஆகும்; வேறு ஓர் உரை உண்டு'' என்றாள்.

மேலும்,

''முனிவரோடு உடையர் முன்னே முதிர்பகை, முறைமை நோக்கார்
தனியைநீ ஆதலால் மற்று அவரொடும் தழுவற்கு ஒத்த
வினையம் ஈதல்லது இல்லை; விண்ணும் நின் ஆட்சியாக்கி
இனியராய் அன்னர் வந்துன் ஏவலின் நிற்பர்; என்றாள்''

ஆணும் பெண்ணும் காதலில் சிந்தை கலந்து விட்டால் காந்தர்வ மணம் செய்து கொள்ளலாம் என்று வேதங்களே வகுத்துள்ளன. எனவே நாம் இருவரும் இசைந்து விட்டால் எனது மூத்தவர்களுக்கும் விருப்பமேயாகும், அத்துடன் முன்னாள் இருந்த பகையும் நீங்கும். விண்ணும் உன் ஆட்சியின் கீழ்வரும். அவர்களும் வந்து உன் ஏவலில் நிற்பர் என்றும் சூர்ப்பணகை கூறினாள்.

இதைக் கேட்டதும் இராமனுக்கு சிரிப்பு வந்து விட்டது. உரையாடல் நீடிப்பது உகந்தது அல்ல என்று கருதினான்.

''நிருதர்தம் அருளும் பெற்றேன்! நின்னலம் பெற்றேன்! நின்னோடு
ஒருவரும் செல்வத்து யாண்டும் உறையவும் பெற்றேன்; ஒன்றோ!
திருநகர் தீர்ந்த பின்னர்ச் செய்தவம் பயந்தது என்னா
வரிசிலை வடித்த தோளான்' வாய் எயிறு இலங்க நக்கான்''

என்று கூறிக் கொண்டு வயிறு குலுங்கச் சிரித்தான்.

அந்த நேரத்தில் சீதை பக்கத்தில் இருந்த பர்ணக சாலையிலிருந்து வெளியே வந்தாள். சீதையைக் கண்டவுடன் சூர்ப்பணகைக்குப் பலவித எண்ணங்கள் தோன்றின. சீதையின் அழகைக் கண்டு வியப்படைகிறாள். பெண்ணாகப் பிறந்த எனக்கே இவளுடைய அழகைக் கண்டு மயக்கமேற்படுகிறதே பிறருக்கு என்னவாகும். என்று சிந்திக்கிறாள்.

''பண்புற நெடிது நோக்கிப் படைக்குனர் சிறுமை அல்லால்
எண்பிறங்கு அழகிற்கு எல்லை இல்லையாம்'' என்று நின்றாள்;
கண்பிற பொருளில் செல்லா; கருத்து எனின் அஃதே; கண்ட
பெண் பிறந்தேனுக்கு, என்றால் என்படும் பிறருக்கு? என்றாள்.

இராமனையும் சீதையையும் மாறிமாறிப் பார்க்கிறாள். இந்த மூன்று உலகங்களில் உள்ளவர்களுக்கும் அழகின் எல்லையாக இருக்கும் படியாக சீதையும் இராமனும் பிரம்மனால் படைக்கப் பட்டிருக்கிறார்கள் என்று கருதுகிறாள். சீதை இருக்கும் வரை இராமன் தன்னைப் பற்றிச் சிந்திக்க மாட்டான் என்று கருதுகிறாள். சீதையை அரக்கி என்று கூறி அவளை விட்டுவிடு என்று இராமனிடம் கூறுகிறாள். சீதை மீது கடுமையான கோபம் கொள்கிறாள். ''எங்களுக்கிடையில் ஏன் வந்தாய்'' என்று சீதையைக் கோபத்துடன் கேட்கிறாள்.

சீதை அவளைக் கண்டு அஞ்சி இராமனின் தோள்களைத் தழுவிக் கொண்டாள். விளையாட்டு வினையாகி விடும் என்றும் கருதி இராமனும் சூர்ப்பணகையிடம் ''இளையவன் வந்தால் கோபப்படுவான், நீ இந்த இடத்தை விட்டுப் போய்விடு'' என்று கூறிவிட்டுச் சீதையுடன் பர்ணக சாலைக்குள் போய்விட்டான்.

காமக்கனல் மூண்டதால்

சூர்ப்பணகையின் காமக்கனல் அதிகமாகிறது, ''இன்று இவன் ஆகம் (மார்பை) புல்லேன் எனின் உயிர் இழப்பேன்'' என்று கூறிப் புழுங்குகிறாள்.

''அழிந்த சிந்தையளாய் அயர்வாள் வயின்
மொழிந்த காமக் கடுங்கனல் மூண்டதால்
வழிந்த நாகத்தின் வன்தொளை வாய் எயிற்று
இழிந்த கார்விடம் ஏறுவது என்னவே''

சூர்ப்பணகையின் சிந்தை அழிந்தது. அயர்வடைந்தாள். கருநாகத்தின் கடியால் கடும் விஷம் ஏறுவதைப் போல அவள் உள்ளத்தில் எழுந்தக் காமக்கனல் மூண்டு எரியத் தொடங்கியது. கோபம் கொண்டுச் சீதையைத் தொடர்ந்தாள்.

அப்போது அங்கு இருந்த இலக்குவன் கோபம் கொண்டு ''நீல்லடீ'' எனக்கூறி அவளைத் தடுத்து அவளது ''மூக்கு, காது மற்றும் முலைக் கண்களை அறுத்து விரட்டினான். சூர்ப்பணகை அழுது புலம்பினாள் கதரினாள் ''பெண்பிறந்தேன் பட்ட பிழை'' எனப் பிதற்றினாள்.

தனது அண்ணன் மார்களையும் வல்லமை மிக்க மருகன் இந்திர ஜித்தனையும் கூவிக்குரல் கொடுத்து அழத் தொடங்கினாள். அவளுடைய அழுகுரலைக் கேட்டு இராமன் வெளியே வந்து என்ன நடந்தது எனக் கேட்டான் ''இவள் சீதையைப் பற்றியிழுக்க ஓடினாள்'' என்று இலக்குவன் கூறினான். அதற்கு ''என் இனியவருக்கருகில் மற்றவளைக் கண்டால் என் மனம் ஒப்புமா?'' என்று சூர்ப்பணகை கூறினாள்.

இதைக் கேட்ட இராமனுக்குச் சற்று கோபம் ஏற்பட்டு, நீ இங்கு இருக்காதே, இந்த வனத்தை விட்டு ஓடிப் போய்விடு என்று சற்று கடிந்தே கூறினான்.

சூர்ப்பணகை மேலும் தோடர்ந்து வாதாடுகிறாள்.

''விண்டாரே அல்லாரோ வேண்டாதார்; மனம் வேண்டின்
உண்டாய காதலின் என் உயிர் என்பது உமது அன்றோ!
கண்டாரே காதலிக்கும் கட்டழகும் விடம் அன்றோ
கொண்டாரே கொண்டாடும் உருப்பெற்றால் கொள்ளீரோ!''

என்று தனது தாபத்தைக் கூறி மேலும் வாதாடுகிறாள்.

சிவனும், மலர்த்திசை முகனும், திருமாலும் தெறு குலிசத்து
அவனும், (வஜ்ஜிராயுதத்தைக் கொண்ட இந்திரனும்) அடுத்து
ஒன்றாகி நின்றன்ன உருவோனே!
புவனம் அனைத்தையும் ஒரு தன் பூங்கணையால் உயிர் வாங்கும்
அந்த மன்மதனும் உனக்கு இளையானோ!
இவனே போல் அருள் இலனால்''

என்பது கம்பன் பாடல்.

''உனக்கு இளையானான இலக்குவன் என் அங்கங்களை அறுத்து அவமானப்படுத்தினான். மன்மதனும் அவனுடைய கணைகளால் என் உயிரை வாங்குகிறான். எனவே அந்த மன்மதனும் இலக்குவனைப் போல் உனக்கு இளையோனோ'' என்று கூறி அழுகிறாள்.

இன்னும் சூர்ப்பணகையின் காம வெறி அவளுக்கு இராமன் பால் ஏற்பட்டிருந்த பெருங்காதல் வெறிமேலும் அதிகமாகி தலைக்கேறுகிறது. அவள் இராமனுடைய காதலுக்காக எதையும் செய்வதற்குத் தயாராக இருக்கிறாள். ''என்னோடு இங்கு தங்குவீர்'' என மீண்டும் இராமனை வற்புறுத்துகிறாள்''.

அப்போது மீண்டும் இராமன் சூர்ப்பணகைக்கு நல்ல வார்த்தைகளைக் கூறி அந்த இடத்தைவிட்டு அகலும்படி அறிவுறுத்தினான். ''நாங்கள் தசரதன் புதல்வர்கள். தாய் சொல்தாங்கி வனம் புகுந்தேம். இங்கு வேதியரும் மாதவரும் வேண்ட உலகிற்குக் கொடுமை இழைத்து வரும் அரக்கர் குலங்களை அழித்து எங்கள் நகர் புகுவோம் என்பதை மனதில் கொள்வாயாக''

என்று பொருள் பொதிந்த வார்த்தைகளை எடுத்துக் கூறி சூர்ப்பணகைக்கு அறிவுரை கூறுகிறான். அது ஒரு எச்சரிக்கையாகவும் அமைகிறது.

''தரை அளித்த தனி நேமித்தயரதன் தன்
புதல்வர்யாம், தாய் சொல் தாங்கி,

விரை அளித்த கான்புகுந்தோம்; வேதியரும்
மாதவரும் வேண்ட நீண்டு
கரை அளித்தற்கு அரிய படைக்கடல் அரக்கர்
குலம்தொலைத்துக் கண்டாய பண்டை
வரையளித்த குலமாட நகர் புகுவேம்!
இவை தெரிய மனம் கொள்'' என்றான்

இந்த எச்சரிக்கையைக் கேட்ட பின்னரும் சூர்ப்பணகை தனது பெருங்காதல் வெறியில், இந்தக் காடுகளில் வாழும் அரக்கர்களைப் போர் தொடுத்து அழிப்பது தான் உங்கள் குறிக்கோளாயின் நான் உனக்குச் சகல வழிகளிலும் உதவி செய்கிறேன். அரக்கர்களின் பொறிகள் அனைத்தையும் அறிவேன். பாம்பின் கால் பாம்பறியும் இந்த சீதையைக் கைவிட்டு என்னை ஏற்று கொள்ளுங்கள் என்று கூறுகிறாள். என்னை ஏற்றுக் கொள்ளாவிட்டால் நான் உங்களை அழித்து விடுவேன் என்று சூளுரைத்துத் தனது சகோதர உறவுகளான கர தூடணர்களிடம் செல்கிறாள்.

சூர்ப்பணகையின் ஒருதலையான பெருங்காதல் காரணத்தால் பெரிய நாசகரமான போர்களும் அரக்கர் படை அழிவுகளும் விளைகின்றன.

சூர்ப்பணகையின் வரவும் அவள் இராம இலக்குவர்களைக் கண்டதும் அவர்கள் பால் பெருங்காதல் கொண்டதும் இவை தொடர்பான இதர நிகழ்ச்சிகளும் இராமாயணக் காவியத்தில் மிகப் பெரிய திருப்பங்களை உண்டாக்குகின்றன.

சூர்ப்பணகையின் பெருங்காதல் உணர்வும் மோகத்தின் வேகமும் கடைசிவரை குறையவில்லை. சீதை இராமனுடன் இருக்கும் வரை தான் இராமனை அடைய முடியாது என்று முடிவுக்கு வருகிறாள். எனவே சீதையைப் பற்றி இராவணனிடத்தில் வத்தி வைத்து அவனுடைய உள்ளத்தில் சீதையைப் பற்றிய பெருங்காதல் தீயைப் பற்றவைத்து விட முடிவு செய்கிறாள். காவியத்தில் அத்துடன் சூர்ப்பணகையின் பாத்திரக் கடமை முடிகிறது.

சூர்ப்பணகையின் பெருங்காதல் உணர்வு நிலை இராமாயண காவியத்தில் ஒரு முக்கியமான காவிய நிகழ்ச்சியாகும் இந்த அபூர்வமான நிகழ்ச்சியைக் கம்பநாடர் எடுத்துக் காட்டி விவரிப்பது நாம் படிப்பதற்கும் தெரிந்து கொள்வதற்கும் மிகவும் நுட்பமான விவரங்களைக் கொண்டதாகும்.

கரதூடணர்

சூர்ப்பணகை, அக்காட்டில் இருந்தத் தனது சகோதர உறவினர் களான கரதூடணர்களிடம் வந்து முறையிடுகிறாள்.

''இருவர் மானிடர்; தாபதர்; ஏந்திய
வரிவில் வாட் கையர், மன்மதன் மேனியர்;
தரும நீரர்; தயாதன் காதலர்
செருவில் நேரும் நிருதரைத் தேடுவார்.''

என்று கூறுகிறாள்.

போர்க் களத்தில் சந்திப்பதற்கு அரக்கர்களைத் தேடுகிறார்கள் என்று சண்டையைத் தூண்டிவிடும் நேரத்திலும் இருவர் மானிடரைப் பற்றி தாபதர் மன்மத மேனியர் தரும வீரர், தயாதன் காதலர் என்று குறிப்பிடுவதும் கவனிக்கத் தக்கது.

மேலும் சீதையின் அழகையும் விவரித்துக் குறிப்பிட்டு அவளை இலங்கையர் கோனுக்குக் கொண்டு செல்ல முயன்ற போது தான் மூக்கறுப்பட்டதைக் குறிப்பிட்டு அந்த மானிடர் மீது பகையைத் தூண்டுகிறாள்.

''மண்ணின், நோக்கரும் வானினின், மற்றினில்,
எண்ணி நோக்குறின், யாவர்க்கும் நோர்கிலாப்
பெண்ணின் நோக்குடையாள்; ஒருபேதை; என்
கண்ணின் நோக்கி உரைப்பரும் காட்சியாள்''

என்றும்.

கண்டு நோக்கரும் காரிகையாள் தனைக்
கொண்டு போவல் இலங்கையர் கோக்கு; எனா
விண்டு மேல் எழுந்தேனை, வெகுண்டு அவர்
துண்டம் ஆக்கினர் மூக்கு''எனச் சொல்லினாள்

என்றும் கம்பன் மிகவும் சுவையாகக் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

இவ்வாறு சூர்ப்பணகை கரனிடத்தில் கூற கரதூடணர்களும் அவர்களுடைய அரக்கர் படைகளும் இராமனைச் சூழ்ந்து கொண்டு தாக்கினர். இராமன் இவர்கள் அனைவரையும் வீழ்த்தினான். முனிவர்கள் இராமனை மகிழ்ச்சியுடன் சூழ்ந்து கொண்டனர்.

இராமனும் மகிழ்ச்சியுடன் தன் உயிருக்கு உயிரான சீதைபால் சென்றான். ''அண்ணல் வீரனைத் தம்பியும் அன்னமும் (சீதையும்) கண்ணின் நீரினில் பாதம் கழுவினர்'' என்று கம்பர் குறிப்பிடுகிறார்.

கரதூடணர்களை எதிர்த்து நடந்த போரில் இராமன் தனியாக நின்று அவ்வரக்கர்கள் அனைவரையும் கொன்று வெற்றிக் கண்டான். அப்போதும் இராமனுடைய எண்ணம் முழுவதும் சீதையின்பால் இருந்தது என்றும் இராமனை உடலாகவும் சீதையை உயிராகவும் கம்பர் கூறுகிறார்.

''முனிவர்வந்து முறை முறை பொய்ப்புற,
இனிய சிந்தை இராமனும் ஏகினான்,
அனிக வெம் சமத்து ஆருயிர் போகத்தான்
தனியிருந்த உடல் அன்னதையல் பால்''

விண்ணின் நீங்கிய வெய்யவர் மேனியின்
புண்ணின் நீரும், பொடிகளும் போய்உக,
அண்ணல் வீரனைத் தம்பியும், அன்னமும்
கண்ணின் நீரினில் பாதம் கழுவினார்.

என்பன கம்பருடைய பாடல்கள்.

இலங்கை சென்றாள்

கரதூடணர்கள் கொல்லப்பட்ட பின்னர் சூர்ப்பணகை இராவணனிடம் ஓடினாள். இதைப் பற்றிக் குறிப்பிடும் போது ''ஆக்கினேன் மனத்து ஆசை அவ்வாசை என், மூக்கினோடும் முடிய முடிந்திலேன்'' என்று இராமன் மீது தனக்கிருந்த ஆசையையும் நினைத்துக் கொண்டு இலங்கைக்கு வேகமாகச் சென்றாள்.

அவள் இலங்கைக்கு வரவிருக்கும் செய்தியைப் பற்றிக் கூறும் போது இராமனிடம் அவளுக்கிருந்த மிகுந்த ஆசையைப் பற்றிக் கம்பநாடர் குறிப்பிடுகிறார்.

''இரைத்த நெடும் பணை அரக்கர் இறந்ததனை
மறந்தனள், போர் இராமன் துங்க
வரைப் புயத்தின் இடைக்கிடந்த பேராசை
மனம் கவற்ற, ஆற்றாள் ஆகித்

திரைப் பரவைப் பேர் அகழித்திண் நகரில்
கடிதோடிச் சீதை தன்மை
உரைப்பன் எனச் சூர்ப்பணகை வர இருந்தாள்,
இருந்த பரிசு உரைத்தும்; மன்னோ''

என்று கம்பநாடர் குறிப்பிடுகிறார்.

சூர்ப்பணகை அறுபட்ட மூக்கு காதுகளுடன் இராவணன் முன்பாகச் சென்றாள். அவளுடைய நிலை கண்டு இராவணன் கடுங் கோபம் கொண்டான். அவனுடைய வாயில் புகை கிளம்பியது. மீசைகள் துடித்தன. இது யார்வர் செயல், எனக் கேட்டான். அப்போதும் சூர்ப் பணகை ''கானிடை அடைந்து புவி காவல் புரிகின்றார், மீனுடை நெடுங் கொடியினோன் அனையர், உவமையில்லா மானிடர், தடிந்தனர் வாள் உருவி,'' என்று கூறினாள். ''உவமையில்லா மானிடர்'' என்ற அவள் குறிப்பிட்டது கவனிக்கத்தக்கது. இன்னும் இராமனையும் இலக்குவனையும் பற்றி அவள் தன் அண்ணனிடம் கூறுகிறாள்.

''மன்தமனை யொப்பர் மணி மேனி; வட மேருத்
தன் எழிலை ஒப்பர் திரள் தோளின் வலி தன்னால்
என் அதனை இப்பொழுது இசைப்பது? உலகேழின்
நல் மதம் அழிப்பர் ஓர் இமைப்பின் நனி வில்லால்,''

''வந்தனை முனித்தலைவர் பால் உடையர் வானத்து
இந்துவின் முகத்தர், எறி நீரில் எழும் நாளக்
கந்தமலரைப் பொருவு கண்ணர், கழர், கையர்;
அந்தமில் தவத் தொழிலர், ஆர் அவரை ஒப்பார்?

இன்னும்,

''வற்கலையர்; வார் கழலர்; மார்பின் அணி நூலர்;
விற்கலையர்; வேதம் உறை நாவர்; நனி மெய்யர்;
உற்கு அலையர்; உன்னை ஓர் துகள் துணையும் உன்னார்;
சொல்கலையெனத் தொலைவில் தூணிகள் சுமந்தார்;

''மாரர் உளரே இருவர். ஓர் உலகின் வாழ்வார்
வீரர் உளரே அவரின் வில்லதனின் வல்லார்
ஆர் ஒருவர் அன்னவரை ஒப்பவர்கள்? ஐயா
ஓர் ஒருவரே முதல்வர் மூவரையும் வெல்வார்''

“ஆறுமனம் அஞ்சினம் அரக்கரை, எனச் சென்று
ஏறு நெறி அந்தணர் இயம்ப, உலகெலாம்
வேறும் எனும் நுங்கள் குலம் வேரொடும் அடங்கிக்
கோறும் என முந்தை ஒரு சூழ் உறவு கொண்டார்.”

“தராவலய நேமி உழவன் தயரதப் பேர்ப்
பராவரு நலத் தொருவன் மைந்தர்; பழியில்லார்
விரா வருவனத்து விளம்ப உரைகின்றார்;
இராமனும் இலக்குவனும் என்பர் பெயர்’’ என்றாள்

என்றெல்லாம் அவள் விவரித்துக் கூறுகிறாள். இந்த வார்த்தைகளிலிருந்து அவளுடைய உள்ளக்கிடக்கை தெளிவாக வெளிப்படுகிறது. சூர்ப்பணகை இராமன் மீதுள்ள பெருங்காதலின் அடர்த்தியை, ஆழ் நீளத்தை, பொங்கி எழும் தாபத்தை மிக அழகாக அற்புதமாகக் கம்பர் விளக்கிக் கூறுவதைக் காண்கிறோம்.

இராமனை அடைவதற்கு சீதை இடையூறாக இருக்கிறாள். எனவே சீதையை அந்த இராமனிடமிருந்து பிரித்து விட வேண்டும் என்பதும் அவளுடைய குறிக்கோளாக வெளிப்படுகிறது. அதற்காக இராவணனுக்கும் இராமனுக்குமிடையில் ஒரு அரசியல் பகையையும் உண்டாக்கி விட வேண்டும் என்பதற்காக இராம இலக்குவர்களுடைய சிறப்புகளையெல்லாம் விவரித்து அவர்கள் மீது ஒரு பொறாமை உணர்வை உருவாக்கி வெறுப்பைத் தோற்றுவித்து இராவணனுடைய, தான் என்னும் தனியாண்மையையும் தன்மானத்தையும் தூண்டி விட்டுப் பேசுகிறாள்.

‘‘ஆறுமனம் அஞ்சினம் அரக்கரை எனச் சென்று
ஏறு நெறி அந்தணர் இயம்ப; உலகெல்லாம்
வேறும் எனும் நுங்கள் குலம் வேரொடும் அடங்கக்
கோறும் என முந்தை ஒரு சூழ் உறவு கொண்டார்’’

என்று ‘‘உங்கள் குலம் முழுவதையும் வேரோடு அழிக்கச் சூழுரைத்துக் கொண்டுள்ளனர் என்றும் பகையை மூட்டியும் பேசுகிறாள்.

அடுத்து சீதை மீது இராவணனுக்கு ஒரு அடங்காத பெருங்காதலை உண்டாக்க வேண்டும், அதற்கான முன்னுரையாகவும் மனதில் கொண்டு சூர்ப்பணகை பேசுவதாகவும் அமைந்துள்ளது.

இராவணன் தனதுத் தங்கையின் மூக்கையும் காதுகளையும் பார்த்து நாணமுற்று நீ செய்த குற்றம் என்ன? உன் அங்கங்களை அவர்கள் அறுக்க வேண்டிய காரணம் என்ன? என்று இராவணன் கேட்கிறான். சூர்ப்பணகை மேலும் பேசுகிறாள்.

''என்வயின் உற்ற குற்றம், யாவர்க்கும் எழுதொணாத
தன்மையன் இராமனோடும், தாமரை தவிரப் போந்தாள்,
மின்வயின் மருங்குல் கொண்டாள்;
வேய் வயின் மேன் தோள்கொண்டாள்
பொன் வயின் மேனி கொண்டாள்;
பொருட்டினால் புகுந்தது என்றாள்''

என்னும் தோற்றுவாயுடன் தொடங்குகிறாள்.

சீதையின் அழகையும் சிறப்புகளையும் விவரித்து எடுத்துக் கூறி இராவணனுடைய உள்ளத்தில் காமக் கனலை மூட்டிவிடுகிறாள்.

சீதையைப் பற்றி

''காமரம் முரலும் பாடல்கள் எனக் கனிந்த இன்சொல்
தேமலர் நிறைந்த கூந்தல், தேவர்க்கும் அணங்காம் என்னத்
தாமரை இருந்த தையல், சேடியாம் தரமும் அல்லள்;
யாம் உரை வழங்கும் என்பது ஏழைமைப் பாலது அன்றோ?''

அவளைப் பற்றி நான் எடுத்துரைக்க முயல்வது அறியாமையிற் பட்டதாகும்'' என்று கூறுகிறாள். இன்னும்,

''மஞ்சொக்கும் அளக ஓதி; (அடர்ந்த கூந்தல்)
மழைஒக்கும் வடிந்த கூந்தல்;
பஞ்சொக்கும் அடிகள்; செய்ய பவளத்தின் விரல்கள் ஐய!
அஞ்சொற்கள் அமுதில் அள்ளிக் கொண்டவள்; வதனம் மைதீர்
கஞ்சத்தின் அறவிற்றேனும் கடலினும் பெரிய கண்கள்''

''ஈசனார் கண்ணின் வெந்தான் என்பது இழுதை சொல், இவ்
வாசம் நாறு ஓதியாளைக் கண்டனன், வவ்வல் ஆற்றான்
பேசலாம் தகைமைத்து அல்லாப் பெரும் பிணி பிணிப்ப, நீண்ட
ஆசையால் அழிந்து தேய்ந்தான், அருங்கன் அவ்வுருவம்; அம்மா''

"தோளையே சொல்லு கேனோ! சுடர் முகத்து உலவுகின்ற வாளையே சொல்லுகேனோ, அல்லவை வழுத்து கேனோ! மீளவும் திகைப்பது அல்லால் தனித்தனி விளம்பல் ஆற்றேன்; நாளையே காண்டி அன்றே, நான் உனக்கு உரைப்பது என்னோ"

என்று கூறி நெருப்புக்கு நெய் ஊற்றுகிறாள்.

இன்னும் விவரிக்கிறாள்,

"வில்ஒக்கும் நுதல் என்றாலும் வேல்ஒக்கும் விழி என்றாலும், பல்ஒக்கும் முத்தென்றாலும், பவளத்தை இதழ் என்றாலும், சொல்ஒக்கும், பொருள் ஒவ்வாதால்;
சொல்லல் ஆம் உவமை உண்டோ
நெல்ஒக்கும் புல் என்றாலும் நேர் உரைத்தாக வற்றோ''

என்று உவமைகளைக் கூறுகிறாள்.

"இந்திரன் சசியைப் பெற்றான்; இருமூன்று வதனத் தோன் தன் தந்தையும் உமையைப் பெற்றான்; தாமரைச் செங்கணானும் செந்திரு மகளைப் பெற்றான்; சீதையைப் பெற்றாய் நீயும், அந்தரம் பார்கின், நன்மை அவர்க்கில்லை, உனக்கே ஐயா!''

என்று கூறி இராவணன் உள்ளத்தில் சீதையின் நினைவை வலுவாக ஊட்டி விடுகிறாள்.

"பாகத்தில் ஒருவன் வைத்தான்; பங்கயத்து இருந்த பொன்னை ஆகத்தில் ஒருவன் வைத்தான்; அந்தணன் நாவில் வைத்தான்; மேகத்தில் மின்னை முன்னே வென்ற நுண் இடையினாளை மாகத்தோள் வீரபெற்றால் எங்ஙனம் வைத்து வாழ்தி?"

சிவன் உமையைத் தன் மறுபாகத்தில் வைத்துக் கொண்டான், திருமால் திருமகளைத் தன் மார்பில் வைத்துக் கொண்டான், பிரம்ம தேவன் கலைமகளைத் தனது நாவிலே வைத்துக் கொண்டான். மேகத்திலே தோன்றும் மின் வெட்டுகளைப் போன்ற நுண்ணிடை யாளான அச்சீதையை வானளாவிய உயர்ந்த தோள்களையுடைய வீரனாகிய நீ எங்ஙனம் வைத்து வாழப்போகிறாய் என்றெல்லாம் கூறி இராவணனுக்கு ஏற்பட்டுள்ள பெருங்காதலை மேலும் தூண்டுகிறாள்.

இன்னும்

''பிள்ளை போல் பேச்சினாளைப் பெற்றபின் பிழைக்கல் ஆற்றாய்! கொள்ளைமா நிதியம் எல்லாம் அவளுக்கே கொடுத்தி ஐய!

வள்ளலே உனக்கு நல்லேன்; மற்றுநின் மனையில் வாழும்
கிள்ளை போல் மொழியார்க் கொல்லாம் கேடு சூழ்கின்றேன் அன்றே''

என்றெல்லாம் சீதையைப் பற்றி மிக அற்புதமாக எடுத்துக் கூறி இராவணனுடைய உள்ளத்தில் உள்ள காமத்தீயை பெருநெருப்பாக ஊதிவிட்டாள்.

இன்னும் சீதையை நீ எடுத்துக் கொண்டு எனக்கு இராமனைக் கொடுப்பாயாக என்று தனது உள்ளக் கிடக்கையையும் வெளிப்படுத்துகிறாள்.

''மீன் கொண்டு ஊடாடும் வேலை மேகலை உலகம் ஏத்தத்
தேன்கொண்டு ஊடாடும் கூந்தல், சிற்றிடைச் சீதை என்னும்,
மான்கொண்டு ஊடாடு நீ; உன்வாள் வலி உலகம் காண!
யான் கொண்டு ஊடாடும் வண்ணம்
இராமனைத் தருதி என்பால்''

என்று ஒரு பக்கம் இராவணனுடைய உள்ளத்தில் சீதையைப் பற்றிய எண்ணத்தை வலுவாக உண்டாக்கி விட்டு மறுபக்கத்தில் இராமன் மீது தனக்குள்ள பெருங்காதலையும் மறைக்காமல் இராமனை எனக்குக் கொடுத்துவிடு என்றும் கூறுகிறாள். இருவரின் காமத்தீயும் பெரு நாசத்தை உண்டாக்குவதற்கான காரணமாக அமைவதைக் காண்கிறோம்.

இவ்வாறு இராவணனுடைய உள்ளத்தில் பெருங்காதல் என்னும் பெரிய அக்கினி பூதத்தைக் கிளப்பி விட்டு மேலும் கூறுகிறாள். அத்தகைய சீதையை உனக்காக எடுத்து வரவேண்டும்மென நான் முயற்சித்த போது அந்த இராமனுடைய தம்பி இலக்குவன் இடையில் புகுந்து என்னுடைய மூக்கையும் காதுகளையும், முலைக் காம்புகளையும் அறுத்து விட்டான். எனது வாழ்வு முடிந்தது. உன்னிடம் சொல்லி விட்டு உயிரை விடலாம் என்று இங்கு ஓடிவந்தேன் என்று ''நீ செய்த குற்றம் என்ன? உன் அங்கங்களை அவர்கள் அறுக்க வேண்டிய காரணம் என்ன'' என்று இராவணன் கேட்ட கேள்விக்கு பதிலளித்துப் பேசி முடித்தாள்.

''அன்னவள் தன்னை நின்பால் உய்ப்பல் என்று அணுகல் உற்ற
என்னை, அவ்விராமன் தம்பி இடைப் புகுந்து, இலங்குவாளான்
முன்னை மூக்கரிந்து விட்டான்; முடிந்தது என் வாழ்வும் உன்னின்
சொன்னபின் உயிரை நீப்பான் துணிந்த னென் என்னச் சொன்னாள்''

எனக்கு இராமனைத் தருவாய் என்று கூறினாள். எனது அங்கங்கள் போயின, உயிரை நீப்பான் துணிந்தேன் என்று கூறி இராவணனுடைய அனுதாபத்தையும் தூண்டினாள்.

இவ்வாறு சூர்ப்பணகை இராவணனிடம் முறையிட்டதும் பேசிய பேச்சுக்களும், சாதுர்யமும் அர்த்தமும் நிறைந்தவை. இராவணனுடைய மனநிலையையும் பொதுவாக அவனுக்கிருந்த பெண்ணாசை, தன்மான உணர்வு, தனியாண்மை, கம்பீரம், தற்பெருமை, தன்னகங்காரம் முதலிய குண இயல்புகளை நன்கறிந்து அதற்கேற்றவாறு தனதுக் கருத்துக் களை தகுந்தச் சொற்களுடன் எடுத்துக் கூறி இராவணனிடம் சீதைபால் பெருங்காதல் நெருப்பைக் கிளப்பிவிட்டாள். இவ்வாறு சூர்ப்பணகை மூட்டிவிட்டக் காமப் பெருநெருப்பு இராவணனுடைய உள்ளத்தில் வலுவாகப் பற்றி விட்டதைக் கம்பன் மிகவும் அற்புதமான சுவை மிக்கத் தமிழ்ப் பாடல்களில் கூறுகிறார்.

❖❖❖

9. சீதையை சிறை வைத்தான்



இராவணனுடைய உள்ளத்தில் சீதையைப் பற்றிய பெருங் காதல் வெறி பெரு நெருப்பாகக் கொழுந்து விட்டு எரியத் தொடங்கியது. அந்தப் பெரு நெருப்பு இலங்கையையும் இரக்க மற்ற அரக்கர் ஆட்சி யையும் அழிக்கவிருக்கிறது. அவன் அனைத்தை யும் மறந்தான். தாபமும் காமநோயும் அவனுடைய உணர்வுடனும் உயிருடனும் கலந்து விட்டன.

''கோபமும், மறனும், மானக் கொதிப்பும்
என்று இனைய வெல்லாம்,
பாபம் நின்றிடத்து நில்லாத் தன்மம் போல்,
பற்றி விட்ட;
தீபம் ஒன்று ஒன்றையுற்றால்
என்னலாம் செயலில், புக்க
தாபமும் காமநோயும் ஆர்உயிர்
கலந்த அன்றே''

என்று கம்பனுடைய பாடல் குறிக்கிறது.

சூர்ப்பணகை சீதையைப் பற்றிக் குறிப்பிட்ட நேரத்திலிருந்து இராவணன் எல்லாவற்றையும் மறந்தான். கரதூடணர்கள் போரில் கொல்லப்பட்டார்கள் என்னும் செய்தியை மறந்தான். மூக்கறுபட்டு நின்ற தங்கையின் முகத்தை மறந்தான், அதைச் செய்த செய்கையை மறந்தான். அதனால் எற்பட்ட அவமானத்தையும் மறந்தான். சிவபெருமான் கொடுத்த வரங்களையெல்லாம் மறந்தான். சீதையைப் பற்றி மட்டுமே சிந்தையில் கொண்டு நினைவில் நிறுத்தி நின்றான் என்று கம்பன் மிகவும் நுட்பமாகக் குறிப்பிடுகிறார்.

''கரனையும் மறந்தான்;
தங்கை மூக்கினைக் கடிந்து நின்றான்,
உரனையும் மறந்தான் உற்ற பழியையும் மறந்தான், வெற்றி
அரன் நையும் கொண்ட காமன் அம்பினான் முன்னைப் பெற்ற
வரனையும் மறந்தான் கேட்ட மங்கையை மறந்திலாதான்''

என்றும்,

''சிற்றிடைச் சீதை என்னும் நாமமும் சிந்தை தானும்
உற்றிரண்டு ஒன்றால், நின்றால் ஒன்றொழிந்து ஒன்றை உன்ன
மற்றொரு மனமும் உண்டோ? மறக்கலாம் வழி மற்றுயாதோ?
கற்றனர் ஞானம் இன்றேல் காமத்தைக் கடக்கலாமோ?

என்றும் கம்பன் குறிப்பிடுகிறார்.

உயிரினங்களில் ஆண் பெண் பாலுணர்வு என்பது இயற்கை யானதாகும். ஆனால் அவ்வுணர்வு பொதுவாக இன விருத்திக்காகவும் பருவ நிலையை ஒட்டியுமே செயல்படுகின்றன. விலங்கினங்களிலும் பறவையினங்களிலும் கூட பெண் இனத்தின் விருப்பத்தின் படி தான் பாலியல் செயல்பாடுகள் நிகழ்கின்றன. நிறைவேறுகின்றன. இங்கு பெண் இனத்தின் இணக்கம் மீறப்படுவதில்லை. இருபாலரின் இணக்கத்தின் படியே கூடல் நிகழ்கின்றன. நிறைவேறுகின்றன. ஒரு தலைக் காமம் நிகழ்வதில்லை நிறைவேறுவதில்லை.

ஆனால் மனித இனத்தில் அத்துமீறல்கள் நிகழ்கின்றன. எல்லை தாண்டிய பயங்கரவாதச் செயல்கள் நடக்கின்றன. அவ்வாறு அத்துமீறல்கள் அதிகரிக்கும் போது அது பற்றி விளக்கமாக பல நெறிமுறைகளும் சாத்திரங்களும் உருவாயின. சாத்திரத்தில் வத்சாயனருடைய காமசூத்திரமும், திருக்குறளின் காமத்துப்பாலும் வேதங்கள் மற்றும் சங்க நூல் செய்திகளும் தலை சிறந்த ஒப்புயர்வற்ற இலக்கியங்களாகும். அந்த வரிசையில் இராமாயணம் திருமாலே மனித அவதாரம் எடுத்து ஒழுக்க நெறியைப் புகட்டும் ஒப்புயர்வற்ற

மகாகாவியமாகும். கம்பன் தனது மகா காவியத்தில் மேலும் உயர்வான நிலையில் அந்நெறி முறைகளைப் பற்றி மிக அற்புதமாக, மிகவும் நுட்பமாக எடுத்துக் கூறுகிறார். .

மனிதன் தனது ஆறாவது அறிவின் மூலம் ஐந்து புலனறிவுகளையும் கட்டுப்படுத்தி, ஒழுங்குபடுத்தி முறைப்படுத்த வேண்டும் என்பது நமது நாட்டுக் கல்வியின் முதல் பாடமாகும். மனிதனுக்குக் காம உணர்வு மூலம் பெருங்காதல் ஏற்படும் போது அவன் நிலை தடுமாறுகிறான். அதைக் கட்டுப்படுத்தி நேர் நிலையில் செல்வதற்கான ஞானத்தை பொது அறிவும் கல்வி அறிவும் நிறைந்த ஞானத்தைப் பெற வேண்டும். அத்தகைய புலனடக்கத்திற்கு இராமன் இலக்குவன், பரதன், அனுமன், வீடணன் ஆகியோர் தலை சிறந்த எடுத்துக் காட்டுகளாகும். அவர்கள் நமக்குத் தலைசிறந்த வழிகாட்டிகளாவர்.

இக்கருத்தைக் கம்பன் மிக அற்புதமாக ஒரே வரியில் ''கற்றனர் ஞானம் இன்றேல் காமத்தைக் கடக்கலாமோ?'' என்று குறிப்பிடுகிறார்.

இராவணன் வஞ்சனையாகச் சீதையைத் தூக்கிச் சென்று இலங்கையில் அசோகவனத்தில் சிறை வைத்தான். அதற்கு முன்பே இலங்கை நாதன் சீதையைத் தனது இதயமாம் சிறையில் வைத்தான் என்று கம்பன் மிக நுட்பமாகக் குறிப்பிடுகிறார். காமத்தீயினால் இராவணனுடைய உள்ளம் வெயில் நாட்களில் வெண்ணெய் உருகுவதைப் போல உருகிக் கொண்டிருந்தது.

''மயிலுடைச் சாயலாளை வஞ்சியா முன்னம், நீண்ட
எயிலுடை இலங்கை நாதன் இதயமாம் சிறையில் வைத்தான்;
அயில் உடை அரக்கன் உள்ளம் அவ்வழி மெல்லமெல்ல
வெயிலுடை நாளில் உற்ற வெண்ணெய் போல உருகிற்று அன்றே''

இராவணனுக்கு ஏற்பட்ட காமநோய் வளர்ந்தது. வேகமாக வளர்ந்தது. கருநாகத்தின் கடும் விஷம் போல் ஏறியது. கல்வி அறிவு இல்லாத அறிவிலிகளை எப்படி தீமைகள் சுலபமாகப் பற்றிக் கொண்டு அவனுடைய அறிவை மழுங்கடிக்கிறதோ அதே போல அவனைக் காம நோய் பற்றிக் கொண்டு அந்நோய் அதிகரித்தது.

''விதியது வலியினாலும், மேலுள விளைவினாலும்
பதிஉறு கேடுவந்து குறுகிய பயத்தினாலும்,
கதியுறு பொறியின் வெய்ய காமநோய் கல்வி நோக்கா
மதியிலி மறையச் செய்த தீமைபோல் வளர்ந்ததுதன்றே''

என்று கம்பர் கூறுகிறார்.

பொன்மயமான சீதையைப் பற்றிய சிந்தனை இராவணனுடைய சிந்தையில் புகுந்துவிட்டது. ஏற்கனவே அவனிடம் அரக்க குணம் உள்ளது. அத்துடன் அவன் காம நோயால் தன்னை மறந்த நிலையி லானான். மன்மதன் கணைகளினால் அவன் நிலை கலங்கி உன் மத்தன் ஆனான். அவனுடைய பேராற்றல்கள் அனைத்தும் அவனுடைய காம உணர்வில் போய் அடங்கிவிட்டன. இதையே

''பொன்மயமான நங்கை மனம் புகப்புன்மை பூண்ட
தன்மையோ, அரக்கன் தன்னை அயர்த்ததோர் தன்மையாலோ!
மன்மதன் வாளிதூவி நலிவதோர் வலத்தன் ஆனான்;
வன்மையை மாற்றும் ஆற்றல் காமத்தே வதிந்ததன்றே!

இராவணன் சீதையின் நினைவால் நிலைகுலைந்து நின்றான். நிற்கவும் முடியவில்லை. இருக்கவும் முடியவில்லை. தன் மாளிகைக்குச் சென்றான். சோலைக்குச் சென்றான். மோக நோயால் எரிந்து கொண்டிருந்த அவனுடைய உடம்பின் உஷ்ணம் தணியவில்லை. குளிர்ந்த நீர் நிறைந்த தடாகத்தில் விழுந்தான். இருப்பினும் அவனுடைய உடலில் எழும் வெப்பம் தணியவில்லை. பெருங்காதல் என்னும் விஷத்தை உண்டவர்களுக்கு எந்த மருந்தும் இல்லை.

இன்பமும், துன்பமும் உள்ளத்தோடு இணைந்ததாகும்.

''வன்பணை மரமும், தீயும், மலைகளும் குளிர, வாழும்
மென்பனி எரிந்த தென்றால், வேனிலை விளம்பலாமோ?
அன்பெனும் விடம் உண்டாரை ஆற்றலாம் மருந்தும் உண்டோ?
இன்பமும் துன்பமும் தானும் உள்ளத்தோடு இயைந்த அன்றே''

என்று கம்பநாடர் குறிப்பிடுகிறார்.

கம்பன் இங்கு ஒரு அபூர்வமான காட்சியைக் காட்டுகிறார். இராவணனுடைய உடல் எல்லாம் காமத்தீயால் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கிறது. அதைத் தணிப்பதற்கு பல முயற்சிகளைச் செய்கிறான். அவன் வல்லமை மிக்கவன். பருவ காலங்களையும் இதர பல இயற்கை சக்திகளையும் வென்றவன். அவன் பருவகாலங்களை அழைத்து தனது உடலின் காம வெப்பத்தைத் தணிக்கும்படி கூறுகிறான். கார் காலத்தை விரும்பினான். அது வந்தது. ஆயினும் அவனுடைய வெம்மை தணியவில்லை. குளிர்பருவத்தை அழைத்தான். அது வந்தது, ஆயினும் பயனில்லை. எந்தப் பருவ காலமும் வேண்டாம் என்று வெறுத்தான்.

''கூலத்தார் உலகம் எல்லாம் குளிர்ப் பொடு வெதுப்பு நீங்க,
நீலத்தார் அரக்கன் மேனி நெய் இன்றி எரிந்தது அன்றே;
காலத்தால் வருவது ஒன்றோ! காமத்தால் கனலும் வெந்தீச்
சீலத்தால் அவிவது அன்றிச் செய்யத்தான் ஆவது உண்டோ?

என்பது கம்பனுடைய கருத்து நிறைந்த பாடல்களில் ஒன்று.

கடல் சூழ்ந்த உலகமெல்லாம் காற்றால், மழையால், பனியால், வெப்பம் தணிந்துச் செழுப்படைகிறது. ஆனால் அரக்கன் உள்ளத்தில் எழுந்த காமத்தீ பருவகால நிகழ்ச்சிகளால் தணியவில்லை. தென்றல் காற்றாலும், சாரல் மழையாலும், குளிர்ந்த பனியாலும் அவனுடைய வெப்பத்தைத் தணிக்க முடியவில்லை. நெய் இல்லாமலேயே அவனுடைய மேனி எரிந்து கொண்டிருந்தது. காமத்தால் சுடுகின்றன வெம்மை மிக்க நெருப்பின் வேகத்தைக் காலத்தால் குறைக்க முடியாது. சீலத்தால் தான் அவிக்க முடியும். வேறு ஒன்றும் செய்வதற்கு இல்லை என்று கம்பன் மிகவும் அற்புதமான ஒரு கருத்துச் செறிவை இங்கு காட்டுகிறார். காமத்தால் எற்படும் வெப்பத்தைச் சீலத்தால் தான் வெல்ல முடியும் என்று மிக நுட்பமாகக் குறிப்பிடுகிறார்.

மற்றொரு அற்புதமான காட்சியைக் கம்பர் காட்டுகிறார்.

பௌர்ணமியின் முழுநிலவு தோன்றியது அந்த நிலவைக் கண்டு தனது துன்பம் நீங்காதவனாய்

''தேயா நின்றாய் மெய் வெளுத்தாய்,
உள்ளம் கருத்தாய், நிலைதிரிந்து
காயா நின்றாய், ஒரு நீயும்;
கண்டார் சொல்லக் கேட்டாயோ!
பாயா நின்ற மலர் வாளி பறியா நின்றார் இன்மையால்
ஓயா நின்றேன்! உயிர் காத்தற்கு உரியார் யாவர் உடுபதியே''

என்று இராவணன் காம நோயால் துன்புற்று முழுநிலவுடன் பேசுவதைக் கம்பன் மிகவும் அழகாகக் குறிப்பிடுகிறார். முழுநிலவும் தேய்ந்து இருள்வராதோ என்று ஏங்குகிறான். எனவே அடுத்து சூரியனையும் பகலையும் வருக என்றான். அவை வந்தன. அரக்கனின் துன்பம் தணியவில்லை. இளம்பிறையைக் கொண்டு வரச் சொன்னான். ஆயினும் அவன் ஆறுதல் பெறவில்லை. அதன் பின்னர் கும்பிருள் வந்தது. அந்த இருளில் இராவணன் சீதையின்

அழகிய தோற்றத்தைக் கண்டான். அது வெறும் உருவெளித் தோற்றம் தான்.

இராவணன் தனது மனக்கண்ணில் சிந்தனையில் சீதையைக் கண்டு பேசிக் கொள்கிறான்.

''பண்டே உலகேழிலும் உள்ள படைக்கணாரைக்
கண்டேன்! இவர் போல்வதொர் பெண் உருக் கண்டிலேனால்;
உண்டே எனின் வேறினி, எங்கை உணர்த்தி நின்ற
வண்டேறு கோதை மடவாள் இவள் ஆகும் அன்றே''

என்று அவனுக்கு சூர்ப்பணகை எடுத்துக் கூறிய வர்ணனை களெல்லாம் நினைவுக்கு வருகின்றன. சூர்ப்பணகையை அழைக்கிறான். என்முன் வந்து நிற்கிறாளே இவள் தான் நீ கூறிய சீதையோ'' என்று கேட்கிறான்.

''பொய் நின்ற நெஞ்சின் கொடியாள், புகுந்தாளை நோக்கி,
நெய்ந்நின்ற கூர்வாள் அவன், நேர்உற நோக்கு நங்காய்!
மைந்நின்றவாள் கண் மயில் நின்றென, வந்து என்முன்னர்,
இந்நின்றவள் ஆம்கொல் இயம்பிய சீதை?" என்றான்.

இராவணனுடைய உள்ளத்தில் சீதை இருக்கிறாள்.

அச்சீதை மீதுள்ள ஆசையினால் அவன் நிலையிழந்து நிற்கிறான்.

அவன் தான் காணும் பொருள்களில் எல்லாம் சீதையின் வடிவத்தையே காண்கிறான்.

மறுபக்கம் சூர்ப்பணகையின் உள்ளத்தில் இராமன் இருக்கிறான். அந்த இராமன் மீதுள்ள ஆசையால் அவளும் நிலையிழந்து நிற்கிறாள். அவள் காணும் பொருள்களிலெல்லாம் இராமனின் வடிவத்தையே காண்கிறாள்.

இராவணன் சதா சீதை, சீதை என்றே புலம்புகிறான். அதே போல சூர்ப்பணகையும் சதா இராமன், இராமன் என்னும் புலப்பத்திலேயே இருக்கிறாள்.

இந்த வடிவத்தில் என்முன் நிற்பவள் தான் நீ கூறிய சீதையா என்று இராவணன் சூர்ப்பணகையிடம் கேட்ட போது அவள் இப்படித் தான் இராமன் இருப்பான் என்று தன் உள்ளத்தில் உள்ளதைக் கூறுகிறாள்.

''செந்தாமரைக் கண்ணொடும், செங்கனி வாயினோடும்
சந்தார்தடந் தோளொடும், தாழ்தடர் கைகளோடும்

அம்தார் அகலத்தோடும், அஞ்சனக் குன்றம் என்ன,
வந்தான் இவன் ஆகும் அவ்வல்வில் இராமன்; என்றாள்

என்ற கம்பருடைய பாடல் வரிகளில் காண்கிறோம்.

இராமனுடைய கண்களின் அழகையும், வாயின் அழகையும், தோள்களின் அழகையும், கைகளின் வண்ணத்தையும், அகலமான மார்பையும், நீல நிறக்குன்றத்தைப் போன்ற வடிவத்தையும் நினைத்துக் கொண்டு இவன்தான் இராமன் என்று கூறுகிறாள்.

நான் கண்டது ஒரு பெண்பால் உருவமாகும். ஆனால் நீ எந்த திசையிலும் இல்லாத ஆண் உருவத்தைப் பற்றிக் கூறுகிறாயே அது என்ன கண்ணுக்குத் தெரியாத மாயைகள் மூலம் மற்றவர்களுக்குத் துன்பங்களை விளைவிக்கக் கற்றுக் கொண்ட நம்மை மயக்கும் மாயையை விளைவிப்பவர்கள் யார் என்று இராவணன் கூறுவதைக் கம்பன் குறிப்பிடுகிறார்.

''பெண்பால் உரு, நான் இது கண்டது, பேதை நீ! ஈண்டு
எண்பாலும் இலாததோர் ஆண் உருஎன்றி என்னே!
கண்பால் உறு மாயை கவற்றுதல் கற்ற நம்மை
மண்பாலவரே கொல் விளைப்பவர் மாயை? என்றான்''

அப்போது சூர்ப்பணகை ''நீ கண்டது சீதையல்லள், அது வெறும் உரு வழித் தோற்றமேயாகும், என்று இராவணனிடம் கூற இவனும் அப்படியாயின் நீ எவ்வாறு இராமனைக் காண்கிறாய்'' என்று கேட்டான் அவளும் இரட்டைப் பொருளில் அவன் எந்நாள் எனக்கு இத்தகைய இன்னல்களைச் செய்தானோ அந் நாள் முதல் நானும் எதையும் மறக்க முடியவில்லை'' என்று கூறி ''நீ விரைவில் சென்று பூமாண் குழலாள் சீதை தனை விரைவில் வவ்வுதி'' என்று இராவணனை அவசரப்படுத்தினாள், என்பதைக் கம்பர் மிகவும் நுட்பமாகக் குறிப்பிடுகிறார்.



இங்கு இராவணன் சூர்ப்பணகை ஆகியோரின் உள்ளத்தில் ஏற்பட்டிருந்த ஆசை,

பெருங்காதல், காம நோய் ஆகியவற்றைக் கம்பன் மிக நயமாக அற்புதமான ஒரு காட்சியாக விவரித்துக் கூறுவதைக் காண்கிறோம்.

இராமாயண மகா காவியத்தில் இராவணனுக்குச் சீதைபால் எற்பட்ட காம வெறியும், பெரும்காதலும் அதன் விளைவாக அவன் சீதா பிராட்டியை அபகரித்து அசோகவனத்தில் கொண்டு வந்துச் சிறை வைத்ததும், அதைத் தொடர்ந்து இராமன் சீதையைத் தேடிவந்து வானரப் படையின் உதவி கொண்டு இலங்கை மீதுப் படையெடுத்து அரக்கர் படையை வென்று இராவணனைக் கொன்றுச் சீதையை மீட்பது இக்காவியத்தின் அடிப்படையான செய்தியாகும்.



10. மாயமான்

இராவணன் தன் மாமனான மாரீசனிடம் வந்து, ''மாயமான் வேடம் பூண்டு சீதையின் மனதைக் கவர வேண்டும்'' என்று கூறினான் சீதையைக் கவரும் முயற்சி வேண்டாம் என மாரீசன் எவ்வளவோ புத்தி கூறியும் இராவணன் கேட்கவில்லை. தான் சொல்வதைச் செய்யுமாறு ஆணையிட்டான். மாரீசன் மாயமான் வடிவம் கொண்டு சீதை முன் தோன்றினான்.

பொன்மானைக் கண்டு மயங்கிச் சீதை அதைப்பிடித்துத் தரும்படி இராமனை வேண்டினாள். அது ஒரு மாயமான் என்பதை உணர்ந்த இலக்குவன் ''இது ஒரு மாயமான் போலத் தென்படுகிறது, இது வேண்டாம்'' என்று எவ்வளவோ கூறியும் சீதை பிடிவாதமாக மானைப் பிடித்துத் தரும்படி இராமனிடம் வேண்டினாள்.

இராமனும் சீதையின் மீதுள்ள அன்பின் மிகுதியால் அவள் விரும்பியதைப் பெற்றுத்தர நினைத்துப் பொன்மானைப் பிடிக்கச் சென்றான். அந்த மாயமானோ இராமனுக்குப் போக்குக் காட்டி அவனை வெகு தூரம் இழுத்துச் சென்றது. அந்த மாயமானின் செய்கையைப் பற்றிக் குறிப்பிடும் போது

''குன்றிடை இவரும், மேகக் குழுவிடம் குதிக்கும், கூடச்
சென்றிடின் அகலும்; தாழின் தீண்டலாம் தகைமைத்து ஆகும்;
நின்றதே போல் நீங்கும், நிதிவழி நேயம் நீட்டும்,
மன்றல் அம்கோதை மாதர் மனம் எனப் போயிற்று, அம்மா''

என்று கம்பர் சிறந்த உவமையைக் காட்டி மாயமானின் செய்கையைப் பற்றிக் கூறுகிறார்.

பொன் மானைத் துரத்திக் கொண்டு இராமன் வெகு தொலைவு சென்று விட்டான். இனி அம்மானைத் துரத்திச் செல்வதில் பயனில்லை என்று கருதி அதன் மீதுத் தனது வில்லின் கணையை ஏவி விட்டான். அம்பு பட்ட மாயமான் வஞ்சனையாக ''சீதா, இலக்குவா'' என்று ''எட்டு திக்கினும் அப்புறமும் புக பெருங்குரல் எழுப்பிக் குன்றென வீழ்ந்தான்''

பெண்மையால் உரை செயப்பெறுதி

மாயமான் (மாரீசன்) குரலைக் கேட்டுச் சீதை வருந்தினாள், கலங்கினாள். இராமனுக்கு ஆபத்து ஏற்பட்டு விட்டதாகக் கருதினாள். இராமனைத் தேடும்படி இலக்குவனிடம் வற்புறுத்திக் கூறுகிறாள்.

''குற்றம் வீந்த குணத்தின் எம் கோமகன்,
மற்று அவ்வாள் அரக்கன் புரிமாயையால்
இற்று வீழ்ந்தனன், என்னவும், என் அயல்
நிற்றியோ இளையோர்! ஒரு நீ! என்றாள்''

''இராமன் வீழ்ந்த பின்னும் இன்னும் நீ இங்கேயே நின்று கொண்டிருக்கிறாயா என்று இலக்குவனிடம் கூறுகிறாள். இலக்குவனோ "இது மாயை, இராமனுக்கு ஒரு ஆபத்தும் ஏற்பட்டிருக்காது, இராமனுடைய பெருமையை நீங்கள் உங்கள் பெண்மை காரணமாக உணரவில்லை என்று கூறுகிறான்.

அதைக் கம்பன்,

''எண்மையார் உலகினில் இராமற்கு ஏற்றம் ஓர்
திண்மையார் உளர் எனச் செப்பற்பாலதோ!
பெண்மையால் உரைசெயப் பெறுதிரால்"! என
உண்மையான் அனையவட்கு உணரக் கூறினான்

எழுந்த குரல் இராமன் குரல் அல்ல, அது அரக்கனுடைய மாயக் குரல் என்று இலக்குவன் எடுத்துரைத்தான்.

அதைச் சீதை கேட்கவில்லை. நீ போகாவிட்டால் தீயில் வீழுந்து மடிவேன் என்று கூறி அழுகிறாள். அவளுடைய வற்புறுத்தலைத் தாளாமல் இலக்குவன் இராமனைத் தேடிச் சென்று விட்டான்.

காமம் வெம்சரம் படக்கருகும் மேனியான்

சீதை தனியே இருந்தாள். அங்கு இராவணன் தவ வேடத்தில் சென்றான். அது பற்றி

''ஊண் இலன் ஆம், என உலர்ந்த மேனியன்
சேண் நெறி வந்த தோர் வருத்தச் செய்கையன்;
காப்பரு நடுக்குறும் காலன், கையினன்;
மூப்பெனும் பருவமும் முனிய முற்றினான்''

இராவணன் இசையில் வல்லவன், சிறந்த இசை ஞானி. அதிலும் வீணையை மீட்டி இசைப்பதில் நிகரற்றவன். அவன் ஒரு மாவீரன் ஆயினும், சீதையின் பாலான காமவெறி பற்றிய காரணத்தால் உணவின்றி மெலிந்த மேனியனாக நெறியில்லாத செய்கையில் துவண்டான். அவன் வீணையின் இசைபட வேதம் பாடும் ஆற்றலும் அறிவும் பெற்றவன். இப்போது தாளத்தோடு இசைந்து நாட்டியம் ஆடுபவர்க்குத் துணையாகப் பாடுவதைப் போல சிரமப்பட்டான் என்று கம்பர் கூறுகிறார்.

சீதை இருந்த பர்ண சாலையின் வாசல் முன் இராவணத்துறவி சென்றான். அவனுடைய நாக்கு குளறுகிறது சொல் நடுங்குகிறது. அந்த நிலையில் குடிலுக்குள் இருப்பது யார் என்று கேட்டான். அந்த நிலையிலிருந்து இராவணனை ''காமம் வெம்சரம்படக் கருகும் மேனியான்'' எனக் கம்பர் குறிப்பிடுகிறார்.

''தோமறு சாலையின் வாயில் துன்னினான்,
நாமுதல் குழறிட நடுங்கு சொல்லினான்
யாவர் இவ்விருக்கையுள் இருந்துளீர்''என்றான்
காமன் வெம்சரம் படக் கருகும் மேனியான்''
என்பது பாடல்.

இராவணன் முதல் முதலாக சீதையைத் தனது கண்களால் காண்கிறான். அதை மிக நயமாகக் கம்பன் கூறுகிறார். அதே சமயத்தில் இராவணனுடைய காம வெறி நிறைந்த அவலத்தையும் சீதையின் பெருமைமிக்க கற்பு நிலையையும் தெளிவாகவும் உறுதியாகவும் தனதுக் கவிதைச் சொற்களில் கம்பன் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

''வெற்பிடை மதம் என வெயர்க்கும் மேனியன்,
அற்பின் நல்திளர புரள் ஓசை வேலையன்

பொற்பினுக்கு அணியினைப், புகழின் சேக்கையைக்
கற்பினுக்கு அரசியைக் கண்ணின் நோக்கினான்''

மகனையிடமிருந்து ஒழுகும் மத நீரைப் போன்று இராவணனுடைய உடம்பு வியர்த்துக் கொட்டுகிறது. அவன் ஆசையில் கடலைப் போன்றவன். அக்கடல், அலை ஓசை நிறைந்தும் அவ்வலைகள் மோதியும் பொங்கியும் கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. அந்த நிலையிலிருந்த இராவணன் பொற்பினுக்கு அணியினை, புகழின் இருப்பிடத்தைக் கற்பினுக்கு அரசியைத் தன் கண்களால் கண்டான் என்பதைக் கம்பநாடர் குறிப்பிட்டுக் கூறுகிறார்.

இராவணன் சீதையை விரைவில் கொண்டு போய் அரக்கியர் நடுவில் அசோகவனத்தில் சிறை வைத்தான் என்பதைக் கம்பர் பிரான்,

''வஞ்சியை அரக்கனும் வல்லை கொண்டு போய்ச்
செஞ்சவே திருஉருத்தீண்ட அஞ்சுவான்,
நஞ்சியல் அரக்கியர் நடுவண், ஆயிடைச்
சிஞ்சுப வனத்திடைச் சிறை வைத்தான்; அரோ''

என்று குறிப்பிடுகிறார்.

மாயமான் வடிவத்தில் வந்த மாரீசனைக் கொன்று விட்டுத் திரும்பிய இராமனை எதிர் கொண்டு இலக்குவன் வணங்கி, மாரீசன் செய்த வஞ்சனையை அறிந்து வேகமாகப் பர்ண சாலை வந்த போது அங்கு சீதையைக் காணவில்லை. நிலம் பெயர்ந்திருந்ததும் தேர் வந்து திரும்பியதும் முதலான அடையாளங்களைக் கண்டு தெற்கு நோக்கி இருவரும் நடந்தனர். வழியில் இராவணனால் அடிபட்டு குற்றுயிராய்க் கிடந்தக் கழுகு வேந்தன் சடாயுவைக் கண்டனர். நடந்த விவரங்களைக் கூறினான். சீதையை மண்ணினோடு இராவணன் எடுத்துச் சென்ற போது அவனை எதிர்ப்பட்டுத் தடுத்தேன் கடும் போராட்டத்திற்குப் பின்னர் அவன் தனதுத் தெய்வீகவாளால் என் சிறகுகளை வெட்டி என்னைக் கீழே தள்ளி விட்டுச் சீதையைத் தூக்கிக் கொண்டு அரக்கன் ஓடிப் பறந்து விட்டான், என்று நடந்த செய்திகளைத் தெரிவித்தான்.

இராமன் அது கேட்டுக் கடுஞ்சினம் அடைகிறான். தன் மனைவியாளை மற்றொருவன் அபகரித்துச் சென்றது கேட்டால் எந்த ஆண் மகனுக்கும் கடும் கோபம் வருவது இயல்பாகும். இத்தகைய கோபம் இராமனுக்கு வந்தது, என்பதைக் கம்பன் தனதுக் கவிதைச் சொற்களில் குறிப்பிடுவது தனி இலக்கியத் தன்மை கொண்டதாகும்.

பெண் ஒருத்தியை அவள் தனியாக இருந்த போது பேதைவாழ் அரக்கன் கொண்டு சென்றான். உன்னைக் குற்றுயிராக்கி வீழ்த்தியுள்ளான். இதைப் பொறுத்துக் கொள்ளமாட்டேன். ஈரேழு பதினான்கு உலகங்களையும் அழித்து விடுகிறேன் பார் என்று கடுங் கோபத்துடன் இராமன் கூறுகிறான்.

''பெண்தனி ஒருத்தி தன்னைப் பேதை வாழ் அரக்கன் பற்றிக்
கொண்டனன் ஏக, நீ இக்கோள் உறக் குலுங்கல் செல்லா
எண் திசை இறுதியான உலகங்கள் இவற்றை இன்னே
கண்ட வானவர் களோடும் களையுமாறு இன்று காண்டி''

''தாரகை உதிருமாறும்; தனிக்கதிர் பிதிரு மாறும்,
பேர் அகல வானம் எங்கும் பிறங்கு எரி பிறக்குமாறும்
நீரொடு நிலனும், காலும், நின்றவும் திரிந்த யாவும்,
வேரொடும் பறியுமாறும், விண்ணவர் விளியு மாறும்''

என்றும்,

இக்கணம் ஒன்றில், நின்ற ஏழினோடு ஏழு மேல் கீழ்
மிக்கன போன்று தோன்றும் உலகங்கள் வீயுமாறும்
திக்குடை அண்ட கோளப் புறத்தவும் தீந்து நீரின்
மொக்குளின் உடையுமாறும் காண்" என முனியும் வேலை.

என்றும் கடுமையான சொற்களில் இராமன் பேசுகிறான். இதைக் கேட்டு சூரியனும் மறைந்தான். திசையானைகள் நீங்கின. உலகமெல்லாம் துஞ்சின. மிக்கத் துணிவு கொண்ட இலக்குவன் கூட அஞ்சினான்.

அப்போது சடாயு பேசத் தொடங்கினான். சடாயு அனுபவ அறிவு மிக்க பேரறிஞன். மிக்க பலவான். இராவணனும் தனது தவம்மிக்க அரன்தந்த வாளால் அன்றி அவனை வென்றிருக்க முடியாது. அப்படியிருந்தும் இராவணனைக் கொத்திக் குதரி அவனுடைய வில்லையும் சூலத்தையும் ஒடித்து மற்றும் அரக்கனுடைய கவசத்தைக் கிழித்து தேரையும் தேர்ப்பாகனையும் குதிரைகளையும் வீழ்த்தி விட்டான்.

குற்றுயிராய்க் கிடந்த ஜடாயு, இராமனுக்கு ஆறுதல் கூறிப் பேசுகிறான். ஜடாயு தனது மரணத் தறுவாயில் அறிய பல கருத்துக்கள் நிறைந்த வார்த்தைகளில் பேசுகிறான். அவை பொருள் பொதிந்தவை

''நாட்செய்த கமலத்து அண்ணல், நல்கின நவையில் ஆற்றல்
தோட்செய்த வீரம் என்னில் கண்டனை; சொல்லும் உண்டோ?
தாட்செய்ய கமலத்தானே முதலினர், தலைபத்து உள்ளார்க்கு
ஆட்செய்கின்றார்கள் அன்றி, அறம் செய்கின்றார்கள் யாரே?

இராவணன் தவவலிமையும், ஆற்றலும், புகழும் மிக்கவன். அத்தகைய அரிய பேராற்றலையுடைய பத்து தலையனுக்கு நான்முகன் உட்பட தேவர் உட்பட அனைவரும் உட்பட்டு நிற்கிறார்களே யல்லாமல் அறத்தைப் பார்த்துச் செயல்படவில்லை என்று ஜடாயு கூறுகிறான். இனி நீதான் அவனை வென்று அறத்தை நிலை நாட்ட வேண்டும் என்னும் கருத்தில் இராமனிடம் பேசுகிறான். இன்னும்

''தெண்டிரை உலகம் தன்னில் செறுநர் மாட்டுஏவல் செய்து
பெண்டிரின் வாழ்வார் அன்றே; இது அன்றே தேவர் பெற்றி
பண்டுலகு அளத்தோன் நல்கப் பாற்கடல் அமுதம், அந்நாள்
உண்டிலர் ஆயின், இந்நாள் அன்னவர்க்கு உய்தல் உண்டோ?

இக்கடல் சூழ்ந்த உலகத்தில் பகைவர்களுக்கு ஏவல் செய்து கொண்டு தேவர்களும் பெண்டிரைச் சூழ்ந்து வாழ்ந்து கொண்டிருந்தனர். உலகளந்த பெருமாளான திருமால் அன்று கொடுத்த பாற்கடல் அமுதம் உண்டிலராயின் அத்தேவர்களுக்கும் இன்றும் உய்யும் வழி இல்லாமல் இருந்திருக்கும் என்றும் கூறுகிறான்.

இங்கும் திருமால் பெருமை கூறப்படுகிறது.

''வம்பு இழைக் கொங்கை வஞ்சி வனத்திடைத் தமியள் வைகக்
கொம்பிழை மானின் பின்போய்க் குலப்பழி கூட்டிக் கொண்டீர்
அம்பு இழை வரிவில் செங்கை ஐயன் மீர்! ஆயும் காலை
உம்பிழை என்பது அல்லால், உலகம் செய்பிழையும் உண்டோ?

அழகிய நங்கையான சீதை வனத்தில் வாழும் போது அவளைத் தனியே விட்டுவிட்டு நீங்கள் ஒரு மானின் பின்னால் போனது தவறாகும். அதனால் குலப்பழியைக் கூட்டிக் கொண்டீர்கள். ஆராய்ந்து சிந்தித்துப் பார்த்தால் இதில் உங்கள் பிழை உள்ளதே அன்றி உலகத்தின் பிழை இல்லை. எனவே உலகின் மீது கோபம் கொள்வதில் என்ன நியாயம் இருக்கிறது.

''ஆதலால் முனிவாய் அல்லை; அருந்ததி அனைய கற்பின்
காதலாள் துயரம் நிக்கித் தேவர்தம் கருத்து முற்றி
வேதநூல் முறையின் யாவும், விதியுளி நிறுவி, வேறும்
தீதுஉள துடைத்தி'' என்றான் சேவடிக் கமலம் சேர்வான்''

இனி வருந்தி என்ன பயன்? ''அருந்ததியைப் போன்ற கற்பில் சிறந்த சீதையைப் பற்றிய துயரத்தை தணித்துக் கொண்டு தேவர்களின் விருப்பத்தை நிறைவேற்றி வேத நூல் முறைகள் அனைத்தையும் விதிமுறைகளின் படி நிலை நிறுத்தி மற்றுமுள்ள தீமைகளையும் துடைக்க வேண்டிய கடமைகளைச் செய்யுங்கள்'' என்றும் ஜடாயு கூறுகிறான்.

இங்கு சீதையைப் பற்றிய கவலையைக் குறைத்து நன்முறைகளை நிலை நிறுத்தித் தீமைகளை ஒழிக்கும் கடமைகளை நிறைவேற்றுங்கள் என்று ஜடாயு இராம இலக்குவர்களுக்கு அறிவுரை கூறுவதைக் காண்கிறோம்.

இவ்வாறு அறிவுரைகள் கூறிவிட்டு பஞ்ச பூதங்கள் அழியும் காலத்திலும் அழியாத இறைவனுலகை அடைந்தான் கழுகரசன் என்று கம்பர் கூறுகிறார்.

ஆங்கொரு காதல் கட்ட

இராமன் வருந்துகிறான். அவனுக்குத் துக்கம் மேலிடுகிறது. அறத்தின் வழிநில்லாத அரக்கனால் சீதையை இழந்தேன். எனது ஆண்மையை இழந்தேன். நான் பிறந்து என்ன பயன், தவம் செய்து என்ன பயன், எனது பெற்ற தாதையைப் போன்ற சடாயுவை இழந்தேன். நான் வாழ்ந்து என்ன பயன், உயிரைத் துறப்பதே மேல் என்று வருந்துகிறான். சீதையைப் பற்றிய நினைவு அவனை வலுவாக வருத்துகிறது. அப்போது இலக்குவன் இராமனைத் தேற்றி விதியின் தன்மை பழுதில்லாமல் விளைந்தது. மற்றவைகளைப் பற்றி நினைத்துக் கவலைப்படுவதில் என்ன பயன்? அந்த அரக்கர்களைக் கொன்ற பின் அல்லவா நமது துயர்கள் அனைத்தும் தீரும் என்று ஆறுதல் கூறினான்.

இராமனும் அது கேட்டு அயர்வு நீங்கித் துயர் அடைவது அறியாமை தாதை கூறிய வழியில் செம்மையான செயல்களைச் செய்து முடிப்போம் என்று உறுதி கொள்கிறான்.

மேல் நடக்க வேண்டிய கடமைகளைச் செய்து முடிக்கத் தங்கள் பயணத்தை இருவரும் மேலும் தொடர்ந்தனர்.

பகல் போயிற்று. இராமபிரான் படும் துன்பங்களைக் கண்டு வருந்தி சூரியனும் மேற்குக் கடலில் நீரில் மூழ்கி மறைந்தான். தண் தமிழ்த் தென்றல் வீசும் மலைச் சாரல் பகுதியின் மீது விண்வெளியில் அழகிய சந்திரன் தோன்றினான். சீதையின் முகம் இராமனுக்கு வானத்தில் தெரிந்தது. அவ்வழகிய முகம் இராமனுடைய காதலைத் தூண்டியது, என்று கம்பர் குறிப்பிடுகிறார்.

தண் தமிழ் போன்ற இனிமையான மலைச்சாரலும் சந்திரனின் குளிர்ந்த நிலவும் இராமனுடைய காதலைத் தூண்டியது. இராமன் சீதையை நினைத்து வருந்தினான் என்பது கம்பர் வாக்கு.

''வண்டுளர் கோதைச் சீதை வாள்முகம் பொலியவானில்
கண்டனென் என்ற வீரற்கு ஆங்கொரு காதல் காட்டத்
தண் தமிழ்த் தென்றல் என்னும் கோள் அராத் தவழும் சாரல்
விண்தலம் விளங்கும் செவ்வி வெண்மதி விரிந்தது அன்றே''

என்று கூறும் படியாக நிலவொளி பரந்து விரிந்து பரவியது.

போக்கரும் காதலும்

சீதையின் பிரிவாற்றாமையால் இராமன் வருந்துகிறான். ஒரு பக்கம் மானம், மறுபக்கம் காதல். இவற்றுக்கிடையில் சிக்கி இராமன் தவிக்கிறான். இத்துன்பம் இராமனை வாட்டுகிறது. பூண்டமானமும் போக்கரும் காதலும்'' என்று கம்பர் குறிப்பிடுகிறார். இவ்வாறு அவமானத்திற்கும் தனது உள்ளத்திலிருந்து நீக்க முடியாத காதலுக்கும் இடையில் சிக்கி வருந்தி இராமன் தனக்கு ஒரு வில்லும் வேண்டுமோ என்று தனது வீரத்தையும் பழித்துக் கொள்கிறான்.



''பூண்ட மானமும், போக்கரும் காதலும்
தூண்டநின்றிடை தோம் உறும் ஆருயிர்
மீண்டும் மீண்டும் வெதுப்ப
வெதும்பினான்;
வேண்டுமோ எனக்கு
இன்னமும் வில் என்பான்''

என்பது கம்பரது அரிய பாடல்.

உலகெலாம் உள்ள பல்லுயிர் களையும் காப்பதற்கு நேர்ந்த யான் எனது துணைவியான ஒரு குல மங்கையைக் காப்பதற்கு முடியாமல் அவளுடைய துயரைத் தீர்ப்பதற்கு முடியாமல் அதற்கான திறன் இல்லாமல் இருக்கிறேன், எனது

வல்லமையை என்ன வென்று கூறுவது என்று இராமன் வருந்துகிறான்.

''நின்று பல்லுயிர் காத்தற்கு நேர்ந்தயான்,
என்துணைக்குல மங்கை ஓர் ஏந்திழை
தன்துயர்க்கடல் தீர்க்கும் சதிர் இலேன்;
நன்று நன்று என் வலி என நாணுமால்''

என்று இராமன் வருந்தி வெட்கப்படுவதாகக் கம்பர் குறிப்பிடுகிறார்.

இங்கு சீதையின் பால் இராமனுக்கு உள்ள காதல் மிகுதியையும் அவளுக்கு ஏற்பட்டத் துன்பத்தைப் போக்க முடியாமல் இராமன் வருந்துவதையும் கம்பன் மிகவும் நுட்பமாகத் தனது பாடல்களில் குறிப்பிடுகிறார்.

ஆரண்ய காண்டத்தில் சூர்ப்பணகையின் பெருங்காதல் பற்றியும் இராவணனுடைய பெருங்காதல் மற்றும் காம உணர்வின் மேலாண்மை பற்றியும் சீதை மீதான காதல் மிகுதியால் இராமன் மாயமானுக்குப் பின்னால் போனதும் சீதையின் பிரிவால் இராமன் காதல் துன்பம் அடைவதும் பற்றியும் மிகவும் அற்புதமாகக் கம்பன் காட்சியைக் காண்கிறோம்.



11. ஆசையின் வந்த அயோமுகி

இராமனும் இலக்குவனும், சீதையைத் தேடிக் கொண்டுக் காட்டு வழியே பலகாத தூரம் சென்றனர். மாலை வந்தது. ஒரு சோலையை அடைந்தனர். சூரியன் மறைந்தான். இருவரும் அச்சோலையில் தங்கு வதற்கு ஏற்பாடு செய்து கொண்டனர். இராமன் இலக்குவனிடம் நீர் இருக்குமிடம் தேடி சற்று நீர் கொண்டு வரும்படி கூறினான்.

இலக்குவன் தண்ணீர் இருக்குமிடம் தேடிச் சென்றான். சுற்றிலும் தேடினான். எங்கும் காணவில்லை. அப்போது அயோமுகி என்னும் அரக்கி இலக்குவனைக் கண்டாள். அவனை விரும்பி அவள் அழுந்திய சிந்தையளாகி காதல் உணர்வு பெருக அவனெதிரில் வந்து நின்றாள். தனது காம நோயைத் தீர்க்கும்படி இலக்குவனை வற்புறுத்தினாள்.

"அழுந்திய சிந்தையள் ஆகி, அரக்கி
எழுந்துயர் காதலின் வந்து எதிர்நின்றாள்
புழுங்கும் என் நோய் கெடப்புல்லு வென்; அன்றி
விழுங்கு வெனாம் என விம்மல் உழன்றாள்''

என்று கம்பநாடர் குறிப்பிடுகிறார்.

இங்கு அயோமுகி என்னும் அரக்கிக்கு ஏற்பட்ட காம வெறி பற்றிச் சுருக்கமாக வெனினும் அழுத்தமாகக் கம்பன் எடுத்துக் கூறுகிறார்.

அவ்வனத்தில் அயோமுகி இலக்குவனைக் காண்கிறாள். அழுந்திய சிந்தையளாகிறாள். எழுந்துயர் காதலின் வந்து எதிர் நின்றாள். புழுங்கும் என் நோய் கெடப்புல்லுவேன் என்கிறாள். இல்லாவிட்டால் உன்னை விழுங்கி விடுவேன் என்கிறாள். அவ் விம்மல் உழன்றாள் இன்னும் கூறுகிறாள்.

''நான் உன்னை விரும்பி வரும் போது நீ மறுப்பாயேல், உன்னைப் பிடித்துக் கடத்திக் கொண்டு போய் உன்னை விரும்பி மார்பிலே கட்டித் தழுவிக் கொள்வேன்''

என்று அவள் தனக்குள் கூறிக் கொள்வதைக் கம்பன் குறிப்பிடுகிறார்.

''இரந்தனென் எய்திய போது இசையாது
கரந்தனனேன், நனி கொண்டு கடந்தென்
முரஞ்சினில் மேவி முயங்குவென்; என்று
விரைந்தெதிர் தந்தனள் தீயினும் வெய்யாள்''

என்பது கம்பனுடைய அருமையான கவிதை.

காம உணர்வின் மூலம் எழும் நிறைந்த ஆசையின் காரணமாக நீர் நிறைந்து பொங்கிய கண்களில் குன்றி மணியில் உள்ள கருப்பு வட்டம் பளிச்சென்று மின்னுவதைப் போல தனது கண்களால் அகல விரித்து கொண்டு அவள் வருவதை நட்சத்திரங்களின் ஒளியில் லேசான வெளிச்சம் கொண்ட இருளில் திரியும் இலக்குவன் கண்டான்.

''நின்றனள் ஆசையின் நீர்கலுழும் கண்
குன்றி நிகர்ப்ப குளிர்ப்ப விழிப்பாள்;
மின் திரிகின்ற எயிற்றின் விளக்கால்
கன்று இருளில் திரி கோளரி கண்டான்''

என்ற கம்பர் குறிப்பிடுகிறார்.

இலக்குவன் அவளைக் கண்ட போது

''பாவியர், பண்பிலர், என்னிடம் காம வெறி கொண்டு நெருங்கி வருகிறாள்'' என்று உள்ளத்தில் எண்ணம் கொண்டு விலங்குகள் நிறைந்து திரியும் இவ்வனத்தில் இருளில் இங்கு வந்துள்ளாய் நீ யாரடி, ''மாவியல் கானின் வயங்கிருள் வந்தாய் யாவள் அடி உரைசெய்'' என்று கேட்டான்.

அவன் பேசியதற்கு எதிர் பேசுவதற்கு நாணமில்லாதவளாய் காம உணர்வால் கடுமையாக ஊசலாடிக் கொண்டிருந்த உள்ளத்தவளாய் ''நேசமில் அன்பிலனாகிய நின்பால் ஆசையின் வந்த அயோமுகி'' என்றாள் என்று கம்பன் மிக நுட்பமாகக் குறிப்பிடுகிறார்.

என்னை மணந்து கொள் என்று இலக்குவனை வேண்டுகிறாள், அயோமுகி. இலக்குவன் மறுக்கிறான். அப்போது அந்த அரக்கி இலக்குவனை பலாத்காரமாகக் கட்டிப்பிடித்துத் தழுவித் தூக்கிக் கொண்டு வானில் சென்றாள். இலக்குவன் கடுங்கோபம் கொண்டு அவளுடைய காதுகளையும், மூக்கினையும், முலைக் காம்புகளையும் அறுத்தான். அவள் அலறிக் கொண்டு கீழே விழுந்தாள். அவளுடைய பிடியிலிருந்து இலக்குவன் விடுபட்டு வேகமாக இராமனிடம் வந்து சேர்ந்தான்.

அயோமுகியின் கதை இராமாயணப் பெருங்கதையில் இடையில் ஒரு சிறுகதை.

இவ்வாறு பல சிறு நிகழ்ச்சிகளும் சிறு கதைகளும் காரணத்தோடு இடையில் வருகின்றன.

அயோமுகியின் கதையில் அவ்வரக்கியின் காம வெறி இயல்பு சுட்டிக் காட்டப்படுகிறது.

இக்கதையில் முக்கிய பாத்திரம் இலக்குவன். புலனடக்கம் கொண்டவன். இராமன் மீதுள்ள பக்தியினால் அவனைத் தொடர்ந்து வருகிறான். இலக்குவனுடைய புலனடக்கத்திற்கு ஆதாரமாக ஒரு சோதனையாக இந் நிகழ்ச்சி வருவதைக் காணலாம்.

இலக்குவன் திரும்பி வருவதில் கால தாமதம் ஏற்படுகிறது. இலக்குவனைக் காணாமல் சீதையைப் பிரிந்த இராமன் தன் தம்பியையும் காணாமல் அவனையும் அரக்கர்கள் தூக்கிக் கொண்டு போய் விட்டார்களோ என்று மனம் தளர்ந்துத் தற்கொலை செய்து

கொள்ள முயலுகிறான். அந்த நேரத்தில் அரக்கியின் சத்தம் கேட்கிறது. இலக்குவன் இராமனிடம் வந்து சேர்ந்து நடந்ததைக் கூறுகிறான்.



12. கிட்கிந்தையில்

இராமனும் இலக்குவனும், சுக்கிரீவனையும் அனுமனையும் சந்தித்தனர். நட்பு கொண்டனர். பரஸ்பரம் உதவி செய்து கொள்வதாக அரசியல் உடன்படிக்கை செய்து கொண்டனர். அந்த உடன் படிக்கையின் படி இராமன் வாலியைக் கொன்று சுக்கிரீவனுக்கு ஆட்சியையும் வாலி வவ்வி வைத்திருக்கும் சுக்கிரீ வனுடைய தாரத்தையும் மீட்டுக் கொடுப்பதாக வாக்குறுதி கொடுக்கிறான். ''தலைமையோடு நின் தாரமும் உனக்கின்று தருவேன்'' என்று இராமன் சுக்கிரீவனிடம் கூறுகிறான்.



இவ்வாறு இராமனும் சுக்கிரீவனும் உடன்பாடு செய்து கொண்டு அமர்ந்திருந்த போது சீதையின் அணிகலன்களை இராமனுக்குக் காட்டினர். இராவணன் சீதையை வானவெளியில் கொண்டுச் சென்ற பொழுது சீதைத் தனது அணிகலன்களை கீழே விட்டெறிந்து விட்டுச் சென்றாள். அவ்வணிகலன்களை அடையாளம் கொண்டு தன்னைத் தேடிக் கண்டு பிடிக்க இவை உதவலாம் என்று கருதி அவ்வாறு செய்திருக்கிறாள்.

அவ்வணிகலன்களைக் கண்ட இராமன் அவை சீதை யினுடையவைத் தான் என்று அடையாளம் கண்டுச் சீதையை நினைந்து வருத்தமடைந்து சோர்வடைந்தும் பேசுகிறான்.

வில்லைக் கையிலேந்திய வீரனாகிய நான் உயிருடன் இருக்கும் போதே எனது மனைவி தனது அணிகலன்களைக் கழற்றி எறிய

வேண்டிய தேற்பட்டு விட்டதே இந்த நிலை கற்புடைப் பெண்டிரில் வேறு யாருக்கு ஏற்பட்டிருக்கும்? என்று நினைத்து வருந்துகிறான். கணவன் இறந்த போது தான் கற்புடைப் பெண்டிர் தங்கள் அணி கலன்களைக் கழற்றுவது நமது நாட்டுப் பழக்கங்களில் ஒன்றாகும். இவ்வாறு நினைத்து சீதைக்கு நான் இருக்கும் போதே இந்தக் கதி ஏற்பட்டு விட்டதே என்று இராமன் வருந்துகிறான்.

ஒரு பெண்ணிற்கு யாராவது துன்பம் விளைவித்தால் வழியில் செல்பவர்கள் கூடத் தலையிட்டு அவளைக் காப்பாற்றுவார்கள். ஆனால் என்னையே நம்பி இருந்தவளை என்னால் அவளுடைய துயரத்தைத் தீர்க்க முடியவில்லையே என்று இராமன் வருந்துகிறான்.

''ஆறுடன் செல்பவர், அம் சொல்மாதரை
வேறுளார் துயர் செயின், விலக்கி செம்சமத்து
ஊறு உறத்தம் உயிர் உகுப்பர்; என்னையே
தேறினள் துயரம் நான் தீர்க்க கிற்றிலேன்''

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் நடப்பதும், அத்தகைய வன்முறைகளை எதிர்த்து அவைகளைத் தடுப்பதும் அவ்வாறு துன்பமடைந்தவர்களைக் காப்பாற்றுவதும் நல்லோர்களின் கடமை யாகும் என்னும் கருத்தும் இங்கு வெளிப்படுவதைக் காண்கிறோம்.

என்னுடைய தந்தையின் மெய்ம்மையைக் காப்பாற்றுவதற்காக எனது தந்தையின் மீது பழி ஏற்படாமல் இருப்பதற்காக நான் மகுடம் சூட மறுத்தேன். இப்போது கரும்பின் சுவையைப் போன்ற சொல்லழகு உடைய சீதையை ஒரு பகைவன் கொண்டு செல்ல அவளைக் காப்பாற்ற முடியாத பழி என் மீது விழுந்திருக்கிறது. நான் தவறு இழைத்து விட்டேன். அதிலிருந்து நான் தப்ப முடியாது என்று இராமன் வருந்துகிறான்.

''விரும்பு எழில் எந்தையார் மெய்ம்மை வீயுமேல்,
வரும்பழி என்று யான் மகுடம் சூடலேன்;
கரும்பு அழிசொல்லியைப் பகைஞன் கைகொளப்
பெரும்பழி சூடினேன்; பிழைத்தது என் அரோ?''

சீதையைப் பற்றிக் குறிப்பிடும் போது இராமன் என்னையே தேறினள், என்னை நம்பியே இருந்தவள், என்றும் கரும்பு அழி சொல்லியை கரும்பு ரசத்தை மிஞ்சிய இனிமையான சொற்களைக் கொண்ட சீதை என்றும் கூறுவதில் சீதை மீது இராமனுக்குள்ள நிறைந்த அன்பை உயிருக்கு உயிரான காதலைக் குறிக்கிறது.

தாரையின் பெண்மை பற்றி

இராமனுடைய ஏற்பாட்டின் படி சுக்கிரீவன் தனது அண்ணன் வாலியைப் போருக்கு அழைக்கிறான். வாலி போருக்கு எழுகிறான். அப்போது வாலியின் துணைவி தாரை தடுக்கிறாள். தாரையைப் பற்றிக் கம்பன் கூறும் போது. ''ஆயிடைத் தாரை என்ற அமிழ்தில் தோன்றிய வேயிடைத் தோளினாள் இடைவிலக்கினாள்'' எனச் சிறப்பாக குறிப்பிடுகிறார்.

என்னுடன் போர் செய்ய வருபவனின் பலத்தில் பாதி எனக்கு வந்துவிடும் என்னும் வரம் எனக்குள்ளதை மறந்து விட்டாயா? என்னையாரும் வெற்றி கொள்ள முடியாது. நீ கவலைப்பட வேண்டாம் என்று தன்னைத் தடுத்த தன் மனைவி தாரையிடம் மாவீரன் வாலி கூறுகிறான்.

மீண்டும் தாரை கூறுகிறாள் உமது தம்பிக்கு ஏதோ ஒரு துணை கிடைத்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவருக்கு உம்மை எதிர்க்கும் துணிச்சல் ஏற்பட்டிருக்காது. உம் உயிரைக் கொல்வதற்கு இராமன் என்று ஒருவன் வந்திருப்பதாக எனக்கு வேண்டியவர்கள் கூறினார்கள்.

''அன்னது கேட்டவள், அரச! ஆயவற்கு
இன்னுயிர் நட்பமைந்து இராமன் என்பவன்
உன் உயிர் கோடலுக்கு உடன் வந்தான், எனத்
துன்னிய அன்பினர் சொல்லினார்; என்றாள்''

என்று கூறுகிறாள்.

தாரை மிகவும் நுட்பமான அறிவு கொண்டவள். பாரதப் பெண்மணிகளுக்கு இயல்பாக உள்ள பொதுஅறிவு மிக்கவள். வாலி வீரத்தில் மிக்கவன். மாவீரன். மிக்க பலம் கொண்டவன். தன் பலத்தின் மீது அளவு கடந்த நம்பிக்கை கொண்டவன். தன்னை யாராலும் வெல்ல முடியாது என்னும் தனியாண்மைக் கருத்துக் கொண்டவன். அத்துடன் இராமனைப் பற்றி பல விவரங்களையும் தெரிந்து கொண்டிருந்தவன். எனவே சுக்கிரீவனுக்குத் துணையாக இராமன் வந்துத் தன்னைக்கொல்ல வந்துள்ளான் என்று தாரை சொன்ன செய்தியை அவன் நம்பவில்லை. தாரை அறியாமையால் இராமனைப் பற்றி இவ்வாறு கூறுகிறாள் என்று கருதி, இராமன் அறத்தின் நெறிகளைல்லாம் அறிந்தவன். தனக்குக் கிடைத்த ஆட்சிச் செல்வத்தைத் தனது தம்பிக்குக் கொடுத்து விட்டுக் காட்டிற்கு வந்தவன். தம்பியர் அல்லது தனக்கு வேறு உயிர் இல்லாதவன்.

''எம்பியும்யானும் உற்று எதிர்ந்த போரிடை
அம்பிடை தொடுக்குமோ, நீ உனது பெண்
மையால் இவ்வாறு கூறுகிறாய்''

''உழைத்தவல் இருவினைக்கு ஊறு காண்கிலாது
அழைத்தயர் உலகினுக்கு, அறத்தின் ஆறெலாம்
இழைத்தவற்கு, இயல்பல இயம்பி என் செய்தாய்!
பிழைத்தனை பாவி உன் பெண்மையால்'' என்றான்

பெண்மையால் இப்பிழையைச் செய்துள்ளாய் என்று வாலி கூறுகிறான். இங்கு பெண்மை. என்பது பேதமை என்னும் பொருளில் அறியாமை என்னும் பொருளில் வாலி குறிப்பிடுகிறான்.

பெண்களைப் பற்றி பெண்மையைப் பற்றி இராமாயணப் பெருங்கதையில் வரும் ஒவ்வொரு பெரும் பாத்திரமும் எத்தகைய கருத்தைக் கொண்டிருந்தார்கள் என்பதை அவ்வப்போது கம்பன் மிகவும் துல்லியமாக எடுத்துக் கூறுவதைக் காண்கிறோம்.

இல்லறம் துறந்த நம்பி

இராமனுக்குச் சீதை மீது அளவற்ற அன்பும் காதலும் நிறைந்து இருந்தது. அது தெய்வீகக் காதலாகும். ஆயினும் மனிதப் பிறப்பில் ஏற்படும் பல பலவீனங்களும் இராமனிடம் வெளிப்படுவதைக் கம்ப காவியம் காட்டுகிறது.

இராமனுடைய அம்பு வாலியின் மார்பில் பாய்கிறது. வாலிக்கு இராமனைப் பற்றிய கருத்து மிக உயர்ந்ததாக இருந்தது. அறநெறிகளையெல்லாம் அறிந்தவன், அருளின் ஆழியான் இருமை நோக்குறும் இயல்பினன், ஏற்ற பேர் உலகெல்லாம் ஏய்தியவன் தன் துணை ஒருவரும் தன்னில் வேறு இலான் தம்பியர் அல்லது தனக்கு வேறு இல்லை என்று எண்ணி ஏய்ந்தவன், என்றெல்லாம் இராமனைப் பற்றிப் பெருமையாகக் கருதியிருந்தவன்.

இப்போது தன் மார்பில் தைத்திருக்கும் அம்பு இராமபிரானுடையது என்று கண்ட போது

''இல்லறம் துறந்த நம்பி, எம்மனோர்க்காகத் தங்கள்
வில்லறம் துறந்த வீரன் தோன்றலால், வேத நல்நூல்
சொல் அறம் துறந்திலாத சூரியன் மரபும் தொல்லை
நல்லறம் துறந்தது என்னா''நகைவர நாண்ண உட்கொண்டான்.

''எண்ண உற்றாய், என் செய்தாய்'' என்று கேட்கிறான்.

"கோவியல் தருமம் உங்கள் குலத்து உதித்தோர் கட்கெலாம்,
ஓவியத்து எழுத வொண்ணா உருவத்தாய் உடைமை யன்றோ?
ஆவியைச் சனகன் பெற்ற அன்னத்தை அமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்த பின்னைத் திகைத்தனை போலும் செய்கை''

என்று கேட்கிறான்.

தனது காதல் மிகுந்த மனைவியை இழந்த போது கருத்தழிந்து திகைத்துப் போய் நிலையிழந்து தர்மத்திற்கு மாறான செய்கையைச் செய்து விட்டானோ என்று வாலி கூறுவதைக் கம்பன் குறிப்பிடுகிறார்.

அழித்தனை மனையின் மாட்சியை

வாலி எழுப்பிய வசைகளுக்கும் கேள்விகளுக்கும் பதில் கூறும் வகையில் இராமன் பேசுகிறான். வாலியிடம் ''மற்றொருவன் புனைர்தாரம் ஆவதைத் தாங்கும் தருக்கு, அரும்கடி மங்கையர் திறம் திறம்பல், தவறான ஒழுக்கங்கள் என்றும், அருமை உம்பிதன் ஆருயிர்த் தேவியைப் பெருமை நீங்கினை'' என்றெல்லாம் வாலியின் பால் இருந்த ஒழுக்கக் குறைவினை இராமன் சுட்டிக்காட்டுகிறான்.

வாலி அதற்கான பதிலைக் கூறுகிறான். சமுதாயச் சூழலுக்கு கேற்ப பாலுறவுப் பண்பாடுகள் அமைந்திருப்பதாக வாலியின் பதில் அமைந்திருந்தது. ஒவ்வொரு குலத்திற்கும் ஏற்றவாறு பால் ஒழுக்கம் அமைந்திருப்பதாக வாலி கூறுகிறான்.

''ஐய! நுங்கள் அரும் குலக்கற்பின் அப்
பொய்யில் மங்கையர்க்கு ஏய்ந்த புணர்ச்சி போல்
செய்திலன் எமைத் தேமலர் மேலவன்;
எய்தின் எய்தியதாக இயற்றினான்''

என்றும்

''மணமும் இல்லை மறை நெறிவந்தன
குணமும் இல்லைக் குலை முதற்கு ஒத்தன;
உணர்வு சென்றுழிச் செல்லும் ஒழுக்கலால்
நிணமும் நெய்யும் இணங்கிய நேமியாய்!''

என்றும் வாலி கிட்கிந்தை சமுதாயத்தின் ஒழுக்க நெறி குறித்துக் கூறுகிறான். "அவரவர் விருப்பம் படியும் நோங்கிய படியும் உணர்வு செல்லும் வழியில் செல்வதே எங்கள் குலவழி, அதில் என்ன குற்றம் கண்டீர்" என்று தங்கள் குல ஒழுக்கம் பற்றி வாலி பேசுகிறான்.

இங்கு கிட்கிந்தையின் உண்மை நிலைமைப் பற்றி வாலி குறிப்பிடுகிறான்.

ஆனால் குல ஒழுக்கம் என்று கூறி குறைகளையும் கேடுகளையும் நியாயப்படுத்துவது கூடாது. எனவே ஐம்புலன்களையும் ஒரு முகப் படுத்தி அறிவின் வழியில் செல்வதே அற நெறியல்லாமல் குல வழி என்று எதுவுமில்லை. ஒழுக்கம் என்பது அறிவைப் பொருத்ததாக இருக்க வேண்டியதல்லாமல் உடலைப் பொருத்ததாக இருத்தலாகாது. அவை யெல்லாவற்றையும் நன்கு அறிந்த நீயே அப்படி நடந்து கொள்ளலாமா?

''பொறியின்யாக்கையதோ? புலன் நோக்கிய
அறிவின் மேலதன்றோ அறத்து ஆறுதான்;
நெறியின் நோன்மையை நேரிது உணர்ந்த நீ
பெறுதியோ பிழை உற்றுறு பெற்றி தான் என்றும்
சிந்தை நல்லறத்தின் வழிச் சேர்தல் வேண்டும்''

எனவும் இராமன் கூறுகிறார்.

நன்று தீ தென்று பிரித்துப் பார்க்கும் நல்லறிவு இல்லாத வாழ்க்கை விலங்கியல் வாழ்க்கையாகும். நீ எல்லாம் அறிந்தவன் நீ அறியாத நெறி எதுவுமில்லை என்றும் வாலியிடம் இராமன் கூறுகிறான்.

இன்னும்,

''தக்கது இன்ன, தகாதன இன்ன, என்று
ஒக்க உன்னலர் ஆயின் உயர்ந்துள
மக்களும் விலங்கே; மனுவின் நெறி
புக்கவேல், அவ்விலங்கும் புத்தேளிரே''

என்றும் வாலியிடம் இராமன் எடுத்துக் கூறுகிறார்.

எக்குலத்தில் பிறந்தாலும் அவரவர் ஆற்றும் செய்கையால் வருவதே மேன்மையும் கீழ்மையும் அல்லாமல் பிறப்பால் அல்ல என்பதை நீ அறிவாய். அதைத் தெளிவாக நீ அறிந்திருந்தும் மனையின் மாட்சியை அழித்தாய்.

''சினையது ஆதலின் எக்குலத்து யாவர்க்கும்
வினையினால் வரும் மேன்மையும் கீழ்மையும்
அனைய தன்மை அறிந்தும் அழித்தனை
மனையின் மாட்சியை என்றான் மனு நீதியான்''

என்றும் இராமபிரான் கூறுகிறான்.

''குணத்தாலும் செய்கையாலும் நான்கு வர்ணத்தைப் படைத்தேன்'' என்றே கிருஷ்ண பரமாத்மா கீதையில் குறிப்பிடுகிறார்.

''நாலுகுலங்கள் அமைத்தான் – அதை
நாசமுறப் புரிந்தனர் மூடமனிதர்
சீலம் அறிவு தர்மம் – இவை
சிறந்தவர் குலத்தினில் சிறந்த வராம்
மேலவர் கீழவர் என்றே – வெறும்
வேடத்தில் பிறப்பினில் விதிப்பனவாம்
போலிச் சுவடியை யெல்லாம் – இன்றே
பொசுக்கிவிட்டால் எவர்க்கும் நன்மை உண்டென்பான்''

என்று கண்ணன் கூறுவதைப் பாரதி தனது கண்ணன் பாட்டுகளில் கண்ணன் என் தந்தை என்னும் தலைப்பிலான பாடலில் குறிப்பிடுகிறார்.

இராமபிரானும் கண்ணபிரானும், இவ்வாறான அறிவு வழியின் மேன்மையைச் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளனர்.

இராமன் வாலி மீது அம்பெய்வதற்கு அவ்வாலி மனையின் மாட்சியை அழித்ததும் ஒரு காரணமாகிறது என்பதைக் கம்பன் மிக நுட்பமான பல கருத்துக்களில் எடுத்துக்காட்டுகிறார்.

மங்கையர் பொருட்டால்

வாலி வானுலகு சென்று விட்டான் அவனுக்குரிய ஈமக்கடன் களெல்லாம் செய்து முடிக்கப்பட்டன. மறு நாள் இராமன் இலக்குவனை அழைத்து சுக்கிரீவனுக்கு முடி சூட்டிம்படி கூறினான். இலக்குவனும் சுக்கிரீவனுக்கு முறைப்படி முடி சூட்டி முடித்தான்.

கிட்கிந்தையின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற சுக்கிரீவனுக்கு இராமன் சில நல்லுரைகளையும் நல்லாட்சி நெறிகளையும் பற்றி அறிவுரை கூறுகிறான். இந்த நல்லுரைகளில் சிறந்த பல அரசியல் கருத்துகளும் சமுதாயக் கருத்துக்களும் அமைந்துள்ளன.

''ஈண்டு நின்று ஏகி, நீ, நின் இன் இயல் இருக்கை எய்தி
வேண்டுவ மரபின் எண்ணி, விதி முறை இயற்றி, வீர!
பூண்ட பேர் அரசுக்கு ஏற்ற யாவையும் புரிந்து, போரில்
மாண்டவன் மைந்தனோடும் வாழ்த்தி நல்திருவின் வைகி!''

என்று வாழ்த்தி அனுப்பினான்.

இங்கிருந்து நீயோ உனக்கு உரிய இடத்திற்குச் சென்று உனது இயல்பான இருக்கையை அடைந்து உன்னுடைய மரபு வழியில் நின்று அரசியல் விதிமுறைகளை இயற்றி அரசுக்கேற்ற அனைத்தையும் சிறப்பாகச் செய்து வாலியின் மைந்தன் அங்கதனோடு சேர்ந்து எல்லாச் செல்வங்களையும் நலன்களையும் பெற்று வாழ்வாயாக என்று இராம பிரான் சுக்கிரீவனை வாழ்த்தினார். அத்துடன் அரசியல் மற்றும் ஆட்சி முறைமைப் பற்றிய அறிவுரைகளையும் இராமபிரான் எடுத்துக் கூறுகிறார்.

''வாய்மை சால் அறிவின் வாய்ந்த மந்திர மாந்தரோடும்
தீமை தீர் ஒழுக்கின் வந்த திறத் தொழில் மறவரோடும்
தூய்மைசால் புணர்ச்சி பேணித் துகள் அறு தொழிலையாகிச்
சேய்மையோடு அணிமையின்றித் தேவரின் தெரிய நிற்றி''

என்றும்,

''புகையுடைத்து என்னின் உண்டு
பொங்கு அனல் அங்கு என்று உன்னும்
மிகை உடைத்து உலகம்; நூலோர்
வினையமும் வேண்டல் பாற்றே;
பகையுடைச் சிந்தையார்க்கும்;
பயன் கூறுபண்பின் தீரா
நகை உடை முகத்தையாகி இன் உரை நல்கு வாயால்''

என்றும்,

''செய்வன செய்தல் யாண்டும் தீயன சிந்தியாமை
வைவன வந்த போதும் வசையில இனிய கூறல்
மெய்யன வழங்கல் யாவும் மேவின வெஃல் இன்மை;
உய்வனவாக்கித் தம்மோடு உயர்வன; உவந்து செய்வாய்''

என்றும்.

''சிறிய என்று இகழ்ந்து நோவு செய்வன செய்யல்; மற்று இந்
நெறியிகழ்ந்து யான் ஓர் தீமை இழைத்தலால், உணர்ச்சி நீண்டு
குறியன மேனிய... கூனியால், குவவுத் தோளாய்!
வெறியன எய்தி, நெ...தின், வெம்துயர் கடலில் வீழ்ந்தேன்''

என்றும்.

''மங்கையர் பொருட்டால் எய்தும் மாந்தர்க்கு மரணம்; என்றல்
சங்கையின்றி உணர்த்தி! வாலி செய்கையால் சாலும்; இன்னும்
அங்கவர் திறத்தினானே அல்லலும் பழியும் ஆதல்
எங்களில் காண்டி அன்றே! இதனின் வேறு உறுதி உண்டோ?''

என்றும் குறிப்பிடுகிறார். இது ஒரு மிக முக்கியமான கருத்தாகும்.

வாய்மை தவறாத அறிவில் சிறந்த அமைச்சர்கள், தீமைகள் இல்லாத, ஒழுக்கங்களோடு கூடிய, வலிமையான, போர்த் திறம் கொண்ட வீரர்கள் துணையுடன், தூய்மையான நட்புறவு கொண்டு ஆட்சி நடத்த வேண்டும், என்றும்,

புகையுள்ள இடத்தில் நெருப்பு இருக்கும் என்பதை உலகம் அறியும். கற்றறிந்த நூலோர்களின் ஆலோசனைகளை அறிவுரைகளைப் பெற வேண்டும், பகை உணர்வு கொண்ட எண்ணங்கள் உடையவர்களி டமும் நகை முகத்தோடு அணுகி நல்லுரை வழங்கப் பழக வேண்டும், செய்யும் பணிகள் எதிலும் தீயனவற்றைச் சிந்தித்தல் கூடாது,

எத்தகைய இன்னல்கள் வந்தாலும் வசை மொழி இல்லாமல் இனியவைகளையே கூற வேண்டும், உண்மைகளையே வழங்க வேண்டும், உயர்வான செயல்களையே செய்ய வேண்டும், எவரையும் அவர் சிறியவர் என்று கருதி அவர்களைத் துன்புறுத்திவிடக் கூடாது, என்றெல்லாம் பல அறிவுரைகளும் கூறி மேலும்.

மங்கையர் பொருட்டால் எய்தும் மாந்தர்க்கு மரணம் என்பதைச் சந்தேகமில்லாமல் உணர்வாயாக, அதை வாலி பால் கண்டாய் அத்துடன் அந்த மங்கையர்களாலே தான் எங்களுக்குத துன்பமும் பழியும் ஏற்பட்டுள்ளன என்பதையும் நீ கண்டாய், அதிலும் சந்தேகம் இல்லை, என்று மங்கையர் பால் பெருங்காதல் கொள்வதால் ஆட்சிப் பொருப்பில் அதிகாரத்தில் உள்ளவர்கள் வரம்பு மீறி பெண்ணாட்டம் கொள்வதால் எற்படும் துன்பங்களையும் இன்னல்களையும் அபாயங்களையும் எடுத்துக் கூறி எச்சரிக்கை செய்கிறார் இன்னும்,

''நாயகன் அல்லன், நம்மை நனி பயந்து எடுத்து நல்கும்
தாய் என இனிது பேணித் தாங்குதி, தாங்குவாரை;
ஆயது தன்மையேனும் அறவரம்பு இகவா வண்ணம்
தீயன வந்த போது சுடுதியால் தீமையோரை''

என்று ஆட்சி செய்யும் அரசன் மக்களை அதிகாரம் செலுத்தும் நாயகனாக அல்லாமல் மக்களையெல்லாம் பெற்ற தாய் போல அரவணைத்து அன்பு காட்டி, பேணிக்காக்க வேண்டும்.

அவ்வாறு நாட்டையும் மக்களையும் பேணிக் காக்கும் போது அறத்தின் எல்லைக்குள் நின்று ஆட்சி நடத்த வேண்டும். மக்களுக்குத் தீமை ஏற்பட்டால் அத் தீமைகள் செய்வோரைச் சுட்டெரிக்க வேண்டும்.

தீயோரிடமிருந்து மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்று இராமபிரான் அறிவுரைகளையும் அரசியல் நெறி முறைகளையும் எடுத்துக் கூறி மாரி காலம் முடிந்தவுடன் பெருங்கடல் போன்ற உங்கள் சேனையுடன் வருக என்று சுக்கிரீவனை வழியனுப்பி வைத்தான்.

இசையினும் இனிய சொல்லாள்

கார்காலம் போயிற்று. குறித்தபடி சுக்கிரீவன் தனது படைகளுடன் இராமனிடம் வரவில்லை. செய்நன்றி மறந்தானோ அரச போகத்தில் மூழ்கி மயக்கம் கொண்டானோ, அறம் மறந்தானோ, மெய்ம்மை சிதைத்து உரை பொய்த்தானோ? என்றெல்லாம் மனம் கலங்கி இராமன் இலக்குவனை அனுப்பி நிலைமையை அறிந்துவரச் சொன்னான்.

இலக்குவன் கிட்கிந்தையை நோக்கிக் கோபத்துடன் வேகமாகச் சென்றான். இலக்குவனைக் கண்ட வானரர் சிலர் ஓடிப் போய் அங்கதனை சந்தித்து இலக்குவன் கோபத்தோடு வரும் நிலைமையைக் கூறினர். அங்கதன் வேகமாகச் சுக்கிரீவன் இருக்கும் இடத்திற்குச் சென்றான்.

சுக்கிரீவன் தனது அரண்மனைக்குள் மது மயக்கத்தில் மங்கையருடன் மகிழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தான். அங்கதன் சென்று தன் தாதையைத் தட்டி எழுப்பிப் பார்த்தான். ஆனால் சுக்கிரீவனோ தன் நினைவின்றி மயக்கத்தில் ஆழ்ந்திருந்தான்.

அங்கதன் அனுமனை அணுகினான். இருவரும் தாரையிடம் சென்றனர். தாரை மிகவும் நிதானமாகப் போய் இலக்குவனை சந்தித்தாள். இக்காட்சியைக் கவிச் சக்கரவர்த்தி மிகவும் அற்புதமாக எடுத்துக் காட்டுகிறார்.

தாரை இலக்குவனை சந்தித்து மிகவும் அடக்கத்துடன்

''அந்தமில் காலம் நோற்ற ஆற்றல் உண்டாயின் அன்றி,
இந்திரன் முதலினோரால் எய்தலாம் இயல்பிற்று அன்றே;
மைந்த நின் பாதம் கொண்டு எம் மனை வரப் பெற்று வாழ்ந்தேம்!
உய்ந்தனம், வினையும் தீர்ந்தேம், உறுதி வேறு இதனின் உண்டோ?''

என்று மிகவும் நயமாக அவனை வரவேற்றுப் பேசினாள். மேலும்

''வெய்தின் நீ வருதல் நோக்கி வெருவுறும் சேனை, வீர
செய்திதான் உணர்கிலாது திருவுளம் தெரித்தி'' என்றாள்;
அய்ய நீ! ஆழி வேந்தன் அடியிணை பிரிகலாதாய்
எய்தியது என்னை? என்றாள் இசையினும் இனிய சொல்லாள்''

என்று தாரை கூறியதைக் கம்பன் குறிப்பிடுகிறார். இங்கு கம்பன் தாரையை ''இசையினும் இனிய சொல்லாள்'' என்ற குறிப்பிடுகிறர். தாரை மிகுந்த பொது அறிவு நிரம்பியவள். மிகவும் அடக்கமானவள். அன்று சுக்கிரீவன் வாலியைப் போருக்கு அழைத்த போது தாரை வாலியை இடை மறித்துப் போருக்குப் போக வேண்டாம், சுக்கிரீவனுக்கு இராமன் என்பவர் துணைக்கு வந்திருப்பதாக எனக்கு வேண்டியவர்கள் சொன்னார்கள் என்று நயமாக எடுத்துக் கூறியதைக் கண்டோம்.

இப்போது சீறிவந்த இலக்குவனுக்கு முன்பாக வந்து நிற்கிறாள் ''வீணே கடூரத்துடன், கடுங்கோபத்துடன் ஏன் வந்துள்ளீர்கள்'' வந்த செய்தி என்ன? என்று அமைதியாகக் கேட்டு, ''ஆழ் வேந்தனான இராமபிரானைத் தனியாக ஏன் விட்டு வந்தீர்கள்'' என்று கேட்கிறாள்.

இவ்வாறு கூறிவந்து எதிரில் நின்ற தாரையை இலக்குவன் நேருக்கு நேராகக் காண்கிறான். இதற்கு முன் இலக்குவன் தாரையைப் பார்த்ததில்லை. அவளை யார் என்று அவனுக்குத் தெரியாது. ''இவ்வாறு பேசும் இவள் யார்'' என்று இலக்குவன் எண்ணுகிறான். அவளைப் பார்த்தவுடன் அவனுடைய சீற்றம் தணிகிறது.

அவனுடைய உள்ளத்தில் கருணை தோன்றுகிறது. அவளுடைய தோற்றத்தைக் கண்டபோது இலக்குவனுக்குத் தனது தாய்மார்களின் நினைவு வந்தது. தனது தாயாரின் வடிவத்தைத் தாரையின் முகத்தில் கண்டான்,

''ஆர்கொலோ உரை செய்தார் என்று அருள் வரச், சீற்றம் அஃகா,
பார்குலாம் முழுவெண் திங்கள், பகல் வந்த படிவம் போலும்
ஏர்குலாம் முகத்தினாளை, இறை முகம் எடுத்து நோக்கித்
தார் குலாம் அலங்கல் மார்பன், தாயரை நினைந்து நைந்தான்''

என்று கம்பர் குறிப்பிடுகிறார்.

இலக்குவன் தாரையை நேரில் கண்ட போது அவளுடைய தோற்றம் அவனுக்குத் தன் தாயரை நினைவுபடுத்தியது. கணவனை இழந்த பெண்கள் கைமை நோன்பு கொள்வது நமது பாரதப் பாரம்பரிய தர்மங்களிள் ஒன்று மற்றும் உடன் கட்டை ஏறுவதும் நமது மரபுகளில் ஒன்றாக இருந்திருக்கிறது. ஆனால் அது

கட்டாயமாக இருந்திருக்கவில்லை. பின்னர் வந்த சில போலிச் சுவடிகள் அதைக் கட்டாயப்படுத்தி நிலை நிறுத்தியிருக்கிறது.

இராவணனுடைய பட்ட மகிஷி மண்டோதரி தனது கணவன் மாண்டு கிடந்த போது அவனைத் தழுவித் தானும் உயிர் துறந்தாள்.

தசரதன் இறந்த போது அவனுடைய மனைவியர் சிலர் உடன் கட்டை ஏறினர். ஆனால் கோசலை, சுமித்திரை, கைகேயி ஆகியோர் கைமை நோம்பேற்றனர். காரணம் கணவர் இறந்த பின்னரும் பிள்ளைகளுக்கு உதவியாக இருந்து அவர்களுடைய பல கடமைகளுக்குத் துணையாக இருக்க வேண்டியதிருந்தது.

மகாபாரத இதிகாசத்தில் பாண்டு இறந்த போது மாத்ரி தேவி உடன் கட்டை ஏறினாள். குந்திதேவி கைமை காத்து தன் பிள்ளைகளுக்குத் துணையாக இருந்துத் தனது கடமைகளை நிறைவேற்றினாள் என்பதைக் காண்கிறோம்.

கம்பனுடைய இராமாயணப் பெருங்காதையில் தாரை, கைம்மை நோன்பு காத்து கிட்கிந்தை ஆட்சிக்கும் தன் மகன் அங்கதனுக்கும் துணையாக இருந்துத் தனது அரச குடும்பக் கடமைகளை நிறைவேற்றினாள். அதனால் தான் இலக்குவன் வந்துள்ள செய்தியை அறிந்த அங்கதன் முதலில் சுக்கிரீவனிடம் சென்று அவன் மயக்கத்தைப் பார்த்து விட்டு அடுத்து அனுமனை அழைத்துக் கொண்டு தாரையிடம் சென்று அவளிடம் விவரத்தைக் கூறுகிறான்.

அப்போது தாரை தலையிடுகிறாள். அவள் மதி நுட்பமும் பொது அறிவும் மிக்கவள். இலக்குவனைச் சந்தித்துப் பேசுகிறாள். அத்தாரையின் தோற்றத்தைக் கம்பன் மிக அற்புதமாகச் சித்தரித்துக் காட்டுகிறார்.

''மங்கல அணியை நீக்கி, மணி அணி துறந்து, வாசக்
கொங்கலர் கோதை மாற்றிக் குங்குமம் சாந்தம் கொட்டாப்
பொங்கு மென் முலைகள், பூகக் கழுத்தொடு மறையப் போர்த்த
நங்கையைக் கண்ட வள்ளல் நயனங்கள் பனிப்ப நின்றான்''

என்று கம்பர் குறிப்பிடுகிறார்.

தாரையின் தோற்றத்தைக் கண்டுக் கண்ணீர் பொங்க இலக்குவன் தனது தாயரை நினைத்து ''இனையராம் என்னையீன்ற இருவரும் என்னவந்த நினைவினான், அயர்ப்புச் சென்ற நெஞ்சினன், நெடிது நின்றான்'' என்றுக் கம்பநாடர் மிக உருக்கமாகக் குறிப்பிடுகிறார்.

இங்கு இலக்குவன், இனையராம் என்னையீன்ற இருவரும் என்றே நினைத்து நிற்கிறான் என்ற கம்பர் குறிப்பிடுகிறார். இங்கு தாயர் இருவர் என்பது கோசல்லையும் சுமித்திரையும் தான் இலக்குவனுடைய நினைவில் உள்ளனர். மேலும் தாரையின் விதவை நிலைக்கும் தாங்களும் ஒரு காரணமாகும் என்பதையும் நினைத்தும் இலக்குவன் கண்களில் நீர் பொங்கியது என்றும் கருதலாம்.

சினம் தணிந்துத் தாரையைக் கண்டு கண்ணீர் மல்கி ''சேனையும் யானும் தேடித் தேவியைத் தருவன்'' என்று மானவர்க்கு உறைத்த மாற்றம் மறந்தனன், அருக்கன் மைந்தன், எனவே அவனது நிலைமையை அறிந்து வரச் சொல்லி இராமன் என்னை அனுப்பினான்'' என்று இலக்குவன் கூறுகிறான்.

தாரை மிக நுட்பமாக அரசியல் அறிவு மிக்க சொற்களில்.

''சீறுவாய் அல்லை, ஐய! சிறியவர் தீமை செய்தால்
ஆறுவாய்; நீ அலால்; மற்று ஆர் உளர்? அயர்ந்தான் அல்லன்,
வேறு வேறு உலகம் எங்கும் தூதரை விடுத்து அவ்வேலை
ஊறுமா நோக்கித் தாழ்ந்தான், உதவி மாறுதவி உண்டோ?''

என்று நயமாகக் கூறுகிறாள்.

ஆயிரம் கோடி அரிக்குலத்தினரை அழைத்து வர சுக்கிரீவன் ஆணைப்படித் தூதுவர் பல திசைகளிலும் போயுள்ளனர். விரைவில் எட்டுத் திக்குகளிலிருந்தும் அரிக்கூட்டம் திரளாக வந்து சேரும். உங்களிடம் புகல் அடைந்தவர்களுக்கு தாயினும் நல்ல நீங்கள் சினம் தணிந்து கருணை காட்டுங்கள் அதுவே தர்மமாகும்.

''செம்மை சேர் உள்ளத்தீர்கள், செய்த பேருதவி, தீரா
வெம்மை சேர் பகையும் மாற்றி, அரசு விற்றிருக்க விட்டீர்,
உம்மையே யிகழ்வர் என்னின் எளிமையாய் ஒழிவது ஒன்றோ!
இம்மையே வறுமை எய்தி இருமையும் இழப்பர் அன்றே!''

என்று தம் நிலையை எடுத்துக் காட்டினாள்.

மங்கையர் மேனி நோக்கான்

இலக்குவன் முனிவு நீத்தனன். அப்போது மாருதி மெதுவாக இலக்குவன் முன்பு வந்து மிகவும் அடக்கமாக நின்று பலவும் கூறி இலக்குவனை மேலும் அமைதிப்படுத்தினான். அனுமன் கூறிய அறக்கருத்துக்கள் இங்கு நினைவு கூறத்தக்கது.

''சிதைவகல் காதல் தாயைத் தந்தையைக் குருவைத் தெய்வப்
பதவி அந்தணரை, ஆவைப் பாலரைப் பாவை மாரை
வதை புரிகு நர்க்கும் உண்டாம் மாற்றலாம் ஆற்றல்; மாயா
உதவி கொன்றார்க்கு என்றேனும் ஒழிக்கலாம் உபாயம் உண்டா?

என்று குறிப்பிட்டு அனுமன் சிறந்த அறக்கருத்துக்களை எடுத்துக் கூறி இளையவனை சமாதானப் படுத்துகிறான்.

''எந்நன்றி கொன்றாற்கும் உய் வுண்டாம், உய் வில்லை
செய்ந் நன்றி கொன்ற மகற்கு''

என்னும் வள்ளுவர் வாக்கு இங்கு நினைவில் கூறத் தக்கது.

இவ்வாறு அனுமன் பலவும் கூறி இலக்குவனுடைய சினத்தைத் தணித்துத் தனது அமைச்சர்களுடன் வந்து இலக்குவனிடம் அடி பணிந்தான். விரைவில் சென்று தனது வருகையைச் சுக்கிரீவனிடம் கூறும்படி அங்கதனிடம் கூறினான்.

அங்கதன் மீண்டும் சுக்கிரீவனுடைய படுக்கையிடத்திற்குச் சென்றான். அவனுடைய கால்களை வருடி எழுப்பினான்.

இலக்குவன் சினத்துடன் வந்திருப்பதை எடுத்துக் கூறினான். நான் ஒரு குற்றமும் செய்யவில்லையே சினம் எதற்கு எனக் கேட்டான்.

அங்கதன் நடந்தவற்றைக் கூறினான். குறிப்பிட்ட நாட்களில் நீ இராமனிடம் போகவில்லை. நீ அரசுச் செல்வத்தைப் பெற்றுவிட்டதால் அந்த மகிழ்ச்சியில் செய் நன்றி மறந்தனையோ என்று கருதிச் சீற்றம் கொண்டனர். நான் மாருதியிடம் எடுத்துறைத்து இருவரும் அன்னையிடம் கூற ''இந்நிலை கண்ட அன்னை எந்திழை ஆயத்தோடும் மின் இலை வேலினானை வழி எதிர் விலக்கி நின்றாள்.



மங்கையர் **மேனி** நோக்கானாகிய அம்மைந்தன் **இலக்குவன்** தன் மனத்தில் வந்து பொங்கிய **சீற்றத்தை**க் குறைத்துப் பொருமி நின்றான். நங்கையும் (தாரையும்) இனிது கூறி ''நாயக நடந்தது என்னோ எங்கள் பால்'' எனக் கேட்டாள். இளவலும் வந்தகாரணம் சொன்னான்.

அதை அறிந்த அன்னை அன்னவன் சீற்றம் மாற்றி, விதிமுறை மறந்தான் அல்லன் பெரும் சேனை வெள்ளம் வந்து சேரும்படி தூது அனுப்பியுள்ளான். படைகள் வரக் காத்திருக்கிறான் என்று விவரம் கூறி இலக்குவனைச் சமாதானப் படுத்தியுள்ளாள்.

சுக்கிரீவன், கலக்கமடைந்து ஏன் என்னிடம் முன் கூட்டிக் கூறவில்லை என்றான். ''நான் உன்னிடம் வந்தேன் நீ மயக்கத்தில் இருந்தாய். நான் கூறியதை நீ உணரவில்லை அதன் பின்னர் நான் அனுமனைத் தேடிச் சென்று இருவரும் சேர்ந்து அன்னையிடம் போய்க் கூறி இலக்குவனை சமாதானம் செய்யச் செய்தோம். நீ உடனே சென்று இலக்குவனைக் காண வேண்டும்'' என்று சுக்கிரீவனிடம் அங்கதன் எடுத்துக் கூறினான்.

இதைக் கேட்ட சுக்கிரீவன் மிக்க வருத்தமடைந்தான். தான் மது, மாதுவில் மூழ்கிக்கிடந்து தனது கடமைகளைத் தவறி விட்டதாக வருந்துகிறான். ''அவர்களால் பெற்றுள்ள பேருதவியை நான் மறக்கலாமா? நறவு உண்ட மயக்கத்தில் இருந்து விட்டேன்'' என்று தனது தவறை உணர்ந்து கூறுகிறான்.

''ஏயின நறவு அலால் மற்று ஏழைமைப் பாலது என்னோ?
தாய் இவள், மனைவி, என்னும் தெளிவின்றேல் தருமம் என்னாம்
தீவினை ஐந்தின் ஒன்றாம்; அன்றியும் திருக்கு நீங்கா
மாயையின் மயங்குகின்றாம்; மயக்கின் மேல் மயக்கும் வைத்தாம்''

என்று தன்னை நொந்து கொள்கிறான்.

இங்கு சுக்கிரீவன் தீவினைகள் ஐந்தையும் பற்றியும் அவைகளால் ஏற்படும் தீமைகள் பாதகங்கள் பற்றியும் தான் செய்த தவறுகள் பற்றியும் எடுத்துக் கூறிவருந்துவதைக் கம்பர் மிகவும் சிறப்பாக எடுத்துக் கூறுகிறார்.

தீவினைகள் ஐந்து என்பது வட மொழியில் பஞ்சமா பாதகங்கள் என்று கூறப்படுகின்றன. காதல், கவறாடல் (சூது) கள்ளுண்ணல், பொய் மொழிதல், ஈதல் மறுத்தல் என்ற ஐந்து தீவினைகளைத் தமிழில் அற நூல்கள் குறிப்பிடுகின்றன. இவைகளில் கொலையும் களவும் கூட சேர்க்கப்படுகின்றன.

இங்கு கள் குடித்தலின் தீமைகளைப் பற்றியும் கள்ளைக் குடித்து மயக்கம் ஏற்பட்டு விட்டால் இவள் தாய், இவள் மனைவி என்னும் அறிவு கூட இல்லாமல் போகிறது, என்பது பற்றியும் சுட்டிக் காட்டப் படுகிறது. அறிவு கெடும் போது பக்கக் கேடுகள் ஏற்படுகின்றன.

சுக்கிரீவன் செய்த குற்றங்கள் தவறுகள் அவனைச் சிறுமைப்படுத்தி விடுகிறது. கள்ளினால் வரும் கேடுகள் இங்கு விரிவாக விளக்கப் படுகின்றன. கள்ளினால் ஏற்படும் தீமைகளில் ஒன்று மயக்கமும் வெறியும் அதனால் ஏற்படும் காம வெறியும் ஆகும், என்பது இங்கு வலுவாகச் சுட்டிக் காட்டப்படுகிறது.

''வஞ்சமும், களவும், பொய்யும், மயக்கமும், மரபில் கொட்பும்,
தஞ்சம் என்றாரை நீக்கும் தன்மையும், களிப்பும் தாக்கும்
கஞ்சமேல் அணங்கும் தீரும் கள்ளினால்; அருந்தினாரை
நஞ்சமும் கொல்வது அல்லால் நரகினை நல்காதன்றே?''

என்று சுக்கிரீவன் தன்னை நொந்து கொள்கிறான். நறவாலும் அதாவது கள் முதலிய போதைப் பொருள்களாலும் காமத்தாலும் வரும் கேடுகள் பற்றி இப்பகுதியில் அழுத்தமாகக் கூறப்படுவதைக் காணலாம்.





13. சீதையைத் தேடி

இராமனுக்குச் சீதை மீதுள்ள மட்டிலாக் காதல் பற்றி அவனுடைய வார்த்தைகளில் வெளிப் படுவதைப் பல முறை காண்கிறோம். சீதையைப் பற்றி எண்ணிக் கவலை கொண்டிருந்த இராமன் முன்பாக வானர சைன்யம் படை திரண்டு வந்து நின்றது. சேனையைக் காணும்படி சுக்கிரீவன் இராமனிடம் வேண்டிக் கொண்டான். வானரப் படை மேலும் மேலும் வந்து குவிந்து கொண்டிருந்தது. அதன் முடிவைக் காண முடியவில்லை. அதன் வலுவையும் பெருக்கத்தையும் கம்பன் மிக அற்புதமான உவமைகளுடன் மிகச் சிறப்பாக விவரித்துக் கூறுகிறார்.

''ஒடிக்கு மேல், வட மேருவை வேரொடும் ஒடிக்கும்,
இடிக்கு மேல், நெடுவானக முகட்டையும் இடிக்கும்,
பிடிக்குமேல், பெரும்காற்றையும் கூற்றையும் பிடிக்கும்
குடிக்கு மேல், கடல் ஏழையும் குடங்கையால் குடிக்கும்''

என்று மிக அழகாகக் குறிப்பிடுகிறார்.

இன்னும் அதன் கணக்கிலடங்காத பெருக்கத்தைப் பற்றி

''ஈசன் மேனியை, ஈரைந்து திசைகளை, ஈண்டில்
ஆசில் சேனையை, ஐம் பெரும் பூதத்தை, அறிவைப்
பேசும் பேச்சினைச் சமயங்கள் பிணக்குறும் பிணக்கை,
வாசமாலையாய்! யாவரே முடிவெண்ண வல்லார்?''

என்று குறிப்பிடுகிறார்.

வானர சேனையின் பெருக்கத்திற்கு ஈசன் மேனி, பத்து திசைகள், ஐம் பெரும் பூதங்கள், அறிவு, பேச்சுக்கள், சமயங்கள், பிணக்குறும் பிணைக்குகள், ஆகியவைகள் உவமைகளாகக் கூறப் பட்டிருக்கின்றன. இவையெல்லாம் எண்ணிலடங்காதவை அனந்தமானவை.

இப்பெரும் படையைக் கண்டு இலக்குவனே ஆச்சரியப்பட்டு பெரும் வியப்படைந்து மகிழ்ச்சியடைந்து ''பாவம் தோற்றது, தருமமே வென்றது இப்படையால்'' என்று கூறுகிறான்.

அனுமன் தலைமையில்

படைகள் வந்து சேர்ந்தவுடன் சீதையைத் தேடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. அதற்காக நாலா பக்கங்களிலும் செல்ல படைத் தலைவர்கள் நியமிக்கப் படுகிறார்கள். மாருதி, அங்கதன், சாம்புவன் ஆகியோர் இரண்டு வெள்ளம் சேனைகளுடன் தென்திசை நோக்கிச் செல்ல சுக்கிரீவன் ஆணையிடுகிறான். அது போல் இதர திசைகளுக்கும் படைத் தலைவர்கள் நியமிக்கப் படுகிறார்கள்.

தென் திசை நோக்கிச் செல்லும் அனுமன் படை சீதையைத் தேடு வதில் வெற்றி காணும் என்னும் நம்பிக்கை இராமனுக்கு ஏற்படுகிறது. சுக்கிரீவனும் அனுமனை அழைத்துத் தெற்கு நோக்கிச் செல்ல வேண்டிய வழியைப் பற்றி விரிவாக எடுத்துக் கூறினான். வழியில் உள்ள அருந்ததி மலை, திருவேங்கட மலை, தொண்டை நாடு, சோழ நாடு தமிழ் நாடு, பொதிகை மலை, மகேந்திர மலை முதலியவை பற்றியெல்லாம் மிகவும் சிறப்பாக எடுத்துக் கூறுகிறான்.

தென் திசையில் உள்ள

''அரன் அதிகம், உலகளந்த அரி அதிகன்
என்றுரைக்கும் அறிவிலோர்க்குப்
பரகதி சென்று அடைவரிய பரிசே போல்
புகல் அரிய பண்பிற்று ஆமால்

சுரந்தியின் அயலது, வான் தோய் குடுமிச்
சுடர்த்தொகைய, தொழுதோர்க் கெல்லாம்
வரன் அதிகம் தரும் தகைய, அருந்ததி ஆம்
நெடுமலையை வணங்கி, அப்பால்”

‘‘வட சொற்கும், தென் சொற்கும் வரம்பாகி,
நான் மறையும் மற்றை நூலும்
இடை சொற்ற பொருட் கெல்லாம்
எல்லையாய் நல்லறிவுக்கு ஈராய்வேறு
புடை சுற்றும் துணையின்றிப் புகழ்
பொதிந்த மெய்யே போல் பூத்து நின்ற
உடை சுற்றும் தண் சாரல் ஓங்கிய
வேங்கடத்தில் சென்று ஊர்தின் மாதோ!’’

“கோடுறு மால்வரை அதனைக் குறுதிரேல்
உம் கொடிய கொடுமை நீங்கி
வீடுறுதிர்; ஆதலினால் விலங்குதிர்; அப்
புறத்து நீர் மேவு தொண்டை
நாடுறுதிர்; உற்றதனை நாடுறுதிர்,
அதன் பின்னை நளி நீர்ப் பொன்னிச்
சேடுறு தண்புனல் தெய்வத் திருநதியின்
இரு கரையும் தெரிதிர் மாதோ”

“துறக்கம் உற்றார் மனமென்னத்துறை கெழுநீர்ச்
சோணாடு, கடந்தால், தொல்லை
மறக்கம் உற்றார் கனவு உற்றார் எனும் உணர்வி
னோடும் ஒதுங்கி, மணியார் ஓங்கல்
பிறக்கம் உற்ற மலைநாடு நாடி, அதன்
தமிழ் நாட்டில் பெயர்க மாதோ”

அதன் பின்னர்

“தென்தமிழ் நாட்டு அகன்பொதியில் திருமுனிவன்
தமிழ்ச் சங்கம் சேர்கிற்மீரேல்,
என்றும் அவண் உறைவிடமாம்; ஆதலினால்
அம்மலையை இறைஞ்சி ஏகிப்

பொன் திணிந்த புனல் பெருகும் பொருநையெனும்
திருநிதியின் பொழிய, நாகக்
கன்று வளர் தடம் சாரல் மயேந்திரமா
நெடுவரையும் கடலும் கண்டீர்"

என்றெல்லாம் தென் திசையில் எங்கெல்லாம் சென்று சீதையைத் தேட வேண்டும் என்பதை தென் திசை வழியில் உள்ள சிறப்பான முக்கிய இடங்களை யெல்லாம் குறிப்பிட்டுச் சுக்கிரீவன் அனுமனிடம் விவரித்துக் கூறுகிறான்.

மங்கையர் இவளை ஒப்பார்

அதன் பின்னர் இராமன் தனது முழு நம்பிக்கைக்குரிய அனுமனைத் தனியாக அழைத்துச் சென்று அவ்வனுமனிடம் சீதையின் தோற்றத்தைப் பற்றி விவரமாக எடுத்துரைத்தான். அந்த வார்த்தைகளில் சீதையின் மீது இராமனுக்குள்ள அளவு கடந்த அன்பையும் காதலையும் காண முடிகிறது.

''குழல் படைத்து, யாழைச் செய்து குயிலோடு கிளியும் கூட்டி,
மழலையும், பிறவும் தந்து, வடித்த தைம் மலரின் மேலான்
இடைபொரும் இடையினாள் தன் இன்சொற்கள்
இயையச் செய்தான்
பிழையிலது உவமை காட்டப் பெற்றிலன்; பெறுங்கொல் இன்னும்''

என்றும், இன்னும் அவளுடைய நிறத்தை உரைப்பதானால்

"எந்நிறம் உரைக்கேன், மாவின் இள நிறம் முதிரும்; மற்றைப்
பொன்னிறம் கருகும்; என்றால் மணி நிறம் உவமை போதா;
மின் நிறம் நாணி எங்கும் வெளிப்படா ஒளிக்கும்; வேண்டின்
தன்நிறம் தானே ஒக்கும்; மலர்நிறம் சமழ்க்கும் அன்றே"

மங்கையர் இவளை ஒப்பார், மற்றுளார் இல்லை என்னும்
சங்கையில் உள்ளம் தானே சான்றெனக் கொண்டு, சான்றோய்;
அங்கவள் நிலைமை எல்லாம் அளந்தறிந்து, அருகு சார்ந்து,
திங்கள் வாள் முகத்தினாட்குச் செப்பு எனப்பின்னும் செப்பும்

முன்னைநாள், முனியொடும் முதிய நீர் மிதிலை வாய்ச்,
சென்னிநீள் மாலையான் வேள்வி காணியசெல
அன்னம் ஆடும் துறைக்கு அருகில் நின்றாளை அக்
கன்னிமாடத் திடைக்கண்டதும் கழறுவாய்!

வரை செய்தாள் வில்இறுத்தவன் அ, மா, முனியொடும்
விரைசினான் அல்லனேல் விடுவில்யான் யான் உயிர்எனா
கரைசெயா வேலையின் பெரிய காதலன் தெரிந்து
உரைசெய்தாள்; அஃதெலாம் உணர நீ உரை செய்வாய்"

"முன்புநான், அறிகிலா, முளிநெடும் கானிலே
என்பினே போதுவாய் நினைதியோ! ஏழை நீ!
இன்பமாய் ஆருயிர்க்கு இனியை ஆயினை; இனித்
துன்பமாய் முடிதியோ? என்றதும் சொல்லுவாய்"

"ஆனபேர் அரசிழந்து அடவி சேர்வாய் உனக்கு
யான் அலா தனவெலாம் இனியவோ இனி எனா
மீனுலாம் நெடுமலர்க் கண்கள் நீர் விழ விழுந்து
ஊர்நிலா உயிரின் வெந்து அயர்வதும் உரை செய்வார்"

"மல்லன் மாநகர் துறந்து ஏகுநாள், மதி தொடும்
கல்லின்மா மதின் மணிக் கடை கடைந்திடுதன் முன்
எல்லை தீர்வு அரியவெம் கானம்யாதோ? எனாச்
சொல்லினாள்; அஃதெலாம் உணர நீ சொல்லுவாய்"

"இனையவாறு உரைசெயா, இனிதின் ஏழுதி எனா
வனையு மாமணி நன் மோதிரம் அளித்து அறிஞ! நின்
வினையெலாம் முடிக எனா விடை கொடுத்து உதவலும்
புனையும் வார் கழலியான் அருளொடும் போயினான்

என்றெல்லாம் சீதையின் வடிவழகையும் தோற்றத்தையும் நிறத்தையும் திங்கள் வாள் முகத்தையும் பற்றி இராமன் அனுமனிடம் சீதையின் தோற்றத்தைப் பற்றிய குறிப்புக் கூறுகிறான். அத்துடன், பழைய நிகழ்ச்சிகளை நினைவூட்டியும் கூறுகிறார். இந்த அழகிய உளம் நிறைந்த சொற்களில் சீதையின் மீது இராமனுக்குள்ள ஆழ்ந்த காதல் உணர்வைக் காண முடிகிறது.


மனையின் மாட்சி குலாம் மலை மண்டலம்

அனுமனும் அங்கதனும் அவர்கள் தலைமையிலான கூட்டமும் சீதையைத் தேடி சுக்கிரீவன் குறிப்பிட்ட வழியில் தமிழுடைத் தென் திசையில் சென்றனர். இங்கு கம்பர் தென் திசையை தமிழுடைத்

தென் திசை என்று குறிப்பிடுவது சிறப்பாகும். அத் தமிழுடைத் தென் திசையில் உள்ள பல மலைகளையும் ஆறுகளையும் கடந்துப் பெண்ணை நதியை அடைந்தனர். அதைத் தாண்டி திருவேங்கடத்தைக் கண்டனர். தொண்டை நாடு கடந்துப் பொன்னி நாடு அடைந்தனர். அச் சேறு நாறும் பொன்னி நாட்டைத் தாண்டி அங்கிருந்து இல்லறத்தின் பெருமை விளங்கும் மலை மண்டலத்தை அடைந்து அங்கிருந்து தென் தமிழ் நாடு சென்று அடைந்தனர் என்று கம்பர் குறிப்பிடுகிறார்.

''அனைய பொன்னி அகன் புனல் நாடு ஓரீஇ
மனையின் மாட்சி குலாம் மலை மண்டலம்
வினையின் நீங்கிய பண்பினர், மேயினார்
இனிய தென் தமிழ் நாடு சென்ற எய்தினர்

இங்கு மலை நாட்டை 'மனை மாட்சி நிறம்பிய அதாவது இல்லறத்தின் சிறப்பு நிறம்பிய சேர நாடு என்று கம்பர் குறிப்பிடுகிறார்.



14. அனுமன் ஆற்றல்

அனுமனும் அங்கதனும், சாம்பவானும் அவர்களது குழுவினரும், தென் திசையில் உள்ள நாடு நகரங்கள் ஆறுகள் சோலைகள் மலைகள் முகடுகள், குகைகள் முதலிய பல இடங்களிலும் தேடிச் சீதையைக் காணாமல் சோர்வடைந்து, இலங்கையை நோக்கிய தெற்குக் கடற்கரையில் அமர்ந்து தேம்பிக் கொண்டிருந்தனர்.

''பூவரு புரிகுழல் பொருவில் கற்புடைத் தேவியைக் காண்கிலார்'' செய்வதொன்றும் அறியாமல் பேசவும் முடியாமல், வந்த காரியம் செய்து முடிக்க முடியவில்லையே என்று வருந்தித் தற்கொலை செய்து கொள்ளலாமா என்று கூட தம் உயிர்க்கு இறுதி எண்ணினர்.

நான் சீதையைக் கண்டு பிடிக்காமல் ஊர் திரும்பினால் எந்தையும் முனியும், எம் இறை இராமனும் சிந்தை வருந்தும், என் உயிரை மாய்த்துக் கொள்கிறேன். நீங்கள் போய் எந்தையிடம் கூறிவிடுங்கள் என்று அங்கதன் கூறினான்.

அப்போது சாம்பவான் என்னும் அறிவில் முதிர்ந்த பலவான் அங்கதன் கூறியதைக் கேட்டு வருத்தமடைந்து ''நீ இறக்க வேண்டாம், நீ இளவரசன், நாங்கள் இறக்கிறோம் நீ மட்டும் போய் உன்தந்தையிடம் நடந்ததைக் கூறிவிடு'' என்றான்.



அப்போது அங்கதன்

''நீங்கள் எல்லாம் மடிய நான் மட்டும் திரும்பிப் போவது நல்லதல்ல. நம் எல்லோரும் மடிந்தால் நமது சாவைப் பற்றி யாரேனும் எந்தைக்கும் போய் சொல்லக் கூடும். அதைக் கேட்டு அவனும் இறக்கக் கூடும். அதைக் கண்டு அவ்வில்லியும் (இராமனும்) இளைய கோவும் வீழ்வது திண்ணம். அச்செய்தி அயோத்திக்குச் சென்றால் பரதனும் பின்னோனும் மற்றவர்களும் ஊரும் செத்து மடிவர். நான் கெட்டேன்.

''சானகி என்று உலகம் சாற்றும் விரதமா தவத்தின் மிக்க விளக்கினால், உலகத்தில் உள்ள அனைவருக்கும் கரை காணாத துன்பம் விளைந்தது'' என்னும் நிலைமை ஏற்பட்டு விடும் என்று கூறி மனம் வருந்தினான். அப்போது அனுமன் தலையிட்டு அனைவருக்கும் அறிவுரை கூறினான்.

''நாம் தவறு செய்யவில்லை. பிலத்தில் வானத்தில், பொன்வரைக் குடுமிகளில் (மலைகளில், மலை உச்சிகளில்) வேறுள்ள அண்டங் களில், மற்றும் அனைத்திலும் சுற்றித் தேவியைத் தேடினோம் என்று கூறினால் இராமன் நம் மீது குற்றமாகக் கொள்ளமாட்டான்.

இன்னும் தேடுவோம். தேடி, ''அத்தோடலர் குழலி தன் துயரின் சென்று'' சண்டையிட்டு உயிர் மடிந்த பறவை வேந்தன் சடாயுவைப் போல நாமும் அரக்கர்களுடன் சண்டையிட்டு வீடு பெறுவோம்'' என்று அனுமன் குறிப்பிட்டான்.

வீடு பேறு என்பது சான்றோருக்கும் மறையோருக்கும் மட்டுமல்ல, வீரர்களுக்கும் வீர சுவர்க்கம் உண்டு என்னும் புதுமைக் கருத்தையும் மனிதருக்கு மட்டுமல்ல பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் கூட சத் காரியங்களுக்காக உயிர் விடும் போது வீடு பேறு கிடைக்கும் என்னும் ஒரு புதிய தத்துவத்தை அனுமன் மூலமாக இங்கு எடுத்துக் கூறப் படுவதைக் காண்கிறோம்.

இராம நாமத்தின் பெருமை.

''சடாயு, அரக்கனை எதிர்த்துப் போரிட்டு மடிந்தான்'' என்னும் செய்தி அடங்கிய சொற்களை அனுமன் கூறிக் கொண்டிருந்ததைத் தொலைவிலிருந்து சடாயுவின் முன் பிறந்தோனாகிய சம்பாதி கேட்டு மெல்ல மெல்ல நடந்து அனுமனும் மற்றவர்களும் கூடியிருந்த இடத்திற் கருகில் வந்து ''சடாயு எப்படியிறந்தான் என விவரம் கேட்டான். அப்போது அவனை யார் என்று அனுமன் கேட்க, சம்பாதி தான் சடாயுவுக்கு முன் பிறந்தோன் என்பதைக் கூறித் தான் சூரியனை நோக்கிப் பறந்து செல்லும் போது தனது சிறகுகள் எறிந்த விவரத்தைக் கூறி இராம நாமத்தைக் கூறுங்கள், எனது சிறகுகள் முளைக்கும் என்று கேட்டுக் கொள்ள அனைவரும் இராமநாமத்தைப் பாட சம்பாதியின் சிறகுகள் முளைத்து அவன் கம்பீரமான தோற்றத்தைப் பெற்றான்.

அந்த அதிசயத்தைக் கண்ட வானர வீரர்கள் மகிழ்ச்சியடைந்து இராம நாமத்தின் பெருமையை உணர்ந்து ஆவல் மிகுந்துச் சம்பாதியின் முழு வரலாற்றைக் கூறும் படிக் கேட்டனர். அப்போது சம்பாதி தானும் சடாயுவும் உடன் பிறந்தோர் என்பதையும் அவர்கள் இருவரும் சூரியனை நோக்கிச் சொல்லும் போது வெப்பம் தாங்கமுடியாமல் துயரம் அடைந்து சடாயுவைக் காக்கத் தனது சிறகுகளால் அணைத்ததையும் அவ்வாறு சடாயுவை அணைத்த போதுத் தனது சிறகுகள் எரிந்துத் தான் கீழே விழுந்ததையும் அப்போது ஆதவனை வேண்ட,

''மண்ணிடை விழுந்த என்னை வானிடை வயங்கு வள்ளல்,
கண்ணிடை நோக்கி, உற்ற கருணையான், சனகன் காதல்
பெண்ணிடையீட்டின் வந்த வானரர் இராமன் பேரை
எண்ணிடை உற்ற காலத்து, இறகு பெற்று எழுதி!" என்றான்

என்று சூரிய பகவான் கூறினார். அதன்படி சீதையைத் தேடி வந்த நீங்கள் இராம நாமத்தைப் பல முறை கூறிய போது எனது சிறகுகள் முளைத்தன, வென்று கூற அனைவரும் பெரு மகிழ்ச்சியடைந்தனர். அதன் பின்னர் வானரர்களும் தாங்கள் வந்த செய்தியையும் சீதையைத் தேடி அலைந்ததையும் அப்பிராட்டியைக் காணாமல் வருந்துவதையும் பற்றி அக்கழுகரசனிடம் கூறினார்கள்.

அப்போது சம்பாதி சீதையை இராவணன் பற்றிக் கொண்டு இலங்கை சென்ற போது நான் கண்டேன். அவளை இலங்கை வேந்தன் அங்கு தான் சிறை வைத்துள்ளான். நீங்கள் அங்கு சென்றுச்

சீதையைக் கண்டு அவளுக்குத் தெளிவு சொல்லி மீளலாம். சீதை இலங்கையில் உள்ளாள் என்பதை இராமனிடம் உணர்த்தலாம். மேற்கொண்டு செய்ய வேண்டியதையும் செய்யலாம்'' என்றும் கூறுகிறான். இந்த செய்தியைக் கூறும் போது சம்பாதி சீதையைப் பற்றிக் குறிப்பிடுகையில், ''பாகொன்று குதலையாள்'' என்றும் ''வேகின்ற உள்ளத்தாள்'' என்றும் குறிப்பிடுகிறான்.

மேலும் சம்பாதி இந்த செய்தியைப் பற்றிக் கூறும் போது, ''எல்லோரும் இலங்கை மூதூரை அடைவது என்பது எளிதன்று. உங்களில் மிக்க வல்லமையுடையவன் ஒருவன் அங்கு மறைந்து சென்று சீதையைக் கண்டுத் தெளிவு கூறித் திரும்பலாம், அல்லது நான் சொன்ன செய்தியையும் விவரங்களையும் இராமபிரானிடம் தெரிவிக்கலாம் என்றும் எடுத்துக் கூறினான்.

''பாகொன்று குதலையாளைப் பாதக அரக்கன் பற்றிப்
போகின்ற பொழுது கண்டேன் புக்கனன் இலங்கை, புக்கு
வேகின்ற உள்ளத்தாளை வெம்சிறை அகத்து வைத்தான்
ஏகுமின்! காண்டிர் ஆங்கே இருந்தனள் இறைவி இன்னும்,''

என்றும்

''எல்லீரும் சேரல் என்பது எளிதன்று அவ்விலங்கை மூதூர்,
வல்லீரேல், ஒருவர் ஏகி, மறைந்தவண் ஒழுகி, வாய்மை
சொல்லீரே துயரை நீக்கித் தோகையைத் தெருட்டி மீள்திர்!
அல்லிரேல் என் சொல்தேறி, உணர்த்துமின் அழகற்கு அம்மா!''

இவ்வாறு சம்பாதி கூறி நான் கழுகினத்தைக் காக்கச் செல்கிறேன். உங்களுக்கு எது நல்லதோ, எது சாத்தியமோ அதைச் செய்யுங்கள் உங்கள் முயற்சி வெற்றியாகட்டும் என்று கூறிச் சென்றான்.

மாதர் நலம் பேணாது வளாந்தீர்

அதன் பின்னர், அங்கதனும் மற்ற வானரரும் கடலைத் தாண்டி இலங்கை செல்வது நம்மால் சாத்தியமில்லை. நாம் திரும்பிச் சென்று விடலாம். இராமபிரானிடமும், நமது மன்னனிடமும் எல்லாவற்றையும் விவரமாகச் சொல்லி விடலாம் என்று கருத்துக் கூறினர்.

அப்போது சாம்பவன் மாருதியைப் பார்த்து நாம் சீதையைக் காணாமல் திரும்பக் கூடாது. உன்னைப் போல ஒரு வல்லமை மிக்கவன் உலகில் எங்குமில்லை, என்று மாருதியின்

பெருமைகளையும் சிறப்பு களையும் ஆற்றல்களையும் எடுத்துக் கூறினார்கள்.

"ஆஞ்சனேயா, நீ பிரமனிடம் சாகாவரம் பெற்றவன் பல நூல் களையும் நன்கு கற்றுணர்ந்து நுண்ணிய அறிவு பெற்றுள்ளாய். நீ சொல்வன்மை பெற்றவன் சொல்லின் செல்வன் என்று புகழ் பெறுவாயாக. காலனும் அஞ்சும் ஆற்றல் பெற்றுள்ளாய். நீ கடமை யுணர்ந்தவன். உனது கடமைகளை நிறைவாகச் செய்து முடிக்கும் ஆற்றல் மிக்கவன். ஆலகால விடத்தையே உண்ட சிவ பெருமானுக்கு ஈடாக பெரும் போர் நடத்தியும் வெற்றி பெறும் திறன் படைத்தவன்.

"அறிவெப்பம் நிறைந்த நெருப்பும் வல்லமை நிறைந்த நீரும் காற்றும் உன்னை எதுவும் செய்ய முடியாது. தெய்வப் படையான பிரம்மாஸ்திர மும் உன்னைச் சிதைக்காது. உனக்கு ஒப்பானவர் உன்னைத் தவிர வேறு யாருமில்லை. நீ ஒரு தடவை பாய்ந்து குதித்தால் ஏழு உலகிற்கப்பாலும் சென்று குதிக்கத் தக்கவன்.

"நல்லனவற்றை எடுத்துக் கூறித் தீயன வற்றையும் சுட்டிக் காட்டிக் குறையில்லாமல் எதையும் சொல்வதற்கு வல்லமை உள்ளவர், காரியத்தை நீரே துணிந்து செய்வீர், நீர் வெல்லவும் வல்லவர். வென்று மீளவும் வல்லவர். பகைவர்கள் வலுவுடன் உம்மை எதிர்த்தால் அவர்களைக் கொல்லவும் வல்லவர். எவ்வகையிலும் தோள்வலி குன்றாதவர். போர்க்களத்தில் சென்றால் மூவுலகும் உமக்கு ஒரு பொருட்டாகாது.



நீர் யாரும் உணர முடியாதாபடி, யாரும் காண முடியாத படி, எங்கும் சுற்றி வந்து குறைவில்லாத, சுருங்காத வீரம் கொண்ட உயர்ந்த தோள்களை உடையவர், உலகெல்லாம் உள்ள இருளைப் போக்கும் பகலோன்முன் அவனுடைய தேர்முன் நடந்து செல்லும் ஆற்றல் மிக்கவர். வடமொழி, தென்மொழி நூல்களை யெல்லாம் கற்றுத் தேர்ந்தவர், நீதியில் நின்றவர், வாய்மை அமைந்தவர், மனதாலும் நினைவாலும் கூட மாதர் பற்றிய எண்ணத்தைப் பேணாதவர், வேதங்களை யெல்லாம் ஓதி உணர்ந்தவர், ஊழி கடந்தவர்,

காலத்தை வென்றவர், உலகத்தைப் படைத்த பிரமனே நீதான் என்று அனைவராலும் போற்றப்படுபவர், தேவைப்பட்டால் மிகுந்த அடக்கத்துடனும் ஒழுக்கத்துடனும் உள்ளவர். காலம் கருதி அவ்வாறு இருப்பவர்.

அமர் (போர்) வந்தால் சிங்கமெனசீறி மோதும் தன்மையுடையவர். அறிவால் ஆராய்ந்து ஒரு வேலையைத் (எண்ணித் துணிந்து கருமம்) தொடங்கி விட்டால் அதை முழுமையாகச் செய்து முடிக்கும் திறமை படைத்தவர்.

அது வல்லாமல் பெருமைக் குறைவான கொடிய இடையூறுகள் எத்தனை நேர்ந்தாலும் பின் வாங்காதவர், எனவே அனுமனே, மாருதியே, ஆஞ்சநேயா, வாயுபுத்திரா, எழுமின், புறப்படு, எம்முயிர் நல்கி இசை கொள்வாய், மகிழ்ச்சியான செய்திளைக் கொண்டு வந்து இராமனையும் மகிழச் செய்வாய். இவ்விராமனைக் கூடத் தனது துன்பக் கடலைத் தாவிடச் செய்யும் பேராற்றல் படைத்த அனுமனே!

''இக்கடல் தாவும் வேகம் அமைந்தாய், புறப்படு'' என்று சாம்பவன் அனுமனைத் தூண்டினான். அவனுடைய பேராற்றலையும் வல்லமையையும் கிளப்பிவிட்டான்.

இது ஒரு அருமையான அற்புதமான காட்சியாகும். கம்பன் மிகவும் அழகாக கம்பீரமாக இங்கு அனுமனுடைய அதிசயமான குணச் சிறப்புகளை ஆற்றலை பேருருவப்படுத்தி எடுத்துக் காட்டுகிறார்.

அனுமன் பிரம்மாவுக்கு ஈடானவன். ஆயினும் அடக்கமானவன். அவனுடைய அரும் குணச் சிறப்புகளில் முக்கியமானது அவனுடைய புலனடக்கம். பெண்களைப் பற்றி பெண்களின்பத்தைப் பற்றி கனவிலும் நினைவிலும் கருதாதவன் என்பதைச் சாம்பவான் ''நினைவாலும் மாதர் நலம் பேணாது வளர்ந்தவன்'' என்று கூறியதைக் கம்பன் இங்கு குறிப்பிடுகிறார்.

கம்பன் கூறும் முக்கியமான தத்துவங்களில் ஒன்று புலனடக்கம். புலனடக்கம் என்பது வெறும் தத்துவ விளக்கம் மட்டுமல்ல. கடுமையான முயற்சியும் செயல் திறனு மாகும். அறிவாற்றலும் செயல் திறனும் இணைந்ததாகும். இப்புலனடக்கக் கூறுகளில் முக்கியமான ஒன்று பெண்ணாட்டம் கொள்ளாமை என்பதை அனுமன் மூலமாகக் கம்பன் மிகவும் விவரித்துக் கூறுகிறார்.

அறிவாற்றலுக்கும் புலனடக்கத்திற்கும் சிறந்த உதாரணங்கள் நமது பண்டைய ரிஷிகள். நமது சாத்திரங்களில் நமது பண்டய காலத்து ரிஷிகளைப் பற்றிய பல உதாரணங்கள் உள்ளன.

இராமாயணப் பெருங்கதையில் இராமன், பரதன், இலக்குவன், அனுமன், வீடணன் ஆகியோர் சிறந்த அறிவாற்றலுக்கும் புலனடக்கத்திற்கும் அவை இணைந்த பெருமைக்கும் சிறந்த முன் உதாரணங்களாக இருக்கிறார்கள். இராமன் திருமணமானவன் ஆயினும் ஏகபத்தினி விரதன்.

எந்த சோதனை ஏற்பட்டாலும் மனதாலும் உணர்வாலும் சிந்தனையாலும் மற்றொரு மாதை நினைக்காதவன். பரதனும், இலக்குவனும், வீடணனும் திருமணமானவர்கள். பக்தியில் ஆழ்வார்களுக்கு ஒப்பானவர்கள். தன்னலமின்றி இராமனுக்காக சேவை செய்பவர்கள். புலனடக்கத்தில் இணையற்றவர்கள். அனுமன் திருமணம் இல்லாதவன். நித்தியப் பிரம்மச்சாரி, சிரஞ்சீவி சகாவரம் பெற்றவன். புலனடக்கத்திற்கு தலைசிறந்த முன்னதாரணமாகத் திகழ்பவர்.

அத்துடன் இங்கு அனுமனுடைய பிரம்மாண்ட மான உலகப் பெருவடிவம் (விஸ்வரூபம்) காட்டப்படுகிறது. அனுமன் பாரத அன்னை ஈன்றெடுத்த அரும் புதல்வர்களில் ஒருவன். அவ்வனுமன் ஈடு இணையில்லாத ஒரு மாவீரன். பேரறிஞன் சொல்லின் செல்வன். அவன் மகத்தான மகா அற்புதமான பல செயல்களைச் செய்யப் போகிறான். கடலைத் தாண்டப் போகிறான். இலங்கையின் கோட்டைக்குள் பலத்த பாதுகாப்புகளையும் கடந்து உள்ளே செல்ல விருக்கிறான். சீதையைக் காண விருக்கிறான். இராவணனை சந்தித்துப் பேச விருக்கிறான். அரக்கர்களுடன் போரிட விருக்கிறான். இலங்கையைத் தீக்கிறையாக்க விருக்கிறான்.

இராமாயண மகாகாவியத்தின் சுந்தர காண்டத்தில் அனுமனே கதாநாயகன். அவன் சுந்தரன், அழகன் என்று பெயர் பெறுகிறான்.

அவனுடைய பெருமைகளை அவனுடைய பெரும்பலத்தை அவன் அறியமாட்டான். அவைகளை மற்றவர்கள் எடுத்துக்கூற வேண்டும். அதற்கு ஒரு சாம்பவன் வேண்டும். பாரத புத்திரர் பலரும் இந்த இயல்பைப் பெற்றவர்கள். நாம் நமது பெருமையை நமது பெரும் பலத்தை நாம் அறியமாட்டோம். நாம் அதை உணரவில்லை.

இமயத்தின் உயர்ச்சியையும், கங்கையின் புனிதத்தையும், கோதாவரியின் அகலத்தையும் அமைதியையும், வேங்கடத்தின் தனிச் சிறப்புகளையும், காவிரி யின் செழிப்பையும், வைகையின் பெருமை களையும், பொதிகையின் அறிவாற்றலையும், பாரதம் படைத்துள்ள நூறாயிரம் சாத்திரங்களின் அறிவுச் செல்வங்களின் பெருமைகளை

நாம் அறியமாட்டோம். நமது மக்களுக்கு அவைகளை எடுத்துக்கூறக் கம்பனும் பாரதியும் வேண்டும்.



அவர்கள் நமது பெருமைகளையும் பலத்தையும் எடுத்துக் கூறி நாம் அதை உணர்ந்து விட்டால், எழுச்சி பெற்று விட்டால் நமக்கு ஈடு இணையே இல்லை. வையத் தலைமை நமக்கு ஏற்பட்டு விடுகிறது.

அனுமனும் பீமனும் வாயுபுத்திரர்கள். பாரத நாட்டின் மகா பலவான்கள் தர்மத்தின் பக்கம் நின்றவர்கள். அனுமனும் சஞ்சீவி மலையும் பாரத நாட்டின் பண்பாட்டுப் பெருமைகள். அனுமன் சிரஞ்சீவி, அந்தப் புகழ் நிறைந்த சிரஞ்சீவியும் சஞ்சீவி மலையும் பாரத நாட்டு மக்களுடைய உள்ளங்களில் நிரந்தரமாக நிலை பெற்றுள்ள பெருவடிவங்களாகும்.

சாம்பவன் கூறிய வார்த்தைகளில் உணர்வு பெற்ற அனுமன் வீர உரை கூறியதைக் கம்பன் மிக அற்புதமான, மிகவும் கம்பீரமான சொற்களில் எடுத்துக் கூறியுள்ளார். இலங்கையை வேரோடு அகழ்ந் தெடுத்து உங்களிடம் கொண்டு வரச் சொன்னாலும் என்னைத் தடுப்போரை யெல்லாம் எதிர்த்துத் தகர்த்தெறிந்து விட்டு பொலன் குழைமயிலைக் (அழகிய காதணிகளையுடைய சீதா பிராட்டியை) கொண்டு வரும்படி நீங்கள் கூறினாலும் அதைச் செய்து முடிப்பேன். அதில் மாற்றமில்லை.

ஒருவன் தான் நினைத்த மாத்திரத்தில் ஏழு கடல்களையும் தாண்டிச் சென்று உலகனைத்தையும் வென்று சீதாபிராட்டியை மீட்பதற்குத் தகுதியுடையவன் என்று என்னை நீங்கள் ஏவினீர்கள் என்றால் அதை விட நான் என் பிறவியில் பெற்றப் பேறு எதுவும் இல்லை.

உலகம் அனைத்தையும் விழுங்குவதைப் போல முக்கடல்களும் பொங்கி எழுந்தாலும் அண்டமே உடைந்து பறந்து எதிர்வந்தாலும் உங்களுடைய அருளும் நமது அரசனுடைய ஏவலும் இருப்பதால் அடர்ந்த நீண்ட சிறகுகளைக் கொண்ட கருடன் பறப்பதைப் போல நானும் பறந்து சென்று காரியத்தை வெற்றியுடன் முடிப்பேன் என்று வீரம் கூறி எழுந்தான், என்று கம்பன் குறிப்பிடுகிறார்.

''மகேந்திரமலை உறைமின்'' நீங்கள் இங்கேயே இனிது இருங்கள். ''யானே எறிகடல் இலங்கை எய்தி மீண்டும் இங்கே வருகிறேன். அதுவரை நீங்கள் இங்கேயே இருங்கள். உங்களிடம் விடை கொண்டேன்'' என்று அனைவரின் வாழ்த்துக்களுடன் விடை பெற்றுக் கொண்டு கடலைத் தாண்டுவதற்காக மகேந்திர மலையின் உச்சிக்குச் சென்றான்.

கடல் தாண்டுதல்:

அங்கிருந்து அனுமன் திருமால் வாமனா வதாரத்தில் திரிவிக்கிரமனாகப் பெருவடிவில் வளர்ந்ததைப் போல உருவெடுத்து அனைவரும் காணும்படியாக உயர்ந்துக் கடலைத் தாண்ட விண் வெளியில் உயரக் கிளம்பினான்.

''பொருவருவேலை தாவும் புந்தியான், புவனம் தாய
பெருவடிவு உயர்ந்த, மாயோன் மேக்குறப் பெயர்த்தாள்போல
உரு அறிவடிவின் உம்பர் ஓங்கினன்; உவமையாலும்
திருவடி என்னும் தன்மையாவர்க்கும் தெரிய நின்றான்''

என்று கம்பர் மிகச் சிறப்பாகக் குறிப்பிடுகிறார். இங்கிருந்து கம்பர் நம்மைச் சுந்தர காண்டத்திற்குக் கொண்டு செல்கிறார். நம்பிக்கை மிக்க செய்திகள் தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கின்றன. நமது துன்பங்கள் எல்லாம் மறையும் காலம் வந்து விட்டது.

அனுமன் ஆகாய மார்க்கத்தில் பாய்ந்துப் பறந்து செல்கிறான். தெய்விகக் கடமைகளை நிறைவேற்றுவதில் மிக்க ஆர்வம் கொண்டு வேகமாகச் சொல்கிறான். அப்போது ஒரு இடத்தில் கடலிலிருந்து மைந்நாக மலை எழுந்து வந்து குறுக்கே நின்றது. அது என்ன வென்று அயிர்த்து அனுமன் அதைத் தன் காலால் எட்டி உதைத்தான். அம்மலை தலைகீழப் புரண்டு விழுந்தது. அனுமன் மேலே கிளம்பினான். அம்மலையோ சிறு மானிட வேடம் பூண்டு ''எந்தாய் இது கேள். இந்திரன் மலைகளைச் சிதைத்தபோது காற்றரசன் என்னைக் காப்பாற்றினான். நீ, அக்காற்றரசனுக்கு அன்பிற்குரிய குமரன். ஆதலால் உனக்கு விருந்தளித்து இளைப்பாறச் செய்யலாம் என்று வந்தேன், என்றான். அனுமன் '' நான் தெய்வப் பணியில் செல்கிறேன். அப்பணி முடித்துத் திரும்பும் போது உன் விருந்தை ஏற்கிறேன்'' என்று கூறி விட்டு அங்கு நிற்காது கிளம்பினான்.

அனுமன் தனது அரும்பணி ஆற்றச் சென்று கொண்டிருந்த போது வேறு இரு இடையூறுகளும் நிகழ்ந்தன.

சுரசை என்பவள் அனுமனைத் தடுத்தாள். அவள் நெருப்பு போன்ற பசிப்பிணி மிக்கவள். ''என்பசிப் பிணி தீர்க்க என் வாயில் புகுவாய்'' என்று வாயைப் பிளந்து கொண்டு எதிரில் வந்தாள். அனுமன் அவளைப் பார்த்துப் பெண் பாலாகிய நீ பசிப்பிணி கொண்டிருக்கிறாய் எனது உடம்பை உண்டு உனது பசிப் பிணியைத் தீர்த்துக் கொள்ள உதவுகிறேன். ஆனால் அதற்கு முன்பாக எனது நாயகனுடைய ஏவல் பணியை முடித்து விட்டு வந்து விடுகிறேன்'' என்று அவளிடம் அனுமன் கேட்டுக் கொண்டான். அவளோ விடவில்லை. ''உன்னைத் தின்றே தீர்வேன்'' என்றாள் ''உன்னால் முடிந்தால் தின்று பார் என்று அனுமன் கூறித் தனது உடலை மிகச் சிறிய அளவில் சுருக்கிக் கொண்டு அவளுடைய வாயில் புகுந்து வெளியேறி விட்டான். தான் தோல்வியுற்றதை ஏற்று அச்சுரபை அனுமனை வாழ்த்திவிட்டுச் சென்று விட்டாள். அனுமனும் அப்பால் சென்றுத் தனது பயணத்தைத் தொடர்ந்தான்.

அப்பொழுது மற்றொருத்தி குறுக்கிட்டாள். அவள் அறத்தைத் தின்றவள். அவள் எதிரில் வந்து அனுமனைத் தடுத்தாள்.

''பெண் பால் என்று என்னைக் கருதாதே என்னைத் தேவர்கள் நெருங்கினாலும் அவர்களைத் தின்று தீர்ப்பேன். என் எதிரில் காலன் வந்தாலும் நான் ஒருத்தியே நின்று அவனைத் தின்று தீர்ப்பேன். என்று கூறிக் கொண்டு அனுமனை விழுங்குவதற்காக வாயைத் திறந்தாள், அனுமனோ அவளுடைய வயிற்றுக்குள் புகுந்து வெளியேறி விட்டான் பின்னர் விரைந்து சென்று இலங்கையை அடைந்தான். இங்கு அனுமனுடைய அரும் பணிக்கு இடையூறாக இரு பெண் பேய்கள் வருகின்றன. அவைகளின் வாயில் நுழைந்து வெளியேறி மாருதி தனது கடமையை ஆற்றக் கடுகில் விரைந்தான் என்பதைக் காண்கிறோம்.



15. இலங்கை நகரின் காட்சி

இலங்கை நகரை அனுமன் தன் இரு கண்களால் கண்டான். அந்நகரின் அழகைக் கண்டு ஆச்சரியப்பட்டான். அந்நகர் தேவர்களுடைய அமராவதி நகரைக் காட்டிலும் அழகு மிக்கதாக

இருந்தது. இத்தனை அழகான இலங்கை மாநகரை ஆளும் இராவணன் உலகம் முழுவதையும் அடக்கி ஆண்டு கொண்டிருக்கும் அந்த வணங்கா முடியான் இனி வாழ மாட்டான் என்றெல்லாம் சிந்தித்து அனுமன் வியப்படைந்தான்.

இலங்கை நகரின் சிறப்புகள் அரக்கர்களின் ஆனந்த வாழ்வு, அவர்களின் படைபலம் முதலியவற்றைறெல்லாம் கண்டு அனுமனே மிகவும் ஆச்சரியப்பட்டு இராவணனுடைய படைபலத்தை எவ்வாறு விவரித்து இராமபிரானிடம் கூறப்போகிறேன் என்று எண்ணினான் என்று கம்பர் குறிப்பிடுகிறார்.

''விற்படை பெரிதென்கேனோ?
வேற்படை மிகும் என்கேனோ?
மல்படை உடைத்து என்கேனோ?
வாள்படை வலிது என்கேனோ?
கற்பணம், தண்டு, பிண்டி, பாலம்
என்று இனைய காந்தும்,
நற்படை பெரிது என்கேனோ?
நாயகற்கு உரைக்கும் நாளில்''

என்று அனுமன் சிந்தித்தான் – சூரியன் மறைந்தான். இருள் சூழ்ந்தது. அவ்விருளைப் பற்றி ஒருவன் மெய்யிலான் தீவினை போன்ற இருள் என்று கம்பர் குறிப்பிடுகிறார். அவ்விருள் வெண்மை நீங்கிய கருமை நிறைந்த புகழ் பழி பாவம் போல விரிந்து பரவியது.

"வண்மை நீங்கா நெடு மரபின் வந்தவள், பெண்மை நீங்காத கற்புடைய பேதையைத் திண்மை நீங்காதவன் சிறைவைத் தான் எனும் வெண்மை நீங்கி புகழ் விரிந்தது என்னவே."

என்று இருள் பரவிற்று. அப்போது அங்கு மாருதி என்னும் பெயருடைய ஆண்தகை வந்துள்ளது, அறம் முளைத்ததுப் போல என்று சந்திரன் உதித்தான் என்பதைக் கம்பன் குறிப்பிடுகிறார்.

இனி அனுமன் இலங்கை நகருக்குள் புகுந்தது பற்றிக் கூறும் போது,

''இகழ் வரும் பெருங்குணத்து இராமன் எய்தது ஓர்
பகழியின், செலவென, அனுமன் பற்றினால்
அகழ் புகுந்து, அரண் புகுந்து, இலங்கை அன்னவன்
புகழ் புகுந்து உலாயது ஓர் பொலிவும் போன்றதே''

என்று கம்பன் மிகவும் சிறப்பாகக் குறிப்பிடுகிறார்.

இலங்கை மாதேவியின் எதிர்ப்பு

அனுமன் இலங்கையின் கோட்டை அருகில் வந்தான். கோட்டை வாயிலில் காவல் பலமாக இருந்தது. அதனால் வேறு வழியில் கோட்டை மதிலைத் தாண்டுவதற்கு முயன்றான். அப்போது அவனை இலங்கை மாதேவி என்னும் காவல் தேவதை தடுத்தாள். அந்த இலங்கை மாதேவி யார்?

''எட்டுத் தோளாள்; நாலு முகத்தாள்; உல கேழும்
தொட்டுப் பேரும் சோதி நிறத்தாள்; சுழல் கண்ணாள்;
முட்டிப் போரில் மூவுலகத்தை முதலோடும்
கட்டிச்சீறும் காலன் வலத்தாள்; கமை இல்லாள்,''

''எல்லாம் உட்கும் ஆழி இலங்கை இகல் மூதூர்
நல்லாள், அவ்வூர்வைகு உறைஒக்கும் நயனத்தாள்;
நில்லாய்! நில்லாய்! என்றுரை நேரா, நினையா முன்
வல்லே சென்றாள், மாருதி கண்டாள், 'வருக' என்றான்

என்று கம்பர் இலங்கை மாதேவியைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

இன்னும்,''பொங்கு அழல் என்னப் புகைக் கண்ணாள், நெஞ்சம் கல் எனக் கொண்டவள், தெய்வப் படைபல கொண்டவள், இடி முழக்கம் செய்பவள், தகைவு இல்லாள்'' என்றெல்லாம் அவளைப் பற்றிக் கம்பன் கூறுகிறார்.

இவ்விலங்கை மாதேவி பிரம்மதேவன் அருள் பெற்று இலங்கை நகரை காக்கும் பணியை ஏற்றவள். அந்தக் காவல் தெய்வம் அனுமனைக் கண்டதும் அவனை '' நில்'' எனத் தடுத்தாள் அனுமனோ ''நான் இவ்வூரைக் காணாமல் போகமாட்டேன்'' என்று கூறினான். அவள் கோபம் கொண்டு அனுமன் மீது ஒரு மூவிலை சூலத்தை ஏவினாள். அனுமன் அதைப் பிடித்து ஒடித்து எறிந்துவிட்டான்.

பின்னர் அவ்விலங்கை மாதேவி மிக்க கோபம் கொண்டு அனுமனை அடிக்கத் தனது நெருப்பைப் போன்ற கைகளை ஓங்கினாள். ஓங்கிய அக்கைகளைத் தடுத்துப்பிடித்து அனுமன், ''என்னே பெண் இவள்'' என்று கருதி ''இவளைக் கொல்லுதல் பிழை'' எனக்கூறி அவளுடைய ஒடியா நெஞ்சத்து ஒரு அடி கொடுத்தான். அந்த அடியைத் தாங்க முடியாமல் அவ்விலங்கை மாதேவி இடிபட்ட நாகம் போல் கீழே விழுந்தாள்.

அனுமனுடைய அடியைத் தாங்க முடியாமல் கீழே விழுந்து எழுந்த அந்த இலங்கை மாதேவி என்பாள், அனுமனிடம் பணிந்து, ''அய்யா கேள், அயன் அருளால் இம் மூதூர் காத்து வந்தேன், எத்தனை காலம் காப்பன் யான் இந்த மூதூர்'' என்று அம்முத்தனை வினவிய போது, ''முரண் வலிக்குரங்கு (மிகுந்த வலிமையான ஒரு குரங்கு) ஒன்று உன்னைக் கைத்தலம் அதனால் தீண்டின் உனது காவல் காலம் முடியும். அப்போது வந்து என்னைக் காண்பாய். அதன் பின்னர் இந்தச் சித்திர நகரம் சிதைவது திண்ணம்'' என்று கூறினான். அதற்குரிய காலம் வந்து விட்டது. அறம் வெல்லும், பாவம் தோற்கும் நீ நினைத்த தெல்லாம் நடக்கும். உன் முயற்சி வெற்றி பெறும். நீ இப்பொன்னகருக்குள் போகலாம்'' என்று கூறிவிட்டு அந்த இடத்தை விட்டு அகன்று போய்விட்டாள்.

அனுமனும் இராமனை உள்ளத்திலே எண்ணி வணங்கிக் கொண்டு மதிலைத் தாண்டி நகருக்குள்ளே சென்றான்.

அனுமன் ஐம்புலன்களை அடக்கியவன். அவைகளைக் கட்டுப் படுத்தியவன். அவைகளை வென்றவன். ஆறாம் அறிவில் மிக்கவன். அளவற்ற உடல் பலமும் பேராற்றலும் கொண்டவன். உள்ளத்தாலும் உணர்வாலும் பெண்ணாசை இல்லாதவன். பெண்ணாட்டம் இல்லாதவன். இராம சேவையில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவன். அதில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவன். தெய்விகப் பணியை மேற்கொண்டு இலங்கைக்கு வருகிறான். ஆகாய வழியில் கடலைத் தாண்டி வந்து கொண்டிருந்த போது பசிப் பிணிமிக்க பெண்பால் ஒருத்தியும் பெண் பால் எனக் கருதப்படும் அறத்தைக் கொன்ற மற்றொருத்தியும் வழி மறிக்க அவர்களின் அகண்ட வாய்க்குள் புகுந்து வெளியேறி இலங்கையின் உயர்ந்த கோட்டை மதில் அருகில் வந்த போது அவனைத் தடுத்த இலங்கை மாதேவி என்று பெயர் பெற்ற காவல் தெய்வமான அணங்கையும் கைத்தலம் தன்னால் தீண்டி அடிகொடுத்து அவளுடைய கதையையும் முடித்து இலங்கை மூதூருக்குள் சென்று விட்டான்.

இங்கு அனுமன் இலங்கைக்குச் செல்லும் தனது வழியில் மூன்று பெண்களை சந்தித்து வெற்றி பெற்றதை அறிகிறோம். அறம் வெல்லும் பாவம் தோற்கும் என்று இலங்கை மாதேவி அனுமனுக்கு வாழ்த்துக் கூறி வழி அனுப்பி வைப்பதையும் அனுமன் நகருக்குள் செல்வதையும் அறிகிறோம்.

இலங்கையின் சிறப்பு

இலங்கையின் தனிச்சிறப்புகள் பற்றிக் கம்பநாடர் மிக அழகாக விவரிக்கிறார்.

''பொன் கொண்டு இழைத்த?
மணியைக் கொடு பொதிந்த?
மின் கொண்டு அமைத்த?
வெயிலைக் கொடு சமைத்த?
என் கொண்டு இயற்றிய
எனத் தெரிவு இலாத
வன் கொண்டல் விட்டு,
மதிமுட்டு வன மாடம்''

என்று குறிப்பிடுகிறார்.

நகரெங்கும் கற்பக விருட்சங்கள் நிறைந்து பச்சைப் பசேலென்று பசுமையாகக் காணப்படுகின்றன. செல்வச் செழிப்பில் திகழ்ந்த மக்களும் கனகம் நிறைந்த இல்லங்களும் நிரம்பியிருந்தன. அரக்கியர் களுக்கு தெய்வ மாதவர்கள் குற்றேவல் செய்து கொண்டிருந்தனர். இவையெல்லாம் ஒருவர் சொல்லும் தரத்தில் இல்லை. கம்பனே விவரித்துக் கூற முடியாத படி தவத்தின் தவமாகத் திகழ்ந்தது அப்பெருநகரம்.

அரக்கர்கள் ஆனந்த வாழ்வு வாழ்ந்தனர். அத்துடன் படைபலம் மிக்கவர்களாகவும் செழுமையாகவும் வாழ்ந்து வந்தனர். அத்தகைய செல்வச் செழிப்பும் வல்லமையும் ஆனந்த வாழ்வும் அந்த இலங்கையின் வேந்தனுடைய மனம் போன போக்கினால் விரைவில் அழியப் போகிறது அவன் ''பெண்மை நீங்காத கற்புடைப் பேதையை சிறைவைத்த காரணத்தால்'' மாருதி தனது உடலைச் சுருக்கிக் கொண்டு வீதிகளின் நடுவில் செல்லாமல் மாளிகைகளின் ஓரமாகவே சென்றான்.

''ஆத்துறு சாலை தோறும் ஆனையின் கூடந்தோறும்
மாத்துறு மாடந் தோறும் வாசியின் பந்தி தோறும்
காத்துறு சோலை தோறும், கருங்கடல் கடந்த தாளான்
பூத்தொறும் வாவிச் செல்லும் பொறிவரி வண்டின், போனான்''

மாருதி நகரின் பல காட்சிகளையும் கண்டு கொண்டே சென்றான். கும்பகருணன் தூங்கிக் கொண்டிருந்ததை அவனுடைய மாளிகையில் கண்டான். அவ்வரக்கனைக் கண்ட போது அனுமனுக்குக் கோபம் வந்தது. அவன் இராவணனாக இருப்பானோ என்று கருதி அவனுக்கு அக்கோபம் வந்தது. ஆயினும் அவன் இராவணனாக இருக்க மாட்டான் பத்து தலைகளும் இருபது தோள்களும் இல்லை என்ற அவ்வனுமன், ''ஏறிய முனிவு எனும் வடவை வெம் கனலை அறிவெனும் பெரும் பரவை அம்புனலினால் அவித்தான்'' என்று கம்பநாடர் குறிப்பிடுகிறார். சினத்திற்கு வடவைவம் கனலும்

(வடமுகாக் கினியும்) அறிவுக்குப் புனலும் இங்கு உவமை களாகக் கூறப்பட்டிருக்கின்றன.

அடுத்து அனுமன் வீடணன் மாளிகையைக் கண்டான் ''ஒளித்து வாழ்கின் தர்மம் அன்னான் தனை உற்றான்'' என்று கம்பன் குறிப்பிடுகிறார். அத்துடன் வீடணனைக் கண்ட அனுமன், ''உற்றுநின்று அவன் உணர்வைத் தன் உணர்வினால் உணர்ந்தான். குற்றம் இல்ல தோர் குணத்தினன் இவன்'' எனக் கொண்டான் என்று கம்பன் குறிப்பிடுகிறார்.



இன்னும், இந்திரசித்தன், அக்கன், அதிகாயன், மற்றும் இதர தம்பியர் இல்லங்களையும் வேறு பல அரக்கர்களின் இல்லங்களையும் கண்டு விட்டு இராவணனுடைய பொன்மனை சேர்ந்தான்.

இராவணனைப் பற்றி அவன் உறங்கி கொண்டிருந்த நிலையைப் பற்றிக் கூறும் போது அவனுடைய காம வெறியை வெளிப்படுத்திக் காட்டும் வகையில்.

''கள் அவிழ் மாலைத்தும்பி வண்டொடும் கரிந்து சாம்ப, ஒள்ளிய மாலை தீய உயிர்க் கின்ற உயிர்ப்பினானை'' என்றும், ''பூவியல் அமளி மேலாப் பொய் உறக்கு உறங்குவானை'' என்றும், ''காவி அம் கண்ணி தன்பால் கண்ணிய காதல் நீரின் ஆவியை, உயிர்ப்பு என்று ஓதும் அம்மியிட்டு அனாக்கின்றானை'' என்றும் ''வாளாற்று கண்ணாளை வஞ்சித்தான்'' என்றெல்லாம் கம்பன் விவரித்துக் கூறுகிறார்.

இராவணனைக் கண்டவுடன் அனுமன் கடுங்கோபம் கொள்கிறான். அவனுடைய ஆத்திரம் அதிகமாகிறது. அப்படியே அவ்வரக்கனை அடித்து நொறுக்கி, அவனுடைய மணி முடியை இடித்து, தலைகள் பத்தையும் தகர்த்து எனது ஆற்றலைக் காட்டுவேன் என்று நினைக்கிறான்.

''வாளாற்று கண்ணாளை வஞ்சித்தான் மணிமுடி என் தாளாற்றலால் இடித்துத் தலை பத்தும் தகர்த்து இன்று என் ஆள் ஆற்றல் காட்டுவேன் என்று குமுறுகிறான்'' என்று உறங்கிக் கொண்டிருந்த இராவணனைக் கண்ட அனுமனின் உள்ளக் குமுறல் குறித்துக் கம்பன் மிக அற்புதமாக விவரித்துக் கூறுகிறார்.

இன்னும் எயிறு கடித்து இருகரங்களும் பிசைந்து எழுகிறான். ஆயினும் ஆத்திரம் கொண்ட அனுமன் பின்னர் தன்னுணர்வு பெற்று வந்த காரியத்தை மறந்துவிடக்கூடாது என்று கருதி நிதானமடைகிறான்.

''இவன் நிலையும் புல் நிலையகாமத்தால் புலர்கின்ற நிலை'' என்று உணர்ந்து சினம் தணிந்தான்.



16. சீதையைக் காணல்

மேலும் சீதை இருக்கும் இடம் தேடி அலைந்து கடைசியில் ''கள் உறையும் மலர்ச் சோலை அயல்ஒன்று கண்ணுற்றான்''

நலன் அற உணங்கிய நங்கை

அச்சோலையில், அசோக வனத்தில் அரக்கியர் சூழ், ''நலன் அற உணங்கிய நங்கை'' இருந்தாள். அந்த சோலையில் சீதை இருந்தநிலை பற்றிக் கம்பன் மிகவும் அற்புதமான, சோகம் மிக்க தமிழ் வரிகளில் குறிப்பிடுகிறார்.

''துயில் எனக், கண்கள் இமைத்தலும்
முகித்தலும், துறந்தாள்,
வெயில் இடைத்தந்த விளக்கு என
ஒளியிலா மெய்யாள்;
மயில் இயல் குயில் மழலையாள்,
மான் இளம் பேடை
அயில் எயிற்று வெம்புலிக்குழாத்து
அகப்பட்டது அன்னாள்''

''விழுதல், விம்முதல், மெய்யுற வெதும்புதல், வெருவல்,
எழுதல், ஏங்குதல், இரங்குதல், இராமனை எண்ணித்
தொழுதல், சோருதல், துளங்குதல், துயர் உழந்து உயிர்த்தல்,
அழுதல் அன்றி, மற்று அயல் ஒன்றும் செய்வது அறியாள்''

இந்த நிலையில் சீதை மிக்க கவலை கொண்டு இருப்பதைக் கம்பன் சோகமாகக் குறிப்பிடுகிறார்.

சீதை இராம பிரானை நினைத்து எண்ணமிட்டு கொண்டிருப்பதைப் பற்றி, கம்பனுடைய அற்புதமான புகழ்மிக்க பாடல்கள்;

''மெய்த்திருப்பதம் மேவு என்ற போதினும்
இத்திருத்துறந்து ஏகு என்ற போதினும்
சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை
ஒத்திருக்கும் முகத்தினை உன்னுவாள்''

"ஆழ நீர்க் கங்கை அம்பி கடாவிய
ஏழை வேடனுக்கு, 'எம்பி நின் தம்பி, நீ
தோழன்; மங்கை கொழுந்தி' எனச் சொன்ன
வாழி நண்பினை உன்னி மயங்குவாள்''

''உரங்கொள் தேம்மலர்ச் சென்னி. உரிமைசால்
வரங்கொள் பொன்முடி தம்பி வனைந்திலன்,
திரங்கு செஞ்சடை கட்டிய செய்வினைக்கு
இரங்கி ஏங்கியது எண்ணி இரங்குவாள்''

"பரித்த செல்வம் ஒழியப் படரும் நாள்
அருத்தி வேதியற்கு ஆன்குலம் ஈந்து அவன்
கருத்தின் ஆசைக் கரையின்மை கண்டு, இறை
சிரித்த செய்கை நினைந்து அழும் செய்கையாள்''
"மழுவின் வாளினன், மன்னரை மூவேழு
பொழுதில் நூறிப் புலவு உறு புண்ணின்நீர்
முழுகினான் தவமொய்ம்பொடு மூரிவில்
தழுவும் மேன்மை நினைந்து உயிர் சாம்புவாள்"

''ஏகவாளி, அவ்விந்திரன் காதல் மேல்
போக ஏவி, அது கண் பொடித்த நாள்,
காகம் முற்றும் ஓர் கண் இல ஆகிய
வேக வென்றியைத் தன்தலை மேல் கொள்வாள்''

''வெவ்விராதனை மேவு அரும் தீவினை
வவ்வி, மாற்றரும் சாபமும் மாற்றிய
அவ்விராமனை உன்னித் தன் ஆர்உயிர்
செவ்விராது, உணர்வு ஒய்ந்து, உடல் தேம்புவாள்''

இவ்வாறு சீதை பழைய நிகழ்வுகளை நினைந்து நினைந்து நடப்பில் இருந்தத் தனது நிலையை எண்ணி எண்ணி மனம் நொந்து கொண்டிருந்தாள். ஒவ்வொன்றாகப் பழைய நிகழ்ச்சிகளும் அவைகளைக் கண்டும் சந்தித்தும் இராமன் இருந்த நிலைகளும் ஒவ்வொரு காட்சியாக அவளுடைய நினைவில் வருகின்றன. அவைகளை நினைந்து பெருமை கொண்டும் மனம் நொந்தும் உடல் உருகிக் கொண்டும் இருந்தாள்.

தன் கணவன் மீதான அன்பு, பாசம், காதல், அவனைப் பற்றிய பெருமை, அவனுடைய மாறாத மலர்ச்சி நிறைந்த முகம், அவனுடைய நட்பும் பண்பும் நிறைந்த செயல், அருமைத் தம்பி பரதன் மீது அவன் காட்டிய அன்பு, ஏக்கம், மரியாதை, பரசுராமன் கொடுத்த வில்லைத் தழுவிய மேன்மை, பெருந்தன்மை, இந்திரன் காக்கை வடிவில் வந்து துன்புறுத்திய போது அக்காக்கையின் கண்ணவிக்க ஏவிய புல் கணையின் வெற்றி, விராடனுடைய சாபத்தை மாற்றிய இராமனுடைய ஆற்றல் முதலியவைகளை யெல்லாம் நினைந்து நினைந்து உடல் தேம்பினாள் என்பதைக் கம்பன் நமக்கு இராமனைப் பற்றிய காட்சிகளைக் காட்டுவது நமது நெஞ்சை உருக்கிவிடுகிறது.

இங்கு இராமன் மீது சீதைக்குள்ள பேரன்பை பெரும் பாச உணர்வை வெளிப்படுத்தும் கம்பனுடைய கவிதைச் சொற்கள் மிகவும் சிறப்பாக அமைந்துள்ளதைக் காண முடிகிறது. அது மட்டுமல்ல, இங்கு கம்பனுடைய பாடல்களில் பொங்கி எழும் கம்பனுடைய இராம பக்தியையும் காண முடிகிறது. இங்கு கம்பர், கம்பநாடராக, கம்ப நாட்டாழ்வாராக தன்னுடைய அற்புதமான கவிதைகள் மூலம் காட்சி தருகிறார்.

உலகம் உள்ளளவும் கம்பனுடைய இராமகாதையும், இராம பக்தியும் நீடூழி வாழ்வதாக...!

கண்டான் தேவியை!

சீதையைக் காவல் புரிந்த அரக்கியரைப் பற்றிக் குறிப்பிடும் போது

''எண்ணினுக்கு அளவு இடல் அரிய ஈட்டினர்;
கண்ணினுக்கு அளவு இடல் அரிய காட்சியர்
பெண் எனப் பெயர் கொடு திரியும் பெற்றியர்
துண் எனத்துயில் உணர்ந்து எழுந்து சுற்றினார்''

என்று கம்பர் குறிப்பிடுகிறார்.

அனுமன் பிராட்டியைத் தன் கண்களால் கண்டுவிட்டான். அரக்கிகளுக் கிடையில் கண்ணீரும் கம்பலையுமாய் இருந்த தேவியை இவள் தான் ஜானகி என்பதை உணர்ந்து விட்டான். பெரு மகிழ்ச்சி கொண்டான். அறத்திற்கு அழிவில்லை என்று பெருமை கொண்டான். ''தேடினேன், கண்டனென் தேவியை'' என்று மட்டற்ற ஆனந்தம் அடைந்தான் ஆடினான், பாடினான், அங்கும் இங்கும் பாய்ந்து ஓடினான், உலாவினான், உவகைத் தேன் உண்டான்.

''வீடினது அன்று அறன், யானும் வீகலேன்;
தேடினென் கண்டனென் தேவியே! எனா
ஆடினன், பாடினன், ஆண்டும் ஈண்டும் பாய்ந்து
ஓடினன்; உலாவினன்; உவகைத் தேன் உண்டான்.

''மாசுண்டமணி அனாள், வயங்க வெங்கதிர்த்
தேசுண்ட திங்களும் என்னத் தேய்ந்துளாள்;
காசுண்ட கூந்தலாள் கற்பும் காதலும்
ஏசுண்டது இல்லையால்; அறத்துக்கு ஈறு உண்டோ?''

என்றும்

''தருமமே காத்ததோ? சனகன் நல்வினைக்
கருமமே காத்ததோ? கற்பின் காவலோ?
அருமையே! அருமையே! யார் இது ஆற்றுவார்?
ஒருமையே எம்மனோர்க்கு உரைக்கற் பாலதோ?

என்றும் பெரு மகிழ்ச்சியடைந்து அனுமன் ஆனந்தக் கூத்தாடுகிறான்.

இங்கு சீதையின் கற்பின் பெருமையும் காதலின் சிறப்பும், சீதையைக் கண்ட அனுமனின் மட்டற்ற மகிழ்ச்சியும் எடுத்துக் காட்டப்படுகிறது.



17. சீதையின் சிறப்பு

அனுமன் மறைந்திருந்து சீதையின் நிலையைப் பார்த்துக் கொண்டிருந்த போது, இராவணன் தன் பரிவாரங்களுடன் மிகவும் ஆடம்பரமாக அழகாக ஒப்பனை செய்து கொண்டு கம்பீரமாக சீதை இருக்கும் இடத்திற்கு வந்தான்.

சீதை சிறை வைக்கப்பட்டிருந்த இடம் அசோக வனம். அவ்வனம் மிகவும் அழகானது. மரங்களும் செடிகளும், சோலைகளும், குயில்களும், மயில்களும் நிறைந்தது. அசோகவனம் இராவணனுக்கு உல்லாசவனம். சீதையை மயக்கும் நோக்குடன் அந்த ரம்மியமான சோலை வனத்தில் அவளை அங்குக் காவலில் வைத்திருந்தான்.

சீதைக்கு அரக்கியர் காவல் புரிந்து வந்தனர். அதே சமயத்தில் சீதையின் விருப்பம் எதுவானாலும் அவர்கள் நிறைவேற்றவும் தயாராக இருந்தனர். ஆயினும் சீதை தனது கணவனை நினைந்து கடுந்தவத்தில் இருந்தாள். இராவணனை நினைத்து கடுங் கோபத்துடன் இருந்தாள்.

இராவணன் சீதையின் முன்பாக மிகவும் சிறப்பான முறையில் காட்சி அளித்து அவளுடைய உள்ளத்தைக் கவரும் நோக்குடன், ஆடை அலங்காரங்களுடன் படை பட்டாளங்களுடன் கம்பீரமாக வந்து நின்று சீதையிடம் பேசுகிறான். கனிவாகப் பேசுகிறான். இராவணனுக்கு சீதை மீதுள்ள ஆசை மிகுதியால் தன்னை அழகும் அலங்காரமும் படுத்திக் கொண்டு வருவதைக் கம்பன் மிகவும் கவர்ச்சி கரமாக எடுத்துக் கூறுகிறார்.

‘‘மாலையும், சாந்தும், கலவையும், பூணும்,
வயங்கு நுண் தூசொடு, காசும்,
சோலையின் தொழுதிக் கற்பகத் தருவும்,
நிதிகளும் கொண்டு பின் தொடரப்
பாலின் வெண் பரவைத் திரை கரும் கிரிமேல்
பரந்து எனச்சாமரை பதைப்ப,
வேலை நின்று உயரும் முயல் இல் வெண்மதியின்
வெண் குடை மீதுற விளங்க”

“கேடகத்தோடு மழு, எழு, சூலம்
அங்குசம், கப்பணம் கிடுகோடு
ஆடகச் சுடர்வாள், அயில் இலை, குலிசம்,
முதலிய ஆயுதம் அனைத்தும்
தாடகைக்கு இரட்டி எறுழ் வலி தழைத்த
தகைமையர், தடவரை பொறுக்கும்
சூடகத்தடக்கைச் சுடுசினத்து அடுபோர்
அரக்கியர் தலை தொறும் சுமப்ப,

''இனையது ஓர் தன்மை எறுழ் வலி அரக்கர்
ஏந்தல் வந்து எய்துகின்றானை
அனையது ஓர்தன்மை, அஞ்சனை சிறுவன்
கண்டனன் அமைவுற நோக்கி,
வினையமும் செயலும், மேல்விளை பொருளும்
இவ்வழி விளங்கும் என்று எண்ணி,
வனைகழல் இராமன் பெரும் பெயர் ஓதி,
இருந்தனன் வந்து அயல் மறைந்தே''

இவ்வாறு இராவணன் தன் இயல்பான கம்பீரத்துடனும், செயற்கையான பலவகை ஒப்பனைகளுடனும் பரிவாரங்களுடனும் சீதையிடம் வந்ததை அனுமன் கண்டான். என்ன நடக்குமோ என்று கருதி மறைவாக இருந்து கவனித்துக் கொண்டிருந்தான்.

இராவணன் வருகையை அனுமன் மிகப் பொருமையாகப் பார்த்துக் கொண்டிருந்தான். ''அஞ்சனை சிறுவன் கண்டனன் அமைவுற நோக்கி வினையமும், செயலும், மேல்விளை பொருளும் இவ்வழி விளங்கும்'' என்று எண்ணி, வனைகழல் இராமன் பெரும் பெயர் ஓதி இருந்தனன் வந்து அயல் மறைந்தே'' என்று கம்பன் மிகவும் நுட்பமாகக் குறிப்பிடுகிறார்.

புலியென வந்த அரக்கனைக் கண்டு மான் போன்ற சீதை கலங்கினாள் என்னும் பொருளில்,

"ஆயிடை அரக்கன் அரம்மையர் குழுவும்
அல்லவும், வேறு அயல் அகல
மேயினன், பெண்ணின் விளக்கெனும் தகையாள்
இருந்துழி; ஆண்டு அவள், வெருவி,
போயின உயிரள் ஆம் என நடுங்கிப்
பொறி வரி, எறுழ்வலிப், புகைக் கண்,
காய் சின உருவை தின்னிய வந்த
கலை இளம் பிணை எனக் கரைந்தாள்''

என்று கம்பன் கவலை பொதிந்த சொற்களில் குறிப்பிடுகிறார்.

இங்கு ஒரு அறிய காட்சி நம் முன் நிற்கிறது. காம வெறியுடன் ஆசை மேவிட அலங்காரங்களுடன் வந்து நிற்கிறான் இராவணன். அவன் இலங்கையின் பேரரசன். அவன் நினைத்த காரியத்தை எதையும் செய்து முடிக்கலாம். விருப்பமில்லாத ஒரு பெண்ணைத் தீண்ட முடியாது என்னும் சாபம் ஒன்று இருப்பதால் அவன் சீதையை

இணங்க வைக்க எல்லா சாகசங்களையும் முயற்சிகளையும் செய்து கொண்டு சீதையின் முன்பு நிற்கிறான் என்று கம்பன் குறிப்பிடுகிறார். மறுபக்கம்,

சிறைப்படுத்தப்பட்ட சீதை என்ன நடக்குமோ என அஞ்சியும் மறுபக்கம் தனது கற்பின் வலிமையால் உறுதியாகவும் இருக்கிறாள்.

மூன்றாவதாக, சீதையும் இராவணனும் அறியாமல் அனுமன் மறைந்து நின்று இருவரையும் பார்த்துக் கொண்டு இருக்கிறான்.

இராவணன் தரப்பில் எல்லை மீறல் எதுவும் நடக்குமானால், அவன் எதிர்பாராமல் அவன் மீது பாய்ந்து அவனை வீழ்த்தவும் தயாராகவும் அனுமன் மரக்கிளையில் மறைந்து அமர்ந்துள்ளான். இதை,

''கூசி, ஆவி, குலைவுறு வாளையும்
ஆசையால், உயிர் ஆசு அழிவானையும்
காசு இல் கண் இணை சான்று எனக் கண்டனன்
ஊசல் ஆடி உளையும் உளத்தினான்''

என்று அனுமன் இருந்த நிலையைப் பற்றிக் கம்பநாடர் குறிப்பிடுகிறார்.

இந்த நிலையில் ஜானகியின் உறுதியைக் கண்ட அனுமன்,

''வாழி சானகி! வாழி இராகவன்!
வாழி நான் மறை! வாழியர் அந்தணர்!
வாழி நல் அறம்! என்று உற வாழ்த்தினான்;
ஊழிதோறும் உயர்வுறும் கீர்த்தியான்''

இங்கு அனுமனைப் பற்றி அவனுடைய ஆற்றலையும் அருஞ் செயல்களையும் பற்றி கம்பன் மிகவும் உயர்வாகப் பாராட்டிப் பேசுகிறான். அந்த வகையில் ''ஊழிதோறும் உயர்வுறும் கீர்த்தியான்'' என்று பெருமையுடன் குறிப்பிடுகிறார்.

இராவணனுடைய கொஞ்சுதலையும் சீதையின் சீற்றம் மிக்க வார்த்தைகளையும் அனுமன் கவனிக்கிறான்.

இராவணன் இரப்பும் சீதையின் சீற்றமும்

இங்கு இராவணனுக்கும், சீதைக்கும் ஒரு நீண்டக் கடுமையான உரையாடல் நடைபெறுகிறது. முதலில் இராவணன் சீதையைக் கெஞ்சுகிறான். அவள் மீது தனது ஆசைப்பெருக்கத்தையும்

அவனுடைய ஆற்றலையும் ஆட்சி அதிகாரப் பெருமைகளையும் பற்றிக் குறிப்பிடுகிறான்.

இராவணன், ஜானகியிடம் முதலில் கெஞ்சிக் கெஞ்சிப் பேசுகிறான் ''எவ்விடத்து எனக்கு இன்னருள் ஈவது, நொவ்விடைக் குயிலே நுவல்க'' என்று கெஞ்சுகிறான். இதைப் பற்றி, ஈசற்கு ஆயினும் ஈடு அழிவுற்று இறை வாசிப்பாடு அழியாத மனத்தினான், ஆசைப்பாடும் அந்நாணும் அடர்த்திடக் கூசிக் கூசி இணையன கூறினான்'' என்று இராவணன் ஆசையும் நாணமும் இணைந்துக் கூசிக் கூசிச் சீதையிடம் பேசியதாகக் கம்பன் மிக நுட்பமாகக் குறிப்பிட்டுக் கூறுகிறார். மேலும்,

இராவணனுடைய உள்ளத்திலிருந்து எழும் வார்த்தைகள் சீதை மீதான அவனுடைய ஆசைப் பெருக்கத்தையும் மறு பக்கம் கம்பீரத்தையும் குறையாமல் வெளிப்படுத்துகிறது. இன்றிருப்போர் நாளை இருக்க மாட்டார். நாளும் இளமையும் மீண்டும் வராது, என்பால் அருள் கொள்வாயாக. நான் இராமனைக் கொல்லும் போது அவனுடைய சாவுக்குரல் கேட்கும் வரை காத்திருக்கப் போகிறாயா? தேவாதி தேவர்கள் தேவியர்கள் எல்லாம் உன் காலடி தொழுது உனக்குச் சேவை செய்யக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். உலகின் ஒப்பற்றத் தலைமை உனக்குக் கிடைக்கப் போகிறது. அதை ஏன் நீ மறுக்கிறாய் என்றெல்லாம் பலதும் கூறிச் சீதையை வசப்படுத்துவதற்கான வார்த்தைகளை எடுத்துக் கூறுகிறான்.

இந்தத் தரமற்ற வார்த்தைகளைக் கேட்ட சீதை சீற்றத்துடன் அரக்கனை இகழ்ந்து பேசுகிறாள். ''எனது நாயகனுக்கு நேரில் வர பயந்து மறைந்து வந்து வஞ்சனையாக என்னை எடுத்து வந்தாய். அன்றுச் சடாயுவால் தரையில் வீழ்ந்தாய், தெய்வீக வாள் உன் கையில் இல்லாமல் இருந்திருக்குமானால் நீ அவனை வீழ்த்தியிருக்க முடியாது. வித்தக வில்லினார் உனது பத்துத் தலைகளையும் கொய்து உன்னைக் கொன்றுக் குவிக்கப் போகிறார். உன்னுடைய வாழ் நாளும் வரங்களும் எல்லாம் முடியப் போகிறது.

எந்த விதக் குறைபாடுகள் இல்லாத வீரர்கள் ஆயினும் அவர்களும் மாண்டே போயினர். அறம் திறம் பினர்களும் மக்கட்கு அருள் திரம்பினரும் கூட இறுதியில் மாண்டே போயினர். தென் தமிழுக்கு இலக்கணம் வகுத்த அகத்தியரும் இதர தீது தீர் முனிவர்களும், ''அரக்கர்களுடைய கொடுமைகளும் அட்டகாசங்களும் அதிகரித்து விட்டன வென்றும், அதனால், நீ அவர்களை அழித்து

எங்கள் தவத்தைக் காப்பாய், உன்னால் அக்கூட்டம் குறையும் என்பதில் சந்தேகமில்லை'' என்று இராமபிராளை வேண்டிக் கொண்டதை நானே பலமுறை கேட்டிருக்கிறேன். அதற்கிசைந்தவாறு நீ செய்த கொடுமைகளுக்கு நீயும் உனது அரக்கர் கூட்டமும் அழியப் போகிறது. உனது தங்கை மூக்கறுபட்டதையும் உனது தம்பிமார்களான கரதூடணர்கள் கொல்லப்பட்டதையும் நீ சிந்தித்துப்பார்.

''கடும் விஷம் நிறைந்து கடிக்க வரும் கொடிய பாம்பும் கூட வேருக்கும் மந்திரத்திற்கும் கட்டுப்படும். உனக்கு நல்லது தீயது காட்டி இடித்து உரைப்பார்கள் யாரும் இல்லையா? உனது காலம் முடியப் போகிறது'' என்று அரக்கனுக்கு அறிவுரை கூறினாள்.

''சீதையின் இந்த சொற்களைக் கேட்ட இராவணனுக்குக் கடுங் கோபம் ஏற்படுகிறது. அவனுடைய காமத்தின் திறத்தையும் கடந்து நின்றது அவனுடைய சீற்றத்தின் தன்மை'' என்று மிக அற்புதமாக இராவணனுடைய நிலையைப் பற்றிக் கம்பன் எடுத்துக் காட்டுகிறார்.

இராவணனுடைய கடும் சீற்றம் அவனுடைய காம வெறியையும் மிஞ்சியது. அவனுடைய உள்ளத்தில் எழுந்த சீற்றமும் காதலும் எதிர் எதிர் நின்றன. அவன் துடித்தான். முன்னும் பின்னும் குதித்தான். அவனுடைய கண்களில் தீப் பொறிகள் கிளம்பின. இவளைப் பிளந்து தின்பேன் என்று கத்தினான்.

இராவணனுடைய உள்ளத்தில் எழுந்த சீற்றமும் காதலும் எதிர் எதிர் நின்றதைப் பற்றி ''குறிப்பது என், காமத்தின் திறத்தையும் கடந்தது சீற்றத்தின் தகைமை'' என்றும் ''கிளர்ந்த சீற்றமும் காதலும் எதிர் எதிர் கிடப்ப'' என்றும் கம்பர் குறிப்பிடுகிறார்.

கரம் பிசைந்தான்

இராவணனுடைய கடுமையான சொற்களை மறைந்திருந்த கேட்டுக் கொண்டிருந்த அனுமனுக்கு ஆத்திரம் பொங்கி எழுந்தது. கரம் பிசைந்தான்.

"அன்ன காலையில் அனுமனும் 'அருந்ததிக் கற்பின்
என்னை ஆளுடை நாயகன், தேவியை என் முன்
சொன்ன நீசன், கை தொடுவதன் முன் துகைத்து உழக்கிப்
பின்னை நின்றது செய்குவேன்' என்பது பிடித்தான்"

''தனியன் நின்றனன்; தலைபத்தும் கடிது உகத்தாக்கிப்
பனியின் வேலையில் இலங்கையைக் கீழ் உறப் பாய்ச்சிப்
புனித மாதவத்து அணங்கினைச் சுமந்தனென் போவேன்
இனிதின்; என்பது நினைத்தனன்; கரம் பிசைந்து இருந்தனன்''

என்று உள்ளம் குமுறிக் கைகளைப் பிசைந்தான்.

ஒரு அரக்கன் தனது காம வெறி காரணமாக, பெருங்காதல், பெண்ணாசை காரணமாக மாற்றான் மனைவியை வன்முறையில் வஞ்சகமான வழியில் தூக்கிக் கொண்டு வந்து சிறை வைத்துள்ளான். சாபத்தின் காரணமாக இலங்கை வேந்தன், தன் மீது விருப்பம் இல்லாத பெண்ணைத் தொட முடியாது என்ற காரணத்தினால் அவ்வாறு தொட்டால் அவனுடைய தலையே வெடித்து விடும் என்னும் காரணத்தினால் சிறை வைக்கப்பட்டுள்ளவளிடம், தனது அதிகாரத்தில் காவலில் வைக்கப்பட்டுள்ளவளிடம், வன்முறை வழியில் செல்லாமல் கெஞ்சுதல் முறையில் தனது ஆசைக்கு இணங்குமாறு தனது விருப்பத்திற்கு இசையுமாறு வேண்டுகிறான்.

அவள் அதை மறுத்துப் பேசும் போது எதிர்த்துப் பேசும் போது அவனுடைய வஞ்சகச் செயலை இடித்துக் கூறும் போது, அவனுக்குக் கோபம் வருகிறது. அவனுடைய கம்பீரத்திற்கு, வல்லமை மிக்க ஆட்சி அதிகார பலத்திற்குச் சவாலாக எதிர் கொள்கிறது. அவனுடைய காமத்தின் திறத்தையும் கடந்து செல்கிறது அவனுடைய சீற்றம். அவனுடைய உள்ளத்தில் எழுந்த சீற்றமும் காமமும் எதிர் எதிராக நின்று மோதுகின்றன. சீற்றமும் காதல் வேகமும், காமத்தின் வெறியும் ஒன்றையொன்று மோதி அலைபோல் மேல் எழுந்து விளிம்பிற்குச் சென்று விட்டது. உணர்ச்சி வசப்பட்டு வரம்பையும் மீறி விளிம்புக்கு அப்பால் சென்று அவளுடைய கையைத் தொடுவதற்கு முற்பட்டால்?

இடமோ இலங்கை. அரக்கனின் ஆட்சியின் கீழ் உள்ள நாடு, நகரம், சோலைவனம், அசோகவனம், அரசனுடைய உபவனம், சிறை வைப்பட்டிருப்பவளோ, அப்போதைக்கு ஆதரவில்லாத அபலைப் பெண். காவல் இருப்பவர்களோ, அரக்கனுடைய அதிகாரத்திற்குட்பட்ட ஆட்கள். அவ்வரக்கன் என்ன செய்தாலும் அதைத் தட்டிக் கேட்பதற்கு யாரும் இல்லாத நிலை.

அந்த இடத்தில் சீதாபிராட்டியைத் தெய்வமாக மதிக்கும் அனுமன் ஆற்றல் மிக்க அனுமன், அரக்கனுக்கு ஈடான வல்லமைமிக்க அனுமன், மறைந்து நின்று இந்தக் காட்சியைக் கண்டு, கரம்

பிசைந்து, மரக்கிளையில் அமர்ந்துள்ளான். ஆயினும் அவன் வந்துள்ளது தூதுப் பணியில் எனவே, இங்கு அடக்கம், அமைதி, வினையம், வந்த வேலை, மேல் விளை பொருள் ஆகியவற்றை நினைவில் வைத்து ஏற்ற வகையில் செயல்பட வேண்டும்.

ஆயினும் அரக்கன் வரம்பு மீறிச் சென்று விட்டால், ''என் முன் பேசிய நீசன், அருந்ததிக் கற்பின் என்னை ஆளுடைய நாயகன் தேவியை, கை தொடுவதன் முன் அவனைத் துகைத்து உழக்கிப் பின்னை நின்றது செப்குவேன்'' எனக் கரம் பிசைந்து நின்றதைக் கம்பன் கூறுகிறான்.

நமது பாரத தேசத்தின் பண்பாட்டு வரலாற்றில், நமது பேரிலக்கியங்களில் வரும் சிறப்பு மிக்க தெய்வீகப் பெண்மணிகளில் சீதை, பாஞ்சாலி, கண்ணகி ஆகியோர் முக்கியமானவர்கள் என்று கூறினால், அம்மூவருக்கும் ஏற்பட்ட அநீதி வெவ்வேறு காட்சிகளைக் கொண்டவை. ஆயினும் மதுரையில் மன்னனிடம் நடந்த கொடுமையை எதிர்த்து நீதி கேட்டு வாதாடியதும், மதுரை மாநகரை தீக்கிரை யாக்கியதும், பெரியோர்களும் மூத்தவர்களும் உறவினர்களும் நிறைந்த கௌரவர்களின் சபைதனிலே பாஞ்சாலி வாதாடியதும், அசோக வனத்தில் சிறையில் வாடிய ஜானகி, அரக்கனை எதிர்த்து அவனுடைய வஞ்சகச் செயலை எதிர்த்து வாதாடியதும் பின்னர் இலங்கை நகரமே எரிந்துப்பட்டதும் பாரத நாட்டின் வரலாற்றில் நிகழ்ந்த என்றும் நமது நினைவில் நிற்கும் நிகழ்ச்சிகளாகும். மறக்கமுடியாத காட்சிகளாகும்.

சீதாப்பிராட்டி கடிந்து கூறிய சொற்களுக்கு, பதில் கூறியும் மேலும் அவளை பயமுறுத்திவிட்டும், அரக்கியரைத் தனியாக அழைத்து எப்படியாவது சீதையின் மனதை மாற்றும் படியும் கூறிவிட்டுச் சென்றான் இராவணன்.

இதையே கவிச்சக்கரவர்த்தி,

''ஒன்று கேள் உரைக்க, நிற்குஓர்
உயிர் என உரியோன் தன்னைக்
கொன்று கோள் இழைத்தால், நீ, நின்
உயிர் விடில் குற்றம் கூடும்
என் தன் ஆர் உயிரும் நீங்கும்;
என்பதை இயைய எண்ணி
அன்று நான் வஞ்சம் செய்தது;
ஆர் எனக்கு அமரில் நேர்வார்?''

"மூவரும் தேவர் தாமும் முரண் உக
முற்றும் கொற்றம்,
பாவை நின் பொருட்டினால் ஓர்
பழி பெறப் பயன் தீர் நோன்பின்
ஆ இயல் மனிதர் தம்மை
அடுகிலேன், அவரை ஈண்டுக்
கூவி நின்று ஏவல் கொள்வேன்;
காணுதி குதலைச் சொல்லாய்"

''பதவியல் மனிதரேனும்,
பைந்தொடி, நின்னைத்தந்த
உதவியை உணர நோக்கின்,
உயிர்கொலைக்கு உரியர் அல்லர்
சிதைவுறல் அவ்வாக்கு வேண்டின்,
செய்திறன், தேர்ந்தது எண்ணின்,
இதம் நினக்கு ஈதே ஆகின் இயற்றுவல், காண்டி! இன்னும்"

''பள்ளநீர் அயோத்தி நண்ணிப்
பரதனே முதலினோர் ஆண்டு
உள்ளவர் தம்மையெல்லாம்
உயிர் குடித்து ஊழித்தீயின்
வெள்ள நீர் மிதிலை யோரை
வேர் அறுத்து எளிதின் எய்திக்
கொள்வென் நின் உயிரும்; என்னை
அறிந்திலை குறைந்த நாளோய்!"

என்று தமது சிறப்பான கவிதைகளில் குறிப்பிடுகிறார்.

''நான் அன்று உனக்கு உயிரோனாக உள்ளவனைக் கொன்றிருந்தால் நீயும் உயிர் விட்டிருப்பாய், நீ எனக்குக் கிடைத்திருக்க மாட்டாய். அதனால் என் உயிரும் நீங்கியிருக்கும். அதனால் தான் உன்னை வஞ்சம் செய்து கவர்ந்து வந்தேன். தேவைப்பட்டால் இப்போது அவர்களைக் கூவி அழைத்து ஏவல் கொள்வேன். அவர்கள் உன்னை எனக்குக் கொடுத்து உதவியுள்ளார்கள்.

அதனால் அவர்கள் உயிர்க் கொலைக்கு உரியவர்களல்லர். அது தான் வேண்டும் என்று நீ விரும்பினால் அவர்களையும் இன்னும்

அயோத்திக்குச் சென்று பரதன் முதலியோர்களையும் மற்றவர்களையும் மேலும் மிதிலை சென்று அங்குள்ளோரையும் வென்று வேர் அறுத்து உன் உயிரையும் கொள்வேன் என்று சீதையை அச்சுறுத்தி விட்டுச் சென்றான்.

இராவணன் சென்ற பின் சீதையைச் சுற்றிக் காவலில் இருந்த அரக்கியர் ''எங்கள் மன்னன் உன் மீது மெய்யன்பு வைத்துள்ளான் அவன் வையம் தந்த நான்முகன் மைந்தன் மகன் மைந்தன், அய்யன், வேதம் ஆயிரம் வல்லோன், அறிவாளன், அவன் உன் மீது வைத்துள்ள உண்மையான அன்பு புன்மையான தல்ல. மென்மையானது, அவன் சொற்படிக் கேட்டு நீயும் உனது சுற்றமும் இனிது வாழலாம் என்றெல்லாம் கூறி சீதையை மிரட்டினர்.

இந்த வார்த்தைகளில் எல்லாம், இராவணனுடைய பெருங்காதல் வெளிப்படுவதைக் காண்கிறோம்.

ஜானகியின் சலிப்பு

இராவணன் சென்று விட்டான். காவல் அரக்கியர் சீதையை மிரட்டினர். ஜானகி மனம் கலங்கினாள்.

'கல்லாமதியே! கதிர்வாள் நிலவே!
செல்லா இரவே! சிறுகா இருளே!
எல்லாம் எனையே முனிவீர்! நினையா
வில்லாளனையா யாதும் விளித்திலீரோ?

"பேணும் உணர்வே! உயிரே! பெருநாள்
நாண் இன்று உழல்வீர், தனி நாயகனைக்
காணும் துணையும் கழிவீர் அலிர்! நான்
பூணும் பழியோடு பொருந்துவதோ?"

"பொறையிலிருந்து ஆற்றி, என்உயிரும் போற்றினேன்
அறையிரும் கழலவன் காணும் ஆசையால்;
நிறையிரும் பல்பகல், நிருதர் நீள்நகர்ச்
சிறை இருந்தேனை அப், புனிதன் தீண்டுமோ?"

"பிறர்மனை எய்திய பெண்ணைப் பேணுதல்
திறன் அலது என்று உயிர்க்கு இறைவன் தீர்ந்தனன்;

புறன் அலர் அவன் உறப் பொழுது போக்கியான்
அறன் அலது ஆற்றுவேன் என்கொண்டு ஆற்றுகேன்?"

"எப்பொழுது இப்பெரும்பழியின் எய்தினேன்
அப்பொழு தேஉயிர் துறக்கும் ஆணையேன்
ஒப்பரும் பெருமறு உலகம் ஓதயான்
துப்பழிந்து உய்வது துறக்கம் துன்னவோ?"
என்று சீதை சலிப்படைகிறாள்.

''வஞ்சனை மானின் பின் மன்னனைப் போக்கி, என்
மஞ்சனை வைது பின் வழிக் கொள்வாய், எனா
நஞ்சு அனையான் அகம் புகுந்த நங்கையான்
உஞ்சனென் இருந்தலும் உலகம் கொள்ளுமோ?''

"அற்புதன் அரக்கர்தம் வருக்கம் ஆசற
வில்பணி கொண்டு அரும் சிறையின் மீட்டநாள்
'இல்புகத்தக் கலை' என்னின், யான் உடைக்
கற்பினை எப்பரிசு இழைத்துக் காட்டுகேன்?"

"ஆதலால் இறத்தலே ஆறு! எனாச்
சாதல் காப்பவரும் என் தவத்தின் சாம்பினார்;
ஈதுஅலாது இடமும் வேறில்லை; என்று ஒரு
போதுஉலாம் மாதவிப் பொதும்பர்
எய்தினாள்"

என்றும்.

அப்படியே அவ்வில்லர்கள் அரக்கரைக் கொன்று, என்னை மீட்டிய பின்னும், அவள் இல்புகத்தக்க வளல்ல, என்று என்னை ஏற்க மறுத்தால் நான் என்ன கற்பு நிலையை எவ்வாறு நிலைநாட்டுவேன் என்றெல்லாம் மனம் நொந்து ''ஆதாலால் இறத்தலே அறத்தின் ஆறாகும்'' என்று கருதித் தன் உயிரை மாய்த்துக் கொள்ள முயல்கிறாள் பிராட்டி.



அனுமன் தோன்றினான்

சீதை சலிப்படைந்து தனது உயிரை மாய்த்துக் கொள்ள முயன்றாள். அப்போது சீதையின் முன்பாக இராமன் பெயரைச் சொல்லி அனுமன் தோன்றினான்.

"அண்ட நாயகன் அருள் தூதன் யான் எனா தொண்டை வாய் மயிலினைத் தொழுது தோன்றினான்" என்று கம்பர் பெருமான் குறிப்பிடுகிறார்.

இங்கு அனுமன் சீதாபிராட்டி உரையாடல் ஒரு திவ்யமான காட்சியாகும். அனுமன் இராமபிரானைப் பற்றிய முழு விவரங்களை எடுத்துக் கூறிக் கணையாழியை அடையாளமாகக் கொடுத்தான். அக்கணையாழியைக் கண்டதும் சீதா தேவி பெரு மகிழ்ச்சியடைந்தாள். புத்துயிர் பெற்றாள்.

"இறந்தவர் பிறந்த பயன் எய்தினர் கொல் என்கோ?
மறந்தவர் அறிந்து உணர்வு வந்தனர் கொல் என்கோ?
துறந்து உயிர் வந்து இடை தொடர்ந்தது கொல் என்கோ?
திறம் தெரிவது என்னைகொல் இ நன்னுதலி செய்கை"

"இழந்த மணிபுற்று அரவு எதிர்ந்தது எனல் ஆனாள்;
பழந்தனம் இழந்தன படைத்தவரை ஒத்தாள்
குழந்தையை உயிர்த்த மலடிக்கு உவமை கொண்டாள்
உழந்துவிழி பெற்றது ஓர் உயிர்ப் பொறையும் ஒத்தாள்"

"வாங்கினள்; மார்பிடை வைத்தனள்; சிரத்தால்
தாங்கினள்; மலர்க்கண் மிசை ஒத்தினள்; தடந்தோள்
வீங்கினள்; மெலிந்தனள்; குளிர்ந்தனள், வெதுப்போடு
ஏங்கினள்; உயிர்த்தனள்; இது இன்னது எனல் ஆமோ?"

"இருந்து பசியால் இடர் உழந்தவர்கள் எய்தும்
அருந்தும் அமுது ஆகியது; அரத்தவரை அண்மும்
விருந்தும் எனல் ஆகியது; வீயும் உயிர் மீளும்
மருந்தும் எனல் ஆகியது; வாழி! மணி ஆழி!"

என்று சீதை அனுமனைப் பெரிதும் பாராட்டினாள்.

''மும்மையாம் உலகம் தந்த முதல்
வற்கும் முதல்வன், தூதாய்ச்,
செம்மையால் உயிர் தந்தாய்க்குச்,
செயல் என்னால் எளியது உண்டோ?
அம்மையாய் அத்தனாய,
அப்பனே! அருளின் வாழ்வே!
இம்மையே, மறுமை தானும்
நல்கினை இசையோடு; என்றாள்''

என்பதும் கம்ப நாட்டாழ்வாருடைய திவ்யமான பாடலாகும்.

பின்னர் ஜானகி அனுமனிடம் ''வீரன் தன் இளவலோடு எங்கே இருக்கிறான், எவ்வழி எய்திற்று உன்னை? நான் இங்குள்ளது பற்றிய செய்தியை எப்படி அறிந்தீர்கள்'' என்று விவரங்களைக் கேட்டாள்.

சீதையைத் தேடி வரும் போது இராமனும் இலக்குவனும் சடாயுவைக் கண்டது முதல் சுக்கிரீவனுடன் நட்புக் கொண்டு, வானர வீரர்கள் சீதையைத் தேடிச் சென்றுள்ளது வரை எல்லாச் செய்திகளையும் சீதையிடம் அனுமன் விவரமாக எடுத்துக் கூறினான்.

சீதை மகிழ்ச்சியடைகிறாள். அனுமனுடைய ஆற்றலைப் பாராட்டுகிறாள். அனுமன் பிராட்டியிடம் ''தானே, அவளைச் சுமந்து கொண்டு போய் இராமபிரானிடம் சேர்ப்பேன்'' என்று கூறுகிறான். சீதை அதை மறுத்து ''அது சரியாகாது, அது இராமபிரானுக்கும் அவனுடைய வில்லுக்கும் வீரத்திற்கும் இழுக்காகும்''

''அல்லல் மாக்கள் இலங்கை அது ஆகுமோ,
எல்லை நீத்த உலகங்கள் யாவும் என்
சொல்லினால் சுடுவேன், அது தூயவன்
வில்லின் ஆற்றற்கு மாசு என்று வீசினேன்!''

என்று கூறி நீ கவலை கொள்ள வேண்டாம் நீ போய் நாயகனிடம் என் நிலைமைப் பற்றிக் கூறுவாயாக. விரைவில் வந்து என்னைச் சிறை மீட்கும்படி கூறுவாயாக என்று கூறித் தன்னைக் கண்டு பேசியதன் அடையாளமாகச் சூடாமணியை அனுமனிடம் கொடுத்தாள். அத்துடன் தன் கவலையுடன் சேர்த்து சில செய்திகளையும் சொல்லி அவைகளைத் தன் நாயகனிடம் கூறும்படி சொன்னாள்.

சீதை கூறிய செய்திகள்

அனுமனிடம் சீதை சூடாமணியை அடையாளமாகக் கொடுத்துச் சில செய்திகளையும் சொல்லி அனுப்புகிறாள். இன்னும் ஒரு மாதம் வரை உயிருடன் இருப்பேன். என் மீது தயை இல்லாவிட்டாலும் தன் வீரம் காத்தல் வேண்டும் என வேண்டுவாய். என்னைச் சிறை மீட்க வேண்டிய கடமை இளையவருக்கும் உள்ளதையும் அவர்களிடம் கூறுவாய்.

என்னை வந்து கரம் பற்றிய போது, ''இந்தப் பிறவிக்கு இரு மாதரைச் சிந்தையாலும் தொடேன்'' என்று செவ்வரம் தந்த வார்த்தையை அவருடைய செவிகளில் சாற்றுவாய்.

நான் இங்கிருந்து மடிந்து என் உயிர் போய் விட்டாலும் மீண்டும் வந்து பிறந்து தன் மேனியைத் தீண்டுமாறு வரம் வேண்டினாள் என்று விளம்புவாய்.

''தன்னை நோக்கி உலகம் தளர்வதற்கும்,
அன்னை நோய்க்கும், பரதன் அங்கு ஆற்றுறும்
இன்னல் நோய்க்கும் அங்கு ஏகுவது அன்றியே
என்னை நோக்கியிங்கு எங்ஙனம் எய்துமோ?

அது சாத்தியமில்லை. எனவே

எந்தை தாய், முதலிய கிளைஞர் யார்க்கும், என்
வந்தனை விளம்புதி; கவியின் மன்னனைச்
சுந்தரத் தோளனைத் தொடர்ந்து காத்துப் போய்
அந்தம் இல் திரு நகர்க்கு அரசன் ஆக்கு என்பாய்''

என்றெல்லாம் மிக்க வேதனைப்பட்டு சீதை கூறுகிறாள்.


அதைக் கேட்ட அனுமன் ''அன்னையே கவலை வேண்டாம். அரக்கர்கள் உயிர் வாழ மாட்டர்கள். வில்லிகள் பொய்க்க மாட்டர்கள். சானகியின் கற்பின் நெருப்பு இலங்கையை எரிக்கும். உன்னைக் காமக் கண்ணால் நோக்கிய அரக்கனின் அக்கண்களைக் காக்கைகள் கொத்தித் தின்பதை நீ காணப் போகிறாய்.

''தீர்த்தனும், கவிக்குலத்து இறையும், தேவி நின்
வார்த்தை கேட்டு உவப்ப தன்முன்னர், மாக்கடல்
தூர்த்தன, இலங்கையைச் சூழ்ந்து மாக்குரங்கு
ஆர்த்தன கேட்டு உவந்து இருத்தி, அன்னை நீ''

அன்னையே நீ இங்கு இருக்கிறாய் என்னும் செய்தியைக் கேட்டவுடன் இராமபிரானும் வானரத்தலைவனான சுக்கிரீவனும் பெருங்கடல் வழியைத் தூர்த்து, மாபெரும் வானரப்படை இலங்கையை முற்றுகையிட்டு சூழ்ந்து நின்று ஆர்ப்பரிக்கும் பேரொலியைக் கேட்டு நீங்கள் மகிழ்ச்சியடையப் போகிறீர். கவலைப்படாதீர்.

இந்த இலங்கை நகருக்குள் பெரும் வானரப்படையுடன் எனது தோள்களில் இராம பிரானும் அங்கதன் தோள்களில் இளையவரும் அமர்ந்து வலம் வரப் போவதைக் காணப்போகிறீர்கள். கவலைப் படாதீர்கள் என்று ஆறுதல் கூறினான்.

சீதை மகிழ்ச்சியடைந்தாள். அனுமன் சீதையைக் கண்டதற்கு அடையாளமாகச் சீதைக்கும் இராமனுக்குமிடையில் நடந்த செய்திகளைக் கூறிக் கணையாழிக்கு ஈடாக சூடாமணியை அனுமனிடம் கொடுத்தனுப்பினாள். சீதையிடம் ஆசி பெற்று அனுமன் அப்பால் சென்றான்.



18. அனுமனின் அருஞ்செயல்கள்

சீதையிடம் விடை பெற்றுக் கொண்டுக் கிளம்பிய அனுமன் தான் இலங்கைக்கு வந்து சென்றதன் அறிகுறியாக ஒரு அடையாளத்தை உண்டு பண்ணிவிட்டுச் செல்ல வேண்டுமென்று விரும்பினான்.

இலங்கையில் அனுமன் ஆற்றிய அருஞ் செயல்களில் சோலைகளை சிதைத்ததும், தன்னை எதிர்த்த அரக்கர்களைக் கொன்றதும், இராவணனுடைய சபைக்குச் சென்றதும், அவனுக்கு அறிவுரைகள் கூறியதும், இலங்கையைத் தகனம் செய்ததும் அடங்கும். இந்த நிகழ்ச்சிகள் இராமாயணப் பெருங் காவியத்தில் முக்கிய இடம் பெறுகின்றன. இதில் கம்பர் காட்டும் காட்சிகள் உலக மகா இலக்கியங்களில் ஈடு இணையற்றதாகும்.

அனுமன் அங்குமிங்கும் ஆடி ஓடி மரங்களையும் மரங்கிளை களையும் ஒடித் தெரிந்துச் சோலைகளைச் சிதைத்தான். தன்னைத் தடுத்த அரக்கர்களை ஆரவாரம் செய்து அழித்தான். கிங்கரர்களை வதைத்தான். சம்பு மாலியை வதம் செய்தான். பஞ்ச சேனாபதிகளைப் போரிட்டுக் கொன்றான். அக்கனைக் கொன்றான். அதன் பின்னர்

இந்திர சித்தன் பெரும் படைகளுடன் வந்து அனுமனை பிரம்மாஸ்திரத்தால் கட்டினான். கட்டுண்ட அனுமனை அரக்கர்கள் இராவணனுடைய சபைக்கு இழுத்து சென்றனர்.

அதைக் கண்ட இலங்கை மக்கள் பலரும் பலவாறு பேசிக் கொண்டதைக் கம்பர் குறிப்பிடுகிறார்.

''கைலையின் ஒரு தனிக் கணிச்சி வானவன்,
மயில் இயல் சீதைதன் கற்பின் மாட்சியால்,
எயில் உடைத் திருநகர் சிதைப்ப, எய்தினன்
அயில் எயிற்று ஒரு குரங்காய்; என்பார் பலர்''

என்றும்

"அரக்கரும், அரக்கியர் குழாமும், அல்லவர்
கரக்கிலர் நெடுமழைக் கண்ணின் நீரது;
விரைக்குழல் சீதை தன் மெலிவு நோக்கியோ?
இரக்கமோ? அறத்தினது எண்மை எண்ணியோ?"

என்று இலங்கை மக்களிடமும் இரக்கமும் இருந்ததைக் குறிப்பிட்டுக் கம்பன் கூறுகிறார்.

நான் முகன் படைக்குக் கட்டுண்ட அனுமன் சிந்தித்தான். தெய்வப் படைக்குப் பணிந்து நின்றான். இராவணன் சபைக்குச் சென்று அவனுக்கு நமது ஆற்றலை எடுத்துக் கூறி நீதியை எடுத்துரைத்து, அவனுடைய நெஞ்சில் தைக்கும்படி எடுத்துக் காட்டலாம் என்று கருதி அனுமனும் அமைதியாக அரக்கர்களின் அடிகளையும் வசைகளையும் தாங்கிக் கொண்டு சென்றான்.

அனுமன் கட்டுண்டதைக் கேள்விப்பட்டு சீதை துயரமுற்றாள். அனுமன் தனக்குக் கூறிய ஆறுதல் மொழிகளை நினைத்தும் மனம் உருகி

''ஏயப்பன்னினன் இன்னன; தன் உயிர்
தேயக், கன்று பிடியுறத் தீங்கு உறும்
தாயைப் போலத் தளர்ந்து மயங்கினாள்;
தீயைச் சுட்டது ஓர் கற்பு எனும் தீயினாள்''

தசமுகனை நேரில் கண்டான்

தசமுகன் அரியாசனத்தில் கம்பீரமாக அமர்ந்திருந்ததை அனுமன் நேருக்கு நேராகக் கண்டான். இராவணன் தனது ஆட்சி ஆசனத்தில் பேராண்மையுடன் வீற்றிருந்த போது அவனுடைய பத்து முகங்களும்

எவ்வாறுக் காட்சி அளித்தன என்பதைக் கவிச்சக்கரவர்த்தி கம்பநாடர் மிக அற்புதமாக விவரித்துக் கூறுகிறார். அனுமனும் அரக்கனுடைய முகங்களைக் கூர்ந்து கவனித்தான்.

"ஊடினார் முகத்து உறுநரை ஒரு முகம் உண்ணக்,
கூடினார் முகக்களி நரை ஒரு முகம் குடிப்பப்,
பாடினார் முகத்து ஆர் அமுது ஒரு முகம் பருக,
ஆடினார் முகத்து அணி அமுது ஒரு முகம் அருந்த,"

"தேவரோடு இருந்து அரசியல் ஒரு முகம் செலுத்த
மூவரோடு மா மாந்திரம் ஒரு முகம் முயலப்,
பாவகாரி தன் பாவகம் ஒரு முகம் பயிலப்,
பூவை சானகி நினைப்பொடும் ஒரு முகம் பொருந்த"

"காந்தள் மெல்விரல் சானகி தன் கற்பு எனும் கடலை
நீந்தி ஏறுவது எங்ஙன் என்று ஒரு முகம் நினையச்
சாந்து அளாவிய கோதை நன் மகளிர் தற்சூழ்ந்தார்
ஏந்தும் ஆடியின் ஒரு முகம் இயல்புடன் இலங்க"

என்று கவிஞர் பெருமான் தசமுகனுடைய முகங்களின் பொலிவை வர்ணித்துக் கூறுகிறார்.

உறுநறையும், களி நறையும் ஆர் அமுதும், அணி அமுதும் உண்டு, குடித்து, பருகி, அருந்தி, களிப்புடன் அரசியலும், ராஜதந்திர ஆட்சியும் நடத்திக் கொண்டிருந்த இராவணன் சதா சானகியின் நினைப்போடு சானகியின் கற்பு என்னும் கடலை நீந்தி ஏறுவது எங்ஙனம் என்னும் நினைப்போடும் இருந்தான் என்பதைக் கவிஞர் குறிப்பிடுகிறார்.

இங்கு இராவணனுக்குச் சீதைபால் இருந்த பெருங்காதல் ஆதிக்கம் கொண்டு வெளிப்படுகிறது.

இராவணனைக் கண்ட அனுமன் தீவிரமாகச் சிந்தித்தான். அவனை மோதிக் கொன்று விட வேண்டும் என்று மனம் கொதித்தான். ஆயினும் நிதானப்பட்டு தூதன் என்னும் நிலையிலேயே தனது கடமையை ஆற்றுவது நல்லது, விவேகமானது, என்று முடிவுக்கு வந்து அமைதியாக இருந்தான்.

இராவணன், அரச பீடத்தில் அமர்ந்து அனுமனைப் பார்த்து ''யார் நீ, வந்த காரணம் யாது? யார் உன்னை விடுத்தவர்?'' என்று அதட்டிக் கேட்டான். அனுமன் பதில் கூறுகிறான்.

வில்லிதன் தூதன்யான், இலங்கை வந்தேன்,

''அனையவன் யார் என் அறிதி ஆதியேல்
முனைவரும், அமரரும், மூவர் தேவரும்
எனையவர் எனையவர் யாவர், யாவையும்
நிறைவரும் இருவினை முடிக்க நின்றுளோன்.''

என்று குறிப்பிட்டான் தொடர்ந்து இராம பிரானுடைய பெருமைகளை எடுத்துக் கூறினான்.

''ஈட்டிய வலியும், மேல்நாள் இயற்றிய தவமும், யாணர்க்
கூட்டிய படையும் தேவர் கொடுத்த நல்வரமும், கொட்பும்
தீட்டிய வாழ்வும் எய்தத் திருத்திய பிறவும் எல்லாம்
நீட்டிய பகழி ஒன்றால் முதலொடும் நீக்க நின்றான்''

''தேவரும் பிறரும் அல்லன்; திசைக்களிறு அல்லன்; திக்கின்
காவலர் அல்லன்; ஈசன் கைலை அம் கிரியும் அல்லன்;
மூவரும் அல்லன்; மற்றை முனி வரும் அல்லன்; எல்லைப்
புவலயத்தை ஆண்ட புரவலன் புதல்வன் ஆவான்''

''போதமும், பொருந்து கேள்விப் புரை அறு பயனும், பொய்தீர்
மாதவம் சார்ந்த தீரா வரங்களும், மற்றும் முற்றும்
யாது அவன் நினைத்தான், அன்ன பயத்தன; ஏது வேண்டின்,
வேதமும் அறனும் சொல்லும்; மெய் அறமூர்த்தி வில்லோன்''

''காரண கேட்டி ஆயின், கடையிலா மறையின் கண்ணும்
ஆரணம் காட்ட மாட்டா அறிவினுக்கு அறிவும் அன்னான்
போர் அணங்கு இடங்கர் கவ்வப் பொது நின்று, முதலே என்ற
வாரணம் காக்க வந்தான், அமரரைக் காக்க வந்தான்''

''மூலமும் நடுவும் ஈறும் இல்லது ஓர் மும்மைத்து ஆய
காலமும் கணக்கும் நீத்த காரணன் கைவில் ஏந்திச்
சூலமும் திகிரி சங்கும், கரகமும் துறந்து, தொல்லை
ஆலமும், மலரும், வெள்ளிப் பொருப்பும் விட்டு,
அயோத்தி வந்தான்''

''அறம் தலை நிறுத்தி, வேதம் அருள் சுரந்து அறைந்த நீதித் திறம் தெரிந்து உலகம் பூணச் செந்நேறி செலுத்தித் தீயோர் இறந்துக நூறித், தக்கொர் இடர்துடைத்து ஏக, ஈண்டுப் பிறந்தனன், தன் பொன் பாதம் ஏத்துவார் பிறப்பு அறுப்பான்''

என்றும்

''அன்னவர்க்கு அடிமை செய்வேன் நாமமும் அனுமன் என்பேன்'' என்றும் இராமன் பெருமைகளைக் விரிவுபட எடுத்துக் கூறி அனுமன் தூதுவனுக்குரிய கடமையாக, மிகவும் அடக்கத்துடன் தான் வந்த காரியத்தை மிகவும் நுட்பமாக அரக்கனிடம் எடுத்துக் கூறுகிறான்.

தேவியைத் தேடித் தென் திசை நோக்கி வந்தோம். எங்கள் தலைவன் வாலிமகன் அங்கதன் அவனுயை தூதனாக நான் இங்கு வந்தேன் என்று கூறுகிறான்.

இராவணன் நகைத்து ''வாலி சேய்விடுத்ததூத! வன் திறல் ஆய வாலி வலியன் கொல், அவனுடைய அரசியல் வாழ்க்கை நன்று கொல்'' என்று அரசனுக்குரிய முறையில் இராஜதந்திரமான கேள்வியைக் கேட்கிறான்.

அனுமனும் அரசியல் நுட்பத்துடன் ''நீ அஞ்ச வேண்டாம். வாலி மறைந்து விட்டான். அவன் இனி மீள மாட்டான். அவனுடைய வாலும் இல்லை. இராமபிரானுடைய கணையால் அடிபட்டு இறந்தான். இப்போது எங்கள் அரசன் சுக்கிரீவன்'' என்று அனுமன் கூறினான். இங்கு வாலியையும் வல்லமை மிக்க வாலியின் வாலைப் பற்றியும் இராவணனுக்கு அனுமன் நினைவூட்டுகிறான்.

அப்போது இராவணன் ''அந்த இராமன் வாலியை என்ன காரணத்தினால் அம்பெய்து உண்டான். அந்த இராமன் இப்போது எங்கிருக்கிறான்? அவனுடைய தேவியைத் தேடி நீங்கள் ஏன் வந்தீர்கள். அதன் விவரம் என்ன? என்று கேட்டான். அதற்கு அனுமன்

''தனது தேவியைத் தேடி வந்த இராமன், சுக்கிரீவனுடன் நட்பு கொண்டு, வாலியைக் கொன்று அவனுடைய அருந்துயர் துடைத்து, கோவியல் செல்வமும் தன் உருமையும் கொடுத்து உதவினான். எங்கள் மன்னன் சுக்கிரீவனுடைய ஆணையின்படி நாங்கள் சீதையைத் தேடி வந்தோம்'' என்று பதிலளித்தான்.

இராவணன் கேட்டான் ''வாலி உம் குலத் தலைவன் ஒப்பிலா உயர்ச்சியோன். அவனைக் கொன்றவருக்கு அடிமைத் தொழில்

செய்ய வந்துள்ளீர்களே! அது இகழ்ச்சிக்குரியதாகு மன்றோ! அதற்கு இசைந்து வந்துள்ளீர்கள் என்றால் அது பெண் தன்மை கொண்ட தல்லவா? பேடித்தனமானதல்லவா?

''தனது முன்னவனைக் கொல்வித்து அவ்வாறு கொன்றவனிடம் அன்பு செலுத்தி வரும், உம் இனத்தலைவன் ஏவ, எப்படி நீ தூது வந்தாய். அதற்கு உனக்கு என்ன தகுதி'' என்று கேட்டான்.

இங்கு தன்னிடம் தூது வருவதற்கு அனுமனுக்கு என்ன தகுதி என்னும் தன்னகங்கார கம்பீர நிலையிலிருந்தே இராவணன் பேசுகிறான். மானிடரையும் வானரர்களையும் அற்பமாகவே அரக்கர்கள் கருதிக் கொண்டிருந்தனர். இந்த நிலைகளையெல்லாம் அனுமன் தூதுவன் என்னும் முறையில் நன்கு புரிந்து கொண்டு சிந்தித்தான்.

இராவணன் சொன்ன வார்த்தைகளை யெல்லாம் இணைத்துப் பார்த்துச் சிந்தித்து அனுமன், ''பொதுவான நீதியை உணர்த்தினால் போதும்'' என்று கருதி இராவணனிடம் நேருக்கு நேராகப் பேசினான்.

''அரச நீதியை நீங்கள் சரியாக நிறைவேற்றவில்லை. தூய்மையான கற்பினாளுக்கு நீங்கள் தீங்கு செய்ததால் அழிந்து போவீர்கள். பாவத்தால் புண்ணியத்தை அழிக்க முடியாது.

முறைகெட்ட காமச் செருக்கினால் மதியிழந்து அறத்தை மறந்து தவறு செய்கின்றீர்கள். அதனால் நீங்கள் அழிந்து போவீர்கள்.''

''திறம் திறம்பி காமச் செருக்கினால்
மறந்து, தத்தம் மதியின் மயங்கினார்,
இறந்து இறந்து இழிந்து ஏறுவதே அலால்
அறம் திறம்பினர் ஆர்உளர் ஆயினார்?''

''பொருளும், காமமும் என்று இவை போக்கி, வேறு
இருள் உண்டாம் என எண்ணலர்; ஈதலும்
அருளும் காதலில் தீர்தலும் அல்லது ஓர்
தெருள் உண்டாம் என எண்ணலர் சீரியோர்''

''இச்சைத் தன்மையினில் பிறர் இல்லினை
நச்சி நாளும் நகை உற நாண் இலன்
பச்சை மேனி புலர்ந்து, பழி படூ உம்
கொச்சை ஆண்மையும், சீர்மையில் கூடுமோ?''

''வெறுப்பு உண்டாய ஒருத்தியை வேண்டினால்
மறுப்பு உண்டாய பின், வாழ்கின்ற வாழ்வினின்
உறுப்பு உண்டாய் நடு ஓங்கிய நாசியை
அறுப்பு உண்டால் அது அழகு எனல் ஆகுமோ?''

''ஆதலால் தன் அரும் பெறல் செல்வமும்
ஒதுபல் கிளையும் உயிரும் பெறச்
சீதையைத் தருக என்று எனச் செப்பினான்
சோதியான் மகன் நிற்கு'' எனச் சொல்லினான்.''

இவ்வாறு அனுமன் இராவணனிடம் எடுத்துக் கூறினான்.

இவை மிகக் கடுமையான பொருள் பொதிந்தச் சொற்களாகும். இராவணனுடைய காம வெறியைக் கடுமையாகக் கண்டிக்கும் சொற் களாகும். இங்கு அனுமன் இராவணனுக்குக் கூறிய அறிவுரைகள் மிக முக்கியமான அறிவுரைகளாகும். எக்காலத்திற்கும் எல்லோருக்கும் பொருந்தும் பொது நீதியும் சமுதாய நீதியுமாகும்.

''உன் வாழக்கையை வீணாக்கி விட்டாய், அறத்தை நோக்கவில்லை தீமையே செய்தாய். உனக்கு முடிவு காலம் வந்து விட்டது. இனியாவது உன் உயிருக்கு நல்லது தேடிக் கொள்வாய்'' என்று இராவணனிடம் அனுமன் அறிவுரை கூறத் தொடங்குகிறான்.

மனித வாழ்க்கையில் வெறும் காமக் களியாட்டங்களில் நேரத்தையும் காலத்தையும் வீணாக்காமல் தீய செய்கைகளைத் தவிர்த்து நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும். அதை மீறி சில தவறுகள் ஏற்படுமாயின் அவைகளைக் காலத்தில் உணர்ந்துத் திருத்திக் கொள்ள வேண்டும்.

உமது புலன்களை வென்று பல பெரிய தவங்களையெல்லாம் செய்து பல வரங்களையும் பெற்றுச் சிறப்படைந்தீர். ஆனால் இப்போது கற்பிற் சிறந்த தூயவளான சீதைக்குத் துயர் விளைவிப்பதால் நீர் உமது தவங்களினால் பெற்றப் பலன்களை யெல்லாம் அழித்துக் கொண்டீர்கள். பாவங்கள் மூலம் புண்ணியத்தை அழிக்க முடியாது. தீமையின் மூலம் நன்மையை அழித்துவிட முடியாது.

முறை கேடான காமச் செருக்கினால் அறத்தை மறந்து மதியிழந்து தாழ்வடைந்து போனவர்கள் பலரைக் கண்டிருக்கிறோம். அத்தீமை களிலிருந்து மீண்டவர்களை நாம் கண்டதில்லை.

பொருள் செருக்கும் காம வெறியும் அறியாமையால் ஏற்படுகின்றன. ஈதலும் காமவெறியினால் அழிந்துவிடுகின்றன. இவைகளை சிறந்தவர்கள் நன்கு அறிந்திருப்பார்கள்.

விருப்பம் இல்லாதவளை மாற்றான் மனைவியை விரும்புவது நகைப் பிற்குரியதாகும். நாணமற்ற செயலாகும். அதனால் நல்ல உடம்புகளும் உபாதைப்பட்டு நசிந்துவிடும். அதனால் ஆண்மைக்கே இழிவான பழி ஏற்படும். இவையெல்லாம் நற்குணங்களோடு சேராது.

ஒருவர் மீது வெறுப்பு உண்டான ஒருத்தியை அவர் விரும்பி வேண்டிய பின்னரும், அவள் மறுத்து விட்டால் அச் செயலில் தொடர்வது என்ன வாழ்க்கை? இதில் மூக்கறுபட்டு முகம் தனது அழகை இழக்கிறது.

செழுமையான முகத்தில் கண், காது, மூக்கு, உதடுகள் முதலிய பல உறுப்புகள் உள்ளன. அதில் நன்கு வளர்ந்து முகத்தின் பொலிவைக் காட்டுவது நாசி. அம்மூக்கு அறுபட்டு விட்டால் அதை அழகு என்று கூறலாமா? என்ற சிறந்த உவமையுடன் பொருள் பொதிந்தச் சொற்களில் அனுமன் பொது நெறியை எடுத்துக் கூறுகிறான்.

எனவே, இந்த தீய செயலைக் கைவிட்டு உனது அறிய செல்வங்களையும் உறவினர்களையும் மனைவி மக்களையும், உனது உயிரையும் காப்பாற்றிக் கொள்ளச் சீதையை விட்டுவிடுமாறு எனது அரசன் சுக்கிரீவன் சொல்லி அனுப்பினான் என்று தூதுவனுக்குரிய முறையில் மிகவும் அடக்கமாகவும் பொறுமையாகவும் மிக நுட்பமாகவும் அனுமன் எடுத்துக் கூறினான்.

இவைகளைக் கேட்டவுடன் இராவணன் பெரும் சிரிப்பு சிரித்தான் இதை எனக்குச் சொல்வதற்கு ஒரு குன்றின் மேல் வாழும் குரங்கு தானா கிடைத்தது என்று மேலும் ஆணவத்துடன் சிரித்தான்.

அனுமன் கூறிய அறவுரைகள் நல்லுரைகள், வேண்டுகோள்கள் ஆகியவை இராவணனிடத்தில் அவனுடைய உள்ளத்தில் ஏறவில்லை. அவனுடைய காமவெறி சானகியை அடைவது எப்படி என்னும் ஏக்கம் ஒரு பக்கம் வணங்காமுடியனாக இருந்து ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் கம்பீரம், ஆணவம், தன்னகங்காரம் ஆகியவை மறுபக்கம் இணைந்து நின்றான்.

''குரங்கு வார்த்தையும் மானிடர் கொற்றமும் இருக்கட்டும்நீ ஏனடா இரும்புரத்தினுள் தூது புகுந்த பின்னர் அரக்கரைக் கொன்றது'' என்று கோபத்துடன் கேட்டான். அனுமன் மிகவும் நுட்பமாகப் பதில் கூறினான்.

''காட்டுவார் இன்மையால் காவினை வாட்டினேன். என்னைக் கொல்ல வந்தார்களை வீட்டினேன். பின்னம் மென்மையால் உன் மாட்டு வந்தது உன்னைக் காணும் மதியினால்'' என்று மிக அடக்கமாகவே பதில் கூறினான்.

இராவணனுக்கு அதைக் கேட்டதும் அடங்காத கோபம் ஏற்பட்டது. ''அவனைக் கொல்லுங்கள்'' என்று கத்தினான்.

உடனே வீடணன் ''நில்லுங்கள்'' என்று தடுத்து ''தூதரைக் கொல்லல் கூடாது'' என்று கூற அதை ஏற்றுக் கொண்ட இராவணன் ''இக்குரங்கின் வாலிலே தீயிட்டு ஊரைச் சுற்றி அடித்து விரட்டுங்கள்'' என்றுரைத்தான்.

அரண்மனை அரக்கர்கள் அனுமன் வாலில் பந்தத்தைச் சுற்றி நெய்யை ஊற்றி நெருப்பை வைத்து விரட்டிவிட்டனர். இதைக் கேள்வியுற்ற சீதை ''நீயே உலகுக்கு ஒரு சான்று நிற்கே தெரியும்கற்பு, அதனில் தூயேன் என்னின் தொழுகின்றேன் எரியே அவனைச் சுடேல்'' என்றாள். அனுமனும் வாலில் இடப்பட்ட தீ தன்னைச் சுடாதது கண்டு ''சனகன் பாவைக் கற்பினால் இயன்றது'' என்று கருதிக் களிப்படைந்தான்.

அனுமன் தனது வாலில் இட்டத் தீயுடன் இலங்கையில் மாளிகை களுக்கிடையில் தாவிக் குதித்தான். அத்தீ, மாளிகைகளில் பற்றி எரிந்தது. எங்கும் நெருப்பும் புகை மண்டலமும் பரவி இலங்கை நகரம் எரிந்தது. அனுமனும் இலங்கையை விட்டு வெளியேறினான்.

அனுமன் வேகமாகப் பாய்ந்து சென்று தன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்த வானர வீரர்களுக்குகிடையில் குதித்தான். அவர்களிடம் தான் சீதையைக் கண்ட செய்தியைக் கூறினான். அனைவரும் பெரு மகிழ்ச்சியடைந்து ஆனந்தக் களிப்புடன் கிட்கிந்தையை நோக்கி விரைந்தனர். போகும் வழியில் சுக்கிரீவனுடைய மதுவனம் ஒன்றையடைந்து அதில் புகுந்து காய் கனிகளையும் தேனையும் அருந்தி ஆரவாரம் செய்துவிட்டு சென்றனர்.

அனுமன் முதலில் வேகமாகப் புறப்பட்டான். இராமனை அடைந்தான். பெருமகிழ்ச்சியுடன் இராமபிரானிடம் பேசினான். தான் இலங்கை சென்று வந்த வெற்றிச் செய்தியை விவரித்துக் கூறினான்.



19. தவம் செய்த தவமாம் தையல்

''கண்டனென் கற்பினுக்கு அணியைக் கண்களால்
தெண் திரை அலை கடல் இலங்கைத் தென்னகர்;
அண்டநாயக! இனித்துறத்தி! ஐயமும்
பண்டுள துயரும்'' என்றும் அனுமன் பன்னுவான்''

உன்பெருந்தேவி என்னும் உரிமைக்கும், உன்னைப் பெற்ற
மன்பெரு மருகி என்னும் வாய்மைக்கும், மிதிலை மன்னன்
தன்பெரும் தனயை என்னும் தகைமைக்கும் தலைமை சான்றாள்;
என்பெரும் தெய்வம் ஐயா! இன்னமும் கேட்டி என்பான்"

''உன்குலம் உன்னதாக்கி, உயர் புகழ்க்கு ஒருத்தி ஆய
தன்குலம் தன்னதாக்கித் தன்னை இத்தணிமை செய்தான்
வன்குலம் கூற்றுக்கு ஈந்து, வானவர் குலத்தை வாழ்வித்து,
என் குலம் எனக்குத் தந்தாள், என் இனிச் செய்வது எம்மோய்!''

''வில் பெருந்தடந்தோள் வீர! வீங்கு நீர் இலங்கை வெற்பில்
நற்பெரும் தவத்தள் ஆய நங்கையைக் கண்டேன் அல்லேன்;
இற்பிறப்பு என்பது ஒன்றும், இரும்பொறை என்பது ஒன்றும்,
கற்பு எனும் பெயரது ஒன்றும், களி நடம் புரியக் கண்டேன்''

''வேலையுள், இலங்கை என்னும் விரி நகர் ஒரு சார், விண் தோய்
காலையும் மாலை தானும் இல்லது ஓர் கனகக் கற்பச்
சோலை அங்கு அதனின், உம்பி புல்லினால் தொடுத்த தூய
சாலையில்; இருந்தான் ஐயா! தவம் செய்த தவமாம் தையல்''

"மண்ணொடும் கொண்டு போனான்;
வான் உயர் கற்பினாள் தன்
புண்ணிய மேனி தீண்ட
அஞ்சுவான்; உலகம் பூத்த
கண்ணகன் கமலத்து அண்ணல்
"கருத்திலான் தொடுதல் கண்ணின்
எண்ணரும் கூறாய் மாண்தி"
என்பது ஓர் மொழி உண்டு என்பான்"

தீண்டிலன் என்னும் வாய்மை, திசைமுகன் செய்த முட்டை
கீண்டிலது; அறந்தன் உச்சி கிழிந்திலது; எழுந்த வேலை
மீண்டில; சுடர்கள் யாவும் விழிந்தில; வேதம் செய்கை
மாண்டிலது; என்னும் தன்மை வாய்மையால் உணர்தி மன்னோ!"

என்று அனுமன் பெருமகிழ்ச்சியுடன் பெருமைபடக் கூறினான்.

இங்கு அனுமன், சீதாபிராட்டியின், கற்பு, குலம் பெருமை, மாட்சி ஆகியன பற்றி விரிவுபடக் கூறுவதைக் காண்கிறோம்.

''கண்டனென் கற்பினுக்கு அணியைக் கண்களால்'' என்றும் "என் பெரும் தெய்வம் என்று உயர் குடிப் பிறப்பில் தோன்றியவளாய், பொறுமைக்கு இலக்கணமாய், ''கற்பெனும் பெயரது ஒன்றுகளி நடம் புரியக் கண்டேன் என்றும் தவம் செய்த தவமாய் தையல்'' வான் உயர் கற்பினாள் என்றும் அனுமன் பெருமைபடக் குறிப்பிடுகிறான்.

கம்பன் காட்டும் இக்காட்சி ஒரு அற்புதமான காட்சியாகும். அனுமனுடைய பெருமுயற்சியால் அரும் செயலால் இராமபிரானுக்குப் புதிய நம்பிக்கையும் தெளிவும் கிடைக்கிறது. அனுமனுடைய இந்த அற்புதமான அரும் செயல் அனைவராலும் பாராட்டத்தக்கது, போற்றத்தக்கது.

இராமாயணப் பெருங்காவியத்தில் சுந்தர காண்டம் மிகவும் சிறப்பு மிக்கது. அதைப் பாராயணம் செய்தால், படித்தால், படிப்பதைக் கேட்டால் நமது துன்ப துயரங்கள் தீரும். நம்மிடத்தில் நமது வீட்டில் நமது நாட்டில், நமது உள்ளத்தில், மகிழ்ச்சி நிலவும் நமது கஷ்டங்கள் தீரும். புதிய நம்பிக்கை பிறக்கும்.

கணையாழியும் சூடாமணியும் பரிமாரிக் கொண்டது புதிய நம்பிக்கையை மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கிறது. வனவாசக் கஷ்டங் களிலிருந்தும் பிரிவினைத் துன்பங்களிலிருந்தும், அசோகவனச் சிறைவாசத் துயரங்களிலிருந்தும் விடுதலை பெறுவதற்கான புதிய வாய்ப்புகள் கொண்ட நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

அனுமன் ஒரு மகத்தான காரியத்தை சாதித்துள்ளான். அனுமன் கடலைத் தாண்டிச் சீதையைக் கண்டு வந்ததும், யுத்த காண்டத்தில் சஞ்சீவி மலையைக் கொண்டு வந்ததும் மகத்தான மறக்க முடியாத நிகழ்ச்சிகளாகும். இந்த மகத்தான செயல்களைச் செய்து முடித்த அனுமன் தெய்வநிலைக்கு உயர்த்தப்பட்டிருக்கிறான். நமது கோவில்களில் நிலை பெற்றிருக்கிறான். அனுமன் கர்மயோகிக்கு இலக்கணமானவன். அளவற்ற ஆற்றலுக்கு அடையாளமானவன்.

அனுமன் கடலைத் தாண்டிய காட்சி ஒரு அற்புதமான காட்சியாகும். அக்காட்சியைப் பற்றிக் கூறும் போது,

விண்ணவர் ஏத்த, வேத முனிவர் வியந்து வாழ்த்த, கண்ணுதல் ஒழியச் செல்லும் கயிலை அம் கிரியை ஒத்தான், என்றும், கிழக்கு எழும் வழக்கு நீங்கி, வடக்கெழுந்து தென் இலங்கை செல்லும் பரிதிவானவனும் ஒத்தான், என்றும் ஆழ்சூழ் உலகம் எல்லாம் அருகனால் முருங்க உண்ணும் ஓழி நாள் வடபால் தோன்றும் உவா முழு மதியும் ஒத்தான் என்றும் கம்பன் மிகச் சிறப்பாகக் குறிப்பிட்டுக் கூறுகிறான்.

இன்னும் கம்பன் அனுமனைப் பற்றி ''நல்லறிவாளன்'' என்றும் நீதி நலத்தின் வினை ஓர்வான், என்றும், அயோத்தி வேந்தன்





தன் புகழ் எனக் குவவுத்
தோளான் எனவும்,
இராகவன் புகழ் எனும்
நலத்தான் என்றும்
இராகவன் சரம் எனப்
புகழோன் என்றும்
வினைப் பகை
வென்றான் என்றும்
காலம் பார்த்து
இறைவேலை கடவாத
கடல் ஒத்தான் என்றும்
ஊழி தோறும்
உயர்வுறும் கீர்த்தியான்
என்றும் நீதியின்
நினைந்தான் என்றும்
வேத நன்னூல்
உய்த்துள
காலமெல்லாம்
புகழொடும் ஓங்கி
நிற்பான் என்றெல்லாம்
அனுமனைப் புகழ்ந்து
குறிப்பிடுகிறார், உயர்திரு
கம்பநாடர்.

ஆம், அனுமன் கம்பன் கூறியுள்ளது

போல வேத நன்னூல் உய்த்துள காலம் எல்லாம் புகழொடும் ஓங்கி நிற்பான் தான். சானகியைக் கண்ட தன்மையை அனுமன் இராமனிடம் எடுத்துக் கூறுகிறான்.

"மாண்பு இறந்து அமைந்த கற்பின் வாள்நுதல், நின்பால் வைத்த சேண் பிறந்து அமைந்த காதல்,கண்களில் தெவிட்டித் தீராக் காண் பிறந்தமையால், நீயே கண் அகல் ஞாலம் தன்னுள் ஆண் பிறந்து அமைந்த செல்வம் உண்டனை ஆதி அன்றே''

என்று.

''தையலை வணங்கற் கொத்த
இடம் பெறும் தன்மை நோக்கி,
ஐய! யான் இருந்த காலை;
அலங்கல் வேல் இலங்கை வேந்தன்
எய்தினன்; இரந்து கூறி
இறைஞ்சினன்; இருந்து நங்கை
வெய்துரை சொல்லச் சீறிக்
கோறல் மேல் கொண்டு விட்டான்''

(கொல்லத் துணிந்தான்) அப்போது,

"ஆயிடை அணங்கின் கற்பும், ஐயநின் அருளும், செய்ய தூய நல் அறனும் என்று இங்கு இனையன தொடர்ந்து காப்பப் போயினன்; அரக்கிமாரைச் சொல்லுமின் பொதுவின் என்று ஆங்கு ஏயினன்; அவர்எலாம் என் மந்திரத்து உறங்கி இற்றார்''

என்றும் சீதையின் கற்பு நிலையை உறுதிப்படுத்தும் வகையில் அசோக வனத்தில் நிகழ்ச்சியைக் குறிப்பிட்டு இராவணன் வந்து கெஞ்சியதையும் சீதை அவனை மறுத்து கூறியதையும் அனுமன் விவரித்துக் கூறுகிறான்.

அனுமன் சீதா பிராட்டி கொடுத்த மாமணியை அந்தச் சூடா மணியை இராமனுடைய கையில் கொடுத்தான். இந்த அற்புதமான காட்சியைப் பற்றிக் கம்பன் எடுத்துக் கூறுவது நம்மையெல்லாம் உடல் சிலிர்க்க வைக்கிறது.

''வைத்தபின், துகிலின் வைத்த மாமணிக்கு அரசை வாங்கிக் கைத்தலத்து இனிதின் ஈந்தாள்; தாமரைக் கண்கள் ஆர வித்தக காண்டி! என்று கொடுத்தனன் வேத நன்னூல் உய்த்துள்ள காலம் எல்லாம் புகழொடும் ஓங்கி நிற்பான்''

என்று கம்பன் மிக அற்புதமாகக் குறிப்பிடுகிறார்.

இந்த மாமணியைக் கையில் வாங்கி அதைக் கண்டவுடன் இராமன் பெரு மகிழ்ச்சியடைந்தான். சீதை மீதிருந்த ஆசை இராமனை உருக்கி வேகவைத்துக் கொண்டிருந்த நிலைமாறி, அவனிடம் ஒரு புதிய தெம்பும் நம்பிக்கையும் ஏற்பட்டது. மெதுவாக உள்ளே எழுந்த காமம் (சீதை மீதான அன்பு உணர்வு) வளர்ந்து உயர்ந்து பொங்கி மெய்யுற வெதும்பி உள்ளம் மெலிவுறும் நிலையை விட்டான் அய்யன், அவன் கையில் சூளாமணிவந்து அதை அவன் பற்றிய போது சீதையைக் கையால் பற்றியது போல இருந்தது.

''பைப்பையப் பயந்த காமம் பரிணமித்து உயர்ந்து பொங்கி,
மெய் உற வெதும்பி உள்ளம் மெலிவுறும் நிலையை விட்டான்,
அய்யனுக்கு அங்கி முன்னர் அங்கையால் பற்றும் நங்கை
கை எனல் ஆயிற்று அன்றே கைபுக்க மணியின் காட்சி"

என்று கம்பன் மிகவும் நுட்பமாக இராமனுடைய உணர்வு நிலையைக் குறித்துத் தனது கவிதையில் கூறுகிறார். அத்துடன் இராமனுடைய நிலையைப் பற்றி மேலும் கூறுகிறார்.

''பொடித்தன உரோமம்; போந்து பொழிந்தன கண்ணீர்; பொங்கித்
துடித்தன மார்பும் தோளும்; தோன்றின வியர்வைத் துள்ளி;
மடித்தது மணவாய்; ஆவி வருவது போவது ஆகித்
தடித்தது மேனி; என்னே! யார் உளர் தன்மை தேர்வார்''

என்று கம்பர் மிக அற்புதமாகக் குறிப்பிடுகிறார்.

கணையாழியைக் கண்ட சீதைக்கு ஏற்பட்ட உணர்வு நிலையும் சூடா மணியைக் கண்ட போது இராம பிரானுக்கு ஏற்பட்ட உணர்வு நிலையும் அதைக் கம்பநாடர் எடுத்துக் கூறுவதும் இங்கு மீண்டும் நினைவு கூர்வோம்.

சீதா பிராட்டியும், இராமபிரானும் ஒருத்திக்கு ஒருவன் என்றும் ஒருவனுக்கு ஒருத்தி என்றும் ஒரு உயர்ந்த ஆண் பெண் உறவு நிலையை அன்பு காதல் நிறைந்த வாழ்க்கை நெறியாக ஒழுக்க நெறியாக சமுதாய அற நெறியாக மிக உயர்வான நிலைக்கு உயர்த்திக் காட்டிய தெய்வீகப் பாத்திரங்கள். எனவே தான் இராமனும் சீதையும் பாரத நாட்டு மக்கள் அனைவரின் உள்ளங்களிலும் தெய்வங்களாக நின்று நிலை பெற்று வாழ்கிறார்கள். சீதையும் இராமனும் இல்லாத வீடில்லை. இமயம் முதல் குமரி வரையிலுமான பாரத நாடு முழுவதிலும் அதற்காப்பாலும் சீதையும் இராமனும் வாழ்கிறார்கள்.

இராமனுக்கும் சீதைக்கும் கடும் சோதனைகள் ஏற்படுகின்றன. பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ, என்று பாற்கடலிலிருந்து பிரிந்து மிதிலையின் கூடி மகிழ்ந்தனர்.

வனவாசத்தில் அரக்கன் செயலால் மீண்டும் பிரிவு ஏற்படுகிறது. சீதை அசோகவனச் சிறையில் இராமன் கிட்கிந்தையின் அருகில் உள்ள வனத்தில், அனுமனின் அருஞ்செயல் மூலம் இராமனுடைய தூதனாகச் சென்று சீதையைக் கண்டு, கணையாழி கொடுத்து அவளிடமிருந்து சூளாமணியைப் பெற்று அம்மணியை இராமனிடம் சேர்க்கிறான்.

இராமனும் சீதையும் மீண்டும் கணையாழி மூலமும் சூளாமணி மூலமும் உள்ளத்தால் உணர்வால் மீண்டும் ஒன்று சேர்கிறார்கள்.

இங்கு இருவரையும் இணைக்கும் கம்பனுடைய அருமையான பாடல்கள் திரும்ப திரும்பப் படிக்கத்தக்கவை, நினைவு கூறத்தக்கவை.

கணையாழியைக் கண்ட சீதைக்குப் போன உயிர் வந்தது போன்ற உணர்வு பொங்கும் மகிழ்ச்சி ஏற்பட்டது. அதைக் கையில் வாங்கினள், மார்பிடை வைத்தனள், சிரத்தால் தாங்கினள், மலர்க் கண் மிசை ஒத்தினள், தடந்தோள் வீங்கினள், மெலிந்தனள், குளிர்ந்தனள், வெதுப்போடு ஏங்கினள், உயிர்த்தனள், இது இன்னது எனல் ஆமோ என்று கம்பர் குறிப்பிடுகிறார்.

இன்னும் கணையாழியைக் கண்ட சீதையின் நிலைமை பற்றிக் கம்பன் கூறுகிறார். அதை மீண்டும் நினைவு கூர்வோம்.

''இறந்தவர் பிறந்த பயன் எய்தினர் கொல் என்கோ?
மறந்தவர் அறிந்து உணர்வு வந்தனர் கொல் என்கோ?
துறந்த உயிர் வந்து இடை தொடர்ந்தது கொல் என்கோ?
திறம் தெரிவது என்னை கொல்இ நன்னுதலி செய்கை''

என்றும்,

''இழந்த மணி புற்று அரவு எதிர்ந்தது எனல் ஆனாள்
பழந்தனம் இழந்தன படைத்த வரை ஒத்தாள்
குழந்தையை உயிர்த்த மலடிக்கு உவமை கொண்டாள்,
உழந்து விழி பெற்றது ஓர் உயிர்ப் பொறையும் ஒத்தாள்''

''இருந்து பசியால் இடர் உழந்தவர்கள் எய்தும்
அருந்தும் அமுதாகியது; அறத்தவரை அண்ணும்
விருந்தும் எனல் ஆகியது; வீயும் உயிர் மீளும்
மருந்தும் எனல் ஆகியது; வாழி! மணி ஆழி''

என்றும் கம்பர் மிகவும் உருக்கமாக குறிப்பிடுகிறார்.

இன்னும், கணையாழியைப் பெற்றுக் கொண்ட போது சீதை எப்படியிருந்தாள் என்பது பற்றி அனுமன் இராமனிடம் கூறுகிறான்.

''வாங்கிய ஆழி தன்னை, வஞ்சர் ஊர் வந்தது ஆம் என்று
ஆங்கு உயர் மழைக் கண் நீரால் ஆயிரம் கலசம் ஆட்டி
ஏங்கினள் இருந்தது அல்லால் இயம்பலள், எய்த்த மேனி
வீங்கினள்; வியந்தது அல்லால் இமைத்திலள்; உயிர்ப்பு விண்டாள்''

மறு பக்கம் இராமன் சூளாமணியைப் பெற்ற போது, அவனுடைய அன்பு உள்ளம், காதல் உணர்வு உயர்ந்து பொங்கி, மெய் உற வெதும்பி உள்ளம் மெலிவுறும் நிலையை விட்டான், என்றும் அந்த சூளாமணியைக் கையினால் பற்றிய போது இராமன் சீதையைக் கரம் பற்றிய உணர்வைப் பெற்றான் என்றும், இன்னும் ''பொடித்தன உரோமம்(உடம்பு புல்லரித்தது) போந்து பொழிந்தன கண்ணீர் (ஆனந்தக் கண்ணீர் பொங்கி வடிந்தது) பொங்கித் துடித்தன மார்பும் தோளும், தொன்றின வியர்வின் துள்ளி, மடித்தது மணவாய் ஆவிவருவது போவது போல் ஆகித்தடித்தது மேனி'' என்றும் கம்பநாடர் குறிப்பிடுகிறார். எத்தகைய அருமையான காட்சி?

இந்தக் காட்சியைக் குறிப்பிட்டு இதில் சீதையின் உணர்வையும் இராமனுடைய இயல்பையும் யாரால் விவரிக்க முடியும் என்று கம்பனே கூறும் அளவிற்கு இருந்தது. இவ்வாறு இருவரையும் இணைத்த அனுமன் புகழ் ஓங்கி நிற்கிறது. அதைக் கம்பன் ''வேத நன்நூல் உய்த்துள காலம் எல்லாம் புகழொடும் ஓங்கி நிற்பான்'' என்று அருமையாகக் குறிப்பிடுகிறார்.

பலே! பலே!!


இந்த அருமையான செய்தியைக் கேட்டு வானரப்படைத் துள்ளிக் குதித்தன. இலங்கையை நோக்கிச் செல்லும் ஒரே குறிக்கோளில் அனைவரும் இணைந்தனர்.

சுக்கிரீவன், உடனே புறப்படு என்று வானரப் படைகளுக்கு உத்தரவிட்டான். வானரப்படை கடலலை போல் ஆரவாரம் செய்து கொண்டு தென் திசையை நோக்கிக் கிளம்பியது.

படைகள் செல்லும் போது ஊர்கள், நாடு நகரங்கள் வழியில் செல்ல வேண்டாம். அதனால் அம்மக்களுக்குக் கலக்கமும் கஷ்டங்களும் ஏற்பட்டு விடும். எனவே சாதாரண மக்களுக்கு எவ்விதத் தொல்லையும் இல்லாமல் மலைகள், குன்றுகள், ஆறுகள் அதன் ஓரங்கள் வழியே செல்லுமாறு இராமன் குறிப்பிடுகிறான்.

''வையகம் அதனில் மாக்கள், மயங்குவர், வயவெம்சேனை எய்திடின்; என்பது உன்னி, இராகவன் இனிதின் ஏவப் பெய்கனி, கிழங்கு, தேன் என்று இனையன பெறுதற்கு ஒத்த செய்யமால் வரையே, ஆறாச் சென்றது, அத்தகைப்பு இல் சேனை''

இவ்வாறு அனுமனும் அங்கதனும் நீலனும் வழி காட்ட வானரப்படை பன்னிரண்டு நாட்கள் நடந்து சென்று தென் திசைக் கடலை அடைந்தனர்.



20. இராவணன் சபையில் கும்பகருணனும் விடணனும்

எரியுண்ட இலங்கையைப் பழுது பார்த்துப் புதுப்பித்து முன்னைக் காட்டிலும் அழகுர அமைத்தனர். இராவணன் மந்திராலோசனைக்காகத் தன் நெருக்கமானவர்களைக் கொண்ட சபையைக் கூட்டினான். சபையில் இராவணன் கொலு வீற்றிருந்தான்.

இங்கு இராவணனைக் குறிப்பிடும் போது, ''அரம்பையர் கவரியோடு ஆடும் தாரினான்'' என்றும், ''புனைகுழல் மகளிரோடு இளைஞர் போக்கினான், நினைவுறு காரியம் நிகழ்த்து நெஞ்சினான்'' என்றும் கம்பன் குறிப்பிடுகிறார்.

இராவணனுடைய மந்திராலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது. அக் கூட்டத்தில் கும்பகருணன் முதலில் பேசுகிறான். அவன் தன் அண்ணனுடைய செய்கைகளை இடித்துக் காட்டி அறிவுரை கூறுகிறான் ''நீ அயன் குலத்திற்கு ஒரு தலைவனாக இருக்கிறாய். ஆயிரம் வேதப் பொருள்களை அறிந்துப் பெரும் அறிவு பெற்றுள்ளாய் ஆயினும் உனது ஊழ் வினையால் தீயனவற்றைச் செய்து நிற்கிறாய்.

நமது அழகிய நகரம் தீயால் சுடப்பட்டு எரிந்து போயிற்று என்றும் நமது அரசியல் அழிந்து போயிற்று என்றும் கூறுகிறாய். அதற்காகக் கவலை கொள்கிறாய். ஆனால் நீ வேறு ஒரு குலத்தோனுடைய தேவியை நயந்து சிறை வைத்த செயல் நல்லதல்ல. அதனால் உனக்குப் பழியே உண்டாகும்.

நமது நல்ல நகரம் அழிந்து விட்டது என்று வெட்கப்படுகிறாய். உன்னை விரும்பிப் போற்றும் தேவியர்கள் பலரும் (அழகிய பெண்கள் பலரும்) உன்னை உயிருக்கு உயிராய் பாராட்டி வருகிறார்கள். ஆயினும் உன்னை விரும்பாது மறுத்தும் பேசும் மாற்றான் ஒருவன் மனைவியின் பொன்னடி தொழ ஓடுகிறாய், என்று நீ வேறு ஒருவன் மனைவியை இரக்கம் இன்றி அறம் துறந்து, வன்முறையில் சிறை வைத்தாயோ அன்றே நமது அரக்கர் குலத்தின் புகழ் அழிந்து விட்டது. இழிவான செயல்கள் மூலம் நமது புகழைக் காப்பாற்றிவிட முடியாது.

குற்றமற்ற மாற்றான் தாரம் ஒருத்தி. அவளை சிறையில் வைப்போம், அவள் மீது காம வெறி கொள்வோம், நாம் பேசுவது மானம் பேணுவது காமம். கூசுவது மானிடரை, நன்றாக இருக்கிறது நமது ஆட்சி என்று இடித்துக் காட்டுகிறான்.

''ஆசில்பரதாரம் அவை அம் சிறை அடைப்போம்
மாசில் புகழ் காதல் உறுவேம் வளமை கூறப்
பேசுவது மானம் இடை பேணுவது காமம்
கூசுவது மானுடரை, நன்று நம் கொற்றம்''

என்று இடித்துக் கூறுகிறான்.

நீ, தூயவர்கள் செய்யும் செயல்களைச் செய்யவில்லை. குலச் சிறுமை செய்து விட்டாய். ஆயினும் இப்போது அந்தச் சீதையை விட்டுவிடுவதும் நமது பலவீனத்தைக் காட்டிவிடும். நமக்குப் பழி வந்து சேர்ந்து விட்ட போதிலும் இனி அந்த மானிடரை எதிர்த்துப் போரிட்டு வெல்வதே நலம். எனவே,

''உறுபடை ஊறுவதன் முன்னம் ஒரு நாளே
ஏறுகடல் ஏறி நரர் வானரரை எல்லாம்
வேறு பெயராத வகை வே ரொடும் அடங்க
நூறுவதே கருமம் என்பது நுவன்றான்''

இவ்வாறு கும்பகருணன் கூறிமுடித்தான்.

கும்பகருணனுடைய கூற்றில் சிறந்த ஒழுக்க நெறிக் கருத்துக்கள் இருப்பதைக் காண்கிறோம். ஆயிரம் மறை யாருள் அறிந்து அறிவு அமைந்தவர்கள் தீய காரியங்களைச் செய்தல் கூடாது.

அரசியலில் உள்ளவர்கள் தங்களுக்குப் பழி ஏற்படும் படியாக வேறு ஒருவனுடைய தேவியை விரும்பி அவளைச் சிறை வைத்தல் கூடாது.

தன்னை விரும்பிப் பல பெண்கள் தன்னைச் சுற்றி இருக்கும் போது அதை விடுத்தும், அதற்கு மேலும் தன்னை விரும்பாத தன்னை வெறுத்துப் பேசும் ஒருத்தி மீது ஆசை வைத்த அவளிடம் போய் அவளைத் தொழுது கெஞ்சுதல் இழிவாகும்.

வேறு ஒருவன் மனைவியை ஒரு தவத்தினை இரக்கமின்றி வன்முறையில் அறம் துறந்து சிறைவைத்தல் நமது புகழை அழித்து விடும். இழிதொழில்கள் மூலம் நமது புகழைப் பாதுகாத்துவிட முடியாது.

எனவே காமத்தைப் பேணுவது நல்ல செயல் அல்ல, அதனால் குலச் சிறுமை ஏற்பட்டுள்ளது என்றும், மாற்றான் மனைவியை விரும்புவது அவளைச் சிறை வைப்பது, அவள் மீது காதலுறுவது காமத்தைப் பேணுவதெல்லாம் புகழை அழிக்கும். இகழ்ச்சியை உண்டாக்கும் பழி சேரும், சிறுமை நிகழும், என்றெல்லாம் கும்பகருணன் எடுத்துக் கூறுவதைக் காண்கிறோம்.

இருப்பினும் சீதையை விட்டு விடுவது நமது பலவீனத்தைக் காட்டிவிடும் என்று குலமானம் பேசி, எதிரிகள் நம் அருகில் நெருங்கு வதற்கு முன்பாக இப்போதே நமது படை பலம் முழுவதையும் திரட்டிக் கடல் தாண்டிச் சென்று அவ்வெதிரிகளை அழித்து விட வேண்டும் என்றும் கூறுகிறான். இது கும்பகருணனுடைய குலமான அரசியலாகும்.



வீடணன் விளக்கவுரை

வீடணன் மூவரில் இளையவன். அத்துடன் அவன் சில கசப்பான உண்மைகளையும் எடுத்துக் கூற வேண்டிய கட்டாயத்திலும் இருந்தான். எனவே மிக்க அடக்கத்துடன் இராவணனுடைய குணம் அறிந்து மிகவும் பௌவியத்துடன் தனது கருத்துக்களை எடுத்துக் கூறுகிறான்.

எந்தை நீ, என்தாயும் நீ, என்னுடைய முன்னவன் நீ,, நான் வணங்கும் தெய்வம் நீ, மற்றும் முற்றும் நீ, இந்திரப் பெரும்பதம் இழக்கின்றாய் என்ற காரணத்தினால் நான் மிகவும் மனம் நொந்து இதைக் கூறுகிறேன். நான் சொல்ல வந்ததை முழுமையாகக் கேளுங்கள்.

இலங்கை நகரமும் உனது ஆட்சியும் பற்றி எரிந்தது, வானரம் சுட்டதனால் அல்ல, உலகின் தாயாகிய ஜானகி என்னும் பெயரினளுடைய கற்பின் நெருப்பினால் சுட்டதேயாகும்.

நன்கு ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் வானளாவிய உயர்வு என்றாலும் பாதாளமான வீழ்ச்சி என்றாலும் பெண் பொருட்டும் மண் பொருட்டும் ஏற்படுவதேயாகும்.



இந் நெடும் கடல் சூழ்ந்த இலங்கையின் வேந்தன் தன் நெடுந் தவத்தின் பலன்களையெல்லாம் ஒரு மானிட மடந்தை மீது கொண்ட ஆசையால் அழியப் போகின்றன என்பதை நினைத்துக் கவலை அடைகிறேன்.

தெய்வத் தன்மையுள்ள கற்புடையாவளாகிய வேதவதி என்பவள் ‘‘நோய் உனக்குயான்’’ என்று சாபமிட்டாள். அந்த வேதவதியே இச்சீதை.

தீயிடைக் குளித்த அத் தெய்வக் கற்பினாள், வாயிடை மொழிந்த சொல் மறுக்கவல்லமோ? ‘‘நோய் உனக்கு யான், என நுவன்றுளாள், அவள் ஆயவள் சீதை, பண்டு அமுதில் தோன்றினாள்’’ என்றெல்லாம் வீடணன் எடுத்துக் கூறினான்.

அடுத்து இராமனுடைய பெருமைகளையும், வலிமைகளையும் அவன் பெற்றுள்ள படைக்கலன்களின் சக்தியையும் பயிற்சிகளின் ஆற்றல் களையும் எடுத்துக் கூறி உணர்த்த முயன்றான்.

கடைசியாக வீடணன்

''இசையும் செல்வமும் உயர் குலத்து இயற்கையும் எஞ்ச வசையும் கீழ்மையும் மீக்கொளக் கிளையொடும் மடியாது, அசைவில் கற்பில் அவ்வணங்கை விட்டு அருளுதி! அதன்மேல் விஷயம்இல்,' எனச் சொல்லினள் அறிஞரின் மிக்கான்''

என்று கூறி முடிக்கிறான்.

இராவணன் கடுங்கோபம் கொள்கிறான். வீடணன் எத்தனை சொல்லியும் அவன் கேட்கவில்லை. என் முன்நிற்காதே போ, என்று விரட்டி விட்டான். வீடணனும் தனது அமைச்சர்களுடன் இலங்கையை விட்டு வெளியேறி இராமனிடம் வந்து அடைக்கலம் அடைந்தான்.

இங்கு கும்பகருணனும் வீடணனும் இராவணனுடைய செயலைக் கண்டிப்பது எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. கும்பகருணன் சாதாரண ஒழுக்க நெறி அரச நீதி, மனித இயல்பு ஆகிய நிலைகளி லிருந்து இத்தனை பெண்கள் இருக்கும் போது, விருப்பமில்லாத ஒரு மாற்றான் மனைவி மீது ஆசை கொண்டு அவளிடம் போய் ஏன் மண்டியிடுகிறாய் என்று கேட்கிறான். வீடணனோ இராமன் மீதும், சீதை மீதும் உள்ள பக்தி நிலையிலிருந்து அந்த தெய்வீக மடந்தை மீது நீ கொண்டுள்ள மோகத்தை விட்டுவிடு இல்லாவிட்டால் நீ அழிந்து போவாய் என்று கூறுகிறான். இந்த இரு அணுகும் முறைகளில் முடிவுகள் வேறு படுவதைக் காணமுடிகிறது.

❖❖❖

21. இராமனுடைய சிந்தனையும் துயரமும்

இராமனும் இலக்குவனும் வானரத் தலைவர்களும் படைகளும் தென் திசைக் கடலைக் கண்டனர்.

இராமன் கடலைக் கண்டான் என்பதை

''பொங்கிப் பரந்த பெரும் சேனை
புறத்தும் அகத்தும் புடை சுற்றச்
சங்கின் பொலிந்த தகையாளைப்
பிரிந்த பின்பு, தமக்கு இனமாம்
கொங்கின் பொலிந்த தாமரையின்
குழுவும் துயில் வுற்று இதழ் குவிக்கும்

கங்குல் பொழுதும் துயிலாத
கண்ணன் கடலைக் கண் உற்றான்''

என்றும் கம்பன் குறிப்பிடுகிறார்.

சீதை நீங்காத துயரத்தில் இருந்தாள். இராமன் தனிமையாக இருந்து சீதையை நினைந்து கண்ணீர் பொங்கி நின்றான். அது போல கடலும் பொங்கி எழுந்து அதன் அலைகள் வந்து இராமனுடைய தாள்களில் வந்து வீழ்ந்தன.

''இந்து அன்னநுதல் பேதை
இருந்தாள், நீங்கா இடர்; கொடியேன்
தந்த பாவை, தவப் பாவை
தனிமைதகவோ எனத்தளர்ந்து
சிந்துகின்ற நறும் தரளக்
கண்ணீர் ததும்பித்திரைத்து எழுந்து
வந்து வள்ளல் மலர்த்தாளில்
வீழ்வது ஏய்க்கும் மறிகடலே''

என்று கம்பநாடர் குறிப்பிடுகிறார்.

இராமபிரான் விசாலமான பெரிய கடலைக் கண்டான். அதை விட விரிவானதாக அவனுடைய நெடு மானமும் துயரமும் சீதைபாலான காதலும் குமுரி நின்றது. இந்த நிலையில் அடுத்து என்னதாகும், எவ்வாறு தனது அடுத்த பணிகளைக் கொண்டு செல்லலாம் என்பதையும் சிந்தித்தான்.

''இன்னதாய கருங்கடலை
எய்தி, இதனுக்கு எழுமடங்கு
தன்னது ஆய நெடுமானம்
துயரம், காதல், இவைதழைப்ப,
என்னதாகும் மேல்வினை
என்று இருந்தான் இராமன், இகல் இலங்கைப்
பின்னதாய காரியமும் நிகழ்ந்த
பொருளும் பேசுவோம்''

என்று கம்பர் குறிப்பிடுகிறார்.

இங்கு சீதையின் நீங்காத துன்பங்களை நினைந்து மிக்க துயரம் அடைந்த இராமன் கடல், அதன் அலைகள், அதன் குமுறல் ஆகியவைகளைக் கண்டும் கேட்டும் தானும் குமுறுவதைக் கம்பன்

மிகவும் நுட்பமாக எடுத்துக் கூறுகிறார். கருங்கடலின் குமுறல்களைக் காட்டிலும் இராமனுடைய நெடுமானமான உணர்வு, துயரம் சீதையின் பாலான காதல் ஆகியவைகளின் குமுறல்கள் மேலோங்கி நின்றன.

இவ்வாறு இராமன் சீதையை நினைந்து நினைந்துத் துயரம் அடைந்தான். அவனுடைய மார்பில் மன்மதன் சரம் பாய்ந்தது. அதைப் பற்றி

''கரத் தொடும், பாழி மாக்கடல் கடைந்துளான்
உரத்தொடும், கரனொடும் உயர ஓங்கிய
மரத்தொடும் தொளைத்தவன், மார்பில், மன்மதன்
சரத்தொடும் பாய்ந்தது, நிலவின் தாரை வாள்''

என்ற கம்பன் குறிப்பிடுகிறார்.

சக்தி மிக்க இராமனுடைய பாணங்கள் தாடகையை, கரதூடணர் களை, மாரீசனை, ஆச்சாமரங்களை, வாலியின் நெஞ்சைத் துளைத் திருக்கின்றன. அத்தகைய இராம பிரானுடைய வலுவான நெஞ்சை மன்மதனுடைய பாணங்கள் துளைத்தன என்று கம்பன் குறிப்பிடுவது நம்மை உருக்குகிறது.

இராமன் பெரும் துயரத்துடன் தன் உடலை நோக்குவான். தன் இன்னுயிரைப் பற்றியும் தனது வாழ்க்கையைப் பற்றியும் தனக்கு ஏற்பட்ட இடர்களைப் பற்றியும் சிந்தனை செய்வான். கடலை நோக்குவான். அந்த அரக்கன் இராவணன் வாழும் திடலை நோக்குவான். தனது வில்லை நோக்குவான். இவ்வாறு சிந்தித்தான் என்பதை.

''உடலினை நோக்கும், இன்னுயிரை நோக்கும்; ஆல்
இடரினை நோக்கும்; மற்று யாதும் நோக்கலன்;
கடலினை நோக்கும்; அக்கள்வன் வைகுறும்
திடரினை நோக்கும்; தன் சிலையை நோக்கும்; ஆல்''

என்று கம்பன் குறிப்பிடுகிறார்.

கடலில் சேதுவைக் கட்டி முடித்து இராமனும் இளவலும் வானரத் தலைவர்களும் படைகளும் அனைவரும் கடலைக் கடந்து இலங்கை நகரின் கோட்டை அருகில் சென்று படைவீடுகள் அமைத்து முகாம் இட்டனர்.

இதைக் கண்டுவர இராவணன் தனது ஒற்றர்களை மாறு வேடத்தில் அனுப்பி வைத்தான். அவ்வொற்றர்களும் வானரர் வடிவில் படையில் நுழைந்தனர். வீடணன் அவர்களை அடையாளம் கண்டு

கொண்டான். தன் மந்திரத்தால் அவர்களைத் தங்கள் நிஜ உருவில் கொண்டு வந்தான். அவர்களை இராமனிடம் கொண்டு வந்தனர்.

அவர்களும் இராமனிடம் உண்மையை உரைத்து அபயம் வேண்டினர். இராமனும் அவர்களிடம்,

''எல்லையில் இலங்கைச் செல்வம்,
இளையவற்கு ஈந்த தன்மை
சொல்லுதிர்; மகர வேலை
கவிக் குலவீரர் தூர்த்துக்
கல்லினில் கடந்தவாறும்
கழறுதிர்; காலம் தாழ்த்த
வில்லினர் வந்தார் என்றும்
விளம்புதிர் வினையம் மிக்கீர்!''

என்றும்.

''தாழ்விலாத்தவத்து ஓர் தையல்
தனித்து ஒரு சிறையில் தங்கச்
சூழ்விலா வஞ்சம் சூழ்ந்த
தன்னைத்தன் சுற்றத்தோடும்
வாழ்வெலாம் தம்பி கொள்ள,
வயங்கு எரி நரகம் என்னும்
மீள்வு இலாச் சிறையில் வைப்பேன்
என்பதும் விளம்பு வீரால்''

என்று கூறி அவர்களை அனுப்பி வைத்தான்.

இங்கு ஒரு சிறிய நுட்பமான போர்க்கால நிகழ்ச்சியாக ஒற்றர் நிகழ்ச்சி வருகிறது.

வானரப்படை திரண்டு இலங்கை நகரை முற்றுகையிட்டிருக்கிறது. அப்படை பலத்தை அதன் பலவேறு விவரங்களை ரகசியங்களை அறிந்துவர இராவணன் தனது ஒற்றர்களை அனுப்பினான். அவர்களும் மாறு வேடத்தில் வானரர் வேடத்தில் படைக்குள் புகுந்தனர். வீடணன் அவர்களை அடையாளம் கண்டு அகப்பட்டுக் கொண்டனர். இராமன் அவர்களிடம் எச்சரிக்கையாகச் செய்திகளைச் சொல்லியனுப்புகிறான்.

வானரப்படைகள் கற்களைக் கொண்டு கடலைக் தூர்த்து பாலம் அமைத்து அவ்வழியாகக் கடலைக் கடந்து வந்து இலங்கையை முற்றுகையிட்டுள்ளனர். இளையவர் வீடணனுக்கு இலங்கை

அரசப்பட்டம் சூட்டப்பட்டு விட்டது. வில்வீரர்களும் வந்து சேர்ந்து விட்டனர். சீதையைச் சிறையில் வைத்து வஞ்சகம் நிறைந்த அரக்கனை அவனுடைய சுற்றத்தோடு நரகம் என்னும் மீள்விலாச் சிறையில் வைப்பர்'' என்று தங்கள் அரசனிடம் கூறும்படி ஒற்றர்களைத் திருப்பி அனுப்புகிறார் இராமபிரான்.

இங்கு ஒரு ஒற்றர் நிகழ்ச்சியாக மட்டுமல்லாமல் சீதையைத் தனித்து ஒரு சிறையில் வைத்த இராவணனுக்கு, அவன் செய்த குற்றத்திற்குத் தண்டனையாக ''வயங்குஎரி நரகம் என்னும் மீள்விலாச் சிறையில் வைப்பேன்'' என்று இராமன் கூறுவது கவனிக்கத் தக்கதாகும்.

இராமனுடைய உள்ளத்தில் சீதையின் பாலான காதல் உணர்வு எப்போதும் மேலோங்கியிருந்தது.

''அணை நெடும் கடலில் தோன்ற,
ஆறிய சீற்றத்து ஐயன்
பிணைநெடும் கண்ணி என்னும்
இன்னுயிர் பிரிந்த பின்னைத்
துணைபிரிந்து அயரும் அன்றில்
சேவலின் துளங்குகின்றான்;
இணை நெடும் கமலக் கண்ணால்
இலங்கையை எய்தக் கண்டான்''

என்றும் கம்பர் குறிப்பிடுகிறார்.

''அருந்ததி அனைய நங்கை
அவ்வழி இருந்தாள் என்று
பொருந்திய காதல் தூண்டப்
பொன்னகர் காண்பான் போலப்
பெருந்துணை வீரர் சுற்றத்
தம்பியும் பின்பு செல்ல,
இருந்த மான் மலையின் உச்சி
ஏறினன்; இராமன்; இப்பால்''

என்று இராமனுடைய காதலுணர்வினைக் கம்பன் குறிப்பிடுகிறார்.



22. மாலியவான் அறிவுரை

மாலியவான் இலங்கைப் பிரமுகர்களில் முக்கியமானவன். இராவணனுக்குத் தாய் வழிப் பாட்டன். மிகுந்த புத்திமான். அனுபவம் மிக்கவன். இராவணனுடைய மிகவும் நெருக்கமான உறவினர் வட்டத்தில் உள்ளவன். இராவணன், ''மனிதர்கள் அருகில் வந்து விட்டார்கள். இனி என்ன செய்யலாம்'' என்று தனக்கு மிக நெருக்கமானவர்களை அழைத்து ஆலோசனை கேட்டான்.

அப்போது முதியவன் மாலியவான் ''நமது தொன்மையான நகரம் சுட்டெரிக்கப் பட்டதைக் கண்டோம். கடலின் மீது அணைகட்டி முடித்து விட்டதையும் கண்டோம். இப்போது அம்மனிதர்களும் வானரர்களும் நமது கண்ணெதிரே வந்து விட்டதைக் காண்கிறோம். இதையெல்லாம் நாம் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறோம். இதைத் தடுக்க நம்மால் என்ன செய்ய முடிந்தது? ஒன்றும் செய்ய முடியவில்லை.

''சுட்டாவா கண்டும் தொல் நகர், வேலையைத்
தட்டவா கண்டும், தாவற்ற தெவ்வரைக்
கட்டவா கண்டும், கண் எதிரே வந்து
விட்டவா கண்டும் மேல் எண்ண வேண்டுமோ?"

இதற்கு மேலும் நாம் நினைப்பதற்குச் சிந்திப்பதற்கு என்ன இருக்கிறது என்று கூறினார்.

இராவணன் கோபமாக "உனக்கு பயமாக இருந்தால் வீடணன் உள்ள இடத்திற்கு ஓடிவிடு" எனக் கத்தினான். மாலியவான் மௌனமாகி விட்டான்.

சேனைத் தலைவர்கள், அனுமதி கொடுங்கள் வானரப்படையை அழித்து விட்டு வருகிறோம் என்று அனுமதி கேட்டார்கள்.

அப்போது மீண்டும் மாலியவான் எழுந்து பேசினான். ''இராமன் திருமாலின் அவதாரம். இலக்குவன் ஆதிசேடன் அம்சம். தேவர்களே வானரர்களாக வந்துள்ளார்கள். இலக்குமியே சீதாதேவி. இலங்கையைக் காத்து வந்த காவல் தெய்வம் இலங்கை மாதேவி காவலை விட்டுவிட்டுப் போய்விட்டாள். உன் தம்பி எவ்வளவோ சொல்லியும் நீ கேட்கவில்லை. உன் மீதுள்ள அன்பினால் என் உள்ளத்தில் எழுந்த வேதனை மிகுதியால் கூறுகிறேன். சீதையை விட்டுவிடு, உன் தீமைகள் எல்லாம் தீரும், என்று கூறினான்.

இராவணன் பிடிவாதமாகச் சீதையின் பொருட்டு நான் எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும் அஞ்ச மாட்டேன் என்று வீரம் பேசினான். மாலியவான் அவ்வப்போது தலையிட்டுத் தனது கருத்துக்களைக் கூறிக் கொண்டு வந்தான். சீதையை விட்டு விடும்படி அறிவுரை சொல்லிக் கொண்டேயிருந்தான்.

இராவணன் கம்பீரமாகக் கோட்டைச் சுவர் மீதேறி நின்று இராமனையும் வானரப்படைகளையும் கண்டான். கோட்டை மீது நிற்பது யார் என்று இராமன் கேட்க வீடணன்,

''நாறு தன் குலக்கிளையெல்லாம் நரகத்து நடுவான்
சேறுசெய்தவன், உருப்பசி, திலோத்தமை முதலாக்
கூறுமங்கையர் குழாத்திடைக் கோபுரக் குன்றத்து
ஏறி நின்றவன், புன் தொழில் இராவணன்''

என்று குறிப்பிட்டான்.

இராவணன் திரும்பி வந்து ஒரு மணிமண்டபத்தில் அமர்ந்து கொண்டு என்ன செய்யலாம் என்று ஆலோசனை செய்து கொண்டிருந்தான். அப்போது மாதுலத் தலைவன் மாலியவான் மீண்டும், ''வேதனைக் காமம் அந்தோ வேரொடும் கெடுத்தது'' என்றும் சீதையை விட்டு விடும்படி பின்னும் கூறினான்.

இங்கு ஒரு சிறு விவாதமும் நடைபெற்றது. அரக்கர் படையினர் எழு, மழு, தண்டு, வேல், வாள், இலை நெடும் சூலம், வில் முதலிய முழு முதல் படைகள் ஏந்தி போரில் முனைகின்றனர். இந்த வானரப் படையினர் ஆயுதங்கள் எதுவும் இல்லாமல் வெறுங்கையோடு வந்து என்ன செய்ய முடியும் என்று நிகும்பன் என்னும் சேனைத் தலைவன் கூறினான். அதற்கு பதிலளித்து மாலியவான், இந்த ஊரை எதிர்த்துப் பொடியாக்கிச் சென்ற அனுமனிடத்தில் சக்கரம் இருந்ததா? கையில் தனு இருந்ததா? வாளி இருந்ததா? இப்போது நேரில் வந்து இராவணனுடைய முகத்தில் அரைந்து அவனுடைய முடி மணிகளை எடுத்துச் சென்றச் சுக்கிரீவன் கையில் சூலமும் வேலும் வாளும் இருந்ததா? என்று கேட்டான்.

''புக்கு எரி மடுத்து இவ்வூரைப் பொடி செய்து போயினாற்குச்
சக்கரம் உண்டோ? கையில் தனு உண்டோ? வாளி உண்டோ?
இக்கிரி பத்தின் மௌலி இனமணி அடங்கக் கொண்ட
சுக்கிரிவற்கும் உண்டோ சூலமும் வேலும் வாளும்''

ஆதலால் சீதையை விட்டு விடுக, என்று கூறினான் முதியவன். இராவணன் மாலியவானைக் கடுமையாகக் கடிந்து கொண்டான். அவனும் பேச்சை விட்டான்.



23. தேவியை விடுக அன்றேல் ஆவியைவிடுக

இராவணன் பெரும் படையுடன் கோட்டையின் வடக்கு வாசலில் நின்றான். இராமனும் பதினேழு வெள்ளம் சேனை பலத்துடன் வடக்கு வாசல் பக்கம் இராவணனை எதிர்பார்த்து நின்றான்.

அப்போது இராமன் வீடணனிடம்

''தூதுவன் ஒருவன் தன்னை இவ்வழி விரைவில் தூண்டி,
மோதினை விடுதியோ என்று உணர்த்தவே, மறுக்கும் ஆயின்
காதுதல் கடன்; என்று உள்ளம் கருதியது; அறனும் அஃதே;
நீதியும் அஃதே; என்றான் கருணையின் நிலயம் அன்னான்''

ஒரு தூதுவனை அனுப்பி மோதலை விடுதியே என்று உணர்த்`திப் பார்க்கலாம் மறுக்குமாயின் அப்போது போர் செய்வதைக் தவிர வேறு வழியில்லை, அது தான் அறமும் நீதியும் என்ற கருதுகிறேன், என்று கேட்டான்.

''அரக்கர் கோன் அதனைக் கேட்டான்
'அழகிற்றே ஆகும்' என்றான்;
குரங்கினத்து இறைவன் கேட்டுக்
'கொற்றவற்கு உற்றது' என்றான்
'இரக்கம் அது இழுக்கம்' என்றான்
இளையவன்; 'இனி நாம் அம்பு
தூக்குவது அல்லால், வேறு ஓர்
சொல் உண்டோ'' எனச் சொன்னான்"

மேலும் இராமனுடைய கருத்தை மறுத்து இலக்குவன் பல வாதங்களையும் கிளப்பினான்.

இலக்குவன் கிளப்பிய வாதங்களையெல்லாம் கேட்டு இராமனும் புன்முறுவல் பூத்து ''நீ கூறிய வாதங்களை நான் மறுக்கவில்லை. முடிவும் அதுதான் ஆகும். இருப்பினும் அறிஞர்கள் ஆய்வு செய்து

கூறியுள்ள நீதி நெறிகளில் உறைக்கப்பட்டுள்ள அற நெறிகளையும் மறந்து விடலாகாது. ''புயத்துறை வலிய ரேனும் பொறையொடும் பொருந்தி வாழ்தல் தான் வெற்றிக்கு வழி வகுக்கும். அறமும் அது தான்'' என்று விளக்கம் கூறி இளையவனை சமாதானப்படுத்தினான்.

வாலிமைந்தன் அங்கதனைத் தூது அனுப்பத் தீர்மானித்தனர்.

தூதுவன் கூற வேண்டியது என்ன என்பதை இராமன் அங்கதனிடம் சொல்லி அனுப்பினான்.

''என் அவற்கு உரைப்பது? என்ன ஏந்திழையைக் கைவிட்டுத்
தன்உயிர் பெறுதல் நன்றோ? அன்றெனில் தலைகள் பத்தும்
சின்னபின்னங்கள் செய்யச் செருக்களம் சேர்தல் நன்றோ?
சொன்னவை இரண்டின் ஒன்றே துணிகெனச் சொல்லிடு''
என்றான்''

என்ற இரண்டில் ஒன்றைத் துணிக என்று சொல்லிடுவாய்.

அத்துடன்

''அறத்துறை அன்று; வீரற்கு அழகும் அன்று; ஆண்மையன்று,
மறத்துறை அன்று; சேமம் மறைந்து உறைந்து ஒதுங்கி வாழ்தல்
நிறத்துறை வாளிகோத்து நேர் வந்து நிற்கும் ஆகின்
புறத்துறை எதிரே வந்து போர்தரப் புகல்தி!'' என்றான்

என்று கூறி அனுப்பினான்.

அங்கதன் மகிழ்ச்சியும் பெருமையும் கொண்டான். தூது செல்வதில் மாருதிக்கு அடுத்தபடி நான் தான் என்னும் பெயர் பெற்றேன்'' என்று பெருமிதம் கொண்டு அம்பின் வேகத்தில் சென்றான்.

அங்கதன் இராவணன் செய்த கொடுமைகளைப் பற்றிக் குறிப்பாகச் சீதைக்கு இழைத்த துன்பங்களை நினைத்து அவ்வணங்கின் மீது அவ்வரக்கன் வைத்த ஆசைப் பிணியைப் பறித்து அவனை யார் முடிப்பர் என்ற சிந்தனையுடன் வேகமாகச் சென்று இராவணன் முன் நின்றான்.

''அணி பறித்து அழகு செய்யும் அணங்கின் மேல் வைத்த ஆசைப்
பிணி பறித்து, இவனை யாவர் முடிப்பவர் படிக்கண்? பேழ்வாய்
பணி பறித்து எழுந்த மானக் கலுழனின், இவனைப் பற்றி
மணிபறிந்து எழுந்த எந்தை யாரினும் வலியன்' என்றான்''

''நெடுந்தகை விடுத்த தூதன், இனையன நிரம்ப எண்ணிக்
கடுங்கடல் விடமும் கூற்றும் கலந்து கால் கரமும் காட்டி
விடும் சுடர் மகுடம் மின்ன, விரிகடல் இருந்தது என்னக்
கொடுந்தொழில் மடங்கல் அன்னான், எதிர்சென்று குறுகி நின்றான்''

என்றும் கம்பன் அங்கதன் தூது சென்ற காட்சியைச் சிறப்பாகக் குறிப்பிடுகிறார்.

இங்கு இராவணனுடைய உள்ளத்தில் எழுந்துள்ள காம வெறியை பெருங்காதலை ஆசைப் பிணி எனக் கம்பநாடர் குறிப்பிடுவது சிறப்பாகும்.

அங்கதன் இராவணன் முன்பாகப் போய் நின்றான். யார் நீ எனக் கேட்ட இராவணனிடம்.

பூத நாயகன், நீர் சூழ்ந்த புவிக்கு நாயகன், இப்பூமேல்
சீதை நாயகன், வேறுள்ள தெய்வ நாயகன், நீ செப்பும்
வேத நாயகன், மேல் நின்ற விதிக்கு நாயகன், தான் விட்ட
தூதன் யான்; பணித்த மாற்றம் சொல்லிய வந்தேன்; என்றான்''

என்று கூறியதைக் கம்பன் மிகச் சிறப்பாகத் தனது கவிதையில் கூறுகிறார்.

அங்கதனுக்கும் இராவணனுக்கும் ஒரு சிறிய அரசியல் உரையாடலும் வாக்குவாதமும் நடைபெறுகிறது.

அங்கதன் கூறியதைக் கேட்ட இராவணன்,

''கங்கையும் பிறையும் சூடும் கண்ணுதல், கரத்து நேமி
சங்கமும் தரித்த மால், மற்று இந்நகர் தன்னைச் சாரார்;
அங்கவர் தம்மை அன்றி, மனிதனுக்காக அஞ்சாது
இங்கு வந்து இதனைச் சொன்ன தூதன் நீ யாவன்? என்றான்

இதில் இராவணனுடைய ஆணவமும் அகந்தையும் தன்னகங்காரமும் தொனிப்பதைக் காணலாம். இதற்கு ஈடாகவே அங்கதன் பதில் கூறுகிறான்.

''இந்திரன் செம்மல், பண்டு ஓர் இராவணன் என்பான் தன்னைச்
சுந்தரத் தோள்களோடும், வாலிடைத் தூங்கச் சுற்றிச்
சிந்துரக் கிரிகள் தாவித் திரிந்தனன், தேவர் உண்ண
மந்திரப், பொருப்பால் வேலைக் கலங்கினான், மைந்தன்; என்றான்''

அதைக் கேட்ட இராவணன், உந்தை என் துணைவன், எனக்கு உற்ற நண்பன் உன் தந்தையைக் கொன்றவன் பின்னே சென்று

அவனுக்குத் தூதன் ஆதல் நிந்தனைக் குரியதல்லவா, நல்ல வேளையாக இங்கு என்னிடம் வந்தாய், மைந்த,

''தாதையைக் கொன்றான் பின்னே
தலை சுமந்து இருகை, நாற்றிப்
பேதையன் என்ன வாழ்ந்தாய்!
என்பது ஓர் பிழையும் தீர்ப்பாய்!
சீதையைப் பெற்றேன்! உன்னைச்
சிறுவனும் ஆகப் பெற்றேன்;
ஏது எனக்கு அரியது? என்றான்
இறுதியின் எல்லை கண்டான்''

மேலும் அந்த மனிதர்கள் இன்று நாளை அழியப் போகிறார்கள் உனது அரசை உனக்குத் தந்தேன். ஆளுதி ஊழி காலம். மன்னவனாக யானே உனக்கு மகுடம் சூட்டுவேன் என்றும் ஆசை வார்த்தை கூறினான். இந்த உரையாடலின் போது ''சீதையைப் பெற்றேன்'' என்று இராவணன் சீதையின் நினைவை விடவில்லை.

இராவணன் கூறியதைக் கேட்டு அங்கதன் கை கொட்டிச் சிரித்து,

''அங்கதன் அதனைக் கேளா, அங்கையோடு அங்கை தாக்கித்
துங்கவன் தோளும் மார்பும் இலங்கையும் துளங்க நக்கான்,
இங்கு நின்றார்கட்கு எல்லாம் இறுதியே என்பது உன்னி,
உங்கள் பால் நின்றும் எம்பால் போந்தனன் உம்பி, என்றான்''

''வாய்தரத்தக்க சொல்லி, என்னை உன் வசம்செய்வாயேல்
ஆய்தரத் தக்கது அன்றோ? தூதுவந்து அரசது ஆள்கை,
நீதரக் கொள்வேன் யானே, இதற்கு இனி நிகர்வேறு எண்ணின்,
நாய்தரக் கொள்ளும் சீயம் நல் அரசு' என்று நக்கான்''

என்று கூறி ஏளனமாகச் சிரித்தான்.

இராவணன் கோபம் அடைந்து வந்தது பகர்தி என்று கூறினான். அங்கதன் தான் வந்த காரியத்தை அறிவித்தான்.

''கூவியின்று என்னை 'நீ போய்த் தன்குலம் முழுதும் கொல்லும்
பாவியை அமருக்கு அஞ்சி அரண் புக்குப் பதுங்கினானைத்
தேவியை விடுக! அன்றேல் செருக்களத்து எதிர்ந்து தன் கண்
ஆவியை விடுக! என்றான் அருள் இனம் விடுகிலாதான்!''

''பருந்துணப் பாட்டியாக்கை படுத்த நாள், படைஞரோடும்
மருந்தினும் இனிய மாமன் மடிந்த நாள், வனத்துள் வைகி
இருந்துமி வந்த தங்கை மூக்கும் வெம் முலையும் எம்பி
அரிந்த நாள், வந்திலாதான் இனிச் செய்யும் ஆண்மை உண்டோ?

''கிளையோடும் படைஞரோடும், கேடு இலா உயிர் கட்கு எல்லாம்
களை எனத் தம்பிமாரை வேரொடும் களையக் கண்டும்,
இளையவன் பிரிய மாயம் இயற்றி, ஆயிழையை வெளவும்
வளை �எயிற்று அரக்கன் வெம் போர்க்கு இனி எதிர் வருவது உண்டோ?

"ஏந்திழை தன்னைக் கண்ணுற்று, எதிர்ந்தவர் தம்மை எற்றிச்
சாந்து எனப்புதல்வன் தன்னைத் தரையிடைத் தேய்த்துத் தன் ஊர்
காந்து எரி மடுத்துத்தானும் காணவே கடலைத் தாவிப்
போந்தபின் வந்திலாதான் இனிப் பொரும் போரும் உண்டோ?"

"என்றிவை இயம்பிவா என்று ஏவினன் என்னை; எண்ணி
ஒன்றுனக்கு உறுவது உன்னித் துணிந்துரை, உறுதி பார்க்கின்
துன்று இரும் குழலை விட்டுத் தொழுது வாழ்; சுற்றத்தோடும்
பொன்றுதி ஆயின் என்பின் வாயிலில் புறப்படு' என்றான்''

என்று அங்கதன் தூதுரைத்தான் இதைக் கேட்டதும் இராவணன் பெரும் சினம் கொண்டு ''அவனைப் பற்றுமின், எற்றுமின்" எனக் கத்தினான்.

தன்னைப் பிடிக்க வந்தவர்களைக் கொன்று விட்டு வான் வழியே வந்து இராமனின் பாதங்களை வணங்கி நின்றான்.

அங்கதன் தனது தூதுரையில் பழைய நிகழ்ச்சிகளை யெல்லாம் நினைவூட்டி இராவணனுடைய இழி செயல்களை நினைவூட்டி தேவியை விடுக அன்றேல் ஆவியை விடுக என்ற கூறிவிட்டு இராமனிடம் வந்து,

அரக்கனிடம் எத்தனை கூறியும் அவன் சீதை மீதுள்ள ஆசையை விடவில்லை, ''மூர்க்கன் முடித்தலை அற்ற போது அன்றி ஆசை அறான்'' என்று தூது சென்ற செய்தியைக் கூறி முடித்தான்.

கம்பன் இங்கு ஒரு அருமையான போர்கால அரசியல் காட்சியைக் காட்டுவதைக் காண்கிறோம்.

24. இன்று போய் போருக்கு நாளை வா

யுகப் போர் தொடங்கியது. உலகப் புகழ் பெற்ற இராம இராவண யுத்தம் இலங்கைக் களத்தில் தொடங்கியது. அந்தப் போர்க்களக் காட்சிகளைக் கம்பநாடர் மிக அற்புதமாக விளக்கிக் கூறுகிறார்.

இராவணனே நேரடியாகப் போருக்கு எழுந்தான். முதல் நாள் போர் உக்கிரமாக நடந்தது. இராமனும் போர்க் கோலம் பூண்டான். அன்றைய போர்க்களக் காட்சியைக் கவிச் சக்கரவர்த்தி கம்பர் மிகச் சிறப்பாகச் சித்தரித்துக் காட்டுகிறார்.

வானரர்களுக்கும் அரக்கர்களுக்கும் கடும் போர் நடைபெற்றது. போர்க்களம் முழுவதும் சிவப் பேரியது. அரக்கர் படையில் பெரும் சேதங்கள் எற்பட்டன. சுக்கிரீவன், நீலன், அங்கதன் மாருதி முதலிய வானரத் தலைவர்கள் கடும் போர் புரிந்து அரக்கர் படைகளைக் கலக்கினர்.

இராவணன் போர்க் களத்திற்கு வருகிறான் என்பதை அறிந்த இராமன் ‘‘வாங்கினென் சீதையை என்னும் வன்மையால், தீங்குறு பிரிவினால் தேய்ந்த தேய்வு அற வீங்கின ஆரியன் வீரத்தோள்களே” என்று கூறும் படியான வேகத்துடன் போர்க் கோலம் பூண்டான் என்பதாகக் கம்பநாடர் கூறுகிறார்.

சுக்கிரீவன், மாருதி ஆகியோர் இராவணனுடன் கடும்போர் புரிந்து சோர்வடைந்தனர். இலக்குவன் புகுந்து இராவணனை எதிர்த்துக் கடும் போர் புரிந்தான். இராவணன் இலக்குவனுடைய அம்புகளைத் தடுத்து அவனுடைய அம்புப் புட்டியை அறுத்தான். உடனே மாருதி தலையிட்டு அரக்கனுடன் மற்போர் புரிந்தான். மாருதியால் குத்துண்ட இராவணன் தள்ளாடினான். இராவணனும் மாருதியின் மார்பில் பலமாகக் குத்தினான். மாருதியும் தள்ளாடினான்.

மீண்டும் இலக்குவன் தலையிட்டு நீண்ட நேரம் இராவணனை எதிர்த்துக் கடும்போர் செய்தான். இராவணன் இலக்குவ னுடைய போர்த் திறனைக் கண்டு ஆச்சரியப்பட்டான். தானும் மேகநாதனும் தான் அவனுடைய போர்த் திறனுக்கு சமமானவர்கள் என்று கருதினான். விற் போரில் இலக்குவனை வீழ்த்த முடியாது என்று அறிந்த இராவணன் தனது மிக வலுவான ஒரு வேற் படையை இலக்குவன் மீது ஏவினான். அந்த சக்தி ஆயுதத்தினால் தாக் குண்டு இலக்குவன் சாய்ந்தான். மாருதி தலையிட்டு இலக்கு வனைத் தூக்கிச் சென்று விட்டான்.

இராகவன் போருக்குப் புறப்பட்டான். இராமனுக்கும் இராவணனுக்கும் கடும் போர் நடந்தது.

இராமன் தனது சக்தியில்லா கணைகளால் இராவணனுடைய வில், தேர், குதிரைகள், முகம், கொடி, மார்பு கவசம் ஆகியவைகளை யெல்லாம் அழித்தான். இராவணனுடைய மற்றொரு கணை அக்கருவியை மறு தினமும் வீழ்த்தியது.

இராவணன் நிராயுத பாணியாக வெறும் கையுடன் நின்றான்.

''சிறையில் வைத்தவள் தன்னை விட்டு உலகினில், தேவர் முறையில் வைத்து, நின் தம்பியை இராக்கதர் முதல் பேர் இறையில் வைத்து அவற்கு ஏவல் செய்து இருத்தியேல், இன்னும் தலையில் வைக்கிலேன் நின்தலை வாளியின் தடிந்து''

என்று போர்க்களத்தில் நிராயுத பாணியாக வெறுங்கையோடு நிற்கும் இராவணனின் மனநிலை கம்பன் மிக அற்புதமாக எடுத்துரைக்கிறார்.

முதல் நாள் போரில் இராவணன் தோல்வி அடைந்து விட்டான். அனைத்து ஆயுதங்களையும் இழந்தான். சரணடைவதாக இருந்தால் அதற்கு சம்மதிப்பதாக இருந்தால் அதற்குரிய நிபந்தனைகளை விதித்தான், இராமன். அதற்கு சம்மதம் இல்லாவிட்டால் வீடு திரும்பி மறுநாள் போருக்கு வரலாம் என்று கோசல நாடுடைய வள்ளல் இராமபிரான் கூறுகிறார்.

வில்லையும் வாளையும் தேரையும் மணி முடியையும் இழந்து வெறும் கையோடு நின்ற இராவணனிடம் ''சிறையில் உள்ளவளை விடுதலை செய்து தேவர்களை முறையாக நடத்தி, உனது தம்பி வீடணனை இலங்கைக்கு அரசனாக்கி அவருக்கு நீ ஏவல் செய்து இருப்பாயாகில் உன்னை விட்டு விடுகிறேன். நீ பிழைத்துப் போகலாம் இல்லையெனில் நீ இப்போது நிராயுத பாணியாக வெறும் கையுடன் நிற்கிறாய் எனவே நீ இன்று போய் போர்க்கு நாளை வா'' என்று கூறி இராமன் இராவணனை விட்டிற்கு அனுப்பிவைத்தான்.

இங்கு இராமனுடைய கருணை உள்ளத்தைப் பற்றிச் குறிப்பிடும் கம்பன், ''இன்று போய் போர்க்கு நாளை வா'' எனுஞ்சொல்லின் நாகு இளம் கமுகின் வாளைதாவறு கோசலை நாடுடை வள்ளல்'' என்று குறிப்பிடுகிறார்.

வள்ளல் தன்மை வரிவேலரிடம் இருக்க முடியாது. வளமானவர்களிடம் தான் இருக்க முடியும். யாரிடம் இருக்கிறதோ

அவர்கள் தான் கொடுக்கவும் முடியும் யாரிடம் வல்லமை இருக்கிறதோ அவரிடமுள்ள இரக்கத்திற்குத் தான் அர்த்தமுண்டு. எனவே தான் வளமும் வாழ்வும் நிறைந்த கோசலை நாட்டையுடைய வள்ளலாகிறான் இராமன். அத்துடன் போர்க்களத்தில் அவன் தனது எதிரியை நிராயுத பாணியாக்கிய வல்லமை மிக்க வீரனாக பலத்துடன் நிற்கிறான். வீரமும் அறிவாற்றலும் மிக்கவனாக நிற்கிறான்.

ஏற்கனவே இராமன் அனுமனுடைய தோள்களில் அமர்ந்து போர் செய்யப் புறப்பட்டதைப் பற்றிக் கூறும் போது, பாற்கடலைப் போல் நின்றான் மாருதி அதன் அகத்துறையும் நாதன் திருமாலை ஒத்தான் இராமன் என்றும், வேதம் ஒத்தான் மாருதி, வேதத்தின் முடிவிலே உள்ள அறிவை ஒத்தான் இராமன், என்று கம்பன் சிறப்பாகக் கூறிப்பிடுகிறார்.

எனவே போர் வலுவும் அறிவு வளமும் நிறைந்த கோசல நாடுடைய வள்ளல் இராமபிரான், எல்லாம் இழந்த இராவணன் மீது இரக்கம் கொண்டு, அவன் இந்த நிலையிலாவது திருந்துவானா என்பதை உலகறியச் செய்ய ''இன்று போய் போருக்கு நாளை வா'' என்று கூறி அனுப்பினான்.

இந்த நிகழ்ச்சியில் ஒரு இராஜ நீதியும் நிறைந்திருக்கிறது. அரசியல் அறம் அமைந்திருக்கிறது. யுத்த தருமமும் அடங்கியிருக்கிறது.

சீதையை விட்டு விடும்படி இராவணனிடம் இதற்கு முன் பலரும் பல கட்டங்களிலும் எடுத்துக் கூறிவிட்டார்கள்.

சிவனும், திருமாலும் கூட அனுமதியின்றி உள்ளே போக முடியாத இலங்கை நகருக்குள், அத்தனை காவல்களையும் கடந்து அனுமன் நகருக்குள் சென்று, அசோக வனத்தில் சீதையைக் கண்டு விட்டு, இலங்கையின் சோலைகளையும் செடி கொடிகளையும் சிதைத்து, தன்னை எதிர்க்க வந்த அரக்கர்களைக் கொன்று, இராவணனுடைய சபைக்குச் சென்று இராமனுடைய தூதனாக நின்று, சீதையை விட்டு விடும்படி அரக்கனுக்கு அறிவுரை கூறினான்.

இராவணனுடைய மந்திராலோசனை சபையில் கும்பகருணன், வீடணன், மாலியவான், முதலானோரும் இலங்கை வேந்தனுக்கு சீதையை விட்டு விடும்படி அறிவுரை கூறினர்.

போர் தொடங்கும் முன்பு அங்கதனைத் தூதனுப்பி இராமன் ''தேவியை விடுதியோ அன்றேல் ஆவியை விடுதியோ'' என்று கூறிப் பார்த்தான்.

இப்போது போர்க்களத்தில் தோல்வி கண்டு தனது ஆயுதங்கள் படைக்கலன்கள் அனைத்தையும் இழந்து நிராயுத பாணியாக நிற்கும் போது மீண்டும் இராவணனுக்குத் தனது தவறுகளைத் திருத்திக் கொள்வதற்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

இங்கு ஒரு வலுவான தர்ம நியாயம், அரசியல் நீதி, சமுதாய நீதி, ஒரு சாதாரண மனித நியாயம் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. ஒரு மனிதன் அவன் ஒரு வல்லமை மிக்க வல்லரசனானாலும் அவன் செய்துள்ள தவறுகளைத் திருத்திக் கொள்வதற்கு வாய்ப்புகள் அளிக்கப்படுவதும் எல்லா வாய்ப்புகளுக்குப் பின்னரும் திருத்திக் கொள்ளாவிட்டால் கடைசியாக வேறு வழியின்றிக் குற்றவாளியைத் தண்டிக்க வேண்டியதிருக்கிறது என்பதை இராமாயண மகா காவியத்தின் மூலம் அறிகிறோம்.

கம்பநாடர் இக்கருத்துக்களை மிக நயமாக மிக நுட்பமாகத் தனது மகா காவியத்தில் இலக்கிய நயத்துடன் தமிழ் நயத்துடன் எடுத்துக் காட்டுவதைக் காண்கிறோம்.

❖❖❖

25. நாசம் வந்து உற்ற போதும் நல்லதோர் பகையைப் பெற்றேன்

இராவணன் போர்க் களத்தை விட்டு வெறுங்கையோடு இலங்கை திரும்பியதைக் கம்பன் தனது உலகப் புகழ் பெற்ற அற்புதமான தமிழ்க் கவிதைகளில் வடித்துக் கூறுகிறார். இப்பாடல்களைப் பாடாத கவிஞர்களில்லை. படிக்காத புலவர்களில்லை. விளக்கிக் கூறாத நூலாசிரியர்கள் இல்லை.

வாரணம் பொருத மார்பும், வரையினை எடுத்த தோளும்,
நாரத முனிவற்கு ஏற்ப நயம்பட உரைத்த நாவும்,
தாரணி மௌலி பத்தும், சங்கரன் கொடுத்த வாளும்,
வீரமும் களத்தே போக்கி, வெறுங்கையோடு இலங்கை புக்கான்''

என்று கம்பன் கூறுகிறார். இன்னும்

''மாதிரம் எவையும் நோக்கான்; வளநகர் நோக்கான், வந்த காதலர் தம்மை நோக்கான்; கடல் பெரு சேனை நோக்கான்; தாது அவிழ் கூந்தல் மாதர் தனித் தனி நோக்கத், தான் ஓர் பூதலம் என்னும் நங்கை தன்னையே நோக்கிப் புக்கான்''

என்னும் அற்புதமான கருத்துக்கள் நிறைந்த கவிதைகளில் இராவணன் தனது இருக்கை திரும்பியதைக் கம்பன் மிக அழகாகக் குறிப்பிடுகிறார்.

இராவணன் அஷ்டதிக்கு யானைகளையும் எதிர்த்துப் போராடிய வலுவான மார்பு கொண்டவன், கைலை மலையையேத் தனது தோள்களில் தாங்கிய தோள்வலி கொண்டவன், இராவணன் இசையில் வல்லவன், அதில் நாரதனுக்கே ஈடான நாவன்மை கொண்டவன், அழகிய முடிகள் பத்தும் கொண்டவன், சங்கரன் கொடுத்த தெய்வீக வாள் அவன் கையில் இருக்கிறது. அந்த வாளைக் கொண்டு தான், அவன் சீதையைக் தூக்கிக் கொண்டு வந்த போது தன்னை எதிர்த்த சாடாயுவின் வலுவான சிறகுகளை வெட்டி வீழ்த்தினான்.

இராவணன் தனது மார்பின் வலிமை, தோளின் வலிமை, நாவின் வன்மை, மணி முடிகள், வாள் வலிமை, வீரம் இவைகளை யெல்லாம் போர்க்களத்தில் இழந்து விட்டு வெறுங்கையோடு இலங்கை புகுந்தான் என்னும் ஆழ்ந்த கருத்துக்கள் நிறைந்த இப்பாடல் தமிழுலகில் பிரசித்தி பெற்றதாகும்.

முதல் நாள் போருடன் இராவணனுடைய வீரம் அழிந்து போயிற்று ஆயினும் போர் தொடர்கிறது.

எட்டுத்திசைகளிலும் உள்ள அரக்கர் படைகளை யெல்லாம் அழைக்கும்படி ஆணையிட்டு விட்டு இராவணன் தனது படுக்கையில் போய் படுத்தான். உரக்கம் கொள்ளவில்லை. சீதையைப் பற்றிய நினைவிருந்த நெஞ்சில் நாணம் நிறை கொண்டது. கவலை சுற்றியது. அவன் மானத்தை இழந்த நிலையில் இருந்தான் என்பதை,

''பண்நிறைந்த பவளச் செவ்வாய்ப் பைந்தொடிச் சீதை என்னும்
பெண் இறைகொண்ட நெஞ்சில், நாண் நிறைகொண்ட பின்னர்
கண் இறை கோடல் செய்யான்; கையறு கவலை சுற்ற
உள் நிறை மானந்தன்மை உமிழ்ந்து எரி உயிர்ப்பது ஆனான்''

என்று கம்பர் குறிப்பிடுகிறார்.

படுக்கையில் கிடந்த இராவணன் அவமானத்தால் பொங்கினான். நாணம் நிறைந்து கிடந்தான். இந்த நாணம் ஏன் அவனிடம் நிறைந்தது?

''வான் நகும், மண்ணும் எல்லாம் நகும், மணிவயிரத் தோளான்
நான் நகு பகைஞர் எல்லாம் நகுவர் என்று நாணான்

வேல் நகு நெடுங்கண், செவ்வாய், மெய் இயல் மிதிலை வந்த சானகி நகுவள் என்றே மானத்தால் சாம்புகின்றான்''

என்று கவிச்சக்கரவத்தி கூறுகிறார்.

போர்க்களத்தில் அவமானகரமான தோல்வி ஏற்பட்ட பின்னரும் இராவணன் சீதையின் நினைவை விடவில்லை. அவன் போர்க் களத்திலிருந்து திரும்பி வந்து படுக்கையில் கிடந்த தன்மையைப் பார்த்து மாலியவான், ''எப்போதும் வாடாத முகத்தைப் பெற்ற நீ இப்போது இவ்வளவு வாட்டத்தைக் கொண்டிருக்கிறாய். போரில் தோற்று விட்டாயா? மன வருத்தம் ஏன்? உன் தோள்களும் வாட்டம் கொண்டிருக்கின்றனவே, என்ன நடந்தது? என விவரம் அறிந்த மாலியவான் கேட்கிறான்.

இதுவரை இராம இலக்குவர்களை அற்ப மனிதர்கள் என்று இகழ்ந்து கொண்டிருந்த இராவணன் இப்போது இளையவன் (இலக்குவன்) போர்த்திறனையும் பழுதில்லாத காகுத்தன் (இராமன்) பகழியின் (வில்லின்) சிறப்பு பற்றியும் புகழ்ந்து பேசுகிறான். ''நாசம் வந்துற்ற போதும் நல்லதோர் பகையைப் பெற்றேன்'' என்று கூறுகிறான்.

மாலியவான் மீண்டும், இராவணன் மீது அன்பும் அனுதாபமும் கொண்டு பேசுகிறான். ''வரக்கூடிய விளைவுகளைக் குறித்து நான் எவ்வளவோ எடுத்துக் கூறியும் நீ கேட்கவில்லை. உள்ளத்தை வருத்து வதாயினும் உண்மை நிலைகளை உணர வேண்டும். கிளை தரு சுற்றம், வெற்றி, கேண்மை, கல்வி, செல்வம் அனைத்தும் கழிவது காண்பாய். இப்போதாவது அந்த சீதையின் நினைவை விட்டு விடு, என்று மிக்க விசனமும் கவலையும் கொண்டு எடுத்துக் கூறுகிறான்.

இடையில் ஆன்ற மாயைகள் பலவும் வல்ல மகோதரன் புகுந்து மாலியவான் கூறுவதை மறுத்தும் தடுத்தும், ''தேவியை விடுதியாயின் உன் புகழ் அழிந்து போகும். நீ கவலைப்படாதே உனது அருமைத் தம்பி கும்பகருணன் இருக்கிறான். அவன் உனக்கு வெற்றி தேடித் தருவான் என்று கூறி மீண்டும் தெம்பூட்டுகிறான். மகோதரன் பேச்சைக் கேட்ட இராவணன் மகிழ்சியடைந்தான். கும்பகருணனை எழுப்பிப் போரைத் தொடருவதற்கு ஏற்பாடு செய்து அதற்கான உத்தரவுகளை விடுத்தான்.



26. குலத்து மானம் தீர்ந்திலன்

மகோதரன் கூறியவற்றைக் கேட்டு மகிழ்ச்சியடைந்த இராவணன் தனது உடன் பிறப்பான பின்னோன் கும்பகருணப் பெயருடைய மாவீரனை பெருந்தூக்கத்திலிருந்து எழுப்பி, உணவூட்டி, ஆயுத பாணியாக அலங்கரிக்கச் செய்தான்.

பல்கலன் பூட்டுவதை உணர்ந்த கும்பகருணன், என்ன நேர்ந்துள்ளது என்று கேட்க, வானரப் பெரும்படையும் அந்த மானுடரும் கோநகரின் புறம் சுற்றி வளைத்துள்ளனர். முதல் வெற்றியும் பெற்று விட்டனர். நீ போய் அவர்களை ஒழிக்க வேண்டும் என்று இராவணன் தனது தம்பியைக் கேட்டுக் கொண்டான்.

கும்பகருணன் தனது அண்ணனுக்கு ஏற்பட்ட நிலையைக் கண்டுக் கவலை கொள்கிறான்.

"ஆனதோ வெம்சமம்? அலகில் கற்புடையச்
சானகி துயர் இனும் தவிர்ந்தது இல்லையோ
வானமும் வையமும் வளர்ந்த உனது வான் புகழ்
போனதோ? புகுந்ததோ பொன்றும் காலமே?"

"கிட்டியதோ செருக்கிளர் பொன் சீதையைச்
சுட்டியதோ? முனம் சொன்ன சொற்களால்
திட்டியின்விடம் அன்ன கற்பின் செல்வியை
விட்டிலையோ? இது விதியின் வன்மையே!"

சீதை காரணமாகப் போர் மூண்டதோ? நான் முன்னர் கூறிய சொற்களின் படி திட்டியின் விடம் அன்ன கற்பின் செல்வியை விட்டிலையோ? என்று இன்னும் பலவகையில் தனது அண்ணனுடைய தவறான செயல்களைச் சுட்டிக் காட்டிப் பேசுகிறான். மேலும் கூறுகிறான்

தையலை விட்டு அவன் (இராமன்) சரணம் தாழ்ந்து நின் அய்யறு தம்பியோடு அளவளாவிக் கொள்ளுதல் நல்லது. அதுவே உய்யும் வழியுமாகும். அது அல்லாவிட்டால், தனித்தனியாகவும் பகுதி பகுதியாகவும் நமது படைகளைப் போருக்கு அனுப்பி பலியிடுவது சிறந்த போர்த்தந்திரமும் ராஜ தந்திரமும் ஆகாது, என்று கும்பகருணன் கூறுகிறான்.

கும்பகருணன் ஆரம்பம் முதலே இராவணன் சீதையின் பால் வைத்துள்ள ஆசைப் பெருங்காதலையும், அதற்காக அவளைக் கவர்ந்து வந்த செயலையும் மறுத்தே பேசி வந்துள்ளான். ஆயினும் கடைசியில் அண்ணனுடைய ஆணைக்குக் கட்டுப்பட்டு நின்று விடுகிறான். இப்போது அண்ணனின் ஆணையின்படி போர்க் களத்திற்குச் செல்கிறான்.

கும்பகருணன் பெரும்படையுடன் போர்க்களத்தை நோக்கி வருகிறான். இவன் யார் என்று வீடணனிடம் இராமன் கேட்கிறான்.

''ஆழியாய் இவன் ஆகுவான்,
ஏழைவாழ்வுடை எம் முனோன்,
தாழ்விலா ஒரு தம்பியோன்,
ஊழிநாளும் உறங்குவான்''

என்று கூறி அத்துடன் இவன்,

''நீ செய்வது தருமம் அல்ல, இதனால் உனது உயிருக்கும் ஆபத்து வரும் என்று இன்னும் பல நல்லுரைகள் கூறியும் இராவணனுக்கு உணர்த்திப் பார்த்தான். இராவணன் கேட்கவில்லை. இருப்பினும் தன் அண்ணனுக்காக உயிர் விடுவதற்குப் போர்க்களத்திற்கு வந்திருக்கிறான்'' என்று வீடணன் இராமனிடம் கூறுகிறான்.

''மறுத்த தம்முனை வாய்மையால்
ஒறுத்தும் ஆவது உணர்த்தினான்,
வெறுத்தும் மாள்வது மெய் எனா
இறுத்து நின் எதிர் எய்தினான்''

என்று கும்பகருணன் போர்க்களத்துக்கு வந்துள்ளது பற்றி வீடணன் குறிப்பிடுகிறான்.

போர்க்களத்தில் வந்து நின்ற கும்பகருணனிடம் வீடணன் சென்று தன்னுடன் இராமனிடம் வந்துவிடும்படி கேட்டான், அவன் அதை மறுத்து அவ்வீடணனிடம் நீ ஏன் இராமனை விட்டு என்னிடம் வந்தாய், பிறர் மனை நோக்கும் எங்களிடம் உறவு கொள்ளலாமா? சாதியின் புன்மையை இன்னும் நீ தவிர்ந்திலையோ என்று கூறி உச்சி மோந்து அவனைத் திருப்பி அனுப்பிவிடுகிறான்.

போர்க்களத்தில் வீடணன் கும்பகருணன் சந்திப்பு ஒரு அற்புதமான காட்சியாகும். இலங்கை சகோதரர்களில் வீடணனும் கும்பகருணனும் தர்மத்தை வலியுறுத்திப் பேசினார்கள்.

இருவருக்கும் அண்ணன் இராவணனிடம் மிகுந்த பக்தியும் மரியாதையும் இருந்தது. இருவரும் இராவணன் சீதையை அபகரித்து வந்ததை மறுத்துப் பேசுகிறார்கள். சீதையை விட்டு விடும்படி இருவரும் கூறுகிறார்கள். ஆயினும் நடை பெற்ற விவாதத்தின் வாக்கு வாதத்தின் முடிவாக வீடணன், இராவணனை விட்டு வெளியேறி இராமனிடம் வந்து சேர்ந்து விடுகிறான். கும்பகருணன் இராவணனுக்காகப் போர்க்களத்திற்கு வந்து உயிர் விடுகிறான்.

போர்க் களத்தில் வீடணனும் கும்பகருணனும் சந்தித்துப் பேசுகிறார்கள். இருவருக்குமிடையில் சகோதர பாசம் மிகுந்த ஒரு அற்புதமான உரையாடல் நடைபெறுகிறது. அவ்வுரையாடலில் அரசியல் நெறி, ஆழ்ந்த சகோதர பாசம், நீதி நெறி, ஒழுக்க நெறி, அற நெறி பற்றிய பல கருத்துக்களும் பேசப்படுகின்றன. ஆயினும் இருவரும் பிரிந்து விடுகின்றனர்.

கும்பகருணன் தருமத்தை உணர்ந்தவன் என்பது கருதி சுக்கிரீவனும் இராமனும் கலந்து பேசி வீடணனிடம் கும்பகருணனை சந்தித்துப் பேசுமாறு கூறினர். வீடணனும் சம்மதித்துத் தனது முன்னோனை சந்திக்கிறான்.

தன் அருகில் வந்த வீடணனைக் கட்டித் தழுவி உச்சி மோந்து, நீ ஏன் என்னிடம் வந்தாய் நீ ஒருவனாவது உய்ந்தாய் என்று மகிழ்ச்சி கொண்டிருந்தேன். நீ ஏன் என்னிடம் திரும்பி வந்தாய். நீ இராமனிடம் அபயம் பெற்றாய். அமரராலும் பெற முடியாத ஒரு பேற்றை நீ பெற்று விட்டாய் என்று பெருமகிழ்ச்சியடைந்திருந்தேன். நீ கவிஞரின் அறிவு மிக்கவன். சாகும் தறுவாயில் உள்ள எங்களிடம் எந்தக் குற்றமும் செய்யாத நீ ஏன் வந்தாய். நீ அமுதம் உண்பவன், எங்களுடன் நஞ்சுண்ண வரலாமா?

நமது குலம் அழிந்து விட்டாலும் நீ ஒருவனாவது நின்று புலத்தியன் மரபைக் காப்பாய் என்றிருந்தேன் நீ ஏன் திரும்பி வந்தாய். என் வாய் உலர்கிறது.

''அறப் பெரும் துணைவர் தம்மை
'அபயம்' என்று அடைந்த நின்னைத்
துறப்பது துணியார், தங்கள் ஆருயிர் துறந்த போதும்,
இறப்பு எனும் பயத்தை விட்டாய்! இராமன் என்பானைப் பற்றிப்
பிறப்பு எனும்புன்மை தீர்ந்தாய்!
நினைந்து என் கொல் பெயர்ந்த வண்ணம்''

நீ ஏன் திரும்பி வந்தாய்?

அறம் என நிற்கும் இராமன் பால் நீ சேர்ந்து விட்டாய். பாவங்களின் பிரிவுகளாகிய திரிபு, ஐயம், அறியாமை ஆகியவற்றையும் மற்றும் தீமை என்பவை அனைத்தையும் இம்மையிலேயே நீக்கிய செல்வனே ''பிறன் மனை நாடிய எங்களிடம் உறவு கொள்ள வரலாமா?''

''நீதியும், தருமம் நின்ற நிலைமையும், புலமைதானும்,
ஆதி அம் கடவுளாலே அருந்தவம் ஆற்றிப் பெற்றாய்,
வேதியர் தேவன் சொல்லால், விளிவு இலா ஆயுப் பெற்றாய்!
சாதியின் புன்மை இன்னும் தவிர்ந்திலை போலும் தக்கோய்!''

எல்லோருக்கும் இறைவனான இராமனும், அவன் தம்பியும் மற்றவர்களும் வெற்றியும் நிற்கும்இடத்தை விட்டு கூற்றமும் எம்மைக் கொல்லும் விதியும்தோல்வியும் நிறைந்த எங்கள் பக்கம் ஏன் வந்தாய்?

''அய்ய நீர் அயோத்தி வேந்தற்கு அடைக்கலம் ஆகி அங்கே
உய்கிலை என்னில் மற்று இவ் அரக்கராய் உள்ளோம் எல்லாம்
எய் கணை மாரியாலே இறந்து பாழ் முழுதும் பட்டால்,
கையினால் எள் நிர் நல்கிக் கடன் கழிப்பாரைக் காட்டாய்?''

ஈமக்கடன் செய்ய யார் இருக்கிறார்கள். எனவே நீ ஏன் இங்கு வந்தாய். எனவே நீ இங்கு வர வேண்டாம்.

''வருவதும் இலங்கை மூதூர்ப் புலையெலாம் மாண்ட பின்னைத்
திருவுரை மார்பனோடும் புகந்து, பின் என்றும் தீராப்
பொருவரும் செல்வம் துய்க்கப் போதுதி விரைவின், என்றான்
கருமம் உண்டு உரைப்பது' என்றான், உரை! எனக் கழறல் உற்றான்''

என்று விரைவில் தன்னை விட்டுப் போகும்படி கும்பகருணன் வீடணனைக் கேட்டுக் கொள்கிறான்.

வீடணன், கும்பகருணனிடம், ''ஒரு செய்தியை உன்னிடம் சொல்லி உன்னை என்னுடன் அழைத்துப் போவதற்காக வந்தேன். இராமன் உனக்கும் அபயம் அளிப்பான்.

''எனக்கு அவன் தந்த செல்வத்து, இலங்கையும் அரசும் எல்லாம்
நினக்கு நான் தருவன்; தந்து, உன் ஏவலில் நெடிது நிற்பேன்;
உனக்கு இதின் உறுதி இல்லை; உத்தம! உன் பின் வந்தேன்
மனக்கு நோய் துடைத்து, வந்த மரபையும் விளக்கு! வாழி!''

''தீயவை செய்வர் ஆகில், சிறந்தவர், பிறந்த உற்றார்,
தாய் அவர், தந்தைமார் என்று உணர்வரோ தருமம் பார்ப்பார்? நீ
நீ அவை அறிதி அன்றோ? நினக்கு யான் உரைப்பது என்னோ?
துயவை துணிந்த போது பழிவந்து தொடர்வது உண்டோ?''

''தீவினை ஒருவன் செய்ய, அவனொடும் தீங்கு இலாதோர்
வீவினை உறுதல், ஐய! மேன்மையோ? கீழ்மை தானோ?
ஆய்வினை உடையை அன்றே! அறத்தினை நோக்கி, ஈன்ற
தாய்வினை செய்ய அன்றோ கொன்றனன் தவத்தின் மிக்கான்!''

என்றெல்லாம் பலவாறு நீதி நெறிகளையும் கருத்துக்களையும் எடுத்துக் கூறி

''வேதநாயகனே உன்னைக் கருணையால் வேண்டிவிட்டான்,
காதலால், என்மேல் வைத்த கருணையால்; கருமம் ஈதே;
ஆதலால் அவனைக்காண அறத்தோடும் திறம்பாது, ஐய!
போதுவாய் நீயே! என்னப் பொன் அடி இரண்டும் பூண்டான்''

இவ்வாறு கும்பகர்ணனையும் தன்னுடன் வந்து இராமனுடன் சேரும்படி வீடணன் வேண்டினான்.

இங்கு தர்மத்தின் பக்கம் சேர்வதா? அதர்மத்தின் பக்கம் நிற்பதா? என்னும் பிரச்சனை எழுகிறது. இதில் தாய், தந்தை, உடன் பிறந்தோர் கூற்றம் என்பதில்லை. குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை என்னும் நீதி நெறி எழுகிறது. தவறு கண்டபோது தாயையே கொன்றனன் தவத்தின் மிக்க பரசுராமன் என்றும் எடுத்துக் காட்டப்படுகிறது.

எத்தனை தான் தர்மம் பேசினாலும் தர்மத்தை உணர்ந்திருந்தாலும் கும்பகருணன் தனது நிலையிலிருந்து விலகவில்லை. நான் உன்னுடன் வர முடியாது. நீ இராமனிடம் போ, போய் விடு, அது உனக்குத் தகும் என்று கும்பகருணன் கூறுகிறான்.

''நீர்க் கோல வாழ்வை நச்சி,
நெடிது நாள் வளர்த்துப் பின்னைப்
போர்க்கோலம் செய்து விட்டாற்கு
உயிர் கொடாது அங்குப் போகேன்
தார்க் கோல மேனி மைந்த!
என் துயர் தவிர்த்தியாயின்

கார்க்கோல மேனியானைக்
கூடுதி கடிதின் ஏகி''

என்றும்,

''மலரின் மேல் இருந்த வள்ளல்
வழுவிலா வரத்தினால் நீ
உலைவு இலாத்தருமம் பூண்டாய்;
உலகுள தனையும் உள்ளாய்;
தலைவன் நீ உலகுக்கெல்லாம்;
உனக்கு அது தக்கதே; ஆல்,
புலையுறு மரணம் எய்தல்
எனக்கு இது புகழதே ஆல்''

என்றும் கும்பகருணன் தன் நிலையை தெளிவாகக் குறிப்பிடுகிறான்.

இன்னும்

''கருத்திலா இறைவன், தீமை
கருதினால், அதனைக் காத்துத்
திருந்தலாம் ஆகின் அன்றே
திருத்தலாம், தீராது ஆயின்
பொருத்துறு பொருள் உண்டாமோ!
பொரு தொழிற்கு உரியர் ஆகி
ஒருத்தரின் முன்னம் சாதல்,
உண்டவர்க்கு உரியது அம்மா''

''தும்பி அம்தொடையல் வீரன்
சுடு கணைதுரப்பச் சுற்றும்
வெம்பு வெம் சேனையோடும்,
வேறுள கிளைஞரோடும்
உம்பரும் பிறரும் காண;
ஒருவன் மூவுலகை ஆண்டான்,
தம்பியை இன்றி மாண்டு
கிடப்பனோ தமையன் மண்மேல்''

''செம்பிட்டுச் செய்த இஞ்சித்
திருநகர்ச் செல்வம் தேறி,

வம்புஇட்ட தெரியல் எம்முன்
உயிர் கொண்ட பகையை வாழ்த்தி,
அம்பிட்டுத்துன்னம் கொண்ட
புண் உடை நெஞ்சோடு, ஐய!
கும்பிட்டு வாழ்கிலேன் யான்
கூற்றையும் ஆடல் கொண்டேன்''

என்று கும்பகருணன் தன் நிலையை மேலும் தெளிவுபட வீடணனிடம் எடுத்துக் கூறிவிட்டு நீ விரைவில் இராமனிடம் செல்வாயாக என்று கூறித் தம்பியை அனுப்பி விட்டான். வீடணனும் தமையனை வணங்கி விடை பெற்றுக் கொண்டு திரும்பினான்.

வீடணன் இராமனிடம் திரும்பி வந்து சொல்வதெல்லாம் சொல்லிப் பார்த்தேன். அவன் தன்னுடைய நிலையிலிருந்து மாறவில்லை சிறிதும் குலத்துமானம் தீர்ந்திலன்''

''எய்திய நிருதர் கோனும்
இராமனை இறைஞ்சி எந்தாய்!
உய்திறன் உடையாற்கு அன்றோ
அறன் வழி ஒழுகும் உள்ளம்
பெய்திறன் எல்லாம் பெய்து
பேசினேன்; பெயரும் தன்மை
செய்திலன்; குலத்து மானம்
தீர்த்திலன் சிறிதும், என்றான்''

இங்கு தர்மத்தின் பால் கும்பகருணன், வீடணன் ஆகிய இருவரின் நிலைபாடுகளையும் தெளிவாகக் காண்கிறோம்.

கும்பகருணன் வீரப்போர்

இராமன் தம்பி இலக்குவனுக்கும் இராவணன் தம்பி கும்பகருணனுக்கும் இடையில் கடும் போர் நடைபெறுகிறது. அப்போது கும்பகருணன் இலக்குவனிடம் ஒரு கேள்வியை விடுக்கிறான். ''எம்முடன் பிறந்தவள் ஒரு பெண் கொடி, அவள் ஒரு தவறும் செய்யவில்லை. ஆயினும் அவளுடைய கூந்தலைத் தொட்டு இழுத்தாய். அந்தக் கையைக் கிடத்துவேன்'' என்று கும்பகருணன், இலக்குவனிடம் கூறுகிறான். இங்கு ஒரு குற்றமும் இல்லாமல் அதற்கான தண்டனையும் பெற்ற ஒரு நுட்பமான கருத்து முன்வைக்கப்படுகிறது.

''பெய்தவத்தின் ஓர் பெண் கொடி எம்முடன் பிறந்தாள்,
செய்தகுற்றம் ஒன்று இல்லவள், நாசி வெம் சினத்தால்
கொய்த கொற்றவ! மற்றவள் கூந்தல்தொட்டு ஈர்த்த
கை தவத்திடைக் கிடத்துவென்; காக்குதி! என்றான்''

என்று கும்பகருணன் இலக்குவனிடம் சவால்விடுகிறான்.

இக்கேள்விக்கு இலக்குவனிடமிருந்து நேரடியான பதில் வரவில்லை. இக் கேள்விக்குச் சொல்லினால் பதில் சொல்வதற்கு இயலாது. அதற்கு வில்லினால் பதில் கூறுவோம் என்று தான் இலக்குவன் பதிலளிக்கிறான். அதாவது தன் பலத்தின் நிலையிலிருந்து பதில் வருகிறது.

''அல்லினால் நிறத்தவன், அனையது பகர
மல்லினால் செய்த புயத்தவன், மாற்றங்கள் நும்பால்
வில்லினால் சொல்லின் அல்லது, வெம்திறல் வெள்கச்
சொல்லினால் சொலக் கற்றிலம்யாம்; எனச் சொன்னான்''

என்று தான் இலக்குவன் பதில் கூறுகிறான்.

இலக்குவனை எதிர்த்துக் கும்பகருணன் கடும் போர் நடத்தினான். இலக்குவனை அரக்கர் படைகள் சூழ்ந்து கொண்டன. சுக்கிரீவன் புகுந்து கும்பகருணனை எதிர்த்தான். இருவரும் மற்போர் செய்தனர். கும்பகருணன் சுக்கிரீவனை இருகப் பிடித்து அழுத்த உணர்விழக்கச் செய்து, அவனைத் தூக்கிக் கொண்டு கோட்டை வாசலுக்கு ஓடினான். அப்போது இராமன் தலையிட்டு அவன் நெற்றி மீது இரு கணைகளை ஏவினான்.

சுக்கிரீவன் கும்பகருணனுடைய பிடியிலிருந்து விடுபட்டான். அதைக் கண்டு அனைவரும் மகிழ்ச்சியடைந்தனர். சுக்கிரீவனைக் கண்டு இராமனும் மகிழ்ச்சியடைந்தான். அது பற்றி,

''காந்து இகல் வெம் கரத்து நீங்கிய
ஏந்தலை அகமகிழ்ந்து எய்த நோக்கிய
வேந்தனும், 'சானகி இலங்கை வெம் சிறைப்
போந்தனன், ஆம்' எனப் பொருமல் நீங்கினான்''

என்று கம்பன் குறிப்பிடுகிறார்.

கும்பகருணனுக்கும் இராமனுக்கும் கடும் போர் நடந்தது. கும்பகருணன் வாளேந்திப் போர் புரிந்தான், இராமன் அவ்வாளைத் தன் கணையால் வீழ்த்தினான்.

சூலம் கொண்டு போரிட்டான். இராமன் அச்சூலத்தை வீழ்த்தினான். கும்பகருணன் இரு கரங்களால் போரிட்டான். இரு கரங்களையும் இராமன் அறுத்தான். அரக்கன் தம்பி இணையில்லா வீரத்துடன் இரு கால்களால் போரிட்டான். அவனுடைய இரு கால்களையும் இராமன் அறுத்தெறிந்தான். நெஞ்சால் தவழ்ந்து கொண்டு போரிட்டான். இராமன் அரக்கனுடைய நாசியையும் காதுகளையும் அறுத்தான்.

அப்போது அவன் மனம் வருந்தி

''அய்யன் வில் தொழிற்கு ஆயிரம் இராவணர்
அமைவிலர்; அந்தோ! யான்
கய்யும் கால்களும் இழந்தனென்; வேறு இனி
உதவலாம் துணை காணேன்;
மய்யல் நோய் கொடு முடித்தவா தான் என்றும்
வரம்பின்றி வாழ்வானுக்கு
உய்யுமாறு அரிது', என்றும் தன் உள்ளத்தின்
உணர்ந்து ஒரு துயர் உற்றான்"

தனது முன்னோன் ''காம நோய் காரணமாய் தனது ஆயுளை முடித்துக் கொண்டான். வரம்பின்றி வாழ்ந்த அவனுக்கு இனி உய்வதற்கு வழியில்லை என்று உணர்ந்து மிக்க துயரமடைந்தான் என்று கம்பநாடர் குறிப்பிடுகிறார்.



27. பெண்பால் வைத்த ஆசை நோய்

ஒரு பக்கம் இலங்கையின் கோட்டைக்கு வெளியில் போர்க்களத்தில் வானர வீரர்களுக்கும் அரக்கர் படையினருக்கும் கடும் போர் நடந்து கொண்டிருக்கிறது. நிகரில்லாத வீரத்துடன் கும்பகருணப் பெயரினான் பெரும் போர் நடத்திக் கொண்டிருக்கிறான். கும்பகருணன் நடத்திய அக்கடும் போரில் இலக்குவனும் சுக்கிரீவனும் கூட சோர்ந்து விட்டனர். இராமன் தலையிட்டு அவன் விடுத்த சரங்களினால் கும்பகருணன் படிப்படியாக வலுவிழந்து கொண்டிருந்தான்.

மறுபக்கம் கோட்டைக்குள்ளே இராவணனுக்கு சீதைபால் இருந்த காம நோய் முற்றி அவன் தன் பரிவாரங்களுடன் சீதை இருக்குமிடம்

சென்று அவளுக்கு முன்பாக ஒரு ஆசனத்தில் அமர்ந்து கொண்டான். சீதையிடம் கெஞ்சுகிறான். தன் விருப்பத்திற்கு இணங்குமாறு வேண்டுகிறான்.

''வஞ்சனேன், எனக்கு நானே மாதரார் வடிவு கொண்ட
நஞ்சுநோய் அமுதம் உண்பான் நச்சினேன்; நாளும் தேய்ந்த
நெஞ்சு நேர் ஆனது; உம்மை நினைப்பு விட்டு ஆவி நீக்க
அஞ்சினேன்; அடியனேன் நும் அடைக்கலம்! அமுதின் வந்தீர்''

''ஈசனே முதலா மற்றைமானுடர் இறுதியாகக்
கூச மூன்று உலகும் காக்கும் கொற்றத்தேன் வீரக்கோட்டி
பேசுவார் ஒருவற்கு ஆவி தோற்றிலேன்; பெண் பால்வைத்த
ஆசைநோய் கொன்றது என்னா ஆண்மைதான் மாசுணாதோ?''

என்றெல்லாம் கூறி இராவணன் சீதையிடம் கெஞ்சுகிறான்.

நான் எக்காரியத்திலும் வெற்றியே பெற்று வருபவன். பெரு வீரர் வரிசையில் வைத்துப் பேசப்படுபவன். இது வரை நான் எதிலும் தோற்றேன் இல்லேன். ''பெண்பால் வைத்த ஆசை நோய் என்னைக் கொன்றுவிட்டது என்று ஆகிவிடுமானால் அது என் ஆண்மைக்கு மாசு ஏற்படுத்திவிடாதா?

''பெண்பால் வைத்த ஆசை நோய் கொன்றது என்னா, ஆண்மை தான் மாசுணாதோ?'' என்று இராவணன் சீதையிடம் கெஞ்சிக் கெஞ்சி வேண்டுகிறான்.

இன்னும்

''அறம் தரு செல்வம் அன்னீர்! அமுதினும் இனியீர்! என்னைப்
பிறந்திலன் ஆக்கவந்தீர்! பேர்எழில் மானம் கொல்ல
மறந்தன பெரிய, போன வரும்; எனும் ஆசை தன்னால்
இறந்து இறந்து உய்கின்றேன் யான் யார் இது தெரியும் ஈட்டார்?''

''அந்தரம் உணரின் மேல் நாள், அகலிகை என்பாள், காதல்
இந்திரன் உணர்த்த நல்கி எய்தினாள் இழுக்குற்றாளோ?
மந்திரம் இல்லை வேறோர் மருந்தில்லை மையல் நோய்க்குச்
சுந்தரக் குமுதச் செவ்வாய் அமுது அலால், அமுதச் சொல்லீர்!''

என்றெல்லாம் கூறி தனது இச்சையை வெளிப்படுத்திக் கனிவுடன் வேண்டுகிறாள்.

சீதாபிராட்டி அரக்கனை அலட்சியப்படுத்திக் கடுமையாகப் பேசி அவனுக்குப் புத்தி புகட்டி பதிலளித்தான்.

"பழி இது பாவம் என்று பார்க்கிலை, பகரத்தக்க
மொழியிவையல்ல என்பது உணர்கிலை! முறைமை நோக்காய்!
கிழிசிலை நெஞ்சம்! வஞ்சக் கிளையொடும் இன்று காரும்
அழிகிலை; என்றபோது என் கற்பு என்னாம்! அறம்தான் என்னாம்!"

"ஊண்இலா யாக்கை பேணி, உயர்புகழ் சூடாது, உன்முன்
நாண்இலாது இருந்தேன் நல்லேன்! நவை அறுகுணங்கள் என்னும்
பூண்எலாம் பொருத்த மேனிப் புண்ணிய மூர்த்தி தன்னைக்
காணலாம் இன்னும் என்னும் காதலால் இருந்தேன்; கண்டாய்"

உணவில்லாமல் எனது உடலைப் பேணி, உயர் புகழ் இல்லாமல் உன் முன் நாணமில்லாமல் இருந்தேன். நவை அறு குணங்கள் என்னும் பூண் எலாம் பொறுத்த மேனிப் புண்ணிய மூர்த்தியான எனது நாயகனைக் காண வேண்டும் என்னும் நீங்காத நினைப்பில் நான் இன்னும் உயிருடன் இருக்கிறேன்.

இராமபிரானின் உயிர்த்தம்பி செருவில் செம்பொன் அனைய இலக்குவன் உன்னைப் போர்க்களத்தில் கொன்று உன் தலைகள் சிந்துவதையும், உன் அரக்கர் குலம் அழியும் கோலத்தையும் காண வேண்டும் என்னும் வேட்கையில் நான் இன்னும் உயிருடன் வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என்றெல்லாம் தனக்கு முன் கிடக்கும் காய்ந்த புல் என அரக்கனை அற்பமாகக் கருதி, முறையில்லாதவனே, அறம் மறந்தவனே, வரம்பில்லாதவனே, கட்டுப்பாடு மீறியவனே, என்றெல்லாம் கூறி இராவணனை இகழ்ந்து பேசுகிறாள்.

சீதையின் வார்த்தைகளைச் செவியுறக் கேட்ட இராவணன் கடும் சீற்றம் கொண்டு ''என்னைப் போரில் வென்று, அந்தப் பொடி இராமன் உன்னை மீட்டபின் அவனோடு உயிர் வாழலாம் என்று கூறுகிறாயா என்று ஏளனமாகச் சிரித்துவிட்டு,

''உன் மனதில் உள்ள, அந்த தசரதன் சிறுவனைக் கொன்று அயோத்தியில் உள்ளவர்களையும் கொன்று ஒழித்துக் கட்டுவேன். உன் தந்தை ஜனகனைக் கொண்டுவரக் கூறியுள்ளேன்" என்று கூறி ஒரு மாயாஜாலம் காட்டினான்''

அம்மாயா ஜனகன் இராவணனைப் பணிந்து சீதையிடம் தகாதன பேசினான். அவ்வார்த்தைகளைக் கேட்ட சீதை

''அவ்வுரை கேட்ட நங்கை, செவிகளை அமையப் பொத்தி
வெவ்வுயிர்த்து ஆவிதள்ளி வீங்கினள் வெகுளி பொங்க,
இவ்வுரை எந்தை கூறான் இன் உயிர் வாழ்க்கை பேணிச்
செவ்வுரை அன்று இது, என்னாச் சீறினள், உளையச் செப்பும்''

என்ற கூறி அம்மாயா ஜனகனைக் கடிந்து,

''அறம் கெட, வழக்கு நீங்க, அரசர்தம் மரபுக்கு ஆன்ற
மறம் கெட, மெய்ம்மை தேய வசைவர மறைகள் ஓதும்
திறம் கெட ஒழுக்கம் குன்றத் தேவரும் பேணத்தக்க
நிறம் கெட, இனைய சொன்னாய்! சனகன்கொல் நினையின் ஐயா!''

''வழி கெடவரினும் தத்தம்
வாழ்க்கை தேய்ந்து இறினும், மார்பம்
கிழிபட அயில்வேல் வந்து
கிழிப்பினும் சான்றோர் கூறும்
மொழி கொடுவாழ்வது அல்லால்
முறை கெடப்புறம் நின்று ஆர்க்கும்
பழிபட வாழ்கிற் பாரும்
பார்த்திவர் உளரோ, பாவம்!''

என்று கூறி,

''நீயும், நின் கிளையும் மற்று இந் நெடு நில வளரப்பும், நேரே
மாயினும் முறைமை குன்ற வாழ்வேனோ? வயிரத்திண்தோள்
ஆயிரம் நாமத்து ஆழி அரியனுக்கு அடிமை செய்வேன்
நாயினும் நோக்கு வேனோ, நாண்துறந்து ஆவிநச்சி?

என்று கூறி மேலும் இராவணனையும் கடிந்து எனது நாயகன் அம்பிற்கு நீ உன் கிளையோடு இரையாவாய், நீ பிழைக்க மாட்டாய் என்று கோபமாகப் பேசினாள்.

இந்த சமயத்தில் போர்க் களத்தில் கும்பகருணன் மாண்ட செய்தி தெரிந்து இராவணன் மிக்க கவலையுற்று அந்த இடத்தை விட்டு நீங்கினான்.



28. தானமாலை புலம்பல்

கும்பகருணன் இறந்தச் செய்தி கேட்டு இராவணன் மிக்க துயரமும் கலக்கமும் அடைந்தான். அப்போது அதிகாயன் என்பவன் முன் வந்து தான் போர்க்களம் சென்று வானரப் படைகளை அழித்து மனிதரைக் கட்டி இழுத்து வருகிறேன் என்று எழுந்தான். அதிகாயன் இராவணனுடைய மகன். தானமாலை அவனுடைய தாய். அதிகாயன் ஒரு மாவீரன். இணையில்லாத சூரன். வல்லமை மிக்க பல படைக்கலங்களைக் கொண்டவன். சீறிய பயிற்சிகளைப் பெற்றவன்.

அதிகாயன் கடும் போர் புரிந்து கடைசியில் இலக்குவன் கணைகளால் மாண்டான். அதிகாயனும் அவனுடன் சென்ற படை வீரர்களும் அழிந்த செய்தி கேட்டு இராவணன் வருந்தினான். இக்காட்சியை மிக அற்புதமாகக் கம்பன் தன் கவிதைகளில் சித்தரித்து நயம்படக் கூறுகிறார்.

''ஏங்கிய விம்மல், மானம், இரங்கிய இரக்கம், வீரம்
ஓங்கிய வெகுளி, துன்பம் என்று இவை ஒன்றற்கு ஒன்று
தாங்கிய தாங்கம் ஆகக் கரையினைத் தள்ளித் தள்ளி
வாங்கிய கடல் போல் நின்றான் அருவி நீர் வழங்கும் கண்ணான்''

என்றும்

''திசையினை நோக்கும், நின்ற தேவரை நோக்கும்; வந்த
வசையினை நோக்கும்; கொற்ற வாளினை நோக்கும்; பற்றிப்
பிசையுறும் கையை; மிசை சுறுக்கொள உயிர்க்கும், பேதை
நசையிடைக் கண்டான் என்ன நகும்; அழும்; முனியும்; நாணும்''

என்றும் கம்பன் குறிப்பிடுகிறார்.

இன்னும்,

"மண்ணினை எடுக்க எண்ணும் வானினை இடிக்க எண்ணும்
எண்ணிய உயிர்களெல்லாம் ஒரு கணத்து எற்ற எண்ணும்,
பெண் எனும் பெயர எல்லாம் பிளப்பென் என்று எண்ணும்; எண்ணிப்
புண் இடை எரிபுக்கு என்ன மானத்தால் புழுங்கி நையும்''

என்றும் இராவணன் வருந்தி எண்ணமிட்டான்.

அதிகாயனுடைய தாய், தன் மகன் போர்க்களத்தில் மாண்ட செய்தியைக் கேட்டுப் புலம்புகிறாள். இந்தப் புலம்பல் எல்லோரையும் கொல்வித்தாயே, யார் சொல்வதையும் கேட்க மறுக்கிறாயே, சீதை

28. தானமாலை புலம்பல்

கும்பகருணன் இறந்தச் செய்தி கேட்டு இராவணன் மிக்க துயரமும் கலக்கமும் அடைந்தான். அப்போது அதிகாயன் என்பவன் முன் வந்து தான் போர்க்களம் சென்று வானரப் படைகளை அழித்து மனிதரைக் கட்டி இழுத்து வருகிறேன் என்று எழுந்தான். அதிகாயன் இராவணனுடைய மகன். தானமாலை அவனுடைய தாய். அதிகாயன் ஒரு மாவீரன். இணையில்லாத சூரன். வல்லமை மிக்க பல படைக்கலங்களைக் கொண்டவன். சீறிய பயிற்சிகளைப் பெற்றவன்.

அதிகாயன் கடும் போர் புரிந்து கடைசியில் இலக்குவன் கணைகளால் மாண்டான். அதிகாயனும் அவனுடன் சென்ற படை வீரர்களும் அழிந்த செய்தி கேட்டு இராவணன் வருந்தினான். இக்காட்சியை மிக அற்புதமாகக் கம்பன் தன் கவிதைகளில் சித்தரித்து நயம்படக் கூறுகிறார்.

''ஏங்கிய விம்மல், மானம், இரங்கிய இரக்கம், வீரம்
ஓங்கிய வெகுளி, துன்பம் என்று இவை ஒன்றற்கு ஒன்று
தாங்கிய தாங்கம் ஆகக் கரையினைத் தள்ளித் தள்ளி
வாங்கிய கடல் போல் நின்றான் அருவி நீர் வழங்கும் கண்ணான்''

என்றும்

''திசையினை நோக்கும், நின்ற தேவரை நோக்கும்; வந்த
வசையினை நோக்கும்; கொற்ற வாளினை நோக்கும்; பற்றிப்
பிசையுறும் கையை; மிசை சுறுக்கொள உயிர்க்கும், பேதை
நசையிடைக் கண்டான் என்ன நகும்; அழும்; முனியும்; நாணும்''

என்றும் கம்பன் குறிப்பிடுகிறார்.

இன்னும்,

"மண்ணினை எடுக்க எண்ணும் வானினை இடிக்க எண்ணும்
எண்ணிய உயிர்களெல்லாம் ஒரு கணத்து எற்ற எண்ணும்,
பெண் எனும் பெயர எல்லாம் பிளப்பென் என்று எண்ணும்; எண்ணிப்
புண் இடை எரிபுக்கு என்ன மானத்தால் புழுங்கி நையும்''

என்றும் இராவணன் வருந்தி எண்ணமிட்டான்.

அதிகாயனுடைய தாய், தன் மகன் போர்க்களத்தில் மாண்ட செய்தியைக் கேட்டுப் புலம்புகிறாள். இந்தப் புலம்பல் எல்லோரையும் கொல்வித்தாயே, யார் சொல்வதையும் கேட்க மறுக்கிறாயே, சீதை

மீதான காம வெறி காரணமாய் இன்னும் என்னென்ன நிகழப் போகிறதோ, கும்பகருணனையும் கொல்வித்து, என் கோமகனையும் அம்புக்கு இரையாக்கி நீ எப்படி ஆட்சி நடத்தப் போகிறாய் என்றெல்லாம் இராவணனிடம் கூறுவதாக அழுது புலம்புகிறள்.

இதைக் கம்பநாடர் மிகவும் அற்புதமான பாடல்கள் மூலம் எடுத்துக் கூறுகிறார்,

"இந்திரற்கும் தோலாத நன் மகனை ஈன்றாள் என்று
அந்தரத்து வாழ்வாரும் ஏத்தும் அளியத் தேன்!
மந்தரத்தோள் என்மகனை, மாட்டா மனிதன் தன்
உந்து சிலைப் பகளிக்கு உண்ணக் கொடுத்தாயே!"

''அக்கன் உலந்தான்! அதிகாயன்தான் பட்டான்!
மிக்கதிறத்து உள்ளார்கள் எல்லோரும் வீடினார்!
மக்களில் இன்றுள்ளான் மண்டோதரி மகனே!
திக்கு விஜயன் இனிஒரு கால் செய்யாயோ!''

"ஏதையா சிந்தித்து இருக்கின்றாய்! எண் இறந்த
கோதையார் வேல் அரக்கர் பட்டாரைக் கூவாயோ!
பேதையாய்க் காமம் பிடிப்பாய்! பிழைப்பாயோ!
சீதையால் இன்னும் வருவ சிலவேயோ?

என்று இராவணனுடைய காமவெறியைக் கண்டிக்கும் முறையில் அழுது புலம்புகிறாள்.

''உம்பி, உணர்வுடையான், சொன்ன உரைகேளாய்;
நம்பி குலக்கிழவன் கூறும் நலம் ஓராய்;
கும்பகருணனையும் கொல் வித்து என் கோமகனை
அம்புக்கு இரையாக்கி, ஆண்டாய் அரசு ஐயா!''


என்று அழுது புலம்புவதையும் கம்பன் எடுத்துக்காட்டுகிறார்.

உன்னுடைய தம்பி, அறிவில் சிறந்த வீடணன் சொன்ன நல்லுரைகளை நீ கேட்கவில்லை. நம்பி குலக் கிழவன் உன் பாட்டன் மாலியவான் கூறிய நல்லுரைகளையும் அறிவுரைகளையும் நீ கேட்கவில்லை. இவ்வாறு சீதையின் மீதுள்ள உனது காமத்தால் வீணான போரை சந்தித்துக் கும்பகருணனையும் கொல்வித்து எனது மகன் அதிகாயனையும் மனிதர்களின் அம்புக்கு இரையாக்கி

விட்டாயே'' என்று தானமாலை புலம்புவதைக் கம்பன் மிகுந்த அவலச் சுவையுடன் எடுத்துக் காட்டியுள்ளார்.

இங்கு தானமாலையின் புலம்பல் ஒப்பாரிப் பாடல் வடிவத்தைக் கொண்ட அவலச் சுவை நிறைந்த சிறந்த இலக்கியத் தன்மையுள்ள பாடல்களாக அமைந்துள்ளதைக் காண்கிறோம்.

கன்று இறந்து விட்டால் தாய்ப் பசு பதை பதைத்து கதறுவதைப் போல தனமாலை தனது இறந்து பட்ட மகனை நினைந்து இப்படிப் பல பலவும் பன்னி எடுத்தழைத்துக் கதறினாள். இவ்வரிகள் இராவணனுடைய காம வெறியின் விளைவுகளையும் சுட்டிக் காட்டுவதாகவும் அமைந்துள்ளது.



29. நான் முகன் படை

இந்திரசித்தன் நடத்திய போர் மிகவும் வலியாதாக இருந்தது. முதல் நாள் போரில் இந்திர சித்தன் மறைந்து நின்று நாகாஸ்திரத்தைத் தொடுத்து இலக்குவனையும் இதர வானர வீரர் பலரையும் வீழ்த்திவிட்டான்.

கலுழன் உதவியால் இலக்குவனும் இதர வீரர்களும் உணர்வு பெற்று மீண்டும் எழுந்தனர்.

இரண்டாம் தடவையாக இந்திரசித்தன் போருக்கு எழுந்தான். மாயப் போர் புரிந்தான் வானரப்படைகளுக்கு பெரும் சேதங்கள் ஏற்பட்டன. ''இவனைப் பிழைக்க விட்டால் நமது படைகளுக்கு மேலும் பல அழிவுகளும் சேதங்களும் ஏற்படும் எனவே இவன் மீது அயன் படை தொடுப்பேன். அனுமதி வேண்டுகிறேன்.'' என்று இலக்குவன் இராமனிடம் அனுமதி கேட்டான்.

அப்போது இராமன் ''அந்தணன் படைக்கலம் தொடுக்கின் அது ஒருவனைக் கொல்வதுடன் நிற்காது இவ்வுலகம் மூன்றையும் சுடும். எனவே நாம் அப்பிரம்மாஸ்திரத்தைத் தவிர்ப்பது நல்லது'' என்று கூறினான். இலக்குவனும் அக்கருத்தை ஏற்று அவ்வயன் படை தொடுப்பதைத் தவிர்த்தான்.

''இவன் பிழைக்கு மேல் படுக்கும் நம் படையை, எண்ண மற்றிலை, அயன்படை தொடுப்பல்'' என்று இலக்குவன் இசைத்தான்.

''ஆன்றவன் அது பகர்தலும் அறநிலை வழாதாய்
ஈன்ற அந்தணன் படைக்கலம் தொடுக்கில் இவ்வுலகம்
மூன்றையும் சுடும், ஒருவனால் முடிகிலது' என்றான்
சான்றவன்; அது தவிர்த்தனன், உணர்வுடைத் தம்பி''

என்று கம்பன் குறிப்பிடுகிறார்.

பெருநாசம் விளையும் பேராயுதத்தை நாம் முதலில் தொடுக்கலாகாது என்று இராமபிரான் இங்கு குறிப்பிடுவது போர்த் தொழிலிலும் அறம் வழுவாத நிலை கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துவதாகும். இக்கருத்து மிகவும் முக்கியமான ஒன்றாகும்.

இலக்குவனுடைய இராமனுடைய நிலையை அறிந்து கொண்ட இந்திர சித்தன் களத்திலிருந்து மறைந்து போய், தெய்வ வான்படைக்கலம் தொடுப்பதற்கு முடிவு செய்து இலங்கை புகுந்து அதற்கான வேள்வியைத் தொடங்கினான்.

அன்றைய போர் முடிந்தது எனக்கருதி இராம இலக்குவர்கள் தங்கள் போர்க் கோலங்களை நீக்கிக் கொண்டனர். வீடணனை உணவு சேகரிக்கவும் இலக்குவனைப் படைகளைக் காக்கும் படியும் கூறிவிட்டு இராமன் கணைகளுக்குப் பூஜை செய்யச் சென்றுவிட்டான்.

இந்த நேரத்தல் இந்திரசித்தன் போர்க்களத்திற்குத் திரும்பி வந்து இலக்குவன் மீது நான் முகப்படைக்கலத்தை ஏவி அவனையும் வானரப்படைகளையும் சாய்த்து வெற்றிச் சங்கினை ஊதிக் கொண்டு இலங்கை புகுந்துத்தன் தந்தையிடம் சேர்ந்தான்.

இராமன் ஆயுத பூசை முடித்துத் திரும்பி வந்து பார்க்கும் போது இலக்குவனும் சுக்கிரீவனும், மாருதியும் வீழ்ந்து கிடந்தனர். அதைக் கண்டு அவன் திடுக்கிட்டான். பொருமினான். அகம் பொங்கினான். உயிர் முற்று புகைந்தான். மனம் குலைந்தான். தருமம் நின்று தன் கண் புடைத்து வருந்தும்படி சாய்ந்தான். உருமினான். இடியுண்ட ஓர் மராமரம் ஒத்தான். உணர் விழந்தான். மீண்டும் உணர்வு பெற்றுப் புலம்பத் தொடங்கினான். அப்போது,

''மண் மேல் வைத்த காதலின், மாதர் முதலோர்க்கும்
புண் மேல் வைத்த தீ நிகர் துன்பம் புகுவித்தேன்
பெண் மேல் வைத்த காதலின் இப்பேறுகள் பெற்றேன்;
எண்மேல் வைத்த என்புகழ் நன்றால் எளியனோ?''

என்று புலம்பினான்.

சீதை மீது அளவுக்கு மீறி வைத்த காதலின் காரணமாக இந்த விளைவுகள் எல்லாம் ஏற்பட்டு விட்டன என்று புலம்புகிறான். போர்க் களத்தில் கிடந்த இலக்குவனையும், சுக்கிரீவனையும் மாருதியையும் கண்டு இராமனும் சோர்ந்து விழுந்தான்.

இந்திர சித்தன் வெற்றிக் களிப்புடன் இலங்கை சென்று இன்று இலக்குவனை வீழ்த்திவிட்டேன். இராமன் ஓடி விட்டான் நாளை அவனையும் வென்று மீள்கிறேன் என்று தந்தையிடம் கூறினான். இராவணன் மகிழ்ச்சியடைந்து மருத்தனை அழைத்தான். போர்க்களத்தில் கிடந்த அரக்கர் பிணங்களையெல்லாம் அப்புறப்படுத்திக் கடலில் தள்ளி விட்டுச் சீதையை விமானத்தில் ஏற்றிக் கொண்டு போய்ப் போர்க்களத்தைக் காட்டும்படி பணித்தான். அவனும் அவ்வாறே செய்தான். போர்க்களத்தில் இலக்குவனும் மற்றவர்களும் வீழ்ந்து கிடப்பதை விமானத்திலிருந்துக் கண்ட சீதை கோ என அழுதாள்.

''கண்டாள் கண்ணால் கணவன் உரு
அன்றி ஒன்றும் காணாதாள்
உண்டாள் விடத்தை என உடலும்
உணர்வும் உயிர்ப்பும் உடன் ஓய்ந்தாள்;
தண் தாமரைப்பூ நெருப்புற்ற
தன்மை உற்றாள் தரியாதாள்;
பெண்தான் உற்ற பெரும்பிழை
உலகுக்கெல்லாம் பெரிதன்றோ?''

என்று கம்பநடார் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு மங்கை அழுத போது உலகில் உள்ள அனைத்து உயிர்களும் அழுதன. மயில்கள் அழுதன, குயில்கள் அழுதன, பதுமத்திருந்த மாது அழுதாள், கங்கை அழுதாள், நாமடந்தை அழுதாள், கமலத்தடங் கண்ணன் தங்கை (துர்கை) அழுதாள். இரங்காத அரக்கி மாறும் தளர்ந்து அழுதனர்.

பொன் தாழ் குழையாள் தனையீன்ற
பூமாமடந்தை புலந்து அழுதாள்;
குன்றா மறையும், தருமமும் மெய்
குலைந்து குலைந்து தளர்ந்து அழுத;
பின்றாது உடற்றும் பெரும்பாவம்
அழுத; பின்என் பிறர் செய்கை?
நின்றார் நின்ற படி அழுதார்;
நினைப்பும் உயிர்ப்பும் நீத்திட்டாள்''

இவ்வாறு கம்ப நாடர் தனது இணையற்ற கவிதைகள் மூலம் சீதை அழுததை அவளோடு உலகமெல்லாம் சேர்ந்து அழுத காட்சியைக் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு வருந்தி அழுத சீதை விமானத்திலிருந்து இராமன் மீது விழுந்து இறக்கத் துணிந்தாள். அவளைத் திரிசடை என்னும் நல்லாள் கட்டிப் பிடித்துக் கொண்டு கீழே விழாமல் தடுத்தாள். தடுத்து ஆறுதல் கூறினாள். எல்லாம் அவர்களுடைய மாயம். எதற்கும் நீ அம்மா அஞ்ச வேண்டாம்'' என்று பழைய நிகழ்ச்சிகளை நினைவூட்டி எடுத்துக் காட்டி சீதையைத் தேற்றினாள்.

''மாய மான் விடுத்தவாறும், சனகனை வகுத்தவாறும்,
போய நாள் நாகபாசம் பிணித்தது போனவாறும்,
நீ அமா நினையாய் மாள நினைத்தியோ! நெறியிலாரால்
ஆயமா மாயம்; ஒன்றும் அஞ்சலை; அன்னம் அன்னாய்!''

என்று திரிசடை சீதைக்குத் தேறுதல் கூறினாள்.

இன்னும் திரிசடை, சீதையின் கற்பின் வலிமை அரக்கர்களின் பாவச் செயல்கள், இராமனுடைய வீரம், மாருதியின் சாகா நிலை முதலிய பல விவரங்களையும் எடுத்துக் கூறி அவளுக்கு தைரியமூட்டினாள்.

உணவு தேடச் சென்ற வீடணன் அவ்வேலையை முடித்துக் கொண்டு போர்க்களத்தை அடைந்தான். எல்லோரும் உணர்வற்றுச் சாய்ந்துக் கிடப்பதைக் கண்டுத் திடுக்கிட்டான். நான் முகன் படையால் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்தான். அனுமனைக் கண்டான். அவன் உயிருடன் இருக்கிறான் என்பதை உணர்ந்து குளிர்ந்த நீரைக் கொண்டு வந்து அவன் முகத்தில் தெளித்தான். அவனுடைய உடம்பு சிலிர்த்தது. கண்கள் விழித்தன. இராம நாமத்தை ஜபித்தான் வீடணன் அழுகையோடு உவகையும் கொண்டான்.

இருவரும் சாம்பவனைத் தேடிச் சென்றனர், அவன் உயிர்த் தெழுந்தான், படைகள் வீழ்ந்து கிடப்பதைக் கண்டான், அனைவரும் இறந்தனர் அவர்கள் உயிர் பிழைக்க விரைவில் சஞ்சீவி மலையில் உள்ள மூலிகை இலைகளைக் கொணரும்படி விவரங்களுடன் அனுமனிடம் கூறினான்.

''மாண்டாரை உய்விக்கும் மருந்தொன்றும்,
மெய் வேறு வகிர்களாகக்
கீண்டாலும் பொருந்து விக்கும் ஒருமருந்தும்
படைக்கலங்கள் கிளர்ப்பது ஒன்றும்
மீண்டேயும் தம்உருவே அருளுவதோர்
மெய்மருந்தும் உள; நீ வீர!
ஆண்டு ஏகிக் கொணர்தி, என அடையாளத்
தொடும் உரைத்தான் அறிவின் மிக்கான்''

என்று அனுமனிடம் சாம்பவன் எடுத்துக் கூறி அவனை அனுப்பி வைக்கிறார்கள்.

அனுமன் வாயு வேகத்தில் பாய்ந்து சஞ்சீவி மலையை அடைந்தான். இன்ன மருந்து இன்ன இலை என்று தேடுவதற்கு நேரமில்லை மலையை வேரோடு பிடுங்கிக் கொண்டு வந்த வேகத்தில் திரும்பினான்.

இந்த சமயத்தில் போர்க்களத்தில் சோர்ந்து கிடந்த இராமனுடைய பாதங்களை வீடணனும் சாம்பவனும் வருடினர் இராமபிரான் கண் விழித்தான் இருவரையும் கண்டான். துயரமடைந்த மொழிகளில் பேசினான்.

''சீதையென்று ஒருத்தியால் உள்ளம் தேம்பிய
பேதையேன், சிறுமையால் உற்ற பெற்றியை
யாது என உணர்த்துகேன்! உலகொடு இவ்வுறாக்
காதைவன் பழியொடும் நிறுத்திக் காட்டினேன்''

''மாயை இம்மான் என எம்பி வாய்மையால்
தூயன உறுதிகள் சொன்ன சொற் கொளேன்!
போயினென், பெண் உரை மறாது போனதால்
ஆயது இப்பழியுடை மரணம்; அன்பினீர்!''

''கண்டனென் இராவணன் தன்னைக் கண்களால்
மண்டமர் புரிந்தனென், வலியின்; ஆர் உயிர்
கொண்டிலன், உறவு எலாம் கொடுத்து மாள நான்
பண்டுடைத் தீவினை பயந்த பண்பினால்''

''தேவர்தம் படைக்கலம் தொடுத்துத் தீயவன்
சாவது காண்டும்; என்று இளவல் சாற்றவும்
ஆவதை இசைத்திலென்; அழிவது என்வயின்
மேவுதல் உறுவது ஓர் விதியின் வெம்மையால்''

''இளையவன் இறந்த பின் எவரும் என்? எனக்கு
அளவறு கீர்த்தி என்? அறம் என்? ஆண்மை என்?
கிளையுறு சுற்றம் என்? அரசு என்? கேண்மை என்?
விளைவு தான் என்? மறைவிதி என்? மெய்மை என்?

''தாதையை இழந்த பின், சடாயு இற்றபின்,
காதல் இன்துணைவரும் மடியக் காத்து உழல்
கோது அறு தம்பியும் விளியக், கோள் இலன்
சீதையை உகந்துளான் என்பர் சீரியோர்''

என்றெல்லாம் மனம் வருந்தித் தான் உயிர் மாய்த்துக் கொள்வதே மேல் என்று துணிகிறான். அப்போது சாம்பவன் ''அனுமன் உணர்வு பெற்றுள்ளான் அவன் மேரு மலைக்கப்பால் வடதிசை போய் உள்ளான். விரைவில் மருந்துகளுடன் திரும்புவான்.

அம்மருந்துகளால் அனைவரும் உயிர் பெற்று எழுவர் என்று கூறிக் கொண்டிருந்த போது மாருதி மலையுடன் வந்து அம்மலையை ஆகாயத்தில் நிறுத்தி விட்டு அவன் மட்டும் நிலத்தில் இறங்கினான். அப்போது மருத்துவ மலையின் காற்று பட்டவுடன் மாண்டவர் அனைவரும் உயிர் பெற்று எழுந்தனர். இலக்குவனை இராமன் தழுவிக் கொண்டான். அனைவரும் அனுமனை வாழ்த்தினர்.



30. நிகும்பலை யாகம்

இந்திர சித்தனுடைய பிரம்மாஸ்திரம் என்னும் ஏவுகணையால் இராம இலக்குவர்களும் வானரப்படைகளும் சாய்ந்து விட்டனர் என்று கேள்விப்பட்டுத் தகவல் கிடைத்தவுடன் இராவணன் எழுந்து பொங்கித் தன்னையும் கடந்து அளவு கடந்த மகிழ்ச்சியில் மூழ்கினான். கின்னரைக் கீதம் பாடச் செய்து அழகிய மாந்தரை ஆடச் செய்து மகிழ்ந்தான்.

நெடும் களியாட்டம் கண்டான்

''இன்னது இத்தலையதாக; இராவணன்; எழுந்து பொங்கித் தன்னையும் கடந்து நீண்ட உவகையன், சமைந்த கீதம், கின்னரர் முதலோர் பாட, முகத்திடைக் கிடந்த கெண்டைக் கன்னி நல் மயில் அன்னாரை நெடும் களி ஆட்டம் கண்டான்''

என்று கம்பர் குறிப்பிடுகிறார்.

''அரம்பையர், விஞ்சை மாதர், அரக்கியர், அவுணர் மாதர், குரும்பை அம்கொங்கை நாகர் கோதையர், இயக்கர், கோதுஇல் கரும்பினும் இனிய சொல்லார் சித்தர் தம் கன்னிமார்கள் வரம்பு அறு சும்மையோர்கள், மயில் குளம் மருள வந்தார்''

என்றெல்லாம் கம்ப நாடர் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு பெரு மகிழ்ச்சியுடன் ஆடல் பாடல்களில் இராவணன் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது வானரப்படைகள் உயிர் பெற்றெழுந்து ஆர்ப்பரிக்கும் பேரொலி கேட்கிறது.

இராவணன் உடனே தனது சபையைக் கூட்டி மந்திராலோசனை செய்கிறான். மாலியவான் மீண்டுமை கூறுகிறான். இலங்கையிலிருந்து மேரு மலைக்கே இமைப் பொழுதில் சென்று மருந்துச் செடிகள் நிறைந்த மலையோடும் கொணரவல்லான் அனுமனே ஆதல் வேண்டும். அவர்களுடைய வல்லமை பெரிது. எனவே அந்த ஜானகியை அவர்களிடம் ஒப்படைத்து விட்டு அந்த அறம் தரும் சிந்தையோரை அடைக்கலம் புகுவதே நல்லது என்று கூறுகிறான்.

''எல்லோரும் போரில் மாண்டனர். இலங்கை ஊரும் சிறுவனும் (இந்திரசித்தனும்) நீயும் அல்லாமல் வேறு யார் இருக்கிறார்கள்'' என்றெல்லாம் மீண்டும் எடுத்துக் கூறுகிறான் மாலி.

மாலியவான் அனுபவங்கள் நிறைந்தவன். நிறைந்த கற்றறிந்த ஞானி. இராவணன் சபையில் இருந்தவர்களில் வயதிலும் மூத்தவன்.

அவன் கூறுவதில் உள்ள உண்மைகளை உணர்வதற்குப் பதிலாக இராவணனுக்குக் கோபமே வருகிறது. குறிப்பாக இராமனைப் பற்றியும் சீதையைப் பற்றியும் கூறும் போதெல்லாம் கடும் கோபம் கொண்டே அவனை மறுத்துப் பேசி வாயடைக்கிறான்.

''கட்டுரை அதனைக் கேளா, கண் எரிகதுவ நோக்கிப்
பட்டனர் அரக்கர் என்னில், படைக்கலம் படைத்த எல்லாம்
கெட்டன எனினும், வாழ்க்கை கெடாது; நல்கிளி அன்னாளை
விட்டிட எண்ணியோ நான் பிடித்தது வேட்கை வீய?''

என்று சீதையின் மீதானபெருங் காதலையும் வெளிப்படுத்தியே பாட்டனை மறுத்துக் கூறுகிறான்.

மாயச்சீதை

இந்திர சித்தன் நிகும்பலையாகம் செய்யத் தீர்மானித்தான். அதற்காகத் தன் தந்தையின் அனுமதியைப் பெற்றான். ஒரு மாயச் சீதையைக் கொண்டு போய் இராம இலக்குவர் முன்பாக வெட்டிக் கொல்ல வேண்டும். அயோத்தியில் உள்ளவர்களையும் அழிக்கப் போகின்றோம் என்று போக்குக் காட்ட வேண்டும். அவர்கள் அயோத்திக்குப் புறப்படுவார்கள். அதற்குள் நான் வேள்வியை முடித்துவிடுவேன்'' என்று தந்தையிடம் கூறிவிட்டு ஒரு மாயச் சீதையைக் கொண்டுவந்து வானரப்படை முன்பாக இரக்கமின்றிக் கொன்றான். அயோத்தியில் உள்ளவர்களையும் கொல்வேன் என்று கூறிக் கொண்டு விமானத்தில் வடக்கு நோக்கிச் சென்றான். நிகும்பலையை அடைந்தான்.

அனுமன் அதைக் கண்ணுற்றுக் கலங்கினான்.

''பெரும் சிறைக் கற்பினாளைப்
பெண்ணினைக் கண்ணிற் கொல்ல
இரும் சிறகு அற்ற புள் போல்,
யாதும் ஒன்று இயற்றல் ஆற்றேன்
இரும் சிறை அழுந்துகின்றேன்;
எம்பிரான் தேவி பட்ட
அரும் சிறை மீட்ட வண்ணம்
அழகிது! பெரிதும் அம்மா!"

என்று மனம் வருந்தி வேகமாகச் சென்று இராமனிடம் செய்தியைக் கூறினான்.

அச்செய்தியைக் கேட்டு இராமன் அதிர்ச்சியடைந்தான். நா எளவில்லை. பேரபிமானம் (சீதையின் மீதான பெரும் அன்பும் அபிமானமும்) என்னும் பேராயுதம் தனது இதயத்தைத் தாக்க உயிர் இல்லாதவன் போலச் சாய்ந்தான்.

''சித்திரத்தன்மை யுற்ற சேவகன் உயர்வு தீர்ந்தான்;
மித்திரர் வதனம் நோக்கான்! இளையவன் வினவப் பேசான்;
பித்தரும் இறை பொறாத, பேர், அபிமானம் என்னும்
சத்திரம் மார்பில் தைக்க, உயிர் இலன் என்னச் சாய்ந்தான்''

இலக்குவனும் மயக்கம் கொண்டு கீழே சாய்ந்தான். வீடணனும் செய்தியைக் கேட்டு நடுக்கமுற்றான். இருப்பினும், ''வெல்லவும் அரிது நாசம் இவள் தனால் விளைந்தது, என்று கருதி இந்திரசித்தன் சீதையைக் கொன்று விட்டானோ? என்று ஐயம் கொண்டான்.

''தையலைத் துணையிலாளைத் தவத்தியைத் தருமக் கற்பின்
தெய்வதன் தன்னை, மற்றுன் தேவியைத் திருவைத் தீண்டி
வெய்யவன் கொன்றான் என்றால் வேதனை உழப்பது இன்னும்
உய்யவோ! கருணையாலோ, தருமத்தோடு உறவும் உண்டோ?''

என்று இலக்குவன் இன்னும் நீ வேதனையுடன் வருந்திக் கிடப்பதா இனி கருணை தேவையில்லை, தர்மத்தைப் பார்க்க வேண்டியதில்லை.

''அங்கம் இவ் அறமே நோக்கி அரசு இழந்து, அடவி எய்தி
மங்கையை வஞ்சன் பற்ற, வரம்பு அழியாது வாழ்ந்தேம்!
இங்கும் இத்துன்பம் எய்தி, இருந்து மேல், எளிமை நோக்கிப்
பொங்குவன் தளையில் பூட்டி ஆள் செயப்புகல்வர் அன்றோ?''

சும்மா இருக்க வேண்டாம். உடனே இலங்கைக்குள் புகுந்து அதைப் பொடியாக்கி அரக்கன் போன திக்கெலாம் சுட்டும் பொசுக்க வேண்டும் என்று ஆவேசத்துடன் பேசினான்.

அப்போது சுக்கிரீவன் ''நான் இராவணனைப் பழி வாங்குவேன்,'' என்று இலங்கை மீது பாயத் தொடங்கினான். அப்போது மாருதி இந்திரசித்தன் அயோத்தியை நோக்கிப் புறப்பட்டதைப் பற்றிக் கூறினான்.

அதைக் கேட்ட இராமன் மேலும் வருந்தினான். சீதையோடு என் தீமை தீரவில்லை. வேரொடும் முடிப்பதாக விளைந்துள்ளது. இன்னும் யாரொடு தொடரும் எனத் தெரியவில்லை.

''தாதைக்கும் சடாயுவான தந்தைக்கும் தமியள் ஆய
சீதைக்கும், கூற்றம் காட்டித் தீர்ந்திலது ஒருவன் தீமை
பேதைப்பெண் பிறந்து, பெற்ற தாயர்க்கும், பிழையிலாத
காதல் தம்பியர்க்கும் ஊருக்கும், நாட்டிற்கும் காட்டிற்று அன்றே!''

என்று கூறி இராமன் மனம் வருந்தினான்.

அப்போது வீடணன்

''பத்தினி தன்னைத் தீண்டிப்
பாதகன் படுத்த போது
முத்திறத்து உலகும் வெந்து,
சாம்பராய் முடியும் அன்றே!
இத்திறம் ஆன தேனும்,
அயோத்தி மேல் போனவார்த்தை
சித்திரம்; இதனையெல்லாம் தெரியலாம் சிறிது போழ்தின்''

என்று கூறி ''சற்று பொறுங்கள் நான் போய்ச் சீதையைக் கண்டு வருகிறேன்'' என்றும் கூறி ஒரு வண்டு வடிவில் இலங்கைக்குள் சென்று உண்மை நிலையைக் கண்டறிந்து திரும்பினான்.

''இருந்தனள் தேவி; யானே எதிர்ந்தனன் கண்களால்; நம்
அருந்ததி கற்பினாளுக்கு அழிவுண்டோ? அரக்கன் நம்மை
வருந்திட மாயம் செய்து நிகும்பலை மருங்கு புக்கான்
முருங்கு அழல் வேள்வி முற்றி முதல் அற முடிக்க மூண்டான்''

அவனை யாகம் செய்யவிடாமல் தடுக்க வேண்டும். வேள்வியைச் சிதைக்க வேண்டும். இளவலோடு நானும் மாருதியும் செல்கிறோம். விடை கொடுங்கள்'' என்று வீடணன் கூற இராமனும் நல்லது சென்று வாருங்கள் என்று விடையும் தந்தான்.

அத்துடன் இராமன் இலக்குவனுக்கு பல புதிய தற்காப்பு மற்றும் தாக்குதல் ஆயுதங்களையும் படைக்கலன்களையும் கொடுத்து உத்திகளும் கூறி அவர்களுக்கு விடை கொடுத்து அனுப்பிவைத்தான்.

இலக்குவனும் வீடணனும், மாருதியும் மற்றும் வானர வீரர்கள் சிலரும் நிகும்பலைக்குச் சென்றனர். இந்திர சித்தன் செய்த யாகத்தைச் சிதைத்தனர். விடணன் தான் இதற்கெல்லாம் காரணம் எனக் கருதி இந்திரசித்தன் அவனை இகழ்ந்து பேசினான்.

''பனிமலர்த் தவிசின் மேலோன் பார்ப்பன குலத்துக்கு எல்லாம்
தனி முதல்தலைவன் ஆனாய்; உன்னை வந்து அமரர் தாழ்வார்;
மனிதருக்கு அடிமையாய் நீ இராவணன் செல்வம் ஆழ்வாய்;
இனி உனக்கு என்னோ மானம்? எங்களோடு அடங்கிற்று அன்றே?

என்று ஏசினான்.

வீடணன் அதனை மறுத்து

''அறம் துணை ஆவது அல்லால்; அருநரகு அமைய நல்கும்
மறம் துணையாக மாயாப் பழியொடும் நான் வாழ மாட்டேன்!
துறந்திலேன் மெய்ம்மை; பொய்ம்மை உம்மையே
துறப்பது அல்லால்,
பிறந்திலேன் இலங்கை வேந்தன் பின், அவன் பிழைத்த போதே''

என்றும்,

''உண்டிலேன் நறவம்; பொய்ம்மை
உரைத்திலேன்; வலியால் ஒன்றும்
கொண்டிலேன்; மாய வஞ்சம்
குறித்திலென்; யாரும் குற்றம்
காண்டிலர் என்பால்; உண்டோ?
நீயிரும் காண்டிர் அன்றே!
பெண்டிரின் திறம் பினாரைத்
துறந்தது பிழையிற்றாமோ?''

என்றும்

"மூவகை உலகம் ஏத்தும்
முதல்வன் எவர்க்கும் மூத்த
தேவர் தம்தேவன், தேவி,
கற்பினில் சிறந்து ளாளை
நோவன செய்தல்தீது என்று
உரைப்ப, நுன் தாதை சீறிப்
போ, வென உரைக்கப் போந்தேன்;
நரகதில் பொருந்து வேனோ?"

என்றும் சரிக்கு சரியாக வீடணன் இந்திரசித்தனுக்கு பதில் கூறினான்.

இங்கு வீடணன், பெண்கள் பால் முறை தவறி நடப்பதைப் பொதுவாகவும் கற்பினில் சிறந்த சீதையைத் துன்புறுத்துவதைக் குறிப்பாகவும் கண்டித்துப் பேசுவதைக் காண்கிறோம்.

இந்திரசித்தன் சினந்து வீடணன் மீது ஒரு சக்தி வாய்ந்த கணையை ஏவினான். அதை இலக்குவன் தடுத்தான். ஒரு வேல் படையை விடுத்தான். அதையும் இலக்குவன் பொடி செய்தான். வீடணன் சினந்தெழுந்து தனது கைத்தண்டால் இந்திரசித்தனது தேர்ப் பாகனையும் குதிரைகளையும் அழித்தான். இந்திரசித்தன் மறைந்து இலங்கைக்கு ஓடி விட்டான். இராவணனை சந்தித்தான்.

இந்திரசித்தன் சோர்ந்து காணப்பட்டதைக் கண்டு இராவணன் என்ன நடந்தது என்று கேட்டான்.

நான் எல்லா மாயங்களும் செய்து பார்த்தேன் உன் தம்பி வீடணனே எல்லாவற்றையும் துடைத்து விட்டான். வேள்வியைச் சிதைத்து விட்டார்கள். பிரம்மாஸ்திரம் சக்கராயுதம், பாசுபதம் முதலிய மூன்று வகைச் சக்தி ஆயுதங்களைத் தொடுத்தேன். இலக்குவன் அவைகள் அனைத்தையும தடுத்து விட்டான். திருமால் படையை ஏவினேன். அது அவனை வலம் செய்து திரும்பி விட்டது என்று இன்னும், இலக்குவனுடைய ஆற்றலையும் ஆயுதப் பயிற்சியையும் சுட்டிக் காட்டி,

“சூழ்வினை மாயம் எல்லாம் உம்பியே துடைக்கச், சுற்றி
வேள்வியை சிதைய நூறி, வெகுளியால் எழுந்து வீங்கி,
ஆள்வினை ஆற்றல் தன்னால் அமர்த்தொழில் தொடங்கி ஆர்க்கும்
தாழ்விலாப் படைகள் மூன்றும் தொடுத்தனன், தடுத்து விட்டான்”

‘‘நிலம் செய்து விசும்பும் செய்து நெடியமால் படை நின்றானை
வலம் செய்து போவதானால், மற்றினி வலியது உண்டோ?
குலம் செய்த பாவத்தாலே கொடும்பழி தேடிக் கொண்டாய்;
சலம்செயின் உலகம் மூன்றும் இலக்குவன் முடிப்பன் தானே”

போரை நிறுத்திக் கொள்ளலாம் அவர்கள் சீற்றம் தணிவர், செய்த தீமையும் பொறுப்பர் என்று கூறினான்.

இந்திரன் தேவலோக அரசன். அவன், ஒரு மாவீரன். மேகநாதன் அந்த இந்திரனையே போரில் வென்று வெற்றி கொண்டதால் அவன் இந்திர சித்தன் என்று பெயர் பெற்றவன். போர் என்றால் அதன் கலைகள் நுட்பங்கள், மாயங்கள், மந்திரங்கள், தந்திரங்கள், அனைத்தையும் கற்றவன். சக்தி ஆயுதங்கள் அனைத்தையும்

செலுத்த வல்லவன். இலக்குவனையும் வானரப் படைகளையும் கூட இரு தடவை வீழ்த்தியவன். தனது சொந்த அனுபவத்தில் உண்மையை உணர்ந்து தன் தந்தையிடம் நிஜத்தைப் பேசினான். தெளிவோடும் பேசினான். தன்னிடம் ஏற்பட்ட பயத்தால் பேசவில்லை. தன் தந்தை மீதிருந்த அன்பின் மிகுதியால் பேசினான். இந்திர சித்தனை ''உலகெல்லாம் கலக்கி வென்றவன்'' என்று கம்பன் சிறப்பாக் குறிப்பிடுகிறார். அம்மேகநாதன் தன் தந்தையிடம் பேசுகிறான்.

''முட்டிய செருவில் முன்னம், முதலவன் படையை என் மேல்
விட்டிலன் உலகை அஞ்சி! ஆதலால் வென்று மீண்டேன்;
கிட்டிய போதும் காத்தான்! இன்னமும் கிளர வல்லான்;
சுட்டிய வலியினாலே கோறலைத் துணிந்து நின்றான்''

''ஆதலால் அஞ்சினேன் என்று அருளலை; ஆசைதான் அச்
சீதைபால் விடுவையாயின் அனையவர் சீற்றம் தீர்வர்;
போதலும் புரிவர், செய்த தீமையும் பொறுப்பர், உன்மேல்
காதலால் உரைத்தேன், என்றான்; உலகெலாம் கலக்கி வென்றான்''

என்பது கம்பனுடைய சிறப்பு மிக்க கவிதைகளாகும்.

இங்கு இந்திரசித்தனும் இராவணனிடம்

அச்சீதைபாலுள்ள ஆசையை விடும்படி கூறுகிறான்.

இராவண்ன் பலமாகச் சிரித்தான். தன் மகனிடம் கூறினான்

''இயம்பலும் இலங்கை வேந்தன் எயிற்று இளநிலவு தோன்றப்
புயங்களும் குலுங்கநக்குப் போர்க்கு இனி ஒழிநீ போத
மயங்கினை மனமும்; அஞ்சி வருந்தினை வருந்தல் ஐய!
சயங்கொடு தருவென் இன்றே மனிதரைத் தனு ஒன்றாலே''

'நீ இனி போருக்குப் போக வேண்டாம், மனம் மயங்கி விட்டாய் உனக்கு அச்சம் ஏற்பட்டு வருத்தம் கொண்டு விட்டாய், நானே நேரில் சென்று அம்மனிதரைக் கொன்று வெற்றி கொள்வேன்'' என்று இராவணன் வணங்கா முடியனாய் தனக்கே உரிய கம்பீரத்துடன் பேசுகிறான்.

கவிச்சக்கரவர்த்தி கம்பன் தரும் காட்சிகளில் இது ஒரு அற்புதமான காட்சியாகும். உலகப் பேரிலக்கியங்களில் எங்கும் காணாத ஓர் அதி அற்புதமான காட்சியாகும். இராவணன் ஒரு

தன்னிகரில்லாத தனி வீரன். இராமனைத் தவிர அவனை வேறு யாராலும் வெல்ல முடியாது. இராமனோ திருமாலின் திரு அவதாரம். இராமன் தனது அவதாரக் கடமையாக தீமையின் வடிவமான இராவணனை வென்று உலகைக் காப்பாற்றுகிறான்.

மனித சமுதாய வாழ்வில் தீமைகள் வலுவானவை. அத்தீமைகளை வெல்வது என்பது அவ்வளவு சுலபமான வேலையல்ல, அதற்குத் தெய்வத் துணையும் கடுமையான மனித முயற்சியும் துணையும் தேவைப்படுகிறது.

தீமையின் வடிவமான இராவணனும் சக்தி மிக்கவன். யாராலும் வெல்ல முடியாத வல்லமை மிக்கவன். தன்னேரில்லாத மாவீரன். அவன் சிறந்த வீரன் மட்டுமல்ல. சிறப்பான பல ஆற்றல்களையும் கொண்டவன். நான் மறைகளை நன்கு கற்று அறிந்தவன். இசை மேதை. வீணையில் வல்லவன். சிவபக்தன். தேவர்களையும் வென்றவன். கம்பீரமாக ஆட்சியை நடத்தி வந்தவன். அனைவரும் அவனுக்கு மரியாதை செலுத்தினர். அவனைக் கண்டு பயந்தனர். கும்பகருணனும் கூட தன் அண்ணனுடைய தவறுகளையும் குறைகளையும் எடுத்துக் கூறினாலும் கடைசியில் அவனுடைய ஆணைக்குக் கட்டுப்பட்டு கடும் போர் செய்து இராமன் கணையால் மாண்டான்.

இப்போது மாவீரன் மேகநாதன் அனுபவத்தில் உண்மையை உணர்ந்து சீதையை விட்டு விடும்படி கூறுகிறான். அப்போது இராவணன் எனக்கு யார் துணையும் தேவையில்லை. என்னை நோக்கியே நான் இந்நெடும் பகை தேடிக் கெண்டேன். என் உயிரை யேனும் விடுவேனேயல்லாமல் சீதையை விட மாட்டேன். நான் எனது முயற்சியில் வெற்றி கொள்ளாவிட்டாலும் இராமன் பேர் இருக்கும் வரையிலும் என் பெயரும் நிலைத்து நிற்கும். இன்றுளார் நாளை மாள்வார், புகழுக்கோர் இறுதியில்லை.

நீ கவசங்களைக் கழற்றி வைத்து விட்டு, ஆயுதங்களை வைத்து விட்டுப் போர்த் தொழில் சிரமம் போக்கச் செல்வாய். எல்லாவற்றையும் நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்று தனது தலை மகனிடம் கூறுகிறான்.

கவிச்சக்கரவர்த்தி இக்காட்சியை மிக அருமையாக எடுத்து கூறுகிறார்.

''முன்னையோர் இறந்தோர் எல்லாம் இப்பகை முடிப்பர் என்றும்
பின்னையோர் நின்றார் எல்லாம் வென்று அவர்ப் பெயர்வர் என்றும்
உன்னை, நீ அவரை வென்று தருதி என்று உணர்த்தும் அன்றால்,
என்னையே நோக்கி யான் இந் நெடும்பகை தேடிக் கெண்டேன்''

''பேதமை உரைத்தாய் பிள்ளாய்! உலகெலாம் பெயரப் பேராக்
காதை என்புகழி னோடும் நிலைபெற அமரர் காண
மீதெழு மொக்குள் அன்ன யாக்கையை விடுவது அல்லால்
சீதையை விடுவது உண்டோ? இருபது திண் தோள் உண்டால்''

''வென்றிலேன் என்ற போதும், வேதம் உள்ளளவும் யானும்
நின்றுளேன் அன்றோ, மற்ற இராமன் பேர் நிற்கும் ஆயின்
பொன்றுதல் ஒரு காலத்துத் தவிருமோ? பொதுமைத்து அன்றோ?
இன்றுளார் நாளை மாள்வார்; புகழுக்கும் இறுதியுண்டோ?''

என்று இராவணன் மேகநாதனிடம் கூறி நீ ஓய்வு எடுத்துக் கொள். நான் போருக்குச் செல்கிறேன் என்று கூறி முடித்தான்.

இங்கு இராவணனுடைய கம்பீரத்தின் அவனுடைய தனியாண்மையின் உச்சமாக சீதையின் மீதான பெருங்காதல் மேலோங்கி நிற்பதைக் காண்கிறோம்.

இங்கு இரு முக்கியமான வாசகங்கள் கம்பநடார் கவிதைகளில் வருவதைக் காண்கிறோம்.

''யாக்கையை விடுவதல்லால் சீதையை விடுவதுண்டோ? என்றும்

வென்றிலேன் என்ற போதும் வேதம் உள்ளளவும் இராமன் பேர் நிற்குமாயின் என் பேரும் நிற்கும் மன்றோ?

என்று இராவணன் கூறுவது அவனுடைய உறுதிமிக்க இறுதியான மனோ நிலையைத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

❖❖❖

31. இந்திரசித்தனின் இறுதிப்போர்

இந்திரசித்தன் தனது தந்தையின் சொற்களைக் கேட்ட பின்னர் ''எந்தாய் ஒழிந்தருள் சீற்றம் யான் சொன்ன உறுதிகளைப் பொறுத் தருள்வாய் யான் களத்திற்குச் செல்கிறேன் என்று கூறி தெய்வத் தேர் மீது ஏறினான்.

"சொல்லி யென்பலவும்? நீ நின்
இருக்கையைத் தொடர்ந்து தோளில்
புல்லிய பகழி வாங்கிப்
போர்த் தொழில் சிரமம் போக்கி,
எல்லியும் கழித்து என்னா
எழுந்தனன்; எழுந்து பேழ்வாய்
வல்லியம் முனிந்தால் அன்னான்
வருகதேர் விரைவில் என்றான்"

போர்க்களத்தில் மேக நாதன் கடும் போர் செய்தான். இலக்குவன் அவனுடைய அம்புக் கூட்டை உடைத்து அவனுடைய தேர்ச் சாரதியை அழித்தான். பின்னர் இந்திர சித்தன் தானே தேரை ஓட்டிக் கொண்டு தன் உடம்பிலே பதிந்திருந்த அம்புகளைப் பிடுங்கி அவற்றைத் தனது வில்லிலே தொடுத்துப் போர் புரிந்தான். அவனுடைய வீரத்தைக் கண்டு அனைவரும் வியப்படைந்தனர்.

கடைசியில் இலக்குவன் இறையவன் இராமன் பெயருடைய தெய்வீகக் கணையை மேகநாதன் மீது ஏவினான். பிறை வடிவிலான முறையைக் கொண்ட அக்கணை இந்திரசித்தன் சிரத்தைத் தள்ளியது.

"மறைகளே தேறத்தக்க, வேதியர் வணங்கற்பால
இறையவன் இராமன் என்னும் நல்அற மூர்த்தி என்னின்,
பிறை எயிற்று இவனைக் கோறி! என்று ஒரு பிறைவாய் வாளி
நிறை உற வாங்கி விட்டான் உலகெலாம் நிறுத்தி நின்றான்"

"நேமியும், குலிச வேலும் நெற்றியின் நேரும்புக் கண்ணான்
நாம வேல்தானும், மற்றை நான் முகன் கடையும் நாணத்
தீ முகம் கதுவ ஓடிச் சென்று அவன் சிரத்தைத் தள்ளிப்
பூ மழை வானோர் சிந்தப் போலிந்தது அப்பகழிப் புத்தேன்"

என்று கம்பநாடன் கவிதை குறிப்பிடுகிறது.

இராமன் இளையவனைப் பாராட்டினான்

''கம்ப மதத்துக காளியானைக்
காவல் சனகன் பெற்றெடுத்த
கொம்பும், என்பால் இனிவந்து
குறுகினாள் என்று அகம் குளிர்ந்தேன்,

வம்பு செரிந்த மலர்க் கோயில்
மறையோன் படைத்த மாநிலத்தில்
தம்பியுடையான் பகை அஞ்சான்'
என்னும் மாற்றம் தந்தனையால்"

என்றும் கூறிப் பாராட்டினான்.

இராவணன் தன் மகன் போர்க்களத்தில் மாண்ட செய்தி கேட்டு பெரும் துக்கம் அடைந்தான்.

"சினத்தோடும் கொற்றம் முற்ற இந்திரன் செல்வம் மேவ
நினைத்து முடித்து நின்றேன்; நேர் இழை ஒருத்தி நீரால்
எனக்கு நீ செய்யத்தக்கக் கடன் எலாம் ஏங்கி ஏங்கி
உனக்கு நான் செய்வது ஆனேன்,
என்னின் யார் உலகத்து உள்ளார்''

என்று சோகமுற்றான்.

மேகநாதனை ஈன்றெடுத்த தாய் மண்டோதரி தேவி தன் மகன் மாண்ட செய்தி கேட்டு மயங்கி அழுதாள்

''பஞ்சு எரி உற்றது என்ன அரக்கர்தம் பரவை எல்லாம்
வெஞ்சின மனிதர் கொல்ல விளிந்ததே; மீண்டதில்லை;
அஞ்சினேன்! அஞ்சினேன் அச்சீதை என்ற அமுதால் செய்த
நஞ்சினால் இலங்கை வேந்தன் நாளை இத்தகையன் அன்றோ?''

என்று புலம்பி அழுகிறாள்.

இராவணன் தன் மகன் மாண்ட செய்தியைக் கேட்ட ஆத்திரத்தில் சீதையைக் கொல்வேன் என்று சினம் கொண்டு ஓடினான். அப்போது அவனுடைய முதலமைச்சன் மகோதரன் அவனைத் தடுத்து அவனை வணங்கி ''சீதையைக் கொல்வதால் தீராத பழி வந்து சேரும் அத்துடன் நாளைப் போர்க்களத்தில் நீ இராமனை வென்று திரும்பும் போது சீதை இல்லாமல் போனால் நீ கொண்ட முயற்சி என்னவாகும், என்று அவனுடைய உள்ளத்தில் சீதைபால் இருந்த உணர்வையும் கிளப்பி விடுகிறான்.

''நீர் உளதனையும் சூழ்ந்த நெருப்புளதனையும், நீண்ட
பார் உளதனையும் வானப் பரப்புள தனையும், காலின்
போர் உளதனையும், பேராப் பெரும்பழி பிடித்தி போலாம்;
போர் உளதனையும் வென்று, புகழ் உளதனையும் உள்ளாய்!''

''மங்கையைக், குலத்து உளாளைத்
தவத்தியை முனிந்த வாளால்
சங்கை ஒன்று இன்றிக் கொன்றால்,
குலத்துக்கே தக்கான்'' என்று
கங்கை அம் சென்னியானும்
கண்ணனும், கமலத் தோனும்
செங்கையும் கொட்டி உன்னைச்
சிரிப்பரான், சிறியன் என்னா!"

அனைவரும் அற்பம் என்று கூறிச் சிரிப்பார்கள் எனவே அச்செய்கை

''நிலத்து இயல்பு அன்று; வானின் நெறியன்று, நீதி அன்று;
தலத்து இயல்பு அன்று; மேலோர் தருமமேல் அதுவும் அன்று;
புலத்தியன் மரபின் வந்து புண்ணிய மரபு பூண்டாய்,
வலத்தியல்பு அன்பு, மாயாப் பழி கொடு மறுகு வாயோ?"

என்று எடுத்துக் கூறி,

''இன்று நீ இவளை வாளால் எறிந்து போய், இராமன் தன்னை
வென்று மீண்டும் இலங்கை மூதூர் எய்தினை வெதும்புவாயோ?
பொன்றினள் சீதை; என்றே போவார்கள் அவர் தாம்; அல்லால்
வென்றிட முடியாது என்னும் வீரமோ விளம்பல்! என்றான்''

என்று கூறி இராவணனைத் தடுத்தான்.

இராவணனும் நிதானம் அடைந்து கூர்வாளைக் கீழே போட்டு நாளை போர்க்களம் சென்று அவர்களைக் கொல்லாது மீளேன் என்று சூளுரைத் தான் என்பதைக் கம்பன் குறிப்படுகிறார்.

போரில் மாண்ட இந்திரசித்தனுடைய உடலை போர்க்களத்திற்குச் சென்று இராவணன் தூக்கிக் கொண்டு நகருக்குள் வந்தான். மகனுடைய உடல் மீது விழுந்து மண்டோதரி அழுது புரண்டாள். மகன் மாண்டு போன செய்தி இராவணனை உலுக்கி விட்டது. சினம் தலைக்கேரி கோப வேகத்தில் சீதையைக் கொல்வேன் என்று கூறி கூர்வாள் எடுத்துக் கொண்டு ஓடினான்.

முதலமைச்சன் மகோதன் அவனைத் தடுத்து அவனுடைய வீரம், வானளாவிய புகழ், நெறிமுறை, நீதி, குலத்திய மரபு முதலியவைகளையெல்லாம் எடுத்துக் காட்டிக் கடைசியில் சீதை

மீது அவனுக்குள்ள ஆசையையும் எடுத்துக் கூறி அவனுடைய சினத்தைத் தடுத்து நிதானப்படுத்தினான்.



32. மூலபலம்

இராவணன் உலகம் முழுவதிலும் உள்ள அரக்கர் படைத் தலைவர்கள் அனைவரையும் அழைத்தான். அவர்கள் எல்லோரும் திரண்டு இலங்கை வந்து சேர்ந்தனர். அவர்கள் இராவணனிடம் உன் வருத்தத்திற்கு ஏது காரணம் எனறு கேட்க, சீதை மீதான காதலினால் தோன்றிய நிலைமை முழுவதையும் விவரித்துக் கூறினான்.

‘‘மாதரார்களும், மைந்தரும், நின் மருங்கு இருந்தார்
பேது ராதவர் இல்லை, நீ வருந்தினை பெரிதும்;
யாது காரணம் அருள்’ என அனையவர் இசைத்தார்;
சீதை காதலின் பிறந்துள பரிசு எலாம் தெரித்தார்”

என்பதைக் கம்பன் குறிப்பிடுகிறார்.

அவர்கள் யார் என்று வன்னி என்பவன் கேட்ட போது மாலியவான், ‘‘குரங்கு வந்ததும் இலங்கைக்கு எரியூட்டியதும் அக்கனைக் கொன்றதும், தூதுரைத்ததும் கடலில் அணை கட்டி வானர சேனை படையெடுத்து வந்ததும் போர் நடத்தியதும் மீண்டதும் கும்பகர்ணனும் மற்ற மக்களும் இந்திரசித்தனும் மாண்டதும் பற்றிய விவரங்களை யெல்லாம் கூறி இவையெல்லாம் நடக்கக் காரணம்.

‘‘இது இயற்கை; ஓர் சீதை என்ற இருந்தவத்து இயைந்தாள்
பொது இயற்கைதீர் கற்புடைப் பத்தினி பொருட்டால்
விதிவிளைத்தது; அவ்வில்லியர் வெல்க; நீர் வெல்க;
முது மொழிப்பதம் சொல்லினேன்! என்றுரை முடித்தான்”

இவர்களையெல்லாம் மடிய விட்ட காரணம் என்ன? என்று வன்னி என்னும் ஒரு படைத் தலைவன் (அவன் புஷ்கரத் தீவுக்கு அரசன்) கேட்டான். அதற்கு இராவணன் எதிரிகளை யெல்லாம் அற்பமானவர்கள் வெறும் மனிதரும் குரங்குகளும் என்று நினைத்தேன், என்று கூறினான்.

இராமன் போர்க் கோலம் பூண்டு வில்லினைத் தொழுது வாங்கி ஏற்றினான். மூல பலப்படை அழிந்தது. அனைவரும் இராமனை வாழ்த்தி வணங்கினர்.

"தாய் படைத்துடைய செல்வம் ஈகெனத் தம்பிக்கு ஈந்து
வேய்படைத்துடைய கானம், விண்ணவர் தவத்தின் மேவி
தோய் படைத் தொழிலால் யார்க்கும் துயர் துடைத்தானை நோக்கி
வாய் படைத்துடைதார் எல்லாம் வாழ்த்தினார்; வணக்கம் செய்தார்"

❖❖❖

33. இராம இராவணப் போர்

''கருமமும் கடைக்கண் உறுஞானமும்
அருமை சேரும் அவிஞ்ஞையும் விஞ்ஞையும்
பெருமைசால் கொடும் பாவமும், பேர்கலாத்
தருமமும் எனச் சென்று எதிர்த்தாக்கினார்"

இவ்வாறு அறிவும் அறியாமையும், ஞானமும், அஞ்ஞானமும், தருமமும் அதருமமும் எதிர்எதிர் நின்று மோதுவதைப் போல இராமனும் இராவணனும் நின்று மோதினர்.

இராவணன் ஏவிய படைகளை யெல்லாம் இராமன் பயனற்று விழும்படி செய்தான். அதனால் இராவணனுடைய பலம் குறைந்தது. அவனுடைய சேனைகளும் அழிந்தன. அப்போது இராவணன் ஒரு மாயக் கணையை இராமன் மீது ஏவினான். அதை எதிர்த்து இராமன் ஞானக் கணையை ஏவினான்.

இராமன் தன் கணைகளால் இராவணனுடைய தலைகளை சிதரடித்தான். கடைசியில் அயன் படையையும் சக்கரப் படையையும் இணைத்து இராமன் இராவணனுடைய நெஞ்சைக் குறிவைத்து ஏவினான்.

''அக்கணத்தின் அயன்படை ஆண்தகைச்
சக்கரப்படை யோடும்தழீஇச் சென்று
புக்கது அக்கொடி யோன்உரம்; பூமியும்
திக்கனைத்தும், விசும்பும் திரிந்தவே''

இராம பாணத்தினால் வீழ்ந்த இராவணனைப் பற்றி ஒரு அற்புதமான காட்சியை கம்பர் பிரான் காட்டுகிறார்.

''முக்கோடி வாழ்நாளும், முயன்றுடைய
பெருந்தவமும், முதல்வன் முன்னாள்
எக்கோடி யாராலும் வெலப்படாய்
எனக் கொடுத்த வரமும், ஏனைத்
திக்கோடும் உலகனைத்தும் செருக்கடந்த
புயவலியும் தின்று மார்பில்
புக்கோடி உயிர் பருகிப் புறம் போயிற்று
இராகவன் தன் புனித வாளி''

என்றும்

''வெம்மடங்கல் வெகுண்டனைய சினம் அடங்க
மனம் அடங்க, வினையம் வீயத்
தெம்மடங்கப் பொரு தடக்கைச் செயல் அடங்க
மயல் அடங்க, ஆற்றல் தேயத்
தம் மடங்கு முனிவரையும் தலையடங்கா
நிலை அடங்கச் சாய்ந்த நாளின்
மும்மடங்கு பொலிந்தன, அம்முறை துறந்தான்
உயிர் துறந்த முகங்கள் அம்மா''

என்றும் கவிச்சக்கரவர்த்தி கம்பநாடர் தனது சிறப்பு மிக்க உலகப் புகழ் மிக்க தமிழ்க் கவிதைகளில் இராவணனுடைய வீழ்ச்சியைப் பற்றிக் குறிப்பிடுகிறார். இந்தப் பாடல்கள் தமிழ் இலக்கியத்தில் உலக இலக்கியத்தில் ஈடு இணையற்ற பாடல்களாகும்.

இவ்வாறு அம்முறை துறந்த இராவணனுடைய சினமும், மனமும் அடங்கியது, சொல்லும் மயலும் அடங்கியது. சீதை மேல் வைத்த அவனுடைய பெருங்காதல் அடங்கியது.

இராமன் கணையால் அடிபட்டு இராவணன் வீழ்ந்தான்.

''தேரினை நீ கொடு விசும்பல் செல்கென்ன
மாதலியைச் செலுத்திப் பின்னர்ப்
பாரிடை மீதினின் அணுகித் தம்பியொடும்
படைத்தலைவர் எவரும் சுற்றப்
போரிடை மீண்டு ஒருவருக்கும் புறம் கொடாப்
போர் வீரன், பொருது வீழ்ந்த
சீரினையே மனம் உவப்ப உருமுற்றம்
திருவாளன் தெரியக் கண்டான்''

என்று கம்பன் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு போர்க்களத்தில் கிடந்த மாவீரனின் முதுகில் ஒரு தழும்பு இருந்ததைக் கண்டு இராமன் திடுக்கிட்டான். இவனைக் கொன்றதில் எனக்குப் பெருமையில்லை எனக் கூறினான். அப்போது அதை மறுத்து வீடணன் மனம் வெதும்பி ''செவ்வியின் தொடர்ந்த அல்ல செப்பலை செல்வ'' என்ற குறிப்பிட்டு,

''ஆயிரம் தோளினானும், வாலியும் அரிதின் ஐய,
மேயின வென்றி விண்ணோர் சாபத்தின் விளைந்த; மெய்ம்மை,
தாயினும் தொழத் தக்கான் மேல் தாங்கிய காதல் தன்மை
நோயும் நின் முனிவும் அல்லால், வெல்வரோ நுவலற்பாலார்?''

என்று வீடணன் கூறியதைக் கம்பன் குறிப்பிடுகிறார்.

இராவணன் மாவீரன், சுத்தவீரன், அவன் தாயினும் தொழத் தக்கவன். அவனுக்கு ஏற்பட்ட சாபத்தினால் கார்த்த வீரியார்ச்சுனன் மற்றும் வாலியால் ஏற்பட்ட காயத் தழும்புகளின் அடையாளமே தவிர அவை வேறில்லை. அவனுடைய குறையெல்லாம் அவனிடம் நிலவிய பெருங்காதல் நோயும் உனது முனிவும் தவிர வேறு இல்லை'' என்று இராவணனுடைய பெருமைகளைப் பற்றியும் ஏற்பட்ட குறையைப் பற்றியும் வீடணன் கூறுகிறான்.

அப்படியானால் இறந்தவன் மீது வைராக்கியம் காட்ட வேண்டிய தில்லை, நடக்க வேண்டிய கடன்களைச் செய்யுங்கள் என்று இராமன் கூறினான்.

வீடணன் தனது அண்ணன் இராவணன் உடல் மீது விழுந்து புலம்புகிறான். வீடணனுக்கு இராவணன் மீது அளவு கடந்த அன்பும், மதிப்பும் மரியாதையும் இருந்தது. அதனால் தான் தாயினும் தொழத்தக்கான் என்று குறிப்பிடுகிறான். வீடணனுக்குத் தன் அண்ணன் மீதுள்ள குறையெல்லாம் அவனுடைய பெருங்காதல் நோயும் தர்மத்தை மீறிய அவனுடைய செயல்களும் தான்.

"உண்ணாதே உயிர் உண்ணாது ஒரு நஞ்சு;
சானகி என்னும் பெரும் நஞ்சு, உன்னைக்
கண்ணாலே நோக்கவே போக்கியதே
உயிர், நீயும் களப்பட்டாயே!
எண்ணாதேன் எண்ணிய சொல் இன்றினித்தான்
எண்ணுதியோ? எண்ணி ஆற்றல்
அண்ணாவோ! அண்ணாவோ! அசுரர்கள் தம்
பிரளயமே! அமரர் கூற்றே!"

''ஓராதே ஒருவன்தன் உயிராசைக்
குலமகள் மேல் உடைய காதல்
தீராத வசை என்றேன்; எனை முனிந்த
முனிவு ஆறித் தேறினாயோ?
போர் ஆசைப் பட்டெழுந்த குலம் முற்றும்
பொன்றவும் தான் பொங்கி நின்ற
பேராசை பெயர்ந்த தோ?பெயர்ந்து ஆசைக்
கரி இரியப் புருவம் பேர்த்தாய்''

''போர் மகளைக் கலை மகளைப் புகழ் மகளைத்
தழுவியகை பொறாமை கூரச்
சீர்மகளைத் திருமகளைத் தேவர்க்கும்
தம் மோயைத் தெய்வக் கற்பின்
பேர்மகளைத் தழுவுவான் உயிர் கொடுத்துப்
பழி கொண்ட பித்தா! பின்னைப்
பார்மகளைத் தழுவினையோ! திசையானை
மறுப்பு இறுத்த பணைத்த மார்பால்''

என்று கூறி வீடணன் புலம்புகிறான். இன்னும் இராவணனுடைய மனைவியர்,

அறம் தொலைவுற மனத்து அடைத்த சீதை மறந்திலையோ இனும் எமக்கு உன் வாய் மலர் திறந்திலை விழித்திலை, அருளும் செய்கிலை, இறந்தனையோ'' என இரங்கி ஏங்கினர்.

மண்டோதரி தேவி இராவணனடைய முதல் மனைவி பட்ட மகிஷி. மாவீரன் மேகநாதனைப் பெற்ற தாய். கற்பிற் சிறந்தவள். தன் கணவன் மீது நீங்காத அன்பு கொண்டவள். இராவணனடைய உடல் மீது விழுந்து புலம்பித் தானும் உயிர் விடுகிறாள்.

''வெள் எருக்கம் சடை முடியான் வெற்பு எடுத்த
திருமேனி, மேலு கீழும்
எள் இருக்கும் இடன் இன்றி, உயிர் இருக்கும்
இடம் நாடி இழைத்தவாறோ!
கள் இருக்கும் மலர்க் கூந்தல் சானகியை
மனச் சிறையில் காந்த காதல்
உள் இருக்கும் எனக் கருதி உடல் புகுந்து
தடவிய தோ ஒருவன் வாளி''

என்றும்,

''காந்தையருக்கு அணி அனைய சானகியார்
பேரழகும், அவர்தம் கற்பும்
ஏந்து புயத்து இராவணனார் காதலும், அச்
சூர்ப்பணகை இழந்த மூக்கும்
வேந்தர் பிரான் தயரதனார் பணி தன்னால்
வெங்கானில் விரதம் பூண்டு
போந்ததுவும், கடைமுறையே புரந்தானார்
பெருந்தவ மாய்ப் போயிற்றம்மா''

என்றும்,

''அறை கடையிட்டு அமைவுற்ற முக்கோடி
ஆயுவும் பேரறிஞர்க்கேயும்
உரை கடையிட்டு அளப்பரிய பேராற்றல்
தோள் ஆற்றற்கு உலப் போ இல்லை;
திரை கடையிட்டு அளப்பரிய வரம் என்னும்
பாற்கடரைச் சீதை என்னும்
பிரை கடையிட்டு அழிப்பதனை அறிந்தேனோ
தவப்பயன் நின் பெருமை பார்ப்பேன்''

"என்று அழைத்தனள்,
ஏங்கி எழுந்து அவன்
பொன் தழைத்த
பொரு அறு மார்பினைத்
தன் தழைக்
கைகளால் தழுவித் தனி
நின்றழைத்து உயிர்த்தாள்,
உயிர் நீங்கினாள்''

இவ்வாறு மண்டோதரி அழுது புலம்பி தனது கணவன் உடல் மீது விழுந்து அவனைத் தழுவி உயிா விட்டாள் என்பதைக் கம்பன் மிகுந்த அவலச் சுவையுடன் குறிப்பிட்டுக் கூறுகிறார்.

இப்பாடல்களில் எல்லாம் இராவணனுடைய பெருங்காதல் நோய் பற்றி எடுத்துக் கூறப் படுவதைக் காண்கிறோம்.

இராவணன் பேரரசனாக இருந்தவன். அவனிடம் எத்தனையோசிறப்புகள் இருந்தன. இந்திரற்கு இந்திரன் எழுதல்

ஆகாச் சுந்தரன் நான்முகன் மரபில் தேன்றியவன், சிறந்த வேதங்களை அறிந்தவன். ஈசன் இருக்கும் கயிலை மலையையும் வேரோடு பறிக்கும் வல்லமை படைத்தவன், திசையானைகளை எதிர்த்துப் போரிட்டுப் பொடியாக்கும் தொள்வலி படைத்தவன். நான் முகன் அருளால் முடிவில்லாத ஆண்டுகளை ஆயுளாகக் கொண்டவன். சிவபெருமான் கொடுத்தவாளை ஆயுதமாகக் கொண்டவன், கோள்களை யெல்லாம் சிறைவைக்கும் ஆற்றல் மிக்கவன், விரிந்த கேள்வி ஞானங்கள் நிறைந்தவன், அழகு மிக்கவன் பெருமை மிக்கவன், இன்னும் எத்தனை பெருமைகள் இருந்தாலும் பெண்ணாசை பெண்ணாடல் பெருங்காதல் கடைசியில் அவனை வீழ்த்தி விட்டது.

அரசியல் என்பது பொது வாழ்க்கை மக்கள் சேவை, நாட்டுப்பற்று ஆகியவற்றில் அர்ப்பணித்தல் ஆகியவற்றை வளர்த்துக் கொள்ளுதல் அதில் பெருங்காதலும் பெண்ணாடலும் புகுமானால் அரசியல் தலைமையின் பெருமைகளைக் குலைத்துவிடும்.





34. சீதையின் விடுதலை அனைவரும் அயோத்தி செல்லுதல்

வீடணனுக்கு முடிசூட்டப் படுகிறது. மாருதி சீதையிடம் சென்று வெற்றியைப் பற்றிக் கூறுகிறாள். சீதை பெரு மகிழ்ச்சியடைகிறாள்.

சீதையைச் சீரோடு அழைத்து வருபடி இராமன் வீடணனிடம் கூறினான்.

''காணியைப் பெண்மைக் கெல்லாம்;
கற்பினும் அணியைப்; பொற்பின்
ஆணியை, அமிழ்தின் வந்த
அமிழ்தினை, அறத்தின் தாயைச்
சேண் உயர் மறையை எல்லாம்
முறை செய்த செல்வன் என்ன
வேணியை அரம்பை மெல்ல
விரல் முறை சுகிர்ந்து விட்டாள்''

என்று கம்பர் குறிப்பிடுகிறர்.

சீதை சீரோடும் சிறப்போடும் அழைத்து வரப்பட்டாள். அவள் இராமனை நோக்கினாள்.

"அருந்ததி அனைய நங்கை, அமர்க்களம் அணுகி, ஆடல்
பருந் தொடு, கழுகும் பேயும் பசிப்பிணி தீருமாறு
விருந்திரு வில்லின் செல்வன், விழா அணி விரும்பி நோக்கிக்
கருந்தடம் கண்ணும் நெஞ்சும் களித்திட இனைய சொன்னாள்"

''சீலமும் காட்டி, என் கணவன் சேவகக்
கோலமும் காட்டி, என் குலமும் காட்டி, இஞ்
ஞாலமும் காட்டிய கவிக்கு, நாள் அறாக்
காலமும் காட்டும் கொல் என்தன் கற்பு என்றாள்"

சீதை இராமன் முன்பு சென்று நேரில் அவளைக் கண்டாள், அவனும் அவளைக் கண்டான். அதை,

''கற்பினுக்கு அரசினைப் பெண்மைக் காப்பினைப்
பொற்பினுக்கு அழகினைப் புகழின் வாழ்க்கையைத்
தற்பிரிந்து அருள்புரி தருமம் போலியை
அற்பின் அத்தலைவனும் அமைய நோக்கினான்''

என்று கம்பர் மிகச் சிறப்பாகக் குறிப்பிடுகிறார்.

இராமன் சீதையைப் பார்த்து

''உன்னை மீட்பன் பொருட்டு உவரி தூர்த்து ஒளிர்,
மின்னை மீட்டுறு படை அரக்கர் வேர் அறப்
பின்னை மீட்டுறு பகை கடந்திலேன்; பிழை
என்னை மீட்பான் பொருட்டு இலங்கை எய்தினேன்''

என்றும்,

''பெண்மையும், பெருமையும் பிறப்பும், கற்பு எனும்
திண்மையும், ஒழுக்கமும், தெளிவும், சீர்மையும்
உண்மையும் நீ ஒருத்தி தோன்றலால்
வண்மையில் மன்னவன் புகழின் மாய்ந்ததால்''

எனவே நான் என்ன கூறுவது? ஒன்று நீ சாக வேண்டும் அல்லது தக்கது ஒரு நெறியில் போவாயாக'' என்று கூறினான்.

இராமனுடைய இந்த வார்த்தைகளைக் கேட்டதும்அனைவரும் வருத்தமடைந்தனர். கலங்கினர். அப்போது சீதை சீறினாள்.

''எத்தவம், எந்நலம், என்றன் கற்பு, நான்
இத்தனை காலமும் உழந்த ஈதெலாம்
பித்து எனலாய், அறம் பிழைத்தலால், அன்றே
உத்தம நீ மனத்து உணர்ந்திலாமை யால்''

''பங்கயத்து ஒருவனும், விடையின் பாகனும்
சங்குகைத் தாங்கிய தரும மூர்த்தியும்
அங்கையின் நெல்லி போல் அனைத்து நோக்கினும்
மங்கையர் மன நிலை உணரவல்லரோ?''

இங்கு ஒரு முக்கியமான உண்மை எடுத்துக் கூறப்படுகிறது. பிரம்மா, சிவன், திருமால் ஆகிய மும் மூர்த்திகளானாலும் மங்கையர் மன நிலையை உணர வல்லார்களாக இல்லை என்று சீதை கூறுவது, கம்பன் காட்டும் சிறந்த மிகச் சிறந்தக் கருத்தாகும். இங்கு பெண்ணின் பெருமையைக் கம்பன் உணர்த்துகிறார்.



இராமன் வனம் செல்வதற்குப் புறப்பட்டதைக் குறிப்பிட்ட போது

''தையல் தன்கற்பும், தன்தகவும் தம்பியும்
மையறு கருணையும், உணர்வும், வாய்மையும்
செய்யதன் வில்லுமே சேமம் ஆகக் கொண்டு
ஐயனும் போயினான் அல்லின் நாப்பணே''

என்று கம்ப நாடர் அடுத்து வரும் வரலாறு முழுவதையும் இந்த நான்கு வரிகளில் குறிப் பிடுவதைக் காண்கிறோம்.

இங்கு தையலின் கற்பு, இரமபிரானின் தகவு (பெருந் தன்மை) தம்பி, அவர்களின் கருணை உணர்வு, வாய்மை வில்லின் வல்லமை அனைத்தும் வனவாசத்தை முடித்து இப்போது இலங்கையின் களத்திலே நிற்கிறது. சீதை தீப்புகத் தயாரானாள். அதைக் கண்டு நான்கு மறைகளும் நல்லறமும் மற்ற உயிர்கள் யாவையும் அரற்றின.

சீதை தீ புகுந்தாள்,

''கணத்தினால் கடந்த பூண்முலைய கை வளை
மனத்தினால், வாக்கினால், மறுவுற்றேன் எனில்
சினத்தினால் சுடுதியால் தீச் செல்வா'' என்றாள்
புனைத்துழாய்க் கணவற்கும் வணக்கம் போக்கினாள்''

என்று கூறி சீதா தீக்குள் புகுந்தாள்.

அப்போது அன்னை சீதையின் கற்பின் தீயினால் அவள் புகுந்த தீ அவிந்தது.

''நீந்தரும் புனலிடை நிவந்த தாமரை
ஏய்ந்த தன் கோயிலே எய்துவாள் எனப்
பாய்ந்தனள், பாய்தலும் பாலின் பஞ்சு எனத்
தீய்ந்தது அவ்வெரி, அவள் கற்பின் தீயினால்''

என்று கம்ப நாடர் மிகவும் உருக்கமாகக் குறிப்பிடுகிறார்.

''பெய்யுமே மழை? புவி பிளப்பது அன்றியே
செய்யுமே பொறை? அறம் நெறியில் செல்லுமே?
உய்யுமே உலகு? இவள் உணர்வு சீறினால்
வையுமேல் மலர் மிசை அயனும் மாயுமே''

என்று அன்னையைக் கைகளால் தாங்கிய தீக்கடவுள் கூறுகிறார்.

''இனையது ஆகலின், எமையும், மூன்று உலகையும் ஈன்று
மனையின் மாட்சியை வளர்த்த எம் மோயினை, வாளா
முனையல் என்று அது முடித்தனன்; முந்து நீர் முளைத்த
சினையின் பந்தமும், பகுதிகள் அனைத்தையும் செய்தோன்''

என்றும், நான்முகன் கூறியது பற்றியும்

''என்னும் மாத்திரத்து ஏறு அமர்க் கடவுளும் இசைத்தான்
உன்னை நீ ஒன்றும் உணர்ந்திலை போலுமால் உரவோய்!
முன்னை ஆதியாம் மூர்த்தி நீ! மூவகை உலகின்
அன்னை சீதையாம் மாதுநின் மார்பின் வந்து அமைந்தாள்''

என்று சிவபெருமான் கூறியது பற்றியும் கம்பநாடர் எடுத்துக் கூறுகிறார்.

வானத்திலிருந்து இரங்கி வந்து தசரதன் இராமனைக் கட்டித் தழுவியும் இலக்குவனைப் புகழ்ந்தும் சீதைக்கும் ஆறுதல் கூறி,

''நங்கை! மற்று நின் கற்பினை உலகுக்குக் நாட்ட
அங்கி புக்கிடு என்று உரைத்தது, அது மனத்து அடையேல்
சங்கை உற்றவர் தேறுவது உண்டு; அது சரதம்;
கங்கைநாடு உடையக் கணவனை முனிவுறக் கருதேல்.''

''பொன்னைத் தீயிடைப் பெய்வது, அப்பொன்னுடைத் தூய்மை
தன்னைக் காட்டுதற்கு என்பது மனக் கொளல் தகுதி;
உன்னைக் காட்டினன் கற்பினுக்கு அரசி என்று உலகில்
பின்னைக் காட்டுதற்கு அரியது என்று எண்ணி, அப்பெரியோன்''

''பெண் பிறந்தவர் அருந்ததி யேமுதற் பெருமைப்
பண்பு இறந்தவர்க்கு அருங்கலம் ஆகிய பாவாய்!
மண் பிறந்தகம் உனக்கு; நீ வானின்று வந்தாய்!
எண்பு இறந்தநின் குணங்களுக்கு இனி இழுக்கு இலை; யால்''

என்று சீதையைப் புகழ்ந்து அப்பெரியோன் பேசினான்.

அதன் பின் அனைவரும் ஒன்று சேர்ந்தனர்.

இராமனும் சீதையும் இலக்குவனும் வீடணனும், அனுமனும், வானரத் தலைவர்களும் விமானம் ஏறி நந்தியம் பதியை அடைந்தனர்.

விமானம் புறப்பட்டுச் செல்லும் போது இராமன் சீதைக்கு இலங்கையைச் சுட்டிக் காட்டினான். இராவணனும் இந்திர சித்தனும் இறந்த இடத்தைக் காட்டினான். சேதுவைக் காட்டி அதன் பெருமைகளை விளக்கினான். சேது மிகவும் புண்ணியமான இடம்.

''கங்கையே, யமுனை, கோதாவரி, நருமதை, காவேரி
பொங்கு நீர் நதிகள் யாவும் படிந்து அலால் புன்மை போகா;
சங்கு எறி தரங்க வேலை தட்ட இச் சேது என்னும்,
இங்கிதின் எதிர்ந்ததோர் புன்மை யாவையும் நீக்கும் அன்றே!''

என்று இராமபிரான் கூறுகிறார்.

அதைத் தொடர்ந்து வழியில் கிட்கிந்தைக்கும் பரத்துவாசன் ஆசிரமத்திற்கும் சென்று தங்கி நந்தியம் பதிக்குச் சென்று பரதனையும் இளையோனையும் தாய்மார்களையும் சந்தித்து மகிழ்ச்சி கொண்டனர். எல்லோரும் சேர்ந்து அயோத்தி அடைந்தனர்.

''அரியணை அனுமன் தாங்க, அங்கதன் உடைவாள் ஏந்தப்
பரதன் வெண் குடை கவிக்க இருவரும் கவரிவீச,
விரை செறி குழலி ஓங்க, வெண்ணையூர்ச் சடையன் தங்கள்
மரபுளோர் கொடுக்க வாங்கி, வசிட்டனே புனைந்தான் மௌலி''

இவ்வாறு மிகவும் சிறப்பாக இராமபிரானுக்கு முடிசூட்டு விழா நடைபெற்றது.

இராமபிரான் அரசு பொருப்பு ஏற்று,

''விரத நூல் முனிவன் சொன்ன விதிமுறை வழாமை நோக்கி
வரதனும் இளைஞர்க்கு ஆங்கண் மாமணி மகுடம் சூட்டிப்
பரதனைத் தனது செங்கோல் நடாவுறப் பணித்து, நாளும்
கரை தெரிவு இலாத போகக் களிப்பினுள் இருந்தான் மன்னோ''

என்று கம்பநாடர் குறிப்பிடுகிறார்.

''மறையவர் வாழி! வேத மனு நெறி வாழி, நன்னூல்
முறை செயும் அரசர், திங்கள் மும்மழை வாழி, மெய்ம்மை
இறையவன் இராமன் வாழி! இக்கதை கேட்போர் வாழி!
அறை புகழ்ச் சடையன் வாழி! அரும்புகழ் அனுமன் வாழி!

என்றும்,

''இராவணன் தன்னை வீட்டி
இராமனாய் வந்து தோன்றித்
தராதலம் முழுதும் காத்துத்
தம்பியும் தானும் ஆகப்
பராபரம் ஆகி நின்ற
பண்பினைப் பகருவார்கள்
நராபதி ஆகிப் பின்னும்
நமனையும் வெல்லுவாரே''

என்று வாழ்த்துக் கூறிக் கம்பநாடர் தனது மகா காவியத்தை நிறைவு செய்கிறார்.

கம்பர் வாழ்க. கம்பர் புகழ் வாழ்க, கன்னித் தமிழ் வாழ்க.



35. தொகுப்புரை (1)

பெண்ணாசை, பெண்ணாட்டம், பெருங்காதல்

இராமாயண மகாகாவியத்தில் தசரதனும், வாலியும், இராவணனும் அயோத்தி, கிஷ்கிந்தை இலங்கை ஆகிய நகரங்களை ஆண்ட மன்னர்கள். ஆட்சி பொருப்பில் இருந்த அரசர்கள் மூவரின் மரணத்திற்கும் பெண்களே காரணமாக இருந்தனர்.

தயரத மாமன்னன் கைகேயி பால் கொண்டிருந்த பெருங்காதல் காரணமாக வரம் கொடுத்த விளைவுகளும், வாலி தனது ஆட்சியில் மனையில் மாட்சியை அழித்த காரணத்தால் ஏற்பட்ட விளைவுகளும் மிகவும் நுட்பமாகக் குறிப்பிடப்படுகின்றன. அவை காரணமாக கதையில் முக்கிய திருப்பங்களும் ஏற்படுகின்றன.

இராமபிரானும் சீதையின் பால் வைத்திருந்த அன்பின் மிகுதி காரணமாக மாயமானைத் தேடிச் சென்ற விளைவுகளும் கதையில் முக்கிய திருப்பங்களுக்கு காரணமாகின்றன.

இந்த மகாகாவியத்தின் முக்கிய பகுதியாக இராவணன் சீதைபால் கொண்ட பெண்ணாசையும், பெண்ணாட்டமும் காம நோயும் பெருங்காதலும் அதன் காரணமாக அவன் செய்த கொடுமையும் அதன் விளைவாக எற்பட்ட போரும் பெரு நாசங்களும் விரிவு படக் கூறப் படுகின்றன.

காவியத்தின் தொடக்கத்திலேயே கவிப் பேரரசன் கம்ப நாடர் கோசல நாட்டின் ஆற்றணியைப் பற்றி கூறத் தொடங்கும் போது மெய் வாய் கண் மூக்கு செவி எனும் ஐம் புலன்களினால் எற்படும் ஆசைகளாகிய வாளியும் (அம்புகளும்) பொன்மணி மாலைகள் கிடந்து அசைகின்ற முலையவர் கண் எனும் பூசல் அம்பும் நெறியும்

புறம் செலாக் கோசலம் என்று குறிப்பிடுகிறார். இது காவியம் காட்டும் அறநெறியும் ஒழுக்க நெறியும் தத்துவ நெறியும், பாரதப் பண்பாட்டு நெறியும், மனிதப் பண்பாட்டு நெறியுமாகும்.

"ஆசு அலம்புரி ஐம்பொறி வாளியும்
காசு அலம்பு முலையவர் கண் எனும்
பூசல் அம்பும், நெறியின் புறம் செலாக்
கோசலம் புனை ஆற்றணி கூறுவாம்"

தசரதனுடைய ஆட்சியைப் பற்றிக் குறிப்பிடும் போது

''வெள்ளமும் பறவையும், விலங்கும் வேசையர்
உள்ளமும் ஒரு வழி ஓட நின்றவன்
தள்ளரும் புகழ்த் தயரதப் பெயர்
வள்ளல்; வள் உறை அயில் மன்னர் மன்னனே''

என்று கம்பநாடர் குறிப்பிடுகிறார்.

காவியத்தின் நெடுகிலும் கவிப்பேரரசர்

''பெண்கள்பால் வைத்த நேயம் பிழைப்பரோ சிறியோர் பெற்றால்''
என்றும்

''பொருந்திய மகளிரோடு வதுவையில் பொருந்துவாரும்'' என்றும்

''பொற்பின் நின்றன பொலிவு; பொய் இலா
நிற்பின் நின்றன நீதி; மாதரார்
அற்பின் நின்றன அறங்கள், அன்னவர்
கற்பின் நின்றன கால மாரியே''

என்றெல்லாம் குறிப்பிடுகிறார்.

தாடகையைப் பற்றிக் குறிப்பிடும் போது

''மண் உருத்து எடுப்பினும், கடலை வாரினும்
விண் உருத்து இடிப்பினும், வேண்டின் செய்கிற்பாள்;
எண் உருத்தெரிவரும் பாவம் ஈண்டி ஓர்
பெண் உருக் கொண்டேனத் திரியும் பெற்றியாள்''

என்றும்.

தாடகை மீது கணை தொடுக்க எண்ணிய போது இராமன் ''பெண் என மனத்திடை பெருந்தகை நினைத்தான்'' என்றும்.

'இக்கொடியாளையும் மாதென்று எண்ணுதியோ மணிப்பூணினாய்'' என்றும் ''பின்னும் தாழ் குழல் பேதமைப் பெண் இவள் என்னும் தன்மை எளிமையின் பாலதே'' என்றும் விசுவாமித்திரன் கூறுவதையும் கம்பன் குறிப்பிடுகிறார்.

விசுவாமித்திரன் இராம இலக்குவர்களை அழைத்துக் கொண்டு செல்லும் போது மாமுனிவன் வேள்வி நடத்தவிருக்கும் இடத்தைப் பற்றிக் குறிப்பிடும் போது, ''தங்கள் நாயகரின் தெய்வம் தான் பிறிது இலை என்றெண்ணும் மங்கைமார் சிந்தை போல தூயது'' என்றும் எங்கள் நான்மறைக்கும் தேவர் அறிவிற்கும் பிறர்க்கும் எட்டாச் செங்கண் மால் இருந்து மேல் நாள் செய்த தவம் செய்தது'' என்றும் குறிப்பிடுகிறார். அதைத் தொடர்ந்த முனிவர் மாபலியின் வரலாற்றைப் பற்றிக் கூறுகிறார்.

"இனைய நாட்டினில் இனிது சென்று இஞ்சிசூழ் மிதிலை
புனையும் நீள்கொடிப் புரிசையின் புறத்துவந்து இறுத்தார்
மனையின் மாட்சியை அழித்து இழி மாதவன் பன்னி
கனையும் மேட்டு உயர் கருங்கல் ஓர் வெள்ளிடைக் கண்டார்"

மனையின் மாட்சியை அழித்து (இல்லறத்திற்குரிய சிறந்த கற்பை அழித்த) இழி (இழிவடைந்த) மாதவன் பன்னி கௌதம முனிவனுடைய மனைவியாகிய (அகலிகை) கனையும் (நெருங்கியிருக்கின்ற) மேட்டு உயர் கருங்கல் ஓர் வெள்ளிடைக் கண்டார்'' என்று அகலிகையைப் பற்றியும் கம்பன் பேசுகிறார்.

மிதிலைக் காட்சியில் ''அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினான்'' என்றும்

''மருங்கிலா நங்கையும், வசை இல் ஐயனும்
ஒருங்கிய இரண்டும் உடற்கு உயிர் ஒன்று ஆயினார்,
கருங்கடல் பள்ளியில் கலவி நீங்கிப் போய்ப்
பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ?''

என்றும்

''பெண் வழி நலனொடும் பிறந்த நா ணொாடும் எண் வழி உணர்வும் நான் எங்கும் காண்கிலேன்'' என்றும்,

சீதைக்கு ஏற்பட்ட காதல் நோயைப் பற்றிக் குறிப்பிட்ட போது

''வாசமென் கலவைக் களி, வாரிமேல்
பூசப் பூசப் புலர்ந்து புழுங்கினள்
வீசவீச வெதும்பினள் மென்முலை;
ஆசை நோய்க்கும் மருந்தும் உண்டாம் கொலோ?''

என்றும் கவிச் சக்கரவர்த்தி குறிப்பிடுகிறார்.

பூக்கொய் படலத்தில் ''ஊறு இல் ஞானத்து உயர்ந்தவர் ஆயினும் வீறு சேர்முலை மாதரை வெல்வரோ? எனவும்

உலாவியல் படலத்தில் கண்ணினால் காதல் என்னும் பொருளையே காண்கின்றோம். இப்பெண்ணின் நீர்மையினால் எய்தும் பயன் இன்று பெறுதும்'' என்றும், இன்னும்

''பெருத்த காதலின் பேதுறு மாதரின்
ஒருத்தி, மற்றங்கு ஒருத்தியை நோக்கி, என்
கருத்தும் இவ்வழி கண்டதுண்டோ என்றாள்
அருத்தி உற்ற பின் நாணம் உண்டாகுமோ!

என்றும் கவி குறிப்பிடுகிறார்.

வசிட்டன் கூறும் அரசியல் அறிவுரைகளின் பகுதியாக

''துமகேது புவிக் கெனத் தோன்றிய
வாம மேகலை மங்கையரால் வரும்
காமம் இல்லை எனில், கடும் கேடு எனும்
நாமம் இல்லை; நரகமும் இல்லையே''

என்று குறிப்பிடுகிறார்.

கைகேயி மேகலை சிந்தி, வளை துறந்து, தனது திலகத்தையும் அழித்துக் கொண்டு தலைவிரி கோலமாகப் படுத்துக் கிடந்தவளைத் தசரதன் ''மடந்தையை மானை எடுக்கும் ஆனையே போல தடம் கைகள் கொண்டு தழீ இ எடுக்கல் உற்றான்'' என்றும் அக்கைகேயியைப் பற்றி மன்றல் அரும் தொடை மன்னன் ஆவி அன்னாள்'' என்றும் ''தீயவை யா வையினும் சிறந்த தீயாள்'' என்றும், ''நாகம் என்னும் கொடியாள்'' என்றும் ''பெண் என உட்கும் பெரும் பழிக்கு நாணும்'' என்றும் ''வஞ்சனை பண்டு மடந்தை வேடம்'' என்றும் ''பெண்ணே, வண்மைக்கேகையன் மானே, பெறுவாயேல் மண்ணே கொள் நீ, மற்றயது ஒன்று மற'' என்றும் ''தன்னேர் இல்லாத் தீயவள் உள்ளம் தடுமாறாள்'' என்றும் ''நச்சுத்

தீயே பெண் உரு அன்றோ?'' என்றும் உய்யேன் நங்காய் உன் அபயம் என் உயிர்'' என்றும் ''என் மனைவாழும் பெண்ணால் வந்தது அந்தரம்'' என்றும் ''பெண்டிரின் கூற்றம் அன்னாள், பிள்ளையைக் கொணர்க என்றாள்'' என்றெல்லாம் கையேயியின் நிலை பற்றிக் கம்பர் குறிப்பிடுகிறார்.

இராமனுக்கு நாடில்லை காட்டிற்குச் செல்கிறான், என்னும் செய்தியைக் கேட்ட போது அயோத்தி மக்கள் அழுது புலம்பினர் ''பெண் செய்த பாவம் பெரிதென்பார் என்றும் ''ஆதி அரசன் (தரசதன்) அரும் கேகையன் மகள் மேல் காதல் முதிரக் கருத்தழிந்தானாம்'' என்றும் மக்கள் கூறியதை கவிப் பேரரசர் குறிப்பிடுகிறார். இது சாதாரண மக்களுடைய வாக்கு. பொது அறிவு மிக்க பொது மக்களின் வார்த்தைகளில் உண்மைநிலை பளிச்சிடும்.

இராமனுக்குப் பட்டம் இல்லை என்பதைக் கேள்விப்பட்டவுடனே இலக்குவன் சீற்றம் கொண்டான், ''நங்கைக்கு (கைகேயியின்) அறிவின் திறம் நன்றிது'' என்றும் ''பெண்ணாட்டம் ஓட்டேன் (பெண்களின் கருத்துக்கு இடம் கொடுக்க மாட்டேன்) இப்பேர் உலகத்துள்'' என்றும் ''விரை செறி குழலி மாட்டு அளித்த மெய்யனை'' என்று கோபாவேசத்துடன் பேசினான்.

வனவாசத்தின் தொடக்கத்தில்

வனத்தின் இயற்கைக் காட்சிகளை இராமன் சீதைக்குக் காட்டிக் கொண்டு அருந்ததி அனையாளே! அமுதினும் இனியாளே! ஒருவில் பெண்மை என்று உரைக்கின்ற உடலினுக்கு உயிரே! மடந்தை மார்க்கு ஒரு திலதமே குழுவு நுண் துளைவேயினம் குறி நரம்பு எறிவுற்று எழுவு தண் தமிழ் யாழினும் இனிய சொல் கிளியே'' என்றெல்லாம் அச் சீதையைப் பற்றிக் குறிப்பிடுகிறார். காட்டில் நடந்து செல்லும் போது சீதைக்கு ஏற்பட்ட கஷ்டங்களை மறக்க அவளுக்கு ஆறுதல் கூறுவதாகவும் அவள் மீது இராமனுக்குள்ள மிகுதியான அன்பையும் காதலையும் வெளிப்படுத்துவதாகவும் இந்த அருமையான சொற்கள் அமைந்துள்ளன.

பரதன் காட்சி

பரதன் அயோத்திக்கு வந்து அங்கிருந்த நிலையைக் கண்டு வருந்தித் தனது தந்தையைப் பற்றி

''சினக்குறும்பு எறிந்து, எழுகாமத்தீ அவித்து,
இனக்குறும்பு யாவையும் எற்றி, யாவர்க்கும்
மனக்குறு நெறி செலும் வள்ளியோய்! மறந்து
உனக்குறு நெறி செலல் ஒழுக்கின் பாலதோ?''

என்று எண்ணித் தவிர்க்கிறான்.

பரதன், அன்னை கோசலையைக் காணச் சென்ற போது அக்கோசலையைப் பற்றி ''குலம் பொறை, கற்பு இவை சுமந்த கோசலை'' என்று கம்பர் குறிப்பிடுகிறார்.

இராமன் காடு சென்ற செய்தியைக் கேட்டு அதற்குக் காரணமாகத் தனது தாய் இருந்ததைக் கேட்டு மனம் நொந்துத் தன்னையே சபித்துக் கொள்கிறான். ''அறம் கெட முயன்றவன், அருள் இல் நெஞ்சினன், பொய்க்கரி கூறினோன், போருக்கு அஞ்சினோன், வழக்கில் பொய்த்துளோன், நன்றி மறந்தவன்'' என்றெல்லாம் பல பாவச் செயல்களைக் குறிப்பிட்டு அவகைளின் பகுதியாக ''ஆறு தன் உடன் வரும் அஞ் சொல் மாதரை ஊறு கொண்டு அலைக்கத் தன் உயிர் கொண்டு ஏகினோன்'' என்றும் ''கன்னியை அழிசெயக் கருதினோன், குருபன்னியை நோக்கினோன், நறை பருகினோன்'' என்றும் காமவெறி பாதகச் செயல்களையும் குற்றப் பிரிவுகளாகக் கூறுகிறான். மனம் பதறுகிறான்.

இராமன் இருக்கும் இடத்தை நோக்கி பரதன் தன் படை பரிவாரங்களுடன் செல்கிறான். அவன் தூரத்தில் வருவதைக் கண்டு தங்கள் மீது பரதன் படையெடுத்து வருவதாகச் சந்தேகப்பட்டு இலக்குவன் சீறி எழுந்து சினங் கொண்டு பேசினான். ''ஒரு மகள் காதலின் (ஒரு பெண் மேல் வைத்த ஆசையால்) உலக நோய் செய்த பெருமகன் (உலகைத் துன்புறுத்திய தசரதன்) ஏவலின் பரதன் வருகிறான்'' என்று கூறுகிறான்.

''சேண் உயர் தருமத்தின் தேவைச் செம்மையின் ஆணியை அன்னது நினைக்கல் ஆகுமோ!'' என்று இராமன் இலக்குவனிடம் கூறி அவனை அமைதிப்படுதினான்.

''நீ ஏன் மகுடம் தாங்கிக் கொள்ள வில்லை'' என்று கேட்கப்பட்ட இராமனுடைய கேள்விக்கு பரதன்,

''நிறையின் நீங்கிய மகளிர் நீர்மையும்
பொறையின் நீங்கிய தவமும், பொங்கு அருள்

துறையின் நீங்கிய அறமும், தொல்லையோர்
முறையின் நீங்கிய அரசும் முந்துமோ?''

என்று பதில் கூறுகிறான். இதில் நிறை (கற்பு) நிறைந்த சிறந்த மகளிர் நீர்மை முதலிடம் பெற்று சிறந்த தவம், அறம், அரசு ஆகியவற்றிற்கு ஈடாகக் குறிப்பிடப்படுகிறது. இன்னும் உந்தை தீமையும் உலகுறாத நோய் தந்த தீவினைத் தாய் செய்த தீமையும்'' என்றும் பரதன் கூறுகிறான்.

இராம இலக்குவர்களின் பயணத்தில் வழியில் ஒரு இடத்தில் சடாயுவை சந்தித்தனர். அப்போது சடாயு இவர்கள் காட்டிற்கு வந்ததன் காரணத்தைக் கேட்ட போது இலக்குவன் ''தன் சிற்றவை மாதரால் வந்த செய்கை'' என்று குறிப்பிட்டு நடந்த செய்திகள் அனைத்தையும் ஒன்று விடாமல் கூறியதைக் கம்பன் குறிப்பிடுகிறார்.

சூர்ப்பணகை தேன்றினாள்

கம்ப நாடருடைய மகா காவியத்தில் சூர்ப்பணகையின் தோற்றமும் அவளுடைய செயல்களைப் பற்றிய செய்திகளும் மிக முக்கியமான கட்டமும் திருப்பமுமாகும்.

சூர்ப்பணகையை பற்றிக் கூறும் போது அவளைக் காம வல்லியாம் கன்னியாகக் கம்பன் காட்டுகிறார்.

''நீல மாமணி நிருதர் வேந்தனை
மூல நாசம் பெற, முடிக்கும் மொய்ம்பினாள்
மேலை நாள் உயிரோடும் பிறந்து தான்விளை
காலம் ஓர்ந்து உடன்உறை கடிய நோயனாள்''

என்றும் ''தான் விளை காலம் ஓர்ந்து உடன் உறை கடிய நோயனாள்'' என்றும்

''வெய்ய தோர் காரணம் உண்மை மேயினாள்
வைகலும் தமியள் அவ்வனத்து வைகுவாள்
நெய்தின் இவ்வுலகெலாம் நுழையும் நோன்மையாள்
எய்தினள் இராகவன் இருந்த சூழல்வாய்''

என்றும் ''தன்கிளைக்கு இறுதி காட்டுவாள்'' என்றும் கம்பன் குறிப்பிடுகிறார்.

இங்கு கம்பநாடன் சூர்ப்பணகையின் மனப் போக்கைச் சித்தரிக்கிறார். ஒரு பெண்ணிற்கு அவளுடைய உள்ளத்தில் ஒரு வம்மம் ஏற்பட்டு விட்டால் ஒரு பழி தீர்க்கும் மனோ நிலையும் அதில் உறுதிப்பாடும் ஏற்பட்டு விட்டால் அவள் எந்த அளவுக்குச் செல்வாள் என்பதைச் சூர்ப்பணகை மூலம் காண்கிறோம்.

"எண்ணதகு இமையவர், 'அரக்கர் எங்கள்மேல்
விண்டனர்; விலக்குதி என்ன, மேலை நாள்
அண்டசத்து அருந்துயில் துறந்து ஐயனைக்
கண்டனன்; தன்கிளைக்கு இறுதி காட்டுவாள்"

இராவணன் போர்க் களத்தில் மாண்டு கிடந்த போது அவன் மீது விழுந்து வீடணன் அழுதான். அப்போது வீடணன் ''கொல்லாத மைத்துனனைக் கொன்றாய் என்று அது குறித்துக் கொடுமை சூழ்ந்து பல்லாலே இதழ் அதுக்கும் கொடும் பாவி நெடும்பாரப்பழி தீர்த்தாளோ?' என்று குறிப்பிட்டதை இங்கு நினைவு கொள்ளலாம்.

இனி போகப் போக சூர்ப்பணகையின் நடவடிக்கைகளைக் காணலாம்.

சூர்ப்பணகை இராமனைக் கண்ட போது

''கற்றை அம் சடையவன், கண்ணில் காய்தலால்
இற்றவன், அன்று தொட்டு இன்று காறும், தான்
நற்றவம் இயற்றி, அவ் அநங்கன் நல் உருப்
பெற்றனன் ஆம்; எனப் பெயர்த்தும் எண்ணினாள்''

என்றும்,

''அதிகம் நின்று ஒளிரும் இவ் அழகன் ஆண்முகம்
பொதி அவிழ் தாமரைப் பூவை ஒப்பதோ!
கதிர்மதி ஆம் எனின் கலைகள் தேயும்; அம்
மதி எனின் அதற்கும் ஓர் மறு உண்டு என்றும் ஆல்"

இன்னும் பலவாறு சிந்தனை செய்தாள்.

''நீத்தமும் வானமும் குறுக, நெஞ்சிடைக்
கோத்த அன்பு உணர்விடைக் குளிப்ப மீக்கொள
ஏத்தவும் பரிவின் ஒன்று ஈகலான், பொருள்
காத்தவன் புகழ் எனத் தேயும் கற்பினாள்''

என்று கம்பன் குறிப்பிடுகிறார்.

இராமனைக் கண்ட போது சூர்ப்பணகையின் கற்பு தேய்ந்தது என்று இங்கு கம்பன் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது. இன்னும்

''வான் தனில் வரைந்ததோர் மாதர் ஓவியம்
போன்றனள், புலர்ந்தனள், புழுங்கும் நெஞ்சினள்;
தோன்றல் தன் சுமர் மணித் தோளில் நாட்டங்கள்;
ஊன்றினள், பறிக்க ஓர் ஒற்றம் பெற்றனள்.''

''நின்றனள், இருந்தவன் நெடிய மார்பகம்
ஒன்று வேன், அவன்றெனின் அமுதம் உண்ணினும்
பொன்றுவென்; போக்கினி அரிது போம் எனாச்
சென்றெதிர் நிற்பதோர் செய்கை தேடுவாள்''

என்று கம்பர் குறிப்பிடுகிறார். இங்கு பெருங்காதல் உணர்வு பெற்ற ஒருத்தியின் மனோ நிலையைக் கம்ப நாடர் வடித்துக் காட்டுவதைக் காண்கிறோம்.

அவள் தன் உருவத்தை மாற்றிக் கொண்டு இராமன் முன் வந்ததைப் பற்றி

''பஞ்சிஒளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்கச்
செஞ்செவிய கஞ்சம்நிகர் சீறடியள் ஆகி;
அம்சொல் இள மஞ்ஞைஎன, அன்னம் என, மின்னும்,
வஞ்சி என, நஞ்சம் என, வஞ்ச மகள் வந்தாள்''

என்றும்

''கானில் உயர் கற்பகம் உயிர்த்த கதிர்வல்லி
மேனி நனி பெற்ற விளைகாமம் நிறை வாசகத்
தேனின் மொழி உற்று, இனிய செவ்வி நனி பெற்று, ஓர்
மானின் விழி பெற்று, மயில் வந்தது என வந்தாள்''

என்றும் சூர்ப்பணகை காம உணர்வோடு எப்படி வந்தாள் என்பதைக் கம்ப நாடர் மிக அருமையாகக் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

தன் எதிரில் வந்து நின்ற சூர்ப்பணகையை இராமன் நீ யார் என்றும் உன் பெயரென்ன வென்றும் கேட்ட போதும் அவள் ''காம வல்லியாம் கன்னி'' எனத் தன் பெயரைக் குறிப்பிடுகிறாள்.

அவள் வந்த காரியம் என்ன வென்ற கேட்ட போது

''தாம் உறு காமத்தன்மை,
தாங்கள் நேர் உரைப்பது என்பது
ஆம் எனல் ஆவது அன்றால்
அரும்குல மகளிர்க்கு அ ம்மா!
ஏழுறும் உயிர்க்கு நோவேன்!
என் செய்கேன்! யாரும்இல்லேன்!
காமன் என்று ஒருவன் செய்யும்
வன்மையைக் காத்தி' என்றாள்"

என்று தன் உணர்வை வெளிப்படுத்துகிறாள்.

அதைக் கேட்ட இராமன் தன்னுள் நகைத்து ''நாண் இலள் ஐயள், (சந்தேகத்துக்குடையவள்) நொய்யள் நல்லளும் அல்லள்'' என்று தனக்குள் கருதுகிறான்.

அதன் பின்னர் இருவருக்குமிடையில் நடைபெற்ற சிறிய உரையாடலுக்குப் பின்னர் ''இளையவன் வந்தால் கோபப்படுவான், நங்கையே இந்த இடத்தை நீ விட்டுப் போய்விடு'' என்று கூறி விட்டு இராமன் சீதையுடன் தன் பர்ண சாலைக்குள் போய் விட்டான்.

சூர்ப்பணகை

''அழிந்த சிந்தையளாய் அயர்வாள் வயின்
மொழிந்த காமக் கடுங்கனல் மூண்டதால்
வழிந்த நாகத்தின் வன் தொளை வாள் எயிற்று
இழிந்த கார்விடம் ஏறுவது என்னவே''

என்றும் அவளுடைய பெருங்காம உணர்வின் காரணமாக "வெந்து காந்த வெதும்புறு மேனியாள்'' என்றும் ''நஞ்சு நக்கினர் போல நடுங்குவாள்'' என்றும் "ஆவி ஓயினும் ஆசை ஓய்விலாள்'' என்றும் அவளுடைய வேகமான காம உணர்வை கம்பநாடர் தனது கவிதைகளில் வடித்துக் காட்டுகிறார்.

"வஞ்சனைக் கொடு மாயைவளர்க்கும் என்
நெஞ்சுபுக்கு எனது ஆவத்தை நீக்கு எனும்;
அஞ்சனக் கிரியே அருளாய் எனும்
நஞ்சு நக்கினர் போல நடுங்குவாள்"

“காவியோ கயலோ எனும் கண்ணினைத்
தேவியோ திருமங்கையின் செவ்வியாள்;
பாவியேனையும் பார்க்கும் கொலோ வெனும்;
ஆவி ஓயினும் ஆசையின் ஓய்விலாள்”

என்பது கம்பரின் பாடல்.

சூர்ப்பணகை தனது காதலுக்குச் சீதை குறுக்கே நிற்பதாகக் கருதி அவளைத் தொடர்ந்த போது இளையவன் குறுக்கிட்டு அவளை அங்கச் சேதம் செய்தான்.

அதனால் அவள் மண்ணிடை விழுந்து அழுது ‘‘பெண் பிறந்தேன் பட்ட பிழை எனப் பிதற்றினாள்” எனக் குறிப்பிடுகிறார்.

இலக்குவன் குறிக்கிட்டு சூர்ப்பணகையின் மூக்கையும் இதர உறுப்புகளையும் அறுத்த போது அவள் உண்மை உரு பெற்று அழுது புரண்டு இராமனிடம் மீண்டும் பேசுகிறாள். அப்போது

‘‘குலத்தாலும், நலத்தாலும், குறித்தனவே கொணரதக்க
வலத்தாலும், மதியாலும், வடிவாலும், மடத்தாலும்
நிலத்தாரு,ம் விசும்பாரும், நேரிழையார் என்னைப் போல்
சொல்லத்தான் இங்கு உரியாரைச் சொல்லீரோ வல்லீரேல்’’

என்று தனது பேராற்றலைக் குறிப்பிட்டு நாசி போனதால் எனது பெண்மைக்குப் பழுதில்லை

“ விண்டாரே அல்லாரோ வேண்டாதார்; மனம் வேண்டின்
உண்டாய காதலின் என் உயிர் என்பது உமது அன்றோ?
கண்டாரே காதலிக்கும் கட்டழகும் விடம் அன்றோ,
கொண்டாரே கொண்டாடும் உருப் பெற்றால் கொள்ளீரோ’’

என்றெல்லாம் தனது பெரும் காதலை வெளிப்படுத்திப் பேசுகிறாள்.

சூர்ப்பணகையின் ஒருதலைப் பெருங்காதல் உணர்வுகளைப் பற்றி மிகவும் நுட்பமாகக் கம்பர் விவரித்துக் காட்டுகிறார்.

சூர்ப்பணகை தனது அழுகையின் போது கூட இராம இலக்குவர்களைப் பற்றி தாபதர்கள் என்றும் உருப்பொடிய மன்மதரை ஒத்துளரே’ என்றும் இன்னும் கரனிடம் அவர்களைப் பற்றிக் கூறும் போது

''இருவர் மானிடர்; தாபதர்; ஏந்திய
வரிவில் வாட்கையர்; மன்மதன் மேனியர்
தருமநீரர்; தயரதன் காதலர்;
செருவில் நேரும் நிருதரைத் தேடுவார்''

என்றெல்லாம் குறிப்பிடுகிறார்.

கரதூடணர்கள் போரில் மாண்ட பின்னர் சூர்ப்பணகை

''ஆக்கினேன் மனத்து ஆசை, அவ்வாசை என்
மூக்கினோடும் முடிய முடிந்திலேன்;
வாக்கினால் உங்கள் வாழ்வையும், நாளையும்
போக்கினேன்; கொடியேன்! என்று போயினாள்''

என்று கூறி ஓல மிட்டுக் கொண்டு இராவணனிடம் ஓடுகிறாள்.

இராவணனிடம் இராம இலக்குவர்களைப் பற்றி

''கானிடை அடைந்து புவி காவல் புரிகின்றார்;
மீனுடை நெடுங்கொடியினோன் அனையர்; மேல் கீழ்
ஊன்உடை உடம்புடைமையோர், உவமை இல்லா
மானிடர்; தடித்தனர் கள்வாள் உருவி' என்றாள்''
''மன்மதனை யொப்பர் மணிமேனி; வடமேருத்
தன் எழிலை ஒப்பர்திரள் தோளின்வலி தன்னால்
என்அதனை இப்பொழுது இசைப்பது? உலகேழின்
நல்மதம் அழிப்பர்ஓர் இமைப்பின் நனிவில்லால்

''வந்தனை முனித் தலைவர்பால் உடையர்; வானத்து
இந்துவின் முகத்தர்; எறி நிரில் எழும் நாளக்
கந்தமலரைப் பொருவு கண்ணர், கழல், கையர்,
அந்தமில் தவத் தொழிலர்; ஆர் அவரை ஒப்பார்?''

''வற்கலையார்; வாழ்கழலர்; மார்பின் அணி நூலர்;
விற்கலையர்; வேதம் உறை நாவர், நனிமெய்யர்;
உற்கு அலையர்; உன்னை ஓர்துகள் துணையும் உன்னார்;
சொல்கலை எனத் தொலைவில் தூணிகள் சுமந்தார்''

''மாரர்உளரே இருவர் ஓர் உலகின் வாழ்வார்;
வீரர்உளரே அவரின் வில்லதனின் வல்லார்;

ஆர்ஒருவர் அன்னவரை ஒப்பவர்கள்? ஐயா
ஓர்ஒருவரே முதல்வர் மூவரையும் வெல்வார்”

“தராவலய நேமி உழவன் தயரதப்பேர்ப்
பராவரு நலத் தொருவன் மைந்தர்; பழியில்லார்
விராவரு வனத்து அவன் விளம்ப உறைகின்றார்;
இராமனும் இலக்குவனும் என்பர் பெயர்’ என்றாள்”

என்றெல்லாம் குறிப்பிட்டு மற்றும் அவனிடம் சீதையின் பேரழகை விவரித்து அவள் மீது அவனுக்கு பெருங்காதலைத் தூண்டி விட்டுக் கடைசியில் நீ சீதையை எடுத்துக் கொண்டு இராமனை எனக்குத் தருவாய்’’ என்று கூறுகிறாள்.

இதில் சூர்ப்பணகையின் உள்ளக்கிடக்கையும் அவளுடைய ஒரு தலைக்காதல் உணர்வும் தெளிவாகப் புலப்படுகிறது.

இதைக் கம்பன் மிகவும் நுட்பமாக விவரித்துக் கூறுவதைக் காண்கிறோம்.

இராவணனுக்கு ஏற்பட்ட பெருங்காதல் நோய்

இராவணனுடைய உள்ளத்தில் சீதையின் பாலான காமப் பெரு நெருப்பை சூர்ப்பணகை மூட்டி விட்டாள். அப்பெரு நெருப்பு அவனுடைய உள்ளத்தில் பற்றி எரிந்து பரவியது. அது பற்றி

‘‘கோபமும் மறனும், மானக் கொதிப்பும், என்று இனைய எல்லாம்
பாபம் நின்னிடத்து நில்லாத் தன்மம் போல், பற்று விட்ட;
தீபம் ஒன்று ஒன்றையுற்றால் என்னலாம் செயலில் புக்க
தாபமும் காம நோயும் ஆருயிர் கலந்த அன்றே’’

என்றும்

“சிற்றிடைச் சீதை என்னும் நாமமும் சிந்தை தானும்
உற்றிரண்டு ஒன்றாய் நின்றால், ஒன்றொழித்து ஒன்றை உன்ன
மற்றொரு மனமும் உண்டோ? மறக்கலாம் வழி மற்று யாதோ?
கற்றனர் ஞானம் இன்றேல் காமத்தைக் கடக் கலாமோ?

என்றும்

“மயிலுடைச் சாயலாளை வஞ்சியா முன்னம் நீண்ட
எயில் உடை இலங்கை நாதன் இதயமாம் சிறையில் வைத்தான்

அயில் உடை அரக்கன் உள்ளம் அவ்வழி மெல்ல மெல்ல
வெயில் உடை நாளில் உற்ற வெண்ணெய் போல் உருகிற்று அன்றோ!''

என்றும்,

''விதியது வலியினாலும், மேல் உளவிளை வினாலும்
பதியுறு கேடுவந்து குறுகிய பயத்தினாலும்
கதிஉறு பொறியின் வெய்ய காம நோய் கல்விநோக்கா
மதியிலி மறையச் செய்த தீமை போல் வளர்ந்த தன்றே''

என்றும்,

''பொன் மயமான கங்கை மணம் புகப், புண்மை பூண்ட
தன்மையோ அரக்கன் தன்னை அயர்த்ததோர் தன்மையாலோ!
மன்மதன் வாளி தூவி நலிவதோர் வலத்தன் ஆனான்;
வன்மையை மாற்றும் ஆற்றல் காமத்தே வதிந்த தன்றே''

என்றும்

''வன்பனை மரமும் தீயும்,
மலைகளும் குளிர, வாழும்
மென்பனி எரிந்த தென்றால்
வேனிலை விளம்பலாயோ!
அன்பெனும் விடம் உண்டாரை
ஆற்றலாம் மருந்தும் உண்டோ!
இன்பமும் துன்பம் தானும்
உள்ளத்தோடு இயைந்த அன்றோ''

என்றும்

''கூலத்தால் உலகமெல்லாம் குளிர்ப்போடு வெதுப்பு நீங்க
நீலத்தார் அரக்கன் மேனி நெய்யின்றி எரிந்தது அன்றோ!
காலத்தால் வருவது ஒன்றோ! காமத்தால் கனலும் வெந்தீச்
சீலத்தால் அவிவது அனறிச் செய்யத்தான் ஆவது உண்டோ?''

என்றெல்லாம் காம நோயின் இயல்பு பற்றி;க் கம்பன் மிக நன்றாகக் குறிப்பிடுகிறார். இதில் சிறப்பான பல பொது ஒழுக்க நெறிக் கருத்துக்கள் இருப்பதையும் காண்கிறோம்.

மாரீசனிடம் இராவணன் சென்றான். தனது திட்டத்தைக் கூறினான்.

''தருமம் இன்னது எனும் தகைத் தன்மையும்
இருமையும் தெரிந்து எண்ணலை; எண்ணினால்
அருமை உம்பிதன் ஆருயிர்த் தேவியைப்
பெருமை நீங்கினை எய்தப் பெறுதியோ?''

என்றும்

''சினையது ஆதலின், எக்குலத்து யாவர்க்கும்
வினையினால் வரும் மேன்மையும் கீழ்மையும்
அனையதன்மை அறிந்தும் அழித்தனை
மனையின் மாட்சி, என்றான் மனு நீதியாள்''

என்றும் அவனிடமிருந்த குறைகளையும் தவறுகளையும் சுட்டிக் காட்டுகிறான்.

இராம காவியத்தில் வாலிவதை ஒரு புதிராகக் கற்றறிவாளர்களால் விவாதிக்கப்படுகிறது. அப்படலத்தில் வாலிக்கும் இராமனுக்குமிடையில் நடைபெறும் உரையாடல் ஒரு அற்புதமான காட்சியாகும். வாலி தனது தவறுகளைத் தன் உயிர் போகும் தறுவாயில் உணர்ந்ததை ''தீயன பொருத்தி என்றான் சிறியன சிந்தியா தான்'' என்று கம்பன் குறிப்பிடுவது அருமையான பொருள் பொதிந்த குறிப்பாகும். ''ஆவி போம் வேலை வாய் அறிவு தந்து அருளினாய்'' என்பது வாலியின் வாக்காகும்.

கிட்கிந்தா காண்டத்தின் அரசியல் படலத்தில் இராமன் சுக்கிரீவனுக்குக் கூறிய அறிவுரைகளில்

''மங்கையர் பொருட்டால் எய்தும்
மாந்தர்க்கு மரணம்; என்றல்
சங்கையின்றி உணர்தி!
வாலி செய்கையால் சாலும் இன்னும்
அங்கவர் திறத்தினானே,
அல்லலும் பழியும் ஆதல்
எங்களில் காண்டி அன்றே
இதனின் வேறு உறுதி உண்டோ?''

என்று மிக நுட்பமாக எடுத்துக் கூறுகிறார். ஆட்சிப் பொருப்பில் உள்ளவர்கள் இவ்விஷயத்தில் கவனமாக இருக்க வேண்டும் என்பது முக்கியமாக வேறு பல இடங்களிலும் எடுத்துக் காட்டப்படுகிறது.

பகல் நீங்கி இருள் வருவதைப் பற்றிக் கூறும் போது சூரியன் மறைந்தான். நீல வானம் இருண்டது அதை

''நஞ்சினில் நளிர் நெடும் கடலின், நங்கையர்
அஞ்சன நயனத்தின், அவிழ்ந்த கூந்தலின்
வஞ்சனை அரக்கர்தம் வடிவின், செய்கையின்
நெஞ்சினின் இருண்டது நீல வானமே''

என்று கம்பர் குறிப்பிடுகிறார்.

நஞ்சு, கடல், நங்கையர் கண், அவர்களின் அவிழ்ந்த கூந்தல், அரக்கர்களின் வடிவம் அவர்களுடைய செயல், நெஞ்சம் ஆகியவைகளைப் போல நீல வானம் இருண்டது என்பது அதன் பொருளாகும்.

சுந்தர காண்டத்தில்

அனுமன் இலங்கையை அடைந்தான் இருள் பரவிற்று

''ஏய்வினை இறுதியில் செல்வம் எய்தினான்;
ஆய்வினை மனத்தினான்; அறிஞர் சொல் கேளான்
வீவினை நினைக்கிலான், ஒருவன் மெய்இலான்
தீவினை என இருள் செறிந்தது எங்குமே''

என்றும் இராவணனுடைய செய்கையைப் பற்றி

''வண்மை நீங்கா நெடு மரபின் வந்தவள்
பெண்மை நீங்காத கற்புடைய பேதையைத்
திண்மை நீங்காதவன் சிறைவைத்தன் எனும்
வெண்மை நீங்கிய புகழ் விரிந்தது என்னவே''

என்றும் அனுமன் சிந்தனை செய்து கொண்டு இலங்கையைக் கண்டதாகக் கம்பன் குறிப்பிடுகிறார்.

அசோகவனத்தில் சிறை வைக்கப்பட்டிருந்த சீதையிடம் வந்த இராவணன் இனிமையாகப் பேசினான். சீதை சீறினாள். பின்னர் இராவணன் கடுங்கோபம் கொண்டான். அவனுடைய காமத்தையும் மிஞ்சியது அவனுடைய சீற்றம்.

அதை, ''குறிப்பது என் காமத்தின் திறத்தையும் கடந்தது சீற்றத்தின் தகைமை'' என்றும் ''கிளர்ந்த சீற்றமும் காதலும் எதிர் எதிர் கிடப்ப'' என்றும் கம்பர் குறிப்பிடுகிறார்.

இலங்கை நகருக்குள் அனுமன் அட்டகாசம் செய்த பொழுது அவனை எதிர்த்த அரக்கர்கள் அனைவரும் அடிபட்டு மாண்ட

பொழுது கடைசியில் இந்திரசித்தன் தனது நான்முகன் படையினால் அனுமனைக் கட்டினான்.

கட்டுண்ட அனுமனைக் கண்டவர்கள் ''மயில் இயல் சீதை தன் கற்பின் மாட்சியால் எயில் உடைத் திருநகர் சிதைப்ப எய்தினான்'' என்று பேசினர்.

இந்திரசித்தன் அனுமனை நான்முகன் படையால் கட்டி இழுத்துக் கொண்டு இராவணன் சபையில் கொண்டு போய் நிறுத்தினான். இராவணன் அரியாசனத்தில் கம்பீரமாக வீற்றிருந்ததை அனுமன் நேரில் கண்டான். அவனுடைய் பத்து முகங்களைப் பற்றியும் கம்பன் மிகச் சிறப்பாக விவரித்துக் கூறுகிறார். அவைகளில்

''தேவரோடு இருந்து அரசியல் ஒருமுகம் செலுத்த
மூவரோடு மாமந்திரம் ஒருமுகம் முயலப்
பாவகாரிதன் பாவகம் ஒருமுகம் பயிலப்
பூவை சானகி நினைப்பொடும் ஒரு முகம் பொருந்த''

என்றும்

''காந்தள் மெல்விரல் சானகி தன் கற்பு எனும் கடலை
நீந்தி ஏறுவது எங்கன் என்று ஒருமுகம் நினையச்
சாந்து அளாவிய கோதை நன்மகளிர்தற் சூழ்ந்தார்
ஏந்தும் ஆடியின் ஒரு முகம் இயல்புடன் இலங்க''

என்று கவிஞன் குறிப்பிடுகிறார்.

இராவணன் சபையில் இராமனுடைய தூதன் என்னும் முறையில் அரக்கனுக்கு நீதியை உணர்த்தும் நோக்கில்

''போய் இற்றீர்! நும் புலன் வென்று போற்றிய
ஆலாயின் தீர்வு அரிது ஆகிய மாதவம்;
காயின் தீர்வு அரும் கேடு அரும் கற்பினாள்
தீயின் தூயவளைத் துயர் செய்ததால்''

என்றும்

''தீமை நன்மையைத் தீர்த்தல் ஒல்லாது எனும்
வாய்மை நீக்கினை; மாதவத்தால் வந்த
தூய்மை, தூயவள் தன்வயின் தோன்றிய
நோய்மையால் துடைக்கின்றனை; நோக்கலாய்''

என்றும், இன்னும்

''திறம் திறம்பிய காமச் செருக்கினால் மறந்து தத்தம் மதியின் மயங்கினார்'' என்றும் ''பொருளும் காமமும் என்று இவை போக்கி வேறு இருள் உண்டாம் என எண்ணலர்'' என்றும் இச்சைத் தன்மையினில் பிறர் இல்லினை நச்சி நாளும் நகை உற நாண் இலன்'' என்றும் ''மறுப்பு உண்டாய பின் வாழ்கின்ற வாழ்வினில்'' என்றும் ''அரும் பெறல் செல்வமும், ஓது பல்கிளையும் உயிரும் பெறச் சீதையைத் தருக எனச் செப்பினான் சோதியான் மகன்'' என்றும் அனுமன் இராவணனுக்கு எடுத்துரைத்ததைக் கம்பன் மிக நுட்பமாக எடுத்துக் கூறுகிறார்.

மந்திரப் படலத்தில்

இராவணனுடைய மந்திராலோசனைச் சபையில் இலங்கை எரியுண்டது பற்றியும்அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பது பற்றியும் மந்திரலோசனை நடைபெறுகிறது. அப்போது கும்பகருணன் ''வேறு ஒரு குலத்தோன் தேவியை நயந்து சிறை வைத்த செயல் நன்றோ?'' என்றும், ''உன்னுயிர் அனைத்தகைய தேவியர்கள் உன்மேல் ஒள் நகை தரத்தர ஒருத்தன் மனை உற்றான் பொன் அடி தொழத் தொழ மறுத்தல் புகழ் போலாம்'' என்றும் ''என்று ஒருவன் இல் உறை தவத்தியை அறம் துறந்து சிறை வைத்தாயோ அன்று அறம் ஒழிவது ஆயின அரக்கர் புகழ்'' என்றும் ''ஆசில் பர தாரம் அவை அம் சிறையடைப்போம்'' என்று ''நாசில் புகழ் காதல் உறு வெம்'' என்றும் ''பேணுவது காமம்'' ''சிட்டர் செயல் செய்திலை'' என்றெல்லாம் சபையில் கூறி இராவணனை முதலில் திருத்தப் பார்த்தான்.

வீடணன் எழுந்து ''கோநகர் முழுவதும், நினது கொற்றமும் சானகி எனும் பெயர் உலகின் தம் மனை ஆனவள் கற்பினாள் வெந்தது'' என்றும் ''உயர்வும் மீட்சியும் பெண் பொருட்டு'' என்றும் ''தளர்ந்து சாய்வது ஒரு மானுட மடந்தையால்'' என்றும் ''தீயிடைக் குளித்த அத் தெய்வக் கற்பினாள், ''நோய் உனக்கு நான்'' என நுவன்றுளாள் அவள் ஆயவள் சீதை'' என்றும் ''அசைவில் கற்பின் அவ்வணங்கை விட்டருளுதி'' என்றும் பேசுகிறான்.

முதல் நாள் போர்

வானரப் படைக் கடலில் அணை கட்டிக் கடலைக் கடந்து வந்து இலங்கைக் கோட்டையை முற்றுகையிட்டு நிற்கிறது. அப்போது மாலியவான் இராவணனிடத்தில் சென்று ''சீதையை விடுதியாயின்

தீரும் இத்தீமை'' என்று கூறுகிறான். மேலும் வேதனைக் காமம் அந்தோ வேரொடும் கெடுத்தது'' என்றும் கூறினான்.

முதல் நாள் போரில் தோல்வியடைந்து இராவணன் ''வாரணம் பொருத மார்பும் மற்றவையும் வீரமும் களத்தே போட்டு வெருங்கையோடு இலங்கை புகுந்தான். தன் மாளிகைக்குள் புகுந்து ஒரு படுக்கையில் படுத்தான். அவன் தனது உள்ளத்தில் நாணம் கொண்டிருந்த போதிலும் அதில் சீதையே நிறைந்திருந்தாள்

''பண் நிறைப் பவளச் செவ்வாய்ப் பைந்தொடிச் சீதை என்னும்
பெண் இறை கொண்ட நெஞ்சில், நாண் நிறை கொண்ட பின்னர்
கண் இறை கோடல் செய்யான்; கையறு கவலை அற்ற
உள்நிறை மானந்தன்னை, உமிழ்ந்து எரி உயிர்ப்பது ஆனான்''

என்றும்

''வான் நகும், மண்ணும் எல்லாம் நகும், மணி வயிரத் தோளான்
நான் நகு பகைஞர் எல்லாம் நகுவர் என்று அதற்கு நாணான்;
வேல் நகு நெடுங்கண், செவ்வாய், மெல் இயல் மிதிலை வந்த
சானகி நகுவள் என்றே மானத்தால் சாம்புகின்றான்''

என்று கம்பநாடர் மிக அற்புதமாகத் தனதுக் கவிதை வரிகளில் குறிப்பிடுகிறார்.

கும்பகருணன் போர்க் கோலத்தில்

கும்பகருணனை எழுப்பி அவனுக்குப் போர்க் கோலம் புனைந்தனர். தன்னை அலங்கரிப்பது ஏன் என்று அவன் தனது தூக்கக் கலக்கத்தில் கேட்டான். மானுடரும் வானரரும் கோ நகரைச் சுற்றி வளைத்துள்ளனர் என்று கூற அவன்

''ஆனதோ வெம்சமம், அலகில் கற்புடைச்
சானகி துயர் இனம் தவிர்ந்தது இல்லையோ?'' என்றும்
''திட்டியின்விடம் அன்ன கற்பின் செல்வியை விட்டிலையோ?''

என்றும் கூறுகிறான். கும்பகருணன் தனது அரைத் தூக்கத்திலும் கூட இராவணனுடைய செயலை ஆட்சேபிக்கிறான். மறுத்துக் கூறுகிறான். சீதையை விட்டு விடும்படி சொல்கிறான். இன்னும் அச் சீதையை விட வில்லையா? எனக் கேட்கிறான்.

மாயா ஜனகப் படலத்தில் இராவணன் முதலில் சீதையிடம் சென்று அவளுடைய காதலுக்காகக் கெஞ்சுகிறான்

''ஈசனே முதலா மற்றை மானுடர் இறுதியாகக்
கூச மூன்றுஉலகும் காக்கும் கொற்றத்தேன் வீரக்கோட்டி
பேசுவார் ஒருவற்கு ஆவி தோற்றிலென்; பெண்பால் வைத்த
ஆசை நோய் கொன்றது என்னா ஆண்மை தான் மாசுணாதோ?

என்றும்

''அந்தரம் உணரின், மேல்நாள் அகலிகை எண்பாள் காதல்
இந்திரன் உணர்த்த நல்கி எய்தினாள் இழுக்குற்றாளோ?
மந்திரம் இல்லை, வேறோர் மருந்தில்லை மையல் நோக்குச்
சுந்தரக் குமுதச் செவ்வாய் அமுது அலால்; அழுதச் சொல்லீர்!''

என்றும் பேசுகிறான்.

அதிகாயன் வீழ்ந்த செய்தி

அதிகாயனும் அவனைச் சேர்ந்த வல்லமை மிக்க பல படை வீரர்களும் மாண்ட செய்தி கேட்டு இராவணன் மிக்க வருத்தம் கொண்டு பலவாறாக எண்ணினான். ''மண்ணினை எடுக்க எண்ணும், வானினை இடிக்க எண்ணும், எண்ணிய உயிர்கள் எல்லாம் ஒரு கணத்து ஏற்ற எண்ணும், பெண் எனும் பெயரை எல்லாம் பிளப்பென்'' என்று எண்ணும்'' என்றும் இராவணன் பலவாறு எண்ணமிடுவதைப் பற்றிக் கம்பன் குறிப்பிடுகிறார்.

அதிகாயனுடைய அன்னை தான மாலை தன் மகனுடைய மரணச் செய்தி கேட்டுப் பலவாறாகப் பேசிப் புலம்புகிறாள். ''மந்தரத் தோள் என் மகனை மாட்டா மனிதன் தன் உந்து சிலைப் பகளிக்கு எண்ணக் கொடுத்தாயே'' என்றும் ''அக்கன் உலந்தான் அதிகாயன் தான் பட்டான், மிக்க திறத்தார் உள்ளார்கள் எல்லாம் வீடினார்'' என்றும்

''ஏதையோ சிந்தித்து இருக்கின்றாய்! எண் இறந்த
கோதையர் வேல் அரக்கர் பட்டாரைக் கூவாயோ!
பேதையாய்க் காமம் பிடிப்பாய்! பிழைப்பாயோ?
சீதையால் இன்னும் வருவ சில வேயோ?''

என்றெல்லாம் கூறிப் புலம்பியதைக் கம்பன் மிகுந்த கருத்துச் செரிவு மிகுந்த கவிதைகளில் குறிப்பிடுகிறார்.

இராமன் துயரம்

இந்திரசித்தன் பிரம்மாஸ்திரத்தை ஏவி இலக்குவனையும் இதர பல வானர வீரர்களையும் சாய்த்தான். இராமன் போர்க்களத்திற்கு வந்து பார்த்த போது அனைவரும் மாண்டு கிடப்பதைக் கண்டு கலங்கினான், புலம்பினான் அப்போது

''மண்மேல் வைத்த காதலின், மாதர் முதலோர்க்கும்,
புண்மேல் வைத்த தீ நிகர் துன்பம் புகுவித்தேன்,
பெண்மேல் வைத்த காதலின் இப்பேறுகள் பெற்றேன்;
எண்மேல் வைத்த என்புகழ் நன்றால் எளியேனோ? ''

என்று கூறி இராமன் புலம்பியதாகக் கம்பன் குறிப்பிடுகிறார்.

மேலும் இராமபிரான்

''சீதை என்று ஒருத்தியால் உள்ளம் தேம்பிய
பேதையேன், சிறுமையால் உற்ற பெற்றியை
யாது என உணர்த்துகேன்! உலகொடு இவ்வுறாக்
காதைவன் பழியொடும் நிறுத்திக் காட்டினேன்''

எனவும்

''மாயையிம்மான் எனஎம்பி வாய்மையால்
தூயன உறுதிகள் சொன்ன சொற்கொளேன்!
போயினென்; பெண் உரை மறாது போனதால்
ஆயது இப்பழியுடை மரணம்; அன்பினீர்''

எனவும் இன்னும்

''தாதையை இழந்தபின், சடாயு இற்றபின்
காதல் இன் துணைவரும் மடியக் காத்து உழல்
கோது அறு தம்பியும் விளியக், கோள் இலன்
சீதையை உகந்துளான் என்பர் சீரியோர்''

என்றும் பலவாறாக வருந்தி இராமன் பேசியதைக் கம்பன் மிகுந்த அவலச் சுவையுடன் குறிப்பிடுகிறார். தனது அன்பு மிகுந்த மனைவி சீதையின் மீதுள்ள காதல் மிகுதியால் அவளுக்காகத் தனது தம்பியை யும் இதர நண்பர்களையும் பலி கொடுத்தான் என்று நல்லவர்கள் பலரும் பேசுவர் என்று இராமன் வருந்துகிறான் என்றும் கம்பன் இங்கு குறிப்பிடுவது மிகவும் நுட்பமான செய்தியாகும்.

அனுமனுடைய ஆற்றலால் சஞ்சீவி மலையே கொண்டு வரப்பட்டு அதன் மருத்துவ இலைகளின் குணங்களால் மாண்டோர் எல்லோரும் உயிர் பெற்றெழுந்தனர். இந்த செய்தி இராவணன் சபைக்குச் செல்கிறது. மாலியவான் மீண்டும் இராவணனிடம் வந்து அவனுக்கு அறிவுரை கூறுகிறான். ''இன்னும் சானகியை மரபின் ஈந்து அவ்வறம் தரு சிந்தையோரை அடைக்கலம் புகுதும் ஐயா'' என்று கூறினான் அதைக் கேட்டு இராவணன்

''கட்டுரை அதனைக் கேளா, கண்ளரி கதுவ நோக்கிப்
பட்டனர் அரக்கர் என்னில், படைக்கல் படைத்த எல்லாம்,
கெட்டன என்னும், வாழ்க்கை கெடாது; நல்கிளி அன்னாளை
விட்டிட எண்ணியோ நான் பிடித்தது வேட்கை வீய?''

என்று கூறிவிட்டான்.

நிகும்பலை யாகத்தின் போது

நிகும்பலை யாகத்திற்குச் செல்வதற்கு மறுக்காட்டாக இந்திரசித்தன் மாயா சீதையைக் கொண்டு வந்து அதை வானரப் படையினர் முன்பாக வெட்டிக் கொன்றான். அதை நேரில் கண்ட அனுமன் அங்கமும் மனமும் கண்ணும் உயிரும் துடிக்க வருந்தி விரைவில் வந்து இராமனிடம் செய்தி கூற அவன் ''தீரும் இச் சீதையோடும் என்கில தன்று இத்தீமை'' என்றும்

''தாதைக்கும் சடாயுவான
தந்தைக்கும், தமியள் ஆய
சீதைக்கும் கூற்றம் காட்டித்
தீர்ந்திலது ஒருவன் தீமை
பேதைப் பெண் பிறந்து பெற்ற
தாயர்க்கும் பிழையிலாத
காதல் தம்பியர்க்கும், ஊர்க்கும்
நாட்டிற்கும் காட்டிற்று அன்றே?''

என்றும் வருந்தியதைக் கம்பர் குறிப்பிடுகிறார்.

இந்திரசித்தன் நிகும்பலை யாகத்தைத் தொடங்கினான். இலக்குவனும் வீடணனும், அனுமனும் சென்று அவனுடைய யாகத்தைத் தடுத்தனர். வீடணன் தான் தனது தோல்விக்குக் காரணம் என்று கருதி இந்திரசித்தன் அவனை ஏசினான். அப்போது இருவருக்கும் ஒரு வாக்குவாதம் நடைபெறுகிறது. இந்திரசித்தன்

தன்னை இகழ்ச்சியாகப் பேசியதற்கு பதிலளித்து பேசியபோது வீடணன் ''அறம் துணையாவது அல்லால் அரு நரகு அமைய நல்கும் மறம் துணையாக மாயாப் பழியோடும் வாழ மாட்டேன்'' என்றும் ''வலியால் ஒன்றும் கொண்டிலேன்'' என்றும் ''பெண்டிரின் திறம்பினாரைத் துறந்தது பிழையிற்றாமோ?'' என்றும் ''கற்பினில் சிறந்துளாளை நோவன செய்தல் தீது என்றும் உரைப்ப நுன் தாதை சீறிப் போ என உரைக்கப் போந்தேன்'' என்றும் கூறியதைக் கம்பன் மிகச் சிறப்பாகக் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

நிகும்பலை யாகத்தைச் செய்ய முடியாமல் இலக்குவனிடமும் வீடணனிடமும் அடிபட்டு ஓடி வந்து இந்திரசித்தன் தன் தந்தையிடம் வந்து ''சூழ்வினை மாயம் எல்லாம் உம்பியே துடைத்தான், தாழ்விலாப் படைகள் மூன்று தொடுத்தேன், இளையவன் அதைத் தடுத்து விட்டான்'' என்றும் ''குலம் செய்த பாவத்தாலே கொடும் பழி தேடிக் கொண்டாய்'' என்றும் ''ஆசை தான் அச்சீதைபால் விடுவையாயின் அனையவர் அச் சீற்றம் தீர்வர், போதலும் புரிவர், செய்த தீமையும் பொறுப்பர், உன்மேல் காதலால் உரைத்தேன்'' என்று தனது சொந்த அனுபவத்தில் உண்மையை உணர்ந்து நியாயத்தை எடுத்துக் கூறுகிறான்.

இதைக் கேட்ட இராவணன் பெருநகை புரிந்துத் தன்மகனிடம் ''பிள்ளாய் நீ போர் செய்து களைப்படைந்து விட்டாய் நீ போய் ஓய்வு எடுத்துக்கொள் நீ எதற்கும் கவலைப்பட வேண்டாம், ''என்னையே நோக்கியான் இந்நெடும் பகை தேடிக் கொண்டேன்'' என்று கூறி விட்டு நான் ''யாக்கையை விடுவது அல்லால் சீதையை விடுவ துண்டோ?'' என்றும் ''வென்றிலேன் என்ற போதும், வேதம் உள்ளவும் யானும் நின்றுளேன் அன்றோ மற்ற இராமன் பேர் நிற்குமாயின்'' என்றும் கூறியதை இராமாயண மகா காவியத்தின் உச்சமாகக் கம்பன் மிக அருமையாக எடுத்துக் கூறுகிறார். இங்கு இராவணனுடைய இறுதி முடிவு தீர்மானமாக வெளிப்பட்டு விட்டது. இந்த வார்த்தைகளில் இராவணனுடைய பெருங்காதலும் கம்பீரமும் இணைந்துவிட்டன.

இந்திரசித்தன் முடிவு

இந்திரசித்தன் போரில் மாண்டான். இலக்குவனுடைய கணைகளால் அறுபட்ட அவனுயை தலையை அங்கதன் எடுத்துக் கொண்டு போய் இராமனுடைய காலடிகளில் வைத்தான்.

இராவணன் போர்க்களத்தில் புகுந்துத் தலையில்லாத மகனுடைய உடம்பைத் தூக்கிக் கொண்டு இலங்கை நகருக்குள் வந்தான். தன் மகனுடைய உடல் மீது விழுந்து தாய் மண்டோதரி புலம்பி அழுதாள்

''பஞ்சு எரி உற்றது என்ன
அரக்கர் தம் பரவை எல்லாம்
வெஞ்சின மனிதர் கொல்ல
விளிந்ததே; மீண்டதில்லை;
அஞ்சினேன்! அஞ்சினேன் அச்
சீதை என்று அழுதால் செய்த
நஞ்சினால் இலங்கை வேந்தன்
நாளை இத்தகையன் அன்றோ?''

என்று மண்டோதரி அழுது புலம்புகிறாள். இலங்கை வேந்தனுக்கும் நாளைக்கு இதே கதி தான் ஏற்படும் என்னும் முடிவுக்கும் மண்டோதரி வந்து விட்டாள் என்பதை இங்குக் கம்பன் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

இந்திரசித்தன் கொல்லப்பட்டதால் ஆத்திரமடைந்த இராவணன் ''சீதையைக் கொல்வேன்'' என்று தனது வாளை உருவிக் கொண்டு ஓடினான். மகோதரன் அவனைத் தடுத்து ''இச் செய்கையால் பேராப் பெரும் பழி வந்து சேரும்'' என்றும்

''மங்கையைக் குலத்து உளாளைத்
தவத்தியை முனிந்து வாளால்
சங்கை ஒன்று இன்றிக் கொன்றால்
குலத்துக்கே கதக்கான்'' என்று
கங்கை அம் சென்னியானும்,
கண்ணனும், கமலத்தோனும்
செங்கையும் கொட்டி உன்னைச்
சிரிப்பரால், சிறியன் என்னா?''

என்றும்

''இன்று நீ இவளை வாளால்
எறிந்து போய், இராமன் தன்னை
வென்று மீண்டு இலங்கை மூதூர்
எய்தினை வெதும்புவாயோ?

பொன்றினள் சீதை; என்றே
போவார்கள் அவர்தாம்; அல்லால்
வென்றிட முடியாது என்னும்
வீரமோ விளம்பல்' என்றான்''

என்றும் இராவணனுடைய உள்ளக் கிடக்கையை தன்மானத்தைத் தொட்டுப் பேசியதைக் கம்பன் மிகவும் நேர்த்தியாகத் தனது கவிதைகளில் எடுத்துக் கூறுகிறார்.

மூலபலப்படைத் தலைவர்களிடம்

இராவணன் தனது மூலபலப் படைத்தலைவர்களிடம் அவர்கள் கேட்ட சந்தேகங்களுக்குப் பதில் கூறிப் பேசும் போது ''சீதை காதலின் பிறந்துள பரிசு எலாம் தெரித்தான்'' என்று''சீதை என்று இருந்தவத்து இயைந்தாள் கற்புடைப் பத்தினி பொருட்டால் விதி விளைந்தது'' என்றும் ''சீதை என்பவள் தனை விட்டு அம்மனிதரைச் சேர்தல் ஆதியின் தலை செயத்தக்கது இனிச் செயல் அழிவாம்'' என்றும் ''விட்ட ஆயினும் மாதினை வெம்சமம் விரும்பிப்பட்ட வீரரைப் பெருகிலம்'' என்றும் குறிப்பிட்டு ''செருத்தொழில் இனிச் செய்யும் கடமை என்று அவர்களிடம் முடிவு கூறுகிறான்.

மூலபலப்படை போரில் குதித்தது, இராமபிரான் தனது சக்திக் கணைகளால் மூலபலப்படை முழுவதையும் அழித்து விட்டான்.

மயல் அடங்கியது

இராவணன் போருக்கு எழுந்தான் அவன் போருக்கெழுந்த அந்த கம்பீரத்தைக் கண்டு உலகமே வியந்தது. இராம இராவண இறுதிப் போர் துவங்கியது. தருமமும் அதர்மமும் மோதியது. இராகவனுடைய புனித வாளி இராவணனுடைய மார்பில் புகுந்து அவனுடைய உயிரைப் பருகிப் புறம் போயிற்று. அவனுடைய சினம் அடங்கியது. மனம் அடங்கியது. செயல் அடங்கியது. மயல் அடங்கியது. தம்மடங்கு முனிவரையும் தலையடங்கா நிலையடங்கச் செய்த நாளின் மும்மடங்கு பொலிந்தன அம்முறை துறந்தான் உயிர் துறந்த முகங்கள் அம்மா, என்று கம்ப நாடர் மிக அற்புதமாக இராவணன் வீழ்ச்சியின் காட்சியை நமக்குக் காட்டுகிறார்.

இராவணன் வீழ்ந்து கிடந்த போது வீடணன் பாசம் பொங்கி கண்ணீர் உகுத்தான். இராவணன் மாவீரன் தாயினும் தொழத்

தக்கான் அவனுடைய உள்ளத்தில் குடி கொண்டு தங்கிய ''காதல் தன்மை நோயும் நின் முனிவும் அல்லால் அவனை வெல்வது அரிது. உன்னைத் தவிர வேறு யாராலும் அவனை வெல்ல முடியாது'' என்று இராமபிரானிடம் எடுத்து உரைத்தான். இராவணனுடைய உடல் மீது விழுந்து வீடணன் அழுதான்.

''உண்ணாதே உயிர் உண்ணாது ஒரு நஞ்சு சானகி என்னும் பெருநஞ்சு உன்னைக் கண்ணாலே நோக்கவே போக்கியதே உயிர் நீயும் களப்பட்டாயே''என்றும் ''ஓராதே ஒருவன் தன் உயிர் ஆசைக் குலமகள் மேல் உடைய காதல் தீராத வசை என்றேன் எனை முனிந்த முனிவு ஆறித்தேறினாயோ? என்றும் ''தெய்வக் கற்பின் பேர் மகளைத் தழுவுவான் உயிர் கொடுத்துப் பழி கொண்ட பித்தா'' என்றும் கூறி அழுததைக் கம்பன் குறிப்பிடுகிறார்.

மண்டோதரி புலம்பினாள், அவள்

''வெள் எருக்கம் சடை முடியான் வெற்பு எடுத்த
திருமேனி, மேலும் கீழும்
எள் இருக்கும் இடன் இன்றி, உயிர் இருக்கும்
இடம்நாடி இழைத்த வாறோ!
கள் இருக்கும் மலர்க் கூந்தல் சானகியை
மனச் சிறையில் கரந்த காதல்
உள் இருக்கும் எனக் கருதி உடல் புகுந்து
தடவிய தோ ஒருவன் வாளி?''

என்றும்

"அறை கடையிட்டு அமைவுற்ற முக்கோடி
ஆயுவும், பேர் அறிஞர்க்கேயும்
உரை கடையிட்டு அளப்பரிய பேராற்றல்
தோள் ஆற்றற்கு உலப்போ இல்லை
திரை கடையிட்டு அளப்பரி வரம் என்னும்
பாற்கடலைச் சீதை என்னும்
பிரை கடையிட்டு அழிப்பதனை அறிந்தேனோ
தவப்பயன் நின் பெருமை பார்ப்பேன்?''

என்று அலரிப் புடைத்து மண்டோதரி தனது கணவன் உடல் மீது விழுந்து உயிர் விட்டாள்.

இவ்வாறாகக் கம்பநாடர் அவருடைய உலகப் புகழ் மிக்க பெருங்காவியத்தில் கதை முழுவதிலும் பெருங்காதல் விளைவுகளைப் பற்றிப் பல்வேறு இடங்களிலும் பலவேறு கட்டங்களிலும் பலவேறு பாத்திரங்களின் மூலமான பல நிகழ்ச்சிகளிலும் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

தசரதன், கைகேயி, இராமன், சீதை, இலக்குவன், சூர்ப்பணகை, வாலி, இராவணன் ஆகியோருடைய வாழ்க்கையில் ஏற்படும் நிகழ்ச்சிகளில் காதலும் பெருங்காதலும் பெண்ணாசையும் பெண்ணாட்டமும் ஆற்றும் செல்வாக்கும் தலையீடுகளும் கதையில் முக்கிய பங்கு வகிக்கின்றன. முக்கிய திருப்பங்களை எற்படுத்து கின்றன. அவைகள் மூலம் மனித வாழ்க்கைக்கு அவசியமான நீதி நெறி முறைகளும் ஒழுக்க நெறி முறைகளும் முன் வைக்கப் படுகின்றன. மனித குல நல்வாழ்விற்கும் முன்னேற்றத்திற்கும் அவசியமான நெறிமுறைகளும் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன.

காவியத்தில் தசரதச் சக்கரவர்த்தியிடம் கைகேயி பால் இருந்த காதல் மிகுதியைப் பற்றியும் அதன் விளைவைப் பற்றியும் அயோத்தி மக்கள் பேசுகிறார்கள். இலக்குவன் கோபத்துடன் பெண்ணாட்டம் கொள்ளேன் என்று குறிப்பிடுகிறான். இன்னும் பல இடங்களிலும் தசரதனுடைய காதல் மிகுதியைப் பற்றிக் கதையில் பல பாத்திரங்களும் பேசுகின்றன.

இராமபிரானுக்கும் சீதாபிராட்டிக்கும் இடையிலான அன்பு, காதல் தெய்வீகத் தன்மை கொண்டது. ஆயினும் சீதையின் பால் இராமனுக்கு இருந்த அன்பு மிகுதி, காதல் மிகுதி, அவனை மாயமான் பின்னால் போக வைத்தது பற்றியும் அதன் விளைவுகள் பற்றியும் கதைப் போக்கின் பல இடங்களிலும் பேசப்படுகின்றன. சடாயு மூலமும் மற்றும் இராமன், சீதை ஆகியோரின் கூற்றுகள் மூலமும் எடுத்துக் காட்டப்படுகின்றன.

வாலி தனது ஆட்சியில் மனை மாட்சியை அழித்தது பற்றி இராமன் குறிப்பிடுவதும் வாலி தனது கடைசி காலத்தில் தனது செயல்களுக்கு வருந்துவதும் கிட்கிந்தா காண்டத்தில் முக்கிய கருத்தாக முன் வைக்கப்பட்டுள்ளது.

சூர்ப்பணகைக்கு இராமன் பால் எற்பட்ட ஒருதலையான காதல் மிகுதி ஒரு முக்கிய நிகழ்ச்சியாகக் கதையில் முக்கிய திருப்பமாக அமைந்துள்ளது. சூர்ப்பணகைத் தனது கணவன், இராவணனால்

கொல்லப்பட்ட காரணத்தால் பழி வாங்கும் நோக்கத்தில் இராவணனை சீதைபாலான காம வெறியில் சிக்க வைத்தாள் என்றும் கதையில் பேசப்படுகிறது.

இராவணனுக்கு சீதையின் மீதான பெண்ணாட்டம் பெண்ணாசை, பெண்கள் பால் வைத்த பெரு நேயம், ஆசை மிகுதி, காதல் மிகுதி, காம வெறி, பெருங்காதல் ஆகியவை காவியத்தின் முக்கிய பகுதியாகும். அநேகமாக இராமாயண மகாகாவியத்தின் சரிபாதி பகுதியை இராவணனுடைய இச்செயல்கள் பரவி நிற்கின்றன.

சீதையைக் கவருவதற்கு இராவணன் எடுத்த முயற்சியின் தொடக்கத்திலேயே அக்காரியத்திற்கு இராவணனுக்கு உதவி செய்த மாரீசனே இராவணனுடைய முயற்சிக்கு மறுப்பு தெரிவித்து அம்முயற்சி வேண்டாமென்றும் சொல்லிப் பார்க்கிறான்.

இராவணன் சீதையை வான வெளியில் கொண்டு செல்லும் போது வழியில் கழுகரசன் சடாயு, அவனைத் தடுத்துப் போரிட்டு இராவணனுடைய தெய்வீக வாளால் வெட்டுப்பட்டுக் கீழே விழுகிறான். முதல் தடை ஏற்படுகிறது.

சீதை அசோகவனத்தில் சிறை வைக்கப்பட்டுப் பின்னர், இராவணன் பல முறை அங்கு சென்று சீதையிடம் கெஞ்சுகிறான். தன் ஆசையை வெளிப்படுத்திச் கூறுகிறான். பின்னர் அச்சுறுத்துகிறான் மிரட்டுகிறான். பல விதமான சாகசங்களும் செய்து அவளைச் சம்மதிக்க வைக்க முயலுகிறான்.

ஒவ்வொரு முறையும் சீதை அவனுக்கு அறிவுரை கூறிக் கடுமையாகப் பேசிப் புத்தி புகட்ட முயற்சிக்கிறாள்.

நிகழ்ச்சிகளின் நெடுகிலும் இராவணனுடைய செயலைக் கண்டித்தும் ஆட்சேபித்தும் அறிவுரை கூறியும் பலரும் பேசினர்.

இராவணனுக்கு அடுத்த அவனுடைய தம்பி கும்பகருணன், தன் அண்ணனுடைய ஆசையை அவனுடைய செயலைக் கண்டித்து பேசினான்.

அவனுடைய அடுத்த தம்பி வீடணன் மிக்க வணக்கத்துடன் இராவணனுக்கு அறிவுரை கூறிச் சீதை இலக்குமியின் அவதாரம் என்றும் இராமன் திருமாலின் அவதாரம் என்றும் திருமாலின் அவதாரப் பெருமைகளையும் இரணியன் வரலாற்றையும் நாராயண மந்திரத்தின் பெருமைகளையும் எடுத்துக் கூறி இராவணனுக்குப் புத்தி புகட்ட முயற்சிக்கிறான்.

இராவணனுடைய தாய் வழிப் பாட்டன் முதியவன் மாலியவான் தொடர்ச்சியாக இராவணனுடைய செயலைக் கண்டித்துக் கடைசி வரை தன்னைத் திருத்திக் கொள்ளுமாறு சொல்லிக் கொண்டேயிருந்தான்.

இராமன் அனுமனையும் அங்கதனையும் தூது அனுப்பி இராவணனிடம் சீதையை விடும்படி கேட்கிறான். தேவியை விடுக இல்லையேல் ஆவியை விடுக என்று கூறிப் பார்த்தான். இது ஒரு அரசியல் முயற்சியாகும்.

அதிகாயன் போர்க்களத்தில் மாண்ட போது அவனுடைய தாய் தானமாலையும் தனது அழுகை மூலம் இராவணனுடைய செயலைக் கண்டிக்கிறாள்.

கடைசியாக மாவீரன் இந்திரசித்தன் வானரப் படைகளை எதிர்த்து இரு முறை வெற்றி பெற்றவன், போரில் வல்லவன் பல வெற்றிகளைக் கண்டவன் நிகும்பலை யாகத்தை நடத்த முடியாமல் திரும்பி ஓடிவந்து இனி வெற்றி வாய்ப்பு இல்லை என்று கருதித் தன் தந்தையிடம் ‘‘குலம் செய்த பாவத்தாலே கொடும் பழி தேடிக் கொண்டாய் ஆசை தான் அச் சீதைபால் விடுவையாயின் அனையவர் அச் சீற்றம் தீர்வர் போதலும் புரிவர், செய்த தீமையும் பொறுப்பர்’’ என்று தன் அனுபவத்தில் எழுந்த கருத்தைக் கூறி விட்டான்.

இவை எதற்கும் இராவணன் அசையவில்லை. எந்த அறிவுரையும் அவன் காதில் ஏறவில்லை. அவன் தன் நிலையிலிருந்து மாறவில்லை. ‘‘என்னை நம்பியே இந்நெடும் பழி தேடிக் கொண்டேன். வேதங்கள் உள்ளளவும் இவ்வுலகம் உள்ளளவும் இராமன் பேர் இருக்குமாயின் என் பேரும் இருக்குமன்றோ, நான் என் தனியாண்மை பெயரேன்’’ என்று இறுதியாக உறுதியாகக் கூறிவிட்டான்.

இத்தகைய தனி ஆண்மையும் அதன் முடிவும் இராமாயண மகாகாவியத்தின் உச்சமாகும். கம்ப நாடரின் இந்தக் காட்சிகள் நாம் மீண்டும் மீண்டும் படித்து உணரத்தக்கன.



36. தொகுப்புரை – 2

கற்பு நெறி

இராம காதையில் மிக முக்கியமாக எடுத்துக் காட்டப்படும் அறநெறிகள், ஒழுக்க நெறிகள் ஆகியவை இருபாலருக்கும் பொதுவாக வலியுறுத்தப்படுகிறது. இராமபிரானுடைய ஏக பத்தினி விரதமும், சீதா பிராட்டியின் கோதிலாக் கற்பு நெறியும் மிக உயர்ந்த நிலையில் முன் வைக்கப்படுகிறது. கம்ப நாடர் தனது மகா காவியத்தில் கற்பு நெறி பற்றிய சொற்றொடர்களை மிக விரிவாகப் பல இடங்களிலும் கையாண்டுள்ளார். கம்பனுடைய இராம காவியம் ஒரு தெய்வீகக் காவியம் என்னும் முறையிலும் அதன் தெய்வீகப் பாத்திரங்களின் சிறப்புகளிலும் இலக்கியப் பாத்திரங்களின் சிறப்புகளிலும் இலக்கியச் சிறப்புகளிலும் கற்பு நிலையின் மேன்மைகளை அதன் தெய்வீகத் தன்மையிலும் இலக்கியத் தன்மையிலும் காண்பது மிகவும் அவசியமாகும்.

உலகில் உள்ள அத்தனை பொருள்களையும் உலகம் அனைத்தையும் ஆக்கலும் நிலை பெறுத்தலும் நீக்கலுமான கடமைகளைத் தங்களுடைய நீங்காத தொடர்ச்சியான விளையாட்டுகளாக நடத்திக் கொண்டிருக்கும் முழு முதல் தலைவன் அப்பொருள்களின் செயல் பாடுகளை நெறிப்படுத்தவும் செய்கிறான். இயற்கை சக்திகளின் செயல்பாடுகளை முழு முதற் தலைவன் நெறிப்படுத்துகிறான். இதில் அறிவு சார்ந்த மனித முயற்சிகளும் துணையாக நிற்க வேண்டும். இயற்கையைப் போலவே மனித வாழ்க்கையையும் நெறிப்படுத்த வேண்டும். அதன் பகுதி கற்பு நெறியுமாகும்.

மனிதனுடைய குண இயல்புகளை சாத்வீகம், ராஜசம், தாமசம் என்னும் மூன்று பிரிவுகளாக வகுத்துக் கூறியுள்ளார்கள் நமது முன்னோர்கள். அதுவே நமது நாட்டின் தத்துவ ஞான சிந்தனையின் அறிவு இயல் தத்துவத்தின் தொடக்கமாகும். இந்த முக்குணங்களும் இயற்கைச் சூழல்களின் செல்வாக்கிற்கு உட்பட்டுச் செயல்படுகின்றன. அவைகளை முறைப்படுத்திச் செல்வது நமது கடமையும் முயற்சியுமாகிறது.

வெள்ளம், பறவை, விலங்கு, வேசையர் உள்ளம் ஆகியவை பொதுவாக ஒரு நிலையில் நிற்காது ஒரு வழியில் ஓடாது.

இவைகளையும் கூட தனது நல்லாட்சியினால் நெறிப்படுத்தி ஒரு வழியில் ஓடவைத்தது தசரதனுடைய ஆட்சி என்பதைக் கம்பன் மிகவும்சிறப்பாகத் தனது காவியத்தில் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

மனிதர்களின் ஒழுக்க நெறிகளை மட்டுமல்லாமல் இயற்கை சக்திகள் பறவைகள் விலங்குகள் மற்றும் எய்தின் எய்தியதாக உணர்வு செல்லும் வழியில் போன போக்கில் செல்லும் மக்களையும் நெறிப்படுத்த வேண்டிய அவசியத்தையும் கம்ப காவியம் வலியுறுத்துகிறது. இதையே தக்க இன்ன தகாதன இன்ன என்று ஒக்க உன்னுதலின் அவசியத்தை இராமபிரான் வாலிக்குக் கூறுவதாக அமைந்துள்ளது.

கம்பனுடைய காவியத்தின் தொடக்கமான ஆற்றுப்படலத்தில் முதல் பாடலாக அவர் கோசல நாட்டின் ஆற்றணியைக் கூறுகிறார்.

''ஆசு அலம்புரி ஐம்பொறி வாளியும்
காசு அலம்பு முலையவர் கண் எனும்
பூசல் அம்பும், நெறியின் புறம் செலாக்
கோசலம் புனை ஆற்றணி கூறுவாம்.''

என்பது கம்பருடைய கவிதையாகும்.

ஐம்பொறிகள் என்பது மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்துமாகும் இந்த ஐம் பொறிகளின் செயல்பாடுகள் உணர்தல் சுவைத்தல், பார்த்தல், முகர்தல், கேட்டல், ஆகிய ஐந்துமாகும். இவைகளின் மூலம் நாம் நம்மைச் சுற்றியுள்ள உலகைப் பற்றிய பட்டறிவைப் பெறுகிறோம். இந்தப் பட்டறிவுகளை ஒரு முகப்படுத்தியும் முறைப்படுத்தியும் நமது ஆறாவது அறிவின் மூலம் பகுத்தும் ஆய்வு செய்தும் அனுபவத்தின் மூலம் அறிந்தும் உண்மை அறிவைப் பெறுகிறோம். அந்த உண்மை அறிவும் மேலும் மேலும் விரிவடைகிறது. கூர்மையடைகிறது.

இந்த ஐம்பொறிகளின் செயல்பாடுகள் பொதுவாக காசு அலம்பு முலையவர் கண் எனும் பூசல் அம்பு பாயும் போது தடுமாறுகின்றன. நிலை குலைகின்றன. அவைகளில் நெறி தடுமாறிப் புறம் செலாதபடி அவைகளைக் கட்டுப்படுத்தி ஒரு முகப்படுத்திச் சரியான வழியில் செல்லவைக்கும் ஒரு சிறந்த ஆட்சி நிர்வாகம் அமைந்துள்ள நாடு கோசல நாடு. மகாகவி பாரதி தனது அச்சமில்லை அச்சமில்லை

என்னும் பாடலில் ''கச்சணிந்த கொங்கை மாதர் கண்கள் வீசு போதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே'' என்று குறிப்பிடும் வரிகள் இங்கு நினைவு கூறத் தக்கது.

கோசல நாட்டின் செல்வச் செழிப்பிற்குக் காரணமாக உள்ள ஆற்றின் அணியை இவ்வாறுச் சிறப்பாகக் கம்ப நாடர் விவரித்துக் கூறுகிறார். அவருடைய இந்தப் பாடலின் கருத்தமைவு இராம காதை முழுவதையும் தழுவி நிற்கிறது.

கோசல நாட்டின் சிறப்புகளைப் பற்றிக் குறிப்பிடும் போது கம்பர்

''பொற்பின் நின்றன பொலிவு பொய் இலா
நிற்பின் நின்றன நீதி, மாதரார்
அற்பின் நின்றன அறங்கள், அன்னவர்
கற்பின் நின்றனகாலமாரியே''

என்று கூறுகிறார்.

மக்களுடைய நல்ல பண்புகளால் ஒரு நாடு பொலிவு பெறுகிறது. அழகு அடைகிறது. அப்பொலிவும் அழகும் நிலை பெறுகின்றன. மக்களிடம் பொய்களில்லாத நிலைமையினால் நீதி நிலை பெறுகிறது. ஒரு நாட்டின் மாதர்களின் தாய்மை அன்புகளால் அறங்கள் நிலை பெறுகின்றன. அவர்களுடைய கற்பினால் ஒழுக்கம் நிறைந்த நல்ல குணங்களால் பருவமழை நிலை பெறுகிறது. பருவ மழையால் செழிப்பும் செல்வமும் ஓங்குகிறது. அதன் மூலம் கல்வியும் அறிவும் தழைக்கிறது. பொலிவு, நீதி, அறம், கற்பு, செல்வம், கல்வி, அறிவு இவையெல்லாம் மனித சமுதாயப் பண்பாட்டின் அடித்தளங்களாகும்.

நல்லாட்சியின் அடையாளங்கள்

வரி குறைத்தல், அரசின் நிதி சேமிப்புகள் மூலம் நலிந்தோருக்கு உதவிடுதல், படைகளைக் குறைத்தல், அரசியல் காரணங்களினால் சிறையில் உள்ளவர்களின் நிலைமைகளை அவ்வப்போது பரிசீலனை செய்து அவர்களை விடுதலை செய்தல், வேதியர்களின் (சான்றோர் அறிஞர் ஆகியோர்) நியமங்கள் சீராக நடைபெறுதல், கல்வி செழித்தல் விழாக்கள் எடுத்தல், ஆலயங்கள் புதுப்பித்தல், அந்தணர்களின் வேள்விகள் சீராக நடத்தல், காலை, மாலைகளில் கோவில்களில் நித்திய பூசைகள் சிறப்பாக நடத்தல், ஆகியவை யெல்லாம் நல்லாட்சிக்கான அடையாளங்களாகும். அப்போது மக்களுடைய கல்வியும் ஒழுக்கமும் சிறந்து ஓங்குகின்றன.

அகலிகை பற்றி

இராமனுடைய கால் துகள் பட்டுக் கல்லாயிருந்த அகலிகை தனி உயிர் வடிவைப் பெற்றாள். அவளுடைய கதையைக் கேட்ட இராமன் அவளை அழைத்துக் கொண்டு போய் அவளுடைய கணவன் கேளதம முனிவனிடம் கொண்டு போய்ச் சேர்த்தான்.

குணங்களால் உயர்ந்த வள்ளல் (இராமன்), கோதமன், கமலத் தாள்களை வணங்கினான். வலங் கொண்டு ஏத்தி மாசறு கற்பின் மிக்க அணங்கினை அவன் கையீந்து ஆண்டு அருந் தவத்தனோடும் (விசுவாமித்திரனோடு) வாச மணம் கிளர் சோலை நீங்கி மணிமதில் கிடக்கை (மிதிலை) கண்டார் என்று கம்பர் குறிப்பிடுகிறார். அகலிகை நெஞ்சாரப் பிழை செய்யவில்லை. எனவே மாசறு கற்பின் மிக்கவள் என்று இராமன் வாயால் கம்பநாடர் குறிப்பிடுகிறார்.

இராமன் மிதிலையில் சிலை வளைத்தான் என்னும் செய்தி கேட்டு திருமண உறுதி செய்தவற்காக தசரதனும் அவனுடைய படை பரிவாரங்களும் மிதிலையை நோக்கிச் செல்கின்றனர். அதில் குலகுரு வசிட்டர் முத்துச் சிவிகையில் சென்றான் என்பதை ''கற்பின் அருந்ததி கணவன் முத்துச் சிவிகையில் அன்னம் ஊரும் திசை முகம் என்னச் சென்றான்'' என்று கம்பர் குறிப்பிடுகிறார்.

பால காண்டம் பூக்கொய் படலத்தில்

''ஊறு இல்ஞானத்து உயர்ந்தவர் ஆயினும்
வீறுசேர் (அழகு பொருந்திய) முலை மாதரை வெல்வரோ?''

என்று மாதரின் மேன்மையை பன்முகச் சக்தியை உயர்த்திக் கம்பன் பேசுகிறார்.

சீதை மணப் பெண்ணாக உறுதிப் படுத்தப்படுகிறாள். அவளுடைய உள்ளத்திலே மகிழ்ச்சி பொங்கியிருக்கிறது. இராமனும் மகிழ்ச்சி பொங்கியிருக்கிறான். இங்கு சீதையைப் பற்றிக் குறிப்பிடும் போது அருந்ததி அனைய கற்பின் நங்கையும் நம்பி ஒத்தாள்'' என்று கம்ப நாடர் குறிப்பிடுகிறார்.

திருமண நிகழ்ச்சிகளில் தீயை வலம் வந்து வணங்குதலும் அம்மி மிதித்து அருந்ததி காணலும் நமது மரபும் பண்பாட்டின் பகுதியும் ஆகும். இதைக் கவிஞர் மிக அழகாகக் குறிப்பிடுகிறார்.

''வலங்கொடு தீயை வணங்கினர் வந்து
பொலம் பொரி செய்வன செய் பொருள் முற்றி
இலங்கொளி அம்மி மிதித்து, எதிர் நின்ற
கலங்கல் இல் கற்பின் அருந்ததி கண்டார்''

என்று கம்பர் குறிப்பிடுகிறார்.

இராமனுக்குப் பட்டம்?

கன்னியருக்கு கற்பு பெருமை தருகிறது. அதே போல நாட்டிற்குப் பெருமை தருவது அந் நாட்டை ஆளும் அரசன் தருமத்தைக் காத்து நாட்டு மக்களுக்குரிய நன்மைகள் செய்வதாகும். நான் அதையெல்லாம் செய்து முடித்துவிட்டேன். இனி என் உயிருக்குப் பொருந்திய நன்மைகளைச் செய்து வீடு பேறு அடைய விரும்புகிறேன். என்று தசரதச் சக்கர வர்த்தித் தனது அமைச்சர்களிடம் கூறுவதை

''கன்னியர்க்கு அமைவரும் கற்பின் மாநிலம்
தன்னை இத்தகை தரத் தருமம் கை தர
மன் உயிர்க்கு உறுவதே செய்து வைகினேன்;
என் உயிர்க்கதி உறுவதும் செய்ய எண்ணினேன்''

என்று கம்பன் குறிப்பிடுகிறார். இங்கு அரசரின் நல்லாட்சிக்கு மங்கையரின் கற்பு நிலை ஒப்பிடப்படுகிறது.

இராமனுக்கு முடி சூட்டுவதற்கான ஏற்பாடுகள் தொடங்கின. அக் காட்சியின் போது கொடுமனக் கூனி தோன்றினாள். கைகேயின் உள்ளத்தில் கோள் மூட்டி விட ஓடினாள், அப்போது கைகேயி தூங்கிக் கொண்டிருந்தாள். மந்தரை அவளை எழுப்பினாள். அரைத் தூக்கத்தில் இருந்த கைகேயியிடம் அவள் பேசத் தொடங்கினாள். அவ்வாறு அரைத் தூக்கத்திலிருந்த கைகேயியைக் குறிப்பிடும் போது கம்பர் அவளை ''தெய்வக் கற்பினாள்'' என்று குறிப்பிடுகிறார்.

''தீண்டலும் உணர்ந்த அத் தெய்வக் கற்பினாள் நீண்ட கண் அனந்தரும் நீங்குகிற்றிலள்'' என்பது கவிதை வரிகளாகும். கைகேயி இயல்பில் நல்லவள். தூயவள், எனவே தெய்வக் கற்பினாள் என்று கவிஞர் குறிப்பிடுகிறார்.

இராமன் முடி சூட்டு விழா பற்றிக் கேள்விப்பட்டு அயோத்தி மக்கள் எல்லாம் மகிழ்ச்சியடைந்தனர். விடிந்ததும் விழாவைக்

காண ஆவல் கொண்டிருந்தனர். கற்பிலே சிறந்த மாதர்களெல்லாம் கோசலையின் முனதைப் போல் மகிழ்ச்சியடைந்திருந்தனர். வேதியர்களெல்லாம் வசிட்டனை ஒத்திருந்தனர். வேறுள மகளிர் எல்லாம் சீதையைப் போல் மகிழ்ச்சியுடன் இருந்தனர். அச் சீதை (திருவிளை திருமகளை) ஒத்திருந்தாள். அந்நகரின் நல்லொழுக்கம் மிக்க மக்கள் எல்லாம் தசரதனை ஒத்திருந்தார்கள். இதைக் கம்பன்,

''மாதர்கள் கற்பின் மிக்கார்
கோசலை மனத்தை ஒத்தார்;
வேதியர் வசிட்டன் ஒத்தார்;
வேறுள மகளிர் எல்லாம்
சீதையை ஒத்தார்; அன்னாள்
திருவினை ஒத்தாள்; அவ்வூர்
சாதுவ மாந்தர் எல்லாம்
தயரதன் தன்னை ஒத்தார்''

என்று குறிப்பிடுகிறார்.

இராமனுக்கு அரசு இல்லை

இராமனுக்கு அரசு இல்லை என்றாகி விட்டது. கைகேயி இராமனைத் தன்னிடம் வரவழைத்தாள்.

''ஆழி சூழ் உலகம் எல்லாம்
பரதனே ஆள, நீ போய்த்
தாழ் இரு சடைகள் தாங்கித்
தாங்கரும் தவமேற் கொண்டு,
பூழிவெம் கானம் நண்ணிப்
புண்ணியத் துறைகள் ஆடி
ஏழிரண்டு ஆண்டில் வா என்று
இயம்பினன் அரசன்; என்றாள்''

அதைக் கேட்ட இராமன் எவ்வித வேறுபாடும் மாறுபாடும் இன்றி ''மன்னவன் பணி அன்றாகில் நும் பணி மறுப்பனோ? என் பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்ற தன்றோ?'' என்று

கூறிக் கானகம் செல்வதற்குக் கைகேயியிடம் விடையும் பெற்றுக் கொண்டு கோசலையின் கோயிலுக்குச் சென்றான். கோசலையோ ''பரதன் முடி சூடுகின்றான்'' என்று கூறிய போது எந்த வித வேறுபாடும் இன்றி மகிழ்ச்சியே அடைந்தாள். ஆனால் இராமன் காட்டிற்குச் செல்கிறான் என்று கேள்விப்பட்ட போது மனம் கலங்கினாள். மயங்கினாள். அவளை இராமன் கைத்தலத்தில் தாங்கி அரும் கற்பினோய் நமது வேந்தனைப் பொய்யனாக்குதியோ'' என்று கூறித் தேற்றினான்.

இராமன் கானகம் போகிறான்

இராமன் கானகம் போகிறான் என்று கேள்விப்பட்ட போது அயோத்தி மக்கள் அனைவரும் அழுது புலம்பினர். அந்தணர் அருந்தவர் அவனி காவலர் நகர் உளார் நாட்டுளார்கள், தேவர் உள்ளமும் வெந்தனர் என்றும்,

அறுபதினாயிரர் அரசன் தேவியர் மறுவறு கற்பினர், மழைக்கண் நீரினர், சிறுவனைத் தொடர்ந்தனர், திறந்த வாயினர், எறி திரைக் கடல் என இரங்கி ஏங்கினர்'' என்று கம்ப நாடர் குறிப்பிடுகிறார்.

இராமன் வனம் செல்கிறான் அதைக் கவிச் சக்கரவர்த்தி கம்பன் தனது ஈடு இணையற்ற தமிழ்ச் சொற்களில்

''தையல் தன் கற்பும், தன் தகவும், தம்பியும்
மையறு கருணையும், உணர்வும், வாய்மையும்
செய்யதன் வில்லுமே சேமமாகக் கொண்டு
ஐயனும் போயினான் அல்லின் நாப்பணே''

என்று குறிப்பிடுகிறார்.

பொருள் பொதிந்த இப்பாடல் வரிகளில் சீதையின் கற்பு தன் பெருந்தன்மை, தம்பி இலக்குவன், கருணை, நல்லுணர்வு, வாய்மை, தனது வில், ஆகியவைகளையே பாதுகாப்பாகக் கொண்டு இராமன் வனம் சென்றான், என்று கம்பன் கூறுகிறார்.

இதில் சீதையின் கற்பும் அவர்களின் பாதுகாப்பு சாதனங்களிலே ஒன்றாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். சீதா பிராட்டியின் அந்தக் கற்பு நிலை அனைத்துச் சோதனைகளையும் தாங்கித் தாண்டிக் கடந்து நிற்பதைக் கதையில் காண்கிறோம்.

பரதன் அயோத்தியில்

அயோத்திக்குத் திரும்பிய பரதன் தன் தந்தை இறந்தது கண்டும் இராமன் காட்டுக்குச் சென்றது கேட்டும் துடித்தான். அதற்குத் தனது தாய் காரணமாக இருந்தாள் என்பதைக் கேட்டுத் தன்னையும் தனது தாயையும் நிந்தனை செய்து கொண்டான். கோசலையிடம் சென்று கதரினான். பரதனின் நிலையைக் கண்டு கோசலை உள்ளம் நெகிழ்ந்தாள் ''இவன் மிகுந்த துன்பத்தை அடைந்துள்ளான். இவன் அரச பாரத்தை ஏற்று நடத்த மாட்டான். இவனுடைய உள்ளம் தூய்மையானது என்று மிக்கப் பொறுமையுடன் மனம் தளர்ந்தாள். அவ்வாறு இருந்த கோசலையை ''குலம் பொறை, கற்பு இவை சுமந்த கோசலை, என்று கம்பன் குறிப்பிடுகிறார்.

''புலம்புறு குரிசில் தன் புலர்வு நோக்கினாள்
குலம், பொறை, கற்பு இவை சுமந்த கோசலை;
நிலம் பொறை, ஆற்றலன், நெஞ்சம் தூயது எனாச்
சலம் பிறிது உற மனம் தளர்ந்து கூறுவாள்''

என்று கம்பர் கூறுகிறார்.

பரதனும் இராமனும்

பரதன் காட்டிற்குச் சென்று இராமனைச் சந்தித்தான். தந்தை தசரதன் இறந்த செய்தியைக் கூறினான். அதைக் கேட்டு இராமன் துக்கத்தால் மயங்கினான். அனைவரும் இராமனுக்கு ஆறுதல் கூறினர். வசிட்டன் ஆறுதல் கூறினான். இறத்தலும் பிறத்தலும் இயற்கையே ''சூலமும் திகிரியும் சொல்லும் தாங்கிய மும் மூர்த்திகள் ஆனாலும் காலம் என்பதைக் கடக்கல் ஆகுமோ?'' என்று கூறி இராமனைத் தேற்றினான்.

''பெறுவதன்முன், உயிர் பிரிதல் காண்டியால்
மறுவறு கற்பினில் வையம் யாவையும்
அறுவதி னாயிரம் ஆண்டும், ஆண்டவன்
இறுவது கண்டு, அவற்கு இரங்கல் வேண்டுமோ?''

என்று வசிட்டன் கூறுகிறார். இங்கு மறுவறு கற்பினில் என்பது குற்றமற்ற கல்வி கேள்விகளால் என்று பொருள்படுகிறது. எனவே கற்பு என்பதற்கு கல்வி கேள்விகளில் சிறப்பு நிலை என்பதும் பொருளாகிறது.

திரும்பி வந்து அரசுப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும்படி இராமனிடம் பரதன் கூறுகிறான். அப்போது

''நிறையின் நீங்கிய மகளிர் நீர்மையும்
பொறையின் நீங்கிய தவமும், பொங்கு அருள்
துறையின் நீங்கிய அறமும், தொல்லையோர்
முறையின் நீங்கிய அரசின் முந்துமோ?''

என்று கூறுகிறான்.

இங்கு நிறை என்பது கற்பு நிலையாகும். கற்பு நிலை நீங்கிய மகளிரின் நீர்மை, பொறை (பொறுமை) நீங்கிய தவம், அருள் நீங்கிய அறம் ஆகியவைகளைக் காட்டிலும் முன்னோர் குறித்த முறையின் நீங்கிய அரசு தீமை மிக்கதாகும் என்று பரதன் இராமனிடம் கூறுகிறான்.

சூர்ப்பணகை வருகை

இராமன் பஞ்சவடியில் தங்கியிருந்தான். அங்கு சூர்ப்பணகை வந்தாள். தொலைவிலிருந்து இராமனைக் கண்டாள். அவனுடைய அழகைக் கண்டு அவள் மயங்குகிறாள். அவளுடைய கற்பு நிலை தேய்கிறது. அவளுடைய உள்ளத்தில் இராமன் மீதான காம உணர்வு மேலோங்குகிறது. அதைக் கம்பர்,

"நீத்தமும் வானமும் குறுக, நெஞ்சிடைக்
கோத்த அன்பு உணர்விடைக் குளிப்ப மீக்கொள
ஏத்தவும் பரிவின் ஒன்று ஈகலான், பொருள்
காத்தவன் புகழ் எனத் தேயும் கற்பினாள்''

என்று கம்பநாடர் குறிப்பிடுகிறார். அவளுடைய கற்றறிவு தேய்கிறது என்று பொருள் கொள்ளலாம் அறிவு மழுங்கி வருகிறது என்று கூறலாம்.

மாயமான் தோற்றம்

மாரீசன் மாயமான் வடிவத்தில் சீதை முன் தோன்றினான். அம்மானைப் பிடிக்க இராமன் வெகு தூரம் அதன் பின்னால் சென்று விட்டான். இராமன் கணையால் அடிபட்ட மாரீசன் பெரும் குரலை எழுப்பி சீதா, இலக்குவா, என்று கூறிக் கீழே விழுந்தான். அந்தக் குரலைக் கேட்டுச் சீதை மனம் கலங்கி இராமனைத் தேடிச் செல்லும்படி இலக்குவனை ஏற்புறுத்தினாள்.

இலக்குவன் எவ்வளவோ சொல்லியும் சீதை ஏற்காததால் அவன் இராமனைத் தேடிச் சென்றான். அந்த நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த இராவணன் தவத்தவர் வடிவு தாங்கிச் சீதையைக் காணச் சென்றான்.

''அந்தப் பொற்பினுக்கு அணியினை கற்பினுக்கு அரசியைக் கண்ணின் நோக்கினான்'' என்று இராவணன் சீதையை நேரில் கண்டதைப் பற்றிக் கம்பன் குறிப்பிடுகிறார்.

இராவணத் துறவி

காமன் வெம்சரம் படக் கருகும் மேனியான்,

"வெற்பிடை மதம் என வெயர்க்கும் மேனியன்
அற்பின் நல்திரை புரண் ஓசை வேலையன்
பொற்பினுக்கு அணியினைப், புகழின் சேர்க்கையை
கற்பினுக்கு அரசியைக் கண்ணின் நோக்கினான்''

என்று கம்பர் கூறுகிறார்.

துறவியைக் கண்ட சீதை அவனை அமரும்படி கூறினாள். ஆசனம் கொடுத்தாள்

''ஆண்டையான் அனையன உன்னி, ஆசை மேல்
மூண்டெழு சிந்தனை முறையிலோன் தனைக்
காண்டலும், கண்ணின் நீர் துடைத்த கற்பினாள்
ஈண்டெழுந்தருளும்? என்று இனிய கூறினாள்''

என்று கம்பநாடர் குறிப்பிடுகிறார்.

இன்னும் இந்தக் காட்சியில் சீதையைப் பற்றிக் குறிப்பிடும் போது ''தூமனத்து அருந்ததி'' என்றும் ''கற்பினுக்கு அரசியை'' என்றும் ''கண்ணைநீர் துடைத்த கற்பினாள்'' என்றும், அத்துடன் ''மறுவில் கற்பினாள்'' என்றும் ''ஆவது கற்பினாரை வஞ்சிக்கும் ஆற்றலேயாம்'' என்றும் குறிப்பிடுகிறார் கம்பநாடர்.

சீதையைத் தூக்கிச் சென்றான்

இராவணன் ஆகாய மார்க்கமாகச் சீதையைத் தூக்கிக் கொண்டு செல்லும் போது வழியில் அதைக் கண்ட சடாயு, அரக்கனைத் தடுத்தான் இருவருக்கும் கடும் போர் நடந்தது.

கடைசியில் இராவணன் தனது சக்தி மிக்க தெய்வீக வாளால் சடாயுவின் சிறகுகளை வெட்டி அவனை வீழ்த்திவிட்டான். அவன்

குற்றுயிராகக் கீழே விழுந்தான். சீதை சோர்வடைந்துப் பலவாறாகப் புலம்பினாள்.

''கற்பழியாமை என் கடமை, ஆயினும்
பொற்பழியா வலம் பொருந்தும் போர்வலான்
விற்பழியுண்டது; வினையினேன் வந்த
இற்பழியுண்டது; என்று இரங்கி ஏங்கினாள்''

என்றும்,

''விண்ணிடை வெய்யவன் ஏரும் வேகத்தால்
கண்ணொடு, மனம் அவை சுழன்ற கற்பினாள்
உள்நிறை உணர்வழிந்து ஒன்றும் ஓர்ந்திலள்
மண்ணிடைத் தன்னையும் மறந்து சாம்பினாள்''

என்றும் கம்பன் குறிப்பிடுகிறார்.

சடாயுவின் துயரம்

இராவணன் சீதையைக் கொண்டு சென்று விட்டான். சடாயு தன்னால் அதைத் தடுக்க முடியவில்லையே என்றுக் கலக்கம் கொண்டான். மைந்தர்கள் வந்திலர். மருகிக்கு ஏற்பட்ட துன்பத்தை என்னால் துடைக்க முடியாமல் போய் விட்டது. இனி என்ன நடக்குமோ? இராம இலக்குவர்கள் உயிரோடு இருந்திருந்தால் இவளுக்கு இந்த நிலைமை ஏற்பட்டிருக்குமா? சிற்றவை வஞ்சனை முடியச் செய்ததோ? என்றெல்லாம் பலவாறு எண்ணினான்'' என்றும்

"பருஞ்சு இறை இன்னன பன்னி, உன்னுவான்
அருஞ் சிறை உற்றனள் ஆம் எனா மனம்
பொரும் சிறை அற்ற தேல், பூவை கற்பெனும்
இரும் சிறை அறாது என இடரின் நீங்கினான்''

என்று கம்பன் குறிப்பிடுகிறார்.

சீதையைத் தேடி!

இராமனும் இலக்குவனும் மாரீசன் கொடுத்தக் குரல் மோசடியானது என்பதை உணர்ந்தனர். சீதை இருந்த இடத்திற்கு வேகமாக வந்து சேர்ந்தனர். அங்கு அவளைக் காணவில்லை. மனம் கலங்கினார்கள். தேர்ச் சக்கரம் பதிந்து சென்ற அடையாளங்களைக் கண்டு தெற்கு நோக்கிச் சென்றார்கள். கீழே கிடந்த வீணைக்

கொடி ஒடிந்த வில் ஒன்று, சூலம், அம்பறாத் தூணி, கவசம் ரத்த வெள்ளத்தில் கிடந்த தேர்ப்பாகன் குதிரை, குண்டலங்கள் மற்ற அணிகலன்கள் கிடப்பதை அடையாளமாகக் கொண்டுத் தெற்கு நோக்கிச் சென்றனர். அங்கு ஒரு கடுமையான போர் நடத்திருப்பதற்கான அடையாளங்கள் தென்பட்டன. கடைசியில் சற்றுத் தூரத்தில் சடாயு குற்றுயிராகக் கிடப்பதைக் கண்டனர்.

சடாயுவைக் கண்ட இராமன் அலரி அழுதான். தன்னால் மற்றவர்களுக்கு ஏற்பட்ட தொல்லைகளை நினைத்துக் கதறினான். சடாயு கண் விழித்துப் பார்த்தான். இருவரையும் கண்டான். அருகில் அழைத்து அவர்களைத் தழுவி உச்சி மோந்தான். ஆறுதல் கூறினான்.

சீதையை இராவணன் தூக்கிச் சென்றது பற்றியும் தான் தடுத்தது பற்றியும் தனது சிறகுகள் அரக்கனுடைய வாளால் வெட்டுண்டது பற்றியும் விவரமாக இருவரிடமும் சடாயு கூறினான். இராமன் அவைகளைக் கேட்டவுடன் கடும் சினம் கொண்டான். உலகம் அதிர்ந்தது. சடாயுவும் ஆறுதல் கூறினான். சீதையை வனத்தில் தனியே விட்டு விட்டு நீங்கள் மானின் பின் போனது உங்கள் குற்றமே அன்றி உலகின் குற்றமன்று. ஆதலால் முனிவாய் அல்லை.

“ஆதலால் முனிவாய் அல்லை;
அருந்ததி அனைய கற்பின்
காதலாள் துயரம் நீக்கித்
தேவர் தம் கருத்து முற்றி,
வேத நூல் முறையின் யாவும்
விதியுளி நிறுவி, வேறும்
தீதுள துடைத்தி என்றான்,
சேவடிக் கமலம் சேர்வான்’’

இங்கு சடாயு மிக முக்கியமானதொரு கருத்தை முன் வைக்கிறான்.

சடாயு இராமனிடம் சீதையின் துயரைத் துடைப்பதுடன் வேத நூல் முறைகளை உலகில் நிலை நாட்டி தீமைகளைத் துடைத்துத் தனது அவதாரக் கடமைகளை நிறைவேற்றுவது பற்றி நினைவூட்டுவதைக் காணமுடிகிறது.

பின்னர் இராமனும் இலக்குவனும் அடுத்துச் செய்ய வேண்டிய பணிகளைப் பற்றி உறுதி செய்து கொண்டனர். சடாயுவின் சடலத்திற்கு ஈமக்கடன்களை முடித்தனர்.

பின்னர் இருவரும் சீதையைத் தேடிக் கொண்டுத் தெற்கு நோக்கி நடந்தனர்.

பம்பைப் பொய்கை

இராமனும் இலக்குவனும் தொடர்ந்து தெற்கு நோக்கிச் சென்றனர் பல இடர்களையும் கடந்து சபரியின் இருப்பிடம் சேர்ந்தனர். பின்னர் சபரி கூறிய அடையாளங்களை வைத்து மேலும் சென்றனர். பம்பைப் பொய்கையை அடைந்தனர்.

இராமன் சீதையின் நினைவாகவே புலம்பிக் கொண்டிருந்தான். இலக்குவன் தன் அண்ணனுக்கு ஆறுதல் கூறிக் கொண்டே யிருந்தான். இருவரும் சேர்ந்தே நடந்து போய் பம்பைப் பொய்கையில் நீராடி, நாட்கடன்களை முடித்துக் கொண்டு அச்சோலையில் இரவு தங்கியிருந்து விட்டு மறுநாள் காலையில் சீதையைத் தேடிக் கொண்டு மேலும் தெற்கு நோக்கிச் சென்றனர்.

இராமனும் சுக்கிரீவனும்

இராமனும் இலக்குவனும் அனுமனையும் சுக்கிரீவனையும் சந்தித்தனர். இராமனும் சுக்கிரீவனும் நட்புக் கொண்டனர். ஒருவருக் கொருவர் உதவி செய்து கொள்வது என்று உடன்படிக்கைச் செய்து கொண்டனர்.

இராவணன் சீதையை வான வெளியில் தூக்கிக் கொண்டுச் சென்ற போது சீதைத் தனது சில அணிகலன்களை கீழே எரிந்து சென்றிருக்கிறாள் அவ்வணிகலன்களை வானரர்கள் சிலர் எடுத்து வைத்திருந்தனர். அவைகளைச் சுக்கிரீவன் இராமனுக்குக் காட்டினான். அவைகளைக் கண்டவுடன் சீதையின் நினைவாக இராமன் கலங்கினான். சக்கிரீவன் இராமனுடைய துயரத்தைத் தணிக்கும் முறையில் அவனுக்கு ஆறுதல் கூறினான். தாங்கள் கவலைப்பட வேண்டாம். தங்களுடைய வில்லின் ஆற்றல் வலிதாகும்.

''திருமகள் அனைய அத்தெய்வக் கற்பினாள்
வெருவரச் செய்துள வெய்யவன் புயம்
இருபதும், ஈரைந்து தலையும் ஏவின் உன்
ஒரு கணைக்கு ஆற்றுமோ? உலகம் ஏழுமே?''

எனவே நீங்கள் கவலைப்பட வேண்டாம். எனது சிறு குறை தீர்ந்தவுடன் சானகியை மீட்பதற்கான பணிகளைத் தொடங்கலாம், என்றான்.

இராமன் நான் எனது கைகளில் வலுவான வில்லும் கணைகளும் கொண்டு நான் உயிருடன் இருக்கும் போதே சீதைத் தனது அணிகலன்களைக் கழித்தனள். இது போல்,

''விலங்கு எழில் தோளினாய்! வினையினேனும் இவ்
இலங்குவில் கரத்தினன் இருக்கவே, அவள்
கலன் கழித்தனள்; இது கற்பு மேவிய
பொலன் குழைத் தெரிவையர் புரிந்து ளோர்கள் யார்?

சீதைக்கு அந்தக் கதி ஏற்பட்டு விட்டதே என்று வருந்தினான்.

மாருதி இராமனை வணங்கி,

''கொடும் திறல் வாலியைக் கொன்று, கோமகன்
கடும் கதிரோன் மகன் ஆக்கிக் கைவளர்
நெடும்படை கூட்டினால் அன்றி, நேடரிது
அடும் படை அரக்கர்தம் இருக்கை; ஆணையாய்!''

என்று கூறி அனைவரும் வாலி இருக்கும் இடத்திற்குச் சென்றனர்.

இராமனும் வாலியும்

இராமனுடைய ஏற்பாட்டின் படி சுக்கிரீவன் வாலியைப் போருக்கு அழைத்து இருவரும் மோதிப் போர் செய்து கொண்டிருந்த போது இராமன் வாலி மீது அம்பெய்து அவனுடைய வலுவை வீழ்த்தினான்.

வாலி தன் மீது தைத்துள்ள கணை இராமனுடையது என்று அறிந்தான். இராமனைப் பழித்தான். இங்கு இராமனுக்கும் வாலிக்குமிடையில் ஒரு வாக்கு வாதம் நடைபெறுகிறது. அந்த உரையாடல் மிகவும் நுட்பமானது. இக்காட்சி இராமாயணப் பெருங்காவியத்தில் மிகவும் சிறப்பானதொரு காட்சியாகும். இருவருக்கும் இடையில் நடைபெற்ற அந்த வாக்குவாதத்தில்.

''தாரம் மற்றொரு வன்கொளத்; தன்கையில்
பாரவெம் சிலை வீரம் பழுதுற;
நேரும் அன்று மறைந்து நிராயுதன்
மார்பில் எய்ய வோ வில் இகல்வல்லதோ?

என்று இராமனிடம் வாலி கேட்கிறான்.

''தருமம் இன்னது எனும் தகைத் தன்மையும்
இருமையும் தெரிந்து எண்ணலை, எண்ணினால்
அருமை உம்பிதன் ஆருயிர்த் தேவியைப்
பெருமை நீங்கினை எய்தப் பெறுதியோ?

என்று வாலியிடம் இராமன் கேட்கிறான்.

வாலி அதற்கு பதிலளித்து

''ஐய! நுங்கள் அருங்குலக் கற்பின் அப்
பொய்யில் மங்கையர்க்கு ஏய்ந்த புணர்ச்சி போல்
செய்திலன், எமைத் தேமலர் மேலவன்;
எய்தின் எய்தியதாக இயற்றினன்''

என்றும்.

''மணமும் இல்லை மறை நெறி வந்தன;
குணமும் இல்லைக் குலமுதற்கு ஒத்தன;
உணர்வு சென்றுழிச் செல்லும் ஒழுக்கலால்
நிணமும் நெய்யும் இணங்கிய நேமியாய்''

என்றும் கூறுகிறான்.

வாலி கூறிய கருத்துக்களுக்கு பதில் அளிக்கும் வகையில் இராமன்,

''தக்க இன்ன, தகாதன இன்ன என்று
ஒக்க உன்னலர் ஆயின், உயர்ந்துள
மக்களும் விலங்கே, மனுவின் நெறி
புக்க வேல், அவ்விலங்கும் புத்தேளிரே''

என்றும்,

''சினையது ஆதலின், எக்குலத்து யாவர்க்கும்
வினையினால் வரும் மேன்மையும் கீழ்மையும்
அனைய தன்மை அறிந்தும் அழித்தனை
மனையின் மாட்சி என்றான் மனு நீதியான்''

என்று கூறுகிறான்.

இராமனுடைய இந்த வாசகங்களையும் இலக்குவனுடைய அடுத்த விளக்கத்தையும் பதிலையும் கேட்டு வாலி ''ஆவி போம் வேலைவாய் அறிவு தந்து அருளினாய்'' என்று கூறி அமைதியானான்.

சீதையைத் தேடி

சீதையைத் தேடி, சுக்கிரீவன் ஆணைப்படி வானரப் படைத் தலைவர்கள் பலரும், பல திசைகளிலும் சென்றனர். அங்கதன், மாருதி, சாம்பவன் ஆகியோர், தங்கள் துணைப் படைகளுடன் தென்திசை நோக்கிச் சென்றனர். பல ஆறுகளையும், மலைகளையும், நாடுகளையும் கடந்து மகேந்திர மலையை அடைந்தனர். எங்குதேடியும் சீதையைக் காணவில்லை. என்ன செய்வது என்று அறியாது சோர்வடைந்து புலம்பினர்.

''யாவரும் அவ்வயின் எளிதின் எய்தினார்,
பூவரு புரிகுழல் பொருவில் கற்புடைத்
தேவியைக் காண்கிலார்; செய்வது ஓர் கிலார்;
நாவியல் குழறிட நவில்கின்றார்; அரோ!''
என்று கம்பர் குறிப்பிடுகிறார்.

இலங்கையில் அனுமன்

அனுமன் இலங்கையை அடைந்தான். அந்நகரின் வளத்தையும் அரக்கர்களின் ஆனந்த வாழ்வையும், படை பலத்தையும் கோட்டையின் வலிமையையும் கண்டான். அவற்றையெல்லாம் கண்டும் அதிசயித்துப் பலவும் எண்ணித் தன் உடலைச் சுருக்கிக் கொண்டு ஒரு குன்றின் ஓரத்தில் இருந்தான். கதிரவனும் மறைந்தான்.

இருள் பரவியது அதைப் பற்றி,

''வண்மை நீங்கா நெடுமரபின் வந்தவள்
பெண்மை நீங்காத கற்புடைய பேதையைத்
திண்மை நீங்காதவன் சிறைவைத்தான், எனும்
வெண்மை நீங்கிய புகழ் விரிந்தது என்னவே''

என்று இருள் பரவியது பற்றிக் கம்பர் பிரான் குறிப்பிடுகிறார்.

அனுமன் இலங்கை நகருக்குள் சென்று சீதையைப் பல இடங்களிலும் தேடினான். கும்பகருணன் மாளிகை, விடணன் இல்லம் மற்றும் இந்திர சித்தன், அக்கன், அதிகாயன் ஆகியோர் தங்கள் தங்கள் மாளிகைகளில் உரங்கிக் கொண்டிருந்த காட்சிகள் முதலியவற்றைக் கண்டான்.

மண்டோதரி அவளுடைய மாளிகையில் உறங்கிக் கொண்டிருப்பதைக் கண்டான். இராவணன் மாளிகையைக்

கண்டான். அவன் கம்பீரமாகப் பத்துத் தலைகளையும் கொண்டு உறங்கிக் கொண்டிருப்பதைக் கண்டான்.

பல இடங்களில் தேடியும் சீதையைக் காணாமல் சிந்தை நொந்து கூறுகிறான்.

''கொன்றானோ? கற்பு அழியாக்
குலமகளைக் கொடும் தொழிலால்
தின்றானோ? எப்புறத்தே
செறிந்தானோ சிறை; சிறியோன்
ஒன்றானம் உணரகிலேன்;
மீண்டினிப் போய் என் உரைக்கேன்?
பொன்றாத பொழுது எனக்கு
இக்கொடுந்துயரம் போகாது; ஆல்''

என்று வருந்தினான் ஆயினும் எண்ணியது முடிக்கிலேன் என்று உறுதி பூண்டு மேலும் பல இடங்களையும் கண்டு விட்டுக் கடைசியில் மலர்ச் சோலை ஒன்றைக் கண்ணுற்றான்.

அசோக வனத்தில் அரக்கிகளின் காவலுக்கிடையில் சீதை இருப்பதை அனுமன் கண்டான். தேடினேன், கண்டேன், என்று ஆடினர்ன், பாடினான் உவகை கொண்டான்.

''மாசுண்ட மணி அனாள், வயங்க வெங்கதிர்த்
தேசுண்ட திங்களும் என்னத் தேய்ந்துளாள்;
காசு உண்ட கூந்தலாள் கற்பும் காதலும்
ஏசுண்டது இல்லையால்; அறத்துக்கு ஈறுண்டோ?''

என்றும்.

''தருமமே காத்ததோ? சனகன் நல்வினைக்
கருமமே காத்ததோ? கற்பின் காவலோ?
அருமையே! அருமையே! யார் இது ஆற்றுவார்?
ஒருமையே எம்மனோர்க்கு உரைக் கற்பாலதோ?

என்று நினைந்து மரச் செறிவிலே அனுமன் மறைந்திருந்தான் என்று கம்பர் மிக அருமையாகக் குறிப்பிடுகிறார்.

அந்த நேரத்தில் இராவணன் தனது பரிவரங்களுடன் வந்து சீதையிடம் தனது விருப்பத்திற்கு இணங்குமாறு முதலில் இனிமையாகப் பேசுகிறான். கெஞ்சிக் கேட்கிறான்.

சீதை சீற்றத்துடன் இராவணனைக் கண்டித்துப் பேசுகிறாள். அறிவு காட்டி இடித்துப் பேசுகிறாள். இராவணன் கடும் கோபத்துடன் இவளைப் பிளந்து தின்பேன் என்று உறுமுகிறான். அப்போது அனுமன் கரம் பிசைந்து.

''அன்னகாலையில், அனுமனும், அருந்ததிக் கற்பின்
என்னை ஆளுடை நாயகன் தேவியை, என்முன்
சொன்ன நீசன், கை தொடுவதன் முன் துகைத்து உழக்கிப்
பின்னை நின்றது செய்குவென் என்பது பிடித்தான்''

இராவணன் சீதையை பயமுறுத்தி விட்டு காவல் அரக்கியரைத் தனியாக அழைத்து 'எப்படியாவது அவளுடைய மனதை மாற்றுங்கள்'' என்ற கூறிச் சென்றான்.

அரக்கியர்களும் சீதையைப் பலவாறு மிரட்டினர், சீதையும் மிக்க மனம் வருந்திச் சலிப்படைந்துத் தற்கொலை செய்து கொள்ளத் துணிந்தாள்.

''அற்புதன் அரக்கர் தம் வருக்கம் ஆசற
வில்பணி கொண்டு அரும் சிறையின் மீட்ட நாள்
இல்புகத் தக்கலை என்னின், யான் உடைக்
கற்பினை எப்பரிசு இழைத்துக் காட்டுகேன்?''

என்று கருதி 'ஆதலால் இறத்தலே அறத்தின் ஆறு'' என்று கூறி இறக்கத் துணிந்தாள்.

அப்போது அனுமன், ''அண்ட நாயகன் அருள் தூதன்யான்'' என்று கூறிக் கொண்டு சீதை முன் தோன்றினான். ''இராமன் ஆணையால் இங்கு வந்துள்ளேன்'' என்று குறிப்பிட்டு எல்லா விவரங்களையும் சீதையிடம் கூறினான். அவளுடைய சந்தேகங்களை நீக்கினான். கணையாழியைக் கொடுத்தான்.

சீதை அனுமனிடம் நீ கடலை எவ்வாறு கடந்தாய் என்ற கேட்டாள். அனுமன் தனது உலகப் பெருவடிவத்தைக் காட்டினான்.

''வஞ்சி அம்மருங்குல் அம்மறுவில் கற்பினாள்
கஞ்சமும் புரைவன கழலும் கண்டினாள்;
துஞ்சினர் அரக்கர் என்று உவக்கும் சூழ்ச்சியாள்
அஞ்சினென் இவ்வுரு அடக்குவாய்'' என்றாள்.

அனுமன் தனது பேருருவைச் சுருக்கிக் கொண்டான்.

அனுமன் சீதையிடம் 'தாயே தங்களைச் சுமந்து கொண்டு போய் நாயகனிடம் சேர்க்கிறேன்'' என்று கூறுகிறான். அதை மறுத்த சீதை.

''கொண்ட போரின் எம் கொற்றவன் வில் தொழில்
அண்டர் ஏவரும் நோக்க, என் ஆக்கையைக்
கண்ட வாள் அரக்கன் விழிக் காகங்கள்
உண்ட போதன்றி, யான் உளென் ஆவனோ?''

என்றும்,

''பொன்யிறங்கல் இலங்கை பொருந்தலர்
என்பு மால் வரை ஆகிலதே எனின்
இற்பிறப்பும் ஒழுக்கும் இழுக்கம் இல்
கற்பும் யான் பிறர்க்கு எங்ஙனம் காட்டுகேன்?''

என்றும்,

''அல்லல் மாக்கள் இலங்கை அது ஆகுமோ,
எல்லை நீத்த உலகங்கள் யாவும் என்
சொல்லினால் சுடுவேன், அது தூயவன்
வில்லின் ஆற்றலுக்கு மாசு என்று வீசினேன்''

என்றும் கூறுகிறாள்.

அனுமனும் நன்றெனக் கூறி இராமனுக்குச் சொல்ல வேண்டிய செய்திகள் என்ன வென்று கேட்டான். அப்போது சீதை சற்று மனம் நொந்து பலவாறு கூறியும்,

''வந்து எனைக் கரம் பற்றிய வைகல்வாய்
இந்தப் பிறவிக்கு, இரு மாதரைச்
சிந்ததையாலும் தொடேன்; என்ற செவ்வரம்
தந்த வார்த்தை திருச் செவி சாற்றுவாய்''

என்றும்,

''ஈண்டு நான் இருந்து இன் உயிர் மாயினும்
மீண்டு வந்து பிறந்து தன் மேனியைத்
தீண்டல் ஆவது ஓர் தீவினை தீர்வரம்
வேண்டினாள் தொழுது' என்று விளம்புவாய்''

என்றும் கூறினாள்.

சீதை அலுத்துக் கொண்டதற்கு ஆறுதல் கூறி அனுமன்,

''கைத்தோடும் சிறை, கற்போயை
வைத்தோன், இன்னுயிர் வாழ்வானாம்!
பொய்த்து ஓர் வில்லிகள் போவாராம்!
இத்தோடு ஒப்பது யாது உண்டோ?''

என்றும்,

''பூண்டாள், கற்புடையாள் பொய்யாள்,
தீண்டா வஞ்சகர் தீண்டா முன்
மாண்டாள், என்று மனம் தேறி
மீண்டால் வீரம் விளங்காதோ?''

என்றும் எடுத்துக் கூறித் தாங்கள் கவலைப்பட வேண்டாம் நான் போய் இராமபிரானிடம் செய்தியைக் கூற வேண்டியது தான் தாமதம் கடலைத் தூர்த்து இலங்கையைச் சூழ்ந்து மாகுரங்குப்படை ஆர்ப்பரிப்பதைக் கேட்பீர்கள், அன்னையே என்று கூறித் தான் சீதையிடம் வந்து போன அடையாளமாகச் சூடாமணியைப் பெற்றுக் கொண்டு அன்னையிடமிருந்து விடை பெற்று கொண்டான்.

இலங்கை எரியுண்டது

சீதையைச் சந்தித்து விட்டுத் திரும்பிய அனுமன் தான் வந்து போன தன் அடையாளமாக ஒரு பெரிய செயலைச் செய்ய வேண்டும் என்று கருதினான். சேட்டைகளைத் தொடங்கினான். சோலைகளைச் சிதைத்தான். மரம் செடி கொடிகளை ஒடித்தான். காய்கனிகளைப் பறித்து எரிந்தான்.

இதைக் கேள்வியுற்று இராவணன் சில அரக்க வீரர்களை அனுப்பி அனுமக் குரங்கைப் பிடித்து வரச் சொன்னான்.

தன்னைப் பிடிக்க வந்த அரக்க வீரர்களையெல்லாம் அனுமன் அடித்துக் கொன்றான். தன்னுடன் போர் செய்ய வந்த கிங்கரர்களை எல்லாம் வதைத்தான். சம்பு மாலியைக் கொனறான். பஞ்ச சேனாபதிகளை வதைத்தான் அட்சயகுமாரனை எதிர்த்துப் போரிட்டு அவனைக் கொன்றான்.

தன் தம்பியை அனுமன் கொன்றான் என்பதைக் கேள்வியுற்ற இந்திரசித்தன் தன் படைகளுடன் அனுமனை எதிர்க்கப் புறப்பட்டான். மேகநாதனைக் கண்ட அனுமன்,

''கட்டேறு நறும் கமழ் கண்ணி இக்காளை, என்கைப்
பட்டால், அதுவே அவ்விராவணன் பாடும் ஆகும்;
கெட்டோம்; என எண்ணி, இக்கேடு அரும் கற்பினாளை
விட்டு ஏகும்; அது அன்றி அரக்கரும் வெம்மை தீர்வார்,''

என்று தனக்குள் எண்ணினான்.

இந்திரசித்தன் அனுமனை நான்முகன் படையால் கட்டினான். கட்டுண்ட அனுமனை அரக்கர் படை வீரர்கள், இராவணனுடைய சபைக்கு இழுத்துக் கொண்டு சென்றனர். அவனும் அமைதியாக அரக்கனுடைய சபைக்குச் சென்றான்.

அப்போது இலங்கை வாழ் மக்கள் பலரும்,

''கையிலை யின்ஒருதனிக் கணிச்சி வானவன்
மயில் இயல் சீதை தன் கற்பின் மாட்சியால்
எயில் உடைத் திரு நகர் சிதைப்ப, எய்தினன்
அயில் எயிற்று ஒரு குரங்காய்; என்பார் பலர்''

என்று கம்பர் குறிப்பிடுகிறார்.

அனுமன் பிடிபட்டதைக் கேட்டுச் சீதை மிக்க துயரமடைந்தாள்

''ஏயப்பன்னினள் இன்னை; தன் உயிர்
தேயக், கன்று பிடியுறத் தீங்க உறும்
தாயைப் போலத் தளர்ந்து மயங்கினாள்
தீயைச் சுட்டது ஓர்கற்பு எனும் தீயினாள்''

என்று கம்பன் குறிப்பிடுகிறார்.

இராவணன் தனது அரியாசனத்தில் கம்பீரமாக வீற்றிருந்தான். அதை அனுமன் தன் கண்களால் நேருக்கு நேராகக் கண்டான். அப்போது தசமுகனுடைய ஒவ்வொரு முகமும் எவ்வாறு காட்சியளித்தது என்பதைக் கம்பன் மிக அற்புதமாக வடித்துக் காட்டுகிறார்.

அதில்

''காந்தள் மெல்விரல் சானகி தன் கற்பு எனும் கடலை
நீந்தி ஏறுவது எங்ஙண் என்று ஒரு முகம் நினையச்
சாந்து அளாவிய கோதை நன் மகளிர் தற்சூழ்ந்தார்
ஏந்தும் ஆடியின் ஒரு முகம் இயல்புடன் இலங்க''

என்று கம்பன் மிகவும் சிறப்பாகக் குறிப்பிடுகிறார்.

இராவணன் சபையில் அனுமன் இராமனுடைய தூதனாகப் பேசிய உரை மிகச் சிறந்த இலக்கியமாகும். அனுமன அரக்கனுக்கு அறிவுரை கூறுகிறான்.

''போய் இற்றீர்! நும் புலன் வென்று போற்றிய
ஆலாயின் தீர்வு அரிது ஆகிய மாதவம்;
காயின் தீர்வு அரும் கேடு அரும் கற்பினாள்
தீயின் தூயவளைத் துயர் செய்ததால்''

என்று குறிப்பிடுகிறான். இவ்வாறு பல அறிவுரைகளைக் கூறியதைக் கம்பன் மிகச் சிறப்பாகக் குறிப்பிடுகிறார்.

இராவணனுக்கு அனுமன் கூறிய அறிவுரைகளைக் கேட்ட போது கடுங்கோபம் ஏற்பட்டது. கடைசியில் அனுமன் வாலிலே துணியைச் சுற்றி அதில் நெய்யை ஊற்றி நெருப்பிட்டுத் துரத்தும்படி அரக்கன் ஆணையிட்டான். அரக்கர்களும் அவ்வாறே செய்து விட்டு ஆரவாரமும் செய்தனர். சீதை அதைக் கேள்விப்பட்டு துயரம் அடைந்தாள்.

''தாயே அனைய கருணையான்
துணையை, ஏதும் தகைவு இல்லா
நாயே அனைய வல் அரக்கர்
நலியக் கண்டால் நல்காயோ,
நீயே உலகுக்கு ஒரு சான்று;
நிற்கே தெரியும், கற்பு; அதனில்
தூயேன் என்னின் தொழுகின்றேன்,
எரியே அவனைச் சுடல்'' என்றாள்

தீ அனுமனைச் சுடவில்லை அனுமனும்

''வெற்பினால் இயன்றது அன்ன
வாலினை விழுங்கி, வெம் தீ
நிற்பினும், சுடாது நின்ற
நீர்மையை நினைவில் நோக்கி
அற்பினால் அறாத சிந்தை
அனுமனும், சனகன் பாவை
கற்பினால் இயன்றது' என்னப்
பெரியது ஓர் களிப்பன் ஆனான்"

இலங்கை பற்றி எரிந்தது. சீதை இருந்த அசோக வனத்தின் பக்கம் மட்டும் தீ செல்லவில்லை.

கண்டனன் கற்பினுக்கு அணியை

அனுமன் இலங்கையிலிருந்து வெற்றிகரமாகத் தன் கடமையை முடித்துவிட்டுத் திரும்பினான். அங்கதனும் மற்றவர்களும் மகிழ்ச்சியால் ஆடிப்பாடினர். அனைவரும் கிட்கிந்தைக்கு வேகமாகத் திரும்பிய போது வழியில் இருந்த சுக்கிரீவனுடைய மது வனத்தில் புகுந்து அட்டகாசம் செய்து மது வருந்தி மகிழ்ந்தனர்.

அந்தச் செய்தியைக் கேட்டு சுக்கிரீவன் நல்ல செய்தியை அவர்கள் கொண்டு வந்திருக்க வேண்டும் என்று குறிப்பினால் உணர்ந்தான். அதை

''திண் திறல் அவன் செயல் தெரிய நோக்கினான்
வண்டு அறல் ஒதியும் வலியன்; மற்று இவன்
கண்டதும் உண்டு; அவள் கற்பும் நன்று! எனக்
கொண்டனன், குறிப்பினால் உணரும் கொள்கையான்''

என்று கம்பன் குறிப்பிடுகிறார்.

அனுமன் திரும்பி விட்டான். மகிழ்ச்சி பொங்க, தான் சீதையைக் கண்ட செய்தியை இராமபிரானிடம் கூறுகிறான்.

"கண்டனென் கற்பினுக்கு அணியைக் கண்களால்
தென் திரை அலை கடல் இலங்கைத் தென்னகர்;
அண்ட நாயக! இனித் துறத்தி! ஐயமும்
பண்டுள துயரும்! என்று அனுமன் பன்னுவான்"

இன்னும்

''வில்பெரும் தடந்தோள் வீர!
வீங்குநீர் இலங்கை வெற்பில்
நற்பெரும் தவத்தளாய
நங்கையைக் கண்டேன் அல்லேன்
இற்பிறப்பு என்பது ஒன்றும்
இரும்பொறை என்பது ஒன்றும்
கற்பு எனும் பெயரது ஒன்றும்
களி நடம் புரியக் கண்டேன்''

என்றும் இன்னும்,

''மண்ணோடும் கொண்டு போனான்;
வான் உயர் கற்பினாள் தன்
புண்ணிய மேனி தீண்ட
அஞ்சுவான்; உலகம் பூத்த
கண்ணகன் கமலத்து அண்ணல்
கருத்திலான் தொடுதல் கண்ணின்
எண்ணரும் கூறாய் மாய்தி"
என்பது ஓர் மொழி உண்டு' என்பான்''

என்றும் சீதையைக் கண்டது பற்றியும் அப்பிராட்டியின் மாட்சி பற்றியும் அனுமன் கூறுகிறான்.

இன்னும் அனுமன் ஜானகியைக் கண்ட தன்மையைப் பற்றியும் கூறுகிறான்.

''மாண்பு இறந்து அமைந்த கற்பின்
வாள்நுதல், நின்பால் வைத்த
சேண் பிறந்து அமைந்த காதல்
கண்களில் தெவிட்டித் தீராக்
காண் பிறந்தமையால், நீயே
கண் அகல் ஞாலந் தன்னுள்
ஆண் பிறந்து அமைந்த செல்வம்
உண்டனை ஆதி அன்றே''

என்றும்,

''ஆயிடை அணங்கின் கற்பும்
ஐய நின் அருளும், செய்ய
தூய நல் அறனும் என்று இங்கு
இனையன தொடர்ந்து காப்பப்
போயினன்; அரக்கி மாரைச்
செல்லுமின் பொதுவின் என்று ஆங்கு
ஏயினன்; அவர் எலாம்
என் மந்திரத்து உறங்கி இற்றார்"

என்றும் அனுமன் அசோக வனத்தில் நடந்த காட்சியைப் பற்றிப் பெருமையுடன் கூறுகிறான்.

அனுமன் இந்தக் காட்சியில் சீதா பிராட்டியைப் பற்றி மிகவும் உயர்வாகப் பேசுவதைக் காண்கிறோம். ''கண்டனென் கற்பினுக்கு அணியைக் கண்களால்'' என்றும் ''என்பெரும் தெய்வம்'' என்றும் ''உன்பெரும் தேவி என்னும் உரிமைக்கும், உன்னைப் பெற்ற மன்பெரு மருகி என்னும் வாய்மைக்கும், மிதிலை மன்னன் தனையை என்னும் தகைமைக்கும் தலைமை சான்றாள்'' என்றும், இன்னும் உன்குலம் உன்னதாக்கி உயர் புகழ்க்கு ஒருத்தி ஆய தன்குலம் தன்னது ஆக்கித் தன்னை இத் தனிமை செய்தான் வன் குலம் கூற்றுக்கு ஈந்து வானவர் குலத்தை வாழ்வித்து என் குலம் எனக்குத் தந்தாள் என்றும், ''கற்பு எனும் பெயரது ஒன்றும் களிநடம் புரியக் கண்டேன்'' என்றும் தவம் செய்த தவமாம் தையல்'' என்றும் ''வான் உயர் கற்பினாள்'' என்றெல்லாம் பெருமைப்படுத்திக் கூறுகிறான் வேத நன்னூல் உய்த்துள காலம் எல்லாம் புகழொடும் ஓங்கி நிற்பான் என்று புகழப்படும் அனுமன் என்பான்.

இவ்வாறாக இந்த அற்புதமான காட்சியில் சீதாபிராட்டியின் கற்பின் சிறப்பை முழுமையாகக் காட்டுகிறார் கவிச் சக்கரவர்த்தி கம்பநாடர்.

இராவணன் மந்திரப் படலம்

சபா மண்டபத்தில் இராவணன் கம்பீரமாகக் கொலு வீற்றிருக்கிறான். மந்திராலோசனை நடைபெறுகிறது. இராவணனுடைய நெருக்கமான உறவினர்கள், சேனைத் தலைவர், முதலமைச்சர் மற்றும் சிலரும் சபையில் கலந்து கொண்டிருக்கிறார்கள்.

கும்பகருணன் இந்திரசித்தன் முதலமைச்சன் மகோதரன், சேனைத் தலைவர்கள் மற்றும் சிலரும் பேசுகிறார்கள்.

இந்திரசித்தன் பேசும் போது

''நீரும் நிலனும், நெடியகாலும், நிமிர்வானும்
பேர் உலகில் யாவும் ஒரு நாள் புடை பெயர்த்தே
யாரும் ஒழியாமை, நரர் வானரரை யெல்லாம்
வேறும் ஒழியாத வகை கொன்று அலது மீளேன்''

என்று வீரம் பேசுகிறான். அதைக் கண்டித்து வீடணன் பேசுகிறான்.

''நூலினால் நுணங்கிய அறிவு நோக்கினை
போலுமால், உறுபொருள் புகலும் பூட்சி யோய்!
காலம், மேல் விளை பொருள் உணரும் கற்பு இலாப்
பால நீ! இனையன பகரல் பாலையோ?''

என்று அவன் பேச்சை மறுத்துப் பேசினான்.

இங்கு கற்பு இலா என்னும் சொல் 'கல்வி அறிவு இல்லாத' என்று பொருள் படுகிறது. கற்பு, கற்றல், கற்பித்தல், கல்வி, கற்பனை முதலிய சொற்கள் கற்பு என்னும் சொல்லுடன் தொடர்பு கொண்டவைகளாக உள்ளதைக் காண்கிறோம்.

இதே போல வசிட்டன் தசரதனைப் பற்றிக் குறிப்பிட்டபோது மறுவறு கற்பினில் என்னும் சொற்கள் குற்ற மற்ற கல்வி கேள்விகளால் என்னும் பொருளில் கூறப்பட்டிருப்பதைக் காணலாம்.

இன்னும் சூர்ப்பணகையைப் பற்றிக் குறிப்பிடும் போது தேயும் கற்பினாள் என்று கம்பர் குறிப்பிடுகிறார். இங்கு தேயும் கற்பினாள் என்பது கற்றறிவும் தேய்கிறது, அறிவு மழுங்கி வருகிறது என்னும் பொருளில் குறிப்பிட்டிருப்பதைக் காண்கிறோம்.

வீடணன் இராமனிடம் சேர்தல்

இராவணனுடைய சபையில் வீடணன் பேசினான். அவன் மிகவும் அடக்கமாக

''கோநகர் முழுவதும் நினது கொற்றமும்
சானகி எனும் பெயர், உலகின் தம்மனை
ஆனவள் கற்பினால் வெந்தது அல்லது ஓர்
வானரம் சுட்டது என்று உணர்தல் மாட்சியோ''

என்றும்

"தீயிடைக் குளித்த அத்தெய்வக் கற்பினாள்
வாயிடை மொழிந்த சொல் மறுக்க வல்லமோ?
நோய் உனக்குயான்' என நுவன்றுளாள், அவள்
ஆயவள் சீதை பண்டு அமுதில் தோன்றினாள்''

என்றும் கூறுகிறான். கடைசியாக

''இசையும் செல்வமும் உயர்
குலத்து இயற்கையும் எஞ்ச

வசையும் கீழ்மையும் மீக்
கொளக் கிளையும் மடியாது
அசைவில் கற்பின் அவ்
அணங்கை விட்டு அருளுதி! அதன் மேல்
விசையும் இல்; எனச்
சொல்லினன் அறிஞரின் மிக்கான்”

என்று கம்பநாடன் குறிப்பிடுகிறார்.

எத்தனை அறிவுரைகளை எடுத்துக் கூறியும் இராவணன் கேட்கவில்லை. மாறாக வீடணன் மீது கடுங்கோபம் கொண்டு போ, வெளியே என்று விரட்டி விட்டான்.

வீடணன் இராமனிடம் சரணடைய வந்து விட்டான். அப்போது அவனைப் பற்றி இராமன் தனது நண்பர்களிடம் கருத்துக் கேட்டான். அப்போது மயிந்தன் என்பவன் வீடணனைப் பற்றி

‘‘கற்புடைத் தேவியை விடாது காத்தியேல்
எற்புடைக் குன்றம் ஆம் இலங்கை; ஏழைநின்
பொற்புடை முடித்தலை புரளும்; என்று ஒரு
நற்பொருள் உணர்த்தினன்’’ என்றும் நாட்டினான்”

என்று தனது கருத்தைக் கூறியதைக் கம்பன் குறிப்பிடுகிறார்.

கும்பகருணன் களம் சென்றபோது

முதல் நாள் போரில் இராவணன் தோல்வியடைந்து வெறுங் கையோடு இலங்கை புகுந்தான். அடுத்த நாள் போர்க்களத்திற்குச் செல்வதற்கு கும்பகருணனைத் தயார் செய்தார்கள். தூங்கிக் கொண்டிருந்த கும்பகருணனை எழுப்பினார்கள். போருக்குச் செல்வதற்காக அவனை அலங்கரித்தனர். தன்னை அலங்கரிக்கக் காரணம் என்ன என்று அவன் கேட்டான். வானரரும் மனிதர்களும் நெருங்கி வந்து விட்டனர். கோட்டையைச் சூழ்ந்துள்ளனர். நீ போருக்குச் செல்ல வேண்டும் என்று இராவணன் கூறினான். அப்போது கும்பகருணன்,

‘‘ஆனதோ வெம்சமம்? அலகில் கற்புடைச்
சானகி துயர் இனம் தவிர்ந்தது இல்லையோ?
வானமும் வையமும் வளர்ந்த வான்புகழ்
போனதோ? புகுந்ததோ பொன்றும் காலமே?’’

என்றும்,

''கிட்டியதோ செருக் கிளர் பொன் சீதையைச்
சுட்டியதோ? முனம் சொன்ன சொற்களால்
திட்டியின் விடம் அன்ன கற்பின் செல்வியை
விட்டிலையோ? இது விதியின் வன்மையோ?''

என்றும் கூறினான்.

பிரம்மாஸ்திரம்

இந்திரசித்தன் பிரம்மாஸ்திரத்தை ஏவி இலக்குவனையும் மற்றும் வானர வீரர்களையும் விழ்த்தி விட்டான். இராமன் போர்க்களத்திற்கு வந்து பார்த்த போது அனைவரும் வீழ்ந்து கிடப்பதைக் கண்டான். அவனும் மயங்கி விழுந்தான்.

அச்சமயம் இராவணனுடைய படையின் தூதர்கள் சென்று ''உன் மகனால் இளையோன் மாண்டான். அதைக் கண்டு இராமனும் உயிர் விட்டான். உன் எதிரிகள் ஒழிந்தனர்'' என்று இராவணனிடம் கூறினர்.

இராவணன் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினான். தனது ஆட்களை அழைத்துப் போர்க்களத்தில் உள்ள அரக்கர் பிணங்களையெல்லாம் அகற்றி விட்டுச் சீதையை விமானத்தில் ஏற்றிக் கொண்டு போய்ப் போர்க் களத்தைக் காட்டும்படி கட்டளையிட்டான். அவர்களும் அவ்வாறே செய்தனர்.

இராமனும் இலக்குவனும் மற்றும் வானர வீரர்களும் வீழ்ந்து கிடப்பதைச் சீதை விமானத்திலிருந்து கண்டாள். துக்கம் தாங்க முடியாமல் அவள் தனது கணவன் மீது கீழே விழுந்து உயிர் விட முனைந்தாள். உடனே திரிசடை அவளைத் தடுத்துப் பிடித்துக் கொண்டு கூறினாள், திரிசடை வீடணனுடைய மகள். சீதைக்குக் காவலாகவும் அவளுக்கு ஆதரவாகவும் இருந்த நல்லாள்.

சீதையிடம், திரிசடை, ''இவையெல்லாம் அவர்களுடைய மாயச் செயல்களின் தொடர்ச்சியே யாகும். நீ ஒன்றும் அஞ்ச வேண்டாம். உனது கற்பு நிலை தர்மத்தைத் தாங்கும். உனது கற்புக்கு அழிவில்லை'' என்று கூறி அவளைத் தேற்றினாள்.

''மாயமான் விடுத்த வாறும்,
சனகனை வகுத்த வாறும்

போய நாள் நாக பாசம்
பிணித்தது போன வாறும்
நீ, அமா நினையாய்! மாள
நினைத்தியோ! நெறியிலா ரால்
ஆயமா மாயம்; ஒன்று
அஞ்சலை அன்னம் அன்னாய்!''

என்றும்,

''கண்ட அக்கனவும், பெற்ற
நிமித்தமும், நினது கற்பும்
தண்டவாள் அரக்கர் பாவச்
செய்கையும், தருமம் தாங்கும்
அண்டர் நாயகன் தன்வீரத்
தன்மையும், அயர்த்தாய் போலும்
புண்ட ரீகற்கும் உண்டோ
இறுதி, இப்புலையர்க்கு அல்லால்''

என்றும்,

''மாருதிக்கு இல்லை அன்றே
மங்கை நின் வரத்தினாலே
ஆருயிர் நீங்கல்; நின்பால்
கற்புக்கும் அழிவுண்டாமோ?
சீரியது அன்று இது ஒன்றும்;
திசை முகன் படையின் செய்கை;
பேரும் இப்பொழுதே, தேவர்
எண்ணமும் பிழைப்பது உண்டோ?''

என்றும் சீதையின் கற்பின் வலிமையை எடுத்துக் கூறினாள் திரிசடை என்னும் நல்லாள். திரிசடையின் ஆறுதல் மொழிகளைக் கேட்டுச் சீதை சற்று அமைதியானாள்.

மாயச் சீதை

அனுமன் வடதுருவம் சென்று சஞ்சீவி மலையை எடுத்து வந்தான். மாண்டவர் அனைவரும் உயிர் பெற்று எழுந்தனர். இதைக்

கேள்வியுற்ற இந்திரசித்தன் நிகும்பலை யாகம் செய்து யான் புதிய பலம் பெற்று இந்த மனிதர்களை ஒழிப்பேன் என்று சூழுரைத்து அதற்காக இராவணனுடைய அனுமதியையும் பெற்றான்.

ஒரு மாயச் சீதையை உருவாக்கி அதை வெட்டிக் கொன்றும் அயோத்திக்குப் படையெடுத்துச் செல்வதாகவும் போக்குக் காட்டி அவர்களைத் திசை திருப்பி விட்டு அந்த நேரத்தில் நிகும்பலை யாகத்தை முடித்துவிட இந்திரசித்தன் திட்டமிட்டான்.

அனுமன், மருத்துவ மலையை அதனிடத்தில் வைத்து விட்டுத் திரும்பிய போது மாயா சீதையை இந்திரசித்தன் கொல்வதைக் கண்டான். மனம் வருந்தினான்.

''பெரும் சிறைக் கற்பினாளைப்
பெண்ணினைக் கண்ணிற் கொல்ல,
இரும் சிறகு அற்ற புள் போல்,
யாதும் ஒன்று இயற்றல் ஆற்றேன்
இரும் சிறை அழுந்து கின்றேன்,
எம்பிரான் தேவிபட்ட
அரும் சிறை மீட்ட வண்ணம்
அழகிது! பெரிதும் அம்மா!"

என்று அனுமன் பெரும் வருத்தமும் கவலையும் கொண்டு அச்செய்தியை இராமன் முதலியோரிடம் வந்து கூறினான்.

அனுமன் கூறிய செய்தியைக் கேட்டு இராமன் மூர்ச்சை யானான். வீடணன் அந்த நிகழ்ச்சியில் சூது இருப்பதாக ஐயம் கொண்டான். இராமன் தெளிவடைந்த போது இலக்குவன் பேசினான்.

''தையலைத் துணையிலாளைத்
தவத்தியைத், தருமக்கற்பின்
தெய்வதம் தன்னை மற்றுன்
தேவியைத் திருவைத், தீண்டி
வெய்யவன் கொன்றான் என்றால்
வேதனை உழப்பது இன்னும்
உய்யவோ! கருணையாலோ,
தருமத்தோடு உறவும் உண்டோ?''

என்று கூறினான்.

இந்திரசித்தன் அயோத்திக்குப் படையெடுத்துச் செல்வதாகக் கேட்ட செய்தியை வைத்தும் இராமன் தன் உறவினர்களுக்காக வருந்தினான். இருவரும் அயோத்தி செல்லத் தீர்மானித்தனர். அப்போது வீடணன்,

"பத்தினி தன்னைத் தீண்டிப்,
பாதகன் பகுத்த போது,
முத்திறத்து உலகம் வெந்து
சாம்பராய் முடியும் அன்றே!
இத்திறம் ஆன தேனும்,
அயோத்தி மேல் போன வார்த்தை
சித்திரம்; இதனை யெல்லாம்
தெரியலாம் சிறிது போழ்தின்''

என்று கூறி விட்டு ''நான் போய் உண்மையை அறிந்து வருகிறேன் சற்றுப் பொருங்கள்'' என்று தெரிவித்து விட்டு ஒரு வண்டு வடிவத்தில் நகருக்குள் சென்று திரும்பிச், சீதை இருக்கிறாள். இந்திரசித்தன் நிகும்பலைக்குச் செல்வதற்காக இந்த மாயத்தைச் செய்திருக்கிறான்.

''இருந்தனள் தேவி; யானே
எதிர்ந்தனன் கண்களால்; நம்
அருந்ததி கற்பினாளுக்கு
அழிவுண்டோ? அரக்கன் நம்மை
வருந்திட மாயம் செய்து
நிகும்பலை மருங்கு புக்கான்;
முருங்கு அழல் வேள்வி முற்றி
முதல் அற முடிக்க மூண்டான்''

என்று உண்மைச் செய்தியை அறிந்து வந்து கூறினான்.

பின்னர் வீடணனுடைய வேண்டுகோளின் பேரில் இராமனுடைய அனுமதியைப் பெற்று, இலக்குவன், வீடணன், அனுமன் ஆகியோர் மேலும் சில வானர வீரர்களுடன் நிகும்பலைக்குச் சென்று இந்திர சித்தனுடைய வேள்வியைச் செய்யவிடாமல் தடுப்பதற்குப் புறப்படத் தயாராயினர். இராமன், இலக்குவனுக்கு மேலும் தேவைப் படும் படியான தற்காப்பு மற்றும் தாக்குதல் படைகளைக் கொடுத்து ஆசி கூறி வழி அனுப்பி வைத்தான்.

இலக்குவனும், வீடணன் அனுமன் ஆகியோருடன் நிகும்பலைக்குச் சென்று இந்திரசித்தனுடைய யாகத்தைத் தடுத்து அவனை விரட்டினர்.

மூலப்படை

இந்திரசித்தன் போர்க் களத்தில் இலக்குவன் கணையால் மாண்டான். இராவணன் வேறு துணை யாருமின்றித் தனியாக இருந்தான். போரைத் தொடருவதற்குத் தனது மூல பலப்படையைத் திரட்டினான். மூல பலப்படைத் தலைவர்களில் முக்கியமான ஒருவன் வன்னி. அவன் நடந்த விவரங்களைக் கேட்டான். அப்போது மாலியவான் நடந்த நிகழ்ச்சிகள் அனைத்தையும் எடுத்துக் கூறி,

''இது இயற்கை; ஓர் சீதை என்று
இருந்தவத்து இயைந்தாள்
பொது இயற்கை தீர்
கற்புடைப் பத்தினி பொருட்டால்
விதி விளைந்தது; அவ்வில்லியர்
வெல்க; நீர் வெல்க
முது மொழிப்பதம் சொல்லினேன்;
என்று உரை முடித்தான்''

இராவணன் வீழ்ச்சி

இராவணன் போர்க்களத்தில் இராகவனுடைய கணையால் மாண்டான். மாண்டு கிடந்த அவனுடைய முகங்கள் மும்மடங்கு பொலிந்து கம்பிரமாகக் காட்சியளித்தன. அக்காட்சியை இராமனும் இதர வீரர்களும் கண்டனர். வேத விதி முறைகளின் படி அவனுக்கு இறுதிக் கடன்கள் செய்யுமாறு வீடணனிடம் கூறினான்.

வீடணன், இராவணனுடைய உடல் மீது விழுந்து அழுது புரண்டான். வீடணனுக்குத் தன் அண்ணன் மீது இருந்த மிகுந்த மரியாதை காரணமாக அவனுடைய பெருமைகளை நினைந்து வருந்திப் புலம்பினான்.

''போர் மகளைக் கலை மகளைப் புகழ் மகளைத்
தழுவிய கை பொறாமை கூரச்
சீர்மகளைத் திருமகளைத் தேவர்க்கும்
தம் மோயைத் தெய்வக் கற்பின்

பேர்மகளைத் தழுவுவான் உயிர் கொடுத்துப்
பழி கொண்ட பித்தா! பின்னைப்
பார்மகளைத் தழுவினையோ திசையானை
மறுப்பு இறுத்த பணைத்த மார்பால்''

என்று புலம்பி அழுதான்.

இராவணனுடைய மூத்த மனைவி, பட்டமகிஷி மாவீரன் இந்திரசித்தனை ஈன்றெடுத்த தாய் மண்டோதரி தனது கணவனுடைய உடல் மீது விழுந்து புலம்பி அழுதாள்.

''காந்தையருக்கு அணி அனைய சானகியார்
பேரழகும், அவர்தம் கற்பும்
ஏந்து புயத்து இராவணனார் காதலும் அச்
சூர்ப்பணகை இழந்த மூக்கும்,
வேந்தர் பிரான் தயரதனார் பணிதன்னால்
வெங்கானில் விரதம் பூண்டு
போந்ததுவும், கடைமுறையே புரந்தரனார்
பெருந்தவமாய் போயிற்று அம்மா!''

என்றெல்லாம் புலம்பி அழுதாள்.

மண்டோதரி இவ்வாறு பலவும் கூறி அழுது புலம்பிக் கணவன் உடல் மீது விழுந்து உயிர் நீங்கினாள்.

வீடணன் இறந்ததோர் அனைவருக்கும் இறுதிக்கடன் ஆற்றினான்.

சீதையின் மீட்சி

இராமனுடைய ஆணையின் படி வீடணனுக்கு இலக்குவன் முடி சூட்டினான். விடணன் இலங்கையின் அரசப் பொறுப்பை ஏற்றான்.

வெற்றிச் செய்திகளைச் சீதையிடம் கூறி வருமாறு இராமன் அனுமனை அனுப்பினான். அனுமன் சீதையிடம் சென்றுச் செய்திகளைக் கூறினான். சீதை பெரு மகிழ்சியடைந்தாள்.

இராமன், சீதையைச் சீரோடும் சிறப்போடும் அழைத்து வரும்படி வீடணனிடம் கூறினான். அவனும் சீதையிடம் சென்று இராமனுடைய கருத்தைத் தெரிவித்தான். அப்போது சீதை,

''யான் இவண் இருந்த தன்மை
இமையவர் குழுவும் எங்கள்
கோனும், அம்முனிவர் தங்கள்
கூட்டமும், குலத்துக்கு ஏற்ற
வான் உயர் கற்பின் மாதர்
ஈட்டமும் காண்டல் மாட்சி
மேல் நினை கோலம் கோடல்
விழுமியது அன்று; வீர''

என்று கூறினாள்.

இராமன் கூறிய எனது பணியின் குறிப்பு ''தங்களை சீரோடு அழைத்து வருமாறு'' என்று வீடணன் மீண்டும் கூறினான். சீதையும் நன்று என்று கூறினாள்.

''காணியைப் பெண்மைக் கெல்லாம்
கற்பினுக்கு அணியை; பொற்பின்
ஆணியை; அமிழ்தின் வந்த
அமிழ்தினை; அறத்தின் தாயைச்;
சேண் உயர் மறையை எல்லாம்
முறை செய்த செல்வன் என்ன
வேணியை அரம்பை மெல்ல
விரல் முறை சுகிர்ந்து விட்டாள்''

என்று கம்பன் மிக உருக்கமாகக் குறிப்பிடுகிறார்.

சீதை இராமனைக் காணச் செல்லுதல்

சீதையை அழைத்துச் சென்றதை

''அருங்குலக் கற்பினுக்கு அணியை அண்மினார்
மருங்குபின் முன்செல வழியின்று என்னலாய்
நெருங்கினர்; நெருங்குழி, நிருதர் ஒச்சலால்
கரும்கடல் முழக்கெனப் பிறந்த கம்பலை''

என்று கம்பர் மிகச் சிறப்பாகக் குறிப்பிடுகிறார்.

சீதை இராமனைக் காணுதல்

இராமன் சீதையைக் காண்கிறான்

''கற்பினுக்கு அரசினைப் பெண்மைக் காப்பினைப்
பொற்பினுக்கு அழகினைப் புகழின் வாழ்க்கையைத்
தற்பிரிந்து அருள் புரிதருமம் போலியை
அற்பின் அத்தலைவனும் அமைய நோக்கினான்''

''கணங்குறு துணை முலை மூன்றில், தூங்கிய
அணங்குறு நெடுங்கணீர் ஆறுபாய் தர
வணங்கு இயல் மயிலினைக் கற்பின் வாழ்வினைப்
பணம் கிளர் அரவு என எழுந்து பார்ப்புறா''

இவ்வாறு இராமன் சீதையைப் பார்த்து அனைவரும் அறியப் பேசியதைக் கம்பன் மிக உருக்கமாக நமக்கு எடுத்துக் கூறுகிறார்.

சீதை தீப்புகுந்து வெளியேறுகிறாள்

இங்கு ஒரு அற்புதமான காட்சியைக் கம்பநாடர் நமக்குக் காட்டுகிறார். இதைப் படிக்கும் போது நமது உடம்பு புல்லரிக்கிறது. கண்கள் கலங்கு கின்றன. உள்ளம் உலுங்குகிறது. பெண்மையின் பெருமையை கம்பன் உலகின் உச்சிக்குக் கொண்டு செல்கிறார்.

சீதையைக் கண்ட இராமன்

''பெண்மையும், பெருமையும் பிறப்பும் கற்பு எனும்
திண்மையும், ஒழுக்கமும், தெளிவும், சீர்மையும்
உண்மையும், நீ எனும் ஒருத்தி தோன்றலால்
வண்மையில் மன்னவன் புகழின் மாய்ந்ததால்,

"யாது யான் இயம்புவது? உணர்வையீடறச்
சேதியா நின்ற நின் ஒழுக்கச்; செய்தியால்;
சாதியால்; அன்று எனில் தக்கது ஓர்நெறி
போதியால்; என்றனன் புலவர் புந்தியான்"

என்று கூறி என் கடமை முடிந்து விட்டது, எனவே தக்க ஒரு நெறியில் நீ போவாயாக'' என்று இராமன் கூறினான். இராமன் கூறிய இச் சொற்களைக் கேட்டு அனைவரும் அதிர்ச்சியடைந்தனர். அப்போது சீதை, எந்தவித கலக்கமும் இல்லாமல்,

''எத்தவம், எந்நலம், என்றன் கற்பு, நான்
இத்தனை காலமும் உழந்த ஈதெலாம்
பித்து எனலாய், அறம் பிழைத்ததால் அன்றே
உத்தம நீ மனத்து உணர்ந்தி லாமையால்''

என்றும்

''பங்கயத்து ஒருவனும், விடையின் பாகனும்,
சங்கு கை தாங்கிய தரும மூர்த்தியும்
அங்கையின் நெல்லி போல் அனைத்தும் நோக்கினும்
மங்கையர் மன நிலை உணரவல்லரோ?''

என்று கூறுவதைக் கம்பன் மிக மிக நுட்பமாகப் பெண்ணின் பெருமையை சீதையின் மூலம் எடுத்துக் கூறுவதைக் காண்கிறோம்.

சீதை இவ்வாறு கூறிவிட்டு ''சாதலில் சிறந்தது ஒன்றுமில்லை'' என்று கூறி இளையவனை அழைத்து ''இடுதி தீ'' எனக் கூறி தீப்புகுந்தாள்.

''கனத்தினால் கடந்த பூண் முலைய கைவளை
மனத்தினால் வாக்கினால் மறுவுற்றேன் எனில்
சினத்தினால் சுடுதியால் தீச்செல்வா'' என்றாள்;
புனத்துழாய் கணவற்கும் வணக்கம் போக்கினாள்''

''நீந்தரும் புனலிடை நிவந்த தாமரை
ஏய்ந்ததன் கோயிலே எய்துவாள் எனப்
பாய்ந்தனள்; பாய்தலும் பாலின் பஞ்செனத்
தீய்ந்தது அவ்வெரி, அவள் கற்பின் தீயினால்''

தீக்கடவுள் சீதையைக் கைகளில் ஏந்தி வந்தான். இராமன் அவனை யார் எனக் கேட்டான்.

''அங்கியான், என்னை, இவ் அன்னை கற்பு எனும்
பொங்குவெம் தீச்சுடப் பொறுக்கி லாமையால்
இங்கு அணைந்தேன்; உறும் இயற்கை நோக்கியும்
சங்கியா நிற்றியோ? எவர்க்கும் சான்றுளாய்''

என்று கூற,

''அழிப்பில சான்று நீ உலகுக்கு; ஆதலால்
இழிப்பில சொல்லி நீ, இவளை யாதும் ஓர்

**பழிப்பிலாள் என்றனன் பழியும் இன்று இனிக்
கழிப்பிலாள், என்றனன் கருணை உள்ளத்தான்''**

என்று கம்பன் குறிப்பிடுகிறார்.

சீதையின் கற்பின் முழுவடிவம்

சீதையின் கற்பின் முழுவடிவம் இங்கு காட்சியளிப்பதைக் காண்கிறோம். பாரதப் பெருமையின் முழுமையான பரிமாணங்கள் அனைத்தையும் இங்கு நாம் காண்கிறோம்.

நான்முகன் தோன்றி ''எமையும் மூன்று உலகையும் ஈன்று மகனையின் மாட்சியை வளர்த்த எம் மோயினை (எம் அன்னையை) யாவரும் முனையல் (வெறுக்காதே) என்று கூறுகிறார்.

சிவபெருமான் தோன்றி ''அன்னை சீதையாம் மாது நின் மார்பில் வந்து அமைந்தாள், துறக்கும் தன்மையள் அல்லள்'' என்று கூறினார்.

முருகன் வானத்திலிருந்து இரங்கி வந்து இராமனைத் தழுவிக் கொண்டான் சீதையை வேண்டிக் கொண்டான்.

''நங்கை மற்று நின் கற்பினை உலகுக்கு நாட்ட
அங்கி புக்கிடு என்று உரைத்தது, அது மனது அடையேல்
சங்கை உற்றவர் தேறுவது உண்டு; அது சரதம்;
கங்கை நாடு உடைக் கணவனை முனிவுறக் கருதேல்''

என்றும்.

''பொன்னைத் தீயிடைப் பெய்வது, அப்பொன்னுடைத் தூய்மை
தன்னைக் காட்டுதற்கு என்பது மனக் கொடல் தகுதி
உன்னைக் காட்டினன் கற்பினுக்கு அரசி என்று உலகில்
பின்னைக் காட்டுதற்கு அரியது என்று எண்ணி''இப்பெரியோன்

கூறியதை ஆறுதல் மொழியாகக் கம்பன் மிகச் சிறப்பாகக் கூறி முடிக்கிறார்.

"பெண் பிறந்தவர் அருந்ததியே முதற் பெருமைப்
பண்பு இறந்தவர்க்கு அருங்கலம் ஆகிய பாவாய்!
மண் பிறந்தகம் உனக்கு; நீ வானின்றும் வந்தாய்!
எண்பு இறந்த நின் குணங்களுக்கு இனி இழுக்கு இலை; யால்"

இங்கு சீதாபிராட்டியின் கற்பின் சிறப்பைக் கற்பின் பெருமையை, கற்பின் தூய்மையை உறுதியை எடுத்துக் காட்டி உலக முழுவதுமே சாட்சியமாக நிற்கிறது. பஞ்சபூதங்களும், அக்கினி தேவனும்

நான்முகனும், சிவ பெருமானும், தசரதனுமே வந்து சீதையின் கற்பின் பெருமையை எடுத்துக் கூறி நிற்கின்றனர்.

அனைவரும் அயோத்தி திரும்பினர்

இராமனுடைய வனவாச காலம் முடிந்தது. இராமன் சீதையுடனும் இலக்குவனுடனும் விமானத்தினருகில் வந்து அனைவரும் இளைப்பாறும் படி கேட்டுத் தானும் புறப்பட்டான்.

அனைவரும் விமானத்தில் ஏறினர். விமானம் இலங்கையைச் சுற்றி வட்ட மிட்டு விட்டுக் கடலையும் பல மலைகளையும் ஆறுகளையும் கடந்து கிட்கிந்தை சென்றது. அங்கிருந்து பரத்துவாசர் ஆசிரமத் திற்குச் சென்றது. அங்கு இளைப்பாறி விட்டு இராமனும் மற்றவர்களும் விமானத்தில் நந்திக் கிராமம் சென்றடைந்தனர். அனைவரும் ஒன்று சேர்ந்தனர்.

கம்பனுடைய மகா காவியத்தின் சிறப்பு, சீதையின் தலை சிறந்த, மாசு மறுவற்ற உறுதி மிக்க மிக உயர்ந்த கற்பு நிலையாகும். வால்மீகியின் சீதையைக் காட்டிலும் கம்பனுடைய சீதை மிக உயர்வான கற்பு நிலையின் உயர்வை சிறப்பை வலுவை எடுத்துக் கூறுவதைக் காண்கிறோம்.

சீதை, ஜானகி, மைதிலி, வைதேகி என்னும் பெயர்களும் இராமனுடன் சேர்த்து சீதாராமன், ஜானகி ராமன், சீதாபதி என்னும் பெயர்களெல்லாம் பாரத பூமியில் உள்ள அனைத்து இல்லங்களிலும் பதிந்துள்ள குடும்பப் பெயர்களாகும். நமது பாரத பூமியின் பண்பாட்டிலும் கலாச்சாரத்திலும் இணைந்துள்ள இஷ்ட தெய்வங்களாகும்.

கம்பன் தனது மகா காவியத்தில் பெண்மையை மிகவும் சிறப்பித்துக் காட்டுவதில் சீதா பிராட்டித் தனி இலக்கணமாக அமைந்துள்ளதைக் காண்கிறோம்.


பெண்ணாசை, பெருங்காதல், ஒரு தலைக் காமம் பால் உணர்வின் பல பரிமாணங்கள் அவைகளின் வெளிப்பாடுகள் அதன்

விளைவுகள் ஆகியவை சமுதாயத்தில் ஆட்சியில் அரசியலில் எத்தகைய பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன என்பதை மிக விரிவாக எடுத்துக் கூறும் இராமாயண பெருங்காவியம் கம்பருடைய கல்விஞானத்தின் சிறப்பில் கற்பு நிலையை இரு பாலரின் கற்பு நிலையையும் புலனடக்கத்தையும் பற்றி மிக மேலான நிலைக்கு உயர்த்திக் காட்டுவதையும் காண்கிறோம். ஒழுக்க நெறிக்கு முன்னுதாரணங் களையும் காண்கிறோம். கம்பன் வாழ்க, கன்னித் தமிழ் வாழ்க, கற்புடை மாதர் தம் புகழ் வாழ்க, வாழ்க.

"கங்கையே, யமுனை, கோதாவரி நருமதை, காவேரி,
பொங்குநீர் நதிகள் யாவும் படிந்து அலால் புன்மை போகா;
சங்கு எறி தாங்க வேலை தட்ட இச்சேது என்னும்
இங்கிதின் எதிர்ந்தோர் புன்மை யாவையும் நீக்கும் அன்றோ!"

○○○





நூலாசிரியரைப் பற்றி...

நூலாசிரியர் அ.சீனிவாசன்



நூலாசிரியர் அ.சீனிவாசன், மூத்த தமிழறிஞர், எழுத்தாளர், பத்திரிக்கையாளர், முன்னாள் ராணுவ படை வீரர். பல நாடுகளிலும், இந்தியாவின் பல மாநிலங்களிலும் விரிவாகச் சுற்றுப் பயணம் செய்து அனுபவம் பெற்றவர். தனது பள்ளிப் படிப்பு காலத்திலேயே பள்ளிமாணவர் பருவ வயது முதலே பொது வாழ்க்கையில் ஈடுபட்டு பல்வேறு பணிகளில் தன்னை ஆர்வமுடன் ஈடுபடுத்திக் கொண்டவர்.

சுதந்திரப் போராட்ட காலத்தில் தேசீய காங்கிரஸ், காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சி (1937 –ம் ஆண்டில் ஜெயப் பிரகாஷ் நாராயணன் தலைமையிலான சோஷலிஸ்ட்களும், கம்யூனிஸ்ட்களும் சேர்ந்த காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சி என்னும் பெயரில் ஒரு தீவிரமான கட்சி அமைத்திருந்தனர். அக்கட்சியினர் காங்கிரஸ் கட்சியிலும் உறுப்பினர்களாயிருந்தனர்) சுயமரியாதை இயக்கம் பின்னர் பொதுவுடமை இயக்கம் ஆகிய இயக்கங்களுடன் தொடர்பு கொண்டு பணியாற்றியவர். சிறைவாசம், சித்திரவதை, கொடுமையான போலீஸ் அடக்கு முறைகளுக்கு ஆளாகித் தியாகத் தழும்புகள் ஏறியவர்.

இரண்டாவது உலகப் பெரும் போர் காலத்தில் விமானப் படையில் சேர்ந்து இராணுவப் பயிற்சியும் தகவல் தொழில் நுட்ப பயிற்சியும் பெற்றவர்.

திரு. அ.சீனிவாசன் முன்னாள் இராமநாதபுரம் மாவட்டம் இன்றைய விருதுநகர் மாவட்டம் திருவில்லிப்புத்தூர் தாலுகா வத்திராயிருப்பு மகாராஜபுரம் கிராமத்தில் விவசாயக் குடும்பத்தில் 1924 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6–ம் தேதி பிறந்தார்.

தந்தையார் மெட்ட. வெ. அய்யப்ப நாயுடு. தாயார் மெட்ட . வெங்கடம்மாள். உடன் பிறந்தவர்கள் ஒரு சகோதரி இரண்டுஞ் சகோதரர்கள். 1957–ம் ஆண்டு மே மாதம் 31–ம் தேதி திரு. அ.சீனிவாசன் அவர்களுக்கு திருமணம் ஆயிற்று. மனைவி திருமதி சீதாலட்சுமி. குழந்தைகள் இரண்டு பெண்கள், ஒரு ஆண். பெண்களில் மூத்தவர் திருமதி. கே. பகீரதி, எம். ஏ. பி. எட். (தமிழ்) திருமணமானவர். சென்னையில் பள்ளி ஆசிரியராக பணியாற்றுகிறார். இளையவர் கு. வைதேகி, கர்நாடக இசையில் பட்டம் பெற்று கோவையில் இசை ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். மகன் ஏ. எஸ். வாசன் (பழைய பெயர் எஸ். அய்யா சாமி) ஏரோநாட்டிக்கல் என்ஜினியரிங் மற்றும் பி,காம் படிப்பு முடித்தவர். சினிமா துறையில் தயாரிப்பு, நிர்வாகம், இயக்கம் ஆகிய துறைகளில் பணியாற்றி வருகிறார். அத்துடன் தந்தையார் எழுதி வரும் நூல்களைப் பதிப்பித்து அப்பதிப்பகத்தின் நிர்வாகியாகப் பணியாற்றியும் வருகிறார்.

திரு. அ.சீனிவாசன் மகாராஜபுரம் சாத்தூர், வத்ராயிருப்பு, விருதுநகர் ஆகிய ஊர்களில் பள்ளிப் படிப்பையும், மதுரையில் கல்லூரிப் படிப்பும் முடித்து, இந்திய விமானப் படையில் தகவல் தொழில் நுட்ப பயிற்சியும் பெற்றுள்ளார். அப்போது ஆங்கில மொழியில் தனிப் பயிற்சியும் பெற்றார். அத்துடன் சொந்த முயற்சியில் தமிழ் இலக்கியத்திலும் குறிப்பாக பாரதி நூல்கள், கம்ப ராமாயணம், நாலாயிரத் திவ்யப் பிரபந்தம், சிலப்பதிகாரம் ஆகிய நூல்களில் ஆழப் படிப்பும் பயிற்சியும் பெற்றார்.

இவ்வாறு தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நல்ல பயிற்சியும் அத்துடன் தெலுங்கு, மலையாளம், இந்தி ஆகிய மொழிகளும் அறிந்தவர்.

திரு. அ.சீனிவாசன் 1947ஆம் ஆண்டு முதல் 1999 ஆம் ஆண்டு வரை சுமார் 52 ஆண்டுகள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில், அக்கட்சியின் வட்டாரப் பொருப்பிலிருந்து, மாவட்ட , மாநில, அகில இந்தியப் பொருப்புகள் வரையிலும் பலவேறு பொருப்புகளில் குறிப்பாக அமைப்பு நிலை, தொழிற் சங்கம், தலைமை, பத்திரிகைத் துறை, பிரச்சாரத் துறை, பிரசுரத் துறை, கட்சிக் கல்விப் பயிற்சித் துறை (சித்தாந்தத் துறை) முதலிய

பல துறைகளிலும் பணியாற்றியுள்ளார். கட்சியின் உயர்ந்த அமைப்பான தேசீயக் கவுன்ஸிலில், இருபத்து ஐந்து ஆண்டுகள் உறுப்பினராக இருந்து மாநில, மத்தியப் பொருப்புகள் பலவற்றில் இருந்து பணியாற்றியுள்ளார். தமிழ் மாநிலக் குழுவின் துணைச் செயலாளர் பொருப்பில் இருந்து மாநில அளவில் அமைப்பு நிலை சித்தாந்தப் பயிற்சி, பத்திரிகை பொருப்புகள் வகித்து இருபது ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியுள்ளார்.

கட்சியின் உயர்மட்டக் குழுவின் பிரதிநிதியாக அன்றைய சோவியத் யூனியன் (ரஷ்யா – மாஸ்கோ, லெனின்கிராட், ஆர்மீனியா, அஜர் பைஜான்) மற்றும் செக்கோஸ்லோவேகியா ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்து சுற்றுப் பயணம் செய்துள்ளார்.

தொழிற் சங்கங்கத் தலைவராக :

திரு. அ.சீனிவாசன் 1950 ஆம் ஆண்டு காலத்திலேயே நெசவாளர் சம்மேளனம், சிவகாசி, சத்திரப்பட்டி, தளவாய்புரம், விருதுநகர், சாத்தூர், அருப்புக்கோட்டை, திருவில்லிபுத்தூர் ஆகிய பகுதிகளில் பஞ்சாலை, அச்சு, தீப்பெட்டி, கைத்தறி மற்றும் பல தொழில்கள் தொடர்பான தொழிலாளர் சங்கங்கள் பலவற்றையும் தொடங்கியும், உருவாக்கியும், தொழிற் சங்கத் தலைவராகப் பணியாற்றியுள்ளார். மாநில அளவிலும் பல தொழிற் சங்கப் பொருப்புகளில் இருந்து பணியாற்றியுள்ளார்.

பின்னர் திரு. அ.சீனிவாசன் தனது தொழிற் சங்கப் பொருப்புகளில் சென்னைக்கு மாற்றப்பட்டு, சென்னையில் துறைமுகம், ஆவடி டாங்க் தொழிற் சாலை, கல்பாக்கம் அணு மின் நிலையம் ஆகிய துறைகளில், தொழில் நிறுவன அளவிலும், அகில இந்திய அமைப்பு வரையிலும், பொறுப்புகள் வகித்து தொழிற் சங்கத் தலைவராகப் பணியாற்றியுள்ளார்.

திரு. அ.சீனிவாசன் சென்னை டாக் லேபர் போர்டு உறுப்பினராக மத்திய அரசால் நியமனம் செய்யப்பட்டு அந்தப் பொருப்பில் தொழிலாளர் பிரதிநிதியாகப் பணியாற்றியுள்ளார்.

ஆய்வு அறிக்கை சமர்ப்பித்தல்

வளர்முக நாடுகளில் இளம் தொழிலாளர்களுக்கு மறுக்கப்பட்டுள்ள வாய்ப்புகள் என்னும் தலைப்பிலும், மற்றும் இளம் தொழிலாளர்களின் பொதுப் பிரச்னைகள் பற்றியும் உலக தொழிற் சங்க சம்மேளனத்தின் சார்பில் பல்கேரிய நாட்டில் வார்னா நகரில் நடைபெற்ற சர்வதேசத் தொழிலாளர் மாநாட்டில் இந்திய தொழிலாளர்களின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார். அம்மாநாட்டில் இந்திய நாட்டின் இளம் தொழிலாளர்களின் பிரச்னைகள் பற்றிய அறிக்கை சமர்ப்பித்துள்ளார். அந்த அறிக்கை உலகத் தொழிலாளர் சம்மேளனத்தின் ஆவணங்களின் பகுதியாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

1980 ஆம் ஆண்டுகளில் உலக தொழிற் சங்க சம்மேளனமும், சமாதானம் மற்றும் சோஷலிஸம் பற்றிய பிரச்னைகளும் என்னும் சர்வதேச இதழும் சேர்ந்து நடத்திய கருத்தரங்கில் வளர்முக நாடுகளில் "பொதுத் துறையின் பங்கும் பொதுத் துறைக்கும் தனியார் துறைக்கும் இடையிலான உறவு தொடர்புகள் பற்றிய பிரச்னைகள் பற்றி டில்லியில் நடைபெற்ற கருத்தரங்கில் திரு. அ.சீனிவாசன் இந்தியாவில் பொதுத் துறைக்கும் தனியார் துறையில் உள்ள நடுத்தர மற்றும் சிறு தொழில்களுக்கும் இடையிலான உறவு என்னும் தலைப்பில் ஒரு ஆய்வறிக்கை சமர்ப்பித்து அது உலக தொழிற் சங்க ஆவணத்தில் பதிவாகியுள்ளது.

பத்திரிகையாளராக :

தொழிற் சங்கத் தலைவராக இருந்த காலத்தில் தொழிற் சங்கச் செய்தி, ஹார்பர் தொழிலாளி ஆகிய பத்திரிகைகளில் ஆசிரியர் பொருப்பில் பணியாற்றியுள்ளார். கட்சியின் மாநிலத் துணைச் செயலாளராக இருந்த போது கட்சியின் மாநில அமைப்பு நிலைப் பொருப்பில் இருந்த காலத்தில் கட்சியின் பத்திரிகையான ஜனசக்தி வார இதழ் மற்றும் நாளிதழ்களில் தலைமை ஆசிரியராக எட்டாண்டுகளுக்கு மேல் பணியாற்றியுள்ளார். கட்சியின் சித்தாந்த ஏடான மார்க்சீய ஒளி மாத இதழின் தலைமை ஆசிரியராக இருபது ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியுள்ளார்.

எழுத்துப் பணிகள் :

பத்திரிகை ஆசிரியராக இருந்த காலத்தில் கட்சி மற்றும் தொழிற் சங்கப் பத்திரிகைகளில் தொடர்ச்சியாகப் பல முக்கிய அரசியல், பொருளாதாரம், இலக்கியம் மற்றும் தத்துவ ஞானம் மற்றும் தொழிலாளர், விவசாயிகள் பற்றிய பிரச்சனைகள் பற்றிய பல கட்டுரைகள் எழுதி வந்ததுடன்,

அரசியல், வரலாறு, பொருளாதாரம், தத்துவ ஞானம், சர்வ தேசப் பிரச்சனைகள் முதலியவை பற்றிய பல தலைப்புகளிலான நூல்களை மொழி பெயர்ப்பு (தமிழாக்கம்) செய்தும், மூல நூல்கள் எழுதியும் அவை வெளியாகியுள்ளன. காரல் மார்க்ஸ் வாழ்க்கை வரலாறு, மார்க்சிய லெனினிய தத்துவ ஞானப் பிரச்சனைகள் அரசியல் விஞ்ஞானத்தின் அடிப்படைகள், ஐக்கிய முன்னணித் தந்திரம், மார்க்சிய தத்துவம், வரலாற்றியல் பொருள் முதல் வாதம், முதலியவை அவர் தமிழாக்கம் செய்துள்ள முக்கிய நூல்களாகும். மற்றும் மார்க்சிய பொருளாதார தத்துவம், ஜீவாவின் தமிழ் பணிகள், கிராமப்புறப் பாட்டாளிகளை நோக்கி ஆகிய தலைப்புகளில் மூல நூல்கள் எழுதியுள்ளார். இந்த மூன்று நூல்களுக்கும் முறையே பேராசிரியர் வானமாமலை, பேராசிரியர் கே.சீனி, பேராசிரியர் நா. தர்மராஜன் ஆகியோர் முன்னுரை எழுதி பாராட்டியுள்ளனர்.

இலக்கியச் சிறு திரு. அ.சீனிவாசன் அப்போது எழுதி வெளியான நூல்கள் சுமார் பதினேழாயிரம் பக்கங்களுக்கு மேலாகும். இதை திரு. அ.சீனிவாசன் அவர்களுடைய எழுத்துப் பணிகளில் அளவுகோலாகும்.

விருதுகள் :

திரு. அ.சீனிவாசன் தனது சிறந்த எழுத்துப் பணி சாதனைகளுக்காக சோவியத் நாடு நேரு விருதும், சிறந்த பத்திரிகைப் பணிகளுக்காக, சமாதானம் சோஷலிஸம் பற்றிய பிரச்சனைகள் என்றும் சர்வதேசப் பத்திரிகை நிறுவனத்தின் சார்பில் சிறந்த பத்திரிகையாளர் என்னும் கௌரவப் பட்டயமும் பெற்றுள்ளார். அத்துடன் அண்மையில் பாரதி தொடர்பாக அவர் எழுதியுள்ள நூல்களும் தனியார் விருதுகளைப் பெற்றுள்ளன.

தேர்தல்களில் பங்கு :

1950 ஆம் ஆண்டுகளின் கடைசியில் திரு. அ.சீனிவாசன் இராஜபாளையம் நகரசபைத் தேர்தலில் வார்டு உறுப்பினர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று நகரசபை உறுப்பினராகச் சிறப்பாக பணியாற்றியுள்ளார்.

1984 ஆம் ஆண்டிலும் 1991 ஆம் ஆண்டிலும் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் சிவகாசி பாராளுமன்றத் தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவுடன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளராக திரு. அ.சீனிவாசன் போட்டியிட்டு ஒவ்வொரு தடவையிலும் இரண்டு லட்சத்திற்கும் தேற்பட்ட வாக்குகள் பெற்று இரண்டாம் இடத்தைப் பெற்று குறைந்த வாக்கு வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பை இழந்தவர்.

இரு தடவைகளிலும் முறையே இந்திரா காந்தி படுகொலை, ராஜீவ் காந்தி படுகொலை அதனால் ஏற்பட்ட அனுதாப அலை அவருக்கு பாதகமாக இருந்தது.

திரு. அ.சீனிவாசன் சிறந்த சிந்தனையாளர், எழுத்தாளர், பத்திரிகையாளர், நூலாசிரியர், சிறந்த பேச்சாளர், இராணுவ சேவை அனுபவம் பெற்றவர். தொழிற் சங்கத் தலைவராகப் பணியாற்றி அனுபவம் பெற்றவர். பல நாடுகளுக்கும் இந்திய நாட்டில் பல மாநிலங்களுக்கும் சென்று சுற்றுப் பயணம் செய்து அனுபவம் பெற்றவர். தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம், இந்தி ஆகிய மொழிகள் அறிந்தவர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டிருந்த காலத்தில் 1948 – 50 ஆம் ஆண்டு காலத்தில் கடுமையான போலீஸ் அடக்கு முறைக்கும் சித்திரவதைக்கும் கொடுமையான சிறைவாசத்திற்கும் உட்பட்டு மதுரை, சேலம் சிறைகளில் கடும் தண்டனை அனுபவத்து தியாகத் தழும்புகள் ஏறியவர்.

இலக்கிய அனுபவம் :

திரு. அ.சீனிவாசன் ஏற்கனவே தனது குழந்தைப் பிராயத்திலிருந்தே தனது தாய் தந்தையர் மூலம் இராமாயணம்,

மகாபாரதம், நாலாயிரத் திவ்யப் பிரபந்தம், நள வெண்பா, இராமானுஜருடைய தத்துவங்கள் முதலியவை பற்றி அறிமுகமானவர். விடுதலை இயக்கத்தின் ஆதர்சத்தில் பள்ளிப் படிப்பு காலத்தில், மகாகவி பாரதியார், வ. உ. சிதம்பரம் பிள்ளை, சுப்ரமணிய சிவா, விவேகானந்தர் நூல்கள், அவர்களைப் பற்றிய செய்திகள், ஆனந்த மடம் முதலிய பக்கிம் சந்திரர் மற்றும் சரத் சந்திரர் நாவல்கள், கல்கி நாவல்கள், மணிக் கொடி கதைகள் முதலிய இலக்கியங்களிலும் அறிமுகமாகி நாட்டுப் பற்றை வளர்த்துக் கொண்டவர். சுதந்திரப் போராட்ட காலத்தில் தீவிரவாதக் கருத்துக்களுக்கு ஆதரவான சிந்தனை போக்குகளைக் கொண்டிருந்தார். பாரதி, விவேகானந்தர், ஆகியோரின் இந்திய சிந்தனைப் போக்கு அவரை மிகவும் கவர்ந்தது. அதன் பெருமிதத்தை படிப் படியாக வளர்த்துக் கொண்டிருந்தார்.

திரு. அ.சீனிவாசன் இந்திய கம்யூனிஸ்ட் தொடர்பு ஏற்பட்ட போது கம்யூனிஸ்ட் இலக்கியங்களையும் குறிப்பாக மார்க்ஸ் ஏங்கல்ஸ், லெனின் மற்றும் சீனக் கம்யூனிஸ்ட் தலைவர்களின் மூல நூல்களை ஆழ்ந்து படித்தார். அப்போது இயற்கை, சமுதாயம், தனி மனித சிந்தனை பற்றியும் அதன் வழியில் தத்துவ ஞானம், அரசியல் பொருளாதாரம், சமுதாய வரலாறு, பற்றியுமான ஐரோப்பிய சிந்தனைகள், ஐரோப்பாவில் நிகழ்ந்த தீவிரமான கருத்துப் போராட்டங்கள், தொழில் புரட்சி மூலம் நிகழ்ந்த சமுதாய மாற்றங்கள் முதலியவை பற்றிய இலக்கியங்கள் மூலம் ஐரோப்பிய சிந்தனை வளர்ச்சி பற்றிய அறிமுகம் ஏற்பட்டது.

அத்துடன் சோவியத் யூனியனின் தோற்றமும் வளர்ச்சியும் சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் ஆவணங்கள், இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் ஆவணங்கள், தொடர்ச்சியான அறிக்கைகள் தீர்மானங்கள் ஆகியவற்றையும் ஆழ்ந்து படிக்க நேர்ந்தது. சீனாவின் கம்யூனிஸ்ட் இலக்கியங்களையும் படிக்க நேர்ந்தது.

இந்திய நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் நாட்டின் வளர்ச்சிக்கான பாதை எந்த திசையில் செல்ல வேண்டும் என்பது

தேர்தல்களில் பங்கு :

1950 ஆம் ஆண்டுகளின் கடைசியில் திரு. அ.சீனிவாசன் இராஜபாளையம் நகரசபைத் தேர்தலில் வார்டு உறுப்பினர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று நகரசபை உறுப்பினராகச் சிறப்பாக பணியாற்றியுள்ளார்.

1984 ஆம் ஆண்டிலும் 1991 ஆம் ஆண்டிலும் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் சிவகாசி பாராளுமன்றத் தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவுடன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளராக திரு. அ.சீனிவாசன் போட்டியிட்டு ஒவ்வொரு தடவையிலும் இரண்டு லட்சத்திற்கும் தேற்பட்ட வாக்குகள் பெற்று இரண்டாம் இடத்தைப் பெற்று குறைந்த வாக்கு வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பை இழந்தவர்.

இரு தடவைகளிலும் முறையே இந்திரா காந்தி படுகொலை, ராஜீவ் காந்தி படுகொலை அதனால் ஏற்பட்ட அனுதாப அலை அவருக்கு பாதகமாக இருந்தது.

திரு. அ.சீனிவாசன் சிறந்த சிந்தனையாளர், எழுத்தாளர், பத்திரிகையாளர், நூலாசிரியர், சிறந்த பேச்சாளர், இராணுவ சேவை அனுபவம் பெற்றவர். தொழிற் சங்கத் தலைவராகப் பணியாற்றி அனுபவம் பெற்றவர். பல நாடுகளுக்கும் இந்திய நாட்டில் பல மாநிலங்களுக்கும் சென்று சுற்றுப் பயணம் செய்து அனுபவம் பெற்றவர். தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம், இந்தி ஆகிய மொழிகள் அறிந்தவர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டிருந்த காலத்தில் 1948 – 50 ஆம் ஆண்டு காலத்தில் கடுமையான போலீஸ் அடக்கு முறைக்கும் சித்திரவதைக்கும் கொடுமையான சிறைவாசத்திற்கும் உட்பட்டு மதுரை, சேலம் சிறைகளில் கடும் தண்டனை அனுபவத்து தியாகத் தழும்புகள் ஏறியவர்.

இலக்கிய அனுபவம் :

திரு. அ.சீனிவாசன் ஏற்கனவே தனது குழந்தைப் பிராயத்திலிருந்தே தனது தாய் தந்தையர் மூலம் இராமாயணம்,

மகாபாரதம், நாலாயிரத் திவ்யப் பிரபந்தம், நள வெண்பா, இராமானுஜருடைய தத்துவங்கள் முதலியவை பற்றி அறிமுகமானவர். விடுதலை இயக்கத்தின் ஆதர்சத்தில் பள்ளிப் படிப்பு காலத்தில், மகாகவி பாரதியார், வ. உ. சிதம்பரம் பிள்ளை, சுப்ரமணிய சிவா, விவேகானந்தர் நூல்கள், அவர்களைப் பற்றிய செய்திகள், ஆனந்த மடம் முதலிய பக்கிம் சந்திரர் மற்றும் சரத் சந்திரர் நாவல்கள், கல்கி நாவல்கள், மணிக் கொடி கதைகள் முதலிய இலக்கியங்களிலும் அறிமுகமாகி நாட்டுப் பற்றை வளர்த்துக் கொண்டவர். சுதந்திரப் போராட்ட காலத்தில் தீவிரவாதக் கருத்துக்களுக்கு ஆதரவான சிந்தனை போக்குகளைக் கொண்டிருந்தார். பாரதி, விவேகானந்தர், ஆகியோரின் இந்திய சிந்தனைப் போக்கு அவரை மிகவும் கவர்ந்தது. அதன் பெருமிதத்தை படிப் படியாக வளர்த்துக் கொண்டிருந்தார்.

திரு. அ.சீனிவாசன் இந்திய கம்யூனிஸ்ட் தொடர்பு ஏற்பட்ட போது கம்யூனிஸ்ட் இலக்கியங்களையும் குறிப்பாக மார்க்ஸ் ஏங்கல்ஸ், லெனின் மற்றும் சீனக் கம்யூனிஸ்ட் தலைவர்களின் மூல நூல்களை ஆழ்ந்து படித்தார். அப்போது இயற்கை, சமுதாயம், தனி மனித சிந்தனை பற்றியும் அதன் வழியில் தத்துவ ஞானம், அரசியல் பொருளாதாரம், சமுதாய வரலாறு, பற்றியுமான ஐரோப்பிய சிந்தனைகள், ஐரோப்பாவில் நிகழ்ந்த தீவிரமான கருத்துப் போராட்டங்கள், தொழில் புரட்சி மூலம் நிகழ்ந்த சமுதாய மாற்றங்கள் முதலியவை பற்றிய இலக்கியங்கள் மூலம் ஐரோப்பிய சிந்தனை வளர்ச்சி பற்றிய அறிமுகம் ஏற்பட்டது.

அத்துடன் சோவியத் யூனியனின் தோற்றமும் வளர்ச்சியும் சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் ஆவணங்கள், இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் ஆவணங்கள், தொடர்ச்சியான அறிக்கைகள் தீர்மானங்கள் ஆகியவற்றையும் ஆழ்ந்து படிக்க நேர்ந்தது. சீனாவின் கம்யூனிஸ்ட் இலக்கியங்களையும் படிக்க நேர்ந்தது.

இந்திய நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் நாட்டின் வளர்ச்சிக்கான பாதை எந்த திசையில் செல்ல வேண்டும் என்பது

தொடர்ச்சியான விவாதப் பொருளாக இருந்து வந்திருக்கிறது. இதில் ஆங்கில (ஐரோப்பிய) சிந்தனை போக்குகளுக்கும் இந்திய சிந்தனை போக்குகளுக்கும் இடையில் அடிப்படையான மோதல் இருந்து வந்திருக்கிறது. இந்த மோதலில் பல அரசியல் கட்சிகளும் கூட உடைந்திருக்கின்றன. சுதந்திரம் அடைந்த போது இந்திய நாடும் உடைந்து, இந்தியா, பாகிஸ்தான் பின்னர் பாகிஸ்தானிலிருந்து பங்களா தேஷ் எனப் பிரிந்து பிளவு பட்டிருக்கின்றன.

இந்திய நாட்டின் வெளி உறவுக் கொள்கை, இந்திய நாட்டின் ஒற்றுமை ஒருமைப்பாடு, இந்திய மக்களின் ஒற்றுமை, நாட்டின் தற்காப்பு பலம், இந்திய நாட்டின் தொழில் வளர்ச்சி, விவசாயப் பிரச்சனை, உற்பத்தி பெருக்கம், மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தல், கல்வி, கலாச்சார முன்னேற்றம், மக்களின் சுகாதாரம் நல்வாழ்வு பல துறைகளிலும் நாட்டின் ஒன்றிணைப்பு, இந்திய மக்களின் ஆன்மீக பாரம்பரியத்தின் மேன்மை, ஒட்டு மொத்தமான அரசியல், பொருளாதார, சமுதாய, கலாச்சார, ஆன்மீக வளர்ச்சி பற்றிய பல வேறு பிரச்சனைகளும் எழுந்து அவைகளுக்குச் சரியான தீர்வு காண்பதில் இந்திய மக்களிடையில் நூறாண்டு காலத்திய ஆங்கிலக் கல்வி மூலம் ஏற்பட்ட மேலை நாட்டு சிந்தனைப் போக்குகளும், இந்திய சிந்தனைப் போக்குகளும், இந்திய பாரம்பரியத்தின் தொடர்ச்சியான இந்திய சிந்தனைப் போக்குகளும் எழுந்து அவை மோதியிருக்கின்றன. இன்னும் அது தொடர்கிறது.

திரு. அ.சீனிவாசன் தன்னுடைய ஐம்பது ஆண்டு காலத்திற்கு மேலான பொது வாழ்க்கை, பத்திரிகைப் பணிகள், தொழிற் சங்கப் பணிகள், விவசாயிகளின் போராட்ட அனுபவங்கள் ஐந்தாண்டு திட்டங்களின் வளர்ச்சி போக்குகள் பற்றிய படிப்பு, இந்திய நாட்டின் அரசியல் வளர்ச்சி ஆகியவற்றின் அனுபவத்தில் தான் இதுவரை பணியாற்றிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து சித்தாந்த சிந்தனை அரசியல் கொள்கைகள் அவைகளின் செயல்பாடு, அமைப்பு நிலைப் பணிகள், அணுகும் முறை ஆகிய பல பிரச்சனைகளிலும் தனக்குச் சொந்தமான கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு அக்கட்சியிலிருந்து விலகி 1999 ஆம்

ஆண்டு செப்டம்பர் மாதம் பாரதிய ஜனதாக் கட்சியில் சேர்ந்து அக்கட்சியின் தலைமையின் கீழ் சமுதாய பணி ஆற்றி வருகிறார். ஒரே நாடு பத்திரிக்கை மற்றும் விஜயபாரதம் ஆகிய பத்திரிக்கைகளில் பணியாற்றியும் எழுதியும் வருகிறார்.

அத்துடன் சொந்தமாகவும் பாரதி, கம்பன், சிலப்பதிகாரம், திவ்யப் பிரபந்தம் தொடர்பான பல நூல்களும் எழுதியும் பதிப்பித்தும் வெளியிட்டும் வருகிறார். அதன்படி பாரதப் பண்பாட்டு தளத்தில் பாரதி, பாரதியின் புதிய ஆத்திசூடி – ஒரு விளக்கவுரை, சிலப்பதிகாரத்தில் வைதீகக் கருத்துகள் ஆகிய நூல்கள் எழுதி வெளியிட்டுள்ளார். இந்த நூல்கள் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் சிறந்த நூலுக்கு உதவித் திட்டத்தின் கீழ் உதவி பெற்றிருக்கிறது.

அத்துடன் திரு. அ.சீனிவாசன் எழுதிய சிலப்பதிகாரமும் திவ்யப் பிரபந்தமும் – ஒரு ஆய்வு என்னும் நூலை பிரபல வெளியீட்டு நிறுவனமான பழனியப்பா பிரதர்ஸ் வெளியிட்டிருக்கிறது.

மேலும் திரு. அ.சீனிவாசன் எழுதி முடித்து அச்சில் உள்ள ஆழ்வார்களும் பாரதியும், பாரதியின் தேசீயம், கம்பன் ஒரு சமுதாயப் பார்வை, கம்ப நாடான் காவியத்தில் காதலும் பெருங்காதலும், கம்பன் காவியத்தில் விதியின் பிழையும் அறத்தின் வெற்றியும் என்னும் நூல்கள் விரைவில் வெளி வரவுள்ளன.

மேலும் பாரதி, கம்பன் தொடர்பாக வேறு சில நூல்களும் கிராமங்களை நோக்கி, இந்தியப் பொருளாதார சிந்தனைகள், பாரதியும் பகவத் கீதையும் முதலிய நூல்களும் எழுதிக் கொண்டு வருகிறார். பாரதி தொடர்பாக பல நூல்களை எழுதியும் பாரதி தொடர்பாக பல நூல்களை எழுதியும் பாரதி புகழ் பரப்புவதில் பங்கு கொண்டும் வருவதில் திரு. அ.சீனிவாசன் பாரதிய ஜனதாக் கட்சி வட்டாரத்தில் பாரதி சீனிவாசன் என்று அழைக்கப்பட்டு வருகிறார்.

o o o

நூலாசிரியர் அ.சீனிவாசன்

எழுதி வெளியிட்டுள்ள நூல்கள்

பட்டியல் :

1. பாரதியின் புதிய ஆத்திசூடி (2 பதிப்பு) ✡
2. பாரதப் பண்பாட்டு தளத்தில் பாரதி (2 பதிப்பு) ✡
3. சிலப்பதிகாரத்தில் வைதீகக் கருத்துகள் ✡
4. சிலப்பதிகாரமும் திவ்யப் பிரபந்தமும் ✡
   (பழனியப்பா பிரதர்ஸ் வெளியீடு)
5. கம்ப நாடான் காவியத்தில் காதலும் பெருங்காதலும் ✡

○ ○ ○

விரைவில் வெளிவரவிருக்கும் நூல்கள் :

1. கம்பன் ஒரு சமுதாயப் பார்வை ✡
2. பாரதியின் தேசீயம்
3. கல்யாண ராமனும் பரசுராமனும்
4. ஸ்ரீராமனும் கோதண்டமும்
5. கம்பன் காவியத்தில் விதியின் பிழையும் அறத்தின் வெற்றியும்

✡ குறியிட்டவை தமிழக அரசின் வளர்ச்சித் துறை மூலம் சிறந்த நூலுக்கு உதவித் திட்டத்தின் அங்கீகாரம் பெற்றவை.

○ ○ ○

நூலாசிரியர் திரு. அ. சீனிவாசன்
எழுதி வெளியிட்டுள்ள பிற நூல்கள்

